LC
N34
118324

144

உ

ஸ்ரீ [illegible] அருளிச்செய்த

# வைத்திய
# மூலிகை விரிவகராதி

OFFICE OF THE REGISTRAR OF
5-OCT 193



[illegible]

இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடம்

[illegible]] 1934 [illegible] 1

118324

LC
N134

1833
615

ரா. ராமநாதம்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
பிப்ரவரி
மாதம் வருடம் 84

செப்பனிட்டு முடித்த
மார்ச்
மாதம் வருடம் 84

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

---

1833
615(1)

உ

கடவுள் துணை

# பதினெண் சித்தர்கள் அருளிச்செய்த
# வைத்திய
# மூலிகை விரிவகராதி

## காப்பு

சீராரும் பூமணிசொற் பலநிகண்டு
திகழுமதி வயித்தியர்க்கு வுதவியாக
நீருலி ரதம்பொருளா யொளிகள்வீச
நிறையுமதி பண்டிதர்கள் நிகழ்த்துமென்ன
பாருலகில் பெரியவக ராதியாகப்
பலபேர்கள் பகர்வதற்கு யிந்தநூலை
ஓர்பொருளா மூலிகையி னரும்பதத்தின்பேதம்
உரைத்திட்டேன் சிற்றறிவால் சேர்த்திட்டேனே.

## அ

அகத்தி-ஓர்மரம், அவை, சிற்றகத்தி, செவ்வகத்தி, சாழையகத்தி.
அகத்திசாறுகு-அகஸ்தியீசர் அறுகு, அவை, பேரறுகம்புல், சிற்றறுகம்புல்.
அகமமரம்-வெள்வேலமரம்
அகமம்-ஓர்மரம்
அகரம்-சூதம், ரசம்
அகரு-அகில்
அகல்-வெள்வேலமரம்
அகவு-அழுக்கறு
அகவியம்-ஓர்மரம்
அகளங்கம்-சிதாங்கபாஷாணம்
அகி-இரும்பு
அகிமாரல்-வெள்வேல்
அகில்-அகரு
அகிற்கூட்டு-ஏலம், சந்தனம்
அகுட்டம்-கடுகுரோகணி
அகும்பை-கவிழ்தும்பை
அகுவி-நறுவிலி
அகுளுதி-வேம்பு
அகைமம்-புல்லுருவி
அக்கத்தேவி-சோனைப்புல்
அக்கந்தம்-தான்றி
அக்கபிரம்-மாமரம்
அகணி-நார், கடுக்காய், நஞ்சு, சுக்கிலப்புரணி, நஞ்சு.
அகதி-வேலமரம்
அக்காரம்-அக்காரகாரம்
அதிவிடயம்-குணபலம்
அசோகு-கோபிகம்

அகஸ்தியர் குழம்பு - ஓர் மருந்து, இதிற்சேருஞ் சம்பாரம், பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், வெங்காரம், மனோசிலை, அரிதாரம், கோர்வாளம், ஓமம், கருஞ்சீரகம்.

### செய்யுள்

பேசியமருந்து ளோய்
பெருங்காயங் கடுவிந்துப்பு
வீசியரசம் வெங்காரம்
விடமேறு சிலைபுமோமம்
ஆசிலா வரிதாரத்தோ
டருங்கருஞ் சீரகந்தான்
மாசிலா மருந்தேபார்த்து
வகைவகைக் கழஞ்சுவாங்கே.

வாங்கிய கழஞ்சுக்கொப்பாய்
வாளமும் வறுத்துப்பாதி
தாங்கிய பச்சைபாதி
சமன்முளை போக்கிக்கீத்
தீங்கிலா மருந்துபத்துந்
தீர்க்கமா யரைக்கக்காந்தும்
ஓங்கிய மோருஞ்சோறு
முண்டுநீ யரைத்துக்கூட்டே.

## அகஸ்தியர் குழம்பிற்கு அனுபானம்

சுரத்துக்கு சுக்கு, இருமலுக்குக் கடுக்காய்ச்சாறு, குளிர் சுரங்களுக்கு சுக்கு, மிளகு, இரத்தமூலத்துக்கு பசுவின் வெண்ணெய், எருமைப்பால், பாண்டு, மகோதரம், பெருவயிறு, சீராமை, சோகைக்கு மிளகுத்தூள், வெள்வெங்காயம், எல்லாச் சன்னிகட்கும் தேன், இஞ்சிச்சாறு, விஷஜன்னிக்கு * எருக்கில், வேம்பில், கடுகிற்பாதி யெடுத்து அரைத்துக் கண்ணிலிட வேண்டியது.

இந்தப் பிரயோகம் அபாயமானதென்று நினைக்கிறேன். எப்படியெனில், கடலூரிலொருவனுக்கும், சிற்றூரிலொருவனுக்கும், வைத்தியர் எருக்கம்பாலில் அகஸ்தியர் குழம்பைக் கூட்டிக் கண்களிலிடக் கண்களவிந்துபோயின. இது யான் நேரில் கண்டது. இப்படிப்பட்ட உக்கிரமான மருந்துகளைப் பிரயோகம் பண்ணுகிற வைத்தியனுக்கு அதிக விவேகமிருக்கவேண்டும். மற்றைப் பிரயோகங்களிலும் அதிக எச்சரிக்கையும் வேண்டும்.

கண் வீங்கினால் கற்றாழைச்சோற்றை வடிகட்டி தயிர், சந்தனம், இவைகளோடு சேர்த்துக் கட்டவேண்டும்.

பரு, பிளவாழை, அரையாப்பு, புண்கள், சிலந்தி இவைகட்குஉமிழ்நீரிலிழைத்துப் பூசவேண்டும்.

மூலக்குத்துப் புண்ணுக்கு, மேற்படி அனுபானத்தில் தானே கொடுக்கலாம்.

சூசிகவாதம், சூலை, குட்டம், இவைகட்கு நொச்சிச்சாற்றில் கொடுக்கவேண்டும்.

பலவித குணங்களையுடைய பலவித வாய்வுகளுக்கெல்லாம், நொச்சி, சுக்கு, இவைகளோடு சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

கபாலவலிக்கு, குழம்பூட்டிய திரிப்புகை யூட்டவேண்டும்.

நீர்ச்சிறுப்பு, நீர்க் கல்லடைப்பு, இவைகட்கு, தாழை விழுது சேர்க்கவேண்டும்.

கிரந்தி, பறங்கி, இவைகட்கு, குப்பிச்சாறு சேர்க்கவேண்டும்.

திரதவாதம், விஷம் இவைகட்கு குப்பிச்சாறூட்டிய திரிப்புகை யூட்டவேண்டும்.

குழம்பு ஊட்டித் திரிசெய்யவேண்டிய விதம், குழம்பு அரைத்த அம்மியில் சலவையாயிருக்கிற பழய வஸ்திரத்தைப் புரட்டி உருட்டித் திரிசெய்தல்.

புகைபிடித்தால், தலையிடி, தலைகாட்டாமலோடும்.

பதினெட்டு ஜன்னிகட்கு நூல் விதியின்படி அனுபானம் ஏதோ வெனில், வெங்காயம், கழற்சிக்கொடி, முசுமுசுக்கை, நொச்சி இவைகளேயாம். இதனால் நாலாயிரத்து நானூறுவியாதிகள் தீரும். வகையறிந்து அனுபானஞ் செய்யவேண்டும்.

ஸ்திரீகட்குக் கர்ப்பம் வருவதற்கு அரசங் கொழுந்தை ஆவின் பாலில் விட்டரைத்துக் குழம்பில் ஒரு பணவெடை எடுத்து மாதவிடாயின் மூன்று நாளும் கொடுக்க வேண்டும். புதல்வருண்டாவார்.

சூதக வாயுவுக்கு, நாவற்பட்டை, வெள்ளாட்டுப்பால் இவைகளைக் கூட்டிச் சுரசஞ்செய்து அதிற் சீரகப்பொடி கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை குழைத்துண்டால் சூதகவாயு தீரும்.

பித்த பிரமியத்துக்கு, நொச்சிச் சாற்றில் சாரணைவேர், மிளகு, சுக்குச் சேர்த்துக் குழம்பில் ஓர் பணவெடை கூட்டிக் கொடுக்கவேண்டும்.

பிறவிச்சுக்கு, உள்ளி, முருங்கைப் பட்டை, புன்கு, எருக்கம்வேர், அரிதாரம், திருகுகள்ளி, இஞ்சிச்சுரசம் செய்து குழம்பில் ஒருபணவெடை சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

நெஞ்சுவலிக்கு, இலவங்கப் பட்டை, கிராம்பு, அதிமதுரம் தாளிசபத்திரி இவைகளை ஆவின் வெண்ணெயில் பணவெடையிட்டு இழைத்துக் கொடுத்தால் நெஞ்சுவலி தீரும்.

நாகப்பாம்பு கடிவிஷத்துக்கு, நாவற்கொழுந்து, மிளகு, இரண்டு வராகனெடை வெற்றிலைச் சாற்றிலும் குழம்பில் மூன்று பணவெடையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். நாகப்பாம்பு விஷந்தீரும்.

தேளின் விஷத்துக்கு, எருக்கந் தளிரிலையில் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுக்கவேண்டும். உமிழ்நீரில் இழைத்துக் கடிவாயில் பூசவேண்டும்.

வழலைக்கடிக்கு, மிளகு, பேய்ப்பீர்க்கு, இவைகளை நன்றாய்க் குப்பை மேனியின் சாற்றில், அரைத்துக் குழம்பில் பணவெடை கொடுக்கில் வழலை விஷந்தீரும்.

விரியன்பாம்பு விஷத்துக்கு, தாளி, அவுரியிலை, ஆவின்வெண்ணெயுடன் இரண்டு பணவெடை குழம்பு சேர்த்துக் கொடுத்தால் விஷந்தீரும்.

நீர்க்கட்டுக்கு, மிளகு, பொரிகாரம் இவ்விரண்டையும் நன்றாய்ப் பொரித்துக் கற்கண்டு பொடிசெய்து அவைகளை இரண்டு வராகனெடை ஆவின் நெய்யில் ஒரு பணவெடைக் குழம்பு இழைத்துக் கொடுக்கப் பிணிதீரும்.

விஷபாண்டுக்கு வீக்கந்தீர, நொச்சிச் சாறு, சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் வீக்கந்தீரும். இந்தப்படி குழம்பைக் கொடுப்பதில் அதிக பேதியானால் மதிமயங்காமல் அடுப்பில் சட்டிவைத்து வசம்பைத் தட்டிப் போட்டு

நீர்விட்டுக் காய்ச்சி ஆவின் வெண்ணெய் போட்டுச் சுருக்கில் கொடுத்தால் நீராப்பேதியெல்லாந் தீரும்.

| | |
|---|---|
| அகஸ்தியர்-வைத்தியம் | 500 |
| ஷை | 1,200 |
| ஷை | 200 |
| ஷை | 205 |
| ஷை | 300 |
| ஷை | 150 |
| ஷை | 16 |
| வாகடம் | 40 |

அக்கரம்-மா, வெள்ளெருக்கு
அக்காத்தான்-தான்றி
அக்காரம்-மா, சருக்கரை, கருப்புக்கட்டி, கரும்பு.
அக்காளன்-வனப்புல்
அக்கி - கண், அக்கினி காப்பான், அக்கி புறப்பட்டவன்.
அக்கிலு-நெருஞ்சில்
அக்கிராகாரம் - தோஷாத் திரவியம். இந்த வேர் முக்கியமாய் ஆபிரிகா தேசத்தின் வடபாரிசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதாக யோசிக்கப் படுகின்றது. சுக்குடன் சேர்ந்த இதன் குடிநீர் அத்திசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல், திமிர்வாதம் இவைகளுக்கு பலன் கொடுக்கும். உறைப்புள்ள குடிநீராக யோசிக்கப் படுகின்றது. இவ்வேர் பல்நோயுண்டானல் மெல்லப்படுகின்றது.
அக்கினி - கொடுவேலி, செங்கொடுவேலி, மூத்திரம், வெடியுப்பு, நவாக்ஷாரம்.
அக்கினிவங்க - கமலாக்கினி, காடாக்கினி, தீபாக்கினி, சாடராக்கினி, சடராக்கினி, தாபாக்கினி, உஷ்ணம், காங்கை.
அக்கினிக்குமரம் - குளிர்மை, மந்தம் முதலாகிய நோய்கட்குக் கொடுக்கப்படு மருந்து.
அக்கினிச்சிபம் - கார்த்திகைக் கிழங்கு.
அக்கினிக்கபம்-கடல்நுரை
அக்கினிச்சிவன்-குப்பைமேனி
அக்கு - அகில், எட்டி, உகாக்காய் சங்கு, பலகறை.
அக்கினிமண்டலம்-அடிவயிறு
அக்கினிமாந்தியம்-அசீரணம், செரியாமை.
அக்குல்லி-புட்டு, உக்காரி, சிற்றுண்டி.
அக்கோடகம்-கடுக்காய்
அங்கோலம் - தேற்றுங் கொட்டை.
அங்கணன் }
அங்கவன் } மிர்தபாஷாணம்.
ஆங்கனி-கற்றாழை
அங்கம்-கொன்றை, கோளகபாஷாணம்.
அங்காமாதி-கௌரிபாஷாணம்
அங்காவல்லி-குறிஞ்சா
அங்கணம்-கடுக்காய்மரம்
அங்காரகம்-பூசும்பரிமளம்
அங்காரவல்லி-சிறுதேக்கு
அங்காரி-வெங்காரம்
அங்குசபாதி-சிறுபுள்ளடி
அங்குசபீசாரி-கொள்ளு
அங்குசரோசனம்-கூகைநீர்
அங்குசம்-வாழை
அங்குசன்-சரகண்டபாஷாணம்
அங்குசோலி-அறுகு
அங்குணம்-வெங்காரம்
அங்குரம்-பூண்டின்முளை
அங்கோளம் }
அங்கோளவையா } அழிஞ்சில்.
அசகண்டா-வேளை, நைவேளை
அசட்டி-அசமதாகம்
அசக்கியம் - காகமணல், துத்தாகமணல்.

அசமதாகம் }
அசமோதகம் } ஓமம்
அசமந்தம்-மலைபத்தி
அசமருதம்-அத்தி
அசம்-உள்ளி, ஈருள்ளி, மூவருடநெல், சந்தனம், ஆடு.
அசாது-கொன்றை
அசர்-அகிர், பொடுகு
அதும்பை-கௌதும்பை
அக்கணம் - பொரிகாரம், வெண்காரம்.
அக்கதம்-அட்சதை
அக்கதேவி-சோனைப்புல்லு
அக்கம்-உருத்திராட்சம், தான்றி, தானியவிலை, கண்கயிறு, பொன்.
அக்காரம் - கருப்புக்கட்டி, சருக்கரை, மாமரம்.
அக்கினி-செங்கொடிவேலி
அக்கு - எருத்துத்திமில், எலும்புகள், சங்குமணி, பலகறை.
அங்கணம்-சலதாரை, சேறு, பொரிகாரம், மதகு, முற்றம வெண்காரம்.
அங்காரகம்-பூசும்பரிமளம்
அங்கனி-கற்றாழை
அங்காரவல்லி-குரிஞ்சி
அங்கிஷபாதி-சிறுபுள்ளடி
அங்கிஷம்-வம்ஷம், வாழை
அங்கிளி-கற்றாழை
அங்குசம்-தோட்டிவாழை
அங்குசவி-கொள்
அங்குரித்தல்-முளைத்தல்
அங்கோலம்-அழிஞ்சில்
அசமோதம்-ஓமம்
அசம் - ஆடு, ஈரவள்ளி, சந்தனம், மூவருடநெல்.
அசாது-கொன்றை
அசனம்-போசனம், வேங்கைமரம், வெள்ளுள்ளி.
அசனி-அனிச்சமரம்
அசுவகெந்தி-அமுக்கரா
அசுவசட்டிரம்-நெரிஞ்சல்
அசோகவனம்-வாழைவனம்
அசோகம்-வாழை
அச்சுரம்-நெரிஞ்சில்
அசுவத்தம்-அரசமரம்
அஞ்சம்-அன்னம்
அஞ்சலி - கும்பிடல், வண்டு, பல்லி வெளவால், வறட்சுண்டி.

அஞ்சலிகை-வெளவால்
அடகு-இலைக்கறி
அடவி-சோலை
அடுக்குமல்லிகை-ஓர் மல்லிகை
அடைக்காய் - அடைகட்டி, அரைமண்.
அடைக்காய்-பாக்கு
அடைப்பன்-ஓர்வியாதி
அடைப்பக்காரன்-வெற்றிலை கொடுப்போன்

அட்சதை-மங்களவரிசை
அட்டசித்தி-எட்டுசித்தி
அட்டமங்கலம்-எட்டுசுபம்
அட்டயோகம்-அரைபொடி
அட்டாங்கயோகம் - எட்டு; அதாவது, ஆதனம், இயமம், சமாதி, தாரணை, தியானம், நியமம், பிரத்தியாகாரம், பிராணயாமம்.
அட்டி - அதிமதூரம், செஞ்சந்தனம்

அட்டிகம்-ஜாதிக்காய்
அநுசகம்-சந்தனம்
அனட்சம்-முட்டைபிறப்பன்
அண்டில்-கண்ணில் சுற்றும்பூச்சி
அதகம்-மருந்து
அருள்-களகம், பழம், தோல்
அதிங்கம்-அதிமதூரம்
அதிமதூரம் - ஓர்சரக்கு, வெண்குன்றி.
அதிமலம்-மாவிலிங்கு

அதிரசம்-ஓர்பானம், ஓர்புலகாரம்
அதிவிடயம்-ஓர்மருந்து
அதோமுகி-கள்ளுதும்பை
அத்தகோரம்-நெல்லி
அத்தர்-வாசனைபண்டம்
அத்தி-ஓர்மரம்
அத்திசோலம்-அழிஞ்சில்
அத்திக்னனி-வெருக்கமரம்
அத்திசம்-நீர்முள்ளி
அத்திதிப்பிலி-யானைதிப்பிலி
அத்திரம்-இலந்தை
அத்திரு-அரசு
அத்துகமானி-அரசு

அத்துகம்-ஆமணக்கு
அத்துமம்-அரத்தை
அத்துவாக்கியம்-கருஞ்சீரகம்
அத்தூரம்-மரமஞ்சள்
அந்தம்-இருவாட்சி, மல்லிகை
அநாவன்-வெந்தோன்றி
அந்தகோளம்-நெல்லி
அந்துவாசம்-கொட்டைப்பாசி
அந்து-நிலவண்டு
அபயம்-செவ்வியம்
அபின்-ஓர்மருந்து
அப்பம்-சிற்றுண்டி
அப்புராத்தாணி-சரகாண்டபாஷாணம்
அமிர்தசஞ்சீவினி-உயிர்தருமருந்து

அமுக்கரா-ஓர்செடி
அமுதம்-திரிபலை, பால் போசனம்
அமுதவல்லி-சீந்தில்
அமுதாரி-பூனைக்காலி
அமேத்தியம்-மூங்கில்
அம்பணம்-வாழை
அம்பரைசுமபசை-நிமிளை
அம்பர்-ஓர்மருந்து
அம்பு-எலுமிச்சை
அம்புயம்-தாமரை
அம்போருகம்-தாமரை
அம்மான்பச்சரிசி-சித்திரப்பாலாடை, சீதேவியார், செங்கழுநீர்.
அயக்காந்தம்-ஊசிகாந்தம்
அயம்-இரும்பு
அயிணம்-மான்றோல்
அயிரம்-கண்டசருக்கரை
அயிரை-ஓர்மீன்
அயிர்-சருக்கரை
அயில்-கோரை
அரக்காம்பல்-செவ்வாம்பல்
அரத்தம்-இரத்தம், சிவப்பு, செய்கடம்பு, செங்கழுநீர், செங்குவளை, செம்பஞ்சு, செம்பரத்தம், செம்பரந்து, செம்மெழுகு, செம்மை, பவளப்பொன்.
அரத்தம்-இரத்தனம்
அரமுழி-ஓர்செடி
அரப்பொடி-இரும்புத்தூள்
அரம்பை-வாழை
அரவம்-குங்குமமரம்
அரிசலம்-எலுமிச்சை, கொன்றைமரம்.
அரிசம்-மிளகு
அரிசனம்-மஞ்சள்
அரிசா-பெருங்குமா
அரிட்டம்-வெண்காயம்
அரிதாலம்-அரிதாரம்
அரிது-பச்சை
அரித்திரம்-கந்தம், மஞ்சள்
அருதியரத்தம்-பூனைக்காலி
அருப்பலம்-அணிச்சைமரம்
அருளகம்-வெள்ளெருக்கு
அருளாகி-குட்சப்பாலை
அருளவம்-பெருமரம்
அருளாபு-சாரணை
அருளுபதி-வேம்பு
அரேசகண்டு-கருணைக்கிழங்கு
அரேசகம்-வாழை
அரேணுகம் - கடுக்காய்வேர், வால்மிளகு.

அலஅயன-ஓர்பான்
அலக்கு-கிளை
அலங்கை-துளசி
அலத்தம்-செம்பஞ்சு
அலர்-மலர்ந்தபூ
அலாபு-சுரை
அலுவீகம்-வில்வம்
அலோசி-பசளை
அல்லம்-இஞ்சி
அல்லி-அகவிதழ், ஆம்பல், காயாமரம்.
அகத்திப்பூ - ஓர்பூ, அனலாலும், புகையினாலும் உண்டாகின்ற பித்தமும் வெப்பும்போம்.
அகத்தியிலை - ஓர் இலை, மருந்திடுதல்போம். கிரந்தி சாதஞ் செரிப்பு, பித்தசாந்தி, வாயுவும் உண்டாம்.
அகத்திவேர்-ஓர்வேர், ஆண்பெண், குறியெரிவு, ஐம்பொறியெரிவு, கையெரிவு, சாகம், மெய்யெரிவு, மேகமும்போம்.
அகில்மரம்-ஓர்மரம், இதின்புகையால், அரோசகமும், சுரங்களும், தேகத்தளர்ச்சியும், வாந்தியும்போம்.
அக்கரகாரம் - சுரம், தாகம், தோஷம், வாதமும்போம். வாயிலடக்க ஜலமுண்டாம்.
அக்காரப்பட்டை - தலைநோய், நாவறட்சி, ஜன்னி, பாதசுரமும், வாயுவும்போம்.
அசோகப்பூ - ஓர்விதபூ, சோகம்போம். வாசனை உண்டாம்.
அஞ்சனக்கல்-கண்ணில்திட்ட. ஜலதோஷம், சுரங்கள், ஜன்னிதோஷமும் போம்.
அடவிநீர் - காட்டுநீர், இளைப்பும், உடல் கனப்புஞ் ஜலதோஷமும், சுரமும், தலைபாரமும், வயிற்றிலனலும் உண்டாம்.
அடுக்கிளநீர் - செவ்விளநீர், ஐயம்போம். இரவிலுண்டால், வயிற்றுக்கிருமி சாகும். சுகம் உண்டாம்.
அட்டமூலம் - ஆடாதோடை, கஞ்சாங்கோரை, கோரை, சிந்தில், துளசி, பர்ப்பாடகம், பேய்ப்புடல், விஷ்ணுகரந்தை, இவைகளால் சோகையும் பலவிதமான வியாதிகளும் வாயுக்களும் போம்.
அட்டுப்பு 25 - லவணத்திலொன்று, அரோசிகம், சர்த்தி, நீங்காச்சூலை, பித்தமும்போம்.
அண்டங்காக்கைக்கறி - காக்கைமாமிசம், காமாலை, சோகை, பாண்டு, பித்தவெட்டை, பெரும்பாடும்போம்.
அதளக்காய்-பீர்க்கங்காய், பித்தம், மந்தம், வாயுவும் உண்டாம்.
அதியோட்டம்-விரைவாய் ஓடுதல் வாயு உண்டாம்.
அதிகுளிர்ச்சிக் குளத்துநீர் - ஆழ்ந்த ஜலம், தளர்ச்சி, நளிர்வாதகபம், வாந்தி, விக்கலும் உண்டாம்.
அதிசுடுகையன்னம் - கொதிப்புச்சாதம், இரத்தம், பித்தம், பித்தப்பிரமை, தாகம், மதரோகமும் உண்டாம்.
அதிமதுரம் - எலும்புருக்கி, கண்ணோய், குத்திருமல், சர்த்தி, சூடு, தாகம், தாதுநஷ்டம், பித்தமூர்ச்சை, விக்கலும்போம்.
அதிரசம்-பணியாரம், ஐயம், பித்தம், வாயுவு உண்டாம்.
அதிவிடையம் - கிராணி, கோழைபேதி, வாந்தி, வெப்பும்போம்.
அத்திக் கள்ளு - மேகக் கள்ளு, அதிமயக்கம், சூடு, மேகமும்போம்.

அத்திக்காய் - அனல், சரீரவெப்பம், சூலை, புண், மலக்கட்டு, மேகம், வாதமும் போம்.

அத்திப்பட்டை - இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு, நாறுகிறவிரணம், பெரும்பாடு, மேகமும்போம்.

அத்திப்பழம் - இரத்தகாசம், நீர்க்கடுப்பு, மேகமும்போம். காமம், தேகக்குளிர்ச்சியு முண்டாகும்.

அத்திப்பால் - அதிவுஷ்ணம், இரத்தக்கிரிச்சரம், சூலை, நீரிழிவு, பித்தமும் போம்.

அத்திப் பிஞ்சு - ஆசனக் கடுப்பு, மூலக் கிராணி, மூலரத்தமும் போம்.

அந்தரத்தாமரை - ஆகாயத் தாமரை, அழுகிரந்தி, கரப்பான், குட்டம், புழுவூரு மிரணங்களும் போம்.

அபயன் - அங்கத்திலுள்ள நோயெல்லாம் போம்.

அபினி - அஸ்திநோய், குன்மம், செவிநோய், பல்வலி, பீனிசம், பேதி, மந்தம், வாதமும்போம். இரத்தசுத்தி பலம் உண்டாம்.

அப்பளக்காரம்-சவுக்காரம், ஐயம், குடல்வாதம், குன்மம், சூலை, வயிற்றுப்பிசம், வாதமும் போம்.

அப்பியங்கனம் - ஸ்நானம், தலைநோய் போம். மயிர் வளர்ச்சி தொனி, தலைக்கும், முழுந்தாளுக்கும் பலமுந் தாதுவும் உண்டாம்.

அப்பிரகம் - பூமிவிளைவு, அண்டவாதம், ஊரல், எல்லாப் பிரமியங்களும், கண்ணோய், நீரிழிவு, தந்தவாதம், பித்தம், மகோதரம், மேகம், வெப்பும் போம்.

அப்புவின் குணம் - காசம், குன்மம், சொறி, தேகவனல், மேகமும்போம். பல்விறுகல், வீரியமும் உண்டாம்.

அப்பைக்கிழங்கு - அஸ்தி சூடு, அழற்றுங்கணம், இரத்தகணம், கணைச்சூடு, சுழிகணம், மஹாகணம், வற்றியுலர்ந்த கணமும் போம்.

அமிர்தகடுக்காய் - 32 - ல் ஒன்று சிலேட்டுமமும் மற்றும் மேக வியாதிகளும் போம்.

அமுக்கிருக்கிழங்கு - அதப்பு, ஆயாச தோஷம், கயம், கரப்பான், கைகறுப்பு, சூலை, சொறி, சிரங்கு, பாண்டு, வாயு, வெப்பும்போம். அனல் மேகமும் உண்டாம்.

அமுதவல்லிக்காய் - கிரிச்சரம், பைத்திய தாகமும் போம். தாது, மேனியொளியும் உண்டாம்.

அம்பர் - ஓர்பாஷாணம், குளகுளத்தப்புண், பொரிகரப்பானும் போம். ஆண்மை, தேக பளபளப்பு பலமும் உண்டாம்.

அம்மான்பச்சரிசி-பாந்தல், தினவு மலக்கட்டு, மேகத்தடிப்பு, விரணமும் போம்.

அயச்செந்தூரப்பத்தியம் - அபினி, எள்ளு, கடுகு, கத்திரிக்காய், கஞ்சா, கள்ளு, புகையிலை, புளிப்பு, பூசினிக்காய், பெண்போகமுங் கொள்ளப் பத்தியத்தாழ்வுண்டாம்.

அயச்செந்தூரம் - ஐயம், காமாலை, சோகை, பாண்டும்போம். தீபனம், பலமும் உண்டாம்.

அயம் - இரும்பு, அக்கினிமந்தம், அரோசி, உடல்பாரிப்பு, காமாலை, கிராணி, குன்மம், சோகை, தாதுநஷ்டம், பித்தபாண்டு, வாய்வு, வெண்குஷ்டமும் போம், பசி, பேதியும் உண்டாம்.

அயிரைமீன் - ஓர்மீன், அருசியும் தேகப் பிணியும் போம், சாரமும் தலைமயிரும் வளர்த்தி மிகவுண்டாம்.

அரக்காம்பல் - சிலேற்றுமம் போம்.

அரக்கு - அஸ்திசுரம், ஐயம், இரைப்பு, என்புருக்கி, குஷ்டம், குன்மம், ஜன்னி, பக்கநோய், புண் விஷமும் போம்.

அரசமரத்தின் சமூலம் - இரணம், சுக்கிலநோய், தாகம், முத்தோஷம், வெப்பும் போம், தாதுவிர்த்தி புத்தியும் உண்டாம்.

அரத்தை-கபம், கரப்பான், சீதம், சுவாசகாசம், பல்நோய், பித்தசுரம், மூலம், சோகை, வாதசுரோணிதநோய் போம்.

அரிசிச்சாராயம்-சளி, வாதசிலேட்டுமமும் உண்டாம்.

அரிசிப்பிட்டு - மாவுப்பிட்டு, இரத்தசுத்தி, தேகபலமும் உண்டாம்.

அரிதாரம் - தாளகம், எட்டுவித குன்மம், கபவாதம், கபநோய், காசமும் போம்.

அருநெல்லிக்காய் - சின்ன நெல்லிக்காய், இருமல், கொதிப்பு, தாகம், துயர், துன்பம், பித்தமும் போம், குளிர்ச்சியு முண்டாம்.

அருநெல்லிவேர் - அதன்வேர், அருசி, ஓயாதவாந்தி, சுரம், பித்தஜன்னிபாதமும் போம்.

அருவிநீர்-சுனைநீர், இரத்த பித்தமும் மேகமும் போம், சிலேட்டுமம் பலமும் உண்டாம்.

அருள்மரம் - சிதாத்தம், சுரம், சோபம், மந்தம், வாதமும் போம்.

அரேணுகம் - சேட்டுமம், தாகம், மேகத்தினவும் போம்.

அரைக்கூறுகாய்ந்தநீர் - வித வித பழநீர் வாதபித்தம் போம்.

அரைப்புவகை - 4, சீக்காய் பச்சைப்பயறு, பொன்னுங்காய், இவைகள் எண்ணெய்களுக் காகும். இலுப்பைக்கட்டி சொறியாளர்க்காகும். காரையிலை, பசுநெய், பன்றிநெய், மற்றும் நெய்களுக் காகும். சீக்கிராந்துள் விரண தேகர்களுக்காகும்.

அரோகணி கடுக்காய் - சன்னிபாதம், சீதமும் போம்.

அலரி-நடுக்கல் போம்

அலரிப்பூ-ஓர்பூ, அருசி, இரத்தம், புண், குஷ்டம், சொறிசிரங்கு, தலையெரிவு, பித்தம், தாகம், வெப்பும் போம்.

அல்லிகுளத்துநீர் - அக்கினி மந்தபேதி, சொறி சிரங்கு, தாதுநஷ்டம், நாவிலச்சரம், வெப்பும் உண்டாம்.

அல்லிப்பூ-அழல், தாகம், நீரிழிவு, மேகம், புண்ணும் போம்.

அவரைக்காய் - அரோசகம், மருந்தின் பலமும் போம், ஐயம், சூலைபாரிப்பு, பேதி, வாய்வு, மந்தமும் உண்டாம்.

அவரைப்பிஞ்சு - இரவிற் சமைத்துண்ணில் கண் படலம், திரிதோஷம், புண், சுரம், மருந் துண்போர்க்கு சுகமுண்டாம்.

அவரையிலை - இரணம், கிராணி, தலைவலி, விஷமும் போம், தீபனமாம்.

அவல்-நெல்லில் உற்பத்தி, ஆண்மையுண்டாம்.

அவுரியிலை-நீலவுற்பத்தி, காமாலை, கல்வாதம், ஜன்னி 13, சீதம், நஞ்சு 18, மாந்தம், விஷக்கடி, வெப்பும் போம். நீலமருந்துண்டாம்.

அவுரிவேர்-குன்மம், சுரம், நஞ்சு, 18 மூர்ச்சை, பல்நோய், வெட்டையும் போம்.

அழிஞ்சில்மரம் - ஐயம், குஷ்டம், வாயு விஷமும் போம், பித்தமுண்டாம்.

அழிஞ்சில்வித்து - விஷம்போம், ஜகமோக மறைப்பு மை உண்டாம்.

அழுக்குவஸ்திரம் - துப்புத்துணி அழகு, அறிவும்போம், குளிர், தினவு, தாக்கம், நோயுண்டாம்.

அளுங்குமாம்சம் - இரத்த மூலம், கிராணிமூலம், சீழ்மூலம், நீராம்பல், முளைமூலமும் போம், அதிக பலமுண்டாம்.

அளுக்கோடு-விழிமந்தம்போம்

அறுகம்புல் - ரத்தபித்தம், ஈளை, ஐயம், கண்ணோய், கண்புகை, தலைநோய், பித்தம், வாதமும் போம், அறிவுண்டாம்.

அறுகம்புற்கிழங்கு-தேக வழலும் முத்தோஷம் போம் நல்லமேனியுண்டாம்.

அறுகீரை - அரைக்கீரை, கபநோய், சாய்ச்சல், குளிர், ஜன்னி முதலிய பல பிணியாளர்க்குப் பத்தியஞ் செய்ய, மருந்து பலிதமும் காமமும் உண்டாம்.

அறுசுவைபிருதி - துவர்ப்பும் புளிப்பு மிஞ்சுங் கறியால் வாதமுண்டாம். உவர்ப்பும் கைப்பு மிஞ்சுங் கறியால் பித்தமுண்டாம், கார்ப்பும் இனிப்பு மிஞ்சுங் கறியால் சிலேட்டுமமுண்டாம்.

அற்பருடன்னம் - தேகபல முண்டாம்.

அனிச்சை-சொறிகள்போம்

அன்னபின்னம் - அன்னத்திற்கு எட்டுபங்கு பலம் அவல், அவலுக்கு எட்டுபங்கு பலம் முப்பழம்பால், முப்பழம் பாலுக்கு எட்டுபங்கு பலம் ஊன், ஊனிற்கு எட்டுபங்கு பலம் உப்பு.

அன்னபேதி-ஓர் பாஷாணம், ஆமைக்கட்டி சூலை, நீர்மகோதரம், மந்தம், மூலைவிரணமும் போம், அன்னத்திற் போட ஜலமுண்டாம்.

அன்னமழகியரிசி - தேகவனலும் பலவிதநோயும் போம், ஆரோக்கிய முண்டாம்.

அன்றில்பட்சிமாமிசம் - இரத்த மூலம்; தேகச் சூடும் போம், பலம் உண்டாம்.

அல்லிப்பிஞ்சி-பூவிழாதபிஞ்சு

ஆவகேசி-காயாதமரம்

அவபத்தியம்-இச்சாபத்தியம்

அவரை - ஓர்கொடி, கொள்ளு அவரை, குதிரை முதலாயின.

அவுரி-ஓர்செடி, அழு

அழுகண்ணி-ஓர்பூடு

அரவைத்தல்-புடமிடுதல்

அரைக்கீரை-ஓர்கீரை

அருபருத்தம்-வாழை

அனயகம்-இருவாட்சி, மல்லிகை

அனுவட்டணம்-சோம்பு

அன்னசுத்தி-நெய்

அன்னதாழை-ஓர்தாழை

அகதஸ்காரன்-வைத்தியன்

அகளங்கம்-சீதாங்கபாஷாணம்

அகிலை-பட்டுப்பருத்தி

அகூடகந்தம்-பெருங்காயம்

அக்கிராந்தம்-சேம்பு

அக்கினிசாலம்-ஓர்பூடு

அக்கினிசேகரம்-மஞ்சள்

அக்கினிதிராவகம்-ஓர்செடி

அக்கினிமுகம்-செங்கொட்டைநீர்

அக்கோடம்-கடுக்காய்

அங்கணன்-மாருதபாஷாணம்

அங்காரிகை-கரும்பு

அங்குசன்-சரகண்டபாஷாணம்

அங்குஷ்டம்-பாண்டுவியாதி

அசாரம்-ஆமணக்கு

அசிகை-அவுரி

அசிபத்திரம்-கரும்பு

அசுவமியம்-குதிரைபாஷாணம்

அசுவம்-குதிரைபாஷாணம்

அஞ்சற்குழச்சி - குங்கும பாஷாணம்.

அஞ்சனக்கல்-கருநிமிளை

அஞ்சன பாஷாணம்-விளைவு பாஷாணம் 32-ல் ஒன்று

அடுசிலைக்காரம்-செந்நாயுருவி

அட்டசுபம் - எண்வகை மங்கலம், அவை இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறைகுடம், முரசு, விளக்கு.

அட்டதனம்-அழகு, குணம், ஆயுள், குலம், சம்பத்து, வித்தை, விவேகம், தனம்.

அட்டதாது - எட்டுலோகம், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம்.

அட்டதானபரிட்சை-வைத்தியன், குறியறியெட்டொடி, முகம், மலம், அமுரி, கண், நா, சரீரம், தொனி.

அட்டபோகம்-எட்டு, அணிகலன், ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசனம்.

அட்டவருக்கம் - அவையாவன நற்சீரகம், கருஞ்சீரகம், அகமோதம், மிளகு, திப்பிலி, சுக்கு, இந்துப்பு, பெருங்காயம்.

அதங்கம்-ஈயம்

அதலமூலி-ஆடுதின்னாப்பாளை

அதிகந்தம் - வாசனைப்புல், கெந்தகம், சண்பகப்பூ.

அல்குப்பை - பொற்றலைக்கையாந்தகரை.

அதிச்சத்திரம்-காளான்

அதிவாசனம்-வாசனுபிஷேகம்

அதிவெள்ளைச்செந்தூரம்—பாங்கிப்பாஷாணம்

அத்திரிசாரம்-இரும்பு

அத்திலை-செருப்படை

அந்தகன்-சவுக்காரம்

அவையம்-இலாமிச்சு

அவரோகம்-விழுது

அவிகம்-ரத்தினம்

அவுத்தியசம்-சூதம்

அவுபலபாஷாணம் - விளையுபாஷாணம்.

அழத்தியன்-பெருங்காயம்

அழற்பால்-எருக்கு

அறுகால்-வண்டு

அற்கம்-வெண்டுளசி

அறப்கெந்தம்-செந்தாமரை

அறப்பகேசு-வசம்பு

அறப்பதுமம்-செந்தாமரை

அற்பபத்திரம்-ஓர்துளசி

அனகாவி-சூரியகாந்தக்கல்

அனல்வென்றி-தங்கம்

அனிலாமயம்-வாதநோய்

அஞாபகம்-இஞ்சி

அன்னபேதி-ஓர்மருந்து

அன்னபேதி-ஓர்பூடு

அதிதாரம்-பழுப்பு

அழுஞ்சில் - அவகோலம், செம்மரம், சேமரம்.

அகிற்கூட்டு-5, சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அதிமதுரம்-அதிவசம்

அசறு-இரணச்செதிள் சொறி சிறு பூச்சி புழு.
அசலம்-கற்பாஷாணம்
அசனபன்னி-சிற்றகத்தி
அசனம் - சோறு, வெள்ளுள்ளி வேங்கைமரம்.
அசனி-அனிச்சை
அசன்றிகா-வேளை, தைவேளை
அசாணிமூலி-உத்தமதாளி, வேலிப் பருத்தி
அசிபதிரம்-கரும்பு
அசிதாம்புருசம்-நீலோற்பலம்
அசீரணம்-பசியின்மை
அசுகுணி-காதிற்படரும் ஓர்நோய்
அசுன்ன-வெள்வெங்காயம்
அசுபதமபவாதம்-ஓர்நோய்
அசுபம்-அமுக்குரு
அசுவகந்தி-அமுக்குரு
அசுவசட்டிரம்-நெருஞ்சில்
அசுவத்தம்
அச்சுவத்தம் } அரசு
அசுவபரி-அலரி, அசுவாபரி
அசுவம்-குதிரைப்பல்லுப் பாஷாணம்.
அசுவாமணக்கு-சிறுபூளை
அசையு-அமுக்குரு
அசோகம் } மருந்து, வாழை, திரி
அசோகு } லோத்திரம்.
அசோணம் } சவரி, சவரிலோடா
அசோண்டி } திரம் குறட்டவை.
அச்சகம்-நீர்முள்ளி
அச்சத்தி-கத்தரி
அச்சபரம்-நாணற்புல்
அச்சமம்-முசுறுப்புல், அளத்துப் புல்.
அச்சம்-அகத்தி, கோதரப்புல், ஈசுரப்புல், காய்ச்சல் பாஷாணம்
அச்சாணிமூலி-வேலிப்பருத்தி
அச்சித்தினை-தினை, ஓர்புல்
அச்சிறுவிலி-நருவிலி, இந்தமரத்தின் பட்டையிலிருந்துரித்த நாரால் மைசூர்தேசத்தில் கயிறு திரிக்கப்படுகிறது.
அச்சுரம்-நெருஞ்சில்
அச்சுவத்தம்-அரசமரம்
அக்ஷம்-ருத்திராக்ஷம்
அஷ்டம்-எட்டு

### அஷ்டகுன்மம்

சூலைகுன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், சிலேத்துமகுன்மம், எரிகுன்மம், சத்திகுன்மம், வன்னிகுன்மம், சலிகுன்மம்.

### அஷ்டதான பரீக்ஷை

நாடி, முகம், மலம், மூத்திரம், நேத்திரம், நாக்கு, சரீரம், தொனி.

### அஷ்டமாந்தம்

செரியாமாந்தம், போர்மாந்தம், மலடிமாந்தம், பெருமாந்தம், வாதமாந்தம், சுழிமாந்தம், வதிமாந்தம், கணமாந்தம்.

### அஷ்டமூலம்

சுக்கு, அரத்தை சிற்றரத்தை பேரரத்தை, செவ்வியம் - மிளகு, சித்திரமூலம், கண்டுபாரங்கி சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், காஞ்சொறிவேர்.

### அஷ்டலோகபற்பம்.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம்.

### அஷ்டவர்க்கம்

சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம், அசமதாகம்.

### அஷ்டாதசகுணம்

யாக்கைக்குறு பதினெண் குற்றம்- பசி, நீர்வேட்டல்-தாகம், பயம், வெகுளி - கோபம், உவகை-சந்தோஷம், வேண்டல்-விருப்பம், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல்-வேர்த்தல், கேதம் - துன்பம், கையறவி-செயலின்மை.

### அஷ்டதசமூலம்

கொடிவேலி, எருக்கு, நொச்சி, முருங்கை, மாவிலிங்கம், சங்கங்குப்பி, தழுதாழை, குமிழ், பாதிரி, வில்வம், கண்டங்கத்திரி, கறிமுள்ளி, சிற்றுமல்லி, பேராமல்லி, வேர்க்கொம்பு, கரந்தை, தூதுவேளை, நன்னாரி.

அஷ்டம்-சாதிக்காய்
அஸ்திசாரபேதி-அதிசாரபேதி
அஸ்திசுரம்-எலும்புருக்கிச் சுரம்
அஞ்சற்குளச்சி - குங்கும பாஷாணம்.
அஞ்சலி-வறட்சுண்டி, ஆடுதின்னாப்பாளை, வண்டுகொல்லி
அஞ்சனக்கல்-நீலாஞ்சனக்கல்
அஞ்சனபாஷாணம்-ஓர் வகைப்பாஷாணம், நீலாஞ்சன பாஷாணம், கல்லீயம்.
அஞ்சனி-காயா, நாணற்புல்
அஞ்சுவர்ணத்தோன்-துத்தநாகம்.
அஞ்செலி-வறட்சுண்டி
அடங்கம்-கடுகுரோகணி
அடங்காவாரிதி-மூத்திரம், கடலுப்பு.
அடகு-இலைக்கறி
அடப்பன்-கடப்பமரம்
அடவிச்சொல்-கோரோசனை
அடாசனி-புளியாரை, ஆரை
அடித்திகம்-அமுக்கரு, அக்கரு
அடிப்பட்டகாந்தி - தீமுறுகற் பாஷாணம்.
அடிப்பினை-வங்கமணல், வங்கம்
அடிம்பு-சிவந்தை
அடுக்கான்கன்னி - பவளப்புற்றுப் பாஷாணம்.
அடுக்குமுள்ளி-முள்ளி, ஓர் பூண்டு
அடை-இலை
அடைவிகச்சேலம் - கஸ்தூரி மஞ்சள்.
அட்சாப்புல்-பீனசப்புல்
அட்டகசம்-ஆடாதொடை
அட்டகம்-வசம்பு, அயமலாதி
அட்டதிசம்-எருக்கு
அட்டாலைமரம்-ஓர்மரம்
அட்டி-செஞ்சந்தனம், அதிமதுரம், எட்டி, இலுப்பை, சந்தனம்
அட்டிகம்-சாதிக்காய்
அட்டிமதுரம்-அதிமதுரம்
அட்டிமை-சீரகம்
அட்டினம்-சீரகம்
அட்டை-ஓர் ஜெந்து

### அதாவது

மரவட்டை, செவ்வட்டை, நீரட்டை.

அணிச்சை-நாகமல்லிகை
அணிஞ்சில் - கொடுவேலி, சிற்றுமுட்டி, நொச்சி, முள்ளி.
அணிநுணு
மன்னிலா ஆத்தா } ஆத்தா

அணிமுலை-பூசணி
அணுசகம்-சந்தனம்
அண்டகம்-குப்பைமேனி
அண்டசம்-முட்டையிற்பிறப்பன

அவையாவன

முதலை, ஓணான், அரணை, பறவை, உடும்பு, பல்லி, கெவுளி, நண்டு, மீன், ஆமை, சிப்பி, சங்கு, தவளை, பாம்பு,

அண்டம்-முட்டை, பீஜம்
அண்டயோனி-அண்டசம்
அண்டிகம்-செந்நாய், நா
அண்ணம்-மேல்வாய்
அண்ணாக்கு-உண்ணாக்கு
அண்டவாதம்
அண்டவாயு } விரைவாதம், அந்திரவாயு, வலி
அண்ணெரிஞ்சான் பூண்டு-அன்றெரிந்தான் பூண்டு.
அதகம்-பெருமருந்து
அதம்
அதவு } அத்திமரம்-பள்ளம்.
அதம்பம்-கற்பரிபாஷாணம்
அதழ்-பூவிதழ்
அதளை-நிலம்பீர்க்கு, புளியதளை
அதள்-கோல்
அதாசலம்-காட்டுமல்லிகை
அதிகநாரி-கொடிவேலி
அதிகம்-குருக்கத்திமரம்
அதிகல்-காட்டுமல்லிகை
அதிகற்றுதி - அதிகநாரி, கொடிவேலி.
அதிகும்பை-கையாந்தகரை, பொற்றுது.
அதிகோவம் அதிகோலம், அழிஞ்சில்.
அதிங்கம்-அதிமதுரம்
அதிசயம்-அதிரேகம்
அதிசனசி-கொடிவேலி
அதிசாரணம்-மாவிலங்கு
அதிசாரம் சுரத்தோடுகூடிய ஓர் வகைப்பேதி

அதிசாரம்-4

வாதாதி சாரம், பித்தாதி சாரம், சிலேத்மாதி சாரம், திரிதோஷாதிசாரம்.

அதிசாரத் திரவியங்கள்

வெட்பாலையரிசி, அதிவிடயம், வட்டத்திருப்பி. வறட்சுண்டி, சுக்கு, கீழ்க்காய்நெல்லி, இலவம்பிசின், ஓமம், கஞ்சா, மாவிரை, திப்பிலி, சிறுகாஞ்சொறி, சிறுபூலா-வறட்பூலா, நீர்ப்பூலா, சாதிக்காய், நீர்முள்ளிவிரை, முத்தக்காசு, குங்கிலியம், காட்டாத்திப்பூ, கிராம்பு, கருங்காலிப் பிசின், ஆவிரை, புளியம்வேர், வாழை, மாதுளம்பிஞ்சு, வெள்ளிலோத்திரம், கருவேல், தேன், புளியங்கொட்டைத் தோல், தென்னம்பாளை.

அதிசௌரபம்-தேமா
அதிச்சத்திரசம்
அதிச்சத்திரம் } காளான்
அதிட்டச்சொல்லி - இந்திரபாஷாணம்.
அதிட்டம்-மிளகு
அதிகசிலேட்டுமம்-சிலேஷ்மம்
அதிதாரம்-இலந்தை
அதிபசமி-கொன்றை
அதிபதிச்சங்கம்-அதிபறிச்சம், வாலுழுவை.
அதிபதி-சண்பகம்
அதிபறிச்சம்-வாலுழுவையரிசி
அதுபதுங்கி-கொடிவேலி
அதிமதுரம்-ஓர் மருந்து, குன்றிவேர்.

இந்தச்சரக்கு வங்காள தேசத்தில் விளைகின்றது. இது பசோராத் தேசத்தில் இருந்து வரப்பட்ட சரக்காயிருக்கின்றது. இது முக்கியமாய் இருமல், ஈளை, மேகவியாதி இவைகட்குக் கஷாயமூலமாய்க் கொடுக்கப் பட்டு வருகிறது இது சுகபேதி மருந்தாகவும் உபயோகப் படுத்தப் படும்.

அதிமதிரப்பட்டை — அதன் பட்டை.
அதிமலம்-மாவிலிங்கு
அதிமுத்தம்-குருக்கத்தி
அதிமிருத்தியாதிமாத்திரை - கோரோசனமாத்திரை.
அதியாமம் - முயற்புல், அறுகம் புல்.
அதிரசம்-இரசம்
அதிராகம்-கந்தகம்
அதிரம்பை-பொற்றலைத்தகரை
அதிலஓடாகம்-அடிலஓடாகம்

இந்தச் செடியின் இலைகளும் வேரும், சாறுபிழிந்து மந்தாரகாசம், கபவியாதி இவைகட்கு மிகவும் உபயோகமென்று மலையாளக்கரை துறைதேசத்தில் வழங்குகிறார்கள்.

அதிவிடம்-அதிவிடயம்
அதிவிடயம் - அத்தம், அவிருகம்,

இந்தவேர், ஓரங்குல நீளமாயும், வெண்மையான நிறமுடையதாயும் மிகுந்த கசப்பானதாயுமிருக்கும் இதை நாட்பட்ட வயிற்றுநோய்களுக்குச் சூரணமாகவும், குடிநீராகவும் உபயோகிக்கலாம்.

அதிவெள்ளைச் செந்தூரம் - சவ்வீரம்.
அத்தகம் - கருஞ்சீரகம், ஆமணக்கு.
அத்தம்-அதிவிடயம், குக்கிலம்
அத்தமானம்-ஆமணக்கு
அத்தாசிதம்-மடல்துத்தம்
அத்தன் - கடுக்காய், வெள்ளீயம்
அத்தி-அத்திமரம், அதவு, திப்பிலி வெருகு.

இதன் வகை

ஊழலத்தி, மலையத்தி, சீமையத்தி, நீரத்தி, கொடியத்தி, கல்லத்தி, பேயத்தி.

அத்திப்பட்டை - மூத்திரத்தோடு உதிரங்கலந்துவிழுகிற வியாதிக்கும், பெரும்பாட்டுக்கும், கஷாயமாகவாவது, இலேகியத்தில் சேர்த்தாவது கொடுக்கப்பட்டு வருகிறது இதைச் சூரணஞ் செய்து நல்லெண்ணெயிற் கலந்து பிளவை முதலாகியவைகளுக்குப் பற்றுப் போடப்படுகிறது.

அத்திகோலம்-அழிஞ்சில்
அத்திசம்-நீர்முள்ளி
அத்திக்கனி - வெறுகு, கரசிலாங்கண்ணி
அத்திப்புரசாதனி-அவுரி
அத்தித்திப்பிலி-யானைத்திப்பிலி
அத்திரம்-கடுக்காய்ப்பூ
அத்திரு
அத்திரா
அத்துமானி
அத்துசமானி } அரசு
அத்துகம்-ஆமணக்கு
அத்துமம்-அரத்தை
அத்துலாக்கி-கருஞ்சீரகம்
அத்துவர்க்காயம்-சீரகம், கருஞ்சீரகம்.
அத்தூரம்-மரமஞ்சள்
அநங்கம்-இருவாட்சி, மல்லிகை
அநந்தம்-கோளகபாஷாணம்
அநந்தன்-சோரபாஷாணம்
அநர்வன் - பஞ்சபட்சிபாஷாணம், வெங்தோன்றி.

அநுகம்-செஞ்சந்தனம்
அநுக்கம்-சந்தனமரம், பாம்பு
அசோக்கம்-மரம், மாப்போது
அந்தகம்-ஆமணக்கு
அந்தம்-கஸ்தூரி, சாவு
அந்தகன்-சவுக்காரம், புல்லூரி
அந்தரங்கத்தியானி-ஆமை
அந்தரச்சித்து-கற்பாஷாணம்
அகராது-கொன்றை
அசர்-அகிர், பொடுகு
அடியுப்பு-கல்லுப்பு
அகாரவுப்பு-கல்லுப்பு
அதிசாரம்-கல்லுப்பு
அண்டம்-மூளை
அகண்டம்-மூளை
அண்டசவ்வு-முடிமாமிசம்
அடியீரல்-மண்ணீரல்
அங்கிஷப்பிச்சு-அங்கப்பிச்சு
அளப்பம்-அங்கப்பிஞ்சு
அரவமணிக்கல்-மணிக்குடல்
அலறி-நகம்
அதிசாரம்-சத்திச்சாரம்
அரிதாரம்-மாயன்விந்து
அலங்கிதன்-அரிதாரம்
அதமதசம்-வெண்காரம்
அரிகாரம்-சீனக்காரம்
அலாஞ்சக்காரம்-வெடிகாரம்
அலங்காரம்-வெடிகாரம்
அபாதரன்-வெடியுப்பு
அனந்தன்-வெடியுப்பு
அரியுப்பு-கரியுப்பு
அங்கி-சாதிலிங்கம்
அசமதாகம்-ஓமம்
அரலை-கோழை
அடவியில்திருடி-சதுரக்கள்ளி
அருக்கன்-எருக்கு
அயிர்-சர்க்கரை
அரிசி-ஏலரிசி
அள்-காது
அனலிமுகம்-சூரியபுடம்
அக்ரா-அக்ராகாரம்
அஞ்சனவேர்-அவுரிவேர்
அசுவம்-அமுக்குரா
அம்மையார்கூந்தல் - முதியார் கூந்தல்.
அங்கி-நெருப்பு
அகடு-வயிறு
அரம்பைப்பூ-வாழைப்பூ
அக்ரம்-அட்சரம்
அன்னவம்-சமுத்திரம்
அரும்பு - மொக்குபூ முதலானவைகள்
அரக்கி-பாஷாணம்
அக்காடிதம்-கெவுரிபாஷாணம்
அந்தம்-கெந்தியுரிபாஷாணம்
அத்தம்-பச்சைக்கற்பூரம்
அவுரிபச்சை-பச்சைக்கற்பூரம்
அதிலோகம்-இரசகற்பூரம்
அசுராதி-இரசம்
அத்தி-வாலைரசம்
அமுர்தவிந்து-வாலைரசம்
அண்டரசம்-சுத்தரசம்
அஷ்டதிசைரசம்-சுத்தரசம்
அநாதி-விந்து
அரவு-விந்து
அளவுதடி-தண்டு
அருத்தம்-பொன்
அருளம்-பொன்
அத்தம்-பொன்
அரி-பொன்
அன்னம்-தங்கம்
அசுபதி-தங்கம்
அங்கி-கவசம்
அயச்சட்டி-இருப்புப்பாண்டம்
அமுரி-மூத்திரம்
அரிதாரம்-தாளகம்
அயம்-இரும்பு
அங்கீர்-பழந்தண்ணீர்
அகுவைக்கட்டி - அரையாப்புக்கட்டி
அண்டம்-தலை
அரப்பொடி-இரும்புப்பொடி

அப்பைக்கோவ்வை மூலம் - சாக்கோவைக்கிழங்கு
அரத்தை - சிற்றரத்தை, பேரரத்தை.
அண்டத் தயிலம்-கோழிமுட்டைத் தயிலம்.
அல்குல்-பெண்குறி
அருக்கநாள்-ஞாயறு
அஞ்சண்டம் - அஞ்சுகோழி முட்டை.
அக்குமணி-பலகரைமணி
அட்சதை-மஞ்சளரிசி
அரி-அரிசி, கடுக்கா
அந்திமல்லி-பத்திராட்சி
அந்திரத்தாமரை - ஆகாசத் தாமரை.
அகக்காழ்-ஆண்மரம்
அகத்தி-ஓர்மரம்
அகம்-தானியம்
அகவியம்-மாப்போது
அகளி-தாழி
அகளம்-தாழி
அகில் - ஓர்மரம், பஞ்சைவிரையினொன்று.
அகில்கூட்டு-ஏலம், கற்பூரம், காசிக்கட்டி, சந்தனம், தேன்.
அகுடம்-கடுகுரோகிணி
அந்தரவாயு-அண்டவாதம்
அந்தகோரம்-நெல்லி
அந்தகோலம்-நெல்லி
அந்தணநாபி-விஷத்தைப் போக்கு மருந்து.
அந்தரவல்லி-கருடன்கிழங்கு
அந்தரவசனம்-கொடிப்பாசி
அந்தன்-கடுக்காய்
அந்திமலர்ந்தான்-அந்திப்பூ
அந்தி-தில்லைமரம்
அந்திப்பூ - அந்திமந்தாரை, அந்திமல்லிகை.

இந்தச்செடி இந்ததேசத்தில் உற்பத்தி யாவதல்ல மகமதியன் வைத்தியர் இதைச் சுகபேதி மருந் தென்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய வைத்தியர்கள் இதை மருந்து வகையில் சேர்ப்பதில்லை.

அந்திரக்கண்மணி-நீலக்கல்
அந்திரக்கொடிச்சி-கெந்தகம்
அந்திரவசனம் - கொட்டைப் பாக்கு.
அந்தேசாலம்-தேற்று
அந்தோர்-நெல்லி
அபங்கம்-கோளகபாஷாணம்
அபந்தலம்-செங்கத்தாரி
அபாஞ்சி-பொன்
அபலம்-திபிங்கலம்
அபாமார்க்கம் - வெண்ணாயுருவி, நாயுருவி.
அபானம்-மூலாதாரம், பாயுரு
அபானம்-கடுக்காய்
அபினி-ஓர்மருந்து

அபினியானது, அத்திசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல் இவைகளுக்குக் கெடுதியென்று சுதேச வைத்தியர் நினைக்கிறார்கள். ஆகிலும் நித்திரைவரச் செய்வதற்கும், நளிர்சுரத்தில் குளிர்வாராமல் தடுப்பதற்கும், குறைப்பதற்கும்,சில வயிற்று நோயைச் சாந்தமாக்குவதற்கும், உபயோகப் படுத்துகிறார்கள். வாதசந்துவாதம் இவைகளில் அபினியைச் சாராயத்தில் சாம்பிராணியோடாவது, குங்கிலியத்தோடாவது சுக்குடனாவது இழைத்துப் பூசச்சொல்லி விதிக்கிறார்கள்.

இதைத் தகுதியாகப் பிரயோகித்தால் மிகுந்த உபயோகமான ஔஷதமாய் இருக்கிறது. இது கக்கிருமல், கண்வலி, பல்வலி, காதுவலி, வீக்கம், வாதம்

இவைகட்கு மிகவும் உபயோகமுள்ள மருந்தாய் இங்கிலீஷ் வாகடத்தில் சொல்லப் படுகிறது.

அபினியென்பது கசகசா செடியிலிருக்கிற முதிர்ந்த காயைக்கிள்ள அதிலிருந்து வருகிற பாலாக விருக்கிறது. இதில் நான்கு தரங்களுண்டு முதலாவது தூர்க்கி அல்லது ஸ்மிரினா தேசத்திலிருந்து வரப்பட்டது முதல் தரமாக விருக்கின்றது, இரண்டாவது ஈஸ்டிண்டியா, அல்லது வங்காள தேசத்திலிருந்து வரப்பட்டது, மூன்றாவது எகிப்பத்து தேசத்திலிருந்து வரப்பட்டது, நான்காவது ஐரோபா தேசத்திலிருந்து வரப்பட்டது, அதன் முக்கிய காரியம் சொற்ப அளவாய்க்கொண்டால் இலாகிரி உண்டாகின்றது நாடி பலமாயுயர்ந்து பலதரம் வந்து நடக்கும், முகம் சிவந்துகாட்டும் கண் துலக்கமாய்க்காணும், மனதில் சந்தோஷமான எண்ணங்கள் நிறையும், இரண்டாவதான காரியம் எப்படியெனில், உறக்கம், இரத்தமோடு நரம்பு அல்லது தாது நடக்காமல் அழுந்திப்போதல், பசியின்மை, மலபந்தம், மனச்சோர்வு இவைகளெல்லாம் உண்டாகும் அதிக அளவாகக்கொண்டால், இலாகிரி அதிகமாதல், புலப்பிரமை, மயக்கம், கைகால் கண்டச்சதைகள் வலித்தல் ஆகிய இந்தக் குணங்களெல்லாம் உண்டாகும்.

அபிநாசசன்னி-சன்னி
அபையன்-கடுக்காய்
அப்பட்டர்-வட்டத்திருப்பி
அப்பம்-பிட்டித்திருப்பி, வட்டத்திருப்பி
அப்பாகம்-வாலுளுவை
அப்பிரியதரு-ஓதியமரம்
அப்பிரகம்-ஓர்வகைலோகக்கல்

இதனை, பூவிந்துநாதம், மனோன்மணிநாதம், மகாவிந்து, அம்பரம், மகாப்பிரகாச்சத்தி, கேசரம், அம்பரைநாதம் ஏன்பர், இது ஐந்துவகைப்படும்.

### அவையாவன

ஏமாப்பிரகம், பொன்னப் பிரகம், இரசதாப்பிரகம், வெள்ளியப் பிரகம், வெள்ளையப் பிரகம், தேனப்பிரகம், கிருஷ்ணாப்பிரகம், கிருட்டிணாப்பிரகம், கெந்தகாப்பிரகம், இவைகளெல்லாம் 120-வித லோகங்களில் சேர்ந்தவைகள்.

### இதன் விதம்

அப்பிரகத்தகடு - அப்பிரக நவநீதம்.
அப்பிரக பாஷாடணம் - இரச பிநிதி.

### இரச மாதா

அப்பிரகச் செந்தூரம் - மேகவியாதி, மேகநீர், இந்த வியாதிகட்கும், சில வயிற்றுக் கழிச்சலுக்கும், இரத்தக் கழிச்சலுக்கும், கோழைநோய், காசநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சுடை வாதம் இந்த வியாதிகட்கும் உபயோகப்படுத்தப்படும்,

அப்பிரகம்-புளிமா
அப்பு-பாதிரிமரம்
அப்புளண்டம்-தகரை
அப்பை-அப்பைக்கோவை

இந்தக் கிழங்கு கடையில் அகப்படும். ஒருவிரல் பருமனாயும், நரைத்த வெளிறு நிறமுடையதாயுமிருக்கும் யாதொரு வாசனையிராது. கொஞ்சம் இனிப்பாயிருக்கும். சாறுள்ளதாயுமிருக்கும். இதை மூலவியாதிகளுக்கு இலேகியத்தில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கிறார்கள். சுவாசகாச வியாதியில் இளைக்குகிற அல்லது மிருதுவாயிருக்கிற மருந்தாகச் சூரணஞ் செய்து கொடுக்கப்படுகிறதுமுண்டு.

அப்பை-கொப்பை, கொன்றை
அமண்டலம்-ஆமணக்கு
அமந்தலம்-செங்கத்தாரி
அமந்திமரம்-ஓர்மரம்
அமாசயம்-இரைக்குடல்
அமரம்-ஒருவிதக்கண்ணோய்

அமாசிலைக் கெந்தகம் - ஓர் பாஷாணம்.
அமரிதம்-கடுக்காய்
அமரியம்-குருந்து
அமலகம்-நெல்லி
அமலம்-மரமஞ்சள்
அமலர்-நெல்லிமுள்ளி
அமலை-கடுக்காய்
அமலை-கடுகுரோகணி
அமானி-புளியாரை
அமிரம்-மிளகு

அமிர்தம்-மூர்ச்சைதீர்த் துயிர்தரு மருந்து.

### இதன் விதம்

பால், சருக்கரை, வாழைப்பழம், தேன், தேங்காய்.

அமுக்கிரா-அஸ்வகெந்தி

இதன்வேர் அல்லது கிழங்கு, குளிர்மையான குணமுடைய இளக்குகிற சலபேதி யுண்டாக்குகிற மருந்தென்று சுதேச வைத்தியர் அபிப்பிராயம்.
அமுதம்-சிறுசெருப்படை
அமுதம் - கடுக்காய், சீந்தில், நெல்லி.
அமுதசாரணி }
அமுதசுரா } வெள்வேல்
அமுதபுட்பம்-சிறுகுறிஞ்சா
அமுதங்கம்-கள்ளி, சதுரக்கள்ளி
அமுததகரம்-மஞ்சிட்டி
அமுதகம்-கடுக்காய், சீந்தில், நெல்லிப்பால், நீர், மருந்து, தயிர், திரிகடுகு, அதாவது சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, அதாவது கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.
அமுதசர்க்கரை - சீந்திற்சத்து சீந்திற் சருக்கரை.
அமுதபுட்பம்-சிறுகுறிஞ்சா
அமுதவல்லி-சீந்திற்கொடி
அமுதாரி-பூனைக்காலி
அமுத்தம்-வசநாபி
அமெந்துக்கொட்டை - வாதுமைக் கொட்டை.
அமைநீக்கி-கற்றாழை
அமேந்தியநாறுமரம் - ஓர் பூண்டு, ஓர்மரம்.
அமை-மூங்கில், ஓர்நாணல்
அமையம்-இலாமிச்சை
அம்பகம்-செம்பு
அம்பகன்-சீர்பந்தபாஷாணம்

அம்படம்-புழுக்கொல்லி, ஆடுதின்னாப்பாளை.
அம்படலம்-வெள்ளி, ஈயம்
அம்படன்கத்தி-ஓர்விதமீன்
அம்பணம்-வாழை, ஆமை, நீர்
அம்பலத்தி-தான்றிக்காய்
அம்பலவிருக்கம்-தில்லைமரம்
அம்பரை-திமிலை
அம்பரைநாதம்-அப்பிரகம்
அம்பர்-ஓர்மரப்பிசின்

இது தக்கன் தேசத்தில் நேர்த்தியானதாக அகப்படும். திருவான்கோரிலேயும் அகப்படும். அஸ்ஸாம், சீனா, ஜப்பான் முதலிய இடங்களிலிருந்து இந்தியாவுக்கு விஸ்தாரமாக கொண்டு வரப்படுகிறது. இதனால் திராவகம் எண்ணெய் செய்யப்பட்டு வாதம் இருமல் இப்படிப்பட்ட வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அம்பு, துளிர் எலுமிச்சை மூங்கில், ஆடுதின்னாப்பாளை, சரகாண்ட பாஷாணம்.

அம்புசம்-தாமரை
அம்புசன்மம்-தாமரை
அம்புசாதம்-தாமரை
அம்புதம்-நீர், கோரைக்கிழங்கு
அம்புபிரசாதனம் - தேற்றாங்கொட்டை.
அம்புயம்-தாமரை, நீர்
அம்புவாகினி-எலுமிச்சை, பாதிரி
அம்பை-வெட்டிவேர்
அம்போசம்-தாமரை
அம்போருகம்-தாமரை
அம்மட்டி-கொட்டிக்கிழங்கு
அம்மான் பச்சரிசி - தித்திரப்பலாவி.

### இதன் வகை

பெரியம்மான்பச்சரிசி, சிற்றம்மான் பச்சரிசி, சிவப்பம்மான் பச்சரிசி, வெள்ளையம்மான் பச்சரிசி, வயலம்மான் பச்சரிசி.

அம்மை-கடுக்காய், ஓர்வியாதி
அம்மையார் கூந்தல்-மெலியார். கூந்தல், கொடியார் கூந்தல், எலிச்செவி.
அயகம்-சிறுகுறிஞ்சா, வசம்பு
அயக்காந்தசெந்தூரம் - ஓர் செந்தூரம்.
அயசிலவேதை - கோளக பாஷாணம்.
அயலகம்-அயம்
அயம்-உருக்கு, எஃகு
அயசுபடிகல்-வெள்ளீயமணல்
அயச்செந்தூரம் - உலோகச் செந்தூரம்.
அயதி-திருநாமப்பாலை
அயத்தி - இருப்புத்தொட்டிப் பாஷாணம்.
அயபானி-ஓர்செடி

இந்தச்செடி முதல் ஐயல் ஆப் பிரான்சிலிருந்து கொண்டு வரப்பட்டது. சுதேச வைத்தியர் இதை நன்றாயறியார்கள் இதன் பரிமளத்தினாலும் இதன் வெளிப்பார்வையினாலும் இது மிகவும் விலைபெற்ற மருந்தென்று மதிக்கப்படுகிறது இதன் இலையினாலாகிய குடிநீர் மிகவும் விருப்பமுள்ளதாக யோசிக்கப் படுகின்றது. இதைப் புதியதாய் கொர்ண்டு வந்து இடித்துக் கட்டினால் கெட்ட புண்களெல்லாம் ஆறிப்போகும்.

அயமணல்-அயமலை
அயமரம்-அலரி
அயமி-வெண்கடுகு
அயவி-வெண்கடுகு
அயம்-இரும்பு
அயமாம்-அலரி, சிறுபூலா, ஆடு, செந்தூரம்.

---

அயவாரி-வசம்பு
அயவி-சிற்றரத்தை
அயிகம்-ஊமத்தை
அயிஞ்சி-நிலப்பனை
அயிரம்-கண்டசருக்கரை
அயிரியம்-நெட்டிச்செடி
அயிலிடம்-சிற்றரத்தை
அயில்-கோரை
அய்யவி-சிறுகடுகு
அரக்கம்-திருநாமப்பாலை, எருக்கு கொம்பரக்கு
அரக்காம்பல்-செவ்வாம்பல்
அரசன்விரோதி-கோவைபூவரசு
அரசன்-கார்முகிற்பாஷாணம், துரிசு, துருசு, பாணகெந்தகம்.
அரசாணம்-அரசு, அரத்தை, தும்பராஷ்டகம்.
அரசு - அரசமரம், இதன்வகை, கொடியரசு-பூவரசு
அரசின்விதை - குளிர்ச்சியுண்டாக்குகிற நோய் பேதிக்காகிற மருந்தென்று இலேகியத்திலும், சூரணத்திலுஞ் சேர்க்கப்படுகிறது.

அரணியசாரணை-காட்டிஞ்சி
அரணியர்-காட்டுக்கருணை
அரத்தம் - அரக்கு, செங்குவளை, செம்பரத்தம், பவளம், கடம்பு, அரத்தை.
முடக்கற்றான் - இதன்வகை, சிற்றரத்தை-பேரரத்தை, தும்பராஷ்டகம்.
அரத்தோற்பலம்-செங்கழுநீர்
அரமாரவம்-நாயுருவி
அரமியம்-பிரமிப்பூண்டு
அரபி-கடுக்காய்
அரப்பொடி-அயவெள்ளை
அரம்பை-வாழை, அசமதாகம்
அரலை-மரல்
அரவிந்தம்-தாமரை
அரளி-பீநாறி, நாறுமரம், பெருமரம்.
அரன்-மஞ்சள்
அரா-பாம்பு
அரி-கொடுவேலி, மூங்கில்
அரிசரி-அத்திக்கொழுந்து
அரிசி-ஓர் தானியம்

இது சுரத்திற்கும், மூத்திரம் குறைந்து மஞ்சள் நிறமாயிருக்கும் சுரத்திற்கும், இதனோடு இருமலுண்டாயிருந்தால் அதற்கு கஷாயமாகவும், தீப்பட்ட புண்களுக்கும், எல்லா விப்புருதிகளுக்கும், பருக்களுக்கும், சீழ் கொள்ளுகிற காயங்களுக்கும், வலியுங்கூடுமுள்ள பருத்த மூலமுளைக்கும் போல்டீ சாகவும் உபயோகப்படும்.

அரிதாரம்-அரித்திராபம்

### இதன்வகை

பொன்னரிதாரம், தாளகம், கட்டியரிதாரம், காட்டரிதாரம், தகட்டரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம், கனத்தீ.

அரிதாரம் சீனதேசத்தில் இருந்தும் பிரம்மாதி தேசத்தில் இருந்தும் சுமித்திரா தேசத்தில் இருந்தும், வரப்பட்ட சரக்காயிருக்கிறது இது முறைக்காய்ச்சலில் ந்தமூலங்களோடு சேர்த்துத் தமிழ் வைத்தியர்களால் சொற்ப அளவாய்க் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அநேகர்கள் உள்ளுக்குக் கொடுக்கிறதில்லை. இது பாஷாணவகையிற் சேர்ந்தது. கொடுவேலி-மூங்கில்.

அரிசம்-மிளகு
அரிசயம்-கொன்றை, எலுமிச்சை
அரிசனம்-மஞ்சள்
அரிசா-பெருங்குமிழ்
அரிசு-மிளகு
அரிச்சந்தனம்-சந்தனம்
அரிடம்-கடுகுரோகிணி, வேம்பு
அரிட்டம் - வெள்வெங்காயம், கள் முட்டைமோர்.
அரிணை-கள்
அரிதகி-கடுக்காய்மரம்
அரிதளம்-பொன்னரிதாரம்
அரிதின்வயசி-திருநாமப்பாலை
அரித்திரம்-மஞ்சள்
அரிமஞ்சரி-குப்பைமேனி
அரிமல்-மாவிலங்கு
அரிமைதா-வெள்வேல்
அரியசம்-கொன்றை
அரியசாரணை-மாவிலங்கு
அரியல்-கள்
அரில்-மூங்கில்
அரீடம்-கடுகுரோகணி, கடுகு
அருகசனி-பேரேலம்
அருசஞ்சி-சீந்தில்
அருசணி-பிரண்டை
அருகி-கள்
அருகியரத்தம்-பூனைக்காலி
அருக்கம்-எருக்கு
அருக்கன்-சுக்கு
அருசாவிரா-பெருங்குமிழ்
அருச்சுனம்-எருக்குமருது
அருட்டம்-கடுகுரோகணி, மிளகு வேம்பு.
அருட்சோதி-கௌரிபாஷாணம்
அருணம்-எலுமிச்சை
அருதா-சதாப்இலை
அருத்திரம்-மரமஞ்சள்
அருத்துருமம்-வெள்வேல்
அருப்பம்-தொடரி
அருப்பலம்-அனிச்சமரம்
அரும்பி-குங்குமபாஷாணம்
அருளகம்-வெள்ளெருக்கு
அருளரசி - குடசப்பாலை, வெட்பாலை.
அருளவம்
அருளுவம் } பெருமரம்
அருளாதி-குடசப்பாலை
அருளாப்பு-சாரணை
அருளுறுதி-வேம்பு
அரேசகண்டு-கருணைக்கிழங்கு
அரேசிகம்-வாழை
அரேணுகம் - வால்மிளகு, தவுந்தி கடுக்காய்வேர்.
அரையாப்பு-ஓர்நோய்
அரோரூட்டுமா-ஓர் கிழங்கின்மா

அரோட்டு என்கிறசெடி அமரிகா தேசத்தில் கறிகாய்த் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. அதன் கிழங்கில் இதற்கடியில் சொல்லிவருகிற பிரகாரம் பாலெடுக்கப் படுகிறது.

ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட கிழங்கைத் தோண்டி யெடுத்துத் தண்ணீரில் நன்றாய்க் கழுவிப், பின்பு அதை ஒரு ஆழமாகிய மர உரலில் கூழாக இடித்து ஒரு பெரிய மரத்தொட்டியில் சுத்தஜலம் விட்டு அதிற் பெய்து, அதையெல்லாம் நன்றாய்க் கையாற் பிசைந்து கோதுகளை யெல்லாம் பிழிந்தெடுத்து விட்டுப் பால் பதமாயிருக்கிற நீரை மயிரினால் செய்யப்பட்ட சல்லடை மூலமாயாவது ஒரு உறப்பு வஸ்திரத்தினாலாவது வடித்துவிட்டுக் கொஞ்சம் பொழுது வைத்திருந்து, மேலே தெளிகிற ஜலத்தை வடித்துவிட்டால் பாத்திரத்தின் அடியில் வெளுப்பாகப் பாளம் அல்லது வண்டல் படிந்திருக்கும், அதில் மறுபடியும் பரிசுத்தமான ஜலம்விட்டுக் கலக்கித் தெளியவைத்து மேல் ஜலத்தை இறுத்துவிட வேண்டியது. கடைசியில் அடியிற்படிந்த பாளத்தை யெடுத்து ஒரு துப்பட்டியின் மீது பரப்பி வெளியில் காயவைத்து எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரோரூட் மாவானது சொற்ப அளவானாலும் மற்றதை விட அதிகமான ஆகாரமாய் இருக்கின்றது இதன் மாவை ஜலத்தில் காயவைத்தால் சாகோ அரிசி முதலாகியவைகளின் பாகைவிட மிகவும் சிரேஷ்டமான மனதுக் கிஷ்டமுள்ள தெளிவான பாகு ஆகின்றது, இந்தப் பாகு குழந்தைகளுக்கும், பலவீனப்பட்டவர்களுக்கும் போஷிக்கத்தக்க பத்தியச் சாப்பாடாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அரோரூட்டுமா பாகு இதற்கடியில் வருவதுபோல் செய்யப்படுகிறது.

அரோரூட்டு மாவில் ஒரு டிசாட்டுக் கரண்டிஅளவு மாவெடுத்து அவ்வளவு குளிர்ந்த ஜலத்தில் சேர்த்து இழைத்துப் பின்பு அதில் கொதிக்கிற ½-பாயிண்டு புட்டி ஜலத்தில்விட்டு, விரைவாக விடாமல் கலக்கிக்கொண்டு சில நிமிஷம்வரை காயவிட்டு தெளிந்த பாகாகிறவரையில் வைத்திருந்து அந்தச் சமயத்தில் பலயீனப்பட்ட நோயாளியாயிருந்தால் கொஞ்சம் சர்க்கரையும், ஷெரிவ் உவயினும் விடவேண்டும் குழந்தையானால் இலவங்கப்பட்டை எஸ்ஸென்சில் ஒரு துளி அல்லது இரண்டு துளி விட்டு சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கு உப்பிசம் உண்டாயிருந்தால், எஸ்ஸென்ஸ் ஆப்காவே சீடஸ் என்கிற சிரகத் திராவகத்தில் இரண்டு அல்லது மூன்று துளி சேர்க்கவேண்டும். வயது வந்தவராயிருந்தால் கொஞ்சம் போர்ட் ஒயின் அல்லது பிராந்தி சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

அகலம் - யானைத்திப்பிலி, வேப்பலகு.
அலகு-மகிழ்
அலகுசோதி-அறுகு
அலகை-பேய்க்கும்மட்டி
அலக்கைச்சுரம்-கீழ்க்காய்நெல்லி
அலங்கை-துளசி
அலத்தம்-செம்பருத்தி
அலத்தகம்-செம்பஞ்சு
அலந்தல்-செங்கத்தாரி
அலரி - கோதுமை, அயமரம், இதன் வகை. செவ்வலரி, குங்குமவலரி, வெள்ளலரி, ஆற்றலரி, ஈழத்தலரி, நீசலரி, அலரி வேரானது விஷமுடையது, உள்ளுக்குக் கொண்டால் மரணமுண்டாக்கும்.
அளர்-மஞ்சள், நீர்
அலாபதம்-இலாமிச்சு
அலாபு-சுரை
அதாரிதா-அலரி
அலி-நறுவிலி
அலியன்-கடுக்காய்
அலுஷீகம்-வில்வம்
அலோசி-பசளை

அலோமி - பொற்றலைக் கையாந்தகரை.
அல்தார் }
அன்ணார் } கல்நார், கன்ணார்.
அல்லம்-இஞ்சி
அல்லாரி - அல்லு, காயா, சயம் நெய்தல்.
அல்லி-காயா, அதன்வகை. ஆகாசவல்லி, வெள்ளல்லி - வெள்ளாம்பல், செவ்வல்லி - செவ்வாம்பல், சிற்றல்லி - சிற்றாம்பல்.
அல்லிகம்-பேய்க்கொமட்டி
அல்லியம்-கொட்டி
அல்லூரம்-வில்வம்
அவகதவாய் - கீழ்காய், கீழாநெல்லி.
அத்தம்-நாய்வேளை
அவந்திக்கண்ணி - மெருகன் கிழங்கு.
அவயம்-இலாமிச்சை
அவரை-கொள்ளு, துவரை, முதிரை முதலான.
அவரைக்காய், அவரைக் கொடி, காட்டவரை, காட்டு மொச்சை, கொத்தவரை, சீனி யவரை, கோழி யவரை, செவ்வவரை, தீவாந்தர அவரை, நகரவவரை, பேயவரை, பேரவரை, முறுக்கவரை, வாளவரை, வெள்ளவரை.
அவலி-பூனைக்காலி
அவாகேசவுப்பு-பெருந்தும்பை
அவாபுளிப்பி-பிரமி
அவிரி - அவரி, அவுரி, நீலி, நீலஅவுரி.

இதன்வேர் விஷங்களை முறிக்கத் தக்க சத்தி யுடையதென வெண்ணப் படுகின்றது. கஷாயமாகக் காய்ச்சி கொடுக்கப்படும். மலையாள தேசத்தில் கல்லடைப்பு வியாதிகட்கு இதன் வேர் கஷாயம் கொடுக்கப்படுகின்றது.

அவிருகம்-அதிவிடயம்
அவிசுப்பம்-தொடரி
அழகர்-வெள்ளெருக்கு
அழகவேதம்-அதிவிடயம்
அயத்தியன்-சோமனாதி, பெருங்காயம்.
அழல்-கொடிவேலி, கள்ளி, எருக்கழல், எருக்கு.
அழல்விரை-கோர்வாளம்
அழற்பால்-எருக்கு
அழிஞ்சில்-ஓர்மரம், கிராணித் திரவியம்.
அழுத்துப்பச்சை-மருக்கொழுந்து சக்களத்தி.
அளத்துப்புல்-முயிற்றுப்புல்
அளப்புக்கு-முடக்கற்றான்
அளவன்-சோரபாஷாணம்
அளி-கள், மது, காய்.
அளேகிவெப்பு - அளேச வெப்பம் அதிவிடயம்.
அளேருகம்-தூதுளை
அறக்கப்பிளப்பி-திருகாமப்பாலை
அரணை-காட்டுக்கரணை
அருமை-கவில்தும்பை
அறிப்பலம்-திப்பிலி
அறுகு - அறுகம்புல், இதன்வகை உப்பறுகு, கூந்தலறுகு, சிற்றறுகு, புல்லறுகு, பேரறுகு, பானையறுகு, வெள்ளறுகு ஓர் பூண்டு.

அறுகுக்கஷாயம் மிகவும் விருப்பமான உருசியுள்ள குளிர்ச்சி யுண்டாக்குகிற உணவான குடிநீராக இருக்கின்றது.

அறுபதம்-கையாந்தகரை
அற்கம்-வெண்டுளசி
அற்பகெந்தம்-செந்தாமரை
அற்பமாரிசம்-சிறுகீரை

அற்பருத்தம்-வாழை
அனகம்-புல்லுருவி
அனங்கம்-இருவாட்சி, மல்லிகை
அனந்தம் - அறுகு, குப்பைமேனி சிறுகாஞ்சொரி, பெருநன்னாரி
அனந்தரம்-வேலிப்பருத்தி
அனந்தர்-பருத்தி
அனரவன்-வெந்தோன்றி
அனுசிப்பூ-ஓர்பூ

இது வித்திருக்கிற சவ்வுடைய ஒருவித அதிசய பூவாக விருக்கின்றது. இதன் உருசியும் வாசனையும் சீமை சோம்புக்கு மிகச் சரியாய் இருக்கும் இந்தச் சரக்கு சீனா தேசத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்றது. சீரண மருந்தென்றும், வாயுவைத் தணிக்கும் மருந்தென்றும், தமிழ் வைத்தியர் அபிப்பிராயஞ் செய்கிறார்கள். மகம்மதியர் நற்போசனங்களில் உருசிப்படுத்திச் சேர்க்கிறார்கள். சிலசமயங்களில் இதைச் சேர்த்து ஒரு மிகுந்த வாசனை யெண்ணெய் செய்கிறார்கள். இது ஜப்பான் தேசத்தில் வளருகிற ஒரு ஸ்கிம்மி யென்கிற மரத்தின் பூவாயிருக்கின்றது.

அனாரியதித்தம்-நிலவேம்பு
அனிச்சம்-அறுப்பலம்
அனிச்சை-நாகமல்லி
அனீசு-நட்சத்திர சீரகம்
அனுகம்-செஞ்சந்தனம்
அனுக்கம்-சந்தனம்
அனுமாசாக்கா - பொன்னாங்கண்ணி.
அன்பகர்-சமுத்திரசோகி
அன்னபம்-ஆல்
அன்றெறிந்தான்பூடு - சிறுபுள்ளடி அண்ணெரிஞ்சான் பூண்டைப் பார்க்க.

அன்னபேதி-ஓர் மருந்து

இந்தப் பெயரால் கடைகளில் இரண்டு மாதிரிச் சரக்குகள் விற்கப்படுகின்றன. ஔஷதத்துக்குப் பிரயோகிக்கப் பட்ட அன்ன பேதியானது பிரகாசமான பச்சை நிறமுள்ளதாய் பளிங்குக்கல்போல் இருக்கின்றது இது பாண்டு குளிர்சுரம், முறைக்காய்ச்சல், வயிற்று வீக்கம், சுரக்கட்டி, நீர்க்கோவை இந்த வியாதிகட்கு உபயோகமான மருந்தென்று ஒரு இங்கிலீஷ் வைத்தியர் சொல்லுகின்றார்.

இது தேகமும், கண்ணின் உள்ளிமைகளும் நாக்கு உள்ளங்கைகளும் இரத்தமற்று வெளுத்திருக்கும் பாண்டுக்கும் பலவீனத்திற்கும் உபஸ்தத்தில் நின்று மிகுதியாய் வெள்ளையொழுகுகிற ஸ்திரீகட்கும் சூதகம் நின்று கஷ்டப்படுகிறவர்களுக்கும், குழந்தைகளின் தேகமும் கண்ணின் உள்ளிமைகளும் இரத்தம்ற்று வெளுத்தும் பலவீனமாயிருக்கிறதற்கும் குளிர்சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கும் நெடுநாளாய் குளிர்சுரமிருந்து வாசியானபின் வயிற்றின் இடதுபக்கத்தில் ஒரு வீக்கம்போல் காணுகிறதற்கும், நீர்க்கோவையுண்டாய் நாவும் கண்ணிமையுட்புறங்களும் வெளுத்து வியாதிக்காரன் பலனற்றிருந்தால் அதற்கும் முதலில் தினந்தோறும் அல்லது இரண்டாநாள் தோறும் பதிவாய் ஒரு குறி

த்த சமயத்தில் வருகிறதற்கும் முறைப்படி. இன்னஞ்சில மருந்துகளோடு சேர்த்து ஔஷதமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

அன்னசி-பாங்கித்தாழை
அக்காரப்பட்டை - மாமரப்பட்டை.
அஞ்சனக்கல்-சுருமாக்கல்
அடவிநீர்-காட்டிலிருக்குநீர்
அந்தரத் தாமரை - ஆகாயத் தாமரை.
அமுதவல்லிக்காய்-சிந்திற்காய்
அரக்காம்பல்-செவ்வல்லி
அருளமரம் - முதிர்ந்த மாதுளைமரம்.
அரேணுகம்-கடுக்காய்வேர்
அளுங்கு-நளுங்கு
அறுகீரை-அறைக்கீரை

## ஆ

ஆகாத கடுக்காய் - இரட்டைக் காயுடையது உடைந்திருந்தது ஜலத்தில் வெந்தது சுக்கான்கல், நிலத்திற் கிடந்தது, சேற்றில் விழுந்திருந்தது, நெருப்பிற் சுட்டதுமாடாயிருந்துஞ் சேர்க்க் மருந்து கெட்டுப்போம்.

ஆகாத பசுக்களின்பால் - அலைந்து திரிந்தது, சுடுகாட் டெலும்பு தின்னது, நோய் கொண்டது, மலமருந்தினது, வெண்புள்ளியுடையது இவ்வைந்து பசுக்களின் பாலருந்த கபநோயும், திரிதோஷமும் வயது குறைவுமுண்டாம்.

ஆகாயக்கரிகாய்-அழல், கரப்பான் பித்தம், மருந்தின்வேகம் விர்த்தியும்போம், அதிபோகமும் ஐயமும் உண்டாம்.

ஆகாயம் - உலகும், மணமும் பலவித முண்டாம்.

ஆடாதோடாயிலை - ஐயம், ஜன்னி 13-வாதம், வாதமுதல் பலவித சுரங்களும்போம்.

ஆடாதோடைவேர் - கழுத்துவலி, காசம், சுவாசம், பித்தம், மந்தமும்போம்.

ஆடு தீண்டாப்பாளை - கரப்பான், கருங்குஷ்டம், குஷ்டம், சிலந்தி, வயிற்றின் கிருமிவாதம் 80, விஷமும்போம், தாது உண்டாம்.

ஆடையெடுத்ததயிர் - ஐயம், இளைப்பு, கிரிச்சாரம், வாயுகிராணி மேகமும்போம்.

ஆடையெடுத்தபால்-அசீரணம் வாதம், பித்தமும்போம் அக்கினி மந்தம், ஐயமும் உண்டாம்.

ஆண்துடரி-தாகம், நீர்க்கடுப்பு, நீரிழிவும்போம் பெண் வசிய முண்டாம்.

ஆதளைவித்து-இருமல், ஈளை, கட்டியின் வீக்கம், கிராணி, வலிகடிவிஷமும்போம்.

ஆதொண்டை-கபம், மண்டைக்குடைச்சல், வாதக்கடுப்பு, வாதபீநசமும்போம்.

ஆத்தி-மேகவேக்காடுபோம்

ஆபரணம்-கோபம், துக்கம் நோய்போம், வசியமும் களிப்புமுண்டாம்.

ஆமணக்குநெய்-ஐம்பொறிச் சூடேறிவு, குடலேற்றம், குன்மமும் வாய்வும்போம், அனல், தேககணம், பேதி விந்தும் உண்டாம்.

க்கழி-அருசி, அனல், இரத்தபதி, உள்முளை, கிராணி, கிரமேகம், பித்தம், மலபேதியும்போம். அழகு, பசி, தாதுவும் உண்டாம் பூந்தாது.

சக்கனக்கு - பிறகாந் சிங்கு, அசேது, முப்பத்திரண்டு பாஷாணத்திலொன்று.

ஆகாசதாமரை-அந்தரதாமரை
ஆகாயகெருடன்-சீந்தில்
ஆகுபாஷாணம் - வெள்ளை பாஷாணம்.
ஆகியம்-கருஞ்சீரகம்
ஆகு-முப்பத்திரண்டு பாஷாணத்திலொன்று.
ஆச்சியம்-நெய்
ஆஞ்சில்-ஓர்வித நூடு
ஆடகத்தி-குக்குமபாஷாணம்
ஆடகம்-துவரை
ஆடகி-துவரை
ஆடகூடம்-செம்புமலை
ஆடுதின்னாப்பாளை-ஓர்கொடி
ஆட்டுக்கல் - அமுத பாஷாணத்திலொன்று.
ஆணித்தங்கம்-உயர்ந்தபொன்
ஆணிமுத்து-வயிரமுத்து
ஆதலை-மாதலை, ஆமணக்கு
ஆதிகம்-சிறுகுறிஞ்சா
ஆதிகல்நாதம்-அன்னபேதி
ஆதொண்டை-காத்தொட்டி
ஆத்தா-ஆணிதழு
ஆத்தி-ஒருமரம்
ஆத்திரகம்-இஞ்சி
ஆத்துமபத்தா-பூனைக்காலி
ஆத்தலரி-கடலைப்பூஞ்செடி
ஆமணக்கு-ஓர்செடி
ஆமலகம்-நெல்லிமரம், பளிங்கு
ஆமல்-முக்கில்
ஆமா-காட்டுப்பசு
ஆமாத்தியன்-வைத்தியன்
ஆமிலம்-புளியமரம்
ஆம்பல்-முக்கில்கொடிபவளம்
ஆத்துபாசி-ஓர்பூண்டு, முழி
ஆம்பிரம்-காளான், மாமரம்
ஆர்கதி-திப்பிலி
ஆர்கோ-கொன்றை
ஆலசியம்-சோம்பு
ஆலவம்-வௌவால்
ஆவம்-குங்குமமரம்
ஆவாரை-நிலவாரை
ஆலபத்திரம்-புகையிலை
ஆ-ஆச்சா
ஆகம்-சுரை
ஆசி-திப்பிலி
ஆகாசகருடன்-கொல்லன் கோவை சீந்தில், பேயத்தி.
ஆகாசத்தாமரை - ஓர் நீர்ப்பூண்டு, கொட்டைப்பாசி.
ஆகாசவல்லி-ஓர்பூண்டு
ஆகாசி-சீந்தில்
ஆசாடம்-வெண்ணுபுருசி
ஆகாயமஞ்சி-சிறுசடாமஞ்சி
ஆகிரந்தம் } புன்கு.
ஆகிரந்தனம் } புன்கு.
ஆகேது-கொன்றை
ஆக்கொத்தமம்-கொன்றை
ஆக்கொல்லி-தில்லைமரம்
ஆகாசி-சீந்தில்
ஆசியபத்திரம்-தாமரை
ஆசியம்-கருஞ்சீரகம்
ஆசினி-ஓர்மரம், ஈரப்பலா
ஆசனம்-அசோகு, அரசு
ஆசரம்-இஞ்சி
ஆசுரம்-வெள்வெங்காயம்
ஆச்சமரம்-முசைப்புல்
ஆச்சா-ஆச்சாமரம்
ஆச்சவரி-அரசு
ஆஞ்சி-வலம்
ஆஞ்சில்-இசங்கு
ஆடகத்தி-குக்குமபாஷாண
ஆடகம்-துவரை
ஆடகி-துவரை

ஆடம்-ஆமணக்கு
ஆடலை-பூவிளா, பூவில்லாமரம்

ஆடாதோடை-ஓர் மருந்து செடி இதை அகிம்கள் முக்கியமாய் கெண்டைவாங்கல் வலி, நரம்புக் கடிப்பு, காசரண வாதம், கொறண்டல் வாதம், இவைகளுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். ஈளைகாசம், மந்தாரகாசம், சயவியாதி இவைகளுக்கும் உக்கிரமாய்வருகிற நளிர்சுரம் வாராமல் தடுக்கவும், கஷாயமாகவும் இலேகியமாகவும் செய்து கொடுக்கிறார்கள். இது கொஞ்சம் கசப்பாயிருக்கும்.

ஆடுதின்னாப்பாளை - ஓர் மருந்து பூடு, புழுக்கொல்லி, இதன் உலர்ந்த இலையின் குடிநீர் வயிற்றிலிருக்கிற பூச்சிகள் விழக் கொடுக்கப்படுகிறது. இதன் பச்சையிலை கொண்டுவந் தரைத்து ஆமணக் கெண்ணெயில் குழப்பிக் கரப்பான் புண்களுக்கு மேற்பூச்சாகப் பூசினால் புண்களாறிப்போகும்.

ஆடையொட்டி-ஓர்பூடு
ஆட்டாங்கள்ளி-திருகுகள்ளி
ஆட்டாங்கோரை-ஓர்கோரை
ஆட்டுக்கால்-அடம்பு

ஆட்டுக்கொழுப்பு - ஓர் கொழுப்பு, ஆட்டுக் கொழுப்பு மேற்பூச்சு கோவை தாலம் இவைகளில் சேர்க்கப்படுகிறது. இது சங்கமரப்பழம் சாதிக்காய் வால்மிளகு இவற்றோடுசேர்த்து இரத்தசயம், இரத்தரோகம், ஈளை, கசம், கசரோகம், கோழைநோய் இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆட்டுசம்-ஆடாதோடை

ஆட்டுப்பால் - ஓர்பால், சுதேசவைத்தியர் இந்தப்பாலை மிகவும் பலமுள்ள சஞ்சீவி மருந்து போல் உபயோகிக்கிறார்கள். சயரோகங்களிலும் மூர்க்கமான இருமலிலும் இதை மிகுந்த நம்பிக்கையோடு புகழ்ந்து பேசுகிறார்கள். இந்த வெள்ளாட்டுப் பால் பித்த சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. சரீர பலவீனமாயிருக்கும்போதும் வயிற்றுக் கழிச்சலுக்கும் பசியின்மைக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஆகணம்-சுரை
ஆணைப்பிறந்தோன் - கழுக்காணி, ஆவாரை.
ஆணிப்பூ } ஓர் நோய் கண்
ஆணிப்பூடு } வியாதி.
ஆணிவேர்-உச்சிவேர்
ஆணிச்செருக்கம்-இலவண பாஷாணம்.
ஆண்டலை-பூவில்லாமரம்
ஆண்டை-தேட்கொடுக்கி, ஆண்மரம், அழிஞ்சில்.
ஆதம்-கூந்தற்பனை
ஆதம்பேதி-செப்புநெருஞ்சில்
ஆதளை-ஆமணக்கு
ஆதி - காய்சற் பாஷாணம், மிருதபாஷாணம்.
ஆதிகம்-சிறுகுறிஞ்சா
ஆதிகடுஞ்சாரி-நவக்ஷாரம்
ஆதிகல்நாதம்-அன்னபேதி
ஆதிகுடி-சவுக்காரம்
ஆதிக்குரு-பூவழலை
ஆதித்தன்-ஆதிக்குரு
ஆதித்தன்கூர்மை-இலவண பாஷாணம்.

ஆதித்தன்வெள்ளை - ஆதித்தன்கூர்மை.
ஆதிபரம்-சாதிக்கா
ஆதிமகாகுரு-துரிசு
ஆதிமகாநாதம்-லோகமணல்
ஆதியாமம்-மூளைப்புல்
ஆதிரௌத்திரன்-சவ்வீரம்
ஆதிவிந்து-காரமுகில் பாஷாணம்
ஆதிவீராகவன்-சோரபாஷாணம்
ஆதிவிராட்டியன் - சோரபாஷாணம், சூதபாஷாணம்.
ஆதொண்டை-சாத்தொட்டி
ஆத்தா-ஓர்மரம், மனிலா, ஆத்தாசீதா, ராமசீதா.
ஆத்தி-திருவாத்தி
ஆத்திக்கனி-வெருகு
ஆத்திரதம்-இஞ்சி
ஆத்திஷடி-நீர்முள்ளி
ஆத்துமபத்தா-பூனைக்காலி
ஆத்துமம்-அரத்தை
ஆநகம்-தேவதாரு
ஆநந்தவல்லி - கொழுத்தலைக்கந்தகம்.
ஆநந்தவாதி-கௌரிபாஷாணம்
ஆந்தை-புருமுட்டி, பேராமுட்டி.
ஆப்பு-எட்டி
ஆப்புளண்டம்-கையாந்தகரை
ஆமகணம்-குழந்தைகட்குச் சீதழும்புவிழும்புகிற ஓர்நோய் கணத்தைப்பார்க்க.
ஆமடி-காஞ்சீமம்

ஆமணக்கு - ஓர்செடி, இதன்வகை செவ்வாமணக்கு, சூரியகாந்த ஆமணக்கு, மலையாமணக்கு, கடலாமணக்கு, காட்டாமணக்கு, வரிக்கரை காட்டாமணக்கு, எலியாமணக்கு, புல்லாமணக்கு, பறங்கியாமணக்கு, மணியாமணக்கு, பேராமணக்கு, படுக்கையாமணக்கு, அறுபதாங் கொட்டை, சிற்றாமணக்கு, சிற்றாமணக் கெண்ணெய், நல்லபேதி மருந்தென்று சுதேசவைத்தியர் சரியாய் மதிக்கிறார்கள். முக்கியமாய் நீர்கட்டு மலக்கட்டுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். பிறந்த குழந்தைகட்குக் கொஞ்ச அளவாய்ச் சிலவாரங்கள் வரைக்கும் நித்தியம் கொடுத்து வருகிறார்கள். தோலுக்கடுத்த நோய்களுக்கு மேல்பூச்சாய்ப் பூசுகிறார்கள். இந்தச் செடியின் வேர்ப்பட்டை பலமான பேதிமருந்தாயிருக்கிறது. இதை மிளகாய் புகையிலை இவைகளோடு சேர்த்தரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பரிமாணங் குதிரைக்குக்கொடுத்தால் அதற்குண்டாயிருக்கும் வயிற்று வலியைத் தீர்க்கும். உசிதமான மருந்தாய் இருக்கின்றது.

சிற்றாமணக்கெண்ணெய் செய்கிறமுறை: வேண்டுமான கொட்டை எடுத்து ஒரு இராத்திரி முழுமையும் தண்ணீரில் ஊறப்போட்டு மறுநாள் காலையில் நீரை வடித்து விட்டு மறுபடியும் அதில் புதுச்சலம் விட்டு அடுப்பேற்றி இரண்டுமணி நேரம் வேகவைத்துப் பின்பு முன்போலவே சலத்தை வடித்து விட்டுக் கொட்டைகளை யெடுத்து ஒரு பாயிற்போட்டு மூன்றுநாள் வெயிலில் காயவைத்துக் கடைசியில் அவைகளை உரலில் இடித்து அதற்குப்பத்தத்தனையான சலம்விட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து விடாமல் கலக்கிக்கொண்டிருந்

து எண்ணெய் மேலேயேறின பொழுது சாக்கிரதையாய் வடித்து ஆறியபின் புட்டியிலடைக்கவேண்டும். கொதிக்க வைக்கிற சலத்தோடு இளநீர்ச்சலஞ் சேர்ந்தால் எண்ணெய் வெண்மையா யிருக்கும்.

### வேறொரு முறை

முதல் இங்கிலண்டு தேசத்தில் பயிரிடப்பட்டது இப்போது லண்டன் பட்டணத்திற் கடுத்த அநேக தோட்டங்களில் பயிரிடப்படுகின்றது. இதன் விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் (காஸ்டர்) ஆயிலென்று சொல்லப் படுகின்றது. இந்த எண்ணெய் அமரிகா தேசத்திலிருந்து கொண்டுவரப் படுகிறது அவ்விடத்தில் இது செய்யப் படுகிறவிதமாவது.

இதை உரலில்யிடித்து இடிப்பட்டதை ஓர் வஸ்திரத்தில் மூட்டையாகக்கட்டி ஓர்பெரிய பானையில்விதை ஒரு பங்குக்கு எட்டுப்பங்கு ஜலம்விட்டு மூட்டையை அதிற் பிழிந்து தீமூட்டி யெரித்து எண்ணெய் மேலே மிதக்குகிற வரையில் வேக வைக்க வேண்டும். ஜாக்கிரதையாய் நுரையைநீக்கி எண்ணெயை வடிக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாகச் செய்யப்படுகிற எண்ணெயில் கார்ப்பும் குமட்டுதலுமிராது. விதைகளைக் கைச்செக்கில் போட்டு எண்ணெய் யிறக்குகிறதுமுண்டு.

இந்த எண்ணெய் இரைக்குடலுக்கு ஒத்து வரும்போது மற்ற எல்லா மருந்துக்களைவிட மிகவும் மனதுக்கிஷ்டான பேதி மருந்தாயிருக்கின்றது. இதைக்கொண்ட இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்திற்குள்ளாக சீக்கிரமாய்ப் பேதியாகும், வயிற்றுளைவு உண்டாயிராது சாந்தமாய் ஒருதரம் இரண்டுதரம் அல்லது மூன்றுதரம். மாத்திரமே பேதியாகும் இது மலச்சிக்கல் வயிற்றுநோவு இவைகளுக் குபயோகமாய் இருக்கின்றது வாட்டுவயிற்றுநோவுக்கும் உபயோகமாயிருக்கும் இதற்குச் சாதாரணமான அளவு ஒரு தேக்கரண்டி அல்லது அவுன்சு சிலர் இரட்டிப்பளவாகவும் கொள்ளுவார்கள்.

ஆமம்-சீதம், சீதவழுப்பு, சீதக்கட்டு, கடலை, துவரை.
ஆமையம்-கோய்
ஆமரம்-எட்டி
ஆமரிகம்-நெல்லி
ஆமலகம்-நெல்லிமரம்
ஆமல்-விஷமூங்கில், மூங்கில்
ஆமரகோளா-கடுக்காய்ப்பூ
ஆமிரம்-மாமரம்
ஆமிலம்-புளியமரம்
ஆமெற்பல்லூரி-கோரோசனை
ஆமைச்சுரம் - சிறுபிள்ளைகளுக்கு வரும் ஓர்சுரம்.
ஆம்பலா-புளியாரை
ஆம்பல்-நெல்லி, மூங்கில், அல்லி, புளியாரை, குமுதம்பார்க்க.
ஆம்பி-காளான்
ஆம்புயம்-இரதம்
ஆம்பிரம்-புளிப்பு, புளிமாமரம்
ஆம்பிலம்-கள், புளியமரம், சூரை

ஆம்பு-காஞ்சொறி
ஆம்புவம் }
ஆம்பூறு } சூரை
ஆயசூரி-கடுகு
ஆயத்தக்கருத்தன் - அஞ்சன பாஷாணம்.
ஆயினி-ஆசினியைப்பார்க்க
ஆயுள்வேதியன்-வைத்தியன், நோய்தீர்ப்போன்.
ஆய்மலர்-தாமரை.
ஆரகோரம்-கொன்றை
ஆரக்கம்-சந்தனம், அகிற்கட்டை, அகில்பார்க்க.
ஆரக்குவதம்-கொன்றை
ஆரசகம்-அகில்
ஆரத்திரகம் }
ஆரத்திராசாகம் } இஞ்சி
ஆரம்-ஆத்தி, சந்தனமரம், அஞ்சன பாஷணம், கடம்ப மரம், கோடகசாலை.
ஆராகவரியம்-அரசு
ஆராகரியம்-அரசு
ஆரியகம்-சிறுகுறிஞ்சா
ஆரியவாசியம்-ஓமம்
ஆரியன்-அதிவிடயம்
ஆருகதம்-நாவல்
ஆரே-ஆத்திமரம்
ஆரை-ஆரை, நீருளாரை, அத்திமரம், ஆரையிலைக்கறி, இதன் வகை. செவ்வாரை, புளியாரை, வல்லாரை, வறலாரை.
ஆரைக்காலி-தாழைக்கோரை
ஆரோக்கியம்-சவுக்கியம்
ஆரோக்கியஸ்நானம்-நோய் தீர்ந்த பின்பு செய்யப்படும் ஸ்நானம்.
ஆர்-ஆத்தி, கொன்றை
ஆர்கதி-திப்பிலி
ஆர்கோதம்-கொன்றை
ஆர்க்கங்கோடன் - கொல்லங்கோவை.
ஆர்துபம்-அரத்தை
ஆலகம்-நெல்லி
ஆலகாலம்-நிலவாகை
ஆலகிரீடை-அலரி
ஆலக்கொடிச்சி-தாளகம்
ஆலம் - ஆல், புன்கு, மாவிலிங்கு, துரிசு.
ஆலம்விரை-ஓர் மரத்தின் விதை. இதைக் குளிர்த்தி லேகியங்களில் தமிழ் வைத்தியர் உபயோகப் படுத்துகிறார்கள். பல்வலி, ஈறுவலி இவைகட்கு இம்மரத்தின் கொழுந்தின் பாலை உபயோகப் படுத்துகிறார்கள். இந்தப்பால் கால் வெடிப்புக்குச் சிறந்த மேல் பற்றாக உபயோகிக்கப்படுகிறது. இந்த மரத்தின் பட்டை நீரிழிவு வியாதிக்கு நல்ல பலமான துவர்ப்புடைய மருந்தென்று தமிழ் வைத்தியர்கள் முறையாக விதிக்கிறார்கள்.
ஆல்விருட்சம்-ஆதொண்டை
ஆலாலம் - நஞ்சு, விடம், வெளவால்.
ஆலி-கள்
ஆலியகம்-சிறுகுறிஞ்சா
ஆலூரகம்-வில்வம்
ஆலை - கருப்பஞ்சாறு, கரும்பு ஓர் யந்திரம்.
ஆல் - ஆலமரம், இதன்வகை. சிற்றால், இச்சியால், குறுவால், கல்லால், கொடியால், ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி.
ஆவம்-குங்குமமரம்
ஆவல்லி-சீந்தில்
ஆவாகை }
ஆவாரை } நில்வாகை.
ஆவாரை - ஆவிரை, வைத்தியர் இதன் விதையைக் குளிர்ச்சி,

சீதளம், வெம்மை யாற்றுகிற குணமுடையதென்று எண்ணுகிறார்கள். இயல்புக்கு விரோதமாய் உண்டாயிருக்கிற உட்டிமை, வெம்மை, காந்தல், அழல், சீர்கேடு இவைகளுக்கு லேகியத்தில் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. இதன் உலர்ந்த விதைகள் ஆர்க்கப் பொடிசெய்து கண்ணோவுக்கு கண்ணில் ஊதப்படுகின்றன.

ஆவிபதம்-பேராமுட்டி
ஆவிரை - ஆவாரை, நிலாவிரை, பேயாவிரை, பொன்னாவிரை, வெள்ளைப் பொன்னாவிரை.
ஆவின்-புல்லுருவி
ஆவு-குன்றி
ஆவேகி-ஆடுதின்னாப்பாளை
ஆழிவிரை - ஓர்விரை, ஒரு சிறிய சிவந்த நிறமுள்ள விதையாயிருக்கின்றது. இது சரீரத்தின்பேரில் காணுகிற இரத்தச் சுரப்பு, எரிபந்தம் கண்டமாலை முதலாகியவைகளுக்கு வடிவிக்கிற அல்லது வற்றப்பண்ணுகிற மருந்தாக வழங்கப்படுகிறது.
ஆளகம்-கரை
ஆளிவிரை - ஒருவகைவிரை, இது சிறிய விதையாக இருக்கிறது. இவ்விரை சீனாதேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. மந்தாரகாசம் ஈளை இந்த வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆள்வணங்கி - அரசு தொட்டால் வாடி.
ஆள்வள்ளி - மலைச் சருக்கரைவள்ளி.
ஆறகோரம்-கொன்றை
ஆயதீகம்-கல்நார், ஆறு

ஆறு-ஓரெண், அறுசுவை, அவையாவன, கைப்பு-அல்லது கசப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு-அல்லது உப்பு, துவர்ப்பு, காய்ப்பு அல்லது காரம்.

ஆறுசூலை - அவையாவன. பித்தசூலை, வாதசூலை, சிலேட்டுமசூலை, வாதபித்தசூலை, சிலேட்டும பித்தசூலை, அய்ய கணசூலை.

ஆறுகிராணி-அவையாவன, பித்தகிராணி, உஷ்ண வாதக்கிராணி, சிலேட்டுமவாதக்கிராணி, மேகக்கிராணி, மூலக்கிராணி, வாதக்கிராணி.
ஆறுபருவம்-அவையாவன
கார்காலம்
ஆவணி-புரட்டாசி
கூதிர்காலம்
ஐப்பிசி-கார்த்திகை
முன்பனிக்காலம்
மார்கழி-தை
பின்பனிக்காலம்
மாசி-பங்குனி
இளவேனிற்காலம்
சித்திரை-வைகாசி
முதிர்வேனிற்காலம்
ஆனி-ஆடி
ஆறுமலடு - அதாவது, வாதபித்த மலடு, கிருமியமலடு, சீழ்மலடு வாயுமலடு, சூதகமலடு, துன்மாம்சமலடு.

ஆறுபொழுது
மாலை - அஸ்தமித்தபின்பு முதற் பத்துநாழிகை வரைக்கும்.
யாமம் - இரண்டாம் பத்துநாழிகை வரைக்கும்.
வைகறை-மூன்றாம் பத்துநாழிகை வரைக்கும்.

எற்றோற்றம் காலை அல்லது விடியல் உதயமுதற் பத்து நாழிகை வரைக்கும்.
நண்பகல் - இரண்டாம் பத்துநாழிகை வரைக்கும்.
எற்பாடு - மூன்றாம் பத்துநாழிகை வரைக்கும்.
ஆற்றலரி - சுடலைப்பூச்செடி, சேங்கொட்டை.
ஆற்றுச்செருப்படி-ஓர்பூண்டு
ஆற்றுத்தும்மட்டி - பேய்க்கொமட்டி, குமட்டியின்கீழ் பேய்க்கும்மட்டியைப்பார்க்க.
ஆற்றுநெட்டி - நீர்ச்சுண்டி நீரின்கீழ் நீர்ச்சுண்டியைப்பார்க்க.
ஆற்றுப்பச்சை-நாகப்பச்சை
ஆற்றுப்பாசி-ஓர் நீர்ப்பூண்டு
ஆற்றுப்பூத்தான்-பூனைக்காலி
ஆற்றுப்பூவரசு-ஓர் செடி
ஆற்றுமரி-கீருமரி
ஆற்றுமல்லிகை - மல்லிகையைப் பார்க்க.
ஆற்றுமுள்ளி-கண்டங்கத்திரி
ஆற்றுமோழகி-ஓர் பூண்டு
ஆனகம்-சுரை
ஆனத்தேர்-விடத்தேரை
ஆனந்தம்-அரத்தை
ஆனம்-கள்
ஆனை-அத்தி
ஆனைக்கண்-ஆனைக்காய்
ஆனைக்கன்று-அத்தி
ஆனைத்தடிச்சல் - புளிகாளை, புளியானை.
ஆனைத்தும்பை-பெருந்தும்பை
ஆனைநெருஞ்சில் - பெரு நெருஞ்சில், புரியானை, இந்தப் பச்சிலையைக் கொண்டுவந்து ஜலத்தில் கலக்கும்போது அது ஒரு விதச் சாறாய்விடும். அந்தச்சாற்றை நீர்க்கடுப்பு, நீரெரிவு, நீர்ச்சிறுப்பு, நீர்க்கோவை, நீரடைப்பு, மேகவெள்ளை இந்த வியாதிகளுக்குக் கொடுக்கலாம். அதன் விதைகளும் அதேவித குணமுடையனவாக இருக்கின்றன. இவை கியாழமாகச் செய்து கொடுக்கப்படும்.
ஆனைவணங்கு-தேள்கொடுக்கி
ஆகாயகக்கரி - ஆகாயமுள்ளி வெள்ளரி.
ஆதளைவித்து - காட்டாமணக்கு வித்து.
ஆலங்கட்டிநீர்-கல்மழைக்கட்டி
ஆகாயவெளி-மூளை
ஆகாசதந்தம்-நகம்
ஆமைநெய்-மூலம்போம்
ஆமையோடு-மாந்தம்போம்
ஆயிரங்குச்சியிளநீர்-ஒருவித தேங்காய், தினவு, புண், வாயிலிரங்குஞ்சீழ், வயிற்றுவலி, வாதகபமும்போம். அதிவேக தீபனமும் உண்டாம்.
ஆலமரத்தின்சமூலம்-இலை, பழம், பால், பூ, விதை, விழுது இவைகளால் அகக்கடுப்பு, நீரிழிவு, மேகம் வாயச்சரமும் போம்.
ஆலம்பால் - மேக வியாதிபோம். சிரக்குளிர்ச்சி, சுக்கில விர்த்தி, பல்லிறுகலும் உண்டாம்.
ஆலாங்கட்டிநீர் - மழைத்தண்ணீர் கண்மாசி கம்மாந்தல் சுவாசம், பெரும்பாடு, மெய் மயக்கம், மேகம்போம். குளிர்ச்சி உண்டாம்.
ஆலாபக்ஷிமாமிசம் - இமாம் பட்சி, பித்தவாதம், மேகம், வாய்வுமுண்டாம்.
ஆவாரம் பஞ்சாங்கம் - கற்றாழை நாற்றம், தேகத்திலுண்டாகிற உப்புமாவு, நீரிழிவு, வறட்சியும் போம். தேககாந்தி உண்டாம்.

ஆவரைப்பஞ்சாங்கம் - இலை, பட்டை, பூ, வித்து, வேர் இவைகளில் அனல் அஸ்திசுரம், கிராணிதாகம், நீரிழிவு, நீரெரிவு, புண், மேகம்-21, வெட்டை, வெண்மேகமும்போம்.

ஆவாரைவித்து - மேக நீரெரிவும் போம்.

ஆளிவிரை-அருசி, அழலை, ஒக்காளம், நரம்பின் குத்துவலி, வாந்தி, வாயு, வீக்கம், விரைவாதமும்போம்.

ஆள்காட்டி பக்ஷிமாமிசம் - தேவபட்சி மேகமும் வாதமும்போம். பத்தியத்திற்காகும்.

ஆள்வள்ளிக்கிழங்கு - அரோசகம், பித்தம், மேகவெட்டை, வாந்தியும்போம். கரப்பான், கிரந்தி, சூலை, மதம், வாதகபம், வாதகுன்மம், வாயுகுத்தலு முண்டாம்.

ஆற்றுத்தும்மட்டிக்காய் - சூதகக்கட்டி, சேரம்பல், வாதமும் போம்.

ஆற்றுநீர் - அனல், கபம், தாகம், வாதமும்போம். தாது உண்டாம்.

ஆற்றுமருந்து-அழலைபோம்

ஆற்றுமல்லிகை-மேனி, அழகுண்டாம்.

ஆற்றுமீன்-நாட்டுப்புமீன் அருசி, ஐயம், மந்தம், வெப்பமும் போம். தாது உண்டாம்.

ஆற்றுமுள்ளங்கி-மணல்முள்ளங்கி, சிலேட்டுமம்போம்.

ஆவின்பால்-பசும்பால்.

ஆழிநுரை-கடல்நுரை

ஆரை-வல்லாரை

ஆலம்-விஷம்

ஆவெண்ணெய்-பசுவெண்ணெய்

ஆப்பால்-பசும்பால்

ஆதித்தன்-சூரியன்

ஆமம்-உடம்பு

ஆ-பசு

ஆடாசம்-கெந்தியுரிபாஷாணம்

ஆதிபதி-விந்து

ஆகாசவிந்து-விந்து

ஆசை-பொன்

ஆடகம்-பொன்

ஆகாசகம்பி-கம்பியுப்புமூலி

ஆடுதின்னாப்பாளை - ஆடுதொடாமூலி.

ஆகாயமூலி-ஆகாயத்தாமரை

ஆண்செருப்படை - சிறு செருப்படை.

ஆவாரைகாஷ்டம்-ஆவாரைவிறகு

ஆனைநெருஞ்சி-பெருநெருஞ்சி

ஆனை-அருகு, ஓருகு

ஆகாயமாஞ்சி-சிறுசடாமாஞ்சி

ஆகாசவல்லி-ஓர்கொடி, சீந்தில்

ஆசைவைத்திருமானை-மரம்

ஆசையபத்திவம்-தாமரை

ஆதிவிந்துநீலபாஷாணம்-மழை

ஆதிவிராகன்-சோரபாஷாணம்

ஆதிவிராட்டியம் - வெள்ளைபாஷாணம்.

ஆமணத்தி-கோரோசனை

ஆமரகோளம்-கடுக்காய்ப்பூ

ஆயுள்-வைத்தியன்

ஆத்திரகம்-இஞ்சி

ஆலக்கட்டி-துருசு

ஆலக்கொடிசி-அரிதாரம்

ஆலசம்-சோம்பு

ஆள்வள்ளரி-அரசமரம்

ஆனந்தவாதி-கௌரிபாஷாணம்

ஆச்சாமரம் - மராமரம், சாலம், சுள்ளி.

ஆடாதோடை-வாசை

ஆமணக்கு-ஏரண்டம்

---

## இ

இசங்கு-சேட்டமம்போம்

இச்சி-குட்டம்போம்

இச்சிபூ - இளைப்பு, சுரதோஷம், மேகவழலும்போம். நல்ல வாசனையுண்டாம்.

இஞ்சிக்கிழங்கு-இருமல், ஐயம் ஒக்காளம், ஜன்னி, சுரம், சூலை, திரிதோஷம், பேதி, வாதமும் போம்.

இஸ்கோல்வித்து-நீர்கடுப்பு, மேகமும்போம்.

இண்டு-அனலிலெழும் புண், ஈளை, கட்டுவாதம், சூலை, நீரேற்றம், பீநசம், மண்டைக் குடைச்சல், முகஜன்னி, முட்டுவாதம், மேகமும்போம்.

இதளை-சூலைபோம்

இந்துப்பு - அஷ்டகுன்மம், ஐயம், இரத்தமூலம், இரைப்பு, எலிகடி, கரப்பான், காசம், காமியநோய், சிலந்தி, சீதம், சூதகவலி, சூலை, தாகம், தேள்விஷம், தோஷம், நாடிப்புண், பித்தம், மலக்கட்டும்போம்.

இரண்டாமீற்றுப் பசுவின்பால் - உஷ்ணமும்போம்.

இரத்தப்போளம் - கிராணி, கெர்ப்பத்திற்றங்கிய உதிரம், சீழ்மூத்திரம், சூதகவாயு, மலபந்தவாயு, வயிற்றில் முறுக்கு நோயும் போம்.

இரத்தினகம்பளம்-ஐயம், கோபம், சலவைதோஷம், சீதம், சஞ்சு, பாண்டும்போம், உஷ்ணம், தாதுவிர்த்தி, பித்தமும் உண்டாம்.

இராக்கறிவகை-அத்திக்காய், அவரைப்பிஞ்சு, ஆவின்பால், ஆற்றுமுள்ளிக்காய், துவரை, தூதுளம், முருங்கை இலை சாப்பிட சுகமுண்டாம் இராப்போஜனத்திற்குப் பின்னருந்தும் பசும்பால், ஈளை, சயரோகம் நேத்திரரோகம்போம், தாதுபுஷ்டி தேகத்தில் உதிர மூறலுமுண்டாம்.

இராஜவர்த்தம் - காந்தல், சயம் தடுமம், மேகமும்போம்.

இராப்பசுவின்பால் - அழல், ஈளை, கபம், கண்ணிலெழும் பிணிகள், பித்த வேகமும் போம். தாது, தேகமேனி, விரகமும்உண்டாம்.

இரும்புதொட்டி வென்னீர்-பாண்டு நோய்போம்.

இந்தியபுஷ்டி - நரம்பு[illegible], தேகக் குளிர்ச்சியும் உண்டாம்.

இருவாட்சிமரம்-வலி, மூர்ச்சையும் போம். கண்ணொளிவு, தேகமணம், நீடழகு, வெப்பமும் உண்டாம்.

இலந்தைமரவேர் - ஆயாசம் போம் பசி உண்டாம்.

இலந்தையிலை-இரத்தம் வீழல் எரிச்சல், கடுப்பு, சீழ்மூலம், மேக பித்தமும் போம்.

இலந்தைப்பழம்-அருசி, பித்தமயக்கம், மிகுவாந்தி, வாய்வும்போம் வெறும்வயிற்றில் தின்றால் எரிவும் உண்டாம்.

இலவமரம் - அதிசாரம், நீரெரிவு, நீர்க்கடுப்பு, வெள்ளையொழுகு, மேகமும் போம் ஐயம் விந்துவும் உண்டாம்.

இலவம்பஞ்சு மெத்தை-மேசவனல் போம்.

இலவம்பிசின்-மரக்கம்பு, சுக்கிலக்கட்டுண்டாம்.

இலவுநீர்-மொக்குநீர், அஷ்டகுன்மம், அழில், இரணம், கிருமி, நீரிழிவும்போம்.

இலுப்பைநெய்-நாகச்சுத்தி, துர்ப்பலம்போம்.

இடுப்புவலி - கரப்பான், சிரங்கு, பலம், புண்ணும் உண்டாம்.

இலுப்பைப்புண்ணாக்கு-எண்ணைக்கசிவு, கடுவன், கரப்பான், ஜன்னிதோஷம், புண், விரைவீக்கமும்போம்.

இலுப்பைப்பூ-தாகம், பித்தசுரமும்போம், மயக்கம், பயித்தியமுண்டாம்.

இலுப்பைப்பூச்சம்பா-ஓர்வித நெல், தலைநோய், தாகம், பித்தம், மற்றநோய்களுமுண்டாம்.

இலுப்பைவித்து - அந்தரவாய்வும் விஷமும்போம்.

இலுப்பைவேர் - அகக்கடுப்பு, அரோசி, இரத்தக்கடுப்பு, சர்வசுரம், தாகம், தாதுநஷ்டம், நீரிழிவு, புண்புரை, மகாசூலை, மந்தம், மெய்யிளைப்பும்போம். சூடதிகம் உண்டாம் தலைமயிர்க்காகா.

இலைக்கள்ளிப்பால் - உள் விரணம், ஊதுகிரந்தி, கரப்பான், சூலை, செவிநோய், வாதமும் போம்.

இவ்விதநோய்க்குச் சுடுதாகங்கூட்டல்-குன்மம், ஜன்னிதோஷம் வாய்வுக்குங் கூட்டலாம்.

இவ்விதநோய்க்குத் தயிர் கூடாதெனல் - அக்கிநோய், அதிசாரம், அதைப்பு, கபம், காமாலை, குட்டம், குன்மம், சிரம், சோகை, பாண்டு, பீநசம், பெரும்பாடு, மந்தத்துக்குங்கூடாது.

இவ்வித நோய்க்குத் தாம்பூலங்கூடாதெனல்-அதிருட்சை, கபம், ஜந்நிபாதம், சிரநோய், சூட்கைநோய், பதசூர்ச்சாரோகம், விஷங்களுக்குங் கூடாது.

இவ்வித நோய்க்கு நெய் கூடாதெனல் - அதிசாரம், குரல்கம்மல், குன்மம், ஜன்னி, ஜலதோஷம், சுரதோஷம், மகோதரம், விஷங்களுக்குங் கூடாது.

இவ்வித நோய்க்கு-வெந்நீராகாதெனல்.

இரத்தபித்தம்-கண்டமாலை, காமாலை, நேத்திரநோய், மேகநோய்க்கு மாகாது.

இவ்வித பாக்குகளைத் தள்ளவேண்டுமெனல் - அதிகயீரம், அதிக சொக்கல்-அதிகப்பிஞ்சு, அதிக முத்தல், மிகுபுதிது, மிகுசொத்தை, மிகு பூச்சுள்ளதும் தள்ள வேண்டும்.

இவ்விதமாதர்போகம்கூடாதெனல்- அங்கதேசம், அசுபம், அதிதூலம், அமங்கலி, அரூபம், அலட்சியம், அலிசுருப்பம், கோபம், கோள், ரூட்கம், சூதகம், தாகம், திரிமலம், துக்கம், துஞ்சல், துர்க்கந்தம், பசி, பயம், மூப்பு, வெட்கம், வெறுப்புமுள்ள மாதர்கள் போகங்கூடாது. அதினால் துன்பமுமுண்டாம்.

இளங்கொட்டைப் பாக்கு-முத்தாத பாக்கு, அருசி, கோழைக்கட்டு, சிலேட்டுமம், வாதமும் போம். சடாராக்கினியுண்டாம்.

இளநீர் - வழுக்கைப்பற்றுத நீர், அனல், கபம், நீரடைப்பு, பித்தம், பேதி, வாதம், வாந்தியும் போம். கண்ணொளி, தேகக்குளிர்ச்சி, மனதுதெளிவு முண்டாம்.

இளந்தண்டுக்கீரை-அரோசி, சுரகாசமும்போம்.

இருல்மீன்-உதிரப்பெருக்கு, சீதம், தினவு, பொருமல், மந்தம், வாதமும் உண்டாம்.

இம்புருவேர்-சாயவேர்

இருமல்-ஐயம், உப்பிசம், எரிசுரம், சுவாசம், செருமல், பித்தம், வயிற்றுப் பொருமலும் போம்.

இகுடி-ஆதொண்டை
இசங்கு-ஓர்செடி
இங்கு-பெருங்காயம்
இச்சியம்-கடுகுரோகணி
இடபிகரம்-மகளிர்சூதகம்
இடாபிமம்-தாதுமாது
இருக்குப்பாலை-கருப்புநீர்ப்பனை
இண்டு-இச்சிலிச்செடி
இண்டை - ஈகைக்கொடி, தாமரை மாலை, முல்லை.
இத்துருகா-வட்டபுல்லு
இந்திரகோலம்-தம்பலப்பூச்சி
இந்துப்பு-ஓர்மருந்துச்சரக்கு
இந்துளம்-கடப்பமரம்
இந்துளி-பெருங்காயம், நெல்லி
இமலம்-மரமஞ்சள்
இரசகற்பூரம்-ஓர்மருந்து
இரசகுளிகை - இரும்பைப் பொன்னாக்குமருந்து
இரசதம்-வெள்ளி
இரசபற்பம்-ஓர்மருந்து
இரசவாதம் - இரும்பைப் பொன்னாக்குதல்
இரசாயம்-ஓர்மருந்து
இரத்தி-இலந்தை
இரஸ்து-வாழைப்பழம்
இரவிகாந்தம்-சூரியகாந்தம்
இராஜகிரி-வெள்ளைக்கிரி
இராசவள்ளி-ஓர்கொடி
இராட்சவிருட்சம்-கொன்றை
இராசீவம்-தாமரைப்பூ
இராடம் - பெருங்காயம், வெண்காயம்.
இராமபாணம்-இராமாம்பு ஓர்பூ ஓர்மருந்து.
இரிசியா-பூனைக்காந்தி
இருத்தை-சேங்கொட்டை
இரும்பிலி-ஓர்செடி
இருவாட்சி-ஓர்மரம்.
இருவிக்காந்தம்-ஓர்மருந்து
இருவேலி-வெட்டிவேர்
இரேணுகம்-ஓர்மருந்து
இலகு-ஓர்மருந்து
இலசுனம்-வெள்வெங்காயம்

இலனை-அரபமரம்
இலந்தை-ஓர்மரம்
இலதை-படர்கொடி
இலாக்கிரி-செம்மெழுகு
இலிகுசம்-எலிமிச்சை
இலுப்பை-இலுப்பைமரம்
இறுக்கு-சோளம்
இறைச்சி-மாமிசம்
இன்பூரில்-சாயவேர்
இகலை-வெள்ளை
இக்கவம்-கரும்பு
இக்கிரசம்-கருப்பஞ்சாறு
இக்குவிகாரம்-சருக்கரை
இங்கரி-கஸ்தூரி
இங்குசுக்காணமன்—நீர்முள்ளிநெருஞ்சில்.
இங்குதூரி-கோரோசனை
இங்குதாழி-பீதரோகணி
இஷ்டம்-ஆமணக்கு
இணாம்-கிச்சிலிமரம், தளிர்
இத்து-காவட்டம்புல்
இத்துரு-வங்கமணில்
இத்தம்-புளியமரம்
இந்திர பாஷாணவைப்பு - பாஷாணம்.
இந்துகௌரிபாஷாணம்-பச்சை கற்பூரம்
இந்துகமலம்-வெண்டாமரை
இந்துளம்-நெல்லி
இரசகேசுரம்-கற்பூரம்
இரசகெந்தபாஷாணம்-சாதிலிங்கம்
இரசசெந்தூரம்-ஓர்செந்தூரம்
இரசபலம்-தென்னமரம்
இரசபுட்பம்-இரசபஸ்பம்
இரசனுதம்-இரதம்
இரசமாத்திரை-இரசகுளிகை
இரசமணி-இரசங்கட்டியமணி
இரசலிங்கம்-ஜாதிலிங்கம்
இரசணி-அவிரி
இரசாயனம்-இரசவாதம், தாய்சத்திமருந்து நஞ்சு
இரசுத்தி-ஈயம்
இரணம்கொல்லி-ஓர் பூடு
இரத்தகுமுதம்-செந்தாமரை
இரத்தகைரவம்-செவ்வாம்பல்
இரத்தசந்தனம்-செஞ்சந்தனம்
இரத்தபாஷாணம் - வைப்புபாஷாணம்
இரத்தபாதம்-சாதிலிங்கம்
இரத்தபுண்டம்-சீவமல்லிகை
இரமடம்-பெருங்காயம்
இராமபிரியம்-தாமரை
இரத்தவடி-வைசூரிக்குரு
இரத்தரோகம்-ஓர்நோய்
இரத்தவீசம்-மாதுலை
இராசகனி-எலுமிச்சைக்கனி.
இருளி-கொன்றை
இக்கு-கரும்பு, கள்
இக்கி-கஸ்தூரிமஞ்சள்
இங்கு-பெருங்காயம்
இங்கிசுகாண்டான்-நீர்முள்ளி, நெருஞ்சில், பெருங்கரும்பு.
இங்குடிமம்-இங்கு
இங்குகாதி-பீதரோகிணி
இங்குகாரி-பேரோசனை
இங்குதாழி-பீதரோகிணி
இங்குராமம்-பெருங்காயம்

இங்குவிசம் - சாதிலிங்கம், இந்தச் சரக்கு சீனுவிலிருந்தும் பத்னுவிலிருந்தும் வருகிறது.

இளங்கோல்விரை-ஓர்விரை

இன்கோல்விரை - ஓர்விரை, இது மேகவெள்ளை, மேகவியாதி, தடிமல், சலதோஷம், சலுப்பு குண்டிக்காய், இவைகளுக்கு குடிநீராகச்செய்து கொடுக்கப் படுகிறது. இந்தச்செடி மேற்கு இந்துஸ்தானதேசத்தில் பயிரிடப் படுகின்றது.

இசங்கு-சங்கு
இசருகம்-வெள்ளைத்தும்பை
இசலில்-கொன்றை
இசிசர்-கடுகு
இடுபலம்-பேய்ப்புடல்
இசிப்பு-இசிவு, வயிற்றிசிவு
இசுதாரு-கடம்பு
இசைமுடி-சிலந்திநாயகம்
இச்சி-இத்தி
இச்சியல் - கடுகுரோகணி, கடுபார்க்க.

இச்சியா-இத்தி, இச்சி, கல்லிச்சி
இஞ்சம்-வெங்கோன்றி

இஞ்சி - ஓர்கிழங்கு, கொத்தான், இஞ்சியை ஐரோப்பாவில் எதற்காக உபயோகப் படுத்துகிறார்களோ அதற்காகவே சரியாய் சுதேசவைத்தியரும் உபயோகப் படுத்துகிறார்கள். அதாவது சீரணக்குறைவை நீக்குதற்கும், தேகத்தில் சூடுண்டாக்குதற்குமேயாம். திமிர்வாதம், சந்துவாதம், இவைகளுக்கு இதைச் சாராயத்தில் சேர்த்துப் பற்றுப் போடுகிறார்கள் குளிர்சுரத்துக்குப் போடுங் கஷாயத்திற் சேர்க்கின்றார்கள், இஞ்சி இந்தியாவில் எங்கும் விளைவாகத் தக்கது.

ஒரு இங்கிலீஷ் வைத்தியர் அபிப்பிராயப் பிரகாரம் நாவுக்கு ருசி தருவதைவிடத் தேகத்திற்கு, உட்டிணந் தருகிற குறைவான காரமுடைய சுந்தமூலமாயிருக்கின்றது. காசவாதத்தை அடக்கப்பட்ட மருந்தாகவும், வாயுவைத்தணிக்கு மருந்தாகவுமிருக்கின்றது. வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, மெலிவு, தளர்ச்சி, பேதி, திமிர், விரைப்பு இவைகளை நீக்குவதாகவும், சிலேத்தும தத்துவமுடைய தேகஸ்திதியோருக்கு நாடியில் சுறுசுறுப்புண்டாக்குவதாகவுமிருக்கின்றது. இதை வேறே மருந்துகளோடே சேர்த்துக் கொடுப்பதரிது. வைத்திய சாஸ்திரங்களில் நீஞ்சாற்றுக் கஷாயம், அநுபானம் இவைகளுக் கொத்தநின்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

இஞ்சுசாரே-வெல்லம்
இடங்கணம்-வெங்காரம்
இடபவாகனன்-எருமைநாக்கி
இடவகம்-இலவங்கம்
இடற்சம்-குக்கில்
இடாடிமம்-தாதுமாதுளை
இடிகம்-பெருமருந்து
இடுகால்-பீர்க்கு
இடுப்புவலி-ஓர்நோய்

இடுமோலி - ஓர்மரம். இது மலையாளக் கரைத்துறையில் வளருமரம். இதன் வேர்ப்பட்டை, புட்பம், பழம், இவைகளில் செய்யப்படுகிற பலவித மருந்தைப் பைத்தியம், உன்மத்தம், மூளையைப்பற்றிய வியாதி இவைகட்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

இஷ்டம்-ஆமக்கு
இணங்கன்-வெடியுப்பு
இணர்-கிச்சிலிமரம், மாமரம்
இண்டு-புலிதொடக்கி, ஈயச்செடி.

இண்டை-இண்டு, தாமரை, புலித்தொடக்கி, முல்லை.

இதரம் - வேறு மருந்தால் முறிந்த இரதம்.
இதழி-கொன்றை
இதள்-இரதம்
இதை-காரமணி
இத்தி-இச்சி
இத்தூர
இத்து } சாவட்டம்புல்.
இந்தம்-புளியமரம்
இந்திகோபம்-ஈயம்
இந்திரகோபம்-தம்பலப்பூச்சி
இந்திரசுகந்தம்-நன்னாரி
இந்திரபம்-வெட்பாலை
இந்திரபாஷாணம்-ஓர்பாஷாணம்
இந்திரபுசிப்பு
இந்திரபுஷ்பம் } வெந்தோன்றி.
இந்திரவல்லி - கொத்தான், முடக்கற்றான்.
இந்திரவாசம்
இந்திரவாமம் } நெய்தல்.
இந்திரவாருணி-பேய்த்தும்மட்டி
இந்திராணி-நொச்சி
இந்திரி-நன்னாரி
இந்திரியம் - சுக்கிலம், பொறி, பஞ்சேந்திரியம், அவையாவன மெய், வாய், கண், மூக்கு, செவி.

### கருமேந்திரியம்

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்.
இந்திரேகம்
இந்திரேபம் } வெட்பாலை.
இந்திரேயம்-வெட்பாவட்டை
இந்தீவரம் - கருக்குவளை, கருநெய்தல்.
இந்து-கௌரிபாஷாணம், பச்சைக் கற்பூரம்.
இந்துப்பு-உப்புப்பார்க்க
இந்துமாரம்-கடம்பு
இந்துவாரி - தண்ணீர்மிட்டான், சாதாவரி
இந்துளம்-களப்பமரம்
இந்துளி-இந்துரு, நெல்லி, இங்கு பெருங்காயம்.

இந்துள்-நெல்லி
இந்துறு-இலந்தை
இபங்கம்-புளிமா
இமலம்-மாமஞ்சள்
இம்பி-கருந்தினை

இம்பூறல்-சாயவேர், இந்தவேர் கடுக்காய் படிகாரஞ் சேர்த்துச் சிவப்புச் சாயம், கிச்சிலிப்பழச் சாயம், ஊதாசாயம் போடுகிறதற்கு உபயோகப் படுகின்றது இது இராமேச்சுரத்தில் விஸ்தாரமாய் விளைகிறபடியால் இராமேச்சுர வேரென்றுஞ் சொல்லப்படுகிறது.

இந்தச் செடிக்குச் சிறிய வெளுப்பான பல இலைகள் உண்டாயிருக்கின்றன. சிறு கசப்புடையதாகவும் விருப்பமில்லாத உருசியுடையதாகவும் இருக்கின்றது. மார்கோவில் நெஞ்சு பேதியாக்குகின்ற மருந்தாகவும் இருக்கின்றது. இதை யுலர்த்தி இடித்துச் சூரணமாக்கி அரிசிமாவோடு சேர்த்துச் சுட்ட அடை கயரோகம் அல்லது சயரோகஸ்தரால் தின்னப்படுகிறது.

இயக்கினி-கண்டங்கத்திரி
இயக்குரோதம்-ஆல்
இயந்திரி-இத்தி
இயம்-பிறுதாரிசிங்கி
இயல்பூதி-நாய்வேளை, வில்வம்.
இயைவ-துவரை

---

இயாதம்-கொன்றை
இயாகதம்-சிற்றகத்தி
இயாகதம்-அத்தி
இயசாவியம்-கொன்றை
இயைமே-வாழை

இரசம் - பாதரசம், இரசம் திபத்து தெசுலம்பி என்கிற இடத்தில் பவள மனேசிலே அகப்படுகின்றது. அதில் விஸ்தாரம் இரசம் இருக்கின்றது இது சீன நாட்டிலிருந்து கொண்டுவரப்படுகிறது. அவ்விடத்தில் சுத்தமான சரக்கும் கந்தகத்தோடு சேர்ந்த சரக்கு மகப்படும். இரசம் முதல் முரணை தோதுக்கடுத்த சில வியாதிகளுக்கு உபயோகப் படுத்தப் பட்டுக்கொண்டு வருகிறது. இந்தப் பலமான சரக்கின் பிரயோசனத்தை முதல் முதல், உபயோகப் படுத்தினவர் இந்திய தேசத்து சுதேசிகளோடு அரபி தேசத்தாரோ வெனச் சந்தேகிக்கப் படுகின்றது. ஐரோப்பா தேசத்தில் ஆதிவைத்தியர்கள் மேக வியாதிகளுக்கு இரசத்தை முதல் உபயோகப்படுத்தியது 15 - ம் நூற்றாண்டிலென்றும் குஷ்ட வியாதிகளில் இது பிரயோசனமுள்ளதென்று 12-ம் நூற்றாண்டிலே பிரசுரஞ்செய்த ஒரு அரேபி வைத்தியனால் செய்யப் பட்ட கிரந்தத்தில் சொல்லியிருந்ததைப் பரிசோதிக்கும்படி ஐரோப்பியர் பாத்தியப் பட்டார்களென்றும் கேள்வியாயிருக்கிறது.

மட்டீரியா மிடிகா வென்னும் இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரத்தில் கண்டிருக்கிற பிரகாரம் பாதரசத்தைச் சேகரப்படுத்தி உபயோகப் படுத்துவதில் தமிழ் வைத்தியர்க்கு இரசவாதத்தில் கியானம் போதாதென்பதாய் தெரிய வருகிறது. அவர்களது வைத்திய விஷயங்கள் சாஸ்திரோக்தமானவையல்ல; ஒன்றோடொன்று பொருத்தமுள்ள வஸ்துக்கள் இன்னவை யென்று தெரியாமையால் ஒன்றோடொன்று மாறுகொள்வனவாயிருக்கு மவைகளை யாதொரு கிரமுமின்றிக் கலக்குகிறார்கள் இவ்விஷயத்தில் அவர்கள்காரியம் நகைப்புக்கேதுவா யிருந்த போதிலும் அவர்களுடைய முக்கியகொள்கைகள் சரியாயிருப்பதுமன்றி ஆச்சரியப்படத்தக்க விஷயங்களாய் அநேகமுண்டு. பாதரசத்தைப் பக்குவப்படுத்துவதற்காகத் தமிழ்வைத்தியர்கள் கைக்கொள்ளும் விதிகள் அடியில் காணப்படுகின்றன.

### இரசபஸ்பம்

இது மிகவும் பேர்போனதாயும் பாதரசத்திலிருந்து உண்டாக்கும் மற்ற ஔஷதங்களை விட அதிகமாய்ப் பிரயோகிக்கப் படுத்தும்படி இருக்கின்றது. அகஸ்தியர் வாகடத்தில் சொல்வதாவது “பன்னிரண்டு வராகன் இடையுள்ள கந்தகத்தை ஓர் மண் பாத்திரத்திற் பெய்து மெல்லென நின்றெரிகிற நெருப்பில் உருகச்செய்து உருகியான சமயத்தில் என்

பதுவராகனிடை யுள்ள பாதரசத்தைச்சேர்த்து இரண்டும் ஓர் கறுத்த பஸ்பமாகிற வரைக்கும் மெதுவாய்த் துழாவ வேண்டியது. பின்பு வேறொரு பாண்டத்தை யெடுத்து அதில் அரைவாசி செங்கற் பொடிகளால் நிரப்பி அதன்மேல் ஒருபடி உப்பைப் பரப்பி மேற்கண்ட கறுத்த பஸ்பத்தை அவ்வுப்பின் மேல் வைத்து இவற்றின் மேல் மற்றோர் பாண்டத்தைமூடி வாய்க்கு ஐந்து சீலைமண்செய்து அடுப்பிலேற்றி நன்று யெரித்துப் பன்னிரண்டு மணி நேரஞ் சென்றபின் இறக்கிச் சாங்கமுஞ் சீதளமானதைகண்டு சாக்கிரதையாய்த் திறந்து மேல் சட்டியில் பதங்கமாயிருக்கிற பஸ்பத்தை யெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

### இரச பஸ்பத்தைப் பிரயோகிக்க வேண்டியவிதம்

நான்கு விராகனிடை ஓமத்தை வறுத்துப் பொடியாக்கிக் கொண்டு நான்கு வராகனிடைப் பனைவெல்லஞ்சேர்த்து இரண்டையும் நன்றாய்க் கல்வத்திலரைத்து எட்டுப் பணவெடையுள்ள இரச பஸ்பத்தைச் சேர்த்து நெடுநேரமரைத்து பதினாறு மாத்திரையாக்கி, காலையும் மாலையும் ஒவ்வொன்று விழுக்காடு எட்டுநாளைக்குச் சாப்பிடவேண்டியது. பின்பு சாதாரணமாய் வாய் புண்ணாகும், பதினெட்டுவித நரம்பு பிடிப்புகளையும், மேகங்களையும் இருபது விதச் சொரிகளையும் இராசக் கட்டியையும், சிலையோடும் இரணங்களையும், கண்டமாலையையும், குஷ்டத்தையும், போக்க இதற்குச்சக்தியுண்டு.

### இரச கற்பூரம்

பதினாறு வராகனெடைக் கந்தகத்தை மேற் சொல்லிய விதமாய் ஒருமண் பாத்திரத்தில் வைத்துருக்கி அதனோடு எண்பது வராகனெடை இரசத்தைச் சேர்த்துக் கறுத்த பஸ்பமாகிற வரைக்கும் துழாவி வேறொரு மண் பாத்திர மெடுத்து முன்சொன்னபடியே அரைவாசி செங்கற் பொடிகளை நிரப்பி அதன்மேல் அரைப்படி உப்பைப்பரப்பி இவ் வுப்பின்மேல் அந்தக் கறுத்த பஸ்பத்தை வைத்து எழுசீலையிட்டுப் பதங்கஞ் செய்து பன்னிரண்டுமணிநேரம் தீயெரித்துப் பின்பு இறக்கி ஆறவைக்க வேண்டியது. சுத்தமாய் ஆறிப்போன பின்பு மேலிருந்த பாத்திரத்தை சாக்கிரதையாய் எடுக்க அதில் ஓர் வெள்ளை நிறமுள்ள உப்புச் சம்பந்தமான வஸ்து சேர்ந்திருக்கும் ஓர் குப்பியை யெடுத்து மேற்சொன்ன உப்புச் சம்பந்தமான வஸ்துவினால் அரைவாசி நிரைத்துக் குப்பிமேல் சீலைமண்செய்து வாயகன்று ஆழமான சட்டியை யெடுத்து அதில் கால்வாசி ஆற்றுமணலால் நிரப்பி, தீட்சண்யமான நெருப்பில் வைத்து எரித்தபின் மேற்கண்ட குப்பியை அதில் நிறுத்தி அந்தக் குப்பியின் வாய்மட்டும் புதை

ஆற்றுமணலைக் குவித்து, காலை ஆறுமணிமுதல் பகல் பனிரண்டுமணிவரைக்கும் புடம் வைத்தபின்பு நெருப்பை யணைத்து மாலை ஆறுமணிவரைக்கும் ஆறவைத்து மறுபடியும் அடுப்பின்மேல் வைத்து இராத்திரி 12-மணி வரைக்கும் எரிக்கவேண்டியது. இப்படி விடாது 3-தினஞ் செய்யின் ரசகற்பூரம் குப்பியின் வாயண்டையிற் சேர்ந்திருக்கும்.

### இரச கற்பூரத்தைப் பிரயோகிக்கவேண்டிய விதம்

ஒரு காசெடை பனைவெல்லத்தையும், காற்பணவெடை ரசகற்பூரத்தையும் செவ்வையாய் ஒன்றாகும்படி கலந்த ஓர் மாத்திரையாகச் செய்து வாய் புண்ணாகிற வரைக்கும் காலையில் பாதியும், மாலையில் பாதியுமாகச் சாப்பிடவேண்டியது. உடம்பு தாளுமானால் இதற்கு இரட்டத்தனை சாப்பிடலாம் வலி அல்லது ஜீரணசக்தி குறைவு இவ்விஷயங்களில் இம்மாத்திரையில் 5-கிறெயின்சு திப்பிலியும் சேர்க்கவேண்டியது 18-வித குஷ்டங்களிலும் 20-விதம் ரணங்களிலும், நரம்பு சுருட்டிக்கொண்டிருக்கும் விஷயங்களிலும், மேகவிஷயங்களிலும், ராஜக்கட்டிகளிலும், சிலையோடும் புண்களிலும், உட்கொண்ட ரணங்களிலும் புரைக்கழல்களிலும், தொத்துச் சிரங்குகளிலும் சிலவித மதமயக்கங்களிலும் ரசகற்பூரத்தைப் பிரயோகிக்கலாம்.

### இரச செந்தூரம்

10-வராகனெடை துத்தநாகத்தை ஓர் மண் பாத்திரத்தில் போட்டு மணல் தொட்டியில் வைத்துருக்கி 10-வராகனிடை பாதரசம் 2½-வராகனிடைத் துருசு 20-வராகனெடைப் பொட்டிலுப்பு இவற்றை ஆர்க்கப் பொடிசெய்து மேற்சொன்ன உலோகங்களின்மேல் தெளித்து முழுதையும் சிறுகோலால் துழாவிக் கொண்டிருக்க வேண்டியது. பின்பு மணல் தொட்டியின் உஷ்ணத்தை அதிகப்படுத்தி முன் செய்ததுபோலவே ரசசெந்தூரம் ஆகிறவரைக்கும் துழாவவேண்டியது.

இரசம்-மா
இரசகற்பூரம்-இரசம்
இரசதம்-வெள்ளி
இரசத்தாளி-வாழை
இரசம்-ரசம்
இரசதம்-ஈசுரவிந்து

இரச கற்பூரம் - கிண்ணி கற்பூரம், இரசக் குண்டு, இரச குளிகை, சித்தர் குளிகை, இரசக்கட்டு, இரசச்சிந்தூரம், இரசச்சுத்தி

இரசபாஷாணம்- கடுகியகாந்தி
இரசுமாதா-அப்பிரகத்தின்கீழ் அப்பிரக பாஷாணம்பார்க்க.
இரசனா-அரத்தை
இரசாயனம்-இரசம்பார்க்க
இரசாலம்-கரும்பு, பலா, மாமரம், கோதுமை.
இரஞ்சனம்-செஞ்சந்தனம்
இரண்டிகை-இரண்டை
இரதம்-இத்தி

இரதம்-மா, பல், மாமரம்
இரதம்-இரசம்
இரசசந்தியாகம்-செந்தாமரை
இரதி-இலந்தை, கார்த்திகைப்பூ
இரதிகாந்தன்-தாமரை

இரத்தம்-பவளம், உதிரம், இதன் சம்பந்த நோயாவன. இரத்தசுரம், இரத்தகாசம், இரத்தக்கழிச்சல் ஓர்பேதி, இரத்தக்கோமாரி, இரத்தபாஷாணம், இரத்தபித்தம், இரத்த பிரமியம், இரத்தமூலம், இரத்த வலிப்பு, இரத்தக்கனப்பு.

இரத்தசாதகம்-செங்கிரை
இரத்தபிண்டம்-சீனமல்லிகை
இரத்தபுட்பிகா-மூக்கிரட்டை
இரத்தமண்டலம்-செந்தாமரை
இரத்தி-இத்தி, இலந்தை
இரத்திரி-இத்திமரம்
இரத்தோற்பலம்-செந்தாமரை
இரம்பிலம்-மிளகு
இரவிமது-வெள்ளி
இரளி-கொன்றை
இராகவி-பெருநெருஞ்சல்
இராகவிண்ணுடகம்-கொன்றை
இராகூச்சிட்டம்-வெண்காரம்
இராசயுகம்-பாலை
இராசவிருட்சம்-கொன்றை
இராசதாலம்-கமுகு
இராசசூயம்
இராசியம் } தாமரைப்பூ
இராசீவம்
இராடம்-வெங்காயம்
இராத்துண்டு-இலந்தை
இராமக்கம்-ஓர்நோய்
இராமடம்-பெருங்காயம்
இராமமரம் - மன்னிலா, ஆத்தா, அனிநுணா.
இராமாப்பிரியம்-தாமரை
இராவடம்-அசோகு
இராவடி-ஏலம், பேரேலம்
இராவணன்மீசை-ஓர்பூண்டு
இரிசியா-பூனைக்காலி
இரிவசி-மகிழ்
இருகுராங்கின்கை - மொசு மொசுக்கை.
இருசகம்-மாதுளை
இருசீரகம்-சீரகம், கருஞ்சீரகம்
இருசு-மூங்கில்
இருண்டி-சிறுசண்பகம்
இருத்தை-செங்கோட்டை
இருபன்னியம்-செங்கோட்டை
இருப்பாவல்-ஓர்பூண்டு

இந்தச் செடியின்வேர் கடையில் அகப்படும் இதில் கொஞ்சம் உணர்ச்சியான உருசியும் வாசனையும் உண்டா யிருக்கின்றது. இது மருந்துவகையில் சேர்ந்ததாகவு மிருக்கிறது. இதில்நோய் பேதிக்கிறகுணமும் வெயர்வையுண்டாக்குகிற குணமும் உண்டாயிருக்கின்றன. பசியின்மை, கண்டமாலை, கிரந்திப்புண் இந்த வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகிற மருந்தாக இருக்கிறது. இது யதார்த்தமாய் மண்டை வியாதிக்கு மருந்தென்று ஒரு இங்கிலீஷ் வைத்தியர் சொல்லுகிறார்.

இருப்புலி-துவரை
இருப்புக்கொல்லி-சிவனார்வேம்பு
இருப்பை-இலுப்பை
இருமல்லி-சிறுமல்லி, பெருமல்லி
இருமல்லி-ஓர்நோய்
இரும்புலி-ஓர்செடி
இரும்புக்காய்வேளை-காய்வேளை

இரும்பி-ஓர்லோகம், இரும்பு இந்தியா தேசத்தில் பல திசைகளிலும் சாதாரணமா யகப்படும். கருமணலிலிருந்தும் சோளாங்கற்களிலிருந்தும் உருக்கி யெடுக்கப்படுகிறது. மைசூர் தேசத்தில் சீரங்கப் பட்டணத்துக்கும் பெங்களூருக்கும் மத்தியில் அகப்படுகிற அகருகல்லு இபாநாதம் என்கிற கருமணலிலிருந்து செய்யப்படுகின்றது. ஊசிக்காந்த உலோகமும் மைசூரிலுண்டு. பைகோதேசத்திலிருந்து வருகிற இரும்பு மிகவும் சிரேஷ்டமானதா யிருக்கும்.

### இரும்புப்பொடி.

மகமதியன் வைத்தியர் இதை இஞ்சி சீரகம் இவைகளுடன் சேர்த்துக் கொடுத்தால் சீரண மருந்தாகு மென்கிறார்கள்.

இரும்புலி-துரை

இரும்புதிப்பு அல்லது மண்டூரம், இது முக்கியமாய் பாண்டு காமாலை முதலாகிய ரோகங்களுக்கு உபயோகப்படுகின்றது.

இருவலங்கம் - இல்வங்கம், கிராம்பு
இலவங்கப்பட்டை - கருவாப் பட்டை, கறிவாய்ப்பட்டை.
இருவாட்சி - அநங்கம், பார்க்கவேண்டியது.

இருவேலி-வெட்டிவேர்
இருளி-கருஞ்சீரகம்
இருள்முகா-நாவி
இருமிஸ்தகி-ஓர்மருந்து

இந்த வஸ்துவை வைத்தியர் சுகஔஷதமென்றும், பெலன் கொடுக்கிற மருந்தென்றும் தைலமுள்ள அல்லது பிசினுள்ள வஸ்துவென்றும், மிகவும் மதிக்கிறார்கள். இந்த வஸ்து சாதாரணமாகச் சாலாமிசிறி என்கிற வஸ்துவுடன் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் பலத்தைக் கொடுத்துப் போஷிக்கத்தக்க வஸ்துவாக யோசிக்கப் படுகின்றது. மகமதியன் சாதியில் கனவான்களுடைய பெருமாட்டிகள் தங்கள் தந்தங்களை யுறுதியாக்கிக் கொள்ளவும், உறுப்புக்களை மதுர மாக்கிக் கொள்ளவும் நினைத்து இதை வாயில் போட்டு மெல்லுகிறார்கள். இந்த வஸ்து சையாஸ் என்கிற தீவிலிருந்து செங்கடல் வழியாய் வருகின்றது.

இரேசகி-கடுக்காய், சிந்தில்
இரேசககுணு-கடுகு

இரேசன்-வெள்வெங்காயம், வெள்ளுள்ளி.
இரேசந்திரம்-இரதம்
இரைத்து - உப்பிலி, இண்டு, புலிதொடக்கி.
இரைப்பு-ஓர்நோய்
இலகம்-ஊமத்தை
இலகு-அகில், சிதேவி
இலகுசம்-ஈரப்பலா
இலசுனம்-வெள்வெங்காயம்
இச்சைகெட்டமரம்-கற்றேக்கு
இலஞ்சி-புன்கு, மகிழ்
இலஞ்சியம்-கீழர்நெல்லி
இலட்சுமணம்-தாளு
இலனை-அரசு
இலவை-இலந்தை, படர்கொடி
இலந்தை-ஓர்மரம், கொடியிலந்தை, நிலவிலந்தை.

இலந்தைவேர்-ஓர்வேர், இந்தவேர் சுவையற்றதாயிருந்தபோதிலும், சில சூடான விதைகளோடு சேர்த்துப் போடப்பட்ட கஷாயம் சில சிரங்குகளுக்கும் வயிறு வலிகளுக்கும் வைத்தியர் உபயோகப் படுத்துகிறார்கள்.

இலவங்கம்
லவங்கம் } இலவங்கப்பூ, கிராம்பு.

இலவங்கப்பட்டை - இலவங்கப்பத்திரி, இலவங்கம் இந்தியாவுக்கு ஆம்போயனு, ஊறனிமோயா, கௌசலாத் என்கிற தீபாந்தரங்களிலிருந்து வருகின்றது. இதைச் சுதேச வைத்தியர் யிலகரியும் சூடும் பரிமளமுமான மருந்தா யோசிக்கிறார்கள். இலவங்கப்பட்டை.

இது மகமதிய வைத்தியருக்கும் தமிழ் வைத்தியருக்கும் பிரியமுள்ள மருந்தாயிருக்கின்றது. இதமான உபயோகமுள்ள சீரண மருந்தாக யோசிக்கிறார்கள். இது பெரும்பாலும் பாரனியோ கரைத்துறையிலிருந்து அல்லது குழம்பிலிருந்து வருகிற சரக்காயிருக்கின்றது. கனரா தேசத்துக் காட்டிலும், மலையாள தேசத்திலும் உண்டாயிருக்கின்றது.

இலவணம்-லவணம், உப்பு
இலவண பாஷாணம் - ஆதித்தன் கூர்மையைப்பார்க்க.

கடுந்திலவணம் - அதாவது எள்ளுள்ளவணத்தில் பார்க்க.

சிந்துலவணம் - சிந்துபார்க்க.

இலவு-இலவமரம், இலவு, தேற்று ஓர்மரம், இலவம்பிசின், இதன் கரைப்பு, சில சம்பாரங்களோடு சேர்த்து வயிற்று வலிகட்கு கொடுக்கப்படும். சிலிபஸ் என்கிற தீவிலிருக்கிற குடிகள் இந்த விதையை ஆகாரமாகப் புசிக்கிறார்கள்.

இலாங்கிளி-செங்காந்தள், தேங்கு, வெங்தோன்றி, செகரந்தை.

இலாஞ்சி-ஏலம்
இலாஞ்சிலி-ஏலம்
இலாடம்-புளி
இலாடவி-அகில்
இலாமிச்சை-விலாமிச்சை
இலிகுசம்-எலுமிச்சை
இலிங்கப்புற்று-ஓர்நோய்
இலிங்கப்புடோல்-ஐவிரலி, கோவ்வை.

இலிங்கம்-சாதிலிங்கம், இங்குலிகம்

இலுப்பை - இருப்பை, இலுப்பைப்பூ, விசித்திரமும் மதுரமுமுடைய இந்தப் பூவை வடதேசத்திலும், பேகார் தேசத்திலும், விஸ்தாரமாகச் சேர்க்கிறார்கள். இதுவெயிலில் உலர்த்தி மகாராஷ்ட தேசங்களுக் கனுப்பப்படுகிறது. உலர்ந்த திராட்சப் பழத்துக் கொப்பாயிருக்கின்றது. இதைச் சதைத்துச் சல்லிகுழம்பாகச் செய்யப் படுகிறது. சுதேசிகள் உண்டைகள் செய்து மீன் அரிசி இவைகட்குப் பண்டமாற்றுதல் செய்கிறார்கள்.

இந்தியாவின் மேற்பாகத்தில் சேத்திரா, இராமநகர் மாகாணங்களில் இந்தப் பூவில் சாராயம் இறக்குகிறார்கள். இந்துஸ்தானி கீழ்ப்பாரிச நாடுகளிலும் காட்டிலுப்பைப்பூவில் சாராயம் இறக்குகிறார்கள்.

இலுப்பைப் பட்டை, இந்தப் பட்டையின்சாறு கீழ் வாதங்களுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றது.

இலுப்பைக்கட்டி-இலுப்பைப் புண்ணாக்கு, இலுப்பைக்கடுகு, இலுப்பைகொட்டை, இலுப்பைப்பருப்பு.

இலுப்பெண்ணெய்-இலுப்பைப் பூ கருப்பட்டி.
இலேகம்
இலேகியம், லேகம் } ஓர்வித மருந்து
இலேசுணம்-அரிதாரம்
இலேந்து
இலேவந்து } கல்லுப்பு
இலேபம்-வால்மிளகு
இந்துப்பு-மதிலவணம்
இருலிங்கவட்டி-சாதிலிங்கம்
இருவேலி-வெட்டிவேர்
இமம்-பனி
இருஷிமூலம்-வசம்பு
இருநாவி-நாவி, கருநாவி
இரதம்-பாதரசம்
இலையின்கள்ளி-இலைக்கள்ளி
இருமுட்டி - சிற்றுமுட்டி, பேராமுட்டி.
இந்து-இந்துப்பு
இரண்டுவாசனைவேர்-வெட்டிவேர், விலாமிச்சம்வேர்.
இமை-கண்ணிமை
இதழ்-ஓரிதழ்த்தாமரை
இதழ்-சாதிபத்திரி
இளஅத்தி-அத்திப்பிஞ்சு
இவியர்டம்-இரசகற்பூரம்
இமையகிரி-யோனி
இரணியம்-பொன்
இந்திரகோபப்பூச்சி-தம்பலபூச்சி
இராசகனிவித்து-எலுமிச்சம்பழம்
இருகுமிழி-குமிழம், நீர்க்குமிழம்
இலேம்புகம்-நீலக்கடம்பு
இலை-ஏடு, தழை

இலக்கள்ளி - கள்ளிபார்க்க, இது உயரமாக வளருகின்றது, இது சதுரக்கள்ளி, திருகுகள்ளி என்பவைகளிலிருந்தும் பிரித்தறியப் படுகிறது, சுதேச வைத்தியர் விரோசன மருந்தாகவும் மலத்தை இளக்குகிற மருந்தாகவும் எண்ணுகிறது மல்லாமல் முறைக்காய்ச்சலினால் உண்டாகிற நீரேற்றம், மலக்கட்டு இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கிறார்கள். கீல்வாதப் பரிகாரக் கெடுதியால் உண்டாகிற அவயவச் சுருக்கமாகில் அதன் பாலை வேப்பெண்ணையோடு சேர்த்து மேற் பூசுகிறார்கள். சில தீபாந்தரதேசத்தில் இதன் கொழுந்திலையைச் சீரணமாக்குகிற மருந்தாக யோசிப்பதாய்ச் சிலர் சொல்லுகிறார்கள்.

இலைக்கொடி-வெற்றிலைக்கொடி
இலைப்புல்லு-புல்லுபார்க்க
இல்லம்-தேற்றுமரம்

இல்லி - வால்மிளகு, தேற்றிலை, தேற்று.
இவநட்டம்-மிளகு
இருத்தி - நெய், தித்திப்பு, இனிமை தினம்.

இளசாட்சறம்-கொன்றை
இஞ்சி-ஈஞகத்திரி
இளநீர் - முற்றாத தென்னங்காய், இது சுண்ணாம்பை வெளுப்பாக்குகிறதற்கும் சிற்றாமணக்கெண்ணெயை நேர்த்தியும், பரிசுத்தமு மாக்குவதற்கும் உபயோகப் படுத்தப் படுகின்றது, விதைகளை வேகவைக்கிற சலத்தோடுஞ் சேர்க்கப்படுகின்றது.

இளம்புள்-அருகு
இளவன்-சோரபாஷாணம்
இறஞ்சி-அவுரி
இறடி-கருந்தினை
இறந்திரி-இத்தி
இறலி-இத்தி, மருது, கொன்றை
இருள்-தேன்கூடு
இறுகங்கியான்-கையான்தகரை
இறுங்கு-சோளம், காச்சோளம்

இறும்பு-கார்த்திகைப்பூ, தாமரை, காந்தள்.
இதள்-சிறுதூது
இறாகம்-இலாமிச்சை
இறை-மாமரம்
இறைவன்-சிவனார்வேம்பு
இறைவனிம்பம்-சிவனார்வேம்பு
இன்னாலை-இலைக்கள்ளி

## ஈ

ஈசனென்னும் பச்சைக்கர்ப்பூரம் - உஷ்ணம், உள்தாகம், உன்மத்தம், சீதம், பித்தம், பீநசமும் போம். காந்தியும், வசியமும் உண்டாம்.
ஈச்சங்கற்கண்டு-கிருமியும், பலரோகமும் உண்டாம்.
ஈச்சமது - ஈச்சங்கள்ளு அருசி, அவுரி, கிரிச்சிரம், மேகம், வெப்பும் போம். திமிர்பித்தம், மெய்குளிர்ச்சி, வீக்கமும் உண்டாம்.
ஈச்சம்வெல்லம் - கறுப்பு வெல்லம் பித்தமும் போம். சீதம் - மத்திமந்தம், வாதசிலேட்டுமம் உண்டாம்.
ஈச்சுரமூலி- பாதாளமூலி - ஜங்கிபாதங்கள் பலபல வீக்கங்கள், விஷங்களும்போம்.
ஈர்க்குச்சம்பா - அற்ப பித்தமும் ஆசையுமுண்டாம்.
ஈழத்தலரிப்பால் - தொடைவாழைப் புற்று, புண்புரைப்போம்
ஈகம்-சந்தனம்
ஈகை-இண்டு, இண்டங்கொடி, புலிதொடக்கி.
ஈக்கை-புலிதொடக்கி
ஈங்கம்-சந்தனம்
ஈங்கு-புலிதொடக்கி
ஈங்கை-திப்பிலி, இண்டு
ஈங்கை-உப்பிலி, இண்டு
ஈசதேசாத்தி-பெருமருந்து
ஈசுரமூலி }
ஈசுரவேர் } பெருமருந்து, தாராசுக்கொடி
ஈசுரவிந்து-இரசம்
ஈசுவந்தானம் }
ஈசுவரிபிந்து } கெந்தகம்
ஈச்சு-ஈச்சமரம்
ஈஞ்சு-ஈச்சு
ஈண்டு-புலிதொடக்கி
ஈந்து-ஈச்சு
ஈமம்-பாதிரிமரம், சுடலை
ஈமவாரி-வசம்பு
ஈமக்கொடி-புலிதொடக்கி இண்டஞ்செடி.
ஈயம்-பாதரி, வங்கம், பஞ்சலோகம் காரீயம், வெள்ளீயம்.
ஈயகுழலி-நீலபாஷாணம்
ஈயம்-மிருதார்சிங்கு, ஈயம் சையா தேசத்தில் இருந்தும் அரக்கன் தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. அராபி தேசத்தில் ஓமன் என்கிற இடத்தில் ஈயக்கேணி உண்டா யிருக்கிறது.

ஈயல்-தம்பலப்பூச்சி, ஈசல்
ஈயவரி-பெருமருந்து
ஈயை-இண்டு, புலிதொடக்கி, சஞ்சீவி, இஞ்சி.

ஈரப்பலா-ஆசினி, ஈரப் பலாக்காயை யதிகமாய்ச் சாப்பிட்டால் வயிற்றுளைவு உண்டாகும். ஆனால் அந்த மரத்தின் வேரையும் பட்டையையும் உட்கொண்டால் அது தீர்ந்துபோகும்.

ஈரம்-கரும்பு, குங்குமப்பூ
ஈரல்-ஈருள்

ஈரற்குலை-ஈரற்குழி, கல்லீரல், நுரையீரல், வெள்ளையீரல், வெள்ளீரல், மண்ணீரல், வாளீரல்.

ஈரவன்-ஈரம்
ஈரவள்ளி }
ஈரவெங்காயம் }
ஈருள்ளி } ஈரவெங்காயம் ஓர்பூண்டு
ஈர்-கரும்பு
ஈர்கொல்லி }
ஈர்கொல்லிக் கொடி } உப்பிலிக்கொடி

ஈர்க்குமல்லிகை-ஓர் மல்லிகை
ஈழத்தலரி-பெருங்கள்ளி
ஈழத்தலரி-பொன்னலரி
ஈரகாயம்-வெண்காயம்
ஈழம்—கள், கள்ளி,
ஈழை-காகநோய்
ஈனத்தா-கொன்றை
ஈனம்-கள்ளி

## உ

உகவல்லி-நாகவல்லி
உகா-உகாமரம், உவா
உகாப்பட்டை - ஓர் மரப்பட்டை, உகாப்பட்டை கொஞ்சம் சூடுள்ளது. உலர்ந்ததனால் கார்ப்புள்ளதாயிருக்கின்றது சுதேசவைத்தியர் இதைச் சுரங்களுக்குக் கஷாயம்போட்டுக் கொடுக்கிறார்கள். இதன் பச்சை வேர்ப்பட்டையை இடித்துவைத்துக் கட்டினால் கொப்புளங் கொள்ளச்செய்யும் மருந்தாக உபயோகப் படுகிறது. அது கொஞ்சம் வாசனையும் உருசியுமுள்ளதா யிருக்கும்.
உகிரம்-இலாமிச்சை
உகினம் }
உகின் } புளிமா
உக்கிரகந்தம் }
உக்கிரகந்தி } கரும்பு, கருவேம்பு, வசம்பு, வேம்பு.
உக்கிரசவா-காத்தொட்டி
உக்கிரச்சுரவார்-ஆதொண்டை
உசரிதம்-நெருஞ்சல்
உசிரம்-செவ்வியம், மிளகு
உசிலம் }
உசிலை }
உசில் } சீக்கிரி, சீக்கிரான்
உசில்-உசிலை
உச்சிச்செடி-வல்லுருவி
உச்சிகம்-நெருஞ்சில்
உச்சிப்பிளவை-ஓர்புண்
உச்சிமல்லிகை-ஊசிமல்லிகை
உஷ்ணம்-வெப்பம்
உஷ்ணவாதக்கிராணி-ஓர்நோய்
உஷ்ணாதிக்கம் }
உட்டணாதிக்கம் } அதிக உஷ்ணம்.
உகாவித்து-வாதபித்த சிலேட்டுமம் மந்தத்தால் வந்த நோயெல்லாம் போம்.

உடும்பிறைச்சி - இரத்தக் கடுப்பு, கபம், காதுநோய், குடல்வாதம், குஷ்டம், சிரநோய், சோகை, பித்தம், புண், பேதி, மூலமுளை, மேகம், வறட்சி, வாதம், வெட்டையும்போம். அதிக பலமுண்டாம்.

உடும்பின்நெய் - இரத்தம், வரட்சி வாதபித்தம், வாந்தியும் போம். பலமுண்டாம்.

உடும்பின் முட்டை- நீர்வடிகிற விரணம், பித்தம், நேத்திரரோகமும்போம்.

உட்டணகாலம் - அழகு, வாதமும் போம். இரத்த பித்தம், உஷ்ணரோகம், பட்சி, வரட்சி, வியர்வையும் உண்டாம்.

உண்கலத்தில் முக்கியம் - எல்லாவித பாத்திரத்திலும் மண்பாண்டமே முக்கியம்.

உண்டபின்பருந்து மிளநீர் - பைத்தியம், மலம், வாத பித்தமும் போம். பசிமேனியுண்டாம்.

உண்டபின் குறுநடை-நூறடி நடந்தால் முத்தோஷம் போம். பொசித்த அன்னம் சீரணமுண்டாம்.

உண்டபின் வெந்நீரருந்தல் - சுரம், தாகம், பொருமல், மந்தம், வாதமும் போம். ஆயுளும் தாதுவுமுண்டாம்.

உண்பதற்கு முன்பருந்து மிளநீர்- பசி நோய்போம். குன்மவியாதியுண்டாம்.

உப்பு - லவணம், அஷ்ட குன்மம், அனல்வாதம், கண்டமாலை, கபம், வல்லக்கட்டியும் போம்.

உப்புநீர் - கடல்சலம், குடல்வாதமும்போம். சாதஞ் செரிப்பு, துவர்ப்பு, பித்தம், வாயுகுத்தல், வாய்நீரூறலுமுண்டாம்.

உப்பிலிக்ஷாரம்-குடல்வாதம், குன்மம், சூலை, நீர்க்கட்டும் போம்.

உரலாமணக்கு - இரத்தமும், எலிவிஷம், காலில் விரணம், குன்மம், சூலை, பீலிகம், முளைமூலம், மேகங்கள், வலியும், விஷங்களும்போம். பேதியுண்டாம்.

உருத்திராக்ஷம்-தில்லை, கபம், தாகம், பித்தம், முத்தோஷம், விக்கலும்போம்.

உருத்திரசடை - திருநீற்றுப் பத்திரி, அருசி, சுரத்தாதிபந்தம், இரத்தவாந்தி சுரமும்போம்.

உருவலி-இரத்தமேகம்போம்

உல்லமீன் - கழிச்சல், காணுக்கடிபிளவையும்போம்.

உவர்ச்சாரம் - வாதசேட்மம், பலரோகமும்போம்.

உழுந்தப்பளம் - சீதகபம் போம். பலமும் வாதமும் உண்டாம்.

உழுந்து - எலும்புருக்கியும், பித்தமும்போம். இடுப்புக்குப் பலம், சுக்கிலவிருத்தி, மந்தம், வாதம், சீதளமும் உண்டாம்.

உழுந்துவடை - தீபனம், பித்தமும் போம். வாதம் உண்டாம்,

---

உழுந்தோதனம் - பித்தம்போம். கபவாதம், தேகபலம், மந்தமுண்டாம்.

உழுவைமீன் - உடல், பிணிபோம். கரப்பான், மலமுமுண்டாம்.

உள்ளான்கறி - பசியில்லாமை, மந்தம், மேகம், வாதபித்தமும் போம். பத்தியத்திற்காம்.

உட்பு-தொரட்டி, தொரட்டு முள்ளிச்செடி.

உடப்பை-சலங்கநீர்

உடற்றழும்பு-அங்கிதம்

உடு-சிக்கிரிமரம், உசிலை

உடும்பு - ஓர்மிருகம் நாளவு நெய்யில் உடும்பை இலேகியமாகச் செய்து சயரோகிக்குப் பலக்தருகிற மருந்தாக வைத்தியர் கொடுக்கிறார்கள். அந்த லேகியம் ஒட்டைப்பாகருக்கு அப்பெரிய மிருகத்தின் அசைவினாலும் அதனேறினாலுமுண்டாகும் பலவீனத்திற்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் உடும்பின் தலை, வால், கால் இவைகள் உபயோகப்படுவதில்லை.

உடுபாதகம்-பனை

உடுப்பை - சிக்கிரிமரம், உசிலைப் பார்க்க.

உடை-வேல்

உடைகொல்-வேல்

உட்டிணம்-உஷ்ணம்

உட்டிரம்-தேட்கொடுக்கி

உண்டாத்தா-கள்ளி

உண்டி - உணவு, அது நாலுவகையாம். அவையாவன, உண்ணப்படுவன, தின்னப்படுவன, நக்கப்படுவன, பருகப்படுவன சிற்றுண்டி, அப்பவர்க்கம், பெருண்டி, போசனம், மிருதியாகக் கொள்ளும் உணவு.

உண்டுகம்-பெருவாகை

உண்ணம்-ஒட்டை

உதகன்-கொடுவேலி

உதகு-புன்கு

உதரகோமகம்-பாலடை யென்னும் பூண்டு.

உதரவனி-கண்டங்கத்திரி

உதராவி-மரமஞ்சள்

உதறி முறிப்பான் - விஷ்ணுகரந்தை.

உதாசனம்-கொடுவேலி

உதி-ஓதி

உதிர முறிப்பான் - விஷ்ணுகிராந்தி.

உதிரவாயு-குதவாயு

உதிர்க்குக்கிடாரி-கருடன்கிழங்கு

உதிர்வேங்கை-உதிரம்வங்கை

உதும்பரம் - அத்தி, எருகு, செவ்வகத்தி, செம்பு.

உத்தமசத்து-இவுபல்பாஷாணம்

உத்தமதாளி - வேலிபருத்தி, உத்தாமணி.

உத்தமபரி-கொத்தமல்லி

உத்தம்-கொட்டைமுந்திரிகை

உத்தம்பரி-கொத்துமல்லி

உத்தம்பலம்-முந்திரிகை

உத்தாவாணி-கண்டங்காலி

உத்தாபலம்-இசங்கு

உத்தாமணி }
உத்தமதாளி } வேலிப்பருத்தி

உத்தாளம்-நருவிலி

உத்திராபன்னி-தணல்

உத்திரி-பருத்தி

உந்மத்தகி-சிறுகுறிஞ்சா

உந்மத்தம்-ஊமத்தை

உபகுஞ்சிகை-ஏலம்

உபகுலியம்-திப்பிலி

உபகுல்லம்-சுக்கு

உபகுல்லியை-திப்பிலி
உபதாகம்-பனை
உபராசிதம்-சிற்றகத்தி
உபலோத்திரம்-விளாம்பிசின்
உபவம்-சீந்தில்
உபவனம்-காஞ்சொரி
உபரியாவி-கோஷ்டம்
உபோதம்-பேய்ப்பசளை

உப்பிலி - உப்பிலி, புலிதொடக்கி, ஈங்கை, இண்டு.

உப்பிலிக்கொடி-ஈர்க்கோலிக்கொடி

உப்புக்கட்டி - சிறுகட்டுக் கொடி, இந்தச் செடியின் பால் பிசுபிசுப்புள்ளதா யிருக்கின்றது. மலையாளத்தில் சுதேசிகள் எழுதுகிற கடிதங்களுக்கு அரக்கு போல் சீல் செய்கிறார்கள்.

உப்புடாலி - ஓர்செடி, இந்தச்செடியினிலை ரசத்தில் கொஞ்சம் உப்புப் போட்டுக் காய்ச்சி நீர்காச நோயில் மிகவும் கெடுதியான நிலையி லிருக்கும்போது குணத்துக்குவர மலையாளக் கரைத்துறைத் தேசத்தில் உபயோகப் படுத்துகிறார்கள்.

உப்பு-இலவணம், காரசாரம், சிந்துரத்தம், சுரம், செயசோதி.

ஐந்துப்பார்க்க

அமரியுப்பு, கடுங் கூர்மை, லவணம், சலச்சூர்மை, இந்துப்பு, கந்தக உப்பு, கல்லுப்பு, இலேந்து, இலேவுந்து, கூர்மை, சவற்சலம், சாருசம், சாரோதகம், கரியுப்பு சாரிசம், கறுத்தவுப்பு, காய்ச்சுப்பு, சவட்டுப்பு, காருப்பு, சங்கார காளத்துப்பு, அமரியுப்பு, பொட்டிலுப்பு, வெடியுப்பு அக்கினி கம்பி காந்தத்தின் சத்துரு, மாவுப்பு, வழலையுப்பு, சவுகாரம், வளையலுப்பு.

உப்பு திரவாகம் செய்யுமுறை

உப்பு 8-பலம், படிகாரம் 6-பலம், கடலைப் புளிப்புநீர் 8-பலம் முதல் உப்பை வெயிலில் நன்றாயுலர்த்தவேண்டும். அதன் பின்பு அதனோடு மற்ற விரண்டு சரக்குகளையுஞ் சேர்த்துப் புட்டியிலடைத்து அடுப்பேற்றி உப்புத் திராவக முழுதும் இறங்குகிற வரைக்கும் வைத்திறக்கித் திராவகத்தைத் குப்பியிலடைத்துக் கார்க்கடைத்து வைத்திருக்க வேண்டும். இதைச் சுதேச வைத்தியர் சிரணிக்கச் செய்கிறதும் பெலப் படுத்துகிறதுமாகிய மருந்தாக ஆலோசித்துச் சுகந்த ரசவஸ்துகளில் கஷாயத்திற் சேர்த்து கொடுக்கிறார்கள்.

உமதகி-சணல்
உமரி - உமிரி, ஓர்பூண்டு, நத்தை, காட்டுமரி, சிற்றுமரி, நிலவுமரி, நீருமரி, ஆற்றுமரி, பேருமரி, பவளக்காலி.
உமலகம்-அரிதாரம்
உமலோத்திரம்-விளாம்பிசின்
உமர்கடம்-குசைப்புல், தருப்பைபுல்
உமர்-குன்றி
உமாதசி-சனல்
உமிகரப்பான்-குழந்தைகட்கு வருஞ்சிரங்கு.

உமியல்-வசம்பு
உம்பல்-குமிழ்
உயத்தி-வெள்ளைப்பாஷாணம்
உயர்-குன்றி
உயர்ந்தகுளச்சி-பவளத்துப் பாஷாணம்.
உயவைகாக்கணம்-காக்கணஞ்செடி
உயிர்-உயிரு, இலாமிச்சை
உயிர்தருமருந்து-சஞ்சீவி
உயிர்வேதனை-அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவருமை.
உயிறு-இலாமிச்சை
உய்மணல்-கருமணல்
உய்யக்கொண்டான் - கருமைமுல்லை, கொய்யா.
உரகமல்லி-நாகமல்லிகை
உரகம்-மல்லிகை
உரப்பம்-பெருங்காயம்
உரி-அரைப்படி-கொத்துமல்லி
உரித்திரம்-மெஞ்சள், மாமஞ்சள்
உரு-எலுமிச்சை
உருக்குமணல்-அயமணல்
உருக்கு-எருக்கு, அயவுருக்கு
உருக்கு-மைசூர் தேயத்தி லுண்டாகின்றது. முக்கியமாய் அத்தேயத்தில் மத்தூர் சென்னப்பட்டணமென்கிற ஜில்லாவில் ஆகின்றது. அவ்விடத்தில் தானே வீணைத்தந்திகள் செய்யப்பட்டுத் தூரதேயங்கட்கு அனுப்பப்படுகின்றன.
உருக்குக்காரம் - வெங்காரம் உருக்குச்சரக்கு
உருக்குப்பிரமியம் - நீரிழிவு, சலக்கழிச்சல், சலரோகம்
உருத்திரசடை-மஞ்சிவிக்கான்
உருத்திரரோகம்-மாரடைப்பு
உருத்திராட்சம் - உருத்திராட்சம், ஓர்மரம்.
உருப்பம்-உட்டிணம், இளைமா
உருமலைவரி-உலோகமணல்
உரும்பரம்-பெருங்காயம், சர்ப்பம் செம்பு.
உருவாரச்சம்மட்டி-வீழி
உருவாரம்-வெள்ளரி
உருவி-நாயுருவி, செம்முள்ளி
உருவை-சூரைமுள்ளி
உருளரிசி-கொத்துமல்லி
உருளை-முட்டை, வெள்ளைப்பாஷாணம்.
உருளைக்காந்தம்-காந்தம்
உரோகிணி - கடுகுரோகிணி, பீதரோகிணி
உரோசனம்-முள்ளிலவு
உரோசனி-கடுகு, செந்தாமரை
உரோசனை-கடுகு, கோரோசனை
உரோதனி-சிறுகாஞ்சொறி
உரோமக்கிழங்கு-வசம்பு
உலோகங்காந்தா-அவிரி
உலகுலம்-திப்பிலி, திரிபாலை
உலங்காரனை-அவிரி
உலத்திச்சூலை - ஓர்நோய், சூலையைப்பார்க்க,
உலவை-ஓடைமரம், வள்ளி, ஓடைக்கொடி, இலுகிலுப்பை, விலங்கின் கொம்பு.
உலாகுமம்-மனோசிலை
உலாகுனம்-மனோசிலை
உலாங்கிலி - காவட்டம்புல், இலுகிலுப்பை.
உலாங்கிலி-காவட்டம்
உலாமா-கச்சமரம்
உலிமணி-நாயுருவி
உலூவம்-வெந்தியம்
உலூவா-பெருஞ்சீரகம்
உலூகலகம்-குங்கிலியம்
உலைவிற்பிணந்தின்னி - மாமிசபேதம்.
உலோகம்-பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

சத்தலோகம் - அல்லது எழுவகைலோகம்.

செம்பொன் - வெண்பொன், செம்பு, கரும்பொன், ஈயம், வெண்கலம், தரா.

உலோகதாது-துத்தபாஷாணம்
உலோகபற்பம்-அயவெள்ளை
உசோசி-பேய்ப்பசலை
உலோசிதம்-சந்தனம்
உலோசம்-சடாமாஞ்சில்
உல்லரி-தளிர்
உவர்க்காரம்-சவுக்காரம்
உவர்ச்சங்கம்-முட்சங்கு

உவர்மண் - உப்பானமண், இந்த உவர்ப்பானமண், ஆந்திரதேசத்தின் பலதிசையிலு முண்டு இது மிகுதியும் இலவணசாரம் கொண்டிருக்கின்றது. செம்மெழுகுச் சாயத்தின் சேர்மானங்களிற் சேர்க்கப் படுகிறது. வஸ்திரம் வெளுப்பதற்கும் சாயம் போடுவதற்கும் உபயோகப் படுகிறது மல்லாமல் இதனால் சீசாக்கள் சவுக்காரம் செய்யப் படுகின்றன.

உழமண்-உழைமண், சுவர்மண், சவட்டுமண்.
உழிஞை-சிறுபூளை
உழுந்து-ஓர்விதை
உளைமாந்தை-உளைப்பாய்க் கிடக்கிறது, உளைவு, வருத்தம், இடுப்புளைக்கிறது.
உள்ளி - வெள்ளுள்ளி, வெள்ளை, வெள்ளைப்பூண்டு, ஈரம், ஈருள்ளி வெங்காயம்.
உறுண்டகம்-அவுபல பாஷாணம்
உறுப்படக்கி-ஆமை

உறுப்பா - ஓர்மரம், இதுமலையாளத்தில், வளருகிற சிம்புசிராயுள்ள மரமாக விருக்கின்றது. இது கப்பல்செய்யத் தேக்கு மரத்துக்குப் பதிலாக வழங்கப்படுகிறது.

உறுப்பு-அவயவம்
உற்பலசாசனன்-பெருங்காயம்

உற்பலம் - கருநெய்தல், கோட்டம், சீதளி, செங்குவளை, செங்கழுநீர், குவளை, இரத்தோற்பலம், நீலோற்பலம், கருங்குவளை.

உனத்தகு-குறிஞ்சா
உன்மத்தகி-உன்மத்தி, குறிஞ்சா.
உகாரவுப்பு-கல்லுப்பு
உபரசம்-கல்லுப்பு
உளிக்காரம்-அரிதாரம்
உபரதம்-வெடியுப்பு
உருத்திரவுப்பு-வெடியுப்பு
உயவைவேர்-வெள்ளைக்காக்கணன் வேர்.
உதானன்-நாபியில் நிற்கும்வாயு
உந்தி-மணிபூரகமாகியநாபி
உகிர்-நகம்
உப்பு-சோற்றுப்பு
உத்தரவேர்-வடக்கேபோகிறவேர்

உதகம்-சலம்
உழலை-தாகம்
உருசரம்-சுத்தரசம்
உகாரம்-நாதம்
உவர்த்தம்-தண்டு
உருக்கு-எஃகு
உன்மத்தம்-மௌனம்
உன்மத்து }
உன்மத்தை } ஊமத்தை
உன்னம்-உழிஞ்சல்
உன்னி-அழிஞ்சல்

## ஊ

ஊகடன்-முருங்கை
ஊகம்-ஊமத்தை
ஊசிகாந்தம்-சம்பகம், சலாகை
ஊசிமல்லிகை-ஓர்மல்லிகை
ஊஷரம்-பூவழலை
ஊட்டிரம்-தேட்கொடுக்கி
ஊதிகை-முல்லை
ஊதுகரப்பான் - குழந்தைகளுக்கு வரும் ஓர்வியாதி
ஊதுகாமாலை-ஓர்வியாதி
ஊதுவாரம்-வெள்ளி
ஊதுவிரியன்-விரியன்
ஊத்தைநாரி-பீநாரி
ஊமலத்தி-ஓரத்தி
ஊமத்தம் }
ஊமத்தை } மயக்கத்தக்க ஓர்செடி
ஊமத்தஞ்செடி }

அதாவது, வெள்ளூமத்தை, கருவூமத்தை, அடுக்கூமத்தை, பேயூமத்தை, மருளூமத்தை, பொன்னூமத்தை, ஊமத்தை.

இது மிகவும் உபயோகமான ஔஷதமா யிருக்கினும் இதைப் பிரயோகிக்கிறதில் அதிக சாக்கிரதையா யில்லாவிட்டால் நஞ்சின் லட்சணங்களுண்டாம், உபயோகப் படுத்தப்பட்ட வெள்ளூமத்தை கருவூமத்தை என்பவைகளில் கரு வூமத்தை அதிக சாரமுள்ளதாய்க் காணப்படுகிறது.

சுவாச காசத்துக்குக் காய்ந்த இதன் இலைகளைப் புகையிலைச் சுருட்டைப்போல் செய்து புகை குடிக்கில் உடனே நிற்கும் கபங்குறைந்து கடினமாயும் வறட்சிகொண்டதாயும் நெடுநாள் நிலைத்திருக்கிற சில இருமல்களுக்கும், மேற் சொல்லியபடி ஊமத்தை யுபயோகப் படுகின்றது.

வாதவீக்கங்கள் நோயுள்ள கட்டிகள் தோல்மே லிருக்கும் வீக்கங்கள் இவைகள் முக்கியமாய் மேகவியாதியைப் பற்றியிருக்குமாகில் ஊமத்தை யிலையில் போல்டீஸ்செய்து வலியிருக்குமிடத்தில் வைத்துக் கட்டப்படுகிறது இலையைச் சாராயத்தில் விட்டு வைத்து எடுத்து நோவிருக்கிற விடத்தில்வைத்து கட்டுவதுமுண்டு. நரம்பு சிலந்திக்கும் வைத்துக் கட்டப்படுகிறது.

முகத்திலுண்டாகும் வலிபோன்ற அநேகவிதமான நரம்பு வலிகளுக்குக் காய்ந்த இலையின் பொடியை பன்றிக்கொழுப்பிற் கலந்து தடவப் படுகின்றது.

கருவூத்தை ஜப்பான் தேசத்திலுற்பத்தி யாவதா யிருக்கிறது. இது இலாகிரி வெறியுண்டாக்கும் புலப்பிரமை மருந்தாயிருக்கின்றது. இது புத்தின் தேசத்திலு முண்டு. அவ்விடத்தில் ஒரு ஔஷதமாக எண்ணப்படுகிறது. இது சீனதேசத்தில் சாதாரணமா யிருக்கிறது.

மந்தாரகாசம்-கபவியாதி. இவைகளுக்குத் திருச்சினப்பள்ளி குளம்பு வடதேசம் இத்தேசங்களிலெல்லாம் புகைபிடிக்கப்

பட்டு வருகிறது. பைத்தியம் க்காக்காய்வலி இவைகள் காண்கிறதற்கு முன்னர்வருகிற கெட்ட தலைவலிக்கு அநேகர்கள் சில சமயங்களில் இதன் வேர்ப்பட்டையை யுலர்த்திச் சூரணித்து மிகவும் சொற்ப அளவாகக் கொடுக்கிறார்கள்.

பிளவை - விப்புருதி. கன்ன விப்புருதி கண்டமாலை முதலாகியவைகளில் இச்சாறுள்ள யிலையை அல்லது காயைச் சாணியோடு சேர்த்து வெதுப்பி போல்டீசாக வைத்தியர் கட்டுவதுண்டு. ஆனால் எல்லாவற்றிலும் இதைக் குறித்து நடப்பிப்பதில் வைத்தியனுக்கு வெகு எச்சரிக்கையும், அனுபவமும் நல்ல ஆலோசனையும் வேண்டும்.

ஊமில்-சிறுபூளை
ஊரண்டினார்-கள்ளி
ஊருடம்-முருங்கை
ஊடைமுதலி-முருங்கை
ஊர்புல்லு-புல்
ஊர்பலம்-ஆமணக்கு
ஊர்வரப்பன்-வெள்ளரி
ஊசிக்காந்தம் - அயக்காந்தம், காமாலை, கிராணி, ஜன்னி, சுரம், நீரிழிவு, பாண்டு, மந்தம், மூலம், மேகமும்போம்.

ஊசிமல்லிகை-இரத்தகணம்; சுரம், பொருமல், மாந்தகணம், வீக்கமும்போம்.
ஊசியசோறு - பழயசாதம், உறக்கம், சீதளம், பித்தம், வாதமுமுண்டாம்.
ஊனும்பல்-உறப்புமூலம், ஜன்னி, வாதமும்போம்.

ஊனுக்கு நடுவில் வெந்நீரருந்தல்-வாதசுரம்போம். பசி, தாதுஉண்டாம்.
ஊனுக்கு முன்னருந்தும் வெந்நீர்-தீபனமும்போம்.
ஊதுசங்கு-தவளச்சங்கு, கண்ணோய்கள், பசி, மூளைவிரணமும், வாதமும்போம், இரத்தபித்தம் உண்டாம்.
ஊமச்சி-நத்தை, மதங்கள் போம்.
ஊமத்தங்காய்-கரப்பான், சிரங்கு, வரட்சிகள் வாதமும்போம், பித்தம், மயக்கம், வெறியுமுண்டாம்.
ஊமத்தம் வித்து-போதை வித்து, அதிசாரம், ஜன்னி, சுரம், விஷமும்போம் வெறியுண்டாம்.

ஊமத்தை-கட்டிகள், குழிப்புண், நாய்க்கடி, விரணம், முத்தோஷம், விஷமும்போம்.

ஊர்க்குருவி-சிட்டுப்பட்சி, திரிதோஷம், மேகசுரமும்போம், மேனி பொன்னிறம், பலம், மாறுப்புணர்ச்சியுமுண்டாம்.

ஊர்ப்பன்றியிறைச்சி-அசதி, கபம், தாது, பித்தம், புண், மருந்துநாசம், வாதமும் உண்டாம்.
ஊழலத்தி-பெருவிஷங்கள் போம், பித்தமுண்டாம்.
ஊறுகாய்-அருசி, ஐயம், பித்தம், வாய்வும் போம், உதராக்கினி உண்டாம்.

ஊற்றுநீர்-தாகம், பித்தமும் போம்

ஊன்றுகோல்-பயமனைத்தும்போம் தயிரியம், பலம், புத்தி, வீரியமுமுண்டாம்.

## எ

எகினம்-புளிமா, புளி, புளியமரம்.
எகின்-புளிமா, செம்மரம், அழிஞ்சில், புளி.
எகுன்று-குன்றி.
எச்சிற்றழும்பு-தழுதளை
எட்டி-விஷமுட்டி, காஞ்சிரமரம்
எட்டிகம்-சிலிந்தி, சீந்தில்

எட்டிக்கொட்டை, இந்த எட்டிக் கொட்டையைச் சுதேச வைத்தியர் நஞ்சாக எண்ணுகிறார்கள். மரணமுண்டாக்கப் போதுமான அளவு கொள்ளாவிடில் பயித்தியகுண முண்டாகச் செய்துவிடும். அதை ஆர்க்கப் பொடி செய்து வேப்பெண்ணெயிற் கலந்து மிகவும் சொற்பமாகக் கொண்டால் சீரணமாக்கும் மருந்தென்று ஜெர்மன் தேசத்தார் மதிப்பது போலவே சுதேச வைத்தியரும் மதிக்கிறார்கள். மேலும் அதைச் சந்துவாத முதலாகியவைகளுக்கு மேற்பூச்சுப் பற்றாக உபயோகப்படுத்தலா மென்கிறார்கள். முட்டையின் வெள்ளைக் கருவுடன் சேர்த்துப் பூசினால் வாதம் நீங்கும். இந்தியாவின் மேற்குத்திசையில் இந்த விஷ நஞ்சுக் கொட்டையைச் சேர்த்துச் சாராய மிறக்குகிறதாகச் சொல்லுகிறார்கள், இந்தப்படிச் செய்தால் சரீரத்துக்கு வெகு கெடுதியுண்டாகும் படியான அதிக மயக்கத்தைத் தரும்.

எண்-எள்
எதளா-புளியமரம்

எமகாசகம்-ஊமத்தை, அசமதாகம்
எம்புகம்-நிலக்கடம்பு
எரிகுன்மம்-ஓர்நோய்
எரிமுகி-சேங்கொட்டை
எரிமுட்டைப்பிராறி - வெதுப்படக்கி
எருக்கம்
எருக்கலை } எருக்கு

எருக்கு-ஓர்செடி; வெள்ளெருக்கு
எருக்கம்வேர்-அவையாவன, வெள்ளெருக்கம் வேர் சுரங்களுக்கும் அசீரணம், குன்மம் இவைகளுக்கு ஒவ்வொரு சமயங்களில் சாந்தமான கார்ப்புள்ள மருந்தா யெண்ணிக் கஷாயம் போட்டுக் கொடுக்கப் படுகிறது. இதன் பாலை தமிழ் வைத்தியர் பேதி மருந்தில் சேர்க்கிறார்கள். அதன் பட்டையும் சிறு மருந்துகளில் சேர்க்கப் படுகிறது.

எஃது - கண்ணோய், கபபேதம், சிலேட்டும ரோகம், சோபை, தந்த மந்தம், தாது நஷ்டம், நரைதிரை, பலகுறைச்சல், பாண்டு, மந்தம், மூலங்கள், வாத பித்தம், வீக்கங்களும் போம். உதிரப்பெருக்கு, தாதுவிர்த்தியுமுண்டாம்.

எட்டிக்கொட்டை-ஊதைவலி, கடிவிஷம், கட்டி, கரப்பான், குஷ்டம், கைகறுப்பு ஜன்னி, தாதுநஷ்டம்போம். பித்தமயக்கமும் உண்டாம்.

எட்டிப்பழம்-வாதம்போம்
எட்டிவேர் - கோதைவேர், பித்தகுணம், விஷக்கடிபோம். காய

சித்தியுண்டாம். எண்ணெயுஞ் சோறுமுண்ணில் மேகம், வாதகபமும்போம். பசி, மாபலம், மாபோகமு முண்டாம்.

எரிசாலை-இழுப்பு, வலி, சூலை, வாய்வும்போம்.

எருக்கம்பட்டை - ஜன்னி, பலவிஷங்கள், வாதமும்போம்.

எருக்கம்பால் - கட்டி, ஜன்னிவலி, வாய்வும்போம். செந்தூரம்செய்யலாம்.

எருக்கிலை-எலிவிஷம், ஐயம், கிருமி, குஷ்டம், சூலை, மந்தம், மலபந்தம், வலி, வாயு, விஷமும் போம்.

எருமைக்கனைச்சான் - காயசித்தி உண்டாம்.

எருமைக்கொம்பு - குதிரை வலி போம்.

எருமைச் சாணம் - இரத்தவாந்தி, காமாலை, புண், பெரும்பாடு, வயிறுப்பிசமும்போம். அனலுண்டாம்.

எருமைத்தயிர்-எரிவுபித்தம்போம். அறிவுமந்தம், கண்குளிர்ச்சி, கரப்பான், தூலவுடல் வர்தமும் உண்டாம்.

எருமைநெய்-கண்ணொளி, புத்தி, மெய்யழகும்போம். கரப்பான், பித்தம், வாதமும் உண்டாம்.

எருமைப்பால் - புத்தித் தெளிவுபோம். திமிர், மருந்துமுறிவு; வாதமும் உண்டாம்.

எருமைமுன்னை-கறுப்பு முன்னை, அக்கினிமந்தம், மயக்கம், வாய்வும்போம். அருசி, ஐயம், கரப்பான், சோகையுமுண்டாம்.

எருமைமூத்திரம்-காமாலை, கிருமி, சோபை, பாண்டு, மேகம், வயிற்றுநோயும்போம். அனலுண்டாம்.

எருமைமோர்-காமாலை, கிராணி, ஜலக்கழிச்சல், தாகம், புழுவும் போம்.

எருமைவெண்ணெய்-எரி, நீரிழிவு போம். கபம், கரப்பான், கிருமிமந்தம், வாதமும் உண்டாம்.

எலாவாலுகை-கட்டிகள்போம்

எலிச்செவிக்கீரை - எலிக்காதிலை சுரம், தாகம், நீரிழிவு, பிரமிய கடுப்பும்போம், சுகம், போகமும் உண்டாம்.

எலியாமணக்கின் பால் - எலிவிஷம், குன்மம், பலவிஷங்கள், பீலிகம், மிக விரை வீக்கமும்போம். பேதியுண்டாம்.

எலிப்பிறைச்சி - குன்மம், நமைச்சல், பீலிகம், புண், மார்புநோயும்போம். தாதுபுஷ்டி யுண்டாம்.

எலுமிச்சங்காய்-இராஜகனி, சர்த்தி குன்மம், சூலை, பித்தவெப்பு, மருந்திடுதல், முத்தோஷம், வாதகபமும்போம்.

எலுமிச்சம்பழம்-அரோசி, அழல், கண்ணோய், சுரம், தாகம், பித்தமயக்கம், விஷமும்போம். சயித்தமுண்டாம்.

எவச்சாரம் - அஷ்டகுன்மம், சூலை வாய்வு கட்டிகளும்போம். நீரிறங்கல் தீபனமுண்டாம்.

எறியுப்பு-கல்லுப்பு
எயிறு-பல்
எச்சல்வாய்-ஆசனவாய்
எம்பாரி-கெந்தியுரிபாஷாணம்
எயிறுக்கரை-பல்லீறு
எரு-எருமுட்டை
எஃகு-உருக்கு
எலாவாலுகை-பேரேலம்

எள்ளோதனம் - எள்ளிட்ட சாதம் இந்தச்செடி ஆடுகளுக்கு நஞ்சென்று சொல்லப்படுகிறது.

இந்தச் செடியின்வேர்க் கஷாயம் குளிர்சுரத்திற்கு, அல்லது நளிர் சுரத்திற்கும், பிரசவித்த பெண்களுக் குண்டாகிய வீக்கத்திற்கும் கொடுக்கப் படுகிறது.

எள்ளருக்கும் பட்டை சூடுள்ளது பொடிசெய்து வேப்பெண்ணெயிற் கலந்து கீல்வாதம் சந்துவாதங்கட்கு மேற்பூச்சாகப் பூசப்படுகிறது. அதன்பால் பேதிக்கு மருந்தாகவும், விரோசன மருந்தாகவும், யோசிக்கப் படுகிறது:

எருந்தி-ஏராமுட்டி, இப்பி
எருமணம்-செங்குவளை
எருமுட்டைப் பீநாறி - வெதுப் படக்கி.

எருமைக்காஞ்சொறி-காஞ்சொறி
எருமைநாக்கி - காணாக்கி, ஓர்வகை மீன்.
எலுவை - ஞோரைப்புல், நாணல், கோரைக்கிழங்கு, செம்பு.
எலி-கள்ளி
எலிச்செவி - கொடியார் கூந்தல், எலிக்காதிலை.
எலித்துருமம்-தான்றி
எலிப்பாகும்-காட்டாமணக்கு
எலிப்பாஷாணம்-ஓர்பாஷாணம்
எலிப்பாலை-காட்டாமணக்கு
எலிப்பிடுக்கன்-ஓர்பூண்டு
எலியாமணக்கு-காட்டாமணக்கு
ஏலிபால்-காட்டாமணக்கு
எலியொட்டி-ஒட்டொட்டி
எலியோட்டிப்பூண்டு-குருக்கு

எலுமிச்சை - ஓர்செடி, அது கஸ்தூரி எலுமிச்சை, காட்டெலுமிச்சை, கொடியெலுமிச்சை, ஆனை யெலுமிச்சை, எலுமிச்சம்பழம் மிகவும் புகழ் பெற்றது. இதன்குணம் பித்தத்தினா லுண்டாகும் வாந்தியை நிறுத்தும், வைத்தியத்தைத் தணிக்க மிகுந்த பிரயோசனமுடையதா யிருக்கின்றது. சுதேசிகளிதை ஷர்பத்துக்கு மிகுதியும் உபயோகப் படுத்துகிறார்கள்.

பாகசாத்திரத்தில்கண்ட பிரகாரம் ஊறுகாய்போட்டு உபயோகப்படுத்தினால் மிக உருசியா யிருக்கும்.

எலும்பு-என்பு இதன்வகை, எலும்புக்கூடு, காலெலும்பு, குண்டியெலும்பு, சவடியெலும்பு, கொடையெலும்பு, நடுவெலும்பு, முதுகுத்தண்டு முழுவெலும்பு, பழுவெலும்பு.

எலும்புருக்கி-ஓர்நோய்
எலும்பி-ஓர்மரம்
எல்லம்-இஞ்சி
எவக்ஷாரம் }
எவக்ஷாரம் } ஓர் உப்பு
எவ்வம்-தீராதநோய்
எவ்வனம் - யௌவனம், பருவம்,
எழுச்சி - காதிலுண்டாம், ஓர் நோய்.
எழுநா-கொடுவேலி, தீ
எழுமான்புலி-ஓர்பூண்டு

எழுவரைக்கூட்டி - சவ்வீர பாஷாணம்,

எள் - ஓர் தானியம், அது காட்டெள், சிற்றெள், பேரெள், வெள்ளெள், எள்நெய் - எண்ணெய், எண்ணெய்வகை விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், கடுகெண்ணெய், தேங்கா யெண்ணெய், வேப்பெண்ணெய், வெள்ளரி விதை யெண்ணெய், வாதுமை யெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், கிராம்பு எண்ணெய், பேய்க்கொம்மட்டி விதை யெண்ணெய், மீனெண்ணெய், குருக்கத்தி விதை யெண்ணெய், கயாபுதி யெண்ணெய், சிறுகண லெண்ணெய், சாதிபத்திரி யெண்ணெய், சாதிக்கா யெண்ணெய், புன்னை யெண்ணெய், புன் கெண்ணெய், நேர்வாள யெண்ணெய், சிலாயெண்ணெய், குசும்பாப்பூ யெண்ணெய், மண்ணெண்ணெய், பிரமதண்டு வித்தை யெண்ணெய், காட்டுக்குருந்து யெண்ணெய், கற்பூரத்தயிலம் செந்துருக்கம் விதை யெண்ணெய்.

### ஏ

ஏகம்-திப்பிலி
ஏகவாசம்-ஆல்
ஏகாரவல்லி-பலா, பாகல்
ஏகாலி-சவுக்காரம்
ஏகம்-வெண்கலம்
ஏசிவாடகம்-அதிமதுரம்
ஏமத்தி - பொற்றொட்டிப் பாஷாணம்.
ஏமமணல்-பொன்மணல்
ஏமம்-மயக்கம், பயித்தியம், விபூதி
ஏமபத்திரம்-மலையாத்தி
ஏமபுட்பம்-பொன்முல்லை
ஏமர்பதி-கற்கடகபாஷாணம்
ஏமல்-முதிரை
ஏவமதி-கடுக்காய்
ஏமாப்பிரகம்-அப்பிரகம்
ஏரண்டம்-ஆமணக்கு
ஏரத்தை-பிடரிக்காம்பு
ஏலம்-ஏலமரம், இசங்கு, சடாமாஞ்சில், முத்திரை, ஏலரிசி மலையாளக் கரைத்துறைத் தேசத்திலிருந்து விஸ்தாரம் வருகின்றது. இது சுதேச வைத்தியருடைய சாதாரண உபயோகத்திலிருக்கின்றது. சூடுள்ள சுகந்தமனாரம் பிதவள்துவா யிருக்கிறது.
ஏலா-ஏலம், பேரேலம்
ஏலே-கள்
ஏறு-சங்கஞ்செடி
ஏவாங்கம் } அசமதாகம்
ஏவாகனம் }
ஏனக்கோடு - வெதுப்படக்கி பன்றிக்கொம்பு.
ஏனம்-தினை
ஏரினீர் - துவர்ப்புவாதம், விரணமும் உண்டாம்.
ஏரிமீன்-மேகம் உண்டாம்
ஏலம் - அதிசாரம், அண்டவர்த்தம், ஈளை, வழலை, கட்டி, காசம், கிரிச்சரம், சிலந்தி, சுரம் சோமப்பிணி, பித்தம், வாந்தி, விஷம், விதாகம், விந்துபுட்டம், வெக்கையும்போம்.

### ஐ

ஐசிலம்-சிறுநாகம்
ஐங்கூட்டுநெய்-ஐந்துவித எண்ணை
ஐயம்-ஜன்னி, சுரம், பின்னிசிவு வாய்வும்போம்.
ஐவிரலி-கரப்பான் வீக்கமும்போம் காமம், கெர்ப்பம், பலம், விந்துகட்டுமுண்டாம்.
ஐவிரலிவிரை-இலிங்கக்கட்டும்
ஐந்தார்-பனை
ஐந்துப்பு - பஞ்சலவணம், அவை கறியுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு.
ஐயஞ்சு-நிலப்பனங்கிழங்கு
ஐயம்-சிலேத்துமம்
ஐயவி-கடுகு
ஐயிதழ்-துத்தி
ஐவனி-மருதோன்றி
ஐவிரல்-ஐவேலி
ஐவேலி-ஐவிரற்கொவ்வை

### ஒ

ஒடிகிழங்கு-கரப்பான், நமைச்சொறியுமுண்டாம்.
ஒட்டறை-அசீரணம்,அற்புதப்புண் இரத்தமூலம், கண்ணோய், குட்டம், குன்மம், சிறுபாம்பு, நஞ்சு சீதச்சுரம், பேதியும்போம்.
ஒட்டக்காந்தம்-இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலை, மந்தாரகாசம், மூலரோகம், வாட்சி, காசமும் போம்.
ஒட்டைத்தயிர் - தாகம், கிருமியும் போம், சிறுகரப்பான், தீபனம், தேகபுளக முண்டாம்.
ஒட்டைநெய்-மந்தம் விந்து முண்டாம்.
ஒட்டைப்பால்-கரப்பான், காசம், காதிரைச்சல், சுவாசம், புத்திமந்தம், வாதசூலை யுண்டாம்.

ஒட்டைமரம் - அதிசாரம், கடுப்பு, முருக்குவலி, மூலக்கிராணியும் போம்.
ஒட்டை மூத்திரம் - உதாவர்த்தம், குஷ்டம், குன்மம், ஜந்தி சூலையும்போம் அனலுண்டாம்.

ஒட்டைமோர்-அனல்வாதம் போம்
ஒட்டைவெண்ணெய்-நீரிழிவும் பித்தமும்போம், மந்தம், வாதமுமுண்டாம்.
ஒதிமரவேர் - அதிசாரம், இரத்தப் போக்கு, கடுப்பு, கிராணி, சீதளம், சோபம், தாகம், புரைபுண்ணும் போம்.
ஒயில்வண்டி-சரீரம் நோய், பித்தம் வாதமும்போம்
ஒக்கிலை-அம்பரம்
ஒக்கம்-அசமதாகம்
ஒசிதம்-கற்றாழை
ஒஞ்சி-ஸ்தனம்

ஒடுவங்காய் - ஓர்மரக் காய், இது சிறிய கொட்டையா யிருக்கின்றது. இது பலமான நஞ்சுள்ள மருந்துகளி லொன்று யிருக்கிறதென்று வைத்தியர் யோசிக்கிறார்கள். ஒரு வாரகனெடைப் பொடி ஒரு மனிதனைக் கொல்லுமென்றும் ஆலோசிக்கிறார்கள் இந்த செடியின் இலைகளும் வேரும் நஞ்சாகவே யிருக்கின்றது. இதன் இலைகளை எந்தப் பிராணிகளுந் தொடுகிறதில்லை. இதன் இலைகளைக் கடுக்காயுடன் சேர்த்துக் கெட்ட புண்களுக்கிட நல்ல பரிசயுப்பா யிருக்கின்றது.

ஒட்டத்தி-ஒத்துத்தி
ஒட்டு-புல்லுரி
ஒட்டிச்செடி-ஒட்டொட்டி
ஒட்டுப்புல்-ஓர் புல்
ஒதியமரம்-உதியமரம்
ஒதியம்பட்டை - ஓர் மரப்பட்டை, ஒதியம் பட்டையை ஆர்க்கப் பொடி செய்து வேப்பெண்ணெயிற் கலந்து புண்களுக்குப் பூசப்படுகிறது. இதைப் பழைய புண்களுக்கு நல்ல மருந்தென்று வைத்தியர் மிகவு மதிக்கிறார்கள்.

ஒதியம்-ஒதி
ஒமை-மர்மரம்
ஒய்யெனல்-மருந்துக்குறிப்பு
ஒலி-கொடுவேலி
ஒட்டைநீர் - அதிசாரம் உஷ்ணம் வெட்டையும்போம். கபம், தோள்பலம், மிடருகம்மல், வாதமுமுண்டாம்.

## ஓ

ஓணெய்-பிறவலி நோய்போம்
ஓமம்-மோகம், அதிசாரபேதி, ஆமம், இரைச்சல், இருமல், கடுப்பு, காசம், சீதம், சுரம், செரியாமாந்தம், பக்கநோய், பொருமல், மூலமும்போம்.
ஓரிதழ்த்தாமரை-சீதம், மேகமும்போம் தாதும் மேனியழகுமுண்டாம்.
ஓரிலைத்தாமரை-அழல், அஸ்திமேகம் கிரிச்சரமும்போம். மோரிலரைத்துக் குடித்தால் ஸ்திரீகளுக்குப் பாலுண்டாம்.
ஓலைப்பாய் - பனைஓலை உஷ்ணசீதம் உண்டாம்.
ஓலைவாளைக்கருவாடு-பித்தமும் வாதமும்போம். பசி தீபனமுண்டாம்
ஓலைவாளைமீன்-பலவித நோய்களுமுண்டாம்.
ஓலைவிசிறி - தாகம், மூர்ச்சையும்போம், பித்தமுண்டாம்.
ஓங்கில்-மூங்கில், மலை
ஓங்கலுறவன்-கார்தபாஷாணம்
ஓசை-வாழை
ஓடதி - ஒருக்காற்காய்த்துப் படுஞ்செடி.
ஓடம்-செங்கருங்காலி
ஓடன்-ஆமை
ஓடியஓடம்-கிளிஞ்சில்
ஓடை-கிலுகிலுப்பை
ஓதம்-அண்டவாதம்
ஓதிமம்-புளியமரம்
ஓத்தி-ஓந்தி
ஓந்தி-ஓணான்
ஓமம்-அசமதாகம்
ஓமான்-ஓணான்
ஓமை-மாமரம
ஓரம்-சத்திச்சாரம்
ஓரிதழ்த்தாமரை } ஓர் மருந்து
ஓரிலைத்தாமரை } பூண்டு

இந்தச் சிறிய பூண்டின் இலையும் தண்டும், மலத்தை இளக்குகின்ற குணமுடையனவாக இருக்கின்றன. இதுகள் கஷாயத்திலும் இலேகியத்திலும் உபயோகப்படுகின்றன குளிர்ச்சியுண்டாக்கப் போடும் பற்றுகளில் இவை நல்லெண்ணெயோடு சேர்த்துப் போடப்படுகின்றன.

ஓர்பலம்-கோங்கு

## ஔ

ஔஷதம்-மருந்து, லங்கனம் பாமாவுடதம்.

## க

கக்கரிக்காய் - சிறு வெள்ளரிக்காய் இரத்தபித்தம், பித்தம், மூலச்சூடும்போம்.

கங்கைநதிநீர் - சயம், காந்தம், மந்தம், மேகம், வாயு, வெப்பும் போம்.
கசகசா-அதிசாரம், கிராணி, கிருமி; சிரநீர், நமைச்சலும்போம். அழகு, காந்தி, நித்திரை, விந்துவுமுண்டாம்.
கச்சக்கருவாடு - கூடைதட்டினபொடி, அதாவது நாட்டுமீன் சீதம், சுரம், இளைவு வாதமும் போம். பித்தம் பசியுமுண்டாம்.
கஞ்சாங்கோரை—வாசனைக்கோரை, இருமல், ஈளை, கணம், குளிர், மாந்தக்கழிச்சல், மாந்தசுரம், மூலத்தினவு, மேகமும் போம்.
கஞ்சா-கோரக்கர்மூலி, ஐயம், கரப்பான், பேதி, மூலகிராணி, வாதமும்போம், பசியுமுண்டாம்.
காமாறல்-மணத்தக்காளி
காம்-மணத்தக்காளி, சாகண்டபாஷாணம்.
கஃசு-காற்பலம்
ககவ்சுகம்-ஆல்
ககனம்-ஓர்கிழங்கு
ககுபம்-மருது, மருமரம்
ககக்கரி-ஓர்காய்
கக்கரிகம்-கக்கரி
கக்குவான்-ஓர்நோய்
கங்கம்-கோளகபாஷாணம்
கங்கன்-பிறவிச் சீர்பந்தம், பாஷாணம்.
கங்காளன்-துரிசு
கங்கு-கருந்தினை
கங்கை-நவக்ஷாரம்
கங்கைக்குணன்-நவக்ஷாரம்
கங்கைக்குணன்-துரிசு
கசகசா-ஓர்பூண்டு
கசகம்-வெள்ளெரி
கசகரீகம்-கக்கரி
கச-கன்னிவெருகு
கசக்கார்-தேமா
கசங்கு-ஈந்து
கசமாடன்-ஊமத்தை
கசம்-தாமரை
கசவம்-கடுகு
கசற்பம்-மஞ்சள்
கசேருகம்-தமரத்தை
கச்சகர்-கொள்ளு
கசங்கம்-பீநாறி
கச்சதூஷன்-தவளை
கச்சபம்-ஆமை
கச்சம்-மீன், காய்ச்சற்பாஷாணம்
கச்சல்-வாழைக்கச்சல்
கச்சன்-ஆமை
கச்சாலம்-காய்ச்சற்பாஷாணம்
கச்சிசின்னி-சீந்தில்
கச்சூரம்கழற்சி-சிறுகுறட்டை
கழற்சிக்கொடி-பேரீந்து
கச்சோணி-வாசனைப்பண்டம்
கச்சோளம் - மாஞ்சில், ஏலத்தோல்.
கஷாயம் - குடிநீர், பஞ்சமூல கஷாயம், அதாவது சுக்கு, தும்பராஷ்டிரம், செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி.
கஸ்தூரி } ஓர் மருந்து.
கத்தூரி }
காட்டுக்கஸ்தூரி-பொட்டகத்துத்தி, போஜன கஸ்தூரி, காரத்தை கஞ்சம்.
கஞ்சா - தாமரை, துளசி, வெண்கலம், கற்கடகபாஷாணம்.
கஞ்சா-ஓர்செடி, பூக்கஞ்சா, சடைக்கஞ்சா.
கஞ்சாங்கோரை - ஓர் மருந்துப் பூண்டு, அது காட்டுக் கஞ்சாங்கோரை, சிறு கஞ்சாங்கோரை, கஞ்சாங்கோரையென்னும் பூண்டின் இலை சுகந்தம் வரிசையுமணமு முடையதா யிருக்கின்றது. அதன்சாறு குழந்தை

களின் தடிமல், சலதோஷம் இவைகட்கு விதிக்கப்படுகிறது. தேயிலை கிடையாவிடில் அதற்குப் பதில் இதைச் சில ஐரோப்பியர்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

கஞ்சம்-சிவிந்தி, டுருக்கு
கம்பம்-கடப்பமரம், வாலுளுவை
கடம்பல்-குமிழ்

கடம்பு-கடம்பு, நீர்க்கடம்பு, வெண்கடம்பு, நிலக்கடம்பு, கருங்குருவைநெல், கடப்பமரம் குளம்பு தேசத்திலிருந்து வருகின்றது. இது நாற்காலி மேசை முதலாகியவை செய்கிறதற்கு மிகவும் நேர்த்தியானது.

கடலஞ்சிகம்-தருப்பைப்புல்
கடலடக்கி-பேய்முசுண்டை
கடிலாடி-நாய்க்குருமி, நாயுருவி
கடலாமணக்கு - காட்டாமணக்கு, கட்டெள்ளு.

கடல்[illegible]வகாய் - ஓர்வகைப் பெருந்தேங்கின்காய், கடல்தேங்காய், மால்தீவி லிருந்தும் செக்கல்ஸ் தீவி லிருந்தும் இந்தியாவுக்கு சாதாரணமாய்க் கொண்டுவரப்படுகின்றது. அது ஒரு பக்கம் புறவளையுள்ளது. அல்லது புறங் கவிந்ததாகவும் மற்ற பக்கம் தட்டையாகவு மிருக்கின்றது. இதன் இரண்டு முடியும் நீண்டுமிருக்கின்றன. ஓடு கறுப்பு நிறமா யிருக்கின்றது. தேங்காயைப்போலே உள்ளே பருப்பு மிருக்கின்றது.

இதை முல்லைப்பாலில் சேர்த்து அத்திசுரம், திருஷ்ணசுரம், எலும்புருக்கிசுரம், கிரந்திநோய், இலிங்கப்புற்று, சொறி கரப்பான் இவைகட்குக் கொடுக்கிறார்கள்.

கடல்நுரை - கடலி லுண்டாகும் நுரை, இது வெள்ளியையும் மற்ற லோகங்களையும் சுத்தமாக்கி மெருகுசெய்ய இந்தியா ஜனங்கள் உபயோகப் படுத்துகிறார்கள்.
கடல்விராஞ்சி-ஓர்செடி
கடவு-தணக்கு
கடவுளர்தாரம்-தேவதார மென்னும் ஓர்மரம்.

கடவை-தணக்கு, கடவு
கடற்குருமி-கல்லுப்பு
கடற்கொஞ்சி-கொஞ்சியைபார்க்க
கடற்கொடி-தும்பை
கடற்கொழுப்பை - எழுத்தாணிப் பூண்டு.
கடற்பட்சி-கிளிஞ்சில்
கடற்பன்றி-ஓர்மீன்
கடற்பாசி - ஓர்பாசி, அல்லது காளான்.
கடற்பாம்பு-ஓர்பாம்பு
கடற்றீ-கடல்நுரை
கடற்பாலை-சமுத்திரசோகி
கற்றாழை-கொந்தாழை
கடாரை
கடாநாரத்தை } காடாரைப் பழம் ஓர் வகை நார்த்தை
கடிகண்டு-பூனைக்காலி
கடிகை-அரையாப்பு
கடிச்சைவாய் துடைச்சான் - காஞ்சொறி.
கடிச்சை-ஓர்செடி
கடிதம்-பிசன்
கடிப்பகை-கடுகு, வேம்பு

கடிப்பை-சிறுகடுகு
கடியடு-சிற்றரத்தை
கடியிரத்தம்-மூக்கிரட்டை

கடிரோமம்-கோரைக்கிழங்கு
கடிலா-மூக்கிரட்டை

கடு-கடுக்காய், முள்ளி, கடுமரம், கசப்பு, துவர்த்தல், நஞ்சு, முள், முதலை.

கடுகம் - கடுகுரோகணி, திரிகடுகு, திப்பிலி, சுக்கு, மிளகு, கார்ப்பு.

கடுகியகாந்தி-இரசத பாஷாணம்
கடுகு - கடுகு, குன்றி எண்ணெய் கடுகு.

கடுகு-ஓர்பூண்டு, சிறுகடுகு, நாய்க்கடுகு, மலைக்கடுகு, வெண்கடுகு.

கடுகைச் சுதேச வைத்தியர் இருதயத்துக்குப் பலமுண்டாக்குகிற கார்ப்புள்ள உறைப்பான மருந்தாக யோசிக்கிறார்கள். சந்நிவாதம், கீல்வாதம், அசதிவாதம் அல்லது பாரிசவாய்வு இவைகட்கு உள்ளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. கடுகு போல்டீசு சன்னிக்கும், அகோர தலைநோய்க்கும் உள்ளங்கால்களிலும் கால்களின் கெண்டைச் சதையிலும் வைத்துக் கட்டப்படுகிறது. வாந்தி, பேதி, குன்மம், வாயு, குடல் வலிகளுக்கும் சுரமில்லாதிருக்கின் வயிற்றின் பேரிலும் திமிர்வாதமாகில் முதுகெலும்பின் மேலும் வைத்துக் கட்டப்படுகிறது. காரம் பதினைந்து நிமிஷமேயாம். அதனோடு கொஞ்சம் முருங்கைப் பட்டை சேர்த்தால் அதிககாரம் உண்டாம்.

கடுநெண்ணெய்-ஓரெண்ணெய்

கடுகுரோகணி - ஓர்மருந்து, கடுகுரோகணியெனும் மருந்தைக் குதிரைவைத்தியர் குதிரைகளுக்குப் பேதிமருந்தாக வழங்குகிறார்கள். அகிம்களும் தமிழ் வைத்தியரும் இதை ஞான்பைத்தியம் வெறிப்பைத்தியம் இந்த வியாதியுண்டான பேர்கட்குக் கார்ப்புள்ள பித்தத்தை அகற்றும் பேதி மருந்தாகவும், உபயோகப் படுத்துகிறார்கள். கடையிலிருக்கிற வேர் சிரியாவிலிருந்தும் அராபி தேசத்தி லிருந்தும் செங்கடல் மார்க்கமாய் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுகின்றது. அரபிக்காரரும் பாரிசுக்காரரும் இதை உவாந்தி மருந்தாக யோசிக்கிறார்கள்.

கடுக்காய்-கடு, கடுக்காய்ப்பூ, கடுக்காய் தாணிக்காயைவிடத் துவர்ப்புடையது. இதனோடு சரியாய் மாசக்காய்க் கட்டைக் காம்பும் நன்றாயிழைத்துக் கரப்பான் முதலாகிய புண்களுக்கு வைத்தியர் போடுகிறார்கள்.

கடுப்பு-கடுக்காய்வேர்
கடுக்காய்த்தலையன்-ஓர் பாம்பு, சிறுகடுக்காய், வரிகடுக்காய்.

கடுக்கைகொன்றை-மருந்து
கடுக்காரநீர்-முட்டை

கடுமகூர்மை-கடுந்திலாவணம்
கந்தகவுப்பு - சிந்துலவணம், இலவ

ணம், கடுங்கூர்மை லவணம், அமரியுப்பு.
கடுகுசரம்-கடுகுரோகணி
கடுசாரம்-காசிச்சாரம்
கடுசித்தாழை-பரங்கித்தாழை
கடுஞ்சாரி-நவக்ஷாரம்
கடுந்தணற்பூமி-உழமண்
கடுடம்-மருக்காரை
கடுநீத்தா-வெண்கடுகு
கடுநிம்பம்-நிலவேம்பு
கடுநதி-நாயுருவி

கடுப்ப-கடுநோய், குற்று, நீர்க்கடுப்பு, மூலக்கடுப்பு, வயற்றுக்கடுப்பு, வாதக்கடுப்பு.

கல்லுப்பு-எழாங்காய்ச்சலுப்பு
கருநாபி-கல்லுப்பு
கருவுப்பு-கல்லுப்பு
கலவமால்-மூடிமாமிசம்
கவசப்பூடு-அங்கப்பிச்சு
கண்ணாடி-ஈகம்
கவடிதகாரம்-படிகாரம்
கனிமாசம்-இந்துப்பு
கரியுப்பு-பிர்மவுப்பு
கனியுப்பு-கரியுப்பு
கருவியுப்பு-பூரணாதியுப்பு
கருவாதியுப்பு-பூரணாதியுப்பு
கதம்பையுப்பு-சத்தியுப்பு
கத்தபம்-கழுதை
கனகம்-பொன்
கன்னியன்னம்-கற்றாழஞ்சோறு
கல்வி-ஆமை
கமடத்தோடு-ஆமையோடு
கட்டகத்தி-விழி
கந்தம்-வெண்காயம்
கமலம் - பிரபைசொலிக்கும் ஸ்தானம்
கரியமணி-கருஞ்சீரகம்
கண்டம்-கண்டங்கத்திரி
கள்ளி-கொடிக்கள்ளி
கமடம்-ஆமை
கஸ்தூரிநிசி-கஸ்தூரிமஞ்சள்
கருவாப்பட்டை - இலவங்கப் பட்டை
கழலை-கழலைக்கட்டி
கம்பந்திராய்-திராயத்தி
கடம்-சரீரம்
கர்ப்பூரம்-பச்சைக்கர்ப்பூரம்
கண்டம்-துண்டம், அண்டம்
கண்டு-கரும்பின்கட்டி
கரபாதம்-கையுங்காலும்
கண்டம்-கழுத்து
கருந்துழாய்-கருந்துளசி
கமலவன்-பிரமதேவன்
கருவாளி-இரசம்
கழிவிந்து-விந்து
கன்னம்-தங்கம்
கருங்குன்றி-கருப்புக் குண்டுமணி
கதிரவனாள்-ஆதிவாரம்
கற்பகாலம்-கோடியுகம்
கரிமேதை-கறுப்பெருமை
கடிகை-நாழிகை
கரிசாலை-கரிசலாங்கண்ணி
கரந்தை-சிவகரந்தை

கருவாப்பட்டை - சன்ன லவங்கப் பட்டை.
கருக்தேசி-கருங்கழுதை
கண்விழுந்தானைசட்டி - கண்விட்டசட்டி
கரந்தை-கொட்டைக்கரந்தை
கருப்புக்கட்டி - பனைவெல்லம், கற்கண்டு.
களிப்பு-பிளாஸ்திரி
கத்தபம்-கழுதை
கற்சிலை-உருப்பட்டகல்
கரிம்பான்சார்-கையாந்தகரை
கலைத்தோல்-ஆண்மான்தோல்
கண்பெட்டை-கண்கொட்டாங்கச்சி.
கருங்குருவை-கருப்பரிசி

---

கதலி-வாழைப்பழம்
கர்க்கடகசிங்கி-கடுக்காய்ப்பூ
கருவாப்பட்டை-லவங்கப்பட்டை
களை-அழகு
கடுப்பு-ஊமத்தை
கடுப்பை-வெண்கடுகு
கடுப்படக்கி - வெதுப்படக்கி, எருமுட்டைப்பீநாரி.
கடுமரம்-காஞ்சிரை
கடுமலை-காரீயம்
கடுமுள்-கண்டங்கத்திரி
கடும்பச்சை-நாகப்பச்சை
கடும்பத்தியம்-கண்டிப்பான பத்தியம்.
கடும்பலம்-இஞ்சி, கருணைக்கிழங்கு
கடும்பை-வெண்கடுகு
கடுவங்கம்-இஞ்சி
கடுவன்-மாவிலிங்கு
கடுவிதிக்தம்-கடுகுரோகணி
கடேரிடம்-மாமஞ்சள்
கடைச்சி-கெட்டி
கடைச்சித்தாழை-பரங்கித்தாழை.
கட்டாஞ்சி-ஓர்மரம்
கட்சம்-சங்கபாஷாணம்
கட்செவி-பாம்பு
கட்டாரி-எழுத்தாணிப்பூண்டு
கட்டுக்கொடி-ஓர்பூண்டு
கட்டி-ஓர்புள்
கருப்புக்கட்டி-சருக்கரை
கட்டை-விறகு, பிரேதம்
கட்பலம்-தான்றி
கணக்காய்ச்சல்-ஓர்நோய்
கணப்பூண்டு-ஓர்பருந்துப்பூண்டு
கண்மூலம்-அதன்மூலம்
கணமூலி-சாணாக்கி, திப்பிலி
கணம்-திப்பிலி, ஓர்நோய்
கணவம்-அரசமரம்
கணவீரம்-அலரி
கணி-வேங்கைமரம்
கணிகை-முல்லை
கணை-கரும்பு
கண்-மூங்கில்
கண்டகம்-நீர்முள்ளி
கண்டகசங்கம்-ஓர்செடி
கண்டங்காலி-கண்டங்கத்திரி
கண்டதிப்பிலி-வங்காளதிப்பிலி
கண்டம்-கள்ளி, குன்றிவேர், சாதிலிங்கம், கண்டசருக்கரை.
கண்டலம்-முள்ளி
கண்டல் - கண்டல், தாழை, நீர்முள்ளி, முள்ளி, பேய்க்கண்டல், ஓர்மரம்.
கண்டர்-துரிசி
கண்டாவுடம்-கண்டூரம்
கண்டி-சிறுகீரை
கண்டூரவம்-சதுரக்கள்ளி
கண்டு-கண்டங்கத்திரி
கண்டுகம்-மஞ்சிட்டி
கண்டுபாரங்கி-சிறுதேக்கு
கண்டூதி-காஞ்சொறி, தினவு
கண்டூரம் - பூனைக்காலி, கண்டாவுடதம்.
கண்ணா-திப்பிலி

கண்ணாட்டி - உருக்காட்டி, கண்ணாடிவேலை, மைசூர்தேசத்திலும், மத்தூர், சென்னப்பட்டணம், முதுகொடை என்கிற இடங்களிலும், தஞ்சைநகரம், தொண்டமான் சீமையில் வல்லத்தூரிலும், ஒருவிதத் தாழ்ந்த கண்ணாடி வேலைகள் செய்யப்படுகின்றன. சிறிய குப்பிகள் 'வளையல்கள்' அதில் ஒருபங்கு வெண்கல்லும், ஆறுபங்கு சுத்தப்படுத்திய உவர்மண் அல்லது சுயகாரமும் சேர்த் துருக்கிச் செய்யப்படுகிறது. இலைபச்சைநிறமாக்கவேண்டிய உவர்மண் காரத்தை அதிகமாகக் கூட்டிக் கருங்கல்லென்கிற இரும்புக்க

ளிம்பு நீற்ற செம்பு சேர்க்க வேண்டும். மஞ்சள் நிறமாக வேண்டுமானால், ஈயம், தகரம், துத்தநாகம் சேர்க்கப்படுகிறது.

மைசூரில் செய்யப்படுகிற வளையல்களைப் பார்க்கிலும் தொண்டமான் தேசத்தில் செய்யப்படுகிற வளையல் மிகச்சிறந்தது. உவர் மண்ணோடு கொழுந்து மணல் சேர்க்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் தங்கசாலையில் அஸிஸ்டன்ட் மாஸ்டராயிருந்த ரைட்டர் துரையென்பவரால் சாராயப்புட்டிகள் செய்யப்பட்டன. சைதாபுரம் தியாகராய முதலியாரென்பவரும் செய்வித்தார்.

கண்ணிக்கொடி-ஓர்பூண்டு
கண்ணிகம்-மணத்தக்காளி
கண்ணீர் நடுக்குறை-மூக்கிரட்டை
கண்ணுக்காசன்-துரிசி
கண்ணுக்கினியான்-கையாந்தகரை, பொன்னாங்காணி.
கதம்பம்-கடம்பு, கடப்பம், வெண்கடம்பு.
கதம்பாரி-தேற்று
கதம்பம்-கடம்பு
கதலம்-வாழை
கதலி-தேற்றுமரம், வாழை-
கதலிச்சி-கற்பூரம்
கதலிப்பூ-பச்சைக்கற்பூரம், வாழைப்பூ.
கதலிக்கிழங்கு-வாழைக்கிழங்கு
காட்டுக்கதலி-காட்டுவாழை
கதிக்கை-கருக்குவாளி
கத்தரிகாயகம்-ஆனைச்சீரகம்

கத்தரி - ஓர்செடி, அது, ஆகாசகத்திரி, கண்டங்கத்திரி, காரற்கத்திரி, கொத்துக்கத்திரி.

கத்திரியம்-ஆடுதின்னாப்பாளை
கத்திகை-கருக்குவாளி, சிறுகொடி
கத்திருணு-நிலவேம்பு
கத்துருபம் - குதிரைப்பற் பாஷாணம்.
கத்தூரி-கஸ்தூரி
கந்தகம்-அவல்பாஷாணம்

### அதன் வகை

கந்தரசாயனம்-கந்தகவுப்பு, கோழித்தலை கந்தகம், சிவப்பான கந்தகம், சுரைக்கந்தகம், நெல்லிக்காய்கந்தகம், துல்லிமான கந்தகம், சற்று நீலநிறமான கந்தகம், பாணகந்தகம், பாண மருந்துக்காகும் கந்தகம் இதில்,

கடைகளிலிருக்கும் கந்தகம் சுத்தமற்றதாகும். அதில் குறைந்தபங்கு பாஷாணஞ் சேர்ந்திருக்குமாதலால் அது உள்ளுக்குக் கொடுக்கத்தக்கதல்ல. சிரங்குக்கும் தோல்மேல்வரும் வியாதிகட்கும் மிகுதியாயுபயோகப்படுகின்றது. நாட்பட்ட கால்கை வாதங்களுக்குத் தேங்காயெண்ணெயோடு சேர்த்து மேற்பூச்சுக் குதவுகின்றது.

கந்தகத் திராவகம் ஐரோப்பியர்களைப் போலவே வைத்தியரும் கந்தகத்திராவக மிறக்குகிறார்கள். கந்தகத்தைக் கொஞ்சம் பொட்டிலுப்புடன் சேர்த்துப் பலமான மண்பானையில் அடுப்பேற்றித் திராவகம் இறக்குகிறார்கள். இதில் நீர்விளாவிக் கண்டமாலைக்குரிய வியாதிகளுக்கு ஊறலாக கொடுக்கப்படுகிறது. பலவீனத்துக்கும் அந்தப்படியே கொடுக்கப்படுகிறது. வயிற்றுக் கடுப்பு, மூலக்கடுப்பு, வயிற்றுளைவு, இவைகட்கு இலவங்கக் கஷாயத்தோடு சேர்த்துக் கொடுக்கப்படுகிறது.

சுதேச வைத்தியர் கந்தகத்தைக் கருஞ்சீரகத் தூளுடன் நல்லெண்ணெயி லிழைத்துச் சிரங்குக்கு மேற்பூச்சாகப் பூசுகிறார்கள். குஷ்டவியாதிக்கு, கிரந்திக்கு, சூலைக்குக் கொடுக்கப்படுகிறது.

கந்தகம் இந்தியா தேசத்தில் விஸ்தாரம் அகப்படுகிறதில்லை. இந்தியாவின் மேற் புறத்தில் உதயபூர் ஜில்லாவில் அகப்படும். ஆனாலது கச்சுபார் தேசத்திலிருந்து வருகின்ற சாக்கு மட்டமாய் இருக்கும். திருவான்கோரிலும் கனராவிலும் அகப்படுமென்று கேள்வி. கந்தகம் இந்தியாவுக்கு மஸ்காத்திலிருந்தும் சுமித்திராவிலிருந்தும் பாந்தாநிலிருந்தும் விஸ்தாரங்கொண்டு வரப்படுகிறது. பைகோ தேசத்தில் சாதாரணமாய் கிடைக்கும். பிலிபயின் தீவுகளிலுமுண்டு.

கந்தகட்பலம்-தான்றி
கந்தசட்கம்-தமரத்தை
கந்தகக்கிலம்-அதிவிடயம்
கந்நாகுலி-செவியம், மிளகு
கந்தநாலியம்-அரத்தை
கந்தபூசியம்-நாய்வேளை
கந்தம-கருணைக்கிழங்கு, கழுத்தடி
கந்தகபாஷாணம்-வசம்பு

திரிகந்தமாவது - கிராம்பு, நாவற்பூ, சண்பகப்பூ, சந்தனம், செஞ்சந்தனம், அகில்.
கந்தகாட்டம் - வெள்ளைப்பாஷாணம்.
கந்தரசு-சாம்பிராணி
கந்தாம்-புனல்முருங்கை, புனமுருங்கை.
காடக பாஷாணம்-தீமுறுகற்பாஷாணம்.
கந்தருவா-ஆமணக்கு
கந்தன்-குதபாஷாணம், சீர்ப்பந்த பாஷாணம்.
கந்தாத்திரி-நெல்லி
கந்தி-கமுகுகந்தகம், கந்தகபாஷாணம்.
கந்திவாருணி-பேய்த்தும்மட்டி
கந்துகன்-தான்றி
கந்தேறு-கோடகசாலை
கந்தை-கரளை
கந்தோதம்-தாமரை
கபம்பம்-வாதுளவை
கபநாசம்-கண்டங்கத்திரி
கபாடக்கட்டி-வசம்பு
கபாலம்-மண்டையோடு
கபாலம்-காப்பான்
கபாலசாந்தி-ஆவிரை
கபாலன்-சீர்ப்பந்தபாஷாணம்
கபிதம்-கருஞ்சீரகம்
கபிதம்-விளாமரம்
கபீதனம்-வாகை
கபோதம்-புறுமுட்டி
கமாதம்-மணத்தக்காளி
கமலம்-தாமரை
கம்லி-குங்குமபாஷாணம்
கமல்-குடசப்பாலை, வெட்பாலை
கமி-மிளகு
கமுகு-பாக்கு மரம், கூந்தற்கமுகு
கம்பம்-தாலம்பப்பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், சாலாங்கபாஷாணம், கற்பதி பாஷாணம்.

கம்பளி }
கம்பிளி } கம்பளிப்பழம்.
கம்புளிகொண்டான்-முசுக்குட்டை
கம்பளிப்பூச்சி-முசுக்குட்டை
கம்பி-வெடியுப்பு, கம்பியுப்பு

கம்பிர்-ஓர்சரக்கு

இது மலாய் தேசத்திலிருந்து அரிதாய்க் கொண்டு வரப்படுகிறது. இது கத்தைக்காம் பொப்பந்தமாய் வெற்றிலையோடு பாக்குப்போல் போட்டு மெல்லப்படுகிறது. இது ஒரு பூண்டின் இலையிலிருந்து சுத்தப்படுகின்றது. இது மிகவும் துவர்ப்புள்ளது.

கம்பு-ஓர் தானியம்.

செந்தினை, கம்பங் கோரை, கம்பம்புல், கம்பந்தாளி, கம்பந்திராய்.

இந்தத்தானியம் சோளத்தை விடக் குறைந்த சூடுள்ளதாய் எண்ணப்படுகிறது. ஆபிரிகாதேசத்தின் சில பாகத்தில் இதைப் புழுங்கவைத்துப் பீர் சாராயஞ் செய்யப் படுகிறது. சீமையில் வாற்கோதுமையால் செய்யப்படுகிறது.

கம்மை-சிறுகீரை.
கயடேரிகம்-அகில்
கயத்தம்-துளசி
கயிம்வாதி-வசம்பு
கயிரவம்-வெள்ளாம்பல்
கரசம்-நாதுமாதளை
கரசம்-புலிதொடக்கி
கரஞ்சகம்-புன்கு
கரணப்பலா-வெருகு
கரதாளம்-பனை

கரந்தை-ஓர் பூண்டு அவை குத்துக் கரந்தை, கொட்டைக் கரந்தை, சிறுகொட்டைக் கரந்தை, சிவகரந்தை, சுணைக்கரந்தை, சுரைக் கரந்தை, சூரியக்கரந்தை, நருங் கரந்தை, விட்டுணுக்கரந்தை.

கரப்பான்-ஓர்புண்.

அவை அக்கினிக் கரப்பான், உமிக்கரப்பான், ஊதுகரப்பான், கண்ட கரப்பான், சொள்ளிக்கரப்பான், செங்கரப்பான், மண்டைக் கரப்பான், கபாலக் கரப்பான், மண்டைக் கரப்பான் பூச்சி.

கரப்பான்பூண்டு-ஓர்பூண்டு
கரமஞ்சரி-நாயுருவி
கரம்-நஞ்சு
கரம்பை-சிறுகளா
கரவீரம்-அலரி
கரணம்-நஞ்சு, எட்டிமரம்
கராடம்-மருக்காரை
கரமம்-வெண்கடம்பு
கரி-வயிரம், நஞ்சு

கரி-கட்டைக்கரி, இதனோடு அரிசிமாவுஞ் சேர்த்துப் போல்டீசாக வைத்துக் கட்டினால் அதிக நாற்றமுள்ளதான புண்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

கரிகன்னி-செருகு
கரிக்கண்டு - கையாந்தகரை கரிசலாங்கண்ணி.

கரிக்கை-கையாந்தகரை
கரிக்கோலம்-அழிஞ்சில்
கடப்பம்வித்து-சடிவிஷம்,மண்டைநீர், மந்தம், வாதமும்போம்.

கடமானிறைச்சி-உடல் வலுத்துப் பருத்தலும் குடல் வாதமும் உண்டாம்.
கடலழிஞ்சில் - உந்திவிரணம், கபநீர், சீதம், சுரம், தொந்தநீர், பித்தநீர், பேதி, மேகம், வாதநீரும்போம்.
கடலிறஞ்சிக்கறி - ஆறுகால்மாமிசம், கரப்பான், சிரங்கு, சொறி, கணை, பழையமேகம் பலவித நோய்களும்போம்.
கடலை-காட்டுக்கடலை, கனல், குடல்வலி, தாகம், தியக்கம், மருந்துமுறிவு, மலக்கொட்டல், வயிறூதல், வாய்வுமுண்டாம்.
கடல்நண்டு - சமுத்திரநண்டு, உதிரக்கழிச்சல், கரப்பான், குன்மவலி, சொறிவாதமுமுண்டாம்.
கடாநாரத்தங்காய் - கொடிக்காய், அரோசகம், பித்தம், வாய்நீரூறலும் போம். பத்தியத்திற்காம்.
கடுகு-சூலை, கடுப்பு, கபம், காசம், கிராணி, குன்மம், சீதம், நாசிச் சூர்பித்தம், மந்தம், மயக்கம், மூடம், முத்தோஷம், வலைவுநோய், வாதம், வாய்நீரூறலும்போம். சுகபிரசவமுண்டாம்.
கடுகுநெய்வித்து எண்ணெய் - இரத்தபித்தம், கபம், குஷ்டம், மூட்டுச்சூலை, மூலம், வயிற்றுநோய், வாதம், விரணமும்போம்.
கடுகுரோகணி - மலக்கோமா, ஆமம், ஐயம், கரப்பான், சிரம், திரிதோஷம், புண்மலக்கட்டு, காந்தம், வயிற்றுநோய், வாய்வும்போம். பேதியுண்டாம்.
கடுகோதனம்-தாளித்த அன்னம், ஐயமும் வாதமும்போம்.
கடுக்காய் - இரோககற்பம், அதிதூலநோய், ஆண்குறிநோய், ஆனைக்கால், இடிபட்டபுண், கண்ணோய் நாக்கின்னோய், வாதசோணிதம், விஷநோயும்போம்.
கடுக்காய்ப்பிஞ்சு - ஆசனக் கடுப்பு, சீதக்கடுப்பு, மலச்சிக்கற் கடுப்பு, முக்கலும்போம்.
கட்டமுது-கட்டுசாதம், செட்டவிரத்தம், மேகமும்போம்.
கண்டமாலை - சூலை, சுவாசகாசமும் உண்டாம்.
கணப்பூண்டிலை-கபசுரம், பித்தகணம், வாதகணமும்போம். மேகக் கட்டிக் கரைவுண்டாம்.
கண்டங்கத்திரி-சோழையதுத்தான், அனல், ஐன்னி, க்ஷயம், சுரம், சுவாசகாசம், தோஷம், மந்தம், வாய்வும்போம்.
கண்டங்கத்திரி சமூலம் - உடற்கனப்பு, க்ஷயம், சுவாசம், கீர்ப்பீனசமும்போம்.

கண்டங்கத்திரிக்காய்-ஆமம், ஐயம், மலக்கட்டும்போம். தீபனமுண்டாம்.
கண்டங்கத்திரிபழம்-க்ஷயம், காசம், சீதம், சுவாசம், சொறி, தினவு, பல்லரணையும் போம். தீபனமுண்டாம்.
கண்டில் வெண்ணெய் - குங்கிலிய வெண்ணை, இருமல், தொண்டைநீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, மூலத்தூள் நீர்க்குத்தலும்போம். தேகங் காந்தியுண்டாம்.
கண்டுபாரங்கி - சிறுதேக்கு, அகநோய், அழலை, உள்நீர், கடுப்பு, கபம், சீதசுரம், சுரம், சுவாசகாசம், தொண்டைநோய், நீர்க்கோவை, பித்தம், பீனசம், வாதம், வெளிநீர், வெறியும்போம.

கத்திரிக்காய் - கபம், பித்தமும் போம். கிரந்தி, சிரங்கு, தினவு முண்டாம்.

கத்திரிப்பழம் - கபம், சுவாசம், வாதமும்போம். அழல், கரப்பான், குஷ்டம், தாதுநஷ்டம், பித்தம், பெருங்கிரந்தியும் உண்டாம்.

கத்திரிப்பிஞ்சு - முத்தோஷம் போம்.

கத்தூரி-மான்கருவி, கபம், ஜந்நி, தலைவலி, மூட்சையும்போம். காந்தி, சுகம், பலம், மாதர்நாத விருத்தி, வசியமும் உண்டாம்.

கத்தூரிமஞ்சள் - கரப்பான், கிருமி புண், மந்தாக்கினியும் போம். அறிவும், சுக்கில விருத்தியுமுண்டாம்.

கந்திக்காய் - உதிரவாய்வு, ஐயம், பித்தமும் போம். உரிசை யுண்டாம்.

கந்தியுப்பு - கெந்தகவுப்பு, குடல் வாதம் போம். உடற்கரையும் உட்டினமும் உண்டாம்.

கம்பஞ்சாதம்-உடற்பாரிப்பு, உதிரவற்றல், காசம், சிரங்கு, சுவாசம் நிறமாறலுமுண்டாம்.

கம்பரிசி-உடற் கொதிப்பும் போம். சொறி, சிரங்கும், பலமுமுண்டாம்.

கம்பளம் - அசிரணம், கிராணி, சீழ், சூலை, பெரும்பாடு, பேதியும்போம். குளிர் பனிக்காலத்தில் சூடுண்டாம்.

கரியநிறமாதர் முலைப்பால் - முத்தோஷம் போம். கனவியாதி போம்.

கரியபோளம்-கருப்புக் குங்கிலியம், கால், சூலைப்பக்க நோய், மார்பு வலி, மேகக்கட்டி, வயிற்று வலி, வாதபித்தம், வீக்கமும் போம். கருங்கடுக்காய் - கபம், பழயமலம் வாதபித்தமும் போம்.

கரிசலாங்கண்ணி - கையாந்தகரை

கரிசனம் - பொற்றலைக் கையாந்தகரை.

கரிச்சான்பூண்டு - கையாந்தகரை, கரிசலாங்கண்ணி.

கரிதிப்பிலி-ஆனைதிப்பிலி

கரிப்பான்-கையாந்தகரை, கரிசலாங்கண்ணி.

கரியபோளம் - ஓர் சரக்கு, இது சுதேச வயித்தியரால் சாதாரணமாய்ப் பேதிமருந்தாக வழங்கப்படுகிறது. கண்ணோயில் கண்ணைச் சுற்றிலும் பற்றுப் போடப்படுகின்றது. பிரசவமானபின்பு பெண்மக்களுக்கு வயிற்றில் யாதொரு பிணியிருக்கில் இதை நெருப்பில் வாட்டி கொடுக்கிறார்கள். இந்த சுதேசத்திலும் செய்யப் படுகிறதுண்டு. இது ஆபிரிகா கரைத்துறைத் தேசத்திலிருந்து வருகிறதுமுண்டு. பார்தோல் ஐமாயிர்க தேசத்திலிருந்து வருகிறதைவிட ஆபிரிகா தேசத்திலிருந்து வருகின்ற சரக்கு மட்டமல்ல. இந்த சரக்குக்கு மார் என்கிற செடியிலிருந்து உண்டாகிறது. தமிழில் மலைக்கற்றாழை யென்றும், சமஸ்கிருதத்தில் தாருணி யென்றும் பெயர். இது ஸ்திரீகளுக்கும் மாறிமாறி வருகிற ருதகத்துக்கும் இந்த மருந்து நன்றாயுபயோகப்படும். ஆனால் கருப்பஸ்திரீகளுக்கும் ருதகம் நன்றாய்க்காணுகிற ஸ்திரீகளுக்கும் கொடுக்கக்கூடாது. தலைநோவுக்கு உபயோகப்படும்.

ஔஷதத்துக்குளடுக்கப்பட்ட கரியபோளம் புதியதாயும் சுத்தமாயும் காரமான வாசனையுள்ளதாயும் உடைத்தால் துப்பரவாயும் இருக்கவேண்டும்.

மேற்சொன்ன ஔஷதம் கொடுக்கிற விதம் எப்படியெனில், கரியபோளமும் மிளகு வற்றலும் வகைக்கு 20 - கிறெயின் வெண்காரம் 30-கிறெயின் இவை மூன்றும் தனித்தனியே நன்றாய்ப் பொடித்துக் கொஞ்சந் தேன்வார்த்துப் பக்குவமாய் அரைத்து ஒன்றாய்ச் சேர்த்து 8 சம மாத்திரைகளாக வுருட்டி வைத்துக் கொண்டு ஒருதரத்துக்கு இரண்டு மாத்திரையாக காலை மத்தியானம் சாயந்திரம் கொடுக்க வேண்டும். இன்னொருவித மெப்படி யென்றால், கரியபோளம், காயம், வகைக்கு 30 - கிறெயின் இந்த இரண்டையும் தேன்சேர்த்து நன்றாய் இடித்து 2 - மாத்திரைகளாக்கிக் காலையுஞ் சாயந்திரமும் ஒரு மாத்திரைவீதங் கொடுக்கவேண்டும். இந்த மாத்திரைகள் ருதக வாய்வுள்ள ஸ்திரீகளுக்கும் உதிரம் நன்றாய்க் காணாமல் மதம் மந்தப்பட்டு வருத்தப்படுகிற ஸ்திரீகளுக்குங் குணத்தைக் கொடுக்கிறதுமன்றி மாதவிடையும் நாள்பட்ட மூல வியாதியை சேர்ந்த இரத்தப் போக்கும் நின்ற வதுவாலுண்டாகிற தலைநோவுக்குங்கூட உபயோகமாயிருக்கும். கரியபோளம் என்கிற ஔஷதம் மூலவியாதியால் கஷ்டப் படுகிறவர்களுக்குக் கொடுத்தால் அவ்வியாதி அதிகப்படுவதற்கேதுவாயிருப்பதால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

கரியமால்-காய்ச்சற்பாஷாணம்

கரியலாங்கண்ணி-கரிசலாங்கண்ணி

கரீரம்-அகத்தி, கருவேல்

கருங்கல்-ஓர்கல், இந்தியாவில் இந்த கல் சாதாரண கல்மலையினிலுண்டு. அதில் எவ்வளவு மாவயிரக்கல் அப்பிரகம் முதலாகியவைகளின் சேர்மானப்பிரகாரம் வலுமையும் மதிப்புமுடையதாயிருக்கும். சிலர் கருத்து மெருகுடையனவாகவுமிருக்கும். முக்கியமாய் இவைகளால் கோவில்கள் கட்டுவிக்கப் படுகின்றன. கருங்கல்லில் சலவைக் கல்லுமுண்டு.

கருங்காலி-கருங்காலி, எட்டி.

கருங்காவி-கருங்குவளை

கருங்குவளை-நீலோற்பலம்

கருங்கேசம்-வெண்கலம்

கருங்கொடி-ஓர்செடி

கருங்கொட்டி-கொட்டி.

கருங்கோல்-இரும்பு

கருஞ்சனம்-முருங்கை

கருஞ்சிலை-கருங்கல்

கருஞ்சூரை-செங்கத்தாரி
கருடக்கொடி-குமிஞ்சா, பெருமருந்து
கருடக்கொவ்வை } காக்கணம்
கருடத்தொண்டை } கொள்ளை

கருணை-ஓர்கிழங்கு
கருநந்து-நத்தை
கருநெய்தல்-கருங்குவளை
கருந்தாது-இரும்பு
கருந்தோளி-அவுரி
கருமஞ்சரி-நாயுருவி
கருமணி-கண்மணி
கருமயிர்-கரடி
கருமுகில்-கார்முகில் பாஷாணம்
கருமுளை-இருவாட்சி, சண்பகம்
கரும்புரம்-பனை
கரும்வூமத்தை-கருஊமத்தை
கரும்பொன்= இரும்பு
கரும்பொன் செந்தூரம்-அயச்செந்தூரம்.

கருவாப்பட்டை - லவங்கப்பட்டை, கருவாப்பட்டை யென்னுஞ் சரக்கு விஸ்தாரம் குளம்புத் தேசத்திலிருந்து வருகிறது. திருநெல்வேலிச் சில்லாவிலிருந்தும் வருகிறது. இது பசிதீபன முண்டாக்குகிற சுகச்சூடுள்ள மருந்தாக இருக்கின்றது.

கருவிளம் - காக்கணம் வில்வம் ஓர் மரம்.
கருவிலா-வில்வம், ஓர்மரம்
கருவிளைக்காக்கணம்-ஓர்பூண்டு

கருவேலமரம்-ஓர்மரம், இந்த மரம் வண்டிகள் சக்கரங்கள் முதலாகிய செய்ய மிகவும் விலைபெற்றதாயிருக்கின்றது.

கருவேலம்பட்டை - சீரண மருந்தாக யோசிக்கப் படுகின்றது. அதி தளர்ச்சி சோர்வு சோகம் இப்படிப்பட்ட சமயங்களில் கஷாயஞ்செய்து கொடுக்கப்படுகின்றது. முக்கியமாய் பாம்பு கடித்து விஷமேறி இரத்தக்கசி உவாந்தியுண்டாயிருந்து பலவீனப்பட்டிருக்கிற சமயங்களிலும் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டையை ஆர்க்கப் பொடிசெய்து நல்லெண்ணையில் கலந்து பிளவை, விப்புருதி, கன்னவிப்புருதி முதலாகிய புண்கள்மேல் பூசப்படுதற்கு நல்ல மருந்தாயிருக்கின்றது. கருவேலம்பிசின் இந்தியாவில் அராபிக் என்னும் பிசினுக்கு பதிலாக உபயோகப்படுத்தப் படுகின்றது.

கரு[illegible]-வாருகுலைக்கோல்
கரைக்கல்லோலம்-கடற்பாசி
கர்ச்சூரம்-கழற்சி, கழற்கொடி, பேரீந்து.
கர்ப்பூரம் }
கருப்பூரம் } ஓர்மருந்து
கற்பூரம் }

கற்பூரத்தைச் சுதேசவைத்தியர் மிகவும் உபயோகப் படுத்துகிறார்கள். ஐரோப்பியர்களைப் போலவே சுதேசவைத்தியரும் கற்பூரத்தைச் சந்துவாத நரம்புகள் முதலாகிய வைகளுக்கு மேற்பற்றுப் போடுகிறார்கள். நவிர்சுரத்தில் குளிரையடக்க அதற்குச் சக்தி யுண்டென்று கிருஷ்ண தோஷத்துக்கு மிகவும் உபயோகப் படுத்துகிறார்கள்.

ஔஷதத்திற்குத் தகுந்த சூடான வெள்ளைநிறமான சிறு கட்டிகளாயும் காரமான வாசனையுடையதாயு மிருக்கவேண்டும். அது பலவித வியாதிகளுக்கு உபயோகப்படும்.

அதிகப்பட்ட எல்லாச்சுரங்களுக்கும் வைசூரிக்கும் வியாதிக்காரன் மிகவும் பலவீனமாய் வைத்தியப் புலப்படும் தாழ்ந்த முணு முணுத்தலும் நித்திரையில்லாமலு மிருக்கிற போது 3-கிறெயின் சூடனை அதற்குச் சமனிடை கஸ்தூரியாவது காயமாவது சேர்த்து மூன்றுமணி நேரத்திற்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுக்குமளவில் பாதங்களிலாவது நெஞ்சின் இடது பக்கமாகிய இருதய ஸ்தானத்திலாவது கடுகு போல்டிசை வைத்துக் கட்டவேண்டும். மேற்சொன்ன வியாதிகளுடன் நாக்குச் சிவப்பாயும் வயிற்றின் மேல் தொடும்போது அதிக நோவாயும் வயிற்றுக் கழிச்சலாயும் இவ்வித குறிகளுண்டாயிருக்குமாகில் ஷெ. மருந்தை கொடுக்கக்கூடாது. முன் கூறிய மருந்தின் பிரமாணங்கள் பிராயமானவர்களுக்கே தகுந்தது. வைசூரி கண்டு மறைந்துவிட்டால் 2-3-கிறெயின் சூடன் ஆறுமணி நேரத்திற்கு ஒருதரங் கொடுக்கில் வைசூரி நன்றாய் வெளிப்படும். இதைக் கொடுத்தபின் தலை நோயுண்டானால் உடனே மருந்தை நிறுத்திவிடவும். வியாதிக் காரனுக்கு முன் சொன்னதுபோல் அதிக பலவீனம் உண்டாகில் அதைத் திரும்பக் கொடுக்க வேண்டும். சூடன் என்னப்பட்டது மிகுந்த பத்திரத்துடனே கொடுக்கவேண்டும் ஔஷதங்களிலொன்றா யிருக்கிறது.

இந்திரியம் தன்னால் வெளிப்படும் வியாதிக்கு 4-கிறெயின் சூடனும் அரைகிறெயின் அபினும் சேர்த்துத் தினந்தோறும் இராத்திரி படுக்கும்போது கொடுக்கவும். மேகவெள்ளை யுண்டானவர்களுடைய லிங்கம் நிமிர்ச்சியாயிருக்கிறதற்கும் இந்த ஔஷதம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும். ஆனால் இதற்கு அபினைக் கிறெயின் வரையும் அதிகப் படுத்திக்கொள்ள வேண்டும். இது தவிரச் சூடன் தயிலத்தை லிங்கத்தின் அடிபக்கம் புன்னவாயளவும் தடவவேண்டும். ஸ்திரீகள் உபஞ்சத் தரிப்பினால், அதிகமாய் வருத்தப் படுவதை நிறுத்தும் பொருட்டாய் 5-6-கிறெயின் சூடனை மாத்திரையாக வுருட்டி இரண்டு மூன்றுதரம் கொடுக்க வேண்டும். மேற்சொன்ன வியாதிகளை யுடையவர்களது குடற்களை பேதிக்குக் கொடுத்து நன்றாய்ச் சுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும். கருக்குழியைச்சார்ந்த நோயால் சிலவற்றிற்கெல்லாம் 8-கிறெயின் சூடனை உள்ளுக்குக் கொடுத்து இடுப்பில் சூடன் தைலத்தை நன்றாய்த் தேய்க்கவேண்டும். பிரசவ சமயத்தில் உண்டாகுஞ்

ஜன்னி யிழுப்புக்கு 5-கிறெயின் சூடனும் 8-கிறெயின் கஸ்தூரியும் தேனி லரைத்து ஒரு மாத்திரையாக உருட்டிக் கொடுத்து ஒருமணிநேரஞ் சென்றபின்னும் சந்நி யிழுக்குமாகில் இந்தப்படி மறுபடியும் ஒரு மாத்திரை செய்துகொடுக்கவேண்டும். அதின்பின் நேர்வாளமாத்திரை யொன்றாவது ஆமணக்கெண்ணையாவது கொடுக்கவேண்டும். கஸ்தூரி கிடையாவிட்டால் காயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சுவாசகாசத்துக்கு 4-கிறெயின் சூடனை 3-கிறெயின் காயத்திலாவது 2-கிறெயின் கஸ்தூரியிலாவது சேர்த்து 2-3-மணி நேரத்துக்கு ஒருதரங் கொடுக்கவேண்டும். இந்தப்படி ஐந்து ஆறுதரங் கொடுத்தபின் நன்றாய்க் குணங்காணாவிட்டால் கொடுக்கக் கூடாது. அதன்றியும் சுடுநீரில் சீலையை நனைத்து மார்பில் ஒற்றடங் கொடுக்கவேண்டும்.

சூடன் அரை அவுன்ஸில் தேங்கா எண்ணைவிட்டு நன்றாயரைத்துச் சற்று வெதுப்பிக்கொண்டு குழந்தைகளின் வாயிலுந் தொண்டையிலும் இராவில் படுக்கிற சமயத்தில் நன்றாய்த் தடவினால் சுவாசமுட்டுடன் கூடிவரும் இருமல்களைச் சாந்தப்படுத்தும்.

சூடன் அரை அவுன்ஸை 3-அவுன்ஸ் தேங்கா யெண்ணையிற் கலக்கித் தடவினால் வாதமுட்டு வீக்கம் கழுத்து முதலிய உறுப்புகளி லிருக்கும் விசை நரம்புகளின் வீக்கங்கள் நசிவுகள் சுளுக்குகள் முக்கியமாய்ச் சூதக சமயத்திலும் கெற்பந் தரிக்கிற சமயத்திலுமுண்டாகிற இடுப்புவலிகள் முதலானவைகளெல்லாம் தீரும். இந்த வியாதிகளுக் கெல்லாம் காலையும் சாயந்திரமும் பத்து அல்லது பதினைந்து நிமிஷ நேரம் வரை மேற்படி தயிலத்தை முற்றும் நன்றாய்த் தேய்க்க வேண்டியதா யிருக்கின்றது.

நெடுநாளா யிருக்கிற வாதத்துக்கு மேற்சொன்ன தயிலம் தடவுகிறது மன்றி 5-கிறெயின் சூடனும் 1-கிறெயின் அபினுங்கூட்டி இரவில் படுக்கைச் சமயத்தில் உள்ளுக்குக் கொடுத்துப் பின்பு தினந்தோறுங் கொடுக்க வேண்டும். இப்படிக் கொடுத்ததினாலே வேர்வை மிகுதியா யுண்டாகும். அப்போது சுக்குக் குடிநீர் கொடுத்துத் தேகத்தைக் கட்டிச் சீலையால் பொருந்திருக்கில் வேர்வையை அதிகப்படுத்தி வியாதி குணப்படும்.

வியாதிக்காரன் அதிக நோயினால் ஒரு பக்கமாகவே கிடந்து அந்தப் பக்கத்தில் புண்கள் வந்தால் அவனைத் தினந்தோறும் பக்கமாற்றி தேகமும் அதிக நோயும் உண்டாகாமல் யிடத்தைத் தேய்க்க கூடுமாகில் அதில் சூடன் தயிலத்தைச் சற்றுநேரம் நன்றாய்த் தேய்க்கவேண்டும்.

பல் வலிக்குக் கிறெயின் சூடனும் கிறெயின் அபினுஞ் சேர்த்து இடித்துப் பல்லினிடையில் வைத்தால் வலிநீங்கும். இதை வைத்திருக்கும் போது வாயிலுண்டாகிற உமிழ்நீரை விழுங்காமல் உடனுடன் துப்பிடவேண்டும்.

கார்வலிப்மரம்-ஓர்மரம்
கலம்பல்-தாலம், பாஷாணம்
கலப்பி-கொத்துப்பசலை
கலப்பைக்கிழங்கு-கார்த்திகைக் கிழங்கு
கலிகம்-வன்னி
கலிகை-நாகமல்லிகை
கலிங்கம்-மிளகு, வெட்பாலை
கலிகம்-வன்னி, அழகும், புத்தியுமுண்டாம்.

கருங்கல்வீடு-மலைக்கல் வீடு, சூரிய சந்திர கிரண மில்லாமையால் அழகு உதராக்கினி வீரியமும் போம். சிலேட்டுமபித்தம் பனத்துன்ப முண்டாம்.

கருங்காக்கட்டான் வேர் - கபக்கட்டம், கிருமி, மலக்கட்டு, மாந்தம், வாதமும்போம்.
கருகாஞ்சொறி வேர் - அகோர கபரூட்சை, குத்திருமல் நீரேற்றமும்போம்.
கருங்கால் நாரைக்கருப்பு - நாரைமதம், வாதமும் உண்டாம்.

கருங்காலிவேர் - சயரோகம், குட்டம், குன்மம், திமிர், நீரிழிவு, பெருவயிறு, புழுவும்போம்.
கருங்காலிப்பட்டை-ஈளை, காசம், மூலவியாதி, மேகநீரும்போம். பல்விறுகல், சோகமும் உண்டாம்.
கருங்காலிப்பிசின் - கரப்பான், நீரிழிவு, பெரும்பாடும்போம், தாதுவிர்த்தி யுண்டாம்.

கருங்காலிவேர் - உதிரப் போக்கு, குட்டம், புளு, மதுமேகமும் போம். கசப்பாகவிருக்கும்.

கருங்குங்கிலியம்- குத்தல் வலி, மேகவாயு, சூலை, 18-வாதம், வாய்வும்போம். பித்தம்உண்டாம்.

கருங்குருவையரிசி-கரப்பான், குட்டம், சிலவிஷமும் போம்.
கருங்குருவிக்கரி-ஊதுகாமாலை, கபம், கரப்பான், சொறி, வாதகர்மாலையும்போம்.
கருங்குன்றி-கருப்புக்குன்றி, மணி கரப்பான், வாதம் போம்.
கருங்கொரங்குக்கரப்பான் - சிலேட்டுமம், பெருங்கிரந்தி, புண்ணும் உண்டாம்.
கருங்கோழிக்கரி-கடிகிரந்தி, கிருமி, குட்டம், சூலைப்புண், வலிவாதக் குட்டமும்போம். தேகபலம் உண்டாம்
கருஞ்சித்திரமூலம்-சித்தர்பட்டை, அரையாப்புக்கட்டி, இரத்தக்கட்டி, கிரந்தி, சீழ்மூலம், சூலையும்போம்.
கருஞ்சிவதைவேர்-எலிவிஷம், காக்கடிப்பித்த குன்மமும் போம். பேதி உண்டாம்.
கருஞ்சீரகம் - காட்டுச்சீரகம், கண்ணோய், கரப்பான், காய்ச்சல், கிருமி, சிராய், பீநசம், தலைநோய், புண்ணும்போம்.
கருஞ்செம்பையிலை-கருப்பு வன்னி, கபரோகம், கரப்பான், ஜன்னி, துடைவாழை, பிளவை, பீநசங்கள், புண், புரை, மேகம், விப்

புருதி, விரணம், வெடித்த புண்களும் போம்.

கருஞ்செம்பைப்பூ-க்ஷயம், சலதோஷம், தலைக்குத்தல், பீநசம், வாதமும்போம். அரையாப்பு, கரையாதகட்டி, கொறுக்கை, பாம்பு, குன்ம வெள்ளை யொழுகு நோயும்போம்.

கருணைக்கிழங்கு-நற்கருணை, இரத்த மூலமும் போம். உடல்பருமன், கண்ணொளிவு, கிரந்தி, கோழைக்கட்டு, சூலை, தேகபலம், மந்தமும் உண்டாம்.

கருணைத்தண்டுக்குழம்பு - கபம், தாதுவிர்த்தி, முளை மூலமும் போம். சீரண தீபனமும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

கருநாவிஜன்னி-13-சுரங்கள், பிலிகம் புழுக்கள், புண்வல்லக்கட்டியும்போம்.

கருநாரை-சூடும்போம். பலம், மந்தவாதம், மூலமும் உண்டாம்

கருநெல்லி - சித்தர்கபம், 13-ஜந்நி வாதம், மயக்கம், தேகக் கருநிறமும்போம்.

கருநொச்சில்-காப்பான், தலைவலி, பேதி, மண்டைகுடைச்சல், வாதக்கடுப்பும் போம்.

கருந்தாணி-சிலேட்டுமம்போம்.

கருந்துளசி - இருமல், கிருமி, சலதோஷம், ஜன்னி, கேவல், சுவாசம், சூலை, மார்புச்சளி, ரூட்சை, விஷமும்போம்.

கருந்துத்தி-சூடு, பித்தமேகம், பித்த வாய்வும்போம்.

கருமாரிபீ - சோபம், க்ஷயம், மாந்தம், வாதமும் போம். தாது உண்டாம்.

கரும்பாரைநீர் - சுனை, நீர்சோபை, தாகம், நீர்கடுப்பு, பித்தசுரம், பெரும்பாடு, மடுசம், வாந்தியும் போம். அழகும் புத்தியும் உண்டாம்.

கரும்பின்ரசம் - ஆலை, ரசகம் பல் நோய்உண்டாம்.

கருவங்கம் - காரீயம், கண்ணோய், கிரந்தி, சூதவிரணம், குன்மம், சிலேட்டுமம், சீழ்க்கட்டு சுரம், சூலை, தாவரவிஷம், நீர்க்கட்டு, பிளவை, மேகம், வாதம், விஷங்கள், விரணமும் போம். உருவாகை க்ஷணம், கபம், கிருமி, சுரம், வாய்விரணம், கருவிரணம், செங்கிரந்திபோம்.

கருவிளநீர்-கபம், கரப்பான், கிருமிப் புண்ணும்போம். காந்தி மனப்பூரிப்புண்டாம்.

கருவூமத்தை - அரிப்பு, குட்டம், சுரம், வியர்ப்பும்போம். இரசகட்டு, மயக்கம், விந்துகட்டும் உண்டாம்.

கருவேப்பிலை - அருசி சுரம், பித்த சுரம், வயிற்றிரைச்சலும்போம்.

கருவேம்பு - விருத்தர்கள், பாலராவர்கள்.

கருவேல்பட்டை - சுரம், சூதவேக்காடு, நாவின்புண், பித்தமும் போம். பல்லிறுகல் உண்டாம்.

கருவேலதா - இரத்தம், ஊறுகரப்பான், கடுப்பு, பேதி, மாந்தம், வாதமும்போம்.

கருவெளவால்மீன் - சிறு சிரங்கு, செங்கரப்பான், நீரிழிவு, போகம், முலைப்பால், மேகமும் உண்டாம்.

கர்க்கடகச்சிங்கு - இரத்தக்கடுப்பு, இரத்த பித்தம், இரைச்சல், ஈளை, கபம், காசம், காலி லுண்டாகிற மேகம், கிராணி, கொதிப்பு, முக்கல், விரணம், வெப்பும்போம்.

கர்ப்பூரம்-எரிசுரம், கிருமி, ஜன்னி, க்ஷயதோஷம், சீதளவாதம், செவிநோய், தீப்பட்டபுண், பித்தம், மந்தம், முகநோய், வலிப்பு, வாந்தி, வாயுலேபனமும் போம். தீபனம் உண்டாம்.

கர்ப்பூரவள்ளி - இருமல், ஐயம், கண்ணோய், கபம், காசம், சுரம், புறநீர்க்கோவை, வைசூரி, வாதமும்போம். பகலில் நட்சத்திரங் காணும்.

கலப்புநெய் - பித்தம், பித்தவெட்கையும்போம். சுக்கிலம், பசிபலமும் உண்டாம்.

கலவக்கீரை-அரோசி, ஐயம், குடல்வாதம், திரிதோஷம், பித்தம், மலக்கட்டு, முக்கல்ரோகம், வாதமும் போம். அபானவாய்வு, சுத்தி, அன்னமேற்றுக் கொள்ளலும் உண்டாம். பத்தியத்திற்கு மாகும்.

கலியாணப்பூசிணிக்காய் - அஸ்திசுரம், உட்காய்ச்சல், நீருகல், நீர்க்கட்டு, பித்தசுரம், மருந்திடுதல், மேக வரட்சியும்போம். வாய்வு உண்டாம்.

எலுமிச்சங்காய் - பல்லின் பலமும் விந்தின் பலமும்போம். சலவை உண்டாம்.

கலைமான்கொம்பு - அஸ்தி மேகம், தாகம், திரிதோஷம், நேத்திர நோய், மார்புநோய், வெப்பமும் போம்.

கலைமானிறைச்சி - அழலை, அனல், பதம், பித்தவாதம், மேகப்பிடிப்பு, வெட்டையும்போம்.

கல்கோவை - கரப்பான், பீநசம், விஷம், வீக்கம், வெந்து விரிந்த புண்ணும்போம்.

கல்தாமரை - அயத் தாம்பரமும், குஷ்ட வியாதி யதிகமும் தேக பலமும் வீரிய விர்த்தியு முண்டாம்.

கல்துளசி-சிலேட்டுமகாசம், தாபசுரம், நரம்பிலெழும்பும் கட்டி, விஷமும்போம்.

கல்நார் - எரிவு, கடுப்பு, காசம், குடல்வாதம், சத்தி, சீழ்மேகம், தாகம், நீரடைப்பு, மந்தம், பல்நோய், வாதம், விந்து நஷ்டமும்போம்.

கல்பாசி-சரீரவேகம்போம்

கல்புவன்னி-காயசித்தியுண்டாம்

கல்மதம் - கண்டத்தின் பிணிகள், கிரிச்சரம், கல்லடைப்பு, பிரமியம், சதையடைப்பு, நீரடைப்பு, மேகமும் போம். விந்துவுண்டாம்.

கல்லத்தி-திடம் உண்டாம்

கல்லுண்டைச்சம்பா-புஜபல பராக்கிரமமுண்டாம்.

கல்லுப்பு - அரோசி, அஷ்டகுன்மம், ஐயமசதுர்த்தி, சூலை, தாகம், பித்தம், வாதமும்போம். பேதி உண்டாம்.

கல்லுருவிப் பூண்டு - உதிரக்கட்டு, புண்மேகம், விஷமும் போம். கட்டிக்கரையும். இரும்பு, சத்தியு முண்டாம்.

கல்வங்களின் குணம்-கறுத்தக் கல்லிலரைத்த மருந்து உடற்கின்பம் உண்டாம். சிவந்த கல்லிலரைத்தமருந்து தோஷம் போம். மஞ்சக் கல்லிலரைத்த மருந்து நோயை விலக்காது. வெள்ளைக் கல்லிலரைத்த மருந்து மருந்தின் பலம்போம்.

கலைக்கிழங்கு - கண்டமாலை, கிரந்தி, சீதம், சுரம், தினவு, மந்தம், மூலமும் உண்டாம்.

கவிழ்தும்பை - இரத்தக்கடுப்பு, மூலமும்போம்.

கவுதாரிக்கறி - சிக்கியமலம், சிலேட்டுமம், பித்தமந்தம், வாதமும் போம். தாதுவிர்த்தி, பலமும் உண்டாம்.

கழற்சிக்காய் - அண்டவாதம், குன்மம், பக்கசூலையும் போம்.

கழற்சியிலை-அழற்சி, அனல், குன்மம், சூலை, விரைவாதம், வெட்டையும்போம்.

கழுதைக்குளம்பு - குதிரை வலி போம்.

கழுதைசாணிபால்-இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலையும் போம்.

கழுதைத் தும்பை - அரையாப்புக் கட்டி, உதிரம், சீதக்கடுப்பு, வாய்வும்போம்.

கழுதைப்பால் - ஐயம், கரப்பான், கருங்கிரந்தி, சிரங்கு, சித்தபிரமை, சிழ்மேகம், சொறி, தழுதணை, நரம்பிலுண்டாகுங் கட்டி, பித்தம், புண்வாதம், விரணமும்போம். தித்திப்பாக விருக்கும்.

கழுதைமூத்திரம் - அபஸ்மாரம், இரைப்பு, கருங்கிரந்தி, காரம், சிருகுஷ்டம், பிள்ளைப் பிணி, புண்மேகம், வீரிய நஷ்டம், வெடியச்சரம், வெப்பும்போம்.

கழுநீர்ப்பூ-அரோசகம், எள்ளழல், கபமும் போம். குளிர்ச்சியுண்டாம்.

களகரந்தி-குஷ்டம்போம்

களாக்கொட்டி-அண்டவாதம், கெற்பசூலை, புண்கள், வாதம், விக்கமும்போம்.

களர்நிலநீர் - அஸ்திருடு, அரோசிகம், குருதி, ரோகம், சர்த்தி, தாகம், விக்கலும்போம். ஒழியாதமேகம், குடல் வெகுளல், புணர்ச்சி, புளிதம் உண்டாம்.

களாக்காய்-அரோசகம், இரத்தபித்தம், தாதுவிடாய், தாகம், பித்தம், வாந்தியும் போம். பசியுண்டாம். பழய பித்தம், மேகமும்போம். களசிதம், வாதமும் உண்டாம்.

களாப்பூ - கண்ணிற் படரும் உதிரப் படலம், கரும் படலம், சதைப் படலம், வெண்படலமும்போம்.

களாவேர் - அக்கினிமந்தம், ஐயம், தாகம், பித்தம், பிரசவ அழுக்குச்சிக்கல், வியர்வை, விஷமும் போம்.

களிம்பாக்கு - அரோசகம், பித்தமும் போம். தொண்டையிற் கோழைக்கட்டல், பேதி புண்டாம்.

களிப்பிரட்டைக்கீரை - ஐயம், கரப்பான், சிலந்திக்கடி, பித்தமும்போம். போகம் உண்டாம்.

கள்ளிப்பட்டை - நரம்பு சிலந்தி, நளிர் மார்பில் தங்கிய வாதம், வாதஜன்னியும்போம்.

கள்ளிப்பால்-கிருமி, குஷ்டம், சொறி, சிரங்கு, நமையும்போம். பேதி உண்டாம்.

கள்ளிமுளையான்-பித்தவாதம் போம். பசியும், புளிப்பும் உண்டாம்.

கறிப்பாலை-அனல், சுரம், பித்தம், மருந்துபலம், மேகம், வெட்டையும்போம். போகம் உண்டாம்.

கறிமுள்ளி-இருமல், இரைப்பு, ஈளை, கபச்சுரம், சுவாசம்போம்.

கறியுப்பு-பொருமல், மந்தம், வாயுவும்போம். அக்கினி, புஷ்டி, ஐயம், தீபனம், நீரிறங்கலும் உண்டாம்.

கறுத்தநீர் - இருமல், ஈளை, கரப்பான், காந்தல், சுரம், தாகம், தோஷம், நளிர், நெஞ்சுக்கட்டு, நெஞ்செரிவு, வாந்தி, வெப்பும் போம். அனல் உண்டாம்.

கறுத்தாட்டுத்தயிர்-இரத்தபித்தம், சிலேட்டுமம், சுவாசகாசம், சோகை, தாது, பாண்டு, பித்தம், வாதமுமுண்டாம்.

கறுப்பரிசி-கடிகள்போம்

கறுப்பறுகு-காசம்போம்

கறுப்புக்கடலை-காயசித்திஉண்டாம்

கறுப்புக்கம்பளி-மகத்தான வாதங்கள்போம்.

கறுப்புமணத்தக்காளி-அழல், குரல்கம்மல், வாய்வும்போம். பிள்ளைகளுக்காகும்.

கறுப்புவஸ்திரம் - அக்கினிமந்தம், காசம், பித்தவிஷம், வெப்பும் போம்.

கற்கண்டு-இருமல், உஷ்ணம், கபம், பல்லரணை, வாந்திபோம். விந்து உண்டாம்

கற்காந்தம்-காமாலை, கிராணி, சுரம், நீரிழிவு, பாண்டு, மாந்தம், மூலம், மேகமும்போம்.

கற்சுண்ணம்-அழுபுண்ணு, களங்கு, ஜன்னி, சிரநோய், தீப்புண், நமை, நீர்ச்சுருக்கு, நீர்பேதி, நெய்ச்சிக்கும்போம்.

கற்சுனைநீர்-சீதம்போம். உட்டினம் உண்டாம்.

கற்றலைமீன்-கரப்பான் போம். பதிவயிறிருமலும் உண்டாம்.

கற்றாழை-அரிப்பு, உன்மத்தம், எரிச்சல், கபம், கிரிச்சரம், குஷ்டம், குன்மம், சூலை, பெண்குறி நோய், மூலம், மேகமும்போம்.

காகொளி - சலமோடல், நீரேற்றமும்போம்.

காக்கைநோய்-காமாலைபோம்

காசினிவிதை - அருசி, சாந்தியும் போம்.

கலிதி-திப்பிலி

கலித்துருமம்-தான்றி

கலிமாரகம்—கிலுகிலுப்பை

கலிமாலகம்-அகில்

கலினி-திப்பிலி

கலினை-கொள்ளு, மிளகு

கல்லீரம்-முருக்கு

கலேயம்-மஞ்சள்

கலை-சாஸ்திரம்
வைத்தியசாஸ்திர வகை
இரசவாதம் தாதுவாதம்

கல்மலம்-அல்மதம்

கல்மூரசு-சப்பிட்டி, மரம்

கல்லகாரம்-பனைவெல்லம்

கல்லகாரம் - செங்குவளை, நீர்க்குளிரி

கல்லடிமூலம்-கற்கடக பாஷாணம்

கல்லாரம்-செங்குவளை, நீர்க்குளிரி

கல்லியம்-கள்
கல்லின்காரம்-கல்நார்
கல்லீயம்-நீலாஞ்சனம்
கல்லுகம்-பெருவாகை
கல்லுக் கலைத்தான் - பொன்னாங் கண்ணி
கல்லுருவி-ஓர்பூண்டு
கல்லுளி-பேய்க்களா
கல்லுணி-புல்லூரி, குறுவிச்சை
கலைநீராக்கி-மாமிசபேதி
கல்லொட்டி-நத்தை
கல்வீரியம்-அன்னபேதி
கல்வேகம்-கல்வீரியம்
கல்லவேதி-சகஸ்திரபேதி
கவரிறு-தணக்கு
கவரொழுசங்கம்-முட்சங்கம்
கவர்-வாழை
கவலை-நோய், கவலை, செந்தினை, ஓர் செடி.

கவணி-கந்தபாஷாணம்
கவாச்சி-வெள்ளைக்காக்கணம்
கவி-பூனைக்காலி
கவிகுருந்தம்-கந்தபாஷாணம்
கவித்தம்-கடுகுரோகிணி
கவியங்கம்-வெட்பாலை
கவிரம்-அலரி
கவிபாரம்-பூனைக்காலி
கவிர்-முருக்கு, முண்முருக்கு
கவுடதம்-வெட்பாலை
கவை-அகில்
கவ்வை-கள்
கழங்கு-கழற்சி, கழற்கொடி
கழலாபு-பீர்க்கு
கழல்-கழற்சி

கழற்கொடி - கழற்சிக்கொடி, கழற்சிக்காயை தமிழ்வைத்தியர்குளிர் சுரத்துக்கு மிகவும் உபயோகப் படுத்துகிறார்கள். சுரம் நின்றுபின்னிருக்கிறபலவீனத்துக்கும் கழற்சிவேரின் பட்டையை யுபயோகப் படுத்துகின்றார்கள்.

இது மிகுதியாய்த் தமிழ் வைத்தியரால் குளிர்சுரத்துக்கு நேரமொன்றில் 10 - கிறெயின் வீதம் தினம் மூன்றுநேரங் கொடுக்கப் படுகின்றது. இதினுடன் நல்ல மிளகும் காயமும் சேர்த்துக் கொண்டால் அதிக குணத்தைக் கொடுக்கிறதாயிருக்கும். மேற்கூறிய சுரத்துக்கும் சுரம் நின்றபின் இருக்கிற பலவீனத்துக்குங் கழற்சிவேரின் தோல் 10-கிறெயின் வீதம் ஒருவேளைக்குக் கொடுத்தால் காயிலும் அதிக குணமாயிருக்கும்.

கழற்சிபகம்-அதிவிடையம்
கழற்பதி-பெருங்குமிழ்
கழாய்-கழுகு
கழாய்வனம்-சிறுகீரை
கழிச்சல்-வயிற்றுக்கழிச்சல்
கழுசி-சிந்தில்

கழுதைப்பால் - பைத்தியம், மதிமாறாட்டம், பித்தம், இந்தவியாதிகட்குச் சுதேச வைத்தியர் கொடுக்கிறார்கள். வெண்குஷ்டம் குட்டம், குழந்தைகட்கு வருகிற கரப்பான் இவைதீர நாளொன்றுக்கு ஓரளவாக இரண்டுவேளையுங் கொடுக்கப்படுகிறது.

கழுநீர்-குவளை, செங்கழுநீர், செங்குவளை.
கழுமுள்-மாதளை
கழை-கரும்பு, மூங்கில்
கள-களா

களசுவேதம்-அதிவிடயம்
களஞ்சி-குதபாஷாணம்
களந்தான்றி-தான்றிக்காய்
களவு-களாச்செடி
களா-ஓர்செடி, அதாவது, சிறுகளா, பெருங்களா, சொத்தைக்களா.

களாவகம்-சிறுகீரை
களி-கள்,
களிகம்-வாலுளுவை

கள் - மது, கள்ளுப் போல்டஸ் செய்வதற்கு வேண்டிய மட்டும் அரிசிமாவை அதற்குப் போதுமானதாய் உடனிறக்கின கள்ளை விட்டுக் கலக்கிக் கொஞ்சமாய்த் தீயெரித்துக் கிண்டிப் பொங்கத் துவங்கினவுடன் இறக்கி ஒரு சீலையில் தடவிவைத்துக் கட்டவும் இது பிளவைகளிலும் வேறு புண்களிலும் நின்று ஆணிச்சீழ் அல்லது அசறைப் போக்குவதற்கு உபயோகமுள்ளதாயிருக்கிறது. இவற்றைப் போக்கின பின்பு புண்களில் ஆறும்படியான குழிகள் காணும்பொழுது மாவு போல்டசாவது மெழுகு பிளாஸ்திரியாவது இடலாம்.

கள்ளச்சி-பூவலை, பூநீறு
கள்ளாம்பல்-வெள்ளாம்பல்
கள்ளி - ஓர்செடி, அதாவது, ஆட்டங்கள்ளி, திருகுகள்ளி, இலைக்கள்ளி.
கள்ளிக்காக்கை-செம்புகம்
கள்ளிப்பட்டை - தோலுக்கு வர்ணம் போடுஞ் சேர்மானத்திலொன்றாயிருக்கின்றது.

கள்ளிமடையான்-ஓர்கள்ளி
கள்ளிமுலையான்-ஓர்கள்ளி
கள்ளு-கள்
கறி-மிளகு
கறியாமணக்கு-பறங்கியாமணக்கு
கறுப்பி-எவச்சாரம், காகபிபிளை, மீனம்பர்.

கறை-இரத்தம்
கற்பம்-பலவகைகூடிய மருந்து
கற்றமாரணம்-கருஞ்சீரகம்
கற்சூரம் - கர்ச்சூரம், கழற்சி, பேரீந்து.

கற்பக்காம்-கோழித்தலைக் கந்தகம்
கற்பு-முல்லை
கற்பூரம் - கர்ப்பூரம், பொன்னாங்காணி.

கற்பூரவள்ளி - ஓர்பூண்டு, இந்தக் கற்பூரவள்ளியின் சாற்றில் கற்கண்டு தூள்சேர்த்துத் தொண்டைக் கம்மலுக்குச் சுதேச வைத்தியர் கொடுக்கிறார்கள். மேலுமிதன் சாற்றை மற்றுஞ் சில பூண்டுகளின் சாற்றோடு நல்லெண்ணெயிற்கலந்து குளிர்ச்சிக்காகத் தலையில் தேய்க்கச் செய்கிறார்கள்.

கற்றாமரை - ஓர் தாழை, கற்றாழைச் சோற்றைத் தண்ணீரில் நன்றாயலம்பிக் கொஞ்சங் கற்கண்டு சேர்த்துக் குளிரப் பண்ணுகிற வெம்மை யாற்று மருந்தாகக் கொடுக்கப்படுகிறது. அந்தப்படி யலம்பிய சோற்றுடன் பொரித்த படிகாரஞ் சேர்த்துச் சலவைத்துண்டு வஸ்திரத்தில் பொட்டணங் கட்டியொற்றுதல், கண்ணோய்கட்கு

மிகவும் பிரயோசனமான பரிகாரமென்று சுதேச வைத்தியர் யோசிக்கிறார்கள்.

கனகமிளகு-வால்மிளகு
கனகாரியம்-ஊமத்தை
கனங்காய்-ஓர்மரம்
கனசாரம்-கற்பூரம்
கனத்தி-வைப்பரிதாரம்
கனம்-கோரைக்கிழங்கு
கனலி-கொடுவேலி
கனல்பேதி-சகஸ்திரபேதி
கனவுமூலி-விஷமூங்கில்
கனற்சூர்மை-வளையலுப்பு
கனற்சிலை-மந்தாரச்சிலை
கனி-பயம்
கனோபலம்-ஆலங்கட்டி
கன்மதம்-கல்மதம்
கன்மலி-ஏலம்
கன்றுபுக்கான்-ஓர்பூண்டு
கன்னக்கிரந்தி-கன்னப்புற்று
கன்னச்சூலை-ஓர்நோய்
கன்னப்புற்று-ஓர்நோய்
கன்னப்பிளவை-ஓர்நோய்
கன்னல்-சருக்கரை, கரும்பு
கன்னவகம்-சிறுகீரை
கன்னி - கற்றாழை, காக்கணம், காவிளை.
கன்னிகம்-மணத்தக்காளி
கன்னிகாரம்-கோங்கு
கன்னிறம்-இசங்கு
கன்னுறுகம்-சிறுகீரை

கா

காகதுண்டம்-அகில்
காகதேரி-மணத்தக்காளி
காகத்துரத்தி-ஆடுதொண்டை, காத்தொட்டி.
காகநாசி-பாற்சோற்றி.
காகமிளை-கருமிளை

காகபாஷாணம் - ஓர்வித வைப்புப் பாஷாணம்.

காகம்-கீரி
காசரி-திப்பிலி
காசித்தம்-குறிஞ்சா
காசித்திரம்-குறிஞ்சா
காகுராசி-புடோல்
காகோடி-எட்டி
காகோடகி-வாலுளுவை
காசோதரம்-பாம்பு
காகோலம்-அண்டங்காக்கை

காகோளி - அசோகு, கொடியரசு, தேள்கொடுக்கி.

காக்கணம் - ஓர்கொடி, அதாவது, கருங்காக்கணம், வெள்ளைக் காக்கணம், குத்துப்பாலை.

காக்கம்-குறட்டை, கொவ்வை

காக்காய் கொல்லிவிரை-ஓர் விதை இது மயக்க முண்டாக்குகிற காய் தென்னாட்டைக் காட்டிலும், திருவான்கோர் தேசத்திலும் விஸ்தாரமாய் விளைகிறது. தீராத நாட்பட்ட புண்களுக்கும் புழுமேய்ச்சல், படர்தாமரை, தேமல், செங்கிரந்தி இவைகட்கும் மேற்பூச்சாக உபயோகப் படுத்தப் படுகிறது. இவை ஆர்க்கப் பொடிசெய்து கொஞ்சங் காயவைத்து சிற்றுமணக் கெண்ணெயிற் கலந்து பூசுகிறார்கள்.

காக்காய்ச்சோளம்-ஓர்சோளம்
காக்காய்ப்பாலை-ஓர்பாலை
காக்காய்மூக்கு - சருமுகில் பாஷாணம்.

காக்காய்ப்பூ - ஓர் பூண்டு, இதன் இலையில் சாற்றில் சருக்கரை சேர்த்து மேக வெள்ளைக்குக் கொடுக்கிறார்கள்.

காக்குறட்டை-கறுத்தகாக்கணம்
காக்காய்வலி-ஓர்நோய்
காங்கையன் - வைப்பு, நீலப்பாஷாணம்.

காசம் - கற்பாஷாணம், ஓர் நோய் அதாவது சுவாசகாசம், மந்தாரகாசம், இரத்தகாசம், நீலகாசம், சிலேஷ்மகாசம், பித்தகாசம், மந்தகாசம், வாதகாசம், பாலகாசம், ஜீரணகாசம், கர்ப்பகாசம், கோழைகாசம்.

காசறை - கஸ்தூரிமிருகம், மணி, மயிர்ச்சாந்து.
காசா-காயா, நாணல்
காசாம்புவர்ணன்-துரிசி, கச்சாலம், காய்ச்சற்பாஷாணம்.
காசி-சீரகம்
காசி-சீரகம், ஓர்வகைத் தாதுஉப்பு

காராயி-அடியீரல்
காந்துவி-மண்ணீரல்
காடிசம்-வெண்காரம்
காரம்-சினக்காரம்
காலிதம்-படிகாரம்
காரகம்-இந்துப்பு
காளவாயன்-கழுதை
காக்கைமல்லி-நாணு
காளி-மணித்தக்காளி
காந்தி-விட்டுணுக்கரந்தை
காட்டகத்தி-வீழி
காரி-கண்டங்கத்திரி
காரம்-வெண்காரம்
காய்-சாதிக்காய்
காணி-பொன்னாங்காணி

காவட்டை-மாந்தப்புல்
காரிவிளை-கண்டங்கத்திரிவித்து
கார்த்திகைக் கிழங்கு - வெந்தோன்றி.

காமர்-அழகு
காய்-மிளகு
காசி-காசிகும்பி
காரம்-முப்புச்சுண்ணம்
காரம்-செயநீர், வெண்காரம்
கார்த்திகைக்கிழங்கு-கலப்பைக்கிழங்கு.
காஞ்சனம்-பொன்
காஞ்சினி-மஞ்சள்
காமப்பால்-முலைப்பால்
காயவள்ளிக் கிழங்கு - வெற்றிலைவள்ளி.
காசிரோர்த்தம்-ஆடுதின்னாப்பாலை, வறட்சுண்டி.

காசு-கோழை, காசுக்கட்டி, மருந்துக்கு எடுக்கப்பட்ட காசுக்கட்டி துப்பரவாயும், கரு நிறமாயும் எளிதாயும் மையத்தக்கதுமாயிருக்கவேண்டும்.

வயிற்றுப்போக்குக்கு சுரமில்லாவிட்டால் 10-முதல் 15-கிரெயின்வரை காசுக்கட்டியைப் பொடித்துத் தேனிலாவது வெல்லத்திலாவது கலந்து 8-அல்லது 10-கிரெயின் கருவாப்பட்டைத் தூளுடன் சேர்த்துப் பிராயமானவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இதுவுந்தவிர 6 - டிராம் காசுக்கட்டிப்பொடியும் 1-டிராஞ் சனைத்த கருவாப்பட்டையும், அரைப்புட்டி கொதிக்கிற சலத்தில் இட்டுவைக்கவும், இரண்டு மணிநேரங்கழித்து ஆறினபின் வடிகட்டித் தினம் மூன்றுவேளை

யாக ஒன்றரை அல்லது 2-அவுன்சுவீதம் கொடுக்கவேண்டும். படுக்கைச் சமயத்தில் ஒரு அபின் மாத்திரையுங் கொடுக்கலாம் குழந்தைகளின் வயிற்றுப்போக்குக்கு 3 - அல்லது 4-கிரெயின் காசுக்கட்டியை நுணுக்கி அதற்குச் சமனாகக் கறுவாப்பட்டைத்தூளுஞ் ,சேர்த்துக் கொடுத்தால் குணப்படும்.

இரச ஔஷதஞ் சாப்பிட்டதினால்உண்டாகிற உமிழ்நீர்ச்சுரப்புக்கும் ஈறில் உண்டாகும் புண்களுக்கும் ஒரு துண்டு காசுக்கட்டியை வாயிலிட்டு வைத்துக்கொள்ளவேண்டும். இப்படி தினம் இரண்டு மூன்றுதரஞ் செய்யலாம். தொண்டை நோவுக்கும் நல்லதாயிருக்கும். மிகுந்த நாற்றமான பழுப்புடனேயிருக்கிற பழைய புண்களுக்கு 1-திராம் காசுக்கட்டியை 1-அவுன்ஸ் மெழுகு பிளாஸ்திரியில் சேர்த்து இடவேண்டும். இதுவுமன்றி 6-திராம் காசுக்கட்டியை அரைப்புட்டிக் கொதிக்கிறசலத்திலிட்டு ஆறினபின் வடிகட்டிப் புண்களைக் காலையிலும் சாயந்தரமுங் கழுவினாலும் குணமுண்டாகும். முலைக்காம்பில் வரும் ரணங்களுக்கும் நன்று. முலைக்காம்பில் ரணமிருக்கும், ஸ்திரீகள் பிரசவிக்கிறதற்கு இரண்டு மாதத்துக்குமுன் முலைக்காம்புகளிலும் முலைகளிலும் மேற்படி தண்ணீரைத் தொட்டுவைத்தால் குழந்தை பால்குடிக்கிற சமயமாகும்போது ரணம் உண்டாகாது.

பல்குழிந்தும் அதுக்குள் சதை வளர்ந்துமிருக்கிற தலைவலிக்கு ஒரு துண்டு காசிகட்டியை அந்தக் குழியில் திணித்தாலும் வாயிலிட்டு ஒதுக்கிக் கொண்டாலும் சுகத்தைக்கொடுக்கும்.

காசை-காயா, நாணல்
காச்சுரை-புளிச்சக்கீரை
காஞ்சம்-நீலாஞ்சனக்கல்
காஞ்சனம்-புன்கமரம்
காஞ்சனி-மஞ்சள்

காஞ்சா-கஞ்சா, இதிலிருந்து பங்கி மாஜிம் செய்யப் படுகின்றன. இதன் இலைகள் அல்லது சடை புகையிலையோடு சேர்த்துப் புகை பிடிக்கப் படுகின்றதனால் அதிக இலாகிரி யுண்டாயிருக்கும்.

இது வயிற்றுளைவு நோய்க்குச் சிலவேளை உபயோகப்படுகிறது. இதனோடு மஞ்சள், வெங்காயம், காய்ந்த நல்லெண்ணெயில் சேர்த்து வீக்கமும் நோயுள்ள மூலவியாதிக்கு உபயோகப்படுத்தலாம்.

காஞ்சி-ஓர்மரம்
காஞ்சிகா-எட்டி
காஞ்சிரம்-காஞ்சிரை, எட்டி
காஞ்சினி-மஞ்சிட்டி
காஞ்சொறு-காஞ்சொன்றி
காடி-ஓர்மருந்து, அதாவது, காடிக்கூழ், காடிச்சோறு, சரக்காடி, கஞ்சிகள், ஊறுகாய்.

காடியைச் சுதேசிகள் மேல்பூச்சு வற்றப் பண்ணுகிற பற்று மருந்தில் சேர்க்கிறார்கள். அதில் நல்லெண்ணெய் சேர்த்துக் குளிர்ச்சிக்குச் சிரசில் தேய்த்துக் கொள்ளப் படுகிறது. முக்கியமாய் உக்கிரமான தலைநோய்க்குத் தேய்த்துக் கொள்ளப் படுகிறது. காடி பனங்கள்ளு தென்னங்கள்ளு இவைகளிற் செய்யப்படுகின்றது.

காடிக்காரம்-நெருப்புக்கல்

காடு-ஆரணியம்
காட்டகத்தி - காட்டவரை, காட்டாத்தி, காட்டாமணக்கு, காட்டுக்கஞ்சான்கோரை, காட்டுக்கதலி, காட்டுக்கருணை, காட்டுக்கருணை, காட்டுக்காய்ச்சுரை காட்டுக்காய், வள்ளி, காட்டுக்காணாவாழை, காட்டுக் கிராம்பு, காட்டுக்கீரை, காட்டுக்குருந்து, காட்டெலுமிச்சை, காட்டு கூந்தல், காட்டுக்கொஞ்சி, காட்டுக்கொள்ளு, காட்டுக் கோரை, காட்டுக்கோழி, காட்டுச்சீரகவள்ளி, காட்டுத்தகரை, காட்டுத்தலை, காட்டுத்துத்தி, காட்டுத்துவரை, காட்டுத்துளசி, காட்டுநாரத்தை, காட்டுநெல்லி, காட்டுப்பசு, காட்டுப்பருத்தி, காட்டுப்பன்றி, காட்டுப்பாகல், காட்டுப்பிள்ளை; காட்டுப்புளிச்சை, காட்டுப்புளிச்சைமரம், காட்டுரு, காட்டு மந்தாரை, காட்டுமரி, காட்டு மல்லிகை, காட்டுமனுஷன், காட்டுமா, காட்டுமாவிரை, சாரப்பருப்பு.

காட்டுமிருகம், காட்டுமுருக்கு, காட்டுமுருங்கை, காட்டுமுன்னை, காட்டுமொச்சை, காட்டவரை, காட்டுவள்ளி, காட்டுவாழை, காட்டெருமுட்டை, காட்டெருமை, காட்டெருமைப்பால், கூகைநீர், எருக்கம்பால், கள்ளிப்பால், அங்குசரோசனம்.

காட்டெள்ளு-காட்டேரி
காடைப்புடம்-சிறுபுடம்
காட்டகத்தி-வீழி
காட்டணம்-பெருங்குமிழ்
காட்டத்தி-பேயத்தி
காட்டிலம்-வாழை

காட்டுக்கடலை - ஓர் செடி, இதனிலையையும் உலர்ந்த மிளகையும், இடித்துத் தூளாக்கிச் சருக்கரையிற்கலந்து இருமல் வியாதிக்கு மலையாள தேசத்தார் உபயோகிக்கிறார்கள்.

காட்டுக்குருந்து-காட்டெலுமிச்சை
காட்டுச்சீரகவள்ளி-காயவள்ளி
காட்டுநாரத்தை-பெருங்குறந்து
காட்டுமுருங்கை-மாவிலிங்கு
காட்டுமாந்தரை-காட்டாத்தி
காட்டுவெள்ளரி-பேய்க்கொம்மட்டி

காட்டெருமைகள்ளி-எருக்கு, சதுரக்கள்ளி.
காணம்-கொள்ளு
காண்டகம்-நோய், நிலவேம்பு, சாகாண்டபாஷாணம்.
காண்டம்-சீந்தில், நிலவேம்பு

காண்டாமிருகரத்தம் - ஓர் மருந்து இதை சுதேசவைத்தியர் 'தும்மல் உவான், என்கிற வஸ்துவைக் காண்டாமிருக இரத்தமென்று பிசகா யெண்ணிக் கொள்ளுகிறார்கள் தமிழ் வைத்தியரும் அகீம்களும் அதை கலப்பு வஸ்துவென்று யோசிக்கி

றார்கள். உண்மையான காண்டாமிருக இரத்தமல்ல ஆனாலிரண்டிற்கும் பேதம்பிரிக்கக்கூடாமையாயிருக்கிறது. இவ்விடத்தில் காண்டாமிருக இரத்தமென்று கடைகளில் விற்கப்படுகிறது. காஸ்கோபாரண்கோ என்கிற இடங்களிலிருந்துகொண்டுவரப் படுகின்றது. மேற்கண்ட இடங்களிலிருந்து வரப்பட்டது மாத்திரம் நேர்த்தியானதென்று சிலர் யோசிக்கிறார்கள். சோகம், இயக்கம், சோர்வு, மூர்ச்சை, இவைகட்கு இது சாராயத்தி விழைத்துக் சிரசிலும் கன்னப் பொறிகளிலும் பற்றுப்போடப்படுகின்றது.

காண்டிபம்-சரகண்டபாஷாணம்
காதலம்-ஆலமரம்
காதம்-கள்
காதாங்கி-பாற்சோற்றி
காதி-மிர்தபாஷாணம்

காந்தம் - ஓர்கல், அரக்குகாந்தம், உருளைக்காந்தம், ஊசிக்காந்தம், கற்காந்தம், காந்தக்கல், காந்தத்தின் சத்துரு, காந்தபாஷாணம், காந்தமணி, காந்தமண், செம்மண், சந்திரகாந்தம், சூரிய காந்தம், பலகைக்காந்தம்.

காந்தள்-கார்த்திகைப்பூ, வெண்காந்தள், சவுக்காரம்.
காந்தாளிகம்-சின்னிமரம்
காந்தி-காவிக்கல், உஷ்ணம், சிலாசத்து.
காந்தியதிகமேனி-காவிக்கல்
காந்தியோனி-சிலாமகம்
காந்துகம்-வெண்காந்தள்
காமப்பூ-மதனகாமப்பூ
காமம் - இந்திரியம், காமப்பூ, சாமமரம், பனை.
காமரசி-நெருஞ்சில்
காமரம்-அகில்
காமரி-புளிநரளை
காமரீசம்-புல்லூரி
காமனை-சிருகிழங்கு
காமன்-திப்பிலி, வண்டு
காம்பிரம்-முருக்கு
காம்பு-பூசணி, மூங்கில்
காம்போதி-குதிரைவாலி
காம்போசி-குன்றி
காயசித்தியாளோன்-சூதபாஷாணம்
காயசித்தியுப்பு-அமரியுப்பு
காயசித்திச்சுண்ணம் - கற்பூரசிலாசத்து.
காயத்திரி-கருங்காலி
காயத்தையிருத்தி-பூவழலை
காயத்தையுருக்கி-அஸ்திபேதி
காயம்-பெருங்காயம், மிளகு, வெங்காயம்.

இது இந்தியாவில் ஏறக்குறைய எல்லாக் கடைகளிலும் நற்சரக்காய்க் கிடைக்கும். ஔஷதத்துக் கிசைந்தது. ஈரமாயும் வெள்ளுள்ளி வாசனையுடையதாயு மிருக்கவேண்டும். அதை மாத்திரை செய்தாவது ஜலபாகத்திலாவது உள்ளுக்குக் கொடுக்கலாம். ஜலபாகம் எப்படியெனில், 5-திரும் காயத்தை அரைப்புட்டி சலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் முழுதும் நன்றாய் உறைத்துக் கலக்கி அது ஒரு விதக்கட்டிப் பால்மாதிரி பக்குவம் வந்தவுடன் வடிகட்டி வைத்துக்கொண்டு அரை அவுன்ஸ் முதல் 1-அவுன்ஸ் வரையும் பிராய மானவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

சூதகவாயு மூர்ச்சை நெடுநாளான இருமல், சுவாசகாசம், வாயு கடினமான விக்கல், குன்மவலி இவைகளுக்கெல்லாம் மேற்சொன்ன காயச்சலத்தில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக் கொருதரம் ½ - அவுன்ஸ் முதல், 1-அவுன்ஸ்வரை தனித்தாவது, 2-அவுன்ஸ் சுக்குக் குடிநீரிலாவது உள்ளுக்குக்கொடுக்கலாம். வலி மிகவும் கடினமாயிருக்குமாகில், ¼-கிரெயின் அபினைக் கூடச்சேர்த்துக் கொள்ள வேண்டும். மேற்கூறிய மருந்தினளவின் பிராயமானவர்களுக்கேயாம்.

குழந்தைகளின் வாயுக்கும் குன்ம வலிக்கும் மேற்சொன்ன காயச்சலத்தில் 1-தேக்கரண்டி, அல்லது 2-திரும் எடுத்துக் கொஞ்சங் கறுவாப்பட்டை தூளிலாவது ஓமக் குடிநீரிலாவது கொடுக்கவேண்டும். தேகம் வெளிறிப் பலவீனமான குழந்தைகளுக்குச் சன்னியிழுப்பு உண்டாகில் மேற்படி மருந்தில் 1-திரும்வீதம் ஒன்றிரண்டுமணி நேரத்துக்கு ஒருதரம் கொடுத்தால் சாந்தப்படுத்தும்.

குழந்தைகளுக்கு நெடுநாளாயிருக்கும் இருமலுடன் சுரமிருந்து மாறிப் பலவீனமும் இருமலுமாத்திர மிருக்கிலும், இது பிரயோசனப்படும். 1-அல்லது, 2-கிரெயின் காயத்தைக் கொஞ்சம் சலத்தில் பால்நிறம் வரும் வரையும் அரைத்துக் கலக்கி வடிகட்டி இரண்டு மூன்றுமணி நேரத்திற்கு ஒருதரம் இரண்டு வயதான குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அதிக வயதுள்ள குழந்தைகளுக்குக் காயத்தில் இடையைக் கிரமமாய் அதிகப் படுத்திக் கொள்ளலாம்.

சுரமில்லாமலிருக்கிற பழகின கக்கிருமலுக்கு முன்சொன்ன மருந்தில் 1-தேக்கரண்டி வீதம் தினம் நாலு ஐந்துதரம் கொடுக்கவேண்டும்.

திரிகாயம் - காயத்திரி அதாவது, பெருங்காயம், மிளகு, வெங்காயம்.

காய்-கனி, காய்வள்ளி, காய்வேளை.
காய்ச்சல்-சுரம்.

அகோரக் காய்ச்சல், அச்சக்ர காய்ச்சல், அஸ்திக் காய்ச்சல், உட் காய்ச்சல், கணக் காய்ச்சல், காமக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், சிலேஷ்மக் காய்ச்சல், சுரக்காய்ச்சல், தோஷக்காய்ச்சல், நாவறட்சிக்காய்ச்சல், பித்தக்காய்ச்சல், பெருவாரிக் காய்ச்சல், மந்தக் காய்ச்சல், மாறல்காய்ச்சல், முறைக்காய்ச்சல், வறைக்காய்ச்சல், வாதக்காய்ச்சல், விஷக்காய்ச்சல், விடாக்காய்ச்சல், விடுக்காய்ச்சல் வைசூரிக்காய்ச்சல், தாபசுரம், தொத்துக்காய்ச்சல், கடுஞ்சுரம், இடைக்காய்ச்சல், ஒட்டுக்காய்ச்சல், இராக்காய்ச்சல், மூன்றுமுறைக்காய்ச்சல், நாலாமுறைக் காய்ச்சல், தினக்காய்ச்சல், சீதசுரம், அரோசிகசுரம், தண்டுசுரம், சிறைச்சாலைச்சுரம், சலதோஷசுரம், வேர்வைசுரம் இரவு பயங்கரமான சொப்பனத்தி

லுண்டாகும் சுரம், அம்மைவார்த்த சுரத்தினு லுண்டாகும் சுரம், காமாலைசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல், அழலைசுரம், முலைவாதக்காய்ச்சல், பால் பெயர்ச்சிக்காய்ச்சல், பிள்ளைப்பெற்றக் காய்ச்சல்.

காய்ச்சுக்கட்டி-காசுக்கட்டி
காய்ச்சுக்குப்பி-ஓர்சிசா
காய்ச்சுண்டி-காய்ச்சுக்கட்டி
காய்ச்சுப்பு-சலட்டுப்பு
காய்ச்சுலவணம் - காய்ச்சிச் சாரம், வளையலுப்பு.
காய்ச்சுரை-புளிச்சக்கீரை, காட்டுக் காய்ச்சுரை.
காய்ச்சுறுக்கு-புளிச்சக்கீரை
காய்ஞ்சொறி-ஓர்பூண்டு, எருமைக் காய்ஞ்சோறி, கறுகாய்ஞ்சோறி, கறுப்புக்காய்ஞ்சோறி, பூனைக்காய்ஞ்சோறி.

காய்த்தனியம்-முசுகுட்டை
காரணசத்தி-எவக்ஷாரம்
காரணன்-பிரதபாஷாணம்
காரம்-காரீயம், மரவயிரம்
காரவல்லி-பாகல்
காரன்-சோரபாஷாணம்
காரி-ஆவிரை
காரிக்கூள்-ஓர்காளன்
காரிகை-கொடுவேலி
காரியக்கடிசு-கற்பூரஷாணம்
காரிரத்தம்-ஆடுதின்னாப்பாளை
காரீயம்-ஈயம்
காருச்சிவல்-கடற்பாசி
காருடம்-மருக்காரை, கழிப்புடோல்
காருராசி-கழிப்புடோல்
காருன்னி-ஆடுதின்னாப்பாளை
காரை-ஓர்செடி, குத்துக்காரை, பெருங்காரை, மதுக்காரை, மருக்காரை, பூங்காரை.

கார்-கார்நெல்
கார்கோணி-தேள்கொடுக்கி
கார்கோணி-கோரைப்புல்
கார்கோழி - கருங்கொள்ளு, கருஞ்சீரகம்.
கார்ப்பாசம்-பருத்தி
கார்ப்பான்-கையாந்தகரை
கார்ப்போகரிசி-ஓர்பூண்டு
கார்வணி-கையாந்தகரை
காலகம்-செங்கொட்டை
காலன்-காந்தபாஷாணம்
காலாயுதம்-சேவல்
காலி-காலியாந்துவரை, காட்டுமுருக்கு, புன்முருங்கை.
காலேயம்-கள், அகில், மோர், கஸ்தூரிமஞ்சள்.
காவகர்-செங்கொட்டை
காவட்டம்புல்-மந்தப்புல்
காவற்கலி-வாழை
காவன்-சிலந்திப்பூச்சி
காவா-காட்டுமல்லிகை

காவாளை - காட்டுமல்லிகை, காய்வேளை.

காவி-கருங்குவளை, கருங்காலி, அவுரி, மருந்துண்டை, கறுப்புச்சாயம்.
காவிருளை-காய்வேளை, கொழிஞ்சி
காவீரம் (காவீரம்)-அலரி.
காளகம்-மருக்காரை
காளம்-அவுரி, எட்டி
காளி-கக்கரி, எட்டிமரம்
காளிகம்-மணத்தக்காளி
காளிந்தம்-ஏலம்
காளிந்தி-வாகைமரம்
காளினி-கத்தரி
காறடி-மருக்காறை
காறல்-காறக்கொட்டி
காறற்கொட்டி-ஓர் மருந்துப்பூண்டு
காற்பாசம்-பருஞ்செடி

கானகம்-கருஞ்சீரகம்
கானகத்தூமம்-கற்பாஷாணம்
கானகத்தேறு-மஞ்சள்
கானமௌவல்-காட்டுமல்லிகை
கானவிருக்கம்-பாதிரி
கானனுசாரி-நன்னாரி
கானவிந்திரன்-கொடுவேலி
கானுவேளை-ஓர்பூண்டு
கானிலம்-கொடுவேலி
கான்மரம்-ஆலமரம்
கான்மா-பன்றி

காடிநீர் - புளித்தசலம், அசீரணம், சிலபிணிகள், பித்தம், பேதிமயக்கமும்போம். அவிழ்தமுறிவும் உண்டாம்.

காடைக்கண்ணிசாதம் - ஐயம், வாதமும் போம். எரிவு, பித்தம், வாதமும் உண்டாம்.
காடைக்கறி - சோபை, பலவித நோயும் போம். பத்தியத்திற்காகும்.
காடைச்சம்பா - அனல், மேகமும் போம். பலம் உண்டாம்.
காடைச்சாறு - கண்பிணிகள், கண்புண், பித்த வாதமும் போம். உடல்பருமன், மருவும் உண்டாம்.
காட்டாத்திப்பூ - உதிரக் கடுப்பு, உதிரக்கழிச்சல், பேதி, மேகமும்போம்.
காட்டாத்திமரம் - அதிசாரம், காசம், மந்தம், விஷமும்போம். அதிமோகம் உண்டாம்.
காட்டாமணக்கப்பால் - இரணம், கட்டி, குன்மம், வெள்ளையொழுகலும்போம்.
காட்டாமணக்கிலை - உலர்த்தல், உள்ளமூலம், ஒட்டுமேகம், கட்டி, கபம், கரப்பான், குன்மம், சிரங்கு, தலைநோய், புவிகம், வாதம், விரணம், வெடிசிரந்தி, வெட்டையும் போம். விந்தும் உண்டாம்.

காட்டுக்கருணை-சுரதோஷம், முளைமூலம், மேகமும்போம். கரப்பான், தீபனமும் உண்டாம்.
காட்டுக்கோழிக்கறி - அதிக பலம் உண்டாம்.
காட்டுச்சதகுப்பை - கடிகள், குட்டங்களும் போம்.
காட்டுச்சீரகம்-கருஞ்சீரகம், குன்மவாதம், கைகறுப்பு, பித்தம், மேகமும்போம். தேக குளிர்ச்சி உண்டாம்.
காட்டுத்துளசி-இரைப்பு போம்.

காட்டுப்பழுபாகல்-காசம், பித்தம், வாதமும்போம். பசி, போசன விருப்பமும் உண்டாம்.
காட்டுப்பன்றி-குடல்வாதம், குதநெகிழ்ச்சி ரோகம், சருகில் ரோகம், வாதமும்போம். கிரந்தி, சீதம், விதைக்கடியும் உண்டாம்.
காட்டுப்பிராயம்பால் - பல்நோய் போம்.
காட்டுமல்லிகைவேர் - பேகரம், தாகம், நாவறட்சி, மந்தம், பேதியும்போம்.
காட்டுமாங்காய்-தாபம்போம்.
காட்டுமுருங்கை - மூலம், ஐயம், கொடியவிஷம், ஜந்நி, பிரமிச்சும்போம். உட்டினம், கண்குளிர்ச்சி, கசப்பும் உண்டாம்.
காட்டுவள்ளி - உடலூறல், சீயக்குளுமை, பலமும் உண்டாம்.
காட்டேலம் - அதிசாரம், அருசி, சிலேட்டுமம், இரத்தவாந்தி, பித்தமும்போம்.

காண்டாமிருகக் கொம்பு - தாகம், தோஷம், வெள்ளை விழலும் போம். தேகமிறுகல் உண்டாம்.

காந்தம்-இரும்புக்கு சத்துரு, கண்ணோய், காமிலமேகம், குன்மம், சீதம், சோபை, திரிதோஷம், நீராமை, பாண்டு, பிரமியம், பெருவயிறு, வெட்டையும் போம். ஆயுசு, பலம், பசியும் உண்டாம்.

காந்தசிந்தூரம்-அதிசாரசுரம், கபம், காசம், காமாலை, சுவாசம், பாண்டு, வயிறுளைச்சல், வாந்தியும்போம்.

காந்தசிந்தூரபத்தியம் - அகத்திக்கீரை, உப்பு, எள்ளு, கடுகு, கத்திரிக்காய், கொத்தவரைக்காய், கொள்ளு, பாவக்காய், புளிமாங்காய் ஆகாது.

காய்ச்சுகஞ்சியன்னம்-கடினைகஞ்சி பித்த வெப்பும்போம். இலேட்டுமம், தேககாந்தி, பருத்த தேகமும் உண்டாம்.

காய்ச்சும்பாலுக்கு - நீரளவைக்கூறல், பசு, வெள்ளாடு இவைகளின் பாலுக்கு எட்டிலொரு பங்கு சலமும், எருமை, செம்மறி இவைகளின் பாலுக்கு சரிபங்கு சலம்விட்டு காய்ச்ச வேண்டும். சுக்கும், சிறுகாஞ்சொறி வேரும் போட்டு சுவற காய்ச்சிய பால் வெள்ளாட்டுப்பாலிற் கொக்கும்.

காய்ந்தாறிய நீரில் ஸ்நானம்-ஜந்தி, தேகநோயும்போம். பசி, பலம், கண் துலக்கமும் உண்டாம்.

காய்ந்தாறியவிளநீர் - கபம், காசம், தாகசுரம், பித்தமும்போம்.

காய்ந்தாறிய வெந்நீர் - அதிசாரம், ஐயம், உழலை, உவர்ச்சி, கண்ணோய், குன்மம், திரிதோஷம், சாந்தி, சுரம்; சூலை, செவிநோய், பித்தம், மயக்கம், மூர்ச்சை, மேகம், வாதகோபம், விக்கல், விஷமும்போம்.

காய்வள்ளிக்கிழங்கு - அக்கினி, வெப்பும்போம். சிரங்கு, புண், வாதமும் உண்டாம்.

காராமணிப்பயர் - அதிக வாய்வு, பலபலரோகம், மூலமும் உண்டாம்.

காராமணியிலை-கழிச்சல், மூலவாய்வும் உண்டாம்.

காராம்பசுப்பால் - காட்டு மாட்டுப்பால், ஐயம், இரத்தபித்தம், கண்ணோய், சயரோகம், பால்களுடைய தோஷங்களும்போம்.

காராம்பசுநெய்-சிரசு, நெற்றி, புருவம், விழி நோய்களும் போம். கண்ணுக்கொளி, தேக வழகு, பொன்னிறமும் உண்டாம்.

காரீயம் - கரிவசங்கம்பார், கருவங்கம்.

காரெள்ளு-திலர்தத்திற்காகும்

காரைப்பழம்-அதிசாரம், இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பும்போம்.

காரையிலை-இரத்தக்கடுப்பும்போம். புளிசேர்த்து சமைத்து சாப்பிடவும்.

காரிசி - காப்பான், தேகத்தாலிலிப்பு, பலம், மந்தம், வாய்வும் உண்டாம்.

கார்காலம் — குளிர்காலம், ஊதல், காந்தி, தாகம், நித்திரைபோம். பலம், வாதம், வியர்வையும், வியாதி உண்டாம்.

கார்காலமணப்பூச்சு - அகிற்கூட்டு, கருப்பூரம், கஸ்தூரி, சந்தனம், இவைகளால் இருமல், இழுப்பு, இளைப்பு, உட்சுரம், காசம், தாகம், தேகவியர்ப்பு, வாய்வும் போம். காந்தி, கீர்த்தி, சிரம், நேத்திரத் துலக்கம், வீரியமும் உண்டாம்.

கார்போகரிசி - கரப்பான், சருவ நஞ்சு, நமைச்சல், சொறி சிரங்கு, வாத கபமும் போம். பித்தம் உண்டாம்.

காலபேத விரோசனம் - அரைத்த மருந்து, எண்ணெய், கியாழம் என்னும் இம் மூன்றிலொன்று கோடை காலத்தில் பேதிக்குக் கொடுக்க தக்க மருந்தாய் பனி காலத்திலாவது, மழைக்காலத்திலாவது, மேற்படி மருந்தைக் கொடுத்தால் அம்மருந்துகளின் குணங்கள் கெட்டுவிடும். மேற்சொல்லிய மூன்று காலங்களிலும் உப்பாவது நேர்வாளமாவது பலவிதக் கள்ளிப்பாலாவது இரசமாவது சேர்த்த மருந்தைக் கொடுத்தால் கிரமமாக பேதியாகும்.

காலைக்கறிக் காளபயறு - உழுந்து, எள்ளு, கடுகு, காயம், காராமணி, சிறுபயறு, சுக்கு, தட்டைப்பயறு, துவரை, தோல் போக்கின கடலை, மிளகு, மொச்சைக் கொட்டை இவைகளாகும்.

காலைக்குளியல் - பல நோய்போம். பசி உண்டாம்.

காலையில் - சிலம்பம், மல்யுத்தஞ் செய்தல், கொட்டடி, தாலிம் கானுவித்தை, கபவாதம், சூலை வலியும்போம். பசி, பலம், மலமிரங்கள் மெய்யிறுகலும் உண்டாம்.

காலையில் பச்சைப்பாலுண்ணல்-ஆண்குறியெரிச்சல், இரத்தபித்தம், கபம், காலெரிச்சல், கையெரிச்சல், பாண்டு, மெய்யெரிச்சலும் போம். விந்துவும் புஷ்டியும் உண்டாம் பிள்ளைகளுக்குமாகும்.

காலைவிழிப்பு-பித்தம்போம். வாதபித்தம், ஐயம், சமன், நரம்பின் துவார நீர்த்தெளிவும் புத்தித்தெளிவும் உண்டாம்.

காலைவெய்யல் காயல்-உண்டாகாத பிணியெல்லாம் உண்டாம்.

கால்கூறு காய்ந்த நீர் - பித்தம் போம்.

காவட்டம்புல் - மணக்கத்தம் புல், கணமாந்தம், தாகசுரம், பேதியும்போம்.

சாவிக்கல் - செம்மண்ணு, அக்கி, அரோசகம், பித்தமும், மருந்தின் வேகம், மும்மலக்குத்து, மேகச்சூடு, வாந்தியும் போம். தேககாந்தி உண்டாம்.

காவிரிநதிநீர்-சத்தநதியில் ஒன்று, இளைப்பு, உதிரக்கட்டி, காசம், சுவாசம், சோகை, தொண்டைக்கட்டு, நீரேற்றம், பொருமல் வாயுவும்போம்.

காளான்சம்பா - வாய்வும் போம். ஆரோக்கியம், கல்லைப்போன்ற பலமும் உண்டாம்.

காறுக்கருணை-இரத்தமூலம், கபம், கனல், மந்தம், முளைமூலம், வாதமும்போம். தீபனமுமுண்டாம்.

காறுகருணை-மூலநோய்போம். கரப்பான், காணுக்கிரந்தி, கோழைசிரங்கு, சொறி, தினவு, மந்தமும் உண்டாம்.

காணுங்கோழிக்கறி-இருமல், கரப்பான், மதுமேகம், மற்றுமநேக நோயும்போம், பத்தியத்திற்காகும்.

காணுமுருங்கை - அதிக வாதம் கண்குளிர்ச்சி உண்டாம்.

காணும்வாழை - அனல், இரத்த பேதி, குழிப்புண், பெரும்பாடு, மூலக்கண் புண்ணும் போம். ஐயம், போகமும் உண்டாம்.

## கி

கிகிணி - காஞ்சரீடம், காக்கணஞ்செடி.

கிச்சிலி-நாரத்தை

கிச்சிலிக்கிழங்கு - இங்குறுப்பல்லி, ஓர்மூலம்.

கிஷ்ணம்-கறுப்பு

கிஷ்ணசிங்கு-வாததோஷம், கொல்லுந் தன்மையுள்ள ஓர்நோய்.

கிஷ்ணபாணம்-ஈட்டி

கிஷ்ணபேடம்-கடுகுரோகணி

கிஷ்ணவாணம்-உலோகமணல்

கிஷ்ணவல்லி-நன்னாரி

கிஞ்சபன்னி-நாயுருவி

கிஞ்சம்-புளிமா

கிஞ்சி-வேப்பு

கிஞ்சுகம்-முண்முருக்கு, முருக்கு, பலாசு.

கிடை-கிடைச்சி, சடை, சடைச்சி, கிடை.

கிட்டக்கல்-குமிடக்கல்

கிட்டம்-இருப்புக்கிட்டம்

கிட்டி-சின்னி

கிட்டிக்கிழங்கு-சின்னிக் கிழங்கு

கிட்டிரம்-நெருஞ்சில்

கிட்டினன்-திப்பிலி

கிணிதி-கிலுகிலுப்பைச்செடி

கின்னரிக் கற்பூரம் - இரசகர்ப்பூரம்.

கிச்சிலிக்கிழங்கில்-கிரந்தி, புழுவும் போம். வாசனை உண்டாம்.

கிச்சிலிக் கிழங்கு - கபம், தலைவலி, புண்விஷமும் போம். வாசனை உண்டாம்.

கிட்டம் - உதிரக்கட்டி, உதிரதோஷம், சயரோகம், சலக்கிரமம், சோகை, நரை, தரை, நீராம்பல், பாண்டு, மகோதரம், வாதம், விஷப்பாகம், வெப்பும் போம்.

கிட்டிக் கிழங்கு - கபம், மேகமும் போம். தீபனம், பித்தம், சமன் உண்டாம்.

கிணற்றுநீர் - ஈளை, சேட்டும வாதமும்போம். அழகு, உட்டினசீதம், சமன், சூடு, தேகவலுமை, பசி, பலம், மெய்க்காந்தலும் உண்டாம்.

கிணற்றுப்புநீர்-சீதம், வாதசிலேட்டுமமும் போம். கிரிச்சரம், மலம், மூத்திரக்கடுப்பு, மேனிகருகல், வெட்டையும்போம்.

கிணற்றுமீன்கறி-குஷ்டம், பீலிகம் பித்தம், வாதகுன்மமும் உண்டாம்.

கிரந்தி நாயகம் - உஷ்ணம், கரப்பான், கருங்கிரந்தி, சீதம், செங்கிரந்தி, புண், பூதமருள், விஷம் விழிநோயும்போம்.

கிருட்டிப்பக்ஷிக்கறி - ஆலால பக்ஷிக்கறி, இரத்தக்கழிச்சல், வாந்தியும்போம். கடுப்பு, பித்தம் வாதமும் உண்டாம்.

கிருமிசத்துரு - சிலேட்டுமம், காசம், புழுக்கள், வாதக்கட்டும் போம்.

கிழங்கான்மீன் - பழையமலம், பிணியனைத்தும் போம். உடல் வளரல், பசியும்உண்டாம். பத்தியத்திற்காகும்.

கிளிஞ்சி சுண்ணம் - சிப்பி சுண்ணம், கால்வெடிப்பு, குட்டமும்போம். காரம் உண்டாம்.

கிளியூரல்பட்டை-சுரம், தணல், வெப்பும்போம். தொனி, வாசமும் உண்டாம்.

கிளுவைவேர்-விரணங்கள்போம்

கிளுவைப்பக்ஷிக்கறி - சிரங்கு, பித்தம், புண்ணும்போம். முலைப்பால், போகமும் உண்டாம்.

கித்துள்-கூந்தற்கமுகு

கிந்தகம்-திப்பிலிமூலம்

கிரசேமிரம்-பச்சைக்கற்பூரம்

கிரஞ்சனம்-முருங்கை

கிரந்தி - ஓர்நோய், அவை அழிகிரந்தி, கணுக்கிரந்தி, கருங்கிரந்தி.

கிரந்தி-தோல், நெல்லிப்பருப்பு

கிரந்திகம்-திப்பிலிமூலம்

கிரந்திநாயகம்-சிலந்திநாயகம்

கிரந்திமூலம்-திப்பிலிமூலம்

கிரமுகம்-கமுகு

கிராகதி-நிலவேம்பு

கிராகம்-ஆமை

கிராணி - ஓர் கழிச்சல், கிராணிக் கழிச்சல், ஆறு கிராணியைப் பார்க்கவேண்டியது.

கிராணிதிரவியங்கள் - 19. அவை, பொடுதலை, நாய்வேளை, சிறுகுறிஞ்சா வேர், புளியாரை, வசம்பு, திரிசாரம், கரியவேம்பு, அழிஞ்சில், பெருங்காயம், இருசாரணை, பஞ்சலோகம், மிளகு, பாவட்டை, நற்சீரகம், முட்காய்வேளை, அங்கிற்பட்டை, காவட்டம்புல், இந்துப்பு.

கிராம்பு - ஓர் சம்பாரம், அவை, காட்டுக்கிராம்பு, நீர்க்கிராம்பு, கிராம்பு 3-திரும் சதைத்து அரைப்புட்டி கொதிக்கிற தண்ணீரிலிட்டு ஆறியபின் இறுத்து 1-அல்லது 2-அவுன்சு வீதம் ஒருவேளைக்குப் பிராயமானவர்களுக்குக் கொடுக்கில் அஜீரணம், வயிற்று நோவு, வாயு, குன்மம், ஆயாசம், அக்கினிமந்தம் இவைகள் எல்லாம் தீரும், இது வாந்தியை நிறுத்தவும் உபயோகப்படும்.

கிரிகன்னி-வெள்ளைக்காக்கணம்

கிரிச்சரீடம்-சாதிக்காய்

கிரிமல்லிகை-மலைமல்லிகை, வெட்பாலை.

கிரிச்சரீட்டம்-சாதிக்காய்

கிரிராத்துவேர் - நிலவேம்பு, இது ஒரு நேர்த்தியான பெலன் கொடுக்கும் ஒளஷதமாயிருக்கிறது. இதைக் கீழ்ச்சொல்லியிருக்கிற பிரகாரம் அதிக பலனுடனே கொடுக்கலாம். கிரிராத்துக் குச்சைச் சதைத்து 1-அவுன்சு அரைபுட்டி கொதிக்கிற தண்ணீரில் விட்டு இரண்டு மணிநேரம் வைத்துப் பின்பு வடிகட்டிக்கொண்டு இதில் ஒருவேளைக்கு 2-அல்லது 3-அவுன்சு வீதம் தினம் மூன்றுதரங் கொடுக்கவேண்டும். இதனுடன் கிராம்பு, கறுவாப்பட்டை, ஏலம் வகைக்கு 1-திரும் சதைத்துக் கூட்டிக்கொண்டால் காரம் அதிகமாகும். எல்லாப் பலவீனங்களுக்கும் முக்கியமாய் சுரம் உண்டானபின்

ணிருக்கும் பலவீனத்துக்கும் அசீரணத்துக்கும், அக்கினிமந்தத்துக்கும் நன்று. மேற்சொன்ன அவுஷதம் குளிர்சுரத்துக்கும், முறைக்காய்ச்சலுக்கும் கொடுக்கலாம்.

கிரீடம்-வேலிப்பருத்தி
கிரீட்டி-பிரண்டை
கிருட்டி-பிரண்டை
கிருட்டிணசீரகம்-கருஞ்சீரகம்
கிருட்டிணபாணம்-எட்டி
கிருட்டிணபேணம்-கடுகுரோகிணி.

கிருட்டினமூலி-துளசி
கிருட்டிணவல்லி-நன்னாரி
கிருட்டிணி-காக்கணம்
கிருதம்-நெய், செம்முருங்கை, கண்டாதிகிருதம், கொடுப்பைக்கிருதம், பொன்னாங்கணிக் கிருதம், வல்லாரைக்கிருதம்.
கிருமி-புழு
கிருமிநாசம் - குராசானி யோமம், பங்கம் பாளை, பேய்ப் பீர்க்கு, பலாசம்விரை.

கிருமிக்குன்றம்-வாலுளுவையரிசி
கிருமிசத்துரு-பூவரசம்விரை
கிருமிச்சுரம்-ஓர்சுரம்
கிருமிச்சூலை-ஓர்சூலை
கிருமிச்சொறி-ஓர்சொறி
கிருமிமலடு - ஓர்மலடு, அறுமலடு பார்க்க.
கிருமியோகம்-ஓர்மருந்து
கிரேந்தி-கச்சோலம், ஏலத்தோல்
கிலுங்கி-கிலுகிலுப்பை
கிலுகிலுப்பை - ஓர் செடி, அவை வெள்ளைக் கிலுகிலுப்பை, வட்டக் கிலுகிலுப்பை.
கிழவி-முருங்கை
கிளவரி-தண்ணீர்விட்டான் கிழங்கு
கிளிமூக்கிலை-கற்றாழை
கிளை-மூங்கில்
கிறுசன்-குங்குமப்பூ, மஞ்சள்
கிறுதுவேதன்-பீர்க்கு
கிறுத்துவம்-அகில்
கினை - விளா, புடம்போடுதற்குச் சரக்கு மேலிடும் கவசம்.

## கீ

கீரிறைச்சி - கீரிப்பிள்ளைக்கறி, சிரங்கு, சிலவிஷம், சொறி, நீரிழிவு, பல்லரணையும்போம். கெம்பீரமும், வீரியமும் உண்டாம்.

கீரைத்தண்டு - அனல், இரத்தக்கடுப்பு, நீர்க்கடுப்பு, வெட்டையும் சிலநோயும்போம். சீதளம் வாயுவும் உண்டாம்.

கீழாநெல்லி - இரத்தப் போக்கு, காமாலை, சப்த தாதுக்களின் சுரம், சீதம், பித்தம், பூதப்பேய், மதுமேகம், விரணம், விஷம், விழிநோய்களும் போம்.

கீதரம்-மூங்கில்
கீடமாரி-சிறுபுள்ளடி
கீதவம்-ஊமத்தை
கீரிப்பூண்டு-ஓர்பூண்டு
கீர்மரம்-ஓர்மரம்

கீரை - ஓர்பச்சிலை, அவை அரைக்கீரை, கலவைக்கீரை, குப்பைக்கீரை, கும்மட்டிக்கீரை, கோழிக்கீரை, கொடிபசலை, சிறுகீரை, துடுப்புக்கீரை, பருப்புக்கீரை, பிரட்டைக்கீரை, பிண்ணாக்குக்கீரை, புளிச்சக்கீரை, மான்கீரை, முடிக்கீரை, முளைக்கீரை, முள்ளிக்கீரை, விழுதிக்கீரை, வெள்ளைக்கீரை, கீரைத்தண்டு.

கீலகவெட்டை-மிருகாங்கை
கீலாலம்-நீர், இரத்தம், காடி
கீழாநெல்லி-கீழ்க்காய்நெல்லி

## கு

குகு-குகுதன் என்னும் நாடி
குகுலா-கடுகுரோகணி, தேளி
குகைக்கிராமன்-கல்நார்
குகைமனோத்தகீ-சுவர்ணபேதி
குக்கிலம்-அதிவிடையம்
குக்கில்-குங்கிலியம்
குக்கிற்சூர்ணம்-குக்கில்
குக்குடச்சூட்டு-கோழித்தலைக்கெந்தகம்
குக்குரம்-கோடகசாலை
குக்குலு-குங்கிலியம்
குங்கிலியம் - குங்கிலியம், வாலுளுவை
குங்கிலியம்-குக்கில், அவை, கருங்குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம்.
குங்குமம் - குங்குமமரம், செஞ்சாந்து.
குங்குமபாஷாணம் - அஞ்சற் குளச்சி
குங்குமவர்ணி-அரிதாரம், மஞ்சட்கடல்.
குங்குலு-குங்கிலியம்
குசந்தனம்-செஞ்சந்தனம்
குசம்-தருப்பைப்புல்
குசும்பா-செந்திருக்கம்பூ
குசேசயம்-தாமரைப்பூ
குசை-தருப்பைப்புல்
குச்சந்தினபாதி-சிறுபுள்ளடி
குச்சம்-குன்றி, நாணல், பற்பாடகம்.
குஞ்சம்-குன்றிக்கொடி, புளிநறளை, சிதாங்கபாஷாணம், குறுணியிலெட்டிலோர்பங்கு.
குஞ்சரம்-கருங்குவளை
குஞ்சராசனம்-அரசு
குஞ்சாம்-குன்றி
குடகாம் - வேலிப்பருத்தி, உத்தாமணி.
குடக்கினி-கருங்காலி
குடசப்பாலை - வெட்பாலை, கறிப்பாலை.

குடகம்-மலை, மல்லிகை, வெட்பாலை
குடப்பம்-இலுப்பை
குடமணம்-கருஞ்சீரகம்
குடமல்லிகை-மல்லிகை
குடம்-சருக்கரை

குடல்-குடர், அவை, இரைக்குடல், கற்குடல், சிறுகுடல், பெருங்குடல், மணிக்குடல், மலக்குடல், குடலைப்பற்றியவை, குடல் இருகிறது, குடலேற்றம், குடலைப்பிடுங்குகிறது, குடல்கொழுத்தது, குடல் வாதம், குடற்கொழுப்பு, குடற்சவ்வு.

குடவளப்பம்-இலுப்பை
குடவன்-கோட்டம்
குடான்-செம்முள்ளி
குடிநீர்-கஷாயம்
குடியொட்டிப்பூண்டு-குருக்கு
குடிலம்-குராமரம்
குடிமரம்-தாரை
குடை-வேல்

குடைக்கிழங்கு-சிற்றரத்தை
குடோரி-வங்கமணல், வெங்காரம், வெள்ளைப்பாஷாணம்.
குட்டம்-கோஷ்டம், குஷ்டம்
குட்டநாசனம்-வெண்கடுகு
குட்டியிடுக்கி-சிற்றரத்தை, கோஷ்டம்.
குட்டினம்-கருஞ்சீரகம்

குணகண்டி-சிவதை
குணபலம்-அதிவிடையம்
குணலி-சீந்தில்
குணுக்கு-வெள்ளி
குண்டலி-இசங்கு, சீந்தில்
குண்டாணிக்கொடி-ஓர்கொடி
குண்டுரோசனை-குண்டோசனை
குண்டைச்சம்பா - சொறிக் குரும்பை

குதபம்-தருப்பைப்புல்
குதம்-வெங்காயம், தருப்பை
குதானன்-தாளி
குதிரை-ஊர்க்குரு
குதிரைகொல்லி-ஓர்பூண்டு
குதிரைப்பயிரி-ஓர்பூண்டு
குதிரைப்பற்பாஷாணம்-ஓர் பாஷாணம்

குதிரைப்புடுக்கன்-ஓர்மரம்
குதிரைவாலி-ஓர்பூண்டு
குதிரைவாலைச்சாமை-ஓர்புல்
குதிரைவாலிப்புல்-ஓர்புல்
குதும்பகர்-கும்பை
குதை-பாசி
குத்தாசம்-பெருங்காயம்
குத்தாலம்-காட்டாத்தி
குத்தாலா-சடுகுரோகிணி

குத்திரம் } குத்து } சணல், அவை குத்துக்காந்தை, குத்துக்காரை, குத்துக்கோரை, குத்துத்திராய், குத்துப்பகன்றை, தலைக்குத்து, முளைக்குத்து, குத்துக்காயம்.

குந்தம் - நோய், கற்பாஷாணம், தாலம்ப பாஷாணம், கௌக பாஷாணம், குருந்து, கண்ணோய்.
குந்தி-கள்

குந்துரு-குந்துருக்கம்
குபசுபா-எட்டி
குபோகம்-சின்னிமரம்
குபையம்-சிறுபுள்ளடி
குப்பிக்குட் சமைந்த கன்னி—பஞ்சபட்சிபாஷாணம்
குப்பிச்சாரம்-காசிச்சாரம்
குப்பிலவணம்-வளையலுப்பு
குப்பைமேனி-ஓர்பூண்டு

குமஞ்சான் - தூபவர்க்கம், அவை ஆண்மஞ்சான்-குங்கிலியம், பெண்மஞ்சான்-சாம்பிராணி.

குமட்டு-அருக்களிப்பு, உவட்டு
குமரகம்-மாவிலங்கு
குமரி-கற்றாழை
குமிகை-வெள்ளெள்ளு
குமிதம்-தேக்கமரம்
குமிதகரி-தேக்கு

குமிழ்-குமிள், நாணல், அவை செங்குமிழ், நிலக்குமிழ், பெருங்குமிழ்.

குமுதம் - ஆம்பல், அவை வெள்ளல்லி, செவ்வாம்பல், செவ்வல்லி, வைக்கிராந்த பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், கேத்திர குமுதம், கருவிழிவியாதி, தருப்பைப்புல்.

குமுந்தகம்-கற்பாஷாணம்
குமுளி-துளசி
கும்பகம் - தொட்டி, சாலங்கபாஷாணம்.
கும்பஞ்சான்-சிவதை
கும்பம்-கும்பவாதம், சிவதை பலண்டுருகம், தாலம்பம்.
கும்பளம்-பூசணி
கு[illegible]க்காலம்-நிலைக்கடம்பு

குயத்தினலாகை-நிலவாகை
குயபீசகம்-எட்டி
குயா-கோங்கு
குயின்மொழி-அதிமதுரம்
குய்யபீசகம்-எட்டி
குரகதம் - குதிரைப்பற் பாஷாணம்.
குரக்கன்-கேழ்வரகு
குரங்கம்-எட்டி
குரங்கு-மொகமொசுக்கை
குரண்டம் - பச்சைப்பூவுள்ள மருதோன்றி.
குரமடம்-பெருங்காயம்
குரம்-தருப்பைப்புல், பாகல்
குரல்தினை-பாதிரிமரம்
குரவகம்-செம்பூவுள்ள மருதோன்றி, வாடாக்குறிஞ்சா.
குரவம்-கோட்டம், பேரீந்து
குரவம்-குறிஞ்சா
குரவு-குராமரம்
குரா-ஓர்செடி
குராசாணி-ஓர்பூண்டு
குராசாணிஓமம் - ஓர்பூண்டு
குரு-துருசு, அம்மை
குருகு-குருக்கத்தி
குருசம்-வெங்தோன்றி
குருதி-உதிரம், மூளை
குரு-நெய்

குருந்து-குருந்தக்கல், காட்டுக்குருந்து, காட்டெலுமிச்சை, பெருங்குருந்து, காட்டுநாரத்தை.

குருமுறை - சவுக்காரம், கோடாசுளி.
குருவி-குன்றுமணி
குருவிச்சி-பல்லூரி
குருவிந்தம் - குன்றி, சாதிலிங்கம், கோரைக்கிழங்கு.

குருவுக்காதி - பச்சைக் கற்பூரம், வேத சிந்தூரத்தில் பிரதான சரக்கு வேதைச் சிந்தூரம்.

குருவேர்-ஓர்பூண்டு
குருளை-ஆமை
குலகாயம்-பேய்ப்புடோல்
குலகாயம்-நிலக்கடம்பு
குலசுவேதன்-சவரிலோத்திரம்
குலத்தம்-கொள்ளு
குலப்பம்-செம்புமணல்
குலம்பா-பேய்ச்சுரை
குலவுகாசம்-நாணல்
குலவுரி-சந்தனம், செஞ்சந்தனம்
குலாங்கிலி-நாவட்டம்புல்
குலாதனி-கடுகுரோகிணி
குலிகம்-இலுப்பை, இங்குலிகம்
குலிசம் - இலுப்பை மரம், வன்னி மரம், கற்பரிபாஷாணம்.
குலிமல்-நாகபாஷாணம்
குலத்தம்-கொள்ளு
குலுமமூலம்-இஞ்சி
குலைக்கல்-கோரோசனம்
குலோமி-வெள்ளறுகு
குல்லரி-இலந்தை
குல்லை-கஞ்சா, துளசி, வெட்சி
குலவலி-இலந்தை
குவடு-சங்கபாஷாணம்
குவட்டிற் புனிதம் - சங்க பாஷாணம்.
குவட்டினீயம்-நீலாஞ்சனக்கல்
குவட்டுக்கூர்மை-தொட்டிப் பாஷாணம்.
குவட்டுநுண்முலைச்சி - சுவர்ன பேதி.
குவம்-ஆம்பல்
குவரிகுண்டலம்-வாலுளுவை
குவலம்-குவளை, நெய்தல்
குவலை-கஞ்சா, துளசி
குவளை - கருங்குவளை, உற்பலம், செங்குவளை.
குவாகம்-கமுகு

குழம்பு-ஓர்மருந்து, அவை

அகஸ்தியர் குழம்பு, தோஷாமிர்தக் குழம்பு, லிங்கக் குழம்பு, கருங்குழம்பு, சண்டமாருதக் குழம்பு, பரிமளக்குழம்பு.

குருத்தாமரை - ஆகாசத்தாமரை, கொட்டைப்பாசி.
குழிமிட்டான்-நத்தைச்சூரி
குழை- நெய்தல்
குளவி-மலைப்பச்சை
குளரி-நீர்க்குளிரி
குறஞ்சனம்-வெங்காரம்
குறஞ்சி-செம்முள்ளி
குறத்தி-நிலப்பனை
குறவன்-இரதம்
குறி-அடையாளம், குணம், தோற்றம், இலட்சணம்.

1-நாடிக்குறி:—பெருவிரல் முதல் மூன்று விரல்களுக்குள்ளாக நெல்லுமணிப் பரிமாணமான நாடி நடக்கும். அது சர்வாங்கமுங்கூடியிருக்கும். கரமூலத்திலும், பாதமூலத்திலும், நாடி பதிந்திருக்குமாகையால் ஸ்திரீகளுக்கு இடதுபக்கமும், புருஷருக்கு வலதுபக்கமும், பார்க்க வேண்டும்.

வாதபித்த நாடிகள் முதல் விரலின் கீழ் நடக்கும், சிலேத்துமநாடி நடுவிரலின் கீழ் நடக்கும். அப்படிக்கில்லாமல் தாண்டி நடந்தால் ஆச்சரியநாடி யென்றறிக.

வாதநாடி வக்கிர கதியாய் நடக்குந் தவளையைப் போலவும், பாம்பைப் போலவும், சிறுபிள்ளை தொட்டிலைப் போலவும், அட்டையைப் போலவும் நடக்கும்.

பித்தநாடி சுலப தாதுவாகவிருக்கும். இறகுவிரித்த மயில் போலவும், அன்னப் பட்சி போலவும், குதிரைபோலவும் நடக்கும்.

சிலேத்துமநாடி ஸ்திரகதியாய்க் கோழியைப்போலவும், ஊர்க்குருவியைப் போலவும் நடக்கும்.

பித்த சிலேத்தும நாடிக்குறி முதல் பாம்புபோல நடந்து உடனே அட்டையைப்போல நடக்கும்.

அஜீரணநாடிக்குறி யானை நடையைப்போல நடக்கும்.

தீபன நாடிக்குறி நித்திரை போகிற காகத்தைப்போல நடக்கும்.

ஸ்திரீசங்க நாடியும் இந்தப் படியே நடக்கும்.

அன்னத்தைப்போல் நடந்தால் மலபந்த நாடியென்றறிக.

சன்னிபாத நாடிக்குறி, விறகுசுமை மத்தியில் மூஞ்சூறு ஓடுவது போலவும், குடிலமாயும், சீலமாயும், மந்தமாயும், சூட்சுமமாயும் நடக்கும்.

2 - ஸ்பரிசக்குறி:—வாதரோகிக்கு தேகம் கொஞ்சம் உஷ்ணமாயிருக்கும். பித்தரோகிக்கு அதி உஷ்ணமா யிருக்கும். இல்லாவிடில் சீதளமாயிருக்கும். சிலேத்தும ரோகிக்குக் கொஞ்சம் குளிர்ந்திருக்கும். தொந்த ரோகிக்கு நானாவிதமா யிருக்கும்.

3-சுரூபக்குறி:—வாத ரோகிக்குச் சரீரங் கறுத்திருக்கும் பித்த ரோகிக்குத் தேகம் மஞ்சள்நிறமாயாவது, சிவப்பாயாவதிருக்கும். சிலேத்தும ரோகிக்கு தேகம் வெளுத்தநிறமா யிருக்கும். தொந்தரோகிக்கு தேகம் மிசுரவருணமா யிருக்கும். சன்னிரோகிக்கு விவருணமா யிருக்கும்.

4 - சப்தக்குறி:—வாத ரோகிக்கு வார்த்தை மெதுவா யிருக்கும், பித்தரோகிக்கு வார்த்தை உரத்த தொனியோடிருக்கும், சிலேத்தும ரோகிக்கு வார்த்தை ஈனசுரமா யிருக்கும், தோந்த ரோகிக்கு வார்த்தை வெகுவிதமாய் இருக்கும்.

5-நேத்திரக்குறி:—வாத ரோகிக்கு கண்கள் கறுத்திருக்கும். கொஞ்சம் நோயுண்டாயிருக்கும். கண்ணில் நீர்பாயும் பித்த ரோகிக்கு கண்கள் மஞ்சள் நிறமாயாவது சிவந்த நிறமாயாவ திருக்கும். சிலேத்துமரோகிக்குக் கண்கள் பீளைகட்டி வெளுத் திருக்கும். சன்னி பாதத்துக்குக் கண்கள் சிவந்தாவது மஞ்சள் நிறமாயாவ திருக்கும். காமாலை ரோகிகளுக்கு கண்கள் மஞ்சள் நிறமாயிருக்கும்,

6-மூத்திரக்குறி:—வாத ரோகிக்கு மூத்திரம் வெளுத் திருக்கும். பித்த ரோகிகட்கு மூத்திரம் சிவந்திருக்கும் சிலேத்துமரோகிக்கு மூத்திரம் நுரைத்திருக்கும், தொந்தரோகிக்கு மூத்திரம் மிசிரமாயிருக்கும், காமாலை ரோகிக்கு, மூத்திரம் மஞ்சள் நிறமாயிருக்கும்.

7 - நாக்குக்குறி:—வாத ரோகிக்கு நாக்குவெடித்து முள்ளுண்டாய் மஞ்சள் நிறமாயிருக்கும், பித்த ரோகிக்கு கறுத்தாவது சிவந்தாவதிருக்கும் சிலேத்தும ரோகிக்கு நாக்கில் தினவுமுண்டாய் வெளுத்திருக்கும் சன்னி வாத ரோகிக்கு நாக்கில் முள்ளுண்டாய் திரவமில்லா திருக்கும், தொந்தரோகிக்கு நாக்கு மிசிர வருணமாயிருக்கும்.

8-மலக்குறி:—வாதரோகிக்கு மலம் கறுத்திருக்கும், பித்தரோகிக்கு மலம் மஞ்சள் நிறமாயாவது சிவந்த நிறமாயாவதிருக்கும் சிலேத்துமரோகிக்கு நுரைகட்டி வெளுத்திருக்கும் தொந்தரோகிக்கு மிசிர வருணமாயிருக்கும்.

ஆகிகசுரக்குறி:—சுர முண்டாய், குளிர்வருதல், சரீரம் புளகித்தல், தாகமுண்டாதல், சந்தாபப்படுதல், கண்கள் நோதல், தலைநோதல், உடம்புநோதல், வயிறு நோதல், பக்கங்கள் நோதல், அபத்தியத்தில் வாஞ்சையுண்டாதல், நித்திரை யதிகரித்தல், கால், முகம், வயிறு வீக்கமுண்டாயிருத்தல், சரீரம் வெளுத்தல், நகங்களிலும் கண்களிலும் இரத்தமில்லாதிருத்தல், வயிறு கழிதல், அசதியா யிருத்தல், உள்ளங்கால் உள்ளங்கை எரிவந்தமா யிருத்தல் இவையென்றறிக.

ஆகிகசுரங்களின் பெயர்கள்:—ஏகாகிகசுரம், துவியாகிகசுரம், பஞ்சாகிகசுரம், அர்த்தராத்திரி சுரம், பக்ஷசுரம், [illegible] சுரம், வாதபித்திய சிலேத்தும சுரங்கள், ரத்தசுரம், மாம்ஸகத சுரம்,

சருமகத சுரம், அஸ்திகதசுரம், இவ்விதமான நான்குவித சுரங்களின் நிதானத்தைச் சொல்வோம்.

சருமகதசுரக்குறி:—சூட்சுமமாய்ச் சுரமுண்டாயிருத்தல், தாகமுண்டாயிருத்தல், நாடி மந்தகதியாயிருத்தல், சூட்சுமமாய்த் தலைநோதல், சரீரம் குளிர்ந்திருத்தல், குடில சுரம், சந்தத மிருத்தல், சரீரம் இளைத்திருத்தல், சரீரம் வெளுத்தல் இவையென்றறிக.

அஸ்திகதசுரக்குறி:—உள்ளே தாகமுண்டாயிருத்தல், சரீரம் குளிர்ந்திருத்தல், குடில் நாடி நடந்துகொண் டிருத்தல், சந்ததம் சுரமுண்டா யிருத்தல், சரீரம் க்ஷீணித்துப் போதல், சரீரம் வெளுத்தல் இவையென்றறிக.

ரக்தகசுரக்குறி:—தீவிர சுரமுண்டாயிருத்தல், தாகமுண்டாயிருத்தல், வேர்வையுண்டாதல் ஆயாசமுண்டாயிருத்தல், தத்பிரமை யுண்டாதல், சரீரநோயுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல் இவையென்றறிக.

மாம்சகத சுரக்குறி:—சுரந் தீவிரமாயிருத்தல், இருமலுண்டாயிருத்தல், வேர்வை யுண்டாதல், உதடு உலர்தல், சரீர நோயுண்டாதல், தவித்த லுண்டாயிருத்தல், சந்தாப முண்டாயிருத்தல் இவையென்றறிக.

சன்னிபாத சுரக்குறி:—கழுத்திலும், நெற்றியிலும், மார்பிலும், வேர்வையுண்டாதல், தவித்தல், பிரமையுண்டாதல், சந்தாபப்படுதல், சரீர நோயுமுண்டாதல், தலை நோயுண்டாயிருத்தல், சர்வாங்கமும் விதாகமாயிருத்தல், கண்கள் சிவந்துகாணல், மூர்ச்சையுண்டாயிருத்தல், ப்ராந்தியுண்டாயிருத்தல், கனவுகாணல், வயிற்றுச்சூலை யுண்டாயிருத்தல் ஈனத்வனியா யிருத்தல் இவையென்றறிக.

வாதசுரக்குறி:—முகமும் உதடும் கறுத்துக்காணல், சரீரமெல்லாந் தடித்து நோதல், மெய்நடுக்கல், உடம்பு திமிரெடுக்கல், தேகம் பாரித்திருக்கல், மலபந்தமாயிருத்தல், குளிர்ந்து மயிர்க்குச்செறிதலுமாயிருத்தல், தலைநோயுண்டாயிருத்தல் இவையென்றறிக.

பித்தசுரக்குறி:—நித்திரை மெத்தக்காணல், மலமூத்திரஞ் சிவந்திருத்தல், வயிறுகழிதல், வாந்தியுண்டாதல், வாய் பினற்றல், வாதாடுதல், மூர்ச்சை, தாகம், எழுந்திருந்து ஓடல், விக்கல், தவித்திடல், சாந்தப்படுதலிவையென்றறிக.

சேத்தும சுரக்குறி:—நாக்கு முகமுங் கறுத்துக்காணல், மார்பு நோதல், இரைப்பிருமல், உருசையில்லாதல், மூச்சுவிடப் போகாமல் மயங்குதல், விக்கல், தாகம், மிடறு நோயி லிவையென்றறிக.

குலச்சவ்வு-முடிமாமிசம்
குழிதந்தம்-நகம்
குருசாரம்-சிவசாரம்
குருகாரம்-பெரியகாரம்
குரேட்டை-விளா
குதிரைப் பல்லன் - வெள்ளைப்பூண்டு.
குருக்கிராதம்-சங்கிலை
குஜம்பால்-முலைப்பால்

குசம்-தண்ணீர்
குறட்டை-காக்கணன்
குரை-கஞ்சாங்கோரை
குலரிச்சோறு-கற்றாழைசோறு
குக்குடம்-கோழிப்புடம்
குப்பை-சதகுப்பை
குக்கில்-மைசாட்சி, குங்கிலியம்
குரும்பை-தென்னம்பிஞ்சு
குருரசம்-சித்தரசம்
குருக்குவிரை-பிரமதண்டுவிரை
குடவன்-பித்தளை
குசை-மூசை
குப்பிவிட்டி-அரக்குப்புட்டி
குடோரி-மாத்திரை
குலாமல்லி-முட்செவ்வந்தி
குடோரி-குடோரிப்பாஷாணம்
குலிசன்-வைரவன்
குதிரைமல்லி-குதிரைபெலும்பு
குளிகை-மாத்திரை
குப்பை-சதகுப்பி
குருநாள்-வியாழம்
கும்பகம்-கலசம்
குமரி-சோற்றுக்கற்றாழை
குப்பி-சீசா, புட்டி
குளவிந்தம்-மஞ்சள்

குக்கில் - உதடுநோய், கடி, கட்டி, காதுநோய், குணகம், சூலை, நாம்புக்கட்டி, நாசிநோய், மேகப்புண், வாதவித்திரமும்போம்.

குங்கிலியம் - குக்கில், எலும்புருக்கிப்புண், சீழ், நீர்பெருக்கல், சூலை, பெரும்பாடு, மேகப்புண்ணும்போம்.

குங்குமச்செவ்வந்தி-கோழைபோம்

குங்குமப்பயறு-பதிபோம். மந்தம், தாகம், வாதசேட்டுமம், வாய்வும் உண்டாம்.

குங்குமப்பூ - அண்டவாதம், அயர்ச்சி, கண்ணிலுண்டாகும் பூ, கபம், கால்வலி, சூலை, தாகம், மேகசலம், விந்துநஷ்டம், சர்த்தி, சலதோஷம், சுரம், செவிநோய், பித்தம், மதுமேகம், மேகநீர், ஸ்திரீகெர்ப்ப உதிரதோஷமும்போம்.

குடசப்பாலை மரம் - வெட்பாலை, கரப்பான், சீரிழிவு, மேகம், வாதம், விரணமும்போம். பேதிக்கட்டுண்டாம்.

குடியோட்டிப் பூண்டு - குடிக்குச்சகுனி, இருமல், கடிகள், கரப்பான், சிலவிஷம், பல்நோய், புண், பொடிசிரங்கு, மேகவாய்வு, மேகமும்போம்.

குண்டகச்சியிளநீர் - அரோசி, தாகம், பழயமலமும்போம். தீபனமுண்டாம்.

குண்டற்சம்பா-எல்லாத் தாகமும் போம். கரப்பான், மந்தநோயும் உண்டாம்.

குதிரைக்குளம்படியிலை - நிலக்கடம்பு, குதிரை நடைவாயு, ஜங்கி, தினவும்போம்.

குதிரைப்பால்-அமுரு, வீரியவிர்த்தியுமுண்டாம்.

குதிரைமூத்திரம் - கபம், கால்வீக்கம், கிருமி, படர்தடிப்பு, வாதமும்போம். சூடு உண்டாம்.

குதிரையேற்றம் - அசுவ சவாரி, குளிர்போம், இருமல், சூடு, தீபனம், உடலிறுகல், குடலிறங்கல், இலக்குமி கடாட்சமும் உண்டாம்.

குதிரைவாடிய பூண்டு-இடுப்புவலி, கீளை, கடுப்பு, கண்மயக்கம், கழிச்சல், காசம், சுரதாகம், செவிபடுவன், பரு, மாந்தம், மேகம், வாதகபம், நடுக்கலுமுண்டாம்.

குந்திரிக்கம் - காகவாசம், சிரங்கு, தலைவலி, தூர்க்கந்த குஷ்டம்,

படர்தாமரை, பல விரணம், பீனிசம், மேகக்கட்டி, விஷக்கடியும்போம்.

குப்பைமேனியிலை - பூனைவணங்கி, உதிரமூலம், கபம், குன்மம், சர்வவிஷம், சுவாசம், சூலை, தினவு, தீப்புண், பல்நோய், பீனிசம், மூலமும், வாதமும் போம். உப்புக்கட்டுண்டாம்.

குமட்டிக்காய் - சாந்தி, தாஹம் போம். கபம், பல்விழுதல், வாதமும் உண்டாம்.

குமட்டிக்கீரை - ஆத்தத் தம்மட்டி, அக்கினிசீதம், களிரும் போம். உஷ்ணவாயு, வாதமும் உண்டாம்.

குயில்கறி-குன்மவலி, சொறி, பித்தம், மேகம், வாதமும்போம். போகம் உண்டாம். பத்தியத்திற்காகும்.

குருக்கத்திப்பூ-சிரரோகம், தாகம், சிலேட்டுமம், பல்விஷம், பித்தம், விரணமும்போம். கைப்பும் மதுரமாகவிருக்கும்.

குருந்து-போதைபோம்

குருவிச்சுப்பூண்டு - குஷ்டம், சீதரத்தம், மேக கரப்பான், விஷமாந்தமும் போம்.

குரோசாணி ஓமம்-உள்கடுப்பு, கபம், கரப்பான், புண், பேதி, வாதம், வீரியநஷ்டம், வெகுமூத்திரமும் போம். மயக்கமும் உண்டாம்.

குழம்பின் குணம் - வாயு போம். அதிக காரமுள்ள குழம்புக்கு முத்தோஷம்போம்.

குருபரங்கிக்காய்-பூசினிக்காய், ஐயம், குளிர்ச்சி, மாந்தம், வாதகுடைச்சல், வாதசூலையுண்டாம்.

குழிமிட்டான் - தண்ணிவிட்டான், உள்சூடு, கனமாந்தம், குழவிதோஷமும்போம், ஸ்திரீகளுக்குப்பாலுண்டாம்.

குழந்தைவன்னம்-காசம், மந்தாக்கினி, மேகமும்போம். துர்ப்பலம், பீநிசமும் உண்டாம்

குளத்துநீர் - குளிர்ச்சி, வாதமும் உண்டாம்.

குளத்துமீன் - கபம், மந்தம், மேகமும் உண்டாம்.

குளபாலைமரம்-அதிசாரம், அனல், கரப்பான், சுவாசகாசம், பக்கசூலை, வியர்வையும் போம்.

குளுந்தநீர்-திமிர், மந்தவாய்வு, விக்கல், விஷமும் உண்டாம். சுரம், சந்நிபாத தோஷத்திற்கும் ஆகாது.

குறவைமீன் - இருமல், குடல்வலியும்போம். அருசி, மலக்கட்டுமுண்டாம்.

குறுஞ்சான் கடை-பலநோய்களும் போம். பலம் உண்டாம்.

குறுஞ்சிதிலம் - ஐயம், கபம், கண்ணெரிவு, சூலையெரிவு, அரோசிகம், பித்தம், சுரம், வயிற்றின்வாயு, ஆமைக்கட்டியும் உண்டாம்.

குறுஞ்சம்பா - வாயுவுபோம் கரப்பான், பித்தம், போகமும் உண்டாம்.

குறும்பாட்டிறைச்சி-குடல் வாதம், சூலையும்போம். சொறி, சிரங்கு, வாய்வும் உண்டாம்.

குறும்பாட்டுத்தயிர் - முத்தோஷம் உண்டாம்.

குறும்பாட்டு வெண்ணெய்-வியாதிகளுக்காகாது.

குன்றிமணிச்சம்பா - அநேக வியாதியும் வாயுவும்போம். இந்திரிய புஷ்டி, பலமும் உண்டாம்.

குன்றிவித்து-ஐயம், காமாலை, தாபசோபம், நிறமழுங்கல், நேத்திரநோய், பித்தம், வியர்வை, வெப்பும்போம்.

### வாதபித்த சுரக்குறி

அங்கமெல்லாம் அசதியாதல், நாக்குக் கறுத்துக்காணல், பிரலாபித்தல், நித்திரையாதல், மலபந்தமாயிருத்தல், மலம் வெளுத்தல், வாய்கைத்தல், வடிவுகுன்றல், நினைந்து மறத்தல், தியங்கிடுதல், மயக்கிடுதல் இவையென்றறிக.

### தொந்தசுரக்குறி

சடமெல்லாநோதல், சுவாசங்காணல், இருமல், வெளுத்தநாக்கு, மயிர்க்குச்சிடுதல், பிடறுநோதல், தாபமிகவுண்டாதல், தயங்கிச் சஞ்சலித்தல், வாய்பிதற்றல், தேகம் வழுவழுத்திடல், வேர்வை மிகவுண்டாதல், வாய்கைத்தல், நித்திரை மிகல், மார்நோதல், தலைவலி, பிடரிவலித்தல், நாக்கு வழுவழுத்தல், நாக்கு, மூக்கு நலமழிதல் இவையென்றறிக.

### அசீரணக்குறி

இளைப்பு, விக்கல், வயிற்றுமந்தம், மார்பு, தொடை, குரல்நோதல், புளியேப்பம், வாந்தி, தாகம், மூச்சு, வயிறு நொந்து பொருமிக்கொள்ளல், உடம்பெங்கும் திமிராதல், இவையென்றறிக.

### அபிகாத சுரக்குறி

அதிகநடையாலும், குதிரையானையேறி நடத்துவதாலும், சுமையெடுத்ததாலும், அதிசயமாய் வேலைசெய்தலாலும், பனியில் சஞ்சரித்தலாலும் உண்டாகிய, திமிர், தாகம், இளைப்பு, கைகால் தளர்ந்திடுதல், உடம்பெல்லா நோதல், மாருத வேர்வையுண்டாதல், பிரமிக்குதல், குளிர்ந்த போசனத்தில் ஆசையுண்டாதல் இவையென்றறிக.

### சன்னிபாதங்கள் பதின்மூன்று

அதாவது, சந்திசன்னி, அந்தகசன்னி, ருத்தாஹ சன்னி, சித்தவிப்ரம சன்னி, சீதாங்கசன்னி, தாந்திரிகசன்னி, கண்டகுப்ச சன்னி, கர்நிக சன்னி, பக்னநேத்திர சன்னி, ரக்தோஷ்டி சன்னி, பிரலாப சன்னி, ஜிக்வக சன்னி, அபின்னியாச சன்னி.

### சந்திகசன்னிக்குறி

தேகம் எப்போதும் போலிருத்தல், சூலைகாணல், சரீரம் பளபளப்பாயிருத்தல், உடம்புநோதல், தாகம், இருமல், தியக்கமுண்டாதல் இவையென்றறிக.

### அந்தக சன்னிக்குறி

தாகங்காணல், பிரமை யுண்டாதல், தாபமுண்டாதல், தலையசைத்தல், கனவுகாணல், வாந்தியுண்டாதல், விக்கல்காணல்,

சுரமுண்டாதல் இவையென்றறிக.

### ருத்தாக சன்னிக்குறி

கனவுகாணல், தாபமுண்டாதல், சித்தப்பிரமையுண்டாதல், நெஞ்சுநோதல், இறுகிறுப்புண்டாதல், தண்ணீர்த்தாகமுண்டாயிருத்தல், உதடு உலர்தல், இருமல் உண்டாதல், தேகமெல்லாங் குத்தலுண்டாதல், கூச்சலிடுதல், வேர்வைகாணல், கழுத்து நெற்றி, வேர்வைகாணல் இவையென்றறிக.

### சித்தவிப்ரம சன்னிக்குறி

உடம்பெல்லா மிக நொந்து நோயுண்டாதல், வாதமோடு பித்தமிஞ்சல், சித்தவிப்ரமை யுண்டாதல், கிட்ட விருப்பவர்களை மருண்டுபார்த்தல், புருவநெரிக்குதல், பாடுதல், ஆடுதல், வாய்பிதற்றல் இவையென்றறிக.

### சீதாங்க சன்னிக்குறி

சரீரமெல்லாம் குளிர்ந்திருத்தல், இருமலாதல், இரைப்புண்டாதல், விக்கலுண்டாதல், தேக நோயுண்டாதல், வாந்தியுண்டாதல், தாபமுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், அதிசார பேதியுண்டாதல், சரீரம் நடுங்குதல், இவையென்றறிக.

### தாந்திரிக சன்னிக்குறி

பிரலாபித்தல், கவித்தலுண்டாதல், நாக்கு மிகவுங் கறுத்து முள்ளுண்டாயிருத்தல், தாபமுண்டாயிருத்தல், அதிசாரபேதியுண்டாயிருத்தல், திவாசமுண்டாதல், தினவெடுக்கல், கண் பெருத்தல், தண்ணீர்பாய்தல், சுரமுண்டாதல் இவையென்றறிக.

### கண்டகுப்ஜ சன்னிக்குறி

ப்ரமையுண்டாதல், தாபமாதல், தலைசுழற்றல், தனுப்போல்கழுத்து, நரம்பு, இசுவுகாணல், புலம்பல், பயப்படுதல், எழுந்திருத்தல், மூர்ச்சையுண்டாதல், சரீர நோதல், இருமலுண்டாதல், விக்கலுண்டாதல், ஈனத்தொனியாயுண்டாயிருத்தல், தலைநோயுண்டாதல் இவையென்றறிக.

### கர்ன்னிக சன்னிக்குறி

கனவுகாணல், நாவெடித்தல், விக்கலுண்டாதல், இருமலாதல், நடுக்கலுண்டாயிருத்தல், காதின் கீழ் வீக்கமுண்டாயிருத்தல், காதுகேளாதிருத்தல், அடிக்கடி யெழுந்திருத்தல் இவையென்றறிக.

### பக்னநேத்திர சன்னிக்குறி

கண்பெருத்தல், கண்ணீர்ப்பாய்தல், பார்வை காணாதிருத்தல், கனவுகாணல், பிரமித்தல், நடுக்கலுண்டாதல் இவையென்றறிக.

### ரக்தோஷ்டி சன்னிக்குறி

நாக்கு நடுவெடித்தல், உதடு வெடித்து இரத்தங் காணல், தீவிர சுரமுண்டாதல், உதடு உலர்தல், அசதியாதல், மூர்ச்சையுண்டாதல், அதிசாரமுண்டாதல், கனவுகாணல், இருமலுண்டாதல், தலைதிருப்பலுண்டாதல், நடுக்குதல், நாக்குக் கறுத்து முள்ளுண்டா யிருத்தல் இவையென்றறிக.

### பிரலாப சன்னிக்குறி.

சரீரம் நடுக்க லுண்டாதல், கனவு காணல், தாகமுண்டாயிருத்தல், சரீர நோயுண்டாதல், இருமலுண்டா யிருத்தல், விக்கலுண்டாயிருத்தல், அடிக்கடி யெழுந்திருத்தல், மிகவுஞ் சுரமுண்டாயிருத்தல் இவையென்றறிக.

### சிக்வ சன்னிக்குறி.

சுவாச முண்டா யிருத்தல், தாபமுண்டாயிருத்தல், இருமலுண்டாயிருத்தல் நாக்குக் கறுத்து முள்ளுண்டா யிருத்தல், வாய்திறவாமல் மூடியிருத்தல், காதுகேளா திருத்தல், சாட்டியக்குணமாய்க் காணல் இவையென்றறிக.

### அபின்னியாச சன்னிக்குறி.

வாதபித்த சிலேத்மங் கூடியிருத்தல், சுரமடித்தல், சுவாசமுண்டா யிருத்தல், முகம் பளபளப்பா யிருத்தல், நாக்குக் கறுத்துக்காணல், அதிக நித்திரை யுண்டாதல், சரீரமெங்கும் நோயுண்டாதல், தாபமுண்டாதல், அசதி யுண்டாதல், தண்ணீர் தாகமுண்டா யிருத்தல், வேர்வையுண்டர்தல் இவையென்றறிக.

### சாத்தியசன்னிகள்.

சந்திரசன்னி, தாந்திரிக சன்னி, பிரலாபசன்னி, சித்தவிப்ராமசன்னி, சிக்வதசன்னி, கர்னிகசன்னி இவ்வாறும் சாத்தியமென்றறிக.

### அசாத்திய சன்னிகள்.

ருத்தாக சன்னி, அந்தகசன்னி, பக்னநேத்திர சன்னி, கண்டகுப்ஜ சன்னி, ரக்தேஷ்டி சன்னி, சீதாங்கசன்னி, அபின்னியாசசன்னி இவ்வேழும் அசாத்தியமென்று அறிக.

### சன்னியாதத்தின் தினப் பிரமாணம்.

சந்திக சன்னிக்கு எழுநாள், அந்தக சன்னிக்கு பத்துநாள், ருத்தாக சன்னிக்கு இருபதுநாள், சித்தவிப்பிரம சன்னிக்கு இருபத்தொருநாள், சீதாங்க சன்னிக்குப் பதினைந்துநாள், தாந்திரிகசன்னிக்கு இருபத்தைந்துநாள் அல்லது எழுநாள், கண்டதுப்ஜ சன்னிக்குப் பதின்மூன்று நாள், கர்ன்னிக சன்னிக்கு மூன்று மாதங்கள், பக்னநேத்திர சன்னிக்கு எட்டுநாள், ரக்தேஷ்டி சன்னிக்குப் பத்துநாள், பிரலாப சன்னிக்குப் பதினாலுநாள், சிக்வகசன்னிக்குப் பதினாறுநாள், அபின்னியா சன்னிக்குப் பதினைந்துநாள்.

### தோஷங்கள் எழு.

அபத்தியதோஷம், ஸ்திரீ சங்கம தோஷம், விஷமதோஷம், விஷம், சீதளதோஷம், ரத்த சிக்வத தோஷம், பீத சிக்னகதோஷம், கிருஷ்ண சிக்வா தோஷம்.

### அபத்திய தோஷக்குறி.

அயர்வுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், பிரமை யுண்டாதல், தாகமுண்டாதல், கனவு

காணல், மார்நோதல் இவையென்றறிக.

### ஸ்திரீசங்கம தோஷக்குறி.

சரீர நோயுண்டாதல், நடுக்கலுண்டாதல், மாரெரிவந்த முண்டாதல், கனவுகாணல், அடிக்கடி யெழுந்திருத்தல், பிரமையுண்டாதல், கால்கள் குளிர்ந்திருத்தல் இவையென்றறிக.

### விஷம தோஷக்குறி.

சுரமுண்டாதல், தாபமுண்டாதல், தண்ணீர் தாகமும் உண்டாதல், நாடி குடிலமாயிருத்தல், அந்தர்தாஹ முண்டாயிருத்தல், வேர்வையுண்டாதல், மூர்ச்சையுண்டாதல் இவையென்றறிக.

### விஷமசீதள தோஷக்குறி.

ஒரு தினத்துக்குள் இரண்டு மூன்று நாலுதரம் குளிர் கண்டு சுரமுண்டாதல், தாக முண்டாதல், மோக முண்டாதல், தலைநோயுண்டாதல், நாவில் முள்ளுண்டா யிருத்தல் இவையென்றறிக.

### ரத்தஜிக்வக தோஷக்குறி.

நாக்குச் சிவந்துகாணல், முள்ளுண்டா யிருத்தல், சுரமுண்டாயிருத்தல், தாகமுண்டாயிருத்தல் இவையென்றறிக.

### பீதஜிக்வக தோஷக்குறி.

நாக்கு மஞ்சள் நிறமாய்ப் பிளந்து தரவமில்லாம லிருத்தல், முள்ளுண்டா யிருத்தல், சுரமுண்டாயிருத்தல், பிரமையுண்டாயிருத்தல், வேர்வையுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், இருமலுண்டாதல், ஈனத்தொனியுண்டாதல் இவையென்றறிக.

### கிருஷ்ணஜிக்வக் தோஷக்குறி.

நாக்கு கடினமாய்க் கறுத்து முள்ளுண்டாயிருத்தல், அடிக்கடி யெழுந்திருத்தல், பிரமையுண்டாதல், உளறல், சுவாசமுண்டாதல், தினவெடுக்கல், வேர்வை யுண்டாதல், தாகமுண்டா யிருத்தல் இவையென்றறிக.

### இவைகளுக்கு தினப்பிரமாணம்.

பதினைந்துநாள் அல்லது ஏழு நாளென்றறிக.

### அதிசார நிதானம்.

மந்தத்தினாலும், உஷ்ணத்தினாலும், உப்பினாலும், சயித்திய திரவியங்களினாலும், போஜனத்தினாலும், அழுகிரந்தினாலும், கிரிகிரந்தினாலும், விரோசனத்தினாலும் அதிசாரங்களுண்டாம்.

### வாதாதிசாரக்குறி.

மலம் நுரைகட்டி கறுப்பாய் ஆகிறது. தொப்புளின் கீழ்நோதல், சரீரநோதல், வயிறு அப்போதுக் கப்போது உப்புதல், சற்றுநேரத்துக் குள்ளாக வாடுதல், கொஞ்சம் மலம் கட்டியா யிருத்தல், நாற்றமா யிருத்தல் இவையென்றறிக.

### பித்தாதிசாரக்குறி.

மலம் சிவந்திருத்தல், மஞ்சள் நிறமாயிருத்தல், நுரை கட்டியிருத்தல், ஒருதரம் மஞ்சள் நிறமாயும், ஒருதரம் சீதம் விழுதல், விகார முண்டாகுதல், வயிறுபிடுங்கல், தாகம் அதிகமாதல், வேர்வை யுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல், பிரமையுண்டாதல், உதடு உலர்தல் இவையென்றறிக.

### சிலேத்துமாதி சாரக்குறி.

சீதம்விழுதல், நுரைவெளுத்தமலம், இருமல் சுவாசமுண்டாதல், காது கேளாதிருத்தல், சூக்ஷமமாய் வயிறு நோதல், இவையென்றறிக.

### சுரதிசாரக்குறி

சுரமுண்டாதல், தாபமுண்டாதல், மார்நோதல், அரோசிதமுண்டாதல், அதிசாரமுண்டாதல், சீதக்கட்டு விழுதல், ரத்தபேதியாதல் இவையென்றறிக.

### தோஷாதிசாரக்குறி.

அந்தர்தாக முண்டாதல், சரீரங் குளிர்ந்திருத்தல், கால் கைகள் குளிர்ந்திருத்தல், பிரமையுண்டாதல், வாந்தியுண்டாதல், விக்கலுண்டாதல், இருமலுண்டாதல், சுவாசமுண்டாதல், அதிசாரமுண்டாதல், நடுக்கமுண்டாதல், ஆயாசமுண்டாதல், உப்பசமுண்டாதல், நித்திரை யில்லாதிருத்தல், வேர்வையுண்டாதல், சீதம்விழுதல், இரத்தங் காணுதல், வயிறுநோயுண்டாயிருத்தல் இவையென்றறிக.

### அதிசார அசாத்தியக்குறி

மலம் விளக்கெண்ணெய் நிறமாகவருதல், மாமிசம்போலயிருத்தல், தேன்போல யிருத்தல், பலவீனமா யிருத்தல், மலம் துர்க்கந்தமாயிருத்தல், மலம் மிசிரவருணமா யிருத்தல், கறுப்பாயிருத்தல், நாநா வருணமாயிருத்தல் இவையென்றறிக.

### அதிசார சாத்தியக்குறி

கருங்குவளையைப்போல கண்கள் காந்தியுண்டா யிருத்தல் முகம் சந்திரபிம்பம்போலக் காந்தியுண்டா யிருத்தல், நாடியசாஸ்தானத்தில் சமதாதுடனிருத்தல், குயில் தொனியாயிருத்தல் தும்பலுண்டாதல், பசியுண்டாதல், தலையில் தினவுண்டாயிருத்தல், அன்னத்தின்மீது வாஞ்சையுண்டாயிருத்தல், பல்லுகள் மல்லிகை மலர்போ லிருத்தல், நாக்கு மெதுவாகவிருந்து த்ரவமுண்டாயிருத்தல், இவை சாத்தியமென்றறிந்து சிகிச்சைசெய்யவேண்டும்.

### அசாத்தியரோக நிதானம்

சுரம் தீக்ஷணமாய் இருத்தல், சரீரங் குளிர்ந்திருத்தல், சுரங் குடிலமாயிருத்தல், கண்ரெப்பையில் ரத்தமில்லாதிருத்தல், காலிலும் உள்ளங் கையிலும் ரத்தமில்லா திருத்தல், கண்களில் தேஜஸில்லாதிருத்தல், காதில் சமுத்திர இரைச்சலாயிருத்தல், வேர்வையில்லாதிருத்தல், அல்லது உலராத வேர்வையாயிருத்தல், முகத்தில் காந்தியில்லாதிருத்தல், கண்பருத்தல், அல்லது சூக்ஷமமாக யிருத்தல், தொப்புள், மார்பு, மூக்கு, கால், கைகள் குளிர்ந்திருத்தல், ஊர்த்த சுவாச முண்டாயிருத்தல், விக்கலுண்டா யிருத்தல், சரீர நடுக்க லுண்டாயிருத்தல், தலை நடுக்குதல், வேதனை யுண்டாயிருத்தல், கண்டத்தில் சிலேத்துமங் கட்டுதல், பரிமள மறியாதிருத்தல், மலம் வெளுப்பாயிருத்தல், நாடி சூட்சமாயிருத்தல், முதல் பித்தநாடி நடந்து உடனே சிலேத்துமநாடி நடக்

தால் இவ்விதக் குறிப்புள்ள ரோகங்கள் அசாத்திய மென்றறிக.

புசித்தபேர்கட்கும், ஸ்நானஞ் செய்த பேர்கட்கும், நித்திரை செய்த பேர்கட்கும், உபவாசமிருந்த பேர்கட்கும், வழிநடந்த பேர்கட்கும், கோபமா யிருந்துளோர்க்கும், பூதம் பிடித்தபேர்கட்கும், அழுதவர்கட்கும், ஸ்திரீசங்கஞ்செய்தபேர்கட்கும், கள்ளுண்ட பேர்கட்கும், மதிப்ரமையாயிருப்போர்க்கும், கஞ்சாதின்றபேர்களுக்கும், யோகாப்பியாசஞ் செய்த பேர்கட்கும், கோழி, முயல், தவளை இவை முதலான மாமிசம் புசித்தபேர்கட்கும், பயித்தியம்பிடித்தபேர்கட்கும், வெய்யலில் காய்ந்த பேர்கட்கும், நாடி கிரமமாக நடக்காது.

### மரணக்குறிகள்

கண்ணும் பல்லுங் கறுத்துக் காட்டல், வாயால் மூச்சுவிடல், கண் பஞ்சடைத்தல், மூச்சுவாங்கல், அடிக்கடி எழுந்திருத்தல், படுத்தல், இரண்டு கண்களும் மலர விழித்தல், வழிபார்த்தல், தொண்டையில் சேத்துமங் கட்டல், மருந்தாவது பத்தியமாவது விழுங்கக்கூடாமல் தொண்டையில் வருத்தப்படல், முகம் ஊசிபோல் நீண்டு காணல், உடம்பெல்லாம் நரம்புகள் தோன்றல், கண்ணில் இருள்மூடல், நாவரண்டுபோதல் பிதற்றுதல்.

### இங்கிலீஷ்
### வைத்திய அகராதியிலிருந்து மொழிபெயர்த்தது.

### சிவதத்துவங்களின் கெடுதி குறிகள்

பேச்சற்றுப்போதல், பேதமாய்ப்பேசுதல், மயக்கம் அல்லது மதிதடுமாற்றம், ஞாபகத்தவறு, பொய்க் காட்சி, ஸ்திரமில்லாத புத்தி, மட்டுமிஞ்சின இடாரிக்கம், மனோகற்பனையான வெறியாட்டு, மனோன்மத்தம், சுவரணையில்லாமை, நினைவு சஞ்சலித்தல், உலைவு, எண்ணம், மட்டுக்கு மிஞ்சின ஆண்மை, மனோசலனம், விறைப்பு, இமிர்ப்பு, இயல்புக்கு விரோதமான பரிசவறிவு இல்லாமை, உருசியில்லாமை, சுபாவத்துக்கு விரோதமான வாசனை, வாசனைக்கெடுதி, பார்வைகெடுதி, பார்வையில்லாமை, பார்வையீனம், கிட்டப்பார்வை, கேள்விக்கெடுதி, கேளாமை, தப்பான கேள்வி, சுபாவத்துக்கு விரோதமாய்த் தசை, நரம்பு, இயக்கம், குரற்கனைப்பு, தப்பான உச்சரிப்பு, நித்திரையில்லாமை, சுபாவத்துக்கு விரோதமான நித்திரை.

### உயிர்நிலையமான தத்துவங்களின் சீர்கேடு

படபடப்பா யோடுகிற நாடி, மந்தநடைநாடி, உறுதிநாடி, பலவீனமுள்ள நாடி, உரப்பான நாடி, மெதுவானநாடி, மெலிவு நாடி, சிறுமைநாடி, வலியுறுத்தாக நடக்கும்நாடி, ஒடுங்கின நாடி, முறைகேடான நாடி, மாறிமாறி நடக்கிறநாடி, தெறிப்புநாடி, நாடியில்லாமை, இருமல், மூச்சுவிடப் பிரயாசை, பெருமூச்செறிதல்.

### சுபாவ தத்துவக் கெடுதிகளின் குறிகள்

பசியின்மை, அருப்பசி, இரைக்குடலின் நலி, பசிகெடுதிதாரம், மோகமின்மை, விழுங்கலில் வருத்தம், மலச்சிக்கல், மலத்தளர்ச்சி, சுபாவத்துக்கு விரோதமான வயிற்றுக் கழிச்சல், அதிக வெயர்வை, சளிகக்கல், அதிக வாய்ச்சுரப்பு, சுபாவத்துக்கு விரோத மான மூத்திரம்.

### ஆண்பால் பெண்பாலுக்கடுத்த தத்துவக்கெடுதிகளின் குறி

ஆரோக்கியமற்ற இந்திரியம். சுபாவத்துக்கு விரோதமாய் இந்திரியம் விழுதல், இந்திரியம் விழுதலில் கடை, ஆண்குறி கோசம், நிமிர்ச்சியாக சக்தியில்லாமை, சுபாவத்துக்கு விரோதமாய் கோசம் நிமிர்ச்சியாதல், பலட்சம், மெலிவு, சுபாவத்துக்கு விரோதமாய் சிறுநீர் விடுதல், தூரபாகுதல், நின்றிருத்தல், சூதகநோய்.

### தோற்றகுண பேதம்

முகம் வெளுவெளுப்பாயிருத்தல், இயல்புக்கு விரோதமாய் சிவப்புநிறம் காட்டல், மஞ்சள்நிற நீலநிறங் காணல், வீக்கம், அரைப்பு, அமுக்கினால் நெரு நெருப்பு, சந்தம், சலனம், தத்தளிப்பு, எலும்பு உரோஞ்சுகிறது, பல் உரோசுகிறது, தட்டும்போது சத்த முண்டாதல், உறைத்த இரத்தம் இரத்தத்தில் அதிக நிணநீர், இரத்தங் கறுமைநிறமாயிருத்தல், மஞ்சள் நிணநீருண்டாயிருத்தல், கண்மணி வீக்கம், பொருமல், கண்மணி சுருங்கிக்காணல், சரீரங் குன்றுதல், நைதல், ஒருபாகங் குன்றுதல், சரீரம் அதிக பருமையாயிருத்தல் ஒருபாகம் அதிக பருமையாயிருத்தல்.

### இளைப்புள்ள உணர்ச்சிகள்

நோ-உபாதி, தவக்கம்-தவிப்பு, ஆயாசம்-தளர்வு, சோகம்-சோர்வு, குளிர்மை-சீதளம், சைத்தியம், சரீரத்தின் பல பாகத்தில் யாதொன்று ஊருகிறதுபோலுண்டாகிறஉணர்ச்சி அல்லது திடுக்கிடுதல், வெம்மை சூடு-உட்டணம், காங்கை, வெப்பம், அழற்சி. சிறுசிறுப்பு-தலைச்சுழற்று.

குறிஞ்சா-ஓர்பூண்டு. அவை, சிறுகுறிஞ்சா, பெருகுறிஞ்சா. இந்தியாவின் தென் தேசத்தாரால் குறிஞ்சாவென்றும், வடநாட்டாரால் அந்தமுள் என்றும் பெயர் வழங்குகிற இந்த மூலிகையின் வேரும் இலையும் வாந்தி செய்யும் குணத்தையுடைத்தா யிருக்கின்றது. உலர்ந்த இலையின் 20-முதல் 30-கிரெயின் வரை கொடுத்தால் வாந்தி யுண்டாகும். இதன்கூட சுடுதண்ணீர் மிகுதியாய் குடித்தால் நன்றாய் வாந்தியாகிறதற்கு உதவியா யிருக்கும். இரத்தக் கடுப்பு வயிற்றுப்போக்கு இவைகள் சுரத்துடனே ஆரம்பித்திருக்கினும் செடி மருந்தில் 3-அல்லது 6-கிரெயின்

எடுத்து அதினுடன் 20-கிரெயின் விளாம்பிசினும் அரைகிறெயின் அபினும் சேர்த்துச் சலத்தில் கலக்கிக் கொடுத்து இப்படித் தினம் மூன்றுதரங் கொடுக்கவும். சலதோஷத்துக்கும் நெடுநாளாக இருக்கப்பட்ட இருமலுக்கும் குறிஞ்சாவை விளாம்பிசினுடன் கொடுக்கில் குணமாகும். அன்றியும் கக்கிருமல்; ஆரம்பித்தவுடன் கொஞ்சகொஞ்சமாகவும் கொடுக்கலாம்

குறிஞ்சி-ஈந்து, செம்முள்ளி, மருதோன்றி.
குறிஞ்சிக்குரிய விருட்சங்கள் - வேங்கை, குறிஞ்சி, சந்தனம், தேக்கு, அகில், அசோகு, காந்தள்.
குறிஞ்சியுணவு - மூங்கிலரிசி, ஐவனநெல், தோரை, தினை, கிழங்கு, தேன்.
குறிஞ்சல்-கொட்டிப்பாஷாணம்
குறுகுத்தாறு-சிறுதாளி
குறுக்கு-குறுக்குநோய்
குறுக்கம்-கவுரிபாஷாணம்
குறுங்குடியாள்-தாளகம்
குறுந்துழாய்-சிறுதுளசி
குறுந்தேங்காய்-சிறுதேங்காய்
குறுந்தொட்டி-சிறுகாஞ்சோரி
குறுமணல்-இரசமணல்
குறுமுனி-அகத்தியன்
குறும்பி-காதழுக்கு
குறும்பூழ்-காசை
குறுலோவு-உடல்கதிவு
குறேட்டை-காக்கணம், பீச்சிவிளாத்தி
குறளுறு-குங்கிலியம்
கும்பகம்-நாணல்
குனட்டம்-அதிவிடயம்
குனுசகம்-சிறுகாஞ்சொரி
குனுசகம்-குன்றி
குன்மம்-ஓர்நோய்
குன்மக்கட்டி - குன்மசூலை, அஷ்டகுன்மத்தைப் பார்க்க.
குன்றத்துச்சித்தி-தாலம்ப பாஷாணம்.
குன்றி - ஓர்மருந்துசெடி, குன்றிமணி, மனோசிலை. குன்றிமணிவித்து சிவப்புநிறமும் ஒரு அற்றத்தில் கறுத்த பொட்டும் உடையதாயிருக்கிற . இந்தப்படர்செடியின் வேர் அதிமதுரத்தின் ருசியையும் மாதிரியையும் உடையதாயிருக்கின்றதால் நாட்டு அதிமதுரமென்னும் பெயரைப் பெற்றது. அது மருந்துக்கடுத்த குணங்களுடையதாயிருக்கின்றது. குழந்தைகளின் இருமலுக்குப் புதியமதுரமான வேரில் 2-அவுன்ஸ் எடுத்துச் சதைத்து அரைப்புட்டி சலத்தில் அரைமணிநேரம் வரையும் வேகவைத்து வடிகட்டி இதில் 8-அவுன்ஸ் கற்கண்டாவது தேனாவது சேர்த்து, மறுபடியும் அடுப்பில் வைத்துக்கட்டிப் பாகுப் பக்குவமாகிற வரையும் காய்ச்சவும். இதில் தேக்கரண்டி வீதம் சுரங்கூடியிருந்தாலும் இல்லாவிட்டாலும் தினம் பலகாரமும் இருமல் வருகிற வேளைகளில் கொடுக்கவும். உடன் பறித்த இலையின் சாற்றை சிறு குழந்தைகளின் வாயினுள் வெள்ளை நிறமான புண்களுக்குத் தொட்டு இட்டால் குணப்படுத்தும்.

### கூ

கூச்சாரம்-சிவசாரம்
கூந்தல்-முதியார்கூந்தல்

கூவிளவேர்-வில்வவேர்
கூர்மத்தோடு-ஆமையோடு
கூகைநீர்-காட்டெருமைப்பால், கிழங்குத்தண்ணீர்

கூகை-கோட்டான்
கூழ்ப்பாண்டக்காய்-சாம்பற்பூசனிக்காய்
கூகைநீறு-கூகைகிழங்கின் மாவு
கூகாகம்-கமுகு
கூகைநீறு-அங்குசரோசனம், கூவக்கிழங்கு, அரோரூட்மா.

கூகை நீரில் செய்யும் குழம்பு போன்ற கஞ்சி அனேக வியாதிகளில் நோயாளிக்கு தேகத்தில் பெலன் உண்டாவதற்கு உபயோகமாயிருக்கின்றது. இதைச் செய்யும் விதம் எப்படியெனில், துப்பரவும் நுண்மையும் வெண்மையுமான கூகைநீறு 1-மேசைக்கரண்டி அல்லது அரை அவுன்சில் கொஞ்சம் சலத்தைவிட்டு நன்றாய்ப் பிசைந்துக்கொண்டு அதின் பின் கால்புட்டி. கொதிக்கிற சலத்தைக் கிரமமாய் கொஞ்சங் கொஞ்சம் விட்டு முழுவதும் நன்றாய்க்கலக்கி இரண்டு மூன்று மினிட்டுநேரம் அடுப்பில் வைத்து மறுபடியும் கலக்கிப் பின்பு இறக்கிவைத்து அதில் கொஞ்சம் பஞ்சதாரையும் வாசனை கொடுக்கும் படியாய்க் கொஞ்சம் சாதிக்காய் அல்லது கறுவாப்பட்டையின் தூளும் சேர்க்கவும். சலத்துக்குப் பதில் பசுவின்பாலில் செய்யப் பெலன் மிகுதியாய்க்கொடுக்கும். ஆனால் இது நன்றாய்ச் சீரணமாகாவிட்டால் தண்ணீரே நலம். மேற்காட்டிய பிரமாணம் பிராயமானவர்கள் தினம் இரண்டு மூன்று தரம் சாப்பிடலாம். அதைத்தேவையான பொழுதெல்லாம் உடனுக்குடன் செய்துக்கொள்ள வேண்டும்.

கூச்சிரம்-கடப்பு
கூஷ்மாண்டம்-கலியாணபூசனி
கூடம்-கோளகபாஷாணம், எள்
கூடம்பில்-சுரை
கூடாரம்-பெருங்காயம்
கூதளம்-கூதாளி, தூதுளை, வெள்ளரி.
கூதாளம்-கூதாளி
கூதிர்-பனிக்காற்று, ஐப்பசி கார்த்திகையின் பருவம்.
கூத்தன்குதம்பை - மூக்கொற்றிப்பூண்டு, குதம்பை.
கூந்தல் - கமுகோலை, பனையோலை, காட்டுக்கூந்தல், கூந்தல்றுகு.
கூந்தற்பனை-கமுகு
கூந்தற்பாசி - ஓர்நீர்ப்பூண்டு, நிலக்கூந்தல், ஓர்பூண்டு.
கூந்தற்பூகம்-கூந்தற்கமுகு
கூமரை-கோங்கு
கூம்பல்-குமிழ்
கூரணம்-கோடகசாலை
கூரம்-பாகல், கோடகசாலை
கூர்-காரம்
கூர்கேவு-வெண்கடுகு
கூர்ச்சம்-தருப்பைப்புல்
கூர்ச்சேசகரம்-தேக்கு
கூர்மன்-உரோமம், புளகித்திமைக்கும் வாய்வு.
கூர்மைக்கரிவாள்-சவுக்காரம்
கூலம்-காராமணி, பாகல்
கூவிரம்
கூவிளம் } வில்வம்
கூவிளை

இந்தப்பழம் இங்கிலீஷ் வைத்தியரால் மிச்சமாய்ப் பிரயோகப்

பட்டு வருகின்றது. தீராத வயிற்றுப்போக்கு இரத்தக் கடுப்பு முதலியவைகளுக்குச் சுரமின்றி வியாதிக்காரன் பலவீனமாயிருக்கும்போது கொடுக்கில் மிகுந்த பலனுடையதாயிருக்கும். அதைக்கொடுக்கும் முறையாவது, பழுத்த பழத்தினுள்ளிருக்கும் பிசினில், 2-அவுன்சு எடுத்து 3-4-அவுன்சு சலத்தில் கலக்கிப் பஞ்சதாரையும் கூட்டி ஒருநேரங்கொடுத்து இந்தவிதம் தினம் இரண்டு மூன்றுதரங் கொடுக்கவும். வயிற்றுக் கழிச்சலும் மலபந்தமும், மாறி மாறியுண்டாகிறதற்கு மேற்சொன்ன ஔஷதந் தினந்தோறும் காலமே கொடுத்தால் மலத்தைக் கிரமப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் தீராத கழிச்சல் கடுப்பு முதலானவையும் ஷெ மருந்தில் பாதிகொடுக்கில் நீங்கும்.

கூவிளம்பத்திரி-ஓர்பத்திரி

திருமந்திரம்

பச்சிளங்கூவிளம் பத்தியுண்டி
டில், நிச்சயஞ்சொன்னேன் நெருப்
புங் குளிர்ந்திடும், அச்சமுமில்
லையகரந் திருமேனி, வச்சிரம்
போலவே வந்திடும் விந்துவே.

கூவிளை-வில்வம்
கூழம்-எள்ளு
கூழாமணி-கூழ்முன்னை
கூழ்-நறுவிலி
கூழ்முன்னை-ஓர்கீரை
கூழ்வரகு-கேழ்வரகு
கூறல்-நாகபாஷாணம்
கூறு-எள்ளு
கூனன்-ஆமை
கூனன்முதுகு-ஆமையோடு

கூகைக்கிழங்கு - இருமல், ஈளை, தாகம், வெப்பும்போம். மேனி உண்டாம்.
கூகைநீறு-இருமல், கிறுமிவீழ்தல், நாம்பினுண்டாகுங் கட்டி, பிரமியம், மாதர்குய்யநோய், மார்புநோய்போம். வீரியம் உண்டாம்.
கூத்தங் குதம்பை - குத்துவாதம், ஜன்னி, சுரோணித வீர்யவும் போம். பித்தம் உண்டாம்.
கூழைக்கடாக்கறி-சூலை, நெடுநாள் நீரிழிவும்போம். கரப்பான் புண்ணும் உண்டாம்.

### கெ

கெசராசி-பூலா
கெசாசைநா-கையாந்தகரை
கெசகன்னி-வெருகு
கெசமாமுட்டி-எட்டி
கெச்சம்-முல்லை
கெண்டைவியாதி } ஓர்
கெண்டைவிழுந்தநோவு } நோய்
கெந்தகம்-நாய்வேளை, கெந்தகம்
கெந்தனம்-கோடகசாலை
கெந்திகம்-பாம்புகொல்லி
கெந்திபரம்-ஆடுதின்னாப்பாளை
கெந்திவாருணி-பேய்த்தும்மட்டி
கெவுரி-வெள்ளைக்காக்கணம்
கெவுரா-துளசி
கெவ்வியம்-நாய்வேளை
கெண்டிவெந்நீர் - வாயுவினாலுண்டாகும் கால்கை முதலான குடைச்சல்களும்போம்.
கெண்டைமீன்கறி - அநேகம்நோய், அரோசி, வயிற்றுவலி, வாயுவும் உண்டாம்.
கெந்ததாளி - அச்சரம், கரப்பான், தொண்டைப்புண், மூலச்சூடும் போம்.
கெந்தமாஞ்சல்-நீரைக்கட்டும்

கெந்தியுப்பு-உஷ்ணம், உடல் கரைதல், குடல்வாய்வு, மந்தமும் போம்.
கெளிற்றுமீன் - கபம், கரப்பான், சுக்கிலம் புண்ணுமுண்டாம்.

### கே

கேக்கிப்பூ-எரிவு, காந்தல், நீரடைப்பு, மங்கு, சொறி, தேமல், மேகவூறல், வாதம், வாய்வும் போம். தேகவொளி, புளகம், பெண்வசியமு முண்டாம்.
கேழ்வரகு-பித்தவாயுவு உண்டாம்.
கேழ்வரகுகளி-அதிக பலம், வாதமுமுண்டாம்.
கேழ்வரகு கூழ் - பித்தம், பெருவயிறு, வாதமும்போம்.
கேளியிளநீர் - அனல், கரப்பான், தாகம், மாந்தம், மேகம், வயிற்றுப் புழுவும்போம்.
கேசதம்-கையாந்தகரை
கேசமுட்டி-வேம்பு
கேசரம்-மகிழமரம்
கேசரிகம்-நாயுருவி
கேசரீகம்-நாயுருவி
கேசியா-தாழை
கேசினி-சங்கங்குப்பி
கேடகம்-புறமுட்டி
கேதகை-தாழை
கேந்தகம்-கோடகசாலை
கேந்துமுறியம்-நாய்வேளை
கேப்பை-கேழ்வரகு
கேமாக்கி-வெள்ளைக்காக்கணம்
கேலிகம்-அசோகு
கேவலதிரவியம்-மிளகு
கேவலி-வள்ளிக்கொடி
கேவு-வெண்கடுகு
கேனி-தெங்கு

### கை

கையாந்தகரை - காமாலை, கைகாலெரிவு, குட்டம், குரற்கம்மல், சிலேட்டுமம், சுரம், சோபை, தாகம், நீரிழிவு, பல்நோய், பாண்டு, பித்தமும்போம்.
கைவரச்சம்பா-அதிகபலம், சுக்கிலமுமுண்டாம்.
கைச்சற்றேருடை-புளிகாரத்தை
கைச்சி-கமுகு
கைதை-தாழை
கைத்தகோடாம்-எட்டி
கைத்தா-காட்டாமணக்கு
கைப்பு-ஆடுதின்னாப்பாளை
கையரியம்-இரும்பு

கையாந்தகரை-ஓர் பூண்டு, அவை, கொடிக்கையாந்தகரை-ஓர்பூண்டு. பொற்றலைக் கையாந்தகரை - ஓர் நேர்த்தியான மருந்துப்பூண்டு.

கைரவம்-வெள்ளாம்பல், குமுதம், கைரவம்.
கைவிதை-வெந்தயச்செடி

### கோ

கொக்கு-மாமரம்
கொக்குமந்தாரை-காட்டாத்தி
கொக்கேறி-ஓர்பூண்டு, நெட்டி
கொங்கம்-கோளகபாஷாணம்
கொங்கரி-ஏலரிசி
கொங்காரி-குங்குமமரம்
கொங்கு-கருஞ்சுரை, தேன், சருக்கரை.
கொச்சி-சவரிலோத்திரம், மிளகாய்ச்செடி.
கொச்சிமஞ்சள்-மஞ்சள்
கொச்சிக்குழந்தை-வைப்பரிதாரம்
கொஞ்சி-ஓர்செடி, அவை, காட்டுக்கொஞ்சி, கடற்கொஞ்சி, கொடாலகல், வெந்தோன்றி.
கொடிக்கழல்-கழற்சி
கொடிக்கால்-வெற்றிலைக்கொடி
கொடிச்சி - காவட்டம்புல், கொடுவேலி.

கொடிநெட்டி-நீர்ச்சுண்டி

கொக்குக்கறி-வயிற்றுக் கிருமிபோம். அரோசகம், கரப்பான், புண்மேகமு முண்டாம். மருந்துண்ணும்போது இதன்கவிச்சாகாது.

சீப்பங்கோரை-ஓர்கோரை
சீப்பு-சிப்பங்கோரை
சீமுந்தை-கொடிமுந்திரிகை, முந்திரிகை.
சீமையத்தி-தேனத்தி

சீமை அகத்தி-இது படர்தாமரை முதலிய தோலின்மேல் வரும் பற்றுகளுக் கெல்லாம் மிகுந்த நன்மையான ஔஷதமா யிருக்கிறது. இதன் பிரயோகம் என்னவென்னில், உடனே பறித்த இலைகளை அரைத்து அதற்குச் சமனெடை மெழுகு பிளாஸ்திரி அல்லது தேங்காயெண்ணெயில்சேர்த்துத் தினந்தோறும் இரண்டுதரம் அழுத்தித் தேய்க்கவேண்டும் என்பது.
சீமைக்காசிக்கல் - காசி, விஷசுரத்தில் சீதளத்தைக் கண்டிக்கின்றது. விக்கலையும் தணிக்கும் நாள்பட்ட வயிற்றுக்கழிச்சலுக்குக் கசப்புள்ள மருந்தாயோசிக்கப்படுகின்றது.
சீமைசிவதை - ஓர்கொடி, இது பேதிமருந்தாக யோசிக்கப்படுகிறது.
சீமைச் சுண்ணாம்பு - ஓர் சுண்ணாம்பு.
சீமைத்தக்காளி-ஓர்செடி
சீமைவெள்ளரி-ஓர்கொடி
சீமைமணத்தக்காளி-ஓர்பூண்டு
சீய்க்காய்-ஓர்செடி
சீயம்-காட்டெருமைப்பால், எருக்கம்பால்.
சீரகபாடி-கோட்டம்

சீரகம்-ஓர் பூண்டு, அவை, கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், செஞ்சீரகம், நட்சத்திர சீரகம், அனீசு நற்சீரகம், நாய்ச்சீரகம், சீரகம்.

சீரகம் அசீரண வியாதியில் பசியுண்டாக்குகிற ஜீரணிப்பு மருந்தாக உபயோகப் படுத்தப் படுகின்றது.

சீரணி-ஓமச்செடி
சீரமோட-வீழி, விழுதி
சீரம்-இலம்ச்சை, காட்டெருமைப் பால்.
சீரா-பலாசு
சீரிடம்-வாகை
சீரிணபன்னன்-வெம்பு
சீரிவிருட்சம்-புளியமரம்
சீருணி-தாம்பரம்
சீருள்-ஈயம், செம்பு, பஞ்சலோகம்.
சீரை-மரத்தோல்
சீரக்கோழி-நரைக்கொள்ளு
சீர்த்துழாய்-துளசி
சீலம்-சிக்கில்
சீவகம்-ஏலத்திருநாமப்பாலை, வேழைக, இலந்தைத்தம்பலம்.
சீவந்தி - சிந்திற்கொடி, பாலை, படுமரம், புல்லூரி
சீவந்தில்-சிக்கில்
சீவனுகி-வெற்றிலை
சீவனி - செவ்வள்ளி, பாலை, ஆடுதின்னாப்பாளை, சஞ்சீவி, சீவினிநாடி.
சீவந்தி-மந்தாரச்சிலை
சீவனியம்-நீர்
சீவன்-காந்தம்
சீவா-பாலை
சீவி-அழிஞ்சில்
சீவிகா-ஜாதிக்காய்
சீறல்-பெருங்காயம்
சீனப்பா-பரங்கிழங்கு
சீனமிளகு-வால்மிளகு
சீனக்காரம்-படிகாரம்
சீனிக்கிழங்கு-வத்தாளைக்கிழங்கு

## சு

சுகசிம்பி-பூனைக்காலி
சுகட்டாண - நாணற்புல், முடக்கற்றான்.
சுகதாரு-கடம்பு
சுகத்திரம்-வாகை
சுகந்தமா-கற்பூரமரம்
சுகந்தமூலி-வெட்டிவேர்
சுகந்தம் - அகரத்தை, வாழை, ஈரவெங்காயம்.
சுகம்பல்-புளிநறளை
சுகாந்தம்-ஈரவெங்காயம்
சுகிதம்-பால்
சுகிர்தம்-நல்லநெய்
சுகமாராதுவி-இலவி
சுக்கங்காய்-மிதுக்கங்காய்
சுக்காங்கீரை-புளிகீரை
சுக்கிலபுட்டா-குங்குமம், ஞாழல்
சுக்கிலம்-பழமுண்ணிப்பாலை, பாலைமரம்.
சுக்குவேர்க்கொம்பு - உலர்ந்த இஞ்சி, ஒளஷதங்களுக்கு, இஞ்சியைப்பார்க்கிலும் சுக்கு நலம், ஆனால் சுக்கு கிடையாதிருக்கில் இஞ்சியை எடுத்துக் கொள்ளலாம். வாயுகுன்மம், வாந்தி, குடல்வலி, சுரமின்றி வரும் மற்ற வலிகள் இவைகளுக்கெல்லாம் சதைத்தசுக்கு அரை அவுன்சில் அரைப்புட்டி கொதிக்கிற தண்ணீரைவிட்டு ஆறுவதற்குமுன் வடிகட்டி அதில் 2-அவுன்சுவீதம், அரை அல்லது ஒருமணி நேரத்துக்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். நாட்சென்ற வாதங்களுக்கு மேற்படி சுக்குக்குடிநீரை இரவில்படுக்குமுன் கொடுத்து போர்வை அல்லது கம்பளியால் தேகத்தைமூடி வேர்வையுண்டாக்கில் மிகுந்த குணத்தைக் கொடுக்கும்.

தலைபிடிக்கும் முகவலிக்கும் சுக்கைக் கொஞ்சந் தண்ணீர்விட்டுக்கட்டியாயரைத்துப் போல்ட்டீஸ்செய்து வலியின்மேல் பற்றவைத்தால் தீரும்.

வாந்திபேதிக்கு ஒரு அவுன்சு சுக்கைச் சதைத்து ஒருபுட்டிக்கொதிக்கிற சலத்தில் போட்டுவைத்து வடிகட்டித் தாகிக்கிற பொழுதெல்லாம் குடிக்கலாம்.

பல்வலி, திமிர்நாக்கு, மற்றும் வாயினுள்வருகிற வலிகளுக்கெல்லாம் ஒருதுண்டு சுக்கை வாயிவிட்டு மென்று ஒதுக்கிக்கொண்டால் உமிழ்நீர் மிகுதியாய்ப்போய் வலிமாறும்.

சுக்குநாறிப்புல்-மாந்தப்புல்
சுக்குமம்-சிற்றேலம்
சுக்கை-மொசுமொக்கை
சுங்கம்-ஆடுதின்னாப்பாளை
சுசிகம்-புளியாரை
சுசிதம்-பால்
சுச்சு-சுண்டி, சுக்கு
சுடாக்கொடி-ஆர்த்திக்கற்பூரம்
சுகுலை-ஈமம், சவுக்காரம்
சுடுதுரத்தம்-சித்திரப்பலாவி
சுடுகாடுமீட்டான்-முடக்கற்றான்
சுணை-சுணைக்கோரை
சுணைவு-பேய்க்கடலை
சுண்டம்-கள்
சுண்டி-தொட்டால்வாடி, சுக்கு, கள், நீர்சுண்டி, வேர்க்கொம்பு.
சுண்டிகை-உண்ணாக்கு

சுண்டியுண்டை - கொஞ்சி, சதுரக்கள்ளி, சீரகம்.
சுண்டில்-தொட்டால்வாடி, சண்டி, தொட்டால் சுருங்கி.
சுண்ட-சுண்டைச்செடிகள்
சுண்ணவரிசி-முல்லை
சுண்ணாம்புத்தண்ணீர்

புதிதாய் நீற்றின சுண்ணாம்பில் 6-புட்டித் தண்ணீரைக்கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுச் சுண்ணாம்பு முழுவதும் அடியில் உறைந்து சலம் தெளியுமட்டும் வைத்திருக்க வேண்டும். அவசரமாய் வேண்டியிருந்தால் அரைமணிநேரம் வைத்திருந்தால் போதும். அநேக விதங்களில் இந்த ஒளஷதம் மிகுதியாய் உபயோகப்படுவதால் எப்பொழுதும் முன்னதாகச்செய்து வைத்திருக்கவேண்டும்.. இதைக் காற்று ஏறாமல் படிக அடைப்புள்ள குப்பிகளில்விட்டு வைத்திருக்கில் கேடில்லாமல் வெகுநாளிருக்கும். ஒளஷதத்துக்குத் தெளிந்த சலமாத்திரம் எடுக்கப்படும்.

குலையெரிவுக்கும், இரைக்குடலிற்புளிக்கும் புளித் தேப்பங்கூடிய அசீரணத்துக்கும், வாந்திக்கும் உஷ்ணத்தாலுண்டாகும் மஞ்சள்நிற மூத்திரத்துக்கும் இந்தச் சலத்தில் ஒருவேளைக்கு ஒன்றரை அவுன்சு அல்லது 2-அவுன்சு சமனளவு பாலிற் கொடுக்கலாம். இப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கவேண்டும். சிலநாள் கொடுத்தபின் வியாதியை மாற்றிக் குணத்தைக்கொடுக்கும் மேற்சொன்ன வியாதிகளுடன் வரும் வயிற்றுப் போக்குக்கு

மற்ற ஔஷதங்கள் கொடுப்பதுமன்றி மேற்படி சுண்ணாம்புத் தண்ணீர் ஒரு தேக்கரண்டி வீதம்கொஞ்சம் பாலில் தினம் இரண்டுதரம் கொடுக்கவேண்டும்.

இலிங்கம் உபஸ்தம் இவைகளில் உண்டாகும் வருத்தமான எரிவுக்குச் சுண்ணாம்புத் தண்ணீரை வெதுப்பித் தினம் 3- அல்லது 4 - தரம் அதைக்கொண்டு நனைக்கில் நீங்கும். உபஸ்தத்தில் நின்று புறப்படும்மேகவெள்ளை முதலானவைகளுக்கு வலியுங் கூட உண்டாயிருக்கில் சுண்ணாம்புத் தண்ணீரை யுட்பீச்சினாலும் மற்றெவ்விதமாயாவது உள்ளேற்றினாலும் வியாதி தீர வாசியாகாமற் போனாலும் சாந்தப்படும்.

கண்டமாலைக்கும் முக்கியமாய் விப்புருதிகளும் புண்களும்கூடிய கண்டமாலைக்கும் சுண்ணாம்புத் தண்ணீரில் அரை அவுன்சு வீதம் தினம் 3-அல்லது 4-தரம் இப்படி சிலநாள் தொடர்ந்து கொடுக்கில் பலன்படும். நன்னாரி கஷாயத்திற் சேர்த்துக் கொடுக்கிறது. சிலமேகவியாதிக்கு உபயோகப்படும். சலம் மிகுதியாய் வடியும் கண்டமாலையின் புண்களுக்கும் மற்றும் பலமாதிரி புண்களுக்கும் மேற்படி சலத்தைவிட்டாற் குணப்படுத்துகிறதுந்தவிர அதிக நீர்வடியப்பட்ட தோலில் மேல்வரும் அநேக வியாதிகளுக்கும் சுண்ணாம்புத் தண்ணீர் தனித்தாவது சமன் அளவு சலத்திற்கு கலக்கியாவது விட்டால் சவுக்கியப்படும்.

உப்புத்திராகவம் முதலியவைகளை நஞ்சாகக் குடித்திட்டால் சுண்ணாம்புத் தண்ணீரை யதிகமாகப் பாலிற்சேர்த்துக் கொடுத்தால் மற்ற உப்புகளைப்போல் மிகுந்த காரமற்றதாயினும் காரமான மாற்று மருந்தாயிருக்கிறது. பர்ஷாணத்தை நஞ்சாகத் தின்றவர்க்குங் கொடுக்கலாம்.

நீரிழிவுக்கு ஒருவேளைக்கு 2- அவுன்சு சுண்ணாம்புத் தண்ணீரைப் பாலிற் சேர்த்துத் தினம் இப்படி 3 - தரங் கொடுத்தால் அதிகமாய்ப்போகிற மூத்திரத்தைக் குறைக்கும். இராத்திரி படுக்கைச் சமயத்தில் அரை கிறெயின் அபினும் கொடுக்கலாம்.

தீப்பட்ட புண்களுக்குச் சுண்ணாம்புத் தண்ணீரும் நல்லெண்ணெயும் சமனளவு எடுத்து இரண்டையும் ஒன்றாகச்சேரும்படி நன்றாய்க்கலக்கி இதில் சீலையை நனைத்து இரணங்களில் இட்டு அடிக்கடி நனைக்கிறதும் தவிர சீலையையும் மாற்றிமாற்றி இடவேண்டும். இப்படிச் செய்வது நல்ல பிரயோகமாயிருக்கிறது.

சுதம்-நெஞ்சில்
சுதாச்சி
சுதார்ச்சி } சதுரக்கள்ளி
சுத்துரு-கண்டங்கத்திரி
சுபுட்பம்-காம்பு, பவளமரம்
சுப்பிரமதுவா-கூகைநீறு
சுமங்கை-ஆடுதின்னாப்பாளை, வறட்கண்டி
சுமலி-கள்
சும்புள்-கடம்பு
சும்மை-ஆவிரை

சுயிரகம் - குசப்புல், தருப்பைப் புல்.
சுயோகி
சுலோகி } கள்
சுரகாமலிகம்-செருந்தி
சுரசம்-அரத்தை, சிறுகிழங்கு பாதரசம்.
சுரசா-துளசி
சுரஞ்சனம்-கமுகு
சுரதாக்கு-அரத்தை
சுரபி-தேன்கொடுக்கி, பிரமி, சாதிக்காய், துளசி, மல்லிகை.
சுரபிபத்திரை-சம்புநாவல்
சுரபி-இலவம்பிசின்
சுரபுன்னை
சுரபுன்னாகம் } ஓர் மரம்
சுரமதி-சிலந்தி
சுரமலிகம்-செருந்தி
சுரம்-ஓர்நோய், உப்பு
சுரர்துருமம்-தேவதாரம்
சுரழ்-இலவம்பிசின்
சுரளிகை-பாலை, பாலைமரம்
சுரா
சுரை } கள்
சுரர்காம்-தென்னை
சுருட்டி-மயிர்ச்சிகைப்பூடு
சுரைக்கந்தகம்-ஓர்கந்தகம்
சுவரொட்டி-ஓர்பூண்டு
சுவர்ச்சாதி-சத்திச்சாரம்
சுவலை-அரசமரம்
சுதன்னிபீதி-செப்புமல்லிகை
சுவாசம்-எட்டி, புருமுட்டி, பேராமுட்டி, விஷமுமுட்டி, சவட்டுமண்.
சுவாதுகண்டம்-நெருஞ்சில்
சுவாதுகந்தி-துளசி,
சுவிகை-கள், கச்சோளம்
சுவேதகம்-சவரிலோத்திரம்
சுவேதகாண்டம் - சீந்தில், வஞ்சிக்கொடி.
சுவேதகுசுமம்-வெள்ளெருக்கு
சுவேதசாரம்-நாணற்புல்
சுவேதமூலம்-சாரணை
சுவேதமூலி-தொட்டால்வாடி.
சுவேதம்-நாணல், மாவிலிங்கு, வஞ்சிமரம், தெள்ளி, வேர்வை.
சுழானை-பொன்னாவிரை
சுளி-புளியாரை
சுளிகை-முருங்கை
சுளுந்து-சோரகன்
சுள்ளி-அனிச்சை, ஆச்சா, ஞாழல், குங்குமமரம், மயிர்க்கொன்றை, மாமரம்.
சுள்ளிடுவான்-மிளகாய்
சுறணம்-காணை
சுறை-சொற்றுன
சுரோணிதம்-அனிச்சை
சுனக்குடம்-சதுரக்கள்ளி
சுனம்-வெள்வெண்காயம், வெள்ளுள்ளி.
சுனிசனம்-புளியாரை
சுனுக்கு-சதுரக்கள்ளி
சுனைவு-பேய்க்கடலை
சுன்னச்சி-சத்திச்சக்கிரம்

## சூ

சூக்குமதண்டுலம்-திப்பிலி
சூக்குமபத்திரம்-கொத்தமல்லி, சீரகம், செங்கரும்பு, கடுகு.
சூக்குமம்-சீந்தில்
சூக்குமில்-சிலந்திப்பூச்சிக்கூடு
சூக்குளி-வெற்றிலை
சூக்குமம்-வேலிப்பருத்தி
சூசகம்-தருப்பைப்புல்
சூடன்-ஆர்த்திகற்பூரம்
சூடிச்சி-எவட்சாரம்
சூடினர்-கோங்குமரம்
சூதகம்-மா

சூதபாஷாணம் - இரசத்திலுண்டாகிற பாஷாணம், அது வைப்பு.

சூதமாமரம்-பாதரசம்,இரதம் புளிமா, பவளமல்லிகை, மன்மதன் கணை.
சூதா-ஓரிதழ்த்தாமரை
சூதைப்பொன்னாக்கி - நாகபாஷாணம்.
சூதகோக்கல்-நீலாஞ்சனக்கல்
சூத்திரபுட்பம்-பருத்தி
சூத்துமம்-இலந்திராயசம்
சூப்பியம்-பாம்புகொல்லி
சூரணம்-கரணைக்கிழங்கு
சூரம்-கடலை
சூரல்-பிரம்பு
சூரன்-கௌரிபாஷாணம்
சூரி-எருக்கு, நத்தைச்சூரி, புளிச்சங்கீரை.
சூரியன் - செவந்தி, செவ்வெருக்கு
சூரியகாந்தம்-பொழுதுவணங்கி
சூரியகாந்தவாமணக்கு - செவ்வாமணக்கு.
சூருமம் - தருப்பைப்புல், குசைப்புல், மாந்தப்புல்.
சூரை-சூரைப்பழம், தூதுவளை
சூர்-மிளகுவால், மிளகு, ஓர்நோய்
சூலி-சதுரக்கள்ளி
சூலினி-வெற்றிலை
சூலை-ஓர்நோய், அனைவ, அட்சசூலை, ஆமசூலை, உல்கத்திசூலை, உற்காரசூலை, கர்ப்பசூலை, கற்சூலை, கன்னசூலை, கிருமிசூலை, சுரசூலை, தூரசூலை, நிதம்பசூலை, பக்கசூலை, முறிதிரிசூலை, மேகசூலை.
சூழ்-கடலை
சூழ்தாழை-தாமரை

### செ

செகரிசம்-நாயுருவி
செகனவாதம்-ஓர்நோய்
செக்கவுரி-கற்றுறை
செக்குக்கீரை-செக்கிலைக்கறி
செங்கருங்காலி-சிறுமாரோடம்
செங்கலம்-செந்தாமரை
செங்கழுநீர்-செங்குவளை
செங்கலை-குதிரைப்பற் பாஷாணம
செங்காந்தள்-ஓர்பூண்டு
செங்கிரந்தி-ஓர்நோய்
செங்கீரை-ஓர்கீரை
செங்குமுதம்-செவ்வாம்பல்
செங்குவளை-செங்கழுநீர்
செங்கொடிவேலி-ஓர்பூண்டு
செங்கோடு-செருந்தி
செச்சை-செந்துளசி, வெட்சி
செஞ்சம்பா-செம்பாளைநெல்
செந்தருப்பை-நச்சுப்புல்
செந்தம்-எழுத்தாணிப்பூண்டு
செந்தாமரை-ஓர்புஷ்பம்
செந்தாழை-ஓர்தாழை
செந்திரு-தாளகம்
செந்தினை-கம்பு
செந்து - பெருங்காயம் சடாமாஞ்சில்
செந்துத்தி-ஓர்செடி
செந்தும்பை-ஓர்பூண்டு
செந்தூர்த்தாதி-கெந்தகம்
செந்தொட்டி-சிறுகாஞ்சொறி, சிவப்புத்தொட்டி.
செந்தோன்றி-கார்த்திகைப்பூ
செந்நாடிக்கா-மூக்கிரட்டை
செப்பபுல்-நாணற்புல்
செப்பிடில்-சடாமாஞ்சில்
செப்பிலை-தும்பை
செம்பசளை-சிவப்புப்பசளை
செம்பண்ணை-காவற்பண்ணை
செம்பசத்தை-ஓர்செடி
செம்பிச்சி-செந்தொட்டி
செம்பில்வேலை-சோரபாஷாணம்
செம்பின்பச்சை-காகப்பச்சை
செம்புக்குள்வேதை-கற்பறி பாஷாணம்.

செம்புளிச்சை-செம்மணத்தி
செம்மணத்தி-செம்புளிச்சை
செம்பை-சிற்றகத்தி
செம்மட்டி-மரமஞ்சள்
செம்மரம்-அழிஞ்சில்
செம்மலை-ஆவிரை
செம்மீன்வயிரம்-மீனம்பர்
செம்முருங்கை - ஓர் முருங்கைமரம்.
செம்முள்ளி-ஓர்பூண்டு
செயசேதி-உப்பு
செயநீர்கருத்தன்-நவட்சாரம்
செயபரம்-மரமஞ்சள்
செயபீதம்-கௌரிபாஷாணம்
செயலை-அசோகு
செருக்கம்-மாதளை
செருந்தி - செருந்தி, மணித்தக்காளி, வாட்கோரை.
செருப்படி } ஓர் பூண்டு.
சிறுசெருப்படி }
செல்தம்-கோரைக்கிழங்கு
செலமலம்-கடற்பாசி
செவியம்-இலாமிச்சை
செவி-நறுவிலி
செவத்தம்-ஓர் முருங்கைமரம்
செவத்தெருக்கு-ஓர் பூண்டு
செவந்தி-ஓர் பூண்டு
செவப்பம்மான் பச்சரிசி - ஓர் பூண்டு.
செவப்பாமணக்கு - செவ்வாமணக்கு.
செவப்புக்கந்தி-ஓர் வைப்புப்பாஷாணம்.
செங்களா - சுகம், தேகம், பொன்னிறம், புகழ், புத்தியும் உண்டாம்.
செங்கத்தாரி-பூதகரப்பான், மேகவெடிசூலையும்போம்.
செங்கரும்பு-சிவப்புக்கரும்பு, கபம், தாகம், காலை பித்தமெல்லாம் போம்.
செங்கழுநீர்க்கிழங்கு-காசம், ஸ்திரீகளால் வந்தவழல் திரிதோஷம், பித்தம், மேகமும்போம். கண்குளிர்ச்சி உண்டாம்.
செங்கழுநீர்ப் பூவனிதல் - திரிதோஷங்கள், பலவித மேகம், வீக்கம், வெட்டையும்போம், சுகம், போகமும் உண்டாம்.
செங்கற்றுழை-சிவப்புக் கற்றுழை, தேகக்குளிர்ச்சி உண்டாம், இரும்பு பொன்னும்.
செங்கால்நாரை - பலம், வாதமும் உண்டாம்.
செங்கீரிப்பிள்ளை - தீபனம், பலம், விந்துவும் உண்டாம்.
செங்கீரைத்தண்டு - சிவப்புக்கீரை, ஸ்திரீபெரும்பாடு, பித்தவெப்பும்போம்.
செங்குருவையரிசி - கரப்பான், சிரங்கு, சொறி, மந்தம், வாய்வும் உண்டாம்.
செங்குளநீர்-சிவந்தமண்சலம், உஷ்ணம், தாகம், புத்தியும்போம். மேகம், குடலழற்சி, திமிர், புண்ணும் உண்டாம்.
செங்குன்றி - சிவப்புக் குண்டுமணி, கரப்பான், வாதமும் போம்.
செஞ்சம்பாவரிசி - தீபனம், நல்ல மேனியும்போம்.
செஞ்சோளம் - சிவப்புச்சோளம், கரப்பான், சிறுசிரங்கு, புண், மந்தமும் உண்டாம்.
செண்பகப்பூ-அஸ்திசுரம், அனல் வாதபித்தம், மேகமும் போம். கண்குளிர்ச்சி, தாதுபோகமும் உண்டாம்.
செந்தாயிலை - அரோசகம், தோஷம், நீர்த்தாரையைப் பற்றிய கொடியசூடும், வாயுக்குத்தலும் போம். தீபனம் உண்டாம்.

செந்தாழம்பழம் – சிகப்புத்தாழைப்பழம், தாகம், தலைவலி, பித்தம் மேகவெட்டை, வாந்தியும் போம். மேனி உண்டாம்.

செந்தாழம்பூ - கபம், காசம், சலதோஷம், தலைநோய், வாதமும் போம்.

செந்திருக்கெண்ணை - அசீரணம், அநேக வாதகுட்டம், தந்தவாய்வு, மந்தம், முகஜன்னியும் போம். சரீரகாந்தி தாதுபுஷ்டியும் உண்டாம்.

செந்துளசி - சிவந்ததுளசி, எல்லா தோஷங்களும், கடிவிஷம், கபமும்போம்.

செந்தொட்டிவேர்-கபம், கரப்பான், கீல்வலி, சுரம், சுவாசம், தாகம், வாயுவும்போம். மாதர் சூதகம் உண்டாம்.

செந்நாயுருவி - சிவந்தநாயுருவி, காமாலை, சூதகம், சோகை, பாண்டும் காசமும், கைப்புமாக விருக்கும், செப்புநெருஞ்சில், சிறுநெருஞ்சில், அனல், கண்டமாலை, கிரந்தி, குஷ்டம், சிறுநீருஷ்ணம், சுக்கிலமேகம், திரிதோஷம் வெப்பம்போம். குளிர்ச்சி உண்டாம்.

செம்பசளை - சிவப்புப்பசளை, அரோகம், சர்த்தி, நீர்க்கடுப்பு, நீரடைப்பும்போம்.

செம்பரத்தம்பூ - செம்பருத்திப்பூ, இரத்தபித்தம், இரத்தவெள்ளை, பிரமி, பெரும்பாடு, மேகவெட்டையும்போம்.

செம்பருத்தி - பித்தம், மேகவழலும்போம்.

செம்பருத்திப்பூ - அழலை, இரத்தபித்தம், தாகம், பேதி, வயிற்றுக்கடுப்பு, விந்துவை நீற்றும் மேகம், கிராணி, வெட்டையும் போம்.

செம்புக்கலம்-தாமரைக்கலம், இரத்த தோஷம்போம். தேகவாரோக்கியம் விழி யொளிவும் உண்டாம்.

செம்பையிலை-கட்டி, ஜந்நி, தினவு, துடைவாழை, நீரேற்றம், பிளவை, பீநசங்கள், புண்புரை, மேகம், வாதகபம், விப்புருதி, விரணம், வீக்கம், வெடித்த புண், புரைகளும்போம்.

செம்மறி ஆட்டிறைச்சி - எப்பிணியும் செங்கரப்பானும் உண்டாம்.

செம்மறிதயிர் - இரத்தக் கடுப்பு, கரப்பான், சொறி, வாய்வும் உண்டாம்.

செம்மறி செய் - அம்மம்கண்ணோய், கரப்பான், சொறிசிரங்கு; தினவு, பித்தம், வாதமும், உண்டாம்.

செம்மறிபால் - சிலேட்டுமம், பித்தம், மேல்மூச்சு, வயிறுவிம்மல், வாய்வும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

செம்மறிவெண்ணெய் - ஐயம், கரப்பான், பித்தம், வாதமும் உண்டாம். உருசியாக விருக்கும்.

செம்முள்ளி-சிவந்தமுள்ளி, ஐயம், சிலேட்டும கபம், சிறுவாசுரதோஷம், மாந்தகணமும்போம். தொண்டைதெளிவு உண்டாகும் செம்மைநிறப் பசும்பால் வாதம் போம்.

செருக்குவாரு - மூலம்போம், கரப்பான், குரல்கம்மல், சித்தந்தெளியாமை, பயித்தியம், பித்தமும் உண்டாம்.

செருப்படி - இசிவு, சிலேற்பனம், சூலை, மந்தம், மேகம், வாதம், வாதகுன்மமும்போம்.

செவ்வகத்தியிலை - சிலேட்டுமம், தாகவெள்ளை, நவநீதபஸ்பம் பலசிந்தூரம் உண்டாம்.

செவ்வந்தி-சித்தபிர்மைபோம்

செவ்வந்திப்பூ-தலைசுற்றல், மயக்கமும் போம். அனல் கண்ணுக்கொளி, தலைமயிர் வளர்ச்சி, மணமும் உண்டாம்.

செவ்வல்லிக்கொடி-கரப்பான், குடல்வாதம், குறைநோய், பநிவன், பிருக்த குஷ்டம் மூலமும் போம்.

செவ்வல்லிப்பூ-இரத்தபித்தம், கண்ணோய், நீரிழிவு, பலநோய் புண், மேகப்பிணியும்போம்.

செவ்வாமணக்கிலை-குன்மம், தேகவலி, மாந்தம் வாதமும்போம்.

செவ்வியம்மிளகின்வேர், - அருசி, இருமல், ஈளை, கண்ணோய், குரல்கம்மல், ஜந்நி, சூலை, தாவரவின்பம், திமிர், பித்தமூலமும் போம்.

செவ்விளநீர்-ஆயாசம், சயம், தாகம், பித்தம், வழிகடையிலிளைத்தலும்போம்.

செவப்புக்காய்வேளை-ஓர் பூண்டு

செவப்புக்கொடிபசளை-ஓர்பூண்டு

செவப்புச்சோளம்-செஞ்சோளம்

செவப்புப்பசளை-செம்பசளை

செவப்புமந்தாரை-செம்மந்தாரை

செவ்வந்தி-ஓர்பூண்டு

அவை.

செண்டுச்செவ்வந்தி - அருச்செண்டுச் செவ்வந்தி, துலுக்கச் செவ்வந்தி.

செவிரம்-பாசி

செவ்வம்மான்பச்சரிசி-ஓர்பூண்டு

செவ்வலரி-ஓர் செடி

செவ்வல்நார் } செவ்வாம்பல்.
செவ்வல்லி

செவ்வள்ளி-ஓர்கிழங்கு

செவ்வாம்பல்-செவ்வல்லி

செவ்வாழை-ஓர்வாழை

செவ்வியம்-மிளகு

## சே

சே-அழிஞ்சில், சேங்கொட்டை

சேகாரம்-மா

சேகரி-நாயுருவி

சேகிலி-வாழை

சேங்கை-சிவப்புப்பசளை

சேசூரணம்-கௌரிபாஷாணம்

சேங்கொட்டை-ஊரல், மேகம் கடிவிரணம், கரப்பான், கட்டி, சயரோகம், கிருமி, கிரந்தி, குஷ்டம், 18-சூலை, சொறி திமிர் மூலம், வாதகுன்மமும்போம்.

சேச்சை-பாலை, முல்லை

சேதாம்பல்-செவ்வாம்பல்

சேதாரம்-தேமா, வெட்சி

சேந்து-அசோகு

சேபாலம்-சேங்கொட்டை

சேபாலன்-கொட்டை, ஓர்விந்து

சேமரம்-அழிஞ்சில்

சேம்பை-சேம்பு, அலை, கல்லடிச்சேம்பு, நீர்ச்சேம்பு.

சேயமம்-கௌரிபாஷாணம்

சேயா-கடுக்காய்

சேயிலம்-இலுப்பை

சேயேபசப்-மரமஞ்சள்

சேய்-மூங்கில்

சேரா-கள்

சேராங்கொட்டை - சேரான்கொட்டை.

சேரான்கொட்டை-சேங்கொட்டை

சேர்வை-பிளாஸ்திரி

சேலகம் - முந்தக்காசு, கோரைக்கிழங்கு.
சேவியால்-இலாமச்சை
சேலேகம்-சந்தனம்
சேலை-அசோகு
சேவகன்-பேய்வெங்காயம்
சேவகன்பூடு - காந்தள், சிறுபுள்ளடி, சிற்றுமுட்டி.
சேவகன்பூண்டு-சிற்றுமுட்டி
சேவாலங்கொட்டை-நேர்வாளம்
சேவாலம்-நேர்வாளம்
சேவாசிகம்-கருகொச்சி
சேறு-விளா கள்
சேனவு-தகரை
சேலகம்-மலையிருவேலிசை
சேவலம்-ஓர்பாசி

### சோ

சொக்கலி-மூச்கிலி
சொடக்கு-கடுகு, கிலுகிலுப்பை
சொண்டி - வேர்க்கொம்பு உலர்ந்த இஞ்சி.
சொரங்கம்-கச்சோலம்
சொரசத்தோரசி-இலவங்கம்
சொலியன்-முடக்கொற்றான்
சொல்-செந்நெல்
சொறி-காஞ்சொறி
சொற்குறி-குதபாஷாணம்
சொறனம்-கோட்டசுளி
சொர்ணசீரகம்-கரும்பு
சொர்ணமாக்கி-பவளபாஷாணம்
சொர்ணகம் - உத்தாமணி, வேலிப்பருத்தி.
சொன்னல்-சோளம், இரும்பு

### சோ

சோகம்-கடுகுரோகிணி
சோகாரி-கடம்பு
சோங்கம்-அகில், இங்குருப்பல்லி, இச்சிலிக்கிழங்கு
சோசனம் - உள்ளி, வெள்வெண்காயம்.
சோணசம்-பெருவாகை
சோணிதம்-மஞ்சள்
சோதிபூணகம்-தீபகர்ப்பூரம்
சோதிமயம்-வாலுளுவை
சோதிமா-சோதிவிருட்சம்
சோதியம்-வாலுளுவை
சோபம்-கள்
சோபாலிகை-அம்பு
சோமவல்லி-சீந்தில்
சோமவல்லரி-பொன்னாங்காணி
சோமவலுக்கம்-தேக்கு
சோமனுப்பு-இந்துப்பு, பச்சைக்கர்ப்பூரம், நீலபாஷாணம்.
சோமன்-வெள்ளிமணல்
சோமாக்கியம்-தாமரை
சோம்பலம்-சேங்கோட்டை
சோம்பு-நட்சத்திரசீரகம்
சோரபுட்பம்-பீச்சுவிளாத்தி
சோரி-சிறுசெருப்படி
சோளம்-சோளம், இசங்கு
சோற்றிலை-கற்றாழை

### சௌ

சௌகந்தி-கந்தபாஷாணம்
சௌகந்திகம்-வெள்ளாம்பல்
சௌண்டி-திப்பிலி
சௌந்தகம்-கற்கடகபாஷாணம்
சௌபஞ்சனம்-புன்முருங்கை

### க்ஷ

க்ஷயம்-ஓர்நோய்

### ஞா

ஞாயிறுதிரும்பி - சூரிய காந்தம், பொழுதுவணங்கி.
ஞாலம்-ஊமத்தை

ஞாழல் - குங்குமமரம், கோங்குமரம், பொன்னாவிரை, மயிர்க்கொன்றை, சங்கபுஷ்பம்.
ஞாழல்மாது-ஊமத்தை
ஞாழி-வள்ளைக்கொடி

### ஞெ

ஞெகிழி-கொடுவேலி
ஞெண்டுகம்-பெருவாகை

### ஞே

ஞேயா-பெருமருந்து

### ட

டங்கணம்-வெண்காரம்

### டோ

டொழா-இலுப்பை

### த

தகட்டுத்தாளகம்-ஓர்பாஷாணம்
தகரம்-ஈயம்
தகரு-புன்முருக்கு
தகரை-ஓர்பூண்டு, அவை, கருந்தகரை, காட்டுத்தகரை, வெண்தகரை, தகாபலாசு.
தகல் }
தகன் } தீராய்
தகிலமா }
தருவிமா } சேங்கோட்டை
தக்காரி-வாதமடக்கி
தக்காளி-நல்லதக்காளி, பசுவின் தக்காளி, அவை எருமைத்தக்காளி, குடித்தக்காளி, மணத்தக்காளி, மணிதக்காளி.
தக்கோலம்-வால்மிளகு
தங்கைச்சி-குவளை
தங்கையைக்கொல்லி-சிறியாநங்கை
தட்டான்-கோட்டம், புடோல்
தட்டான்-கொட்டோசை, புடோல்.
தட்டி-கோட்டம்
தட்டிலம்-சதகுப்பை
தட்டை-மூங்கில்
தணக்கு-நுணா
தணலம்-எருக்கு
தணவம்-அரசமரம்
தண்டு-மூங்கில்
தண்டுலியம்-சிறுகீரை
தண்ணீர்விட்டான்-ஓர்செடி
தந்தபத்திரி-வாழை
தந்தக்காயு-வாதமடக்கி
தந்தபத்திரம்-மல்லிகை
தந்தசடம்-எலுமிச்சை, விளா
தந்தயாவனம்-கருங்காலி
தந்தவாயு-ஓர்நோய்
தந்தி-நேர்வாளம்
தந்திரகம்-சீந்தில்
தந்துகம்-கடுகு
தந்துசாரம்-கமுகு
தந்துபம்-கடுகு
தந்துவிக்கிரியை-வாழை
தபனன்-கொடுவேலி
தமரகவொலி }
தமரோசை } கிலுகிலுப்பை
தமனகம்-மருக்கொழுந்து
தமனி-வன்னிமரம்
தமனியம்-பொன்
தமராக்கவம்-பீர்க்கு
தமாலம்-பச்சிலைமரம்
தமிசு-வேங்கை
தமியம்-கள்
தம்பலை-நிலவிந்தை
தயிலபீதம்-அத்திப்பிசின்
தரம்-அரக்கு
தரளம்-முத்து

தராகதம்பம்-கடம்பு
தராசு-வெள்ளெருக்கு
தராசுக்கொடி - பெருமருந்து, முல்லை.
தரா-கச்செந்திராய்
தருணம் - ஆமணக்கு, பெருஞ்சிரகம்.
தருணி-கற்றாழை
தருத்தமனி-மரமஞ்சள்
தருமராஜன்-பாலைமரம்
தருமவிராஜன்-பனை
தருடம்-தாமரைப்புட்பம்
தலத்தாது-நிலப்பனை
தலைசுருளி } பெருமருந்து
தலைசுடுவல்லி }
தலைத்தாது-நிலப்பனை
தலைநிம்பம்-சிவனார்வேம்பு
தலைநோவு-ஓர்நோய்
தலைபோடம்-பொடுதலை
தலைவிரிச்சான் - சாறணை, செருப்படை

தவளம்-வெண்மிளகு
தவளோற்பலம்-வெள்ளாம்பல்
தவளகம்-மருக்கொழுந்து
தவிட்டுச்செடி-மலைகொய்யா
தவுசயம்-முருக்கு
தவுசெலம்-முருங்கை
தழல்-கொடுவேலி
தழை-இலை
தளப்பம் } ஓர்மரம்
தளப்பமரம் }
தளப்பத்துமரம்-கூந்தற்பனை
தவளம்-முல்லைக்கொடி
தளவு-முல்லை
தளுதாழை-வாதமடக்கி
தற்பதி-கமுகு
தற்பலம்-வெள்ளாம்பல்
தனவனு-ஆச்சாமரம்
தனவை } -சிறுகாஞ்
தனவையாதம் } சொறி.

தனிகம் }
தனிசா } கொத்துமல்லி
தனியா }
தனிவலிப்பெருமாள் } குப்பை
தனிவள் } மேனி.
தனுத்திருமம்-மூங்கில்
தனுவிருக்கம் } ஆச்சா
தனுவிருட்சம் }
தன்யராசா-பாலைமரம்
தன்மலோகிதம்-செஞ்சந்தனம்
தன்மன்-திப்பிலிமூலம்
தன்வையாதம்-சிறுகாய்ஞ்சொறி
தன்னினி-வேங்கை

## தா

தாகமடக்கி-புளியாரை
தாசி-மருதோன்றி
தாச்சி-சோனைப்புல்
தாடகம்-நீர்முள்ளி, விழி
தாடிமஞ்சம்-சத்திக்கொடி
தாடிமம் - தாதுமாதளை, சிற்றேலம்.
தாட்சம்-கொடிமுந்திரிகை
தாத்தி-ஆத்தி
தாது - இரசம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், விக்கல், தாதுமாதளை, பூமாதளை.
தாதை-பேய்க்கொம்மட்டி
தாத்தாரி - நெல்லி, ஆடுதின்னாப்பாளை.
தாபமாறி-தான்றி
தாம்பிஞ்சம்-ஆமணக்கு, பச்சிலைமரம்.
தாமர்-கொன்றை
தாமரசம்-தாமரை
தாமரை-ஓர்புட்பம், அவை ஆகாசத்தாமரை, கற்றாமரை, செந்தாமரை.
தாமரைச்சத்துரு-ஓர்பாஷாணம்

தாமரைமணி-தாமரைக்கொட்டை
தாமரையால் - ஓர் மஞ்சள் பாஷாணம்.
தாமலகி-கீழ்க்காய்நெல்லி
தாமனை-புன்னை
தாம்புலோவல்லி-மஞ்சாடி
தாம்பூரவல்லம்-வாழை
தாம்பூலவல்லி-வெற்றிலை
தாம்பூலி-வெற்றிலைக்கொடி
தாயைக்கொன்றான் - புல்லூரி வாழை.
தாரம் - சிற்றரத்தை, தேவதாரம், நாரத்தை.
தாருகதலி-காட்டுவாழை
தாருசீம்-செம்புளிச்சை
தாழிணி-நத்தைச்சூரி
தாலபத்திரி-மரமஞ்சள்
தாலபோதம்-ஆவிரை
தாலமூலி-நிலப்பனை
தாலம்-கூந்தற்பனை, பனை
தாலம்-பாஷாணம், ஓர்பாஷாணம்
தாலி-கீழ்க்காய்நெல்லி

தாலியம் - பாதிரி, தாம்பூலத்தில், காய்ச்சுக்கட்டி, சுக்கு, இலவங்கம் இவைகள் சேருதல், காய்ச்சுக்கட்டியினால் பல பூச்சுகள் சாகும். சுக்கு இலவங்கமும் சேர்த்தால் இன்பமுந் தேகப்பிணியும்போம்.

தாம்பூலந்தின்றுங் காலபேதம் - காலையில் பாக்கை அதிகப்படுத்த மலபாதையுண்டாம். உச்சியில் சுண்ணத்தை அதிகப்படுத்த பசியுண்டாம். மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்த வாயில் மணமுண்டாம்.

தாம்பூலமாகாத வியாதியாளர் - அதிசாரம், இரத்தபித்தம், எரிகுன்மம், க்ஷயம், சுவாசம், நேத்திரரோகம், பாண்டு, மூர்ச்சை, விஷக்கடி இவ்வியாதியாளர்க்குத் தாம்பூலமாகாது.

தாம்பூலாசம் - அருசி, உதரதோஷம், சுவாசகாசம், மந்தவாய்வு, பீநசமும்போம். உடற்குக்காந்தியும், கண்ணிற்கு நலமும், புத்திக்குணர்வும் உண்டாம்.

தாம்பூலரசம் விழுங்கும் வகை - தாம்பூலம் போட்டவுடன், வாயிற்சுரக்கும் முதல்நீர் நஞ்சாம். இரண்டாவதுநீர் பித்தம். மூன்றாவதுநீர் அமிர்தம். நான்காவதுநீர் மதுரம். ஐந்தாவது ஆறாவதுநீர் பாண்டு, பித்தம், மந்தமும் உண்டாம்.

தாராக்கறி-அரோசகம், கபம், கரப்பான், தாதுபுண், மருந்துமுறிவு, வாந்தியும் உண்டாம்.

தாராமுட்டை - அதிக பலமுண்டாம்.

தாழையிலைச்சாறு-மேகமும், விஷமும்போம்.

தாழம்பால் - தலைசுழற்றல், சோகை, நீரிழிவு, பாண்டு, பித்தம், வாந்தியும்போம்.

தாளகம் - அழுகண், கபம், கபாலப் புண், குஷ்டம், குளிர்காய்ச்சல், காக்குப்புண், பறங்கிப்புண், மண்டை நோயும் போம்.

தாளிக்குவளை - இருமல், சளியும் போம்.

தாளிசபத்திரி-அஸ்திசுரம், அருசி, கழுத்துப்பிணிகள், காசம், சர்த்தி, சிலேட்டுமம், சுவாசம், நாசிநோய்கள், மந்தம், மேகம், மேல்விரைப்பு வாய்வும்போம்.

தாளிப்பனை-நீரிழிவுபோம்

தான்றிக்காய் - அனல், ஆண்குறிப்புண், இரத்தபித்தம், சிலந்தி, விஷம், சீழ்மேகம், சுவாசம், பித்தம், மேகம், வாதம், வாய்வு, வெப்பும்போம். தேகவலிவு ஒளியுண்டாம்.
தாலுகண்ணி-வெள்ளைக்காக்கணம்
தாவணி-கண்டங்கத்திரி
தாழை - தாழஞ்செடி, அவை, கற்றாழை, ஆனைக்கற்றாழை, செந்தாழை, வெண்டாழை, பேய்க்கத்தாழை, தழுதாழை.

தழுதாழை இலைச்சாறு கொஞ்சங் கசப்பாயிருக்கின்றது. இதை சுதேச வைத்தியர் நோய் பேதிக்கிற மருந்தாக யோசிக்கிறார்கள். அவர்கள் இதை இணவாத ரோகங்களுக்கும், சந்துவாத ரோகங்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

தாளகம்-அரிதாரம், இருதாளகம், இருமிச்சுகாட்டுதாளகம், தகட்டரிதாரம், தாளி-பனை அவை நேரனைதாளி, நாகதாளி, பெருந்தாளி.
தாளிசபத்திரி - ஓர் மருந்து இது ஒரு வாசனையுள்ள பூண்டின் இலைகளாகவும் துளிர்களாகவும் இருக்கின்றது. ரூபார்ப்பினுடைய உருசி உண்டாயிருக்கின்றது. ஆனால் அதில் கசப்பில்லை இது சீரணமருந்தாகவும், துவர்ப்புடையதாகவும் இருக்கின்றது. வயிற்றுளைவுக்கும், சயரோகத்திற்கும் உபயோகப்படுகின்றது.
தாளினி-சிவதை, நிலவாகை
தாருகள்ளி-வெள்ளைக்காக்கணம்
தானியம்-கொத்தமல்லி
தான்றிமரம்-ஓர்மரம்

## தி

திகசம்-அசமதாகம்
திகனு-கொடுவேலி
திகிரி-மூங்கில்
திக்கு-கொடுவேலி
திக்குறு-புன்முறுங்கை
திகசம்-அசமதாகம்
திசைநா-கொடுவேலி
திசையிலம்-மருக்காரை
திடமை-வெள்ளெருக்கு
திடற்சுண்டி-வறட்சுண்டி
திட்டனம்-இலுப்பை
திட்டி-தினை
திட்டை-வெள்ளறுகு
திண்டசம்-கிலுகிலுப்பை
திண்டி-அரசு, பசலை
திதளம்-மாமரம்
திதனி-தேமல்
தித்தகம் } மலைவேம்பு, நிலவேம்பு, கசப்பு.
தித்தம்
தித்தா - பீதரோகினி, வட்டத்திருப்பி.
தித்திகம்-பேய்ப்புடோல்
தித்திசாகம்-மாவிலங்கு
தித்திரம்-ஆரத்தை
தித்திகுச்சி-நாணல்
தித்திரு-நாணல்
திந்திடம்-புளி
திந்திருணி-புளியமரம்
திபதிசம் } வாலுளுவை.
திபதிச்சம்

திப்பியம்-ஓர்மரம், அசமதாகம்
திப்பிலி-ஓர்பூண்டு, அவை, கண்டதிப்பிலி, யானைத்திப்பிலி, திப்பிலிக்கட்டை, திப்பிலிமூலம், திப்பிலியரிசி.

திப்பிலி மிளகுவகையில் சேர்ந்தது இந்துஸ்தானி தேசத்தில் விஸ்தாரம் விளைகின்றது.

சிலோன் இராச்சியத்திலிருந்தும் இவ்விடத்திற்கு வருகின்றது. வைத்தியர் இதன் குடிநீரில் கொஞ்சந் தேன் கலந்து மார்சளி நோய்களுக்குப் பரிகாரமாய்க் கொடுக்கிறார்கள்.

திமிசு-வேங்கை
திமில்-வேங்கை
தியசம்-மாமஞ்சள்
தியந்தி-திராய்
தியாமம்-இருவேலி, முயற்புல்
தியேசேயே-மாமஞ்சள்
திராமூலம்-முடக்கொற்றான்
திரகம்-கொன்றை
திரகனுமம்-செம்புளிச்சை
திரக்கத்தாரு-நிலப்பனை
திரக்கம்-கொன்றை
திக்கிரனி-பிரண்டை
திரங்கம்
திரங்கலம் } மிளகு
திரக்கல்
திரணராசன்-நிலப்பனை
திரணபதி-வாழை
திரணி-ஓர்செடி
திரந்திகம்-திப்பிலிமூலம்
திரப்பசம்-கத்தரி
திரம்-தகரை
திரலடி-ஏலம்
திரல்-காட்டாமணக்கு
திரளகரம்-நிலப்பனை
திரள்கோரை-கஞ்சாங்கோரை
திராட்சம்-ஓர்பழம், கொடிமுந்திரிகை.
திராமரம்-பவளமல்லிகை
திராகபந்தி-சம்பந்திரா

திராய்-ஓர் கசப்புக்கீரை, இதை சுதேச வைத்தியர் முக்கியமாக மதிக்கிறார்கள். இது ஜீரண மருந்தாகவும் சுகபேதி மருந்தாகவும் மாமிசம் அழுகாமற் பரிகரிக்கும் மருந்தாகவும் யோசிக்கிறார்கள். காதுநோய்க்குப் பரிகார மருந்தாய் இருக்கின்றது. பிரசவித்த ஸ்திரீக்கு அழுக்கு தாராளமாய் விழாவிடில் குடிநீராகக் கொடுக்கப்படுகிறது.

திராவடி-ஏலம்
திரிகண்டம்-நெருஞ்சில்
திரிகண்டகம்-நெருஞ்சில்
திரிகாலோசிதம்-தருப்பைப்புல்
திரிகை-கொடிமுந்திரிகை
திரிபுடிபலம்-ஆமணக்கு
திரிபுரமெரித்தான்-நொச்சி, மாவிலங்கை.
திரிபுரி-சாறணை
திரிலோசி-விட்டுணுகரந்தை
திருகம்-சாதிக்காய்
திருகுகள்ளி - ஓர் கள்ளி, இதின் பால் பலமான பேதிமருந்தாகவும் இளகுகிற மருந்தாகவுமிருக்கின்றது. வெகுசொற்ப அளவு பனம்வெல்லத்தில் வைத்து உட்கொள்ளப் படுகிறது. தனிப்பாலாய் வைத்தால் கொப்புளங்கொள்ளச் செய்யுமருந்தாக விருக்கின்றது. ஆனால் விளக்கெண்ணெயோடு சேர்த்தால், திமிர்வாதம், நடுக்கல்வாதம், சோர்வாதம், விரைப்பு, நாட்பட்ட வாதம் இவைகட்கு உபயோகமுள்ள மத்திப்பு தைலமாகின்றது.

திருசோபம்-வெண்டாமரை
திருடகாண்டம் } மூங்கில்
திருடக்கிரந்தி
திருடமூலம் } தேங்காய்
திருடழம்
திருடன்-விஷ்ணுகரந்தை
திருடி-கள்ளி
திருணகேது-மூங்கில்

திருணசாரை-வாழை
திருணசூனியம்-தாழை
திருணராசன்-பனை
திருநீற்றுப் பச்சைவிதை - ஓர் விதை, இது மிகவும் வாசனையுள்ளசெடியின் விதையாக விருக்கின்றது. குளிர்ச்சியைத் தருகிற சளித்தன்மையுடைய சுபாவம் உடையதாய் இருக்கிறது. இதன் குடிநீர் மேகவெள்ளை நீர்க்கடுப்பு கல்லடைப்பு வியாதிகளுக்கு விலைபெற்ற பரிகாரமாயிருக்கின்றது. இலையின் சாறு காதுநோய்க்கு காதில் பிழிந்து விடப்படுகிறது. சுதேச ஸ்திரீகளுக்கு பிரசவப்பாடுகள் நீங்குதற்கு கொடுக்கப்படுகின்றது.

திருமரம்-அரசு
திருமலர்-தாமரை
திருமாலுந்தி-தாமரை
திருமால்கொப்பூழ்-தாமரை
திருமேனியழகி-குப்பைமேனி
திருவட்டி-கள்ளி
திருவாத்தி-ஆத்தி
திருவிளம்சிவதை-திராய்
திரேசந்தி-திராய்
திரேந்தி-திராய்
திரையல்-வெற்றிலை
திலகம்-சிந்தூரம், மஞ்சாடி. மஞ்சாட்டி.
திலபருணி
திலபருணிகை } சந்தனம்
திலம்-நஞ்சாடி, எள்ளு
திலாச்சாரம்-கடுந்திலவணம்
திலவகம்-வெள்ளிலோத்திரம்
திவாபீதம்-வெண்டாமரை
திவிதிராட்சம்-கொடிமுந்திரிகை
திரிகண்டம்-நெருஞ்சில்
திரிதியம்-செவ்வள்ளி
திரிதேகி-பற்பாடம்
திரிலிங்கம்-தான்றி
திரிபாதி-சிறுபுள்ளடி
திரியம்-செவ்வள்ளி
திரிலேகரி-விஷ்ணுகரந்தை
திரிவாசம்-கக்கரி
திரிவிச்சதா-மூக்கிரட்டை
திப்பிலி-அரோசகம், அசனநோய், இருமல், இரைப்பு, ஈளை, ஊதை கயப்பிணி, காதுநோய், குளிர், குன்மம், சலதோஷம், சந்நியாசம், சிரப்பிணி, சுரம், தொண்டைநோய், நாசிநோய், பாண்டு, பித்தபிலிகம், புழு, பொருமல், மகோதரம், மலப்பெருக்கு, முத்தோஷம், மூர்ச்சை, மேகப்பிடகம், விழிநோயும் போம். தாதுவிர்த்தி உண்டாம்.

திப்பிலிமூலம் - இருமல், குரல்கம்மல், சுரம், சோகம், தாகம், தேகக்கடுப்பு, பித்தம், மேகமும் போம்.
திப்பிலியரிசி-உப்பிசம், கபம், சிலேட்டுமம், மேகம், வாதசுரமும் போம். தாதுவிர்த்தி உண்டாகும்.
திரிகடுகு - அபஸ்யாரம், அருசி, அற்புதப் புண், ஆசியநோய், இருமல், பீளை, எலும்பைப்பற்றிய நோய்கள், கன்னப்பிணி, சந்நியாசம், சர்க்கராற்புதம், பித்தம், தலைநோய், தேள்விஷம், நாக்குநோய், பாண்டு, புழுமூலமும்போம்.
திரிகாதிகம்-அஸ்திசுரம், அரோசசகம், தேமலும்போம்.

திரிபலம்-ஆசனப் புண், இரைப்பு, குஷ்டம், குத்திருமல், குன்மம், சர்வ விஷம், நரம்பில் உண்டாகுங் கட்டி, நாசிநோய்,

பாண்டு, பிரமியப்புண், பிலீகம், புண், மூர்ச்சை, வயிற்றுவலி வெண்குஷ்டம்போம்.

திருவாத்தி - அதிசாரம், சேற்றுமமும்போம்.
திருவிருத்திக்கடுக்காய் - விரணம் போம். பஞ்சவர்ன கொடிபோன்ற, மூன்று வரம்பாக விருக்கும்.
திருகுகள்ளிப்பால்-கரப்பான், கிரந்தி, கிருமிகுண்டம், சீதம், பக்கநோய், வாதமுடக்கும் போம்.
திரிக்கைமீன் - சோபம், பித்தமும் போம். தாதுவாதமும் உண்டாம். திருநாமப்பாலை பித்தம் போம்.
திருநீற்றுப்பச்சை - சிலேட்டுமசர்த்தி, சுரத்தால் பிறக்கின்ற ரத்தவாந்தி, சுரம் அருசியும் போம்.
திருவட்டப் பிசின் - நாற்றநீர் போம்.
தில்லைப்பால்-குஷ்டம், ஜந்நி, சூலை, பாரிசவாதம், முடக்குவாதம், வலிவாதம், 18-விஷமும்போம்.

தில்லைவித்து-கபம், குஷ்டம், சிறு விஷம் திமிர்வாய்வு பெருவிஷமும்போம்.
தினப்புணர்ச்சி - அநேக நோய்களுண்டாம்.
தினை அரிசி-ஐயம், சன்னி, சுரம், வாதம் வீக்கமும்போம், பசி, பித்தமும் உண்டாம்.
தினைக்கஞ்சி-சோபை, தோஷமும் போம்.
தினைச்சாதம்-வாயும்போம் பித்தம், சோபமும் உண்டாம்.
தினைமா-கபவாதம்போம்.

## தீ

தீப்பியம்-அசமதாகம்
தீபதைலி-ஆமணக்கு
தீப்பிரகாசி-குங்கிலியம்
தீயபுட்பம்-சண்பகப்பூ
தீயளி-காசா
தீயாக்கினை-பொன்னுங்காணி
தீர்க்கதாரு-நிலப்பனை
தீர்க்கபாதபம்-தென்னை
தீர்க்கமூலம்-முடக்கொற்றான்
தீர்க்க லோகிதம் - சிவிந்தி தருப்பை.
தீர்க்கவிருக்கம்-பெருமரம்
தீவிராட்சம்-கொடிமுந்திரிகை
தீவிளங்கும்வைரம்-மீனம்பர்

தீக்காய்தல் - சீதம், வாதமும்போம், இரத்தக்கொதிப்பு, இரத்தபித்தம், உட்டிணம், தாகமும் உண்டாம்.
தீம்பாலைமரம் - இரத்தம், ஜந்நி, சர்த்தி, சலக்கோவை, சூதகம், நேத்திரநோய், பீநசம், முத்தோஷம், மேகவெட்டை விஷபாகரோகமும்போம்.
தீப்பிரண்டை - ஐயம், இரைப்பு, சீதக்கட்டு, செரியா மந்தம், வாதம் விக்கலும்போம்.

## து

துகிர்தாளி-பவளமல்லிகை
துகிலின்பீசம்-பருத்திவிதை
துசகம் - கொம்மட்டிமாதளை, மாதளை.
துசம்-குங்கிலியம்
துச்சதாரு-ஆமணக்கு
துச்சம்-கொம்மட்டி
துடக்கறுப்பான்-முடக்கொற்றான்
துடி-அகில், இசங்கு, ஏலம்

துடிகம்-தும்பை
துடியாஞ்சி-இசங்கு
துடை-அரசு, விஷமூங்கில்
துட்ட-தொடரி
துட்பிரதருசனி-செம்பு
துணவு-தனக்கு
துதியம்-சமரிலோத்திரம்
துத்தம் - நாணற்புல், நாய்ப்பாகல், நீர்முள், பாகல், நான்முகப்புல், கண்மருந்து. அவை, பாற்றுத்தம், மடற்றுத்தம், மயிற்றுத்தம், துரிசி.
துந்தமனு-முயல்புல்
துத்தி-நீதமம், ஓர் பூண்டு, அவை, எலிச்செவித்தி - ஐயிதல்துத்தி ஒட்டுத்துத்தி, கண்டுத்துத்தி, காடு துத்தி, கொகுத் துத்தி, சிறுதுத்தி, செடிதுத்தி, நாமதுத்தி, நிலதுத்தி, நிலதுத்திமணி, ராத்துத்தி, பெருந்துத்தி, இரணந்துத்தி, வயிற்றுத் துத்தி, துத்தியிலை.

இது இளக்குகிற அல்லது மிருது வாக்குகிறது, பற்று போட்டு இவைகள் செய்ய வேண்டிய சங்கதிகளில் இதன் இலைக்கஷாயம் ஐரோப்பிய தேசத்தாரால் உபயோகப் படுத்துகிறார். இதை இடித்துப் பிழிந்த ரசம் மேகவெள்ளைக்குக் குளிர்ச்சி மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது. இதின் வேர் குடிநீர், சுரங்களில் கொடுக்கப்படுகின்றது.

துப்பிரசம்-சுருஞ்சொண்டி
துப்பு-அரக்கு
தும்பகர்-தும்பை
தும்புகர் - தும்பை, தும்பரம், அத்தி.
தும்பராஷ்டகம்-பேராத்தை
தும்பரம்-அத்தி
தும்பாலை-சுரை
தும்பி-கொற்றான்சுரை
தும்பிசுரும்பு-பனிச்சை
தும்பிகரும்பு-நெருஞ்சில்
தும்பை - தும்பை, வெற்றலை ஓர் பூண்டு, அவை, கறித்தும்பை, கவிழ்தும்பை, கழுதைதும்பை, பேய்த்தும்பை.
தும்மிட்டி - சிறுகும்மிட்டி, பேரீந்து.
துரகதமூலம்-நீர்முள்ளி
துரங்கப்பிரியம்-கோதும்பை
துரமி-தூதளை, தொடரி
துரா-ரோகம்பனை
துராலபம்-சிறுகாய்ஞ்சொறி
துரிஞ்சல்-உசில்
துரிசி - ஓர் மருந்து, இது ஔஷதத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட, துரிசு துப்புரவான இருண்ட நீல நிறமுள்ளதாயும் பருந்துண்டுகளாயும் இருக்கவேண்டும். அவற்றின்மேல் வெண்பச்சை அல்லது வெண்ணிறமான தூள்பற்றியிருக்கில் உள்ளுக்குக் கொடுக்குமுன் நன்றாய்த் துடைத்துக்கொள்ள வேண்டும். இது அநேக கடைகளில் நற்சரக்காக அகப்படும்.

சுரமின்றி அனேகநாளாய் இருக்கப்பட்ட வயிற்றுப் போக்குக்கும் வயிற்றுக் கடுப்புக்கும் 6-கிறெயின் துரிசு நேர்மையாய்ப் பொடித்து 6-கிறெயினபினியுடன் நன்றாய்ச் சேர்த்து அரைத்து 12-மாத்திரையாகப் பங்கிட்டு நாளொன்றுக்கு மூன்றுதரமாக ஒவ்வொரு மாத்திரைவிதங் கொடுக்கவேண்டும். வயிற்றுக்கடுப்பு உள்ளவர்களுடைய வயிற்றின்மேல் பிளானல் அல்லது கம்பிளியைச் சுற்றிக்கட்டி யிருக்கவேண்டும். வெளிறி பெலவீனமாய் நெடுநாளாய்ச் சுகமில்லாமலிருக்குங் குழந்தைகளுக்கு தீராத வயிற்றுக் கழிச்சலுக்கு 1-கிறெயின் துரிசை நன்றாய்ப் பொடித்து 12-சரிபங்கு செய்து அதிலொரு பங்கை 3-கிறெயின் கருவாயின் தூளுடன் தேன் அல்லது பஞ்சதாரையில் தினம் 3 - தரங் கொடுக்கவேண்டும். மேற்சொல்லிய வியாதிகளுடையவர்கள் பிராயமானவர்களாவது, குழந்தைகளாவது சில நாள் இந்த ஔஷதம் தின்று சவுக்கியமடையாவிட்டால் அதை நிறுத்திவிட வேண்டும். ஏனெனில் அதை நெடுநாள் தொடர்ந்து தின்னுமளவில் வாந்தியும் குன்மவாய்வு முண்டாகும்.

குளிர்சுரங்கள், முறைசுரங்கள் இவைகளுக்கு முன்கொடுத்ததில் சவுக்கியப்படாமலிருக்கில் துரிசைக் கீழ்ச்சொல்லியபடி கொடுக்கலாம். நேர்மையாய்ப் பொடித்த துரிசித்தூள் 6 - கிறெயின் நல்ல மிளகுத்தூள் 48-கிறெயின் அபின் 6-கிறெயின் இவைகளைத் தேன் விட்டு நன்றாயிடித்து 12-மாத்திரையாகப் பங்கிடவேண்டும். இதில் முதலாவது ஒரு வேளைக்கொரு மாத்திரை வீதம் தினம் மூன்றுநேரங் கொடுத்து இதில் பலன் காணாவிட்டால் தினம் நாலைந்து தரமாவது கொடுக்கலாம். மேற்சொன்ன பிரயோகம் பிராயமானவர்களுக்கே கொடுக்கத்தகும். ஆதலால் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. ஆதுவும் மற்ற மருந்துகள் கொடுத்துப் பார்த்தபின்தான் கொடுக்கலாம்.

நெடுநாள்பட்ட புண்களின் விளிம்பைச்சுற்றி துரிசை மெதுவாய்த் தடவிவந்தால் சுறுக்காய் வாசியாகும். இனியொருமுறையாவது 3 - கிறெயின் துரிசை 1 - அவுன்சு தண்ணீரில் கலக்கி தினம் இரண்டு தரம் புண்களில் விட்டுப் பின்பு மூன்று அல்லது 4 - நாளைக்கொருதரம் துரிசின் எடையை ஒவ்வொரு கிறெயின் வீதம் வியாதிக் காரனின் உணர்வு போல் அதிகனோவும் கூடும் இல்லாமல் சிற்றெரிவும் உட்டணமும் மாத்திரம் கொடுக்கும்படியாய் 1-கிறெயின் தண்ணீரில் 10 - கிறெயினுக்கு மட்டும் அதிகரித்துக் கொள்ளவேண்டும். அதில் அதிக எரிவுண்டானால் துரிசின் காரம் குறையும்படி சற்றதிகமாய்ச் சலத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும். மேற்படி சலத்தைக் காலையிலும் சாயந்திரமும் புண்களில் விட்டு இடைவேளைகளில் அரிசிப் போல்ட்டீசைக் கட்டவேண்டும். துன்மாமிசத்துக்கு அதின்மேல் துரிசை மூன்று அல்லது நாலுதினத்துக்கு ஒருதரம் தடவவேண்டும். பிராயமானவர்களுக்காவது, குழந்தைகளுக்காவது வாயினுள் வரும் புண்களுக்கு 5 - கிறெயின் துரிசை நேர்மையாய்த் தூள்செய்து அரை அவுன்சு

தேனிற் கலந்து விரலால் தொட்டு இடவேண்டும். பிள்ளைகளுக்கும் பாலர்களுக்கும் மிகுதியாய் நீர் வடியும் கண்ணோய்களுக்கு 1-கிறெயின் துரிசை 1-அவுன்சு சலத்தில் கலக்கி தினம் மூன்று அல்லது நாலுதரம் கண்ணைக்கழுவினால் குணம் வரும் கடினமான கண்ணோய்களுக்கு 1-அவுன்சு தண்ணீரில் 2-கிறெயின் துரிசைக் கூட்டிக்கொள்ளவேண்டும்.

படர் தாமரைக்கும் தலைச்சொறிக்கும் துரிசின் தூள் 20-கிறெயின் மாசக்காய்த்தூள் 1-அவுன்சு மெழுகு பிளாஸ்திரி 1-அவுன்சு இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து வியாதியுள்ள தலத்தில் நன்றாய்த் தேய்க்கவும் சொறி சிரங்குக்கு 1-அவுன்சு துரிசை அரைப்புட்டி தண்ணீரிற் கலக்கி இடவேண்டும்.

அட்டை கடித்தவாயில் நின்று இரத்தம் போகிறதற்கு கொஞ்சம் துரிசைத் தூள்செய்து கடிவாயில் வைக்க நிற்கும். மூக்கில் நின்று மிகுதியாய் இரத்தம் போகிறதற்கு 4-கிறெயின் துரிசை 1-அவுன்சு தண்ணீரில் கலக்கி மூக்கினுள் விடவேண்டும். ஆனால் இது படிக்காரத்துக்குத் தாழ்ச்சியாயிருக்கின்றது.

அபின், ஊமத்தை, எட்டிக்கொட்டை மற்றும் மயக்கத் தக்காஞ்சுகளை விழுங்கினவர்களுக்கு 5-கிறெயின் துரிசை அரைப்புட்டிச் சுடுதண்ணீர் கலக்கி அவ்வளவையும் ஒ தரமாய்க் குடிக்க வேண்டு உடனே அரைமணி நேரத்த குள் வாந்தியாகாவிட்டால் இன்னுங்கொடுத்தால் அது வ ற்றிலிருந்து நஞ்சாகவே தீ மாகையால் அதிகமாய்த் தொடர்ந்துக் கொடுக்கக் கூடா இதைக்கொடுத்தபின்பு உடனுடன் வாந்தி நன்றாயாகும்படி மிகுதியாய்ச் சுடுதண்ணீரை அடிக்கடி கொடுக்கவேண்டும். நஞ்சுண்டவர்களுக்குத்தான் உடனே வாந்தியாகிறதற்கு துரிசைக்கொடுப்பது புத்தியானதால் மற்ற வியாதிகளுக்கு அநுகூலமான வாந்தி ஔஷதமல்ல. இந்த மருந்தைக்கொடுத்தபின் நஞ்சுபோன்ற இலட்சணங்கள் யாதேனு முண்டாகில் முட்டையின் வெள்ளைக்கரு மாற்று மருந்தாய் இருக்கின்றது.

துருக்கம்-குந்துருக்கம்
துருத்தூரம்-ஊமத்தை
துருபவருணி-காட்டாமணக்கு
துருமம்-குங்குமம்
துருமசிரேட்டம்-பனை
துருமவருணி-காட்டாமணக்கு
துருமம்-குங்குமம்
துருமேசுவரம்-பனை
துருமோற்பலம்-கோங்கு
துருவாட்டி-சிற்றேலம்
துருவாதி-காட்டாமணக்கு
துருளக்கம்-குந்தரிக்கம்
துரோணம்-தும்பை
துரோணிகை-ஆவிரை
தூர்த்தூரம்-ஊமத்தை
துவியாசனம்-செம்முருங்கை

துலோபம்-கருஞ்கண்டி
துவரை - துவரை (மரம்) துவரைப் பயறு, ஓர்செடி, அவை, கருந்துவரை, காட்டுத்துவரை.
துவர்-பவளம்
துவர்ச்சிகை-கடுக்காய்ப்பிஞ்சு
துவர் - பதது, அவை, நாவல்கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்துளிர்.
துவன்-வட்டத்திருப்பி
துவிசபா } வட்டத்திருப்பி.
துவிகாபா }
துவிகீாயாசின்-செம்முருங்கை
துவிதாத்திமகம்-சாதிக்காய்
துவிபுத்தூறு-தண்ணீர்விட்டான்
துவை } துளசி.
துழாய் }
துழாயவனம்-துளசி
துளசி - ஓர்பூண்டு, அவை, கரியமால் துளசி, கருந் துளசி, கற்பூரதுளசி, செந்துளசி, காட்டுத்துளசி, சிவதுளசி, சிறுதுளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, பெருந்துளசி.
துளபம்-துளசி
துளம்பிக்கிரி-ஆதொண்டை
துளவம்-துளசி
துளவன்-சோரபாஷாணம்
துளவி-திப்பிலி
துளவு-துளசி
துளை-மூங்கில்
துறட்டிச்செடி-ஓர்பூண்டு
துறட்டி-சிற்றேலம்
துற்பறிகம்-சிறுகாய்ஞ்சொறி
துறைவி-திப்பிலி
துத்திநாகம் - அழலை, கிராணி, பேதி, பயித்தியம், மூளைப்புண், மேகம், வெட்டையும் போம்.
துத்திப்பூ-இருமல், வாயால் விழுகிற ரத்தமும் போம். மெய்க்குளிர்ச்சி, விந்தும் உண்டாம்.
துத்தியிலை - கட்டி, புண், புழு, முளைமூலநோயும் போம்.
துத்திவிரை - குஷ்டம், கைகாலிற் படர்ந்த கருமேகம், வெப்பும் போம்.
தும்பக்ஷாரம் - இரைப்பு, ஈளை, குன்மநோய், வாதமும்போம்.
தும்பயிலை - கண்புகைச்சல், கபம், கால்கையசதி, குளிர், சீதசன்னி, சுரங்கள், சோம்பல், தலைவலி, தாகம், பாம்பு முதலான விஷங்கள், மாந்தம், மேகம், வாதமும்போம்.

தும்பைப்பூ - கண்ணோய், ஜந்நிபாதம், மேகம், வாதமும்போம்.
துத்திக்கீரை - அழகு, பழயமலம், வெட்டையும் போம். சிறு சிரங்கு, சீதம், புண்ணுமுண்டாம்.
துருசு-ஆண்குறிப்புண், கண்ணோய், சுரம், புண், முத்தோஷம், வாய்நோயும்போம், பேதிவாந்தியும் உண்டாம்.
துவரம்பருப்பு - பித்தம், கிராணி, ஜந்நிவாதம், சேட்டுமம் மூலம், சீதம், விஷமும்போம். தாதுபலமும் உண்டாம்.
துவரம்பருப்பின்ரசம் - கெட்டவாதங்கள் போம்.
துவரை-மந்தம், மலம், மெலிந்த தேகம், புஷ்டியும், வாய்வும் உண்டாம்.
துளசி - அஸ்திசுரம், அரோசகம், ஐயம், ரணம், சுவாசகாசம், சுரமாந்தம், தாகம், வயிறுளைச்சல், பல புண்ணும் போம். சாரம், சூடும் உண்டாம்.
துளசிவிதை-அருசி, கபம்போம்.

## தூ

தூங்கமுட்டு-கோரைக்கிழங்கு
தூசிகம்-புளியாரை
தூசுப்பு-தண்ணீர்விட்டான்
தூட்டிகம்-தும்பை
தூணியங்கம்-அத்திப்பிசின்
தூதனம்-மூங்கில்
தூதுணை
தூதுளை
தூதூளை } தூதுவளை.
தூதளை

இதன்வேர், இலைகள், புட்பங்கள், துளிர்கள் எல்லாம் தமிழ் வைத்தியரால் மருந்தில் உபயோகப்படுத்தப் படுகின்றன. வேரும் இலைகளும் கசப்பாயிருக்கின்றன. கயரோகங்களுக்கு செய்யப்படும் லேகியத்தில் கஷாயமாகவாவது சூரணமாக வாவது சேர்க்கப்படுகிறது.

தூமம்-புளிநாளை
தூமம்-பலகரை
தூம்பு-மூங்கில்
தூரம்-ஊமத்தை
தூரச்சூலை-ஓர்நோய்
தூரேத்தி-கம்பந்திராய்
தூரோணம்-கவிழ்தும்பை
தூர்த்தம்-ஊமத்தை
தூர்மம்-தேள்கொடுக்கி
தூர்வை-அறுகு
தூர்ணு-முகப்புல்
தூலகம்-பருத்தி
தூலம்-இரவு, நீர்முள்ளி, பருத்தி, பஞ்சுகோரை.
தூலினி-இலவு
தூறவம்-நாவல்
தூதிராய்-மஞ்சள்
தூறுகுணம்-கடம்பு
தூருட்டி-சிற்றேலம்
தூறுதலையன்
தூதுதலைவன் } பிராய்.
தூறுபுட்பம்-சீந்தில், சிவிந்தி
தூறுபுளப்பம்-சீந்தில்
தூர்க்கணங்குருவிக்கறி - அருசி, ஐயம், மலமும்போம். அழகு பசியும் உண்டாம். பத்தியத்திற்காகும்.
தூதுளங்காய் - அரோசகம், ஐயம் கப்ம், குடல்வாதம், மலம்வாதபித்தமும்போம்.
தூதுளைப்பத்திரி - காசம், காதுமந்தம், வாதெழுச்சி, சூலை, தாதுநஷ்டம், தினவு, மதம், மந்தம், முத்தோஷம் மேலுளைப்பும் போம்.
தூதுளம்பழம - கபக்கட்டு, கோழை திரிதோஷம், நீர்க்கோவை, விஷமும்போம்.
தூதுளம்பூ - அழகு, தாதுபுஷ்டி, பலமும் உண்டாம். தளர்ந்ததேகத்திற்காகும்.
தூதுளம்வேர்-பல்நோயும்போம்

## தெ

தெகுட்டிகை
தெகுட்டி } தேள்கொடுக்கி.
தெங்கு-தென்னை, ஓர்மரம்
தெருவித்தேங்காய்-ஓர்பூண்டு
தெறுந்தேங்காய் - சமுத்திராப் பழம், தேங்காய்ப்பழம்.
தெசலாம்-தேமா
தெசவம்-மா
தெளி-மஞ்சள், பெருங்குரும்பை
தெந்தி-கேர்வாளம்
தெருவிலழகு-குப்பைமேனி
தெவம்-மாமரம்
தென்-தென்னை
தென்னங்கள்ளு-ஓர்கள்ளு

தென் - தென்னை, வழக்கமாயிருக்கிற மலச்சிக்கல், மலபந்த வியாதிக்குச் சுகமான விலைபெற்ற பரிகாரமா யிருக்கின்றது.
தென்னமரத்துப் பஞ்சு-ஓர் பஞ்சு இது காயங்கள் அட்டைக்கடி முதலாகியவைகளிலிருந்து வரப்பட்ட இரத்தத்தை நிற்கச்செய்ய உபயோகப் படுத்துகிறார்கள்.
தென்னி-வாழை
தெங்கின்கற்கண்டு-கபம், திமிர்வாதம், வாய்வும் உண்டாம்.
தெங்கின் குருத்து - உதிரமூலம், சிலேட்டுமவலியும் போம்.
தெங்கின்பூ-அகக்கொதிப்பு, அசிர்க்கரநோய், இரத்தபித்தம் பிரமியம்; மேகம் விஷமும் போம்.

தெங்கின்மது - கரப்பான் கிராணி சோபை, நாதவிந்து, பாண்டு, பேதி, வாதபித்த முண்டாம்.
தெங்கின் வெல்லம் - உடலூதல், கணை, கரப்பான், காமாலை, சிரங்கு, சோகை, சோபம், திரை பாண்டு, மதிகடல், மாந்தம், வாதமும் உண்டாம்.
தெளிந்ததேன்-இருமல், கண்ணோய், காசம், சுரம், சுவாசம், விஷமும்போம். குரலோசை யுண்டாம்.

## தே

தேகனி-மஞ்சள்
தேகி-புல்லூரி
தேக்கு-தேக்கு, கமுகு
தேங்காய்க்கீரை-ஓர்பூண்டு
தேங்காய்ப்பூநாறி - தேங்காய்ப்பூக் கீரை.
தேங்கிட்டி-தேள்கொடுக்கி
தேசனி-மஞ்சள்
தேசாவகம்-ஓர்கிழங்கு, இது சூடான கார்ப்புள்ள கறுவுள்ள கிழங்கா யிருக்கின்றது. இதைச்சுதேச வைத்தியர் சுரங்களுக்கும் அசீரண வியாதிக்கும் குன்மவியாதிக்கும் குடிநீராக உபயோகப் படுத்துகிறார்கள்.
தேசி - எலுமிச்சை, எலுமிச்சம்பழம்.
தேவகந்தம்-குங்கிலியம்
தேவகந்தர்
தேவகந்துரு } சீதேவியார்
தேவதரு-தேவதாரம்
தேவதாரம்-தேவதாரம், செம்புளிச்சை.
தேவகாளி-ஓர்பூண்டு
தேவபனம்-அரசு
தேவம்-மாமரம், அனிச்சை, குளிராவல்.
தேவர்வசம்-அரசு
தேவலதை-அடுக்குமல்லிகை
தேவனம்-தாமரை
தேவாப்பீட்டை-வெற்றிலை
தேவி-சீதேவியார்
தேள்கொடுக்கி-ஓர் பூண்டு, இதின் இலைச்சாறு கசப்பாய் இருக்கும். இதைச் சுதேசவைத்தியர் நோயுள்ளபல்லின் ஈறுக்கும் முகப்பருவுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள் கண்ணோய்களுக்கும் உபயோகப் படுத்துகிறார்கள்.
தேறு-தேற்றுமரம், துண்டு
தேற்றுங்கொட்டை-ஓர்விதை
தேளி-கடுகுரோகணி
தேக்கு-சிரங்குபோம்
தேங்காநெய்-சிரங்கு, தீப்புண்படர்தாமரை, பல்நோயும்போம் தலைமயிர் வளர்வுண்டாம்.

தேங்காய்ப்பால் - அன்ன மிரங்கு

தல், கரப்பான், தாதுவிர்த்தி, பித்தம், வாதமும் உண்டாம்.

தேங்காய்ப்புண்ணுக்கு-கரப்பான், சொறிசிரங்கு, வயிற்றில் புழுவுமுண்டாம்.

தேட்கடை-சிரங்குபோம்

தேட்கொடுக்கு - கரப்பான், சிலவிஷம், தினவு, நாட்பட்ட புண்மாந்த கணமும்போம்.

தேயு-உள்வலி, கண்டைக்கால் நோய்பல பிணிகளும்போம்.

தேவதாரமரம் - அனல், சிலேட்டுமம், நீரேற்றம், பீநிசம், பழய சுரமும்போம்.

தேளி-உலர்ந்தது, இருமல், ஈளை கிராணி, மேகவாய்வு போம்.

தேற்றாங்கொட்டை - அகக்கடுப்பு உள்புண், கண்ணெரிவு, கிரிச்சரம், தீபனம், வெட்டை, வெள்ளையோடலும் போம் நீர்த்தெளிதல் மந்தமும் உண்டாம்.

தேற்றாங் கொட்டை - மேல்தோல் அதிக வாந்தியுண்டாம்.

தேற்றாம்பழம்-ரசம், சுவாசம்முத்தோஷமும் போம்.

தேற்றாளிலை - எல்லாசுரமும், எல்லாவிக்கமும்போம்.

தேனிலுண்டாகுங் கற்கண்டு-சுரம் வாதம், விழியிலிருக்கின்ற படலமும் போம். தொனிபசியுமுண்டாகும்.

தேன்குத்தல்-உட்டினம் கபவாதம் தாகம், மந்தமும் உண்டாம்.

தேன்பாகு-அருசி, சர்த்தி, மற்ற வியாதிகளும் போம், கோழை உண்டாம்.

### தை

தை-தைவிளை, கைவேளை, அரசதண்டார், தைலபீதம், அத்திப்பிசின்.

தைலங்களின்பத்தியம்-ஸ்திரி, செம்மறிதயிர், நித்திரை, பாகற்காய், பால், புகையிலை, புளி, மீன் இவைகளால் பத்தியத் தாழ்வுண்டாம்.

தைலந் தேய்க்கும்விதி - காதுக்கு 6-துளி நாசிக்கு 4-துளிவிட்டு உச்சிக்கும் பாதங்களுக்கும்தேய்த்து ஊறினபின் ஸ்நானஞ்செய்யவும்.

தைலப்புகை - முத்தோஷங்களாற் பிறக்கின்ற நோய்களெல்லாம் போம்.

தைலாதிகளின்குணம் - வாரத்திற் கிரண்டுவிசை தேய்த்து ஸ்நானஞ் செய்தால் நோய்களணுகாதோடிப்போம்.

### தொ

தொக்கி-சமுத்திராப்பச்சை

தொங்கினை-சீனமல்லிகை

தொடரி-புலிதொடக்கி

தொட்டவிரல்-தறித்தான், பெருங்குமிஞ்சா.

தொட்டால்வாடி-தொட்டார் சுருங்கி, இந்தப் பூண்டின்வேர்க்கஷாயம் கல்லடைப்புவியாதிக்கு உபயோகப் படுத்தப் படுகின்கின்றது. சுதேச வைத்தியர் புண்களுக்கும் புண்புரைக்கும் இதன் இலையையும் வேரையும் உபயோகப் படுத்துகின்றார்கள். இலையைக் கொஞ்சம் அரைத்து பாலில் கலந்து கொடுக்கப்படுகிறது.

தொட்டாற்சுருங்கி-ஓர் பூண்டு

தொட்டி-காய்ஞ்சொறி

தொட்டிப்பாஷாணம் - ஓர் பாஷாணம்.

தொண்டி-கள்

தொண்டை-ஆதொண்டைச் செடி, கோவைச் செடி, காற்றோட்டி.

தொதி-பப்பரப்புளி

தொலியாகரம்பை-நத்தைச்சூரி

தொவசலுகம்-மாவட்டை

தொன்மரம்-ஆலமரம்

தொக்கணத்தின் குணம்-வாயுபோம் உறக்கம் புணர்ச்சியும் உண்டாம்.

தொட்டாவாடி-ஜன்னி, வெட்டை, வெள்ளையும்போம், ஸ்திரீவிரோதம் உண்டாம்.

தொட்டிப்பாஷாணம்-கிரந்தி, சுரம் மந்தம், முளைதட்டி வாய்வும் போம். வாதவித்தை உண்டாம்.

தொய்யாக்கீரை-சதை, வீக்கங்கள் விஷமுள்ள புண்களும் போம்.

தொழிக்கண்ணி - துணித்த சதை கூடும்.

### தோ

தோகலி-அசோகு

தோகல்-சோனைப்புல்

தோக்குளம்-பருத்தி

தோஷம்-ஓர்நோய்

தோடகம்-தாமரை

தோட்டி-செங்காந்தள், நெல்லி

தோண்டி-வறட்சுண்டி

தோதிபோவா-போராமுட்டி

தோரை-குழுநெல்

தோலாயா-இலவு

தோலா-ரூபாயெடை

தோல்-மூங்கில்

தோளி-அவுரி

தோன்றி-காந்தள்

தோசை-கபம், பித்தம், வாய்வும் போம்.

தோஷம் நீங்காத பாதரசம் - இரசத்திற்கு எட்டுவகை தோஷமுண்டு. அதாவது கந்தி காளம் சர்ப்பம் சாஞ்சலம் மந்தமலம் வங்கம் வன்னி என்பவைகளால் இந்த தோஷத்தை நீக்காமல் உண்பவர்கள் அக்கினி எரிச்சல் குஷ்டம் கொப்பளம் சோதுபோன்ற தேகநிறம் கரணம் மூர்ச்சை விந்து நஷ்டம் என்கிற 8 - விரோதங்களும் உண்டாம்.

தோப்பு நெல்லிக்காய் - அரோசகம், உஷ்ணம், சித்தக்கலக்கம், சிலேட்டுமம், பித்தம், பிரமேகம், பீநிசம், புண்மலம், வாதம், வாந்தி, வாயிலைப்பூ, விக்கலும்போம்.

### ந

நகசிறிதம்-குன்றி.

நகதிபீசம்-புலிதொடக்கி

நகநோக்கி-வேலிப்பருத்தி

நகரி-வறட்சுண்டி

நகாதுறோணம்-தும்பை

நகவியாக்கிரம்-புலிதொடக்கி

நகிர்-தேள்கொடுக்கி

நகுலி-பட்டப்பருத்தி

நகுத்தம்-புன்கு

நகேசிறு-புல்லூரி

நகைநோக்கம்-மஞ்சள்

நகையால்-பகண்டை

நக்காரி-வறட்சுண்டி

நக்கிபூ-ஓர்பூண்டு

நக்கிரு-தேள்கொடுக்கி

நங்கை - சிறியாநங்கை, பெரியாநங்கை.

நசாரி-காஞ்சிரை

நசியரி-குப்பைமேனி

நச்சிளி-கேழ்வரகு

நச்சுமரம்-எட்டி

நஞ்சறப்பாஞ்சான்வேர் - ஓர்கள்ளி, இதன் சிறுவேர் சிலும்பு உவாந்தி மருந்தாக விருக்கின்றது. இது சூரணமாகச்செய்து பிரயோகிக்கப்படுகின்றது.

நஞ்சறப்பாஞ்சான்-கொடிப்பாலை

நஞ்சறுப்பான் - ஓர்பூண்டு, கொண்டைசாணிக்கிழங்கு, கொடிப்பாலை நஞ்சி குன்றுமணி கொண்டைசாணிக்கிழங்கு.

நஞ்சு-விஷம்

நடவை-தணக்கு

நடபத்திரிகை-சேம்பு

நணந்தம்-புங்கு, சணல்

நண்பன்-சணவு

நந்திசம்-தாமரை

நந்தப்பிலா-எருக்கு

நந்தமலரம்-புன்கமரம்

நந்தம்பின்கு-வாழை, எருக்கு

நத்தை-ஓர்பூண்டு, கடுகு

நத்தைச்சுண்டி-நத்தைச்சூரி

நத்தைச்சூரி-ஓர்பூண்டு

நந்தம்-கஸ்தூரி

நந்தாமணி - உத்தாமணி, வேலிப்பருத்தி.

நந்திபத்திரி-நந்தியாவட்டம்

நந்திப்பூசணி-சாம்பற்பூசணி

நந்தியாவட்டம்-ஓர்பூ, இதன் ரசம், கண்ணோய்க்குப் பிழியப்படுகின்றது.

நந்தியாவர்த்தகம்-நந்தியாவட்டம்

நந்திவிருட்சம்-சின்னிமரம்

நந்தை-கொத்தான்செடி

நமக்சாரி-வறட்சுண்டி

நம்பு-நாவல்

நரகளுதி-தேள்கொடுக்கி

நரந்தம்-நாரத்தை

நரந்தை-கொற்றான்

நரளி-கடலை

நரிகொன்றை-ஓர்மரம்

நரிப்பயறு-மின்னி

நரிப்பாகல்-காட்டுப்பாகல்

நரிமருட்டு-கிலுகிலுப்பை

நரிமுருக்கு-ஓர்முருக்கு

நரிமெருட்டி-கிலுகிலுப்பை

நயிலந்தை-ஓர்மரம்

நரியுடை-மொசுமொசுக்கை

நரிவாற்புல்-ஓர்புல்

நரிவிளா-நரிவிளா

நரிவெங்காயம்-ஓர்வெண்காயம்

நரைக்கொள்ளு-சிர்கோழி

நடுநட்டு-கபம், கபாலசூலை, வாதபித்தமும்போம். அழகு, நடைபலம், புஷ்டியும் உண்டாம்.

நண்டுக்கல்-ஐயம், நீரடைப்பு, நீருகல், நீரொழுக்கு, பெருவயிறு மேகவெட்டையும்போம்.

நண்டுக்குழிநீர் - காந்தல், தாகம், தேகஎரிவு, மாறுதவிக்கல், வாந்தியும்போம்.

நத்தைக்கறி-மூலரோகம், மூலமும்போம். தாதுவிர்த்தி நித்தந்தின்றால், செரியாக்குணமும் உண்டாம்.

நத்தைச்சூரி-கல்போன்ற வீக்கமெல்லாம் கரைந்துபோம். வியாதிகளுக்குப் பலவித விநோதமாம்.

நந்தியாவட்டப்பூ - கண்காசம், கருவிழி நோய்கள் படலம், மண்டைக்குத்தலும்போம்.

நமன்கத்துவயம் - தம்பனையுண்டாம்.

நமிட்டுக்கறி-கயம், கரப்பான், சோபை, வாதமும்போம். எல்லாக் கறிகளுக்கு மேலாகிய உருசியாக விருக்கும்.

நரளைக்கிழங்கு - கரப்பான், புண், மூலம், மேகமும்போம்.

நரளையிலை - ஸ்திரீகள் வயிற்றில் உருளுகிற இரத்த குன்மமும்போம்.

நரிக்கொன்றைமரம் - அரிப்புப்புடை, கிருமிப்புடை, யானைச்சொறியும்போம்.

நரிப்பயறு - கணம், குளிர்தேரை, தோஷம், பித்தமஞ்சள், மாறல்சுரமும்போம்.

நரிப்பயற்றங்கொடி - ஐயம், கரப்பான், பித்தம், பித்தவெட்டை, மேகவெட்டையும்போம்.

நரிமுருக்கு-சயம்போம்

நரிவெங்காயம்-இரைப்பு, சீதகபம், நஞ்சு, மூலபவுத்திரமும்போம்.

நருமதாநதி நீர் - ஐயம், காமாலை, கைகாலெரிவு, கோழைக்கட்டு, சாமதோஷம், நீர்க்கட்டு, பொருமல்வாதம், வாந்தி, விக்கலும்போம்.

நல்லநெருஞ்சில்-அனல், கல்லடைப்பு, கிரிச்சரம், கூன்வாதம், சுரமதாகம், திரிதோஷம், நீர்க்கட்டு, நீர்சுருக்கு புண், மேகவெட்டை வெப்பும்போம். போகமுண்டாம்.

நல்லவெல்லம் - பித்த குன்மம்போம். கோழை, மதுமேகம், மலப்புழுவும் உண்டாம்.

நல்லவேளை - ஐயம், சயித்தியம், சிரநோய், சோகை, மார்நோய், வலி, குடைச்சல், வாதமும்போம். அச்சரம், அனல், பசிபித்தமும் உண்டாம்.

நல்லவேளைப்பூ-கணமாந்தம், கோழை, மாந்தசுரம், வாய்வும்போம்.

நவபாஷாணம் - கனத்த நோய்களெல்லாம்போம். சிந்தூரித்துதின்றால் கபயமிறுதல் உண்டாம்.

நவரை-வாழைப்பழம், கரப்பான், நமைச்சல், மாந்தம், வாதகபமும் உண்டாம்.

நவச்சாரம் - கல்லடைப்பு, குடல், சூலை, குன்மம், தோலின்கவிச்சு, நாற்றம், மகோதரம், முத்தோஷம், வாதமும்போம்.

நவரத்தின மணிதல் - நேத்திரரோகம்போம். சரீரகாந்தி, திடம், பலம் உண்டாம்.

நறுவலிப்பழம் - இரத்த பித்தம் மேகமும் போம்.

நறுவிலிவேர் - எலும்புருக்கி, நாப்புண்ணும்போம்.

நற்பரிசி-அரோசி, அனல், கல்லடைப்பு, நீர்க்கடுப்பு, பயித்தியம், வாதம், வாந்தி வெட்டையும்போம்.

நன்றாய்ச்சமைத்த துவரம்பருப்பு-நெய்யோடு சாப்பிட்டால் பிடிக்குப் பிடிசதை உண்டாம்.

நன்றாய் சமையாத அன்னம்-பலம்போம். மலசல சிக்குகளும் மற்றுநாளு முண்டால் மந்தமும் உண்டாம்.

நன்னாரிவேர்-ஸ்திரீகளாலுண்டாகுஞ் சூடு, உழலை, ஜலதோஷம், சுரம், தாகம், பித்தம், புண் மதுமேகமும், கற்றாழைச்சோற்றிற் கலந்துண்ண வண்டுகடியும் தேனிலரைத்து வெதுப்பியுண்ண வெறியும்போம்.

நல்லமிளகு-மிளகு, இது நல்லதாயும் புதிதாயுமிருக்கில் ஔஷதத்துக்குப் பலவிதமாய் உபயோகப்படுத்தப்படும்.

வாந்திபேதிக்கு பங்காளத்தில் அனேக வருஷமாக கீழ்ச்சொல்லியிருக்கிற மாத்திரைகள் நன்றாய் அனுகூலப்பட்டிருக்கின்றன. நல்ல மிளகு காயம் அபின் வகைக்கு 20-கிறெயின் இவைகளை ஒன்றாய்ச் சேரும்படி இடித்து 12-மாத்திரைகளாகப் பகுத்துருட்டி அரை அல்லது ஒருமணி நேரத்துக்கொருதரம் ஒரு மாத்திரை வீதம் வியாதி சுகப்படுமட்டும் கொடுக்க வேண்டும். வியாதிக்காரன் தேவையான மட்டும் தண்ணீராவது கஞ்சித் தண்ணீராவது குடிக்கலாம்; மேற்சொன்ன மாத்திரை பிராயமானவர்களுக்கும் அதில் பாதி மாத்திரை 7-முதல் 14-வயசு வரையுள்ள வாலிபருக்கும் நிதானித்துக் கொடுக்கவேண்டும்.

குளிர்சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கு நல்ல மிளகு 40-கிறெயின், காயம் 20-கிறெயின் கழற்சிக்காயின் பருப்பு, 100-கிறெயின் இவைகளைத் தேன்விட்டு ஒன்றாயிடித்து 3-மாத்திரைசெய்து சுரம் விட்டிருக்கிறபொழுது தினம் இரண்டு அல்லது மூன்றுதரம் 2-மாத்திரை விதம் விழுங்கவேண்டும். பிராயமானவர்களுக்கு இந்தப்பிரமாணமும் குழந்தைகளுக்கு இதில் பாதியும் கொடுக்கவேண்டும். இந்த மாத்திரைகளைக் கொடுக்குமுன் எப்பொழுதும் வயிற்றை ஆமணக்கெண்ணையாவது மற்றப்பேதி ஔஷதமாவது கொடுத்துச் சுத்திபண்ணிக் கொள்ளவேண்டும்.

படர்தாமரைக்கு நல்ல மிளகின் தூள் 1-அவுன்சு, நெய் 4-அவுன்சு இவை யிரண்டையும் நன்றாயரைத்துத் தினந்தோறும் இரண்டுதரம் படர்தாமரையின் மேல் நன்றாய்த்தேய்க்க வேண்டும்.

மேகவெள்ளைக்கு வால்மிளகு கிடையாவிட்டால் நல்ல மிளகு தேனிலரைத்து ஒரு தரத்துக்கு 10-கிறெயின்வீதம் தினம் மூன்றுவேளை சாப்பிட வேண்டும். இது வாள்மிளகிலுந் தாழ்ச்சியானதால் அது கிடையாத போதுதான் நல்ல மிளகைக் கொடுக்கலாம்.

நரையல்லி-வெள்ளாம்பல்
நலம்-சுக்கு
நல்லவேளை-ஓர்பூண்டு
நல்லவம்மான்பச்சரிசி-ஓர்பூண்டு
நவஞ்சம்-அசமதாகம்

நவட்சாரம் - ஒருமருந்து, கடைகளில் கிடைக்கும் நவட்சாரம் சுத்தமற்றதாயிருக்கிறதினால் அதை உள்ளுக்குக்கொடுக்குமுன் கீழ்ச்சொல்லியிருக்கிற பிரகாரம் சுத்தி செய்துகொள்ள வேண்டும். 2-இராத்தல் நவட்சாரத்தைக் கொதிக்கிற தண்ணீரில் கலக்கிச் சூடுடன் வடிகட்டி ஆறினபின் ஒருதட்டையான பாத்திரத்தில்விட்டு வெயிலில் வைத்து பின்பு காய்ந்து கட்டியாய் உபரிப்போலாகிறதை எல்லாம் உடனுடன் பேர்த்தெடுத்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவேண்டும். இப்படி சுத்தி செய்யப்பட்ட நவட்சாரம் அநேக பாகங்களுக்கு உதவும்.

ஸ்திரீகள் பால் கொடுக்கும்போது அவரவர்கள் மார்பிலுண்டாகும் விப்புருதிக்குக் கடை நவட்சாரம் 2-திரும் ½-புட்டி தந்நீரில் கலக்கி இதில் சீலையை நனைத்து வியாதியின் மேலிட்டு வைத்து சீலையை இரவும் பகலும் அடிக்கடி மாறிமாறி நனைத்திட வேண்டும். விப்புருதியுடைந்தபின் மார்பில் கட்டியிருக்கிறதைப் போக்குவதற்கும் மேற்படி மருந்து உபயோகமாயிருக்கும்.

அதிக நாள்பட்ட இருமல்களுக்கும் கபம் போகாமலும் இருமலுடனேயும் இருக்கும் நெஞ்சுவலிகளுக்கும் அந்த உப்பில் 10-கிறெயின் நாட்டு, அதிமதுரத்தில் சேர்த்து மூன்று நான்குமணி நேரத்துக்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். ஷெடி. கஷாயம். செய்கிறவிதம் எப்படியென்றால் 2-அவுன்சு குன்றிவேரை அரை புட்டி தண்ணீரில் 10-மினிட்டு நேரம் வேகவைக்க வேண்டும். இதில் ஒரு தரத்துக்கு 3-அவுன்சு வீதம் குடிக்கவேண்டும். கக்கிருமலுக்கு ஒருதரத்துக்கு 1-முதல் 5-கிறெயின் வரை அதற்குச் சமன் கருவாய்த் தூளைக்கூட்டி குழந்தையின் வயசுபோல் நிதானித்துக் கொடுக்கில் மிகுந்த பலனைத்தரும்.

நுரையில் இரைகுடல் மற்றெந்த உள்ளுறுப்பில் நின்றாவது இரத்தம்போனால் 2-திரும் நவட்சாரம் அரிசிக் கஷாயம் அரை புட்டியில் கலக்கி வியாதியின் கடினம்போல் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு ஒரு தரம் ஒன்றரை அவுன்சுவீதம் கொடுத்து வியாதிக்காரனைக் குளிர்ச்சியாகவும் அமைதலாகவும் படுக்க வைத்திருக்கவேண்டும். முக்கியமாய் குளிர்சுரத்தையாவது மற்றெந்த சுரத்தையாவது தொடர்ந்துவரும் நீர்க்கோவைக்கு நவசாரத்தை, தினம் 3-நேரம் கிறெயின் வீதம் நன்னாரிவேர் கஷாயம் 2-அவுன்சில் சேர்த்துக் கொடுக்கவேண்டும். கழுத்து முதலான ஸ்தலங்கள் விசைநரம்புகளிலுண்டாகும் கட்டிகளுக்கும் மேற்சொன்ன பிரமாணம் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

முகத்தில் ஒரு ஸ்தலத்திலாவது அதின் ஒரு பக்கத்திலாவது முக்கியமாய் சீதளத்தினாலும் வாத சம்பத்தினாலும் உண்டாகும் முகவலிக்கு நவட்சாரம் பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. சுத்திசெய்த நவட்சாரம் 20-கிறெயின் 2-அவுன்சு சுடுதண்ணீரிற் கலக்கிக் கொண்டு நாலுமணி நேரத்துக்கொருதரங் கொடுக்க வேண்

டும். இப்படி நான்கு தரங் கொடுத்தபின் வலி நிற்காவிட்டால் அதைப் பின்னுங் கொடுக்கிறது பலனில்லாததால் நிறுத்திவிடவேண்டும்.

நசிவுகள், கருக்குகள், நாள்பட்ட கட்டிகள், வாதவீக்கம், விரை நரம்பிலுண்டாகும் வீக்கங்கள், முட்டு வீக்கங்கள், அரையாப்புக் கட்டிகள், பயங்கரமான விப்புருதிகள், பருக்கள் இவைகளுக்கெல்லா, மேற்படி உப்பைக் கடையில் வாங்கினபடி சுடுதண்ணீரிற் கலக்கி வியாதியின் மேலிட்டு அடிக்கடி நனைத்தால் வலியைநீக்கி வீக்கத்தைக் குறைத்து சவுக்கியப்படுத்தும் தேகத்தின் எந்தப் பக்கத்திலாவது தோலின்மேல் வலியுஞ் சுடும். சிவப்பு நிறமும் உண்டாகில் இரத்தச் சுரப்பென்ற பெயர். இதற்கு அரை புட்டி நவட்சாரத்தை ஒருபுட்டி தண்ணீரில் கலக்கி இடில் வலி சூடு முதலானதைத் தணிக்கும். பன்னீர் கிடைக்குமாகில் சுத்த சலத்தைப்பார்க்கிலும் உத்தமம்.

நவதி-பொடுதலை
நவநாகம்-அசமதாகம்
நவம்-சாதனை
நவ்வல்-நாவல்
நளத்தம்-சடாமாஞ்சி
நளம்-தாமரை
நளினம்-தாமரை

நரவம் - அனிச்சம், குங்குமம், ஞாழல், தேன்.
நறவு - குங்குமமரம், தேன், கள், குங்குமம்.
நறளை - ஓர்கொடி, அவை, சிறுநறளை, பெருநறளை, புளிநறளை, யானைத்தடிப்பு.
நறிவெங்காயம்-ஓர்வெங்காயம்
நறுகள்-தேன்
நமருப்பு-இஞ்சி
நறுவிலி } ஓர்மரம்
நறுவுளி } ஓர்மரம்

இந்த மரத்தின் பட்டையால், மைசூர் தேசத்தில் கப்பற் கயிறுகள் செய்யப்படுகிறது.

சிறுநறுவிலி-ஓர் மரம், நறைகள்
நற்சீரகம்-கறுஞ்சீரகம்
நற்பலம்-வெட்பாலை
நற்பிரியம்-பற்பாடம்
நற்றுணி-அத்திமரம்
நளந்தம்-புன்கு
நனை-கள்
நனையாவிருட்டி-கொட்டைப்பால்
நன்பனை-சணல்
நன்னாரி-ஓர் மருந்து, பூண்டு, நன்னாரி, பற்பொடி.
நன்னாரிவேர் பறித்தவுடன் 4-அவுன்சு எடுத்துச் சதைத்து 1-புட்டி கொதிக்கிற தண்ணீரில் விட்டு 2-மணிநேரம் மூடி வைத்துப் பின்புவடிகட்டவும். பிராயமானவர்களுக்கு ஒரு நேரத்திற்கு 3-அவுன்சு வீதம் தினம் 3-நேரங் கொடுக்கவும். குழந்தைகளுக்கு ஒரு நேரத்துக்கு ஒன்றரை அவுன்சு வீதம் கொடுக்கலாம். இதில் பஞ்சதாரையும் பாலுஞ் சேர்த்துச் சூட்டுடன் குடித்தால் சாரமதிகப்படுவதுமன்றி இன்பமான உருசியுள்ளதால் அதைக் குழந்தைகள் உடனே குடிக்கும். எதுகாரணத்தாலாவது வரும் பலவீனம் மாறிப் பெலப்படுவதற்கு இது மிகுந்த உபயோகமாயிருக்கிறதுந் தவிர தேகம் வெளிறி பலக்குறைவா யிருக்குங் குழந்தைகளுக்கும் சுகத்தைக் கொடுக்கும் மேக வியாதிகள் பருக்கள் தோலிவியாதிகள் அசீரணம் பசியின்மை நெடுநாளாய்ச் சென்ற வாதம் இவைகளுக்கெல்லாம் மிகுந்த பிரயோசனமுள்ள ஔஷதமாக விருக்கின்றதுந்தவிர அது சாதாரணமாய் வழங்கப்பட்ட ஒரு கேர்த்தியான பலன் கொடுக்கிற மருந்தாய் இருக்கின்றது.

நாககெந்தி-வஞ்சிக்கொடி, கோர்வாளம்.

நா

நாகணம்-கோர்வாளம்
நாகதாளி-ஓர்பூண்டு
நாகதாளிக்கள்ளி- ஓர் கள்ளி, இது சில வருஷங்களுக்கு முன் கெப்டியன் நீலன் என்பவரால் தென் அமெரிகா தேசத்திலிருந்து கொண்டுவந்து பயிர் செய்வித்ததாக விருக்கின்றது.
நாகதொதி-கோர்வாளம்
நாகதேனி-பெருமருந்து
நாகமல்லி } அனிச்சம்
நாகமல்லிகை } அனிச்சம்
நாகமல்லி-ஓர் வேர், புதுசாய் வெட்டிய இந்த வேரைச் சதைத்து எலுமிச்சம்பழ ரசத்தோடு சேர்த்து படர் தாமரைக்கும் தோலைப்பற்றிவந்த சொறி சிரங்குக்கும் பூசினால் வியாதி நீங்கும்படியான் மேலான பூச்சுமருந்தாக யோசிக்கப்படுகிறது.

நாகம்-ஓர் பஞ்சலோககாரியம்
நாழல்-புன்னைமரம்
நாகரங்கம்-தேன்றோடை
நாகரம்-சுக்கு
நாகரி-குருக்கத்தி.
நாகரு-குருக்கத்தி
நாகரும்-தேன்றோடை
நாகரேணு-செவ்வியம்
நாகரை-ஓர்பூண்டு
நாகவல்லி-வெற்றிலை
நாகவள்ளி-ஓர் வெற்றிலைக்கொடி.
நாகினி-வஞ்சிக்கொடி, வெற்றிலை
நாகுலி-அரத்தை, கிரிபுரண்டான்பூ
நாகேசுரம்-ஓர்செடி
நாக்குழிஞ்சான்-ஓர்செடி
நாசுகம்-பீர்க்கு
அவை - அசாத்தியநாடி, சாத்தியநாடி, வாதநாடி, பித்தநாடி, சிலேஷ்மநாடி, தசநாடி.
நாட்டு சவுக்காரம் - ஓர் சவுக்காரம் வைத்தியர் இதை குன்மவியாதிக்குச் சேர்க்கப்பட்ட மருந்தில் சேர்க்கிறார்கள்.
நாட்டு வாதுமைக் கொட்டை - ஓர் வாதுமைக்கொட்டை இது வைத்தியரால் பலவீனமானபேருக்கு இலேசான ஆகாரமா யோசிக்கிறார்கள்.
நாணல்-ஓர்புல்
நாணமுகப்புல்-ஓர்புல்
நாதலத்தம்-பெருநெருஞ்சில்
நாதேரம்-இந்துப்பு, வஞ்சிக்கொடி, சிந்தில்.
நாதேனி-மணித்தக்காளி
நாபி-ஓர் விஷமூலிகை, அவை, வச்சநாபி, பச்சைநாபி, வசம்புநாபியின் ஜாதி விவரம்: அந்தணநாபி, பிரமநாபி, சத்தியநாபி, அரசநாபி, வைசியநாபி, சூத்திரநாபி, நிறங்கள்: அந்தணநாபி-செகப்பு, வைசியநாபி - நீலம், சூத்திரநாபி - கறுப்பு; நாமம்: திருமண்தாம்பை, நாமவந்தம், பெரு நெருஞ்சில், நாமவெகுண்டம்.

நாகணம் - உதரரோகம், சோகை, தலைக்குத்தல், தலைபிடிப்பு, தலைவலி, நீரேற்றம், மலட்டுநோய் வழிநோயும்போம்.

நாகதாளிசெடி விஷங்கள் - செந்து விஷங்கள், வாதமும்போம்.

நாகமல்லி - அதிசாரம், இரத்தம், குஷ்டம், குறல்கம்மல், சுவாசகாசம், சூடு, தேள்விஷம், நீரிழிவு, பிரமியம், புகைச்சல், மதமூர்ச்சை, மேகம், வண்டு,விஷம் விந்துநஷ்டமும் போம்.

நாகம்-இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலை,மந்தாரகாசம்,மூலரோகம், வரட் காசங்களும் போம்.

நாட்சென்ற காடித்தெளிவுநீர்-அதிசாரம், அரோசி, கிராணி, நாடி, நிமிரல்,பித்தமும்போம். வரணவுடல் தெளிவு உண்டாம்.

நாட்டுக் கருவாழை - திரிதோஷம் போம்.

நாட்டுக்கரு- வாழைக்கிழங்கு-சுரம், உண்டாம்.

நாணல்-தின்மாங்கிஷம்போம்

நாணற்கரும்பு - அதி தூலநோய், ஈளை, பாண்டு, பித்தம், வயிற்றுள் நோய், வாந்தி, வாய்வும் போம்.

நாயுருவியிலை - கபம், தந்திமேகம், பேதி, மந்தம், மூலஉதிரம், வியர்வும் போம்.

நாயுருவியிலை-பசிபோம்

நாயுருவி - சமூலம், மாதர், சூதக அழுக்குபோம். வங்கசிந்தூரம் உண்டாம்.

நாயுருவிவேர்-வசியமுண்டாம்

நாய்கடுகு - உதிரவாதம், குன்மம், சூதகவாய்வு, வாதவலியும்,பேய்க்குப் புகையும் போடப்போம். மலக்கட்டு உண்டாம்.

நாய்த்துளசி-அழல், கபம், குத்திருமல், முத்தோஷமும் போம். உடற்குப்பொழிப்பு உண்டாம்.

நாய்ப்பாகல்-பீநசம்போம். சாதிலிங்க சுத்தி, பாஷாண சுத்தியும் உண்டாம்.

நாய்வேளை-உடற்கடுப்பு, காதிரைச்சல், சூலை, பீநிசம், வாதமும் போம். மலக்கட்டு உண்டாம்.

நாரத்தங்கச்சல் - அரோசி, எரிப்புழு, சீதம், வயிற்றுப் பொருமலும்போம். தாது திபனமும் உண்டாம்.

நாரத்தங்காய் - குன்மம், வாதம், வாயிலுள்ள புழுவும்போம். திபனம், தேகசுத்தமும் உண்டாம்.

நாரத்தம்பழம்- பித்தகுன்மம் போம். தாது திபனமும் உண்டாம்.

நாருமடி-சந்தி, சளி, நீரேற்றம், வாய்வுபோம். தேகசுத்தி உண்டாம்.

நாரைக்கறி - நீரிழிவுபோம். நாறு கரப்பான், புண், மேகம், வாதமும் உண்டாம்.

நாரைப் பசும்பால் - முயல் நோய் போம்.

நாபிஞாறம் நீர்-அதிசாரம், மேகமும்போம். ஐயம்,சீதம், பலம், நந்தம், விந்து, வெப்பும் உண்டாம்.

நாவல்பட்டை - காசம், சுவாசம், பாலகர் கிரகதோஷம், பெரும்பாடு, பிறவிமறு, மச்சபேதங்கள், வாய்நோவும் போம்.

நாவல்பழம்-கடுப்பு, கொதிப்பு, தாகம், நீரிழிவு, வாய்வும் போம். ஐயம், கரப்பான், மாந்தமும் உண்டாம்.

நாவல்பூ - கமலவிரணம், நீரிழிவு, மேகமும் போம். மலக்கட்டு உண்டாம்.

நாவல்வித்து - கிராணி, நீரிழிவு, மூலச்சூட்டின் கிராணியும் போம்.

நாவல்வேர்-கரப்பான், சிதரத்தம், சுரம், நீரிழிவு, மேகம், வாதம், விரணமும் போம்.

நாவி-கபம், குஷ்டு, குன்மம், தேள் விஷம், நீரிழிவு, மந்தம், வாதவலியும் போம். சுத்தி செய்ய வேண்டியது.

நாயகம்-தலைமை
கிரந்திநாயகம்-ஓர்பூண்டு
சன்னிநாயகம்-ஓர்பூண்டு
நாயகஞ்சி-நாயுருவி
ஞாயிறுதிருப்பி } பொழுது
நாயிறுவணங்கி } வணங்கி

நாயுருவிவேர் - ஓர்வேர், சிலவயிற்றுளைவு வியாதிக்குச் சுதேசவைத்தியர் கொடுக்கிறார்கள்.

நாய்க்குருவி-நாயுருவி
நாய்க்கடுகு-ஓர்பூண்டு
நாய்க்கரந்தை-குன்றி
நாய்ச்சீரகம்-ஓர்பூண்டு
நாய்த்துளசி-ஓர் பூண்டு, கஞ்சாங்கோரை.
நாய்நாக்கு-இலைக்கள்ளி
நாய்ப்பயறு-ஓர் பூண்டு
நாய்ப்பாகல்-ஓர்பூண்டு
நாய்ப்புடுக்கன்-ஒருவகைமரம்
நாய்புடோல்-ஒருவகைபூண்டு
நாய்முள்ளி-ஒருவகைபூண்டு
நாய்வேம்பு-ஓர்பூண்டு
நாய்வேளை-ஓர்பூண்டு, நாய்க்கடுகு
நாய்க்கடுகு-ஓர்பூண்டு
நாரங்கம் - நாரத்தை, தேன்றோடை.
நாரத்தை } ஓர்மரம்
நார்த்தை }

நாரம்-நாரத்தை, பாசி
நாராயணம்-அரசமரம்
நாராயணி-தண்ணீர்விட்டான்
நாரிகேளம்-தென்னை
நாவி-கார்த்திகைப்பூ
நாவல்-ஓர் மரம்

நாவல்பட்டை - ஓர் மரப்பட்டை, இந்த பட்டையின் கஷாயம் சுதேச வைத்தியர் வயிற்றுக் கழிச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். கெட்டப் புண்களை இதனால் சுத்திகரிப்புச் செய்யப் படுகின்றது. அவை குழிநாவல், சிறுநாவல், ஜம்புநாவல், நிழல் நாவல், பெறுநாவல்.

நாவிலசநாவி-ஊமத்தை
நாவித்தண்டை-பீநாறி
நாவியம்-கார்த்திகைப்பூ
நாளகம்-இலாமச்சை
நாளிசம்-வள்ளிச்செடி
நாளினி-புளிப்புள்ளமாமரம்
நாலனு-கடைச்சிசெடி
நார்னு-கடைச்சி
நாறி-கற்றாளை
நாற்றம்-வசம்புகள்ளி

### நி

நிகாவா-பிரமி
நிகும்பம்-நேர்வாளம்.
நிக்ரோதம்-காட்டாமணக்கு
நிசாம்-வெள்ளாம்பல்
நிசாடு-மஞ்சள்
நிசாயிசா-மரமஞ்சள்
நிபாபுட்பம்-செவ்வாம்பல்
நிசி-மஞ்சள்
நிசுளம்-நீர்க்கடம்பு
நிச்சன்-தானி
நிச்சியம்-வெள்ளைப்பூண்டு
நிட்பவம்-மொச்சைப்பயறு

நிதகம்-நீர்முள்ளி
நிதிந்திகம்-சண்டங்கத்திரி
நித்திறம்-கண்டங்கத்திரி
நித்தில்-நொச்சி
நிமிளை - பஞ்சலோகத் தொன்று, அவை, இரசநிமிளை, வெள்ளி நிமிளை, கருநிமிளை, கருமா நிமிளை, பொன்னிநிமிளை, சத்திராதம், லோகநிமிளை, நுரைச்சி, வெண்கலநிமிளை.
நிம்பசேதம்-முடக்கற்றன்
நிம்பம்-வேம்பு
நியக்குரோதம்-ஆல்
நியாசம்-வேம்பு
நியாதம்-வேம்பு
நிரம்பியபுட்பம்-வாழை
நிரக்குண்டி-நொச்சி
நிலஆவிரை-நிலவாகை
நிலகடம்பு-ஒருவகைப்பூண்டு
நிலக்குமிழ்-ஒருவகைசெடி
நிலக்கொட்டை-ஒருவகைப்பூண்டு
நிலப்பிருங்கி-ஒருவகைபூண்டு
நிலத்துளசி-ஒருவகைபூண்டு
நிலப்பனை-ஒருவகைபூண்டு
நிலப்பகை-ஒருவகைபூண்டு
நிலம்-ஒருவகைபூண்டு
நிலம்கள்ளி-பூமி நிலம்பு, தாளி

நிலவாகை - ஆவிரை நிலப்பாகல், கடைகளில் கிடைக்கும். நிலவாகை மிகவும் தாழ்ந்த சரக்காயும் பழம் இலைத்துண்டுகள், காம்புகள் முதலிய குப்பைகள் உள்ளதாயும் இருக்கின்றது. இந்தியாவில் முக்கியமாய் திருநெல்வேலி நாட்டில் வளரப்பட்ட இலை அரபிதேசத்திலிருந்து வருகிற சென்னாமக்கி அல்லது மக்காசென்னா என்னும் நிலவாகையினும் விசேஷம். இலை முழுமையும் சுத்தமாயும் முறியத் தக்கதாயும் வெளிறின பச்சைஅல்லது மஞ்சள்நிறமாயும் கடினவாடையுள்ளதாயும்இருக்கவேண்டும். அது பேதிக்கு மிகவும் நல்ல ஔஷதம், கொடுக்கவேண்டும். முறையாவது நிலவாகை 1-அவுன்சு சதை சுக்கு, கிரும்பு வகைக்கு-1 இவைகளை அரைப்புட்டி கொதிக்கிற தண்ணீரில் விட்டு ஒரு மணிநேரம் வைத்திருந்து பின்பு வடிகட்டவும் இதில் ஒரு நேரத்துக்கு 4-அல்லது-5 அவுன்சு வீதம் கொடுக்கிற எல்லா மலபந்தங்களையும் நீக்கும். குழந்தைகளுக்கு மேற்சொன்ன அளவில் பாதியாவது அதிலுங் குறைத்தாவது கொடுக்கவும். இதைப் பார்க்கிலும் குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் உத்தமம்.

நிலவிழுது-நிலப்பனை
நிலவிலா-ஒருவகைசெடி
நிலவுமரி-ஒருவகைப்பூண்டு

நிலவேம்பு-ஒருவகை மருந்து பூண்டு, கிரியத்துவேர் என்பதின் கீழ்பார்க்க.
நிலவிரை-ஒருவகைப்பூண்டு
நிறைதருதாரு-சிந்தில்
நின்றுசிணுங்கி-சிறியாநங்கை

நித்திய அப்பியங்கனம்-அருசி, ஐயம், சோம்பல், தந்தைநோய், முத்தோஷமும் போம். தோல் மினிமினிப்பு, புஷ்டியும் உண்டாம்.
நித்திரைசெய்வதின் குணம்-இந்திரிய அசவுக்கியம், அயர்வும்போம். ஆயுள்விர்த்தி, மனம் உற்சாகம் உண்டாம்.

நிமிளைவகை 4-க்கும், ஜங்கிருட்சை தோஷம். மேகமும்போம் தாதுபுத்தி விவேகமும் உண்டாம்.
நிம்பவிந்து-சர்த்தி, பித்தம், விக்கலும்போம். அறிவு, குளிர்ச்சியும் உண்டாம்.
நில ஆவாரை-ஐயம், கிரந்தி, குன்மம், சொரி, தேமல், மலக்கட்டு, மூலவாய்வு, வெப்பும் போம். பேதி உண்டாம்.
நிலக்கடம்பு - ஆசிரணம், இரணம், கிருமி, ஜங்கி, நேத்திரநோய், பலவிஷம், மண்டையிலுண்டாகும் நீரும்போம்.
நிலக்குமிழ் - கண்சோருதல், கல்லடைப்பு, கொட்டாவி, சீதளம், பேதி, மாந்தம், வாதவலியும் போம். தாது திரேகக் குளிர்ச்சியும் உண்டாம். கெர்ப்பம் வெளியாகும்.
நிலக்குராம்-சர்த்திபோம்

## நீ

நீட்டினவிரல் - குறித்தான் கிரந்தி நாயகம்.
நீத்தம்-தண்ணீர்விட்டான்
நீபம்-காண்கடம்பு
நீரடி அல்லது } ஒரு மருந்து
நீரட்டி முத்து } வகை விதை.
நீரடைப்பு-ஒருவகைநோய்
நீரத்தி-ஒருவகை மரம்
நீரலறி-ஒருவகை செடி
நீராம்பல்-ஒருவகை நீர்ப்பூண்டு
நீராரை } ஓர் பூண்டு
நீருளாரை }
நீருதிபாசம்-கடற்பாசி
நீரெரிப்பு-ஓர்நோய்
நீரொட்டி-நீராரை
நீரோகம்-தாமரை

நீர்சலம்-தண்ணீர், அவை, இளநீர், உமிநீர், குடிநீர், குளிநீர், சிறுநீர், தென்னீர், கிநீர், வேதநீர், ஜெயநீர், சுண்ணாம்பு, நவச்சாரமும் கலந்து பனியில் வைத்திறக்கிய நீரென்பதாம்.

### தண்ணீர்

இது ஒரு எடை மருந்தல்லாதிருக்கினும் எல்லாத் தேசங்களிலும் கிடைக்கப்பட்டதாய் இருப்பதால் அதின் ஔஷதப் பிரயோகங்களில் சிலவற்றைக் காட்டுகிறோம்.

ஒரு பிராயமான மனிதனுக்கு சன்னியாவது சன்னிவலியாவது தளர்ச்சியாவது அறிவுகேடாவது அசதிசன்னியாவது உண்டா யிருப்பதற்கும் சூரியனுடைய காந்தி கொண்டு மூர்ச்சை யடைந்து விழுந்துபோவதற்கும் இரண்டு மூன்று அல்லது பெரிய சட்டிகளில் அதி குளிர்ச்சியான சலத்தைத் தயார் செய்து வைத்துக்கொண்டு வியாதிக்காரனுடைய தலையின்மேலும் தோள்மேலுமிருக்கிற சீலைகளை எடுத்து விட்டுத் தலையின் மேலுள்ள உரோமத்தைச் சவரம் பண்ணுவது உத்தமமானதால் அப்படி செய்வித்து அவனை உட்காரவைத்து ஒருவன் அவனைப்பிடித்துக்கொள்ள வேண்டும். மற்றொருவன் ஒரு உயர்ந்த நாற்காலி அல்லது திண்ணையின் மேலேறி சட்டிகளிலிருக்கும் குளிர்ந்த சலத்தை நோயாளியின் தலையின்மேலும் முதுகின்மேலும் பெருந்தாரையாய் விடவேண்டும். ஒன்றிரண்டு மின்னிட்டு நேரங்கழி

ந்தபின்பு வியாதிக்காரன் பெருமூச்சு விடும்பொழுது தாரையை நிறுத்தி ஈரமில்லாத இடத்தில் மாற்றி அனலில் வெதுப்பிய சீலையால் தேகத்தைத் துடைத்து கை, தோள், கால் முதலிய பக்கங்களைச் சூடுண்டாகும்படி தேய்க்கவேண்டும். சுவரணைகேடு மிகுதியாயுண்டாயிருக்கில் பாதங்களிலும் கெண்டைச் சதைகளிலும் கடுகு போல்ட்டீசை வைத்துக்கட்டவேண்டும். சவுக்கியமாகிக் கொஞ்சநேரமான பின்பு மறுபடியும் சந்நிவலி சுவரணைகேடு வருமாகில் முன்செய்ததுபோல் தலையிலும் முதுகிலும் சலத்தை விடவேண்டும். சலம் அவ்வளவையும் ஒருதரமாய் விடாமலும் தலையின்மேல் விசையாய் விழும்படி ஊற்றாமலும் சிறுதாரையாய் தொடர்ந்துவிடவேண்டும். வியாதிக்காரனுக்கு உணர்ச்சியுண்டானபின்பு தாரையிடக்கூடாது.

ஆனால் இப்படி செய்வது மிகுதியாய் வயது சென்றவர்களும் பலட்சயமுள்ளவர்களுக்கும் தக்கதல்ல. பிணியாளி பெண்ணாய்ப்பிறந்து அவளுக்கு மேற்படி சந்நிவலி முக்கியமாய்ச் சிரிப்பும் அழுகையும் கூடியிருந்தால் சலத்தைத் தலையின்மேல் முன்சொன்ன பிரகாரம் உயரத்தில் நின்று விடுகிறதைப் பார்க்கிலும் கைநிறையத் தண்ணீரைக்கோரி முகத்திலும் மார்பிலும் உறைப்பாய் அடிக்கவும். இவ்விதமாய் மூன்று நான்கு நேரஞ்செய்தால் சன்னியை நிறுத்தும் சலத்தை மெல்லெனத் தெளிக்காமல் சற்றே உறைப்பாயடிக்கவும் சன்னி வலியுண்டாயிருக்கிற ஸ்திரீகளுக்கு சூதகம் இருக்கிறபொழுது மேற்சொன்னபடி குளிர்ந்த சலத்தைப் பிரயோகிக்கக்கூடாது.

சிசுக்களுக்குஞ் சிறுபிள்ளைகளுக்கும் வருகிற சன்னிவலிக்கு சலப்பிரயோகத்தாலல்லாமல் வேறுவிதமாய்ச் செய்யலாம். சன்னி ஆரம்பித்தவுடன் ஒரு பரந்த சட்டியாவது தொட்டியாவது நிறைய சகிக்கத்தக்க சூடான சலத்தைவிட்டு அதில் குழந்தையின் தேக முழுதையும் தாழ்த்தித் தலையை நிமிர்த்திவைத்து அதின்மேல் குளிர்ந்தஜலத்தில் நனைத்தசீலையை இட்டுவைக்கவேண்டும். தேகம் சுடுதண்ணீரிலிருக்கும்பொழுது தலைமேல் குளிர்ந்தஜலத்தில் நனைத்த சீலையை வைப்பதினால் சன்னிவலியை நிறுத்தும். ஆனால் உடனே ஒரு பேதிக்கு ஆமணக்கெண்ணெய் கொடுப்பது நலம். குழந்தையை 5 - முதல் 10 - மினிட்டு நேரம்வரை சுடுதண்ணீரில்வைத்திருக்கவேண்டும். அப்போது தலையில் குளிர்ந்த ஜலமுள்ள சீலையைமாத்திரம் சில மணி நேரம்வரை எடுக்காமல் வைத்திருக்கவேண்டும். இந்த கிரியைத் தினந்தோறும் மூன்று நாலுதரம் சன்னி மறுபடியும் வரும்போதெல்லாம் செய்யலாம். பின்பு கால்களில் கடுகுபோல்ட்டீசை சிறியதாய்ச் செய்துவைத்து 5 - மினிட்டுநேரஞ் சென்றபின் எடுத்துவிட

வும். தாமசியாமல் வயிற்றை நன்றாய்ச் சுத்திபண்ணுவதும் பெரியகாரியம். குழந்தைகளைச் சுடுதண்ணீரில் குளிப்பிக்கிறது. அவர்களுக்குவரும் வயிற்றுவலியைச் சாந்திபண்ணுதலுக்கும், உபயோகமாயிருக்கும்.

வாந்திபேதிக்கு குளிர்ந்தசலம் மிகுந்த சிரேட்டமானதாயிருக்கின்றது. நோயாளி வேறே எந்த ஔஷதம் உட்கொண்டுவருகிலும் குளிர்ந்த சலத்தைத் தேவையானமட்டும் எப்பொழுதுங் குடிக்கக் கொடுக்கலாம். நோயாளிக்குத் தாகமிருக்கும் பொழுது தண்ணீர் அதிகமாய்க் கொடுக்கப் படாதென்று கட்டுப்பாடு செய்கிறது மிகுந்த கெட்ட வழக்கமாயிருக்கிறது. சலம் எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கிறதோ அவ்வளவு நலம். வியாதிக்காரன் அவன் மனம்போலே தேவையானமட்டுங் குடிக்கும்படியாய் அவன் பக்கத்தில் ஒரு சட்டி சலம் வைத்திருக்கவேண்டும். இப்படிக் குடிக்கும்படி செய்வது மற்ற மருந்துகளின் தொழில்களுக்கு உதவி செய்வதுமன்றி வாந்தியினாலும் பேதியினாலும் போய்விடுகிற சலத்துக்குப் பதிலாக சரீரத்தில் சேரும்படி செய்கின்றது.

பிரசவமானபின்பு மிகுதியான இரத்தப் பாய்ச்சலுண்டாகில் உடனே அதிக குளிர்ச்சியான சலத்தை வயிறு அடிவயிறு முதலிய தலங்களின்மேல் சற்றே உயர்த்திவிட்டு ஒரு மெல்லிய சீலைத்துண்டை குளிர்ந்தசலத்தில் நன்றாய் நனைத்து உபஸ்தத்தினுள் செலுத்திவைக்கவேண்டும். மேற்படி சீலையை அடிக்கடி மாற்றி இடுகிறதுமன்றி அதைச் சுருட்டுகிறது வாழைப்பூ போன்றமாதிரியிலிருக்கவேண்டும். காடி ஆசாராயிருக்குமாகில் அதில் ஒருபங்கும் சலத்தில் ஒருபங்குஞ் சேர்த்து தனிச் சலத்துக்குப் பதிலாக எடுத்துக்கொள்ளலாம். இவை இரண்டும் கூடியமட்டுங் குளிர்ச்சியாயிருக்க வேண்டும். மேற்சொன்ன இரத்தப் பாய்ச்சல் நின்றபின்பு சீலையைச் சலத்திலாவது காடி கலந்த சலத்திலாவது நனைத்து அடிவயிற்றிமேல் இட்டிருப்பது நல்லதாயிருக்கின்றது. பிரசவசமயங்களில் எப்பொழுதும் இரண்டு மூன்று சட்டிகள்நிறைய குளிர்ந்தசலம் பக்கத்தில் வைத்திருக்கவேண்டும். இப்படி செய்யாவிட்டால் கிணறு அல்லது ஆற்றில் நின்று சலத்தைக்கொண்டுவர அப்போது தாமசப்பட்டு இரத்தம் ஏற்றமாய்போய் வியாதிக்காரி மரணமடைவதற்கு ஏதுவாகும். ஆகிலும் இரத்தம் கிரமமாய் அல்லது சற்று மிகுதியாய்ப் போவதற்கு இவ்விதக் குளிர்ச்சியான பிரயோகங்களைச் செய்யாமலிருக்கும்படி ஞாபகமாயிருக்கவேண்டும்.

பக்கப்பிளவைகளுக்கும் தசையழுகிய புண்களுக்கும் கீழ்ச்சொல்லியிருக்கிறபடி சலத்தை விடுகில் மிகுந்த உபயோகமாயிருக்கும். வியாதிக்கார

னின் மனம்போல குளிர்ந்த சலமாவது வெந்நீராவது இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக்கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்துப் புண்ணின் மேல் தொடர்ந்த தாரையாய் விடவேண்டும். இப்படி தினந்தோறும் இரண்டுதரஞ் செய்யவேண்டும். இதினால் மிகுந்த அசறு எடுக்கப்படுகிறதுமன்றி சிலநாளானவுடன் புண் சவுக்கியப்பட ஆரம்பிக்கும். புண் காலிலாவது கையிலாவதிருக்குமாகில் நோயாளி தான் தானே சலத்தைவிட்டுக் கொள்ளலாம். முதுகிலாவது கழுத்திலாவதுண்டாயிருக்கில் வேறே ஒருமனிதனைக்கொண்டு செய்விக்கவேண்டும். சலத்தைப் புண்ணின்மேல் ஒன்றிரண்டு அடிஉயரத்தில் நின்று விடவேண்டும். அசறு முற்றும் நீங்கி புண்சிவப்பாயும் சவுக்கியமாகிற லட்சணமுடையதாயும் காணும்பொழுது சலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை யிடவேண்டும். சலம்விடுகிறது குறைந்தாலும் ஒருமணி நேரம்வரையும் வேண்டும் இடை நேரங்களில் கள்சேர்ந்த போல்ட்டீசை வைத்துக்கட்டவும்.

மூத்திரம் போகாமல் தடைபட்டிருக்கிறதற்கு சீலையைச்சுடு தண்ணீரில் தோய்த்து வியாதிக்காரன் சகிக்கத் தக்கதான சூடுடனே வயிற்றின் மேலும் அடிவயிற்றின் மேலும் இட்டு ஆறிப்போகிற பொழுதெல்லாம் வேறே ஒரு சீலையைச் சுடு தண்ணீரில் தோய்த்து இப்படி அடிக்கடி மாறிமாறி இடவேண்டும். இனியொரு பிரயோசம் எப்படியென்றால் ஒருதொட்டியாவது பாந்திருக்கப்பட்டபெருஞ் சட்டியாவது கிடைக்குமாகில் அதில் சுடுதண்ணீரைவிட்டு நோயாளியைப் பார்த்து அல்லது இருபது மினிட்டுநேரம் உட்கார வைத்திருக்கவேண்டும். இப்படிசெய்தால் மூத்திரம் உடனே போகும்.

தொலி சூடாய் வரண்டும் வாயுலர்ந்தும் தாகம் அதிகமாயும் இவ்விதமான இலட்சணங்களுடன் இருக்கும் சுரங்களுக்கெல்லாம் நோயாளி அரிசிமாவை குளிர்ந்தசலத்தில் கலக்கியாவது எலுமிச்சஞ் சாறுவது செழிப்பாய்க் குடிக்கவேண்டும். அப்பொழுது நன்றாய்குளிர்ந்திருக்குஞ் சலத்தில் தையலை அடிக்கடி நனைத்து வைத்திருக்கவேண்டும்.

வைசூரி சிச்சிலுப்பை என்னப்பட்ட சிறுவைசூரி முதலிய வெடிக்குஞ் சுரங்களுக்குத் தண்ணீரைத் தேவையான மட்டும் குடிக்கக் கொடுக்கிறதுமன்றி வெந்நீரிலாவது ஒரு பங்கு காடியும் மூன்று பங்கு சலமும் கலந்த நீரிலாவது மெல்லியசீலை அல்லது கடற்காளானை நனைத்து தேகம் முழுதும் பதமாய்க் கழுவுகிறது மிகுந்த சாந்தமும் சவுக்கியமுமுள்ளதாயிருக்கின்றது. வியாதிக்காரனுக்கு வெந்நீரை விட குளிர்ந்த சலத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வித

மாய்த் தினந்தோறும் ஒன்று அல்லது இரண்டுதரம் தாராளமாய்ச் செய்யலாம்.

தொண்டைப்புண்களுக்கு சுடுதண்ணீரின் ஆவியை உள்ளுக்குச் சுவாசம் வாங்கினால் அதிக குணம் உண்டாகும். ஆனால் சளித்தன்மையுள்ள வெண்டைக்காய்களில் 12-அல்லது அதில் அதிகம் எடுத்துத் துண்டுகள் செய்து சலத்தில் வேகவைத்து அந்தச் சலத்தின் ஆவியைச் சுவாசம் வாங்கினால் பலன் அதிகரிக்கும். மேற்படி சலத்தை வாய்சுருக்கின பாத்திரத்தில்விட்டு அதினாவிதொண்டையினுள் நன்றாய்ச் செல்லும்படி வாயை பாத்திரத்தின் வாயின் மேல் அடுத்துவைத்துச் செய்யவேண்டும்.

சுடுதண்ணீர் ஒற்றிடம் புதிய விப்புருதிகள் பருக்கள், சுளுக்கு, குன்மவாய்வு, குடல்வலி, சுவாசகாசம், சுவாசமுட்டுகளுடனிருக்கும் கடினமான இருமல் இவ்விதமான அனேக வியாதிகளுக்கு மிகுதியாய் உபயோகித்திருக்கின்றது. அதைச் செய்யும் சரியானவிதம் எப்படியென்றால் ஒற்றிடமிடவேண்டும் ஸ்தலத்தை மூடத்தக்கஅளவுக்கு சற்று அதிகமும் கனமுமாக விஸ்தாரமாய்ச் சீலைகளை மடித்து நோயாளி சகிக்கத்தக்க சூடுள்ள சலத்தில் நனைத்து சலம வடியாமல் பிழிந்துவிட்டு இருக்கும்படி இடவேண்டிய பக்கத்தில் வைத்துக்கொண்டு இருக்கவேண்டும் இரண்டுமூன்று மினிட் நேரஞ்சென்று சூடு ஆறுமுன் வேறே ஒரு சீலையை முன்போல் பக்குவஞ்செய்து வைத்துக்கொண்டு ஆறின சீலையை எடுத்துவிட்டு இடைவிடாமல் உடனே அதை இடவேண்டும். இவ்விதமாய் கால்மணி அல்லது அரைமணி நேரம்வரை சூடாக மாறிமாறிச் செய்ய வேண்டும். கடினமான தலைநோய்களுக்கும் இந்தச் சுடு தண்ணீர் ஒற்றிடம் மிகுந்த குணத்தைக்கொடுக்கும். பிரசவமானபின் உதிரநீரை நன்றாய்ப் போக்குவதற்கும் அதைப் பலனுடனே பிரயோகிக்கலாம்.

நெடுநாளாயிருக்கும் வாதம் ஒன்றானாலும் வாசியாகாததோல் வியாதிகள் கால் கை மூட்டுகளின்வலி ஆரம்பிக்கிற நீரிழிவும் மகோதரமும் மற்றும் தொனிவாண்டு சாசரப்பா யிருக்கும் வியாதிகளுக்கெல்லாம் சுடுதண்ணீர் ஆவியைப் பிடிக்கில் மிகுந்த பலனுண்டாகும். மேற்படி வியாதிகளோடுகூட சுரமுண்டாயிருந்தால் இந்தப் பிரயோகஞ் செய்கிறது புத்தியல்ல.

சாதாரணமாய்க் கோழிகளையும் கோழிக்குஞ்சுகளையும் அடைக்கப்பட்ட கோபுரம்போன்றமாதிரியில் ஒரு பருத்த கூட்டைத் தயார்செய்து அதின் உச்சத்தில் ஒரு மனிதனுடைய தலை தாராளமாய் செல்லும்படியாய் வட்டத்தில் ஒரு துவாரத்தை உண்டுபண்ணி இந்தக் கூட்டினுள் ஒரு நாற்காலியை இட்டு அதின் மேல் வியாதிக்காரன் இருந்துக்கொண்டு தலையையும் முகத்தை

யும் கூட்டின்மேல் துவாரத்தில் வெளியே வைத்துக்கொள்ளவேண்டும். பின்பு அந்தக்கூட்டை கனத்த கம்பளிகளால் பொதிந்து அவைகளின்மேல் ஓரங்களை வியாதிக்காரனின் கழுத்தைச் சுற்றி செருகி இவ்விதமாய் ஆவி வெளியே போகாமல் எத்தனஞ் செய்துக்கொண்டு அப்பால் ஒருசட்டி கொதிக்கிற சலத்தைக் கூட்டினுள் வியாதிக்காரனின் கால்பக்கத்தில் வைக்கவேண்டும்.

இப்படிச் செய்வதில் இருக்கவேண்டும்நோக்கங்கள் இரண்டாகும். எவையெனில் முதலாவது வியாதிக்காரன் இருக்கப்பட்ட கூட்டினுள் நின்று ஆவி சற்றும் வெளியில் போகாமல் இருக்கும்படியாகவும் இரண்டாவது நோயாளி தன்னுடைய தலையைக் கூட்டின் துவாரம்விட்டு நன்றாய் வெளிப்படுத்தி ஆவியை அதிகமாய் சுவாசம் வாங்காமல் இருக்கும்படிக்குக் கழுத்தைச் சுற்றி கம்பளிகளை நன்றாய் அடைத்துச் சொருகிவைப்பது மானதாய் இருக்கின்றது. மேற்சொன்ன பிரகாரம் நோயாளி ஆவியைக் கொண்டபின் உடனே 'வேர்வை யுண்டாக ஆரம்பிக்கும். அப்புறம் ஏறக்குறையக் கால் மணி நேரஞ் சென்றபின் வியாதிக்காரன் கூட்டைவிட்டு வெளியில் வந்து உடனே உலர்ந்த சீலையால் வெயர்வை முழுதையும் நன்றாய்த் துடைத்துத் தேகத்தில் குளிர்ந்த காற்றுக் கொள்ளாமல் இருக்கவேண்டும்.

நீர்க்கூட்டை - குள்வட்டை, அட்டைகளைத் தகுந்த வியாதிகளுக்குத் தக்க சமயம்பார்த்து முறையாய் விடுகில் அநேக வியாதிகளுக்கு உபயோகமா யிருக்கும் ஆனால் அவைகளை விடுகிறதில் சாக்கிரதை அவசியமானதாய் இருக்கிறது.

அவைகளைக் கடிக்கப் பண்ணுவதற்கு இரண்டுமாதிரி உண்டு முதலாவது ஒவ்வொரு அட்டையாகக் கையில் பிடித்து வேண்டிய தொகையளவும் கடிக்க விடவேண்டும். இது மிகுந்த சலிப்பும் தாமதமு முள்ளவிதம் மற்ற நல்லமாதிரி எப்படியென்றால் தேவையான அட்டைகளை ஒரு கிளாசு பாத்திரத்திலாவது கோப்பையிலாவது இட்டு கடிக்கவேண்டிய ஸ்தலத்தில் கவிழ்த்துப் பிடித்து இருக்கவேண்டும். சற்று நேரஞ் சென்றபின் அதை நீக்கினால் அட்டைகள் கடித்துக்கொண்டு இருக்கிறதைக் காணலாம். கிளாசுப் பாத்திரமாவது கோப்பையாவது ஆசர் இல்லாவிட்டால் முதற் சொன்னபடி ஒவ்வொரு அட்டையாகக் கையிற்பிடித்து கடிக்கவேண்டிய ஸ்தலம் தப்பாமல் விடவேண்டும்.

குழந்தைகளின் வயசுக்குத் தக்க அட்டையில் எண்ணம் நிதானித்துச் சுடு தண்ணீரால் நன்றாய்க் கழுவித் துடைத்துப் பின்பு விடுகில் உடனே கடிக்கும். இப்படிச் செய்தும் உடனே கடியாவிட்டால் 15 - அல்லது 20 - மினிட்டு நேரம் உலர்ந்த அழுக்கில்லாத சீலையை மேலுள்ள இரத்தத்தைப் போக்கின பின்பு விடவும். இதினும் கடியாவிட்டால் தொலி மேற் பாலைத் தடவியும், அதின்பின்னும் கடியா விட்டால் தொலிமேற். கொஞ்சங்கீறி அதில் நின்றுவரும் இரத்தத்தைக் கடிக்கவேண்டிய ஸ்தல முழுதும் பூசியும் விட்டாற்கடிக்கும். எந்தவிதங்களிற் கடியாமலிருக்கினும் கடைசிப் பிரயோகத்தால் நிச்சயமாகக் கடிக்கும்.

அட்டைகள் இரத்தங் குடித்து 15-அல்லது 20-மினிட்டுக் கழிந்தபின் விழாவிட்டானும் வேண்டியபோது , அவைகளை நீக்கிவிடவேண்டுமானானும் கொஞ்சம் உப்பைத் தூவவாவது செய்தால்.உடனே விழும்.

அட்டை கடித்த முறிவில்நின்று இரத்தம் பேர்னதுபோதாதிருந்தால் சுடுதண்ணீரால் ஒற்றிடம் கொடுக்கவேண்டும்.

இரத்தம் மிகுதியாய்ப் போகிறதை நிறுத்த வேண்டுமானால் முறிவின்மேல் விரலாலழுத்தி படிகாரத் தூளையாவது வைக்கவேண்டும்.

அட்டைகள் மூலத்துவாரம் மூக்கின் துவாரம் மற்றேழுத்துவாரத்தி னுள்ளாவது ஏறிவிட்டால் உப்புத் தண்ணீராவது காடியாவது உள்ளுக்குச் செலுத்த உடனே விழும்.

முக்கியமாய்க் கழுத்தில் பொருமிக்கானும் நரம்பின் மேல் அட்டைகள் விடக்கூடாது.

வலியுள்ள கட்டிகளின் மேல் விரலை வைக்கும்பொழுது நாடியடிக்குமானால் அதின் மேல் அட்டைகளை விடாமல் அவற்றின் சுற்றில் சற்றுதூரம் தள்ளிவிடவேண்டும்.

கண்ணிமைகளிலாவது ஸ்திரீகளின் ஸ்தனத்திலாவது ஆண்குறித் தொலியின் மேலாவது பீசத்திற்கு மேலாவது அட்டைகளை விடுகிற சிலசமயத்தில் எரிவந்த முண்டாகும். ஆதலால் அந்த ஸ்தலங்களில் விடக்கூடாது.

குழந்தைகளுக்கு அட்டைகளை விட்டால் பிராயமானவர்களைப் பார்க்கிலும் மிகுதியாய் இரத்தம்போம். ஆனதால் மிகுந்த பத்தியம் வேண்டியிருக்கிறது எப்பொழுதும் அட்டைகளை தேகத்தில் எவ்விடங்களிற் கூடியமட்டும் மாமிசம் குறைந்து எலும்பு மேற்பட்டிருக்கிறதோ அந்தஸ்தலங்களைப் பார்த்து விடவேண்டும். இப்படிச் செய்கிறது ஒருவேளை இரத்தம் விடாமற் பாயுமாகில் அதை நிறுத்தும் பொருட்டாய் அழுத்திப் பிடிக்கிறதற்கு இசைவா யிருக்கும் எப்பொழுதும் குழைந்தைகளுக்குக் காலையில் விடவேண்டும் சூரியன் அஸ்தமித்தபின்பு ஆனால் இராத்திரி எல்லோரும் தூங்கும் சமயத்தில் கடிவாயில் நின்று அதிக இரத்தம் பாய்ந்து குழந்தைகள் மறிக்கிறதற்கு ஏதுவாயிருக்கும்.

அட்டையை விடவேண்டிய பாகத்தில் சவுக்காரத்தைத் தேளிக்க அவசியம் ஆனதால்

கீழ் எழுதியபடி செய்யவேண்டும்.

6-மீத்தின் கீழ்ப்பட்ட குழந்தைக்கு. 1-அட்டை
1-வயசுக்கீழ் ,, 2 ,,
2 ,, ,, 3 ,,
3 ,, ,, 4 ,,

தலைநோவுடன் வரும் சுரங்களுக்கு அட்டைகள் மிகுந்த பிரயோசனமாயிருக்கின்றன வியாதியின் துவக்கத்தில் பிணியாளி வாலிபனாயும் பெலவானாயும் இருப்பானாகில் நெற்றியொன்றில் 4-அல்லது 6-அட்டை விடவேண்டும் பிடரியின் மேற்பக்கத்திலும் கடிக்காவிட்டால் அதிககுணம் கொடுக்கும். சுரத்துடனே மார்பிலும் வயற்றிலும் கடினமான வலிகளுக்கு 8-அல்லது 10-அட்டைகளை உடனே வலியின்மேல் விடவேண்டும்.

மூலமுளையின் இரத்தப்போக்கு நின்ற காரணத்தால் வரும் தலைபிடிக்கு மூலத்துவாரத்தினருகே அட்டையைக் கடிக்கப்பண்ணினால் குணப்படும் அட்டைகள் மூலத் துவாரத்தினுள் ஏறிப் போய்விடாமல் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். சூதகம் சடுதியாய் நின்ற காரணத்தால் உண்டாகும் தலைநோவுக்கு அட்டைகளை உள் துடையில் விடவேண்டும்.

விப்புருதிகள் பருக்கள் அரையாப்புகள் நசிவுகள் சுளுக்குகள் அடிகள்.

மற்றும் தோலின்மேல் வரும் இரத்தச்சுரப்புகள் இவைகளின் ஆரம்பத்தில் வலியும் சூடும் அதிகமாய் ஆகும்பொழுது 6-அல்லது 8-அட்டைகள் விட்டுச் சுடுதண்ணீரால் ஒற்றிடம் கொடுத்தால் வலிதீர்ந்து வியாதியை போக்கும். அரையாப்புகளுக்கு முக்கியமாய் ஆரம்பத்தில் அதிக வேதனை இருக்கிறது பொழுது பிரயோசனமாம்.

கக்கிருமல் தொடங்கின பொழுது பிடரியின் மேற்பக்கத்தில் அட்டைவிட்டால் மிகுந்த பலவானாயிருக்கும் செய்யவேண்டிய முறை யெப்படியெனில் குழந்தைகளின் வயசு ஒன்றுக்கு ஒவ்வொரு அட்டை வீதம் முறையாய்க்கூட்டி 6-வயசுவரை விடலாம் அப்புறம் எத்தனை வயதாயிருக்கினும் 6-அட்டையே போதுமானதாயிருக்கிறது.

ஆனதால் இப்படிவிட்டு அட்டைகள் விழுந்தபின் ஒரு கடுகுப் போல்ட்டீஸ் ஆவது ஒரு சின்னபிலிஸ்டர் ஆவது செய்து கடிவாயை விட்டுவிட்டு இரண்டு தோள்பட்டைக்கும் நடுவில் வைத்துக் கட்டவேண்டும். அட்டைகளையும் கடுகுப் போல்ட்டீசையும் மறுபடியும் அவசியம்போய் இட்டுக்கொள்ளவேண்டும்.

அநேகவித கண்ணோய்களுக்கு அதிகசூடும் வலியும் வீக்கமும் சிவப்பும் இருக்கிறபொழுது 4-அல்லது 6-அட்டைகளைக் கடைக்கண்களின் அருகே இருக்கும் பொட்டுகளில் விட்டால் பலன்களைக் கொடுக்கும்.

நீர்கடம்பு-ஓர்மரம்
நீர்க்கமல்லி-இல்லி

நீர்குஷ்டம்-ஓர்நோய்
நீர்க்குண்டி-வெண்ணொச்சி
நீர்க்குளிறி-ஓர் நீர்ப்பூண்டு, கல்லாச்செடி.
நீர்க்கும்பி-நீர்முள்ளி
நீர்க்குறிஞ்சா-ஓர்பூண்டு
நீர்க்கோவை-ஓர்நோய்
நீர்ச்சங்கு-ஓர்பூண்டு, சங்கு
நீர்சின்னி-ஓர்பூண்டு
நீர்ச்சுண்டி-கொட்டிநெட்டி
நீர்ச்செம்பை-ஓர்செடி

நீர்நொச்சி-ஓர்செடி, இது தண்ணீர் சமீபத்தில் வளர்கின்றது. இதன் துளிரும் இலையும் கசப்புள்ளதாயும் சுகந்தமுடைய தாயும் இருக்கின்றது. இதைச் சுதேச வைத்தியர் பலமாய் வற்றப்பண்ணுகிற அல்லது வடிவிக்கிற மருந்தாக யோசிக்கிறார்கள். வாதம் சுளுக்கு வாதப்பிடிப்பு முடக்கு விரைவீக்கம் இவைகளுக்குச் சுடுகையாய் ஒற்றடம் செய்து காட்டுகைபற்று இவ்விதமாக உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த இலைகளையிடித்து காயத்திற்கு கட்டுகிற நல்லதாயும் மாற்றுமருந்தாகவும் யோசிக்கப் படுகின்றது. இதன் காய் அல்லது பழம் சிறியதாகவும் கசப்பாகவும் அழுத்தமாகவுமிருக்கும். அது பெலமான மண்டை வியாதிக்கு மருந்தாகவும் மாதவிடாயை அதிகப்படுத்துகிற குணமுடைய மருந்தாகவும் வைத்தியர் யோசிக்கிறார்கள். திமிர்வாதம் அவயவ பெலயீன முதலாகிய வைகளுக்குச் சூரணமாயும் கஷாயமாயும் லேகியமாயும் கொடுக்கப் படுகிறது. வட இந்துஸ்தானியில் இதன் இலைகள் தலைநோய் சிரசில் நீரேற்றம் இவைகளை நீக்குதற்குத் தலைகாணிகளில் அடைத்து வைக்கப்படுகிறதென்று சர் வில்லியம் ஜோன்சு துரையவர்களால் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நீர்ப்பனை-புல்லாமணக்கு
நீர்ப்பாடு-நீரிழிவு
நீர்ப்பிரியம்-நீர்க்கடுப்பு
நீர்ப்பூலா-ஓர்செடி
நீர்முள்ளி-ஓர்பூண்டு
நீர் மேல்நெருப்பு-கல்லுருவி
நீர்வல்லி } வெற்றிலை, தண்ணீர்
நீர்வள்ளி } விட்டான்.
நீர்வழுக்கை-ஓர் நீர்ப்பூண்டு
நீர்விட்டான் கிழங்கு-தண்ணீர்விட்டான் கிழங்கு
நீர்கமலம்-கருங்குவளை
நீலகமலம்-கருங்குவளை
நீலக்காக்கட்டான்-ஓர்பூண்டு
நீலபாஷாணம்-ஓர்பாஷாணம்
நீலபுஷ்பம் } காஞ்சிரை விஷ்ணு
நீலபுட்பம் } காந்தை எட்டிமரம்
நீலமருந்து-அவுரி
நீலமார்க்கம்-கையாந்தகரை
நீலம்-கருங்குவளை, பனை
நீலி-அவுரி, மேகவண்ணப் பூவுள்ள மருதோன்றி, கருநொச்சில், நீலி என்னும் அவுரி, பக்கசூலை வியாதிக்கு உபயோகப்படுகிறது.
நீலோற்பலம்-கருங்குவளை
நீவாரம்-குழல்நெல்சிந்தினை
நீள்சடையோன்-கொன்றை
நீர்முடித்து-கிரந்தி, குஷ்டம், சூலை, நமைச்சல், வாதம் 18-ம் போம். அனல், பித்தமும் உண்டாம்.
நீரருந்துங்கிரமம் - அண்ணாந் தருந்த செவி,- மந்தமும், குனிந்

தருந்தகாசமும் நிதானமாயிருந்து பாத்திரத்தை வாயில் கடித்து அருந்த சுகமும் உண்டாம்.

நீராகாரநீர் - தாகமும், தோஷமும் வாட்சியும் போம். தாதுபலம் உண்டாம்.

நீராரைக்கீரை- இரத்தப்போக்கு, தீராபயித்தியம்,நீரிழிவும்போம் உருசியாக விருக்கும்.

நீரொட்டிவிரை-ஊன் வடியுமிரணம், கரப்பான், கிரந்தி, சொறி, புத்தும் போம். விரோசனம் உண்டாம்.

நீர்க்காக்கைக்கு-சோகை, பாண்டு, பெருவயிறும்போம். கரப்பான், சொறி, புலால் நாற்றமும் உண்டாம்.

நீர்த்தாராக்கறி - அக்கினி மந்தம், கிரந்தி, சூலை, பித்தவாய்வும் உண்டாம்.

நீர்த்தாளி-குட்டம், சொறி, வறட்சியும்போம்.

நீர்த்திருப்புள்-ஜன்னிபோம்

நீர்ப்பூலாதனம் - சொறி, சிரங்கு, நீரிழிவு, பொருமல், மாந்தமும் போம்.

நீர்முள்ளி - குளுப்பை, நீரேற்றம், நீர்க்கட்டு, பாண்டு, வீக்கமெல்லாம் ரோகப்போம்.

நீர்முள்ளிவித்து-அதிசாரம், இளைப்பு, நீர்வீக்கம், மேகரோகமும் போம். விந்து தாதுவும் உண்டாம்.

நீலகண்டம் - திருவிஷம், ஊரல், கருங்கிரந்தி, ஜன்னி, சூலை, விஷகிரந்தி, விஷங்களும் போம்.

நீலம்-குதிவலி, பாண்டு, பித்தம், மதிமயக்கமும்போம்.

நீலரத்தினம் - காமாலை, குதிவலி, பித்தம், மயக்கம், மருளல், மேகமும்போம். புத்தி, போக சுகமும் உண்டாம்.

நீலாஞ்சுண்டல்-இரத்த பித்ததோஷம், இரசவேகம், கபம், சகல சுரம், ஜன்னிதாகம், நீர்வடிகிற கண்ணோய், நேத்திரநோய், வெட்டுப் புண்ணும் போம். அழகு, காந்தி, குளிர்ச்சி உண்டாம்.

## நு

நுக்கு-எட்டிமரம்

நுக்குடம்-காஞ்சிரை

நுணவு-தணக்கு, நுணா, அணி நுணா.

நுணவை, தணக்கு, அவை, மன்னிலா, ஆத்தா.

நுபம்-எருக்கு.

நுரைப்பீர்க்கு-ஓர்பூண்டு

நுவணை-மா

நுணாயிலை-மந்தம், மேகமும்போம். காந்தி உண்டாம்.

நுணாக்காய்-மேகநோய்கள்போம்

நுணாமரப்பட்டை - கரப்பான், கிரந்தி, சிலேட்டுமசுரம், புண்ணும் போம்.

நுணாவேர்-அக்கினிமந்தம், உஷ்ணமும்போம். கெர்ப்பத்தி லழிந்த பிள்ளை வெளியாகும்.

## நூ

நூக்கம்-ஓர்மரம்

நூடி-சிற்றேலம்

## நெ

நெட்டைப்பேய்மிரட்டி - கணமாந்தம், பசாசு, வயிறுகழிச்சலும் போம்.

நெய்மீன் - இரைச்சல், பித்தம், பொருமல், மந்தம், வாதமும் உண்டாம்.

நெய்ச்சட்டிக்கீரை - அழல், சீதசுரம்,சூதகெந்தங்களாலான வாய்ப்புண், தாகம், பித்தம், மேகம், வாந்தி, வெட்டையும் போம். அழகு, கண்ணொளி, சுக்கிலம்; தீபனமும் உண்டாகும். நிம்ப எண்ணெயை நெய்யாகச்செய்யும்.

நெய்தநிலம் - அண்டவாதம், உஷ்ணம்,துளிப்புவாய்வும் உண்டாம்

நெய்தற்கிழங்கு - அக்கி, காந்தல் தோஷம், பித்தம், பயித்தியம், மேகம், வயிற்றுக்கடுப்பு, இரத்தமும்போம். கண் குளிர்ச்சி, விந்தும் உண்டாம்.

நெய்தோலின்மீன் - தீபனம்பேழும். மந்தம், வயிறுபொருமல், வாதபித்தம், வாயில் புண்ணுண்டாம்.

நெய்யன்னம் - கிறுகிறுப்பு, பித்தமும்போம். கண் குளிர்ச்சி, சீரணம், பலமும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

நெருஞ்சில் வித்து - கல்லடைப்பு, துன்மாங்கிஷ மருகல் நீர்கட்டும் போம்.

நெல்லிக்காய்கெந்தி-ஒருவித மகோதரம், கண்ணோய், கபம், குன்மவாயு, சுரம், பதினெண்குஷ்டம், பேதி, மந்தம், மேகம், வல்லைக்கட்டி, விஷக்கடியும்போம்.

நெழில்-கொடிக்கொத்தான், படர்கொடி.

நெல்லிமரவேர் - அரோசி, சுரம், திரிதோஷ ஜன்னி, மலக்கட்டும் போம்.

நெல்லிமுள்ளி - அனல் ஆண்குறியிற் சிறுகொப்பிளம் இரத்தபித்தம்,என்புருக்கி, கண்ணோய், சீதளம், தாகம், தாதுநஷ்டம், நீர் துவாரத்தில் முள்ளருகல், பித்தம், பெரும்பாடு, மேகநீரிழிவு, வாந்தியும்போம். தலைமுழுகக் ,கண்குளிர்ச்சிஉண்டாம்.

நெல்லிமுள்ளிவடகம் - அரோசகம், சத்தி, சீதரத்தம், பித்தம்,சயம், மூலக்கடுப்பு, மேகம், மெய்யெரிவும்போம்.

நெற்பொரி - அரோசி, தாகம், பலபேதி, பித்தவாதம், மதமூர்ச்சை, மந்தம், வாந்தியும்போம்.

நெக்குரோகம்-ஆல்மரம்

நெச்சி-கடுக்காய்

நெடியோன்-துளசி, மூக்கிரட்டை

நெடும்பர்-ஆடாதோடை

நெடுவிரல்-நாய்ப்பாகல்

நெடுவேர்-சாயவேர்

நெட்டம்-மிளகு

நெட்டி-சடை, அவை, கொடிநெட்டி, நீர்க்கொடுப்பூண்டு.

நெட்டிக்கோரை-ஓர்புல்

பூநெட்டி-நீர்ப்பூண்டு

வயல்நெட்டி-ஓர்பூண்டு

நெட்டில்-மூங்கில்

நெட்டிலிங்கு-அசோகு

நெத்தகர்-ஓர்பூண்டு

நெய்-இரத்தம்

நெய்க்கொட்டை-பூவந்திப்பழம்

நெய்ச்சட்டி - செங்கழுநீர் பவளக்குண்டுமணி.

நெய்ச்சிட்டிக்கிழங்கு-ஓர்கிழங்கு

நெய்தல்-ஆம்பல்

நெய்ப்பீர்க்கு-நுரைப்பீர்க்கு

நெய்ச்சிட்டி - செங்கழுநீர், பவளக்குன்றுமணி, சிற்றிலை.

நெரிநெட்டி-சம்பம்புல்

நெருஞ்சில் - நெருஞ்சில் அசுவரட்டிரம், செப்பிநெருஞ்சி, பெருநெருஞ்சி, யானைநெருஞ்சி.

நொர்க்குண்டி-நொச்சி

நெல்-நெல்வாகை

நெல்லி-நெல்லிமரம், முள்ளி, அவை காட்டுநெல்லி, கிழறி நெல்லி, கீழாநெல்லி, கீழ்க்காய் நெல்லி, நிலநெல்லி.

நெல்லிக்காய்கந்தகம்-ஓர்கந்தகம்

நெல்லிமுள்ளி-அமலர்

நெற்று-உலர்ந்தபழம்

### நே

நேத்திரகாசம்-ஓர்நோய்

நேத்திரதோஷம்-ஓர்நோய்

நேத்திரவாயு-ஓர்நோய்

நேபாளம்-நேர்வாளம்

நேமி-மூங்கில்

நேமிசந்தனு-வேங்கை

நேமியம்-நிலப்பனை

நேரோடம்-நாவல்

நேரேடு-நாவல்

நேர்வாளம்-ஓர்மரம்

நேர்வாளக்கொட்டை - பல நோய், பழையமலம், வாதமும்போம்.

நேர்வாளமுத்து - ஓர் விதை, அவை, இதனால் பேதிக்கிசைந்த மாத்திரைகளை செய்யும் விபரம் கீழ்ச்சொல்லியது நேர்வாள வித்தை பாலில் மூன்று தரம் வேகவைத்து மேல் தொலியை முற்றும் நன்றாயெடுத்துப் பருப்பினிடையி லிருக்கும் இதழை * நீக்கி இதில் 60-கிறெயின் எடுத்து 120 - கிறெயின் காசுகட்டித் தூளுடன் தேன் விட்டு நன்றாயரைத்து 2 - கிறெயின் எடையில் மாத்திரைகளாகப் பங்கிட்டு உருட்டி வைத்துக்கொள்ளவேண்டும். பிராயமான மனிதனுக்கு ஒருவேளைக்கு ஒருமாத்திரை வீதம் கொடுக்கலாம். இது அசதி சன்னி. சன்னியிழுப்பு கடினமானசுரம் இவை முதலிய வியாதிகளுக்கெல்லாம் குடல்களை நன்றாய் சுத்தி பண்ணுவதற்கு இசைந்த பேதி மருந்தாயிருக்கிறது. ஆனால் அதிக வயிற்றுவலியாவது வாந்தியாவது கணபேதியாவது உண்டாயிருக்கில் எலுமிச்சஞ் சாற்றைக்கொடுத்து அதன்பின்பும் நிற்காவிட்டால் அரைமணிக்குப் பின்னும் அப்படியே கொடுக்கவேண்டும்.

நேளி-தாமரை

### நை

நைசிகம்-ஓர்மருந்து

நைச்சி-ஓர்பாம்பு

நைதிகை } முல்லைக்கொடி
நைந்திகை }

நைபாலி-அடுக்குமல்லிகை

### நொ

நொச்சி-ஓர்மரம், அவை, கருநொச்சி, நீர்நொச்சி, வெண்ணொச்சி, நொச்சி.

நோவு-மஞ்சள்

### ப

பகல்கறிவகை-கந்தவருக்கம், மந்தவருக்கம், வாதவருக்கம், தண்டுவருக்கங்கள், தயிர் மோர் பகலிலருந்த தோஷமில்லை.

---

* இதனை எடுக்காமல் வைத்திருக்கில் அகோரமான வயிற்று வலியையும் அர்தியையும் உண்டாக்கும்.

பகல் நித்திரையின் குணம் - பகல் நித்திரையானது, தண்டம், மோட்டாட்சியம், ஊருத்தம்பம், சருவாங்கம், உக்கிராக் கிரகம், சுப்தி, அனுர்பதம், இருக்குத்தம்பம், சோணிதம், ஆட்டியம், புருவாடோபகம், கிருத்திரசி, ஊர்த்துவசம், சம்பூகம், அவபேதம், அவதந்திரம், அவதானம், விவிர்தாசியம் என்னும் பதினெட்டுவிதவாதரோகங்களை விளைவிப்பதற்கு ஒருவித்தாகும் ஆகையால் பகல் நித்திரை செய்யக்கூடாது கருத்து.

பசுவின்பால் - உட்காய்ச்சல், அனலும்போம். ஐயம் உண்டாம்.

பசலைக்கீரை - அரோசி, சர்த்தி, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மேகமும்போம்.

பசி-அழகு, ஆண்மை, ஆவி, இன்பம், கல்வி, குலம், கசி, மானம், மோகம், வார்த்தையும் போம், கிழத்தனம் உண்டாம்.

பசுமுன்னையிலை-மந்தாக்கினி, மயக்கம், வாயு, வாதமும்போம். ஐயம், அருசி, கரப்பான், சோகையும் உண்டாம்.

பசுமுன்னைவேர் - வப்பம், வாதமும்போம். போசனப் பிரியமுண்டாம்.

பசுவின்சாணம்- அடிபடும் வீக்கம், உதிரம், கபம், கிருமி, சுரம், தாகமும்போம்.

பசுவின் சாணிப்பால் - தேகசுத்தி உண்டாம். அது தேங்காய்ப்பாலுக்கொக்கும்.

பசுவின்தயிர்-அசீரணம், இருமல் இளைப்பு, தாகம், மெய்யெரிவும் போம். பசி உண்டாம்.

பசுவின்நெய்-அஸ்திகட்டம், அழல், உழலைகட்டம், காசம், குடல்பிரட்டல், குன்மம், சர்த்தி, தாகம், பித்தம், பிரமேகம், மூலம், வயிற்றெரிவு, வாயு, விக்கலும் போம்.

பசுவின் நெய்முழுக்கு - உடலெரிச்சல், உன்மத்தம், இரத்தபித்தம், கபம், தாகம், யேசும் விகாரம், மூர்ச்சையும் போம். மைந்தர் முதல் முப்பருவ மாந்தர்க்கும் ஆகும்.

பசுவின்பால்-இளைத்தவர், கிழவர், குலையர், தற்பலத்தோர், பழுஞ்சுரத்தோர், பாலர், புண்ணுளர் மேகத்தோர் சாப்பிட சுகமுண்டாம்.

பசுவின் மூத்திரம் - உதிரம், கண்ணோய், காமாலை, சகல விஷம், சோகை, தந்தநோய், பலவீக்கம், விஷப்பாண்டும் போம்.

பசுவின் மோர் - அனல், குன்மம், தாகம், திரிதோஷம், பாண்டு, பித்தம், மகோதரம், மந்தம், மருந்தினல் வந்த அதிசாரம் வீக்கமும்போம்.

பசுவின்வெண்ணெய்-கண்ணெரிவு, கண்ணோய், கண்பீளை, மேகங்களெல்லாம் போம். தாது பசியும் உண்டாம்.

பச்சடியின் பேத குணம் - இனிப்பான பச்சடிக்கு, அருசிபோம். உப்பு புளைத்தான பச்சடிக்கு வாதம் உண்டாம். புளிப்பான பச்சடிக்கு வாதம்போம். துவர்ப்பான பச்சடிக்கு வாதம் உண்டாம். புளிப்பான பச்சடிக்கு பித்தம்போம்.

பச்சரிசி - எரிபித்தம்போம். தேகபலம், மந்தம், வாய்வும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

பச்சரிசி அன்னம்-பித்தம் மூத்திரக் கிரிச்சரமும்போம்.

பச்சரிசிக்கஞ்சி - வாதகபம் போம்.

பச்சரிசிப்பொங்கல் - தாது விர்த்தி உண்டாம்.

பச்சைக்கடுக்காய் - அரோசி, மலமும்போம். தீபனம் உண்டாம்.

பச்சைக்கர்ப்பூரம்-அஷ்ட குன்மம், கபம், சூலை, மேகம், வாதமும் போம்.

பச்சைக் குங்குமப்பூ-கண்தோஷம் சகல தோஷம், சுரதோஷம், செவிதோஷம், பித்த தோஷம். பீநசங்கள், மது தோஷமும் போகும்.

பச்சைத் திப்பிலி வேர் - சோபம் தாகம், பித்தம், மேகங்களும் போம். போகம் உண்டாம்.

பச்சைநாவி - அஸ்திவெட்பு, குஷ்டம், குன்மம், ஜன்னி, தாகசுரம், விஷமும்போம்.

பச்சைப்பயறு - பயித்தியம், விஷமும் போம். குளிர்ச்சி,வாதமும் உண்டாம்.

பச்சைப்பயறு பொங்கல் - பித்தம் போம், போகம், வாதமும் உண்டாம்.

பச்சைப்பாக்கு - மலம், வாய்வும் போம்.

பச்சைப் புருக்கறி - ஐயம், சீதம், பித்தம், வாதமும்போம். தாது பலமும் உண்டாம்.

பச்சைக்கயற்றுநீர்-இருமல், ஈளை, உதிரக்கடுப்பு, கபம், சுரம், வாய்வும் உண்டாம்.

பச்சையிளநீர்-கபம், கிருமி, சொறி, நேபால தோஷம், பழய சுரம், மேகமும் போம்.

பச்சைவஸ்திரம் - அழல், ஐயமும் போம். உடல்பூரிப்பு, கண்குளிர்ச்சியும் உண்டாம்.

பச்சைவிலாமிச்சுவேர் - ஈளை, குஷ்டம்,சுரவெப்பம், சூலை, தாகம், திரிதோஷம், மந்தமும்போம். தேககாந்தி உண்டாம்.

பகம்-கொக்குமந்தாரை

பகர்-பங்கம்பாழை

பகவிருக்கம்-நிலக்கடம்

பகன்றை - கிலுகிலுப்பை, சிவதை சிந்தில்.

பக்கசூலை
பக்கவாதம் } ஓர்நோய்.

பங்கணி-பங்கம்பாழை

பங்கநாதம்-தாமரை

பங்கம்பாலை
பங்கம்பாளை } ஆடுதின்னாப் பாளை.

பங்கயம்-தாமரை

பங்கி-கஞ்சா

பங்கூரம்-மாமஞ்சள்

பங்கேசம்-தாமரை

பங்கேருகம்-தாமரை

பசமந்திரம்-மஞ்சள்

பசமந்திரம்-மாமஞ்சள்

பசளை-வசலைக்கொடி

அவை,

கொடிப்பசளை-அல்லது, வெள்ளைப் பசளை, செவப்புப்பசளை, துலுக்கர்ப்பசளை - அல்லது கோழிக்கீரை, பேய்ப்பசளை, உலோசி, வறுக்கைப்பசளை.

பசிரி,
அல்லது
பயிரி } பசிரியிலைக்கறி

அவை, குதிரைப்பசிரி, பெரும் பசிரி, வெள்ளைப்பசிரி.

பசுங்கொடி-அறுகு

பசுண்டி-சிரகம்

பசுநாபி-பிராய்

பசும்பயறு-பாசிப்பயறு

பசும்பிடி-பச்சிலை, மரம்

பசுவிந்தைக்காளி-ஓர்பூண்டு

பச்சன்னியம்-மாமஞ்சள்

பச்சைக்கொம்பு-இஞ்சி

பச்சிலை - பச்சிலைமரம், அளத்துப் பச்சை-ஓர்பூண்டு பஞ்சலோசம். அதாவது, 1-சுக்கு, 2-திப்பிலி, 3-திப்பிலிமூலம், 4-செவ்வியம், 5-சித்திரமூலம்.

பஞ்சரம்-செருந்தி

பஞ்சவாசம் - அதாவது, 1-இலவங்கம், 2-ஏலம், 3-கருப்பூரம், 4-சாதிக்காய், 5-தக்கோலம்.

பஞ்சாங்குலம்-ஆமணக்கு

பஞ்சாமிலம்-இலந்தை

பஞ்சாய்-கோரை

பஞ்சு-பருத்தி

படகம்-விஷ்ணுகிராந்தை

படற்பொறி-துத்தி

படமடக்கி-தாழை

படருருக்கி-செந்நாயுருவி

படரை-ஆவிரை

படர்கொடி-பீர்க்கு

படர்தாமரை-ஓர்நோய்

படர்மல்லிகை-ஓர்பூண்டு

படர்மல்லிகை-பெரும்பீர்க்கு

படவை-செருப்படி

படாமூக்கி-வெண்ணாயுருவி

படிகாரம் - அல்லது, சீனக்காரம், இது கடைகளிளெல்லாம் நற்சரக்காய் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது. அது பலவிதமாய்ப் பலனுடன் ஔஷதஞ் செய்யப்படும்.

கண்ணோவு உண்டான குழந்தைகளுக்குப் படிகாரம் 3-கிறெயினும், பிராயமானவர்களுக்கு 6-கிறெயினும் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலக்கி தினம் 4-5-தரம் கண்களை கழுவவேண்டும். அதில் ஒரு சீலைத்துண்டை நனைத்துக் கண்களை அடிக்கடி ஒற்றிக்கொள்வது நலம். கண் இமைகள் அதிகமாய் வீங்கியிருந்தால் கால் மணி நேரம் விசேஷமாய் தலையில் சூடான பாலைவிட்டுக் கழுவி இவைகளை மெல்லெனத் திறந்து அதின் பின் மேற்சொன்ன சலத்தைச் சொட்டுச்சொட்டாய் விடவேண்டும். கண்களிற் கடினமாய் அப்படிப்பட்ட பின் வலியும் சூடும் நீங்கி சிவப்பு மாத்திரம் இருக்கிற சமயத்தில் அரைகிறும் படிகாரத்தை நுண்மையாய்ப் பொடித்து முட்டையின் வெள்ளைக் கருவில் கலந்து அந்த இரண்டு துண்டு மெல்லிய பழஞ்சீலையின் இடையில் வைத்துக் கண்ணின்மேல் சில மணிநேரம் வைத்திருக்கவேண்டும்.

மூக்கில் நின்று மிகுதியாய் இரத்தம்போனால் 120 - கிரெயின் படிகாரத்தை 6-அவுன்ஸ் தண்ணீரிற் கலக்கி பீச்சாங்குழலாலாவது மெல்லிய சீலையை நனைத்தாவது மூக்கினுட் செலுத்தினால் நிற்கும். அட்டைக் குத்த காயத்தில் நின்று இரத்தம் பாய்கிறதற்குக் கொஞ்சம் படிகாரம் நுணுக்கிப் படிவாயில் விட்டு அதின்மேற் சீலைக்குச் சுருட்டிவைத்து விரலால் கொஞ்சநேரம் கெட்டியாய் அழுத்தி வைத்திருந்தால் இரத்தம் நிற்கும்.

சுரமில்லாமல் மூலத்தில் நின்றும் மிகுதியாய் இரத்தம்போனால் 120 - கிறெயின் படிக்காரத்தை 8 - அவுன்ஸ் தண்ணீர் கலக்கி ஒரு துண்டு சீலையை

நனைத்து மூலத்தில் வைத்திருந்தால் சுகப்படும்.

குழந்தைகளின் மலத்துவார வழியாய் குடல் தள்ளினால் 60-கிறெயின் படிகாரத்தை கடுக்காய்க் கஷாயம் 8 - அவுன்சில் சேர்த்துக் கொண்டு தள்ளின குடலை மறுபடியும் உள்ளுக்குச் செலுத்தி அதின்மேல் இந்த கஷாயத்தை நாளொன்றுக்கு இரண்டு மூன்று நேரம் நன்றாய்த் தொட்டுப் போடவேண்டும். இப்படிச் செய்வதினால், மலத்துவாரத்தைச் சுருக்கிக் குடல் இறங்குகிறதை நிறுத்தல் செய்யும்.

நுரையீரல் இரைக் குடல் முதலிய உள்ளான உறுப்புகளில் நின்று இரத்தம் போகிறதற்கு படிக்காரம் 8-அல்லது 10-கிறெயின் ஒருதரம் உள்ளுக்குக் கொடுத்து இந்தப்படி தினம் மூன்றுதரங் கொடுக்க வேண்டும். இதனுடன் சுரமாவது மேற்சொன்ன ஔஷதங் கொடுக்காமல் இருக்கிறதுந் தவிர இரண்டொருதரங் கொடுத்த பின் வியாதி அதிகப்பட்டால் பின்பு கொடுக்கக் கூடாது. மேற்படி வியாதிகளுக்கு இசைந்ததாகப் பிரயோகம் எப்படியென்றால் 120 - கிரெயின் படிக்காரத்தை அரைபுட்டி பாலிலிட்டு ஒரு சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்துப் பத்துமினிட்டு நேரங்காய்ச்சி உடனே சீலையில் வடிகட்டிக்கொண்டு ஆறின பின் ஒருதரத்துக்கு ஒன்றரை அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுநேரங் கொடுக்க வேண்டும். இதினுடன் ஒரு கிறெயின் அபினுங் கூட்டிக் கொடுத்தால் மிகுந்த பலனுண்டாகும். ஆனாலப்படி அபினுடன் பிராயமானவர்களுக்கு மாத்திரமே கொடுக்கக் கூடும். பெண்களுக்குச் சுரோணித நீர் அதிகமாயும் இடைவிடாமலும் போகிறதற்கு மூலமுளையில் நின்று இரத்தம் போகிறதற்கும், மேற்சொன்ன ஔஷதம் பிரயோசனப்படும்.

தொண்டையிற் புண்ணாய் அல்லது சிவப்பாய் இருக்கிற தொண்டை நோய்க்குக் கடுக்காய் கஷாயம் அரைப்புட்டியில் 120-கிறெயின் படிகாரத்தைச் சேர்த்துக் கொஞ்சந் தேனுங் கூட்டி தினம் மூன்று நாலுவேளை இந்த ஜலங்கொண்டு வாயலம்பவேண்டும். இரசத்தில் ஔஷதஞ் சாப்பிட்டதினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது, பல்லீறிலுண்டாகும் இரண முதலிய வியாதிக்குப் படிகாரத்தைக் கடுக்காய்க் கஷாயத்தில் கலக்கி வாயைக் கழுவினால் குணமுண்டாகும். இதுவுந் தவிர சிறு குழந்தைகளுடைய வாயிலுண்டாகும் வெண்ணிறமான புண்களுக்கு 20-கிறெயின் படிகாரத்தை நுணுக்கி ஒரு அவுன்ஸ் தேனில் சேர்த்து அதை விரலால் தொட்டு வாயிலுள் பூச வேண்டும்.

குழந்தைகளுக்குக் கக்கிருமல் உண்டானால் 3-கிறெயின் படிக்காரத்தை நுணுக்கித் தேனிற் கலக்கிக்கொண்டு இந்த விதம் ஒருநாளில் இரண்டு மூன்றுதரங் கொடுக்கவேண்டும்.

இதிற் குணங்காணாவிட்டால் படிக்காரத்தினடையை அதிசமரக்கி அதனுடன் கொஞ்சம் காயமுஞ் சேர்த்துக்கொண்டால் மிகுந்தகுணத்தைக் கொடுக்கும். (காயத்தைக் குறித்துச்சொல்லியதில் காண்க.)

ஆண்குறித் துவாரமன்றி அதினுனித் தோலினின்று ஒருவிதமான மேகவெள்ளைப்போன்ற நீர்வருகிறதற்கு ஒரு அவுன்சு சலத்தில் 30-கிறெயின் படிகாரத்தைக் கலக்கி அத்தோலினுள் விட்டுக்கொள்ள வேண்டும். பெண்களிற்காணும் மேகவெள்ளைக்கும் படிகாரத்தை கடுக்காய்க் கஷாயத்திற் சேர்த்து பீச்சாங்குழலாற்செலுத்தி அலம்பவேண்டும். இது சாவகாசப்படாவிட்டால் அதில் ஒரு துண்டுசீலையை நனைத்து உபஸ்தத்தினுள்ளே செலுத்தி வைக்கவேண்டும். இப்படி செய்யுமளவில் உள்ளுக்கும் ஒருவேளைக்கு 10-கிறெயின் படிகாரத்தைத் தேனிலாவது வெல்லத்திலாவது தினம் மூன்றுதரங் கொடுக்கவேண்டும்.

நெடுநாட்பட்ட நாற்றமுள்ள படரும் புண்களுக்கு நன்மையாய்த் தூள்செய்த படிகாரம் 8-திராம், காசுக்கட்டி 2-திராம், அபின் ஒருதிராம், மெழுகுபிளாஸ்திரி 2 - அவுன்சு, இவையில் அபினை முன்னாக பிளாஸ்திரியுடன் நன்றாய்க்கலந்து கொண்டு பின்பு மற்றமருந்துகளை யெல்லாங் கூட்டி அரைத்து இதை ஒருதுண்டுச் சீலையில் தடவி காலையிலும் சாயந்திரமும் புண்ணிலிட்வேண்டும். வேதனையையுண்டாக்குமாகில் மேற்படி சேர்வையின் காரணத்தைக் குறைக்கும்படியாய் மெழுகு பிளாஸ்திரியையதிகரித்துக் கூட்டிக்கொள்ளவேண்டும். இரணங்களில் அதிகமாய்வளருந் துர்மாமிசங்களுக்குப் பொரித்த படிகாரத்தூளில் கொஞ்சந் தூவினால் பலனுண்டாம்.

முட்டுவீக்கங்களுக்கும், அடிசதைகளுக்கும் இவையின் காரணத்தால் உண்டாகிற வீக்கங்களுக்கும் அரைபுட்டி காடியும் அவ்வளவு சாராயமும் ஒன்றாய்க் கலந்து 4-திராம் படிகாரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களில் இடவேண்டும்.

வாந்திபேதி வியாதிக்கும் அது ஆரம்பிக்கிறதற்கு முன் காணப்பட்ட வயிற்றுப் போக்குக்கும் படிகாரம் 8-கிறெயின், காசுக்கட்டி 10-கிறெயின், சுறுவாப்பட்டைத்தூள் 6-கிறெயின் இவற்றை தேனிலரைத்து உடனே கொடுக்கவேண்டும். இப்படி ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக்கு ஒருதரம் வியாதியின் ஸ்திதிபோல் கொடுக்கவேண்டும். பிராயமானவர்களுக்கு பேதி கடினமாயிருந்தால் மேற்சொன்ன மருந்தில் அபின் 1-கிறெயினைக் கூட்டிக் கொள்ளவேண்டும். குழந்தைகளுக்கு இது மிகவும் சாவதானமாய்க் கொடுக்க வேண்டுவதால் ஒரு கிறெயின் அபினில் 8-அல்லது 10-ல் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். ஒன்றிரண்டு தரம்

கொடுத்தபின்பு மயக்கங் காணுமாகில் கொடுக்கக்கூடாது. நெடுநாள்சென்ற வயிறுப்போக்குக்கு படிக்காரம் 10-கிறெயின், வசம்புப்பொடி 15-கிறெயின், அபின் அரை கிறெயின் இவை மூன்றையுங் கலந்து ஒருதரத்துக்குக் கொடுக்க வேண்டும். இப்படி நாளொன்றுக்கு மூன்று நான்கு நேரங் கொடுக்கலாம்.

கீழ்ச் சொல்லிய மருந்துநீர நிறுத்தாவிட்டாலும் நீர் அதிகமாய்ப் போகிறதைக் குறைக்கும் ஒருபுட்டிப் பசுவின்பாலைக் கொதிக்கவைத்து அதில் 2 - திரும்படிகாரத் தூளையிட்டுக் கொஞ்சநேரங் கலக்கினபின் இறக்கவைத்து வடிகட்டி அதை நாளொன்றுக்கு மூன்றுதரம் ஒரு வேளைக்கு 4-அவுன்சவீதங் கொடுக்க வேண்டும்.

படிரம்-சந்தனம்
படுவநாத்தி-பாற்சோற்றி
படோல்ராசி-பேய்ப்புடோல்
படோலிகை-வெள்ளரி
பட்டகம்-புழுக்கொல்லி
பட்டி-ஓர்பூண்டு
பட்டிடை-நந்தியாவட்டம்
பணியாரதுத்தி-ஓர்செடி
பணியிநாக்கு-தண்ணீர்விட்டான்
பணை-அரசு, மூங்கில்
பண்டாகி-சேம்பு
பண்டுகம் - செவ்வகத்தி, அசமதாகம்
பதம்-அறுகு
பதரி-இலந்தை
பதறை-வைந்தோன்றி
பதிகம்-பாசி
பதிச்சம்-வாலுளுவை
பதுகரை-பழமுன்னிப்பாலை
பதுமம்-தாமரை
பதுமார்க்கம்-கவிழ்தும்பை
பத்தரு-மொசுமொசுக்கை
பத்திராசிராயம்-சந்தனம்
பத்தியாகாரி-சிறுகீரை
பத்தியம்-கடுக்காய்
பப்பரப்புளி-பெருக்கமரம், தொதி

பப்பாளிப்பால் - ஓர்பால், இந்தப்பால் வயிற்றில் கிருமிகளுக்கு மிகுந்தஅநுகூலத்துடனே நூதனமாய்ப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. பப்பாளிக்காயைக் குத்தி அதில் நின்றுவடியும் பாலைச் சேர்த்தெடுத்து பிராயமானவர்களுக்கு 1 - மேசைக்கரண்டி அளவு அல்லது அரை அவுன்ஸ் பாலைச் சமன் அளவு தேனில் கலக்கி இதினுடன் 2-அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீர் விட்டு எல்லாம் ஒன்றாய்க் கலக்கிக்கொண்டு ஆறினவுடன் குடித்து 2-மணிநேரஞ் சென்றபின் ஒரு அவுன்சு ஆமணக்கெண்ணையை அரை அவுன்சு எலுமிச்சஞ் சாற்றுடன் கலந்து குடிக்க வேண்டும். இந்தப்படி இரண்டு நாள் தொடர்ந்து செய்ய வேண்டும். மூன்று வயது முதல் ஏழு வயது வரையுள்ள குழந்தைக்கு மேற்படி அளவில் பாதிபோதும் மூன்றுவயதுக்குக்கீழ் முன்சொன்ன அளவில் மூன்றிலொரு பங்காவது ஒரு திருமாவது கொடுக்கலாம். இந்தப்பாலைக் கொடுத்தபின் வயிற்றுவலி கண்டால் சருக்கரையும் தண்ணீரும் அல்லது சருக்கரையும் பாலுமாக பூர்த்தியாய்க் கொடுக்கலாம்.

பம்பம்-திராய்
பம்பிகை-பீர்க்கு
பயசி-திருநாமப்பாலை
பயருதி-திருநாமப்பாலை
பயறு-ஓர்தானியம், அவை எலுப்பயறு, கறுப்புப் பயறு, சடைப்பயறு, சிறுபயறு, தட்டைப்பயறு, துலுக்கப்பயறு, நரிப்பயறு, நன்னிப்பயறு, பச்சைப்பயறு;
பயிரவி-முடக்கொத்தான்
பயிருக்கம்-பழம்பாசி
பயிலிகம்-குப்பைமேனி
பரத்தை - ஓர்செடி, அது, செம்பரத்தை.
பரசகம்-சந்தனம்
பராய்-பிராய்
பரி-பருத்தி
பரிமணி-கரந்தை
பருத்தவழுகை-பில்லிகை
பருத்தி - பருத்திச்செடி, அவை உப்பம்பருத்தி, ஐம்பருத்தி, காட்டுப்பருத்தி, குப்பைப்பருத்தி, செம்பருத்தி, தாளிப்பருத்தி, நாடன்பருத்தி, பூப்பருத்தி, வேலிப்பருத்தி.
பருவயோனி-கரும்பு
பருவி-தில்லை
பலகேசரம்-தென்னை
பலசாடவம்-மாதளை
பலசிரேட்டம்-மாமரம்
பலச்சரீடம்-குன்றி
பலண்டுறுகம்-ஓர்பாஷாணம்
பலதுசு-புளியாரை
பலபூரகம்-மாதளை
பலப்பிறேதம்-திப்பிலி
பலம், அவை, 1-கடுக்காய், 2-நெல்லிக்காய், 3-தான்றிக்காய்.
பலம்பழம்-சேங்கொட்டை
பலவு-பலாமரம்
பலன்-ஈரவெங்காயம்
பலாசு-பலாமரம், முருக்கு
பலாசு - புன்முருக்கு, நரிமுருக்கு, முருக்கு.
பலாண்டு-ஈரவெங்காயம்
பலாதவம்-பூனைக்காலி
பலால்தோகதம்-மாமரம்
பலினி-கோங்கு, ஞாழல்
பலோருகம்-பாதிரி
பலோற்பதி-மாமரம்
பல்லகி-சேங்கொட்டை
பல்லம்-சேமரம்
பல்லவத்தி-அசோகு
பல்லாதகி - சேங்கொட்டை, சேமரம்.
பல்லினர்-சதுரக்கள்ளி
பல்லினர்குழலி-மலைப்பச்சை
பல்லிகி-சேங்கொட்டை
பல்லிப்பூடு-கொல்லைப்பல்லி
பல்லுகம்-பெருவாகை.

பவளம்-ஓர் அரதனம், செவப்பான பவளம் ,ஐரோப்பா தேசத்தில், அவுஷதத்தில் உபயோகப்படுத்துகிறார்கள். இது ஜப்பான் தேசத்தில், சாதாரணமாயிருக்கிறது. சுமத்திரா தீபம் மேற்குக் கடற்கரையில் செழுமையாய் வளருகின்றது. தமிழ் வைத்தியர் இதனால் செய்யப்படும் பர்பத்தை நீரிழிவு மூலக்கிராணி இவைகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.
பவளக்குறிஞ்சி-ஓர்செடி
பவளப்புற்றுப் பாஷாணம் - ஓர் பாஷாணம்.
பவளப்பூண்டு-ஓர்பூண்டு
பவளப்பூலா அல்லது பூன் } ஓர்செடி.
பவளமல்லிகை-ஓர்செடி
பவளவங்காரவாச்சி-ஓர்பூண்டு

பவித்திரி-தருப்பை

பழிப்பாசம்-கருஞ்சீரகம்

பழப்பேசி-செப்புநெருஞ்சில்

பழுபாகல்-தும்பை

பழுமரம்-ஆல்

பளிதம்-கருப்பூரம்

பறங்கிக்கொடி-பூசணி

பறங்கிக்கிழங்கு-சீனப்பலா

பறங்கிப்பட்டை - ஓர்மருந்து, இந்தக்கிழங்கு சீனாதேசத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றது. அவ்விடத்தில் விஸ்தாரம் மிகுதியாய் உண்டாகின்றது. இதைத் தமிழ் வைத்தியர் நாட்பட்ட மேகவியாதிக்கும், மேகவாய்வுக்கும், கைகால் முடக்குக்கும், உபயோகப் படுத்துகிறார்கள்.

பறிவை-சிந்தில்

பறுணி-கொள்ளி, சிந்தில், பெருங்குமிழ், பெருங்குரும்பை.

பறைசிவி-சிறுகன்னாரி

பற்பம்-தாமரை

பற்றை-செங்காந்தள்

பனசம்-பலாமரம், பாற்சோற்றி

பனசயித்தி-அரசு

பனரை-நெய்க்கோட்டான்

பனிச்சர் - பனிச்சா, கஞ்சாங்கோரை.

பனை - ஓர்மரம், அலை, அலகுபனை, கூந்தற்பனை, தாளிப்பனை, நிலப்பனை.

பன்றிக்குறும்பு-நிலப்பனை

பன்றிக்கொம்பு - ஓர்கொம்பு, இது பிளாஸ்திரியிலும் தைலங்களிலும், சேர்க்கப் படுகின்றது. பழுப்பாசல் கொடியின் வேரை உலர்த்திச் சூரணமாக்கி அதனோடு இதைச் சேர்த்து முளைமூலம், இரத்தமூலம், சீழ்மூலம், இவைகளுக்கு உள்ளுக்கு கொடுக்கிறார்கள்.

பன்றிபொத்தை-சிறுகுறட்டை

பன்னல்-பருத்தி

பன்னி-சணல்

பஞ்சகற்பம் - கடுக்காய்த் தோல், கஸ்தூரி மஞ்சள், நெல்லிப்பருப்பு, மிளகு, வேப்பம் வித்து இவைகள் வகைக்குப் பலம் கால், பசுவின் பால்விட்டு அரைத்துக் கொதிக்க வைத்துச் சிரசில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ் செய்ய அதி தூல ரோகத்திற்கும் அதி சுட்கரோகத்திற்கும் இடமில்லை இதுவே பஞ்சகற்பவிதி.

பஞ்சபாஷாணம் - ஆணிப்புற்று, கண்புற்று, காய்ச்சல், குளிர் துன்மாங்கிஷம், மேகமும் போம்.

பஞ்சமுஷ்டி கஞ்சி-இளைப்பு, பித்தகபம், வாய்வும்போம். லங்கணத்திற்காகும்.

பஞ்சமூலம் - கண்டுபாங்கி, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், பேராத்தை இவைகளால் அநேகவியாதிகளெல்லாம் போம்.

பஞ்சலோகம்-இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி இவைகளால் கண்ணோய்களும், பலநோய்களும் போம்.

பஞ்சவில்வம்-ஆத்திமா, முட்கிளுவை, முல்லை, வில்வம், இவைகளால் கபம், காசம், சுவாசம், ஸ்தனக் காம்பிலுண்டாகும் கட்டியும்போம்.

பஞ்சவுப்பு - இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, இவைகளுக்கு அற்புதப்புண், கிராணி, குன்மம், சிலேட்டுமம், சீதக்கடுப்பு, சூலை, திரிதோஷம், நீராமை, நெஞ்சுவலி, பீலிகம், பயித்திய குன்மம், மந்தம், வாய்வும் போம்.

பஞ்சவலக்கம் - அத்தி, அரசுநால் பூவரசு, வேல் இவைகளின் பட்டையால், கபம், காசம், சுவாசமும்போம்.

பஞ்சுமெத்தை - விரகதாபம், விந்தும் உண்டாம்.

பட்டு வஸ்திரம் - பித்தம், கபம் போம், காந்தி, புத்தி, மகிழ்ச்சி, வியர்வையும் உண்டாம்.

பண்ணைக்கீரை - கரப்பான், சிரங்குப்புண், சீதமும்போம். குடலுக்குட் சீதம், மலமிளகலும் உண்டாம்.

பதுமகம்-பாலையாம்

பத்தியமுள்ளவர்கள் பகல் நித்திரை செய்வதின் குணம்— இரத்த பித்தரோகம், நேத்திரநோய்கள், விந்து நீற்றினமும் உண்டாம்.

பத்திரி-சாதிபத்திரி, தாளிசப்பத்திரி, லவங்கப் பத்திரி இவைகளால், தாகம், மலக்கடுப்பு, வாந்தி விக்கலும்போம்.

பப்பாளிப்பழம்-உடலில் நீரோட்டல் பித்தமுமுண்டாம்.

பயற்றங்காய்-அரோசி, ஐயம், உதிரவாய்வும் போம். அவிழ்தநாசம், தீபனமுமுண்டாம்.

பரட்டைக்கீரை-கபம், கரப்பான், வாதமும்போம். பித்தமுண்டாம், பத்தியத்திற்காகும்.

பரத்தையர் முலைப்பால் - கிரந்தி சொறி, புண், கால்நோய், முத்தோஷம், வாதமுமுண்டாம்

பருத்தி-பெரும்பாடு போம்

பருத்திப் பஞ்சணை-அனல்போம். இரத்தம், சுரம், விந்து, விரகமுமுண்டாம்.

பருத்திலையு மொக்கும் - பாலில் அரைத்து, சாப்பிட்டால் இரத்தபித்தம், இரணவீக்கம், நீரெரிவு மேகமெல்லாம்போம்.

பருப்புக்கோரை-பித்தமும்போம். இளமையுண்டாம்.

பருப்புப்பொங்கல் - பித்தமும்போம். போகம், வாதமும் உண்டாம்.

பலகரை-கண்ணோய், கபம், கால், சூலை, கிராணி, தாகம், மந்தம், விஷசுரமும் போம்.

பல மெழுகுகள் - கொசு மெழுகு, வசியம், எந்திரம் இவைகளுக்காகும், நன்மெழுகு புண்ணோய் போம். பொன்மெழுகு மாறல் சுரம்போம்.

பலமிருகப் பல் - விழிநோய்கள், பலதும்போம்.

பலாக்காய் - இளைப்பு, இறைப்பு, மந்தம், வாதம், விந்தும் உண்டாம்.

பலாக்கொட்டை-மலக்கட்டு, மலக்கருகலுமுண்டாம்.

பலாப்பழம் - கரப்பான், சிலேட்டுமம், பித்தம், வாதம், மற்றுமநேக வியாதிகளுமுண்டாம்.

பலாப்பிஞ்சு - தாகம், பித்தமும் போம். குன்மம், போகம், மந்தமும் உண்டாம்.

பலாயிலையிற் சாப்பிடல் - குன்மம், மகோதரநோயும் போம். பித்தம் உண்டாம்.

பல்லக்கேற்றம் - பித்தம் போம். தாது, பசி, வாய்வும் உண்டாம்.

பல்லிப்பூண்டு - தோஷசுரம், பல்வலி, பித்தம், வலவிடம், வாய்வும் போம். தாளகமும், பாஷாணமும், சுத்தியாகும்.

பல்விளக்கத்தகாத வஸ்துக்கள் - கரி, கல்லு, பானை மணல்

வைக்கோல். இவைகளால் விளக்கினால் சீதேவிபோய், மூதேவி வந்து சேருவாள்.

பல்விளக்கத்தக்க கொம்புகள்-ஆலுக்கு சரஸ்வதி கடாட்சம் உண்டாகும். நாயுருவிக்கு வசீகரம் உண்டாகும். பூலாவுக்கு போகம் பொழியும். வேம்புக்கு பல்லிலங்கும். வேலுக்குப் பல்லிறுகும்.

பவளக்குன்றிக்கொடி - இரத்தபித்தகபம், கடுவன், கரப்பான், கிரந்தி, சொறி, புண் மறுகரப்பான், மேகமும்போம்.

பவளம்-அதிதாகம், அருசி, ஐயம் காரம், காமாலை, சுரரோகம், சுரதோஷம், சோகை, திரிதோஷம் காரம், நாவறட்சி, பித்தபாண்டு, புழுவிடம், விந்துநஷ்டமும் போம்.

பவளவருகு-சுவாசம்போம்

பழங்காடிநீர்-அதிசாரம், அரோசகம், கிராணி, பல்பிணி, பித்தமயக்கமும் போம். தேகக்குளிர்ச்சி உண்டாம்.

பழஞ்சோறு - பித்தவாதம்போம். ஒளி, தாது; நித்திரை, மயக்கமும் உண்டாம்.

பழந்தேன்-மூலமும்போம். தேகபலம், வயிற்றெரிவு, வாயுவிந்தும் உண்டாம்.

பழம்பாசி-மேககாந்தல், வெள்ளையொழுகலும்போம்.

பழம்புளி-கண்ணோய், கபம், சர்த்திசுரம், சூலை, திரிதோஷம், பித்தம், வாதமும் போம்.

பழையவரிசி - ஐயம், பலநோயும் போம். உடல்குளிர்ச்சி, தீபாக்கினியும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

பழையவிளநீர்-பலவகை நோயுண்டாம்.

பள்ளநீர்-அக்கினி, மந்தம், கபம், கபால ரோகம், பித்த ரோகம், பீநசம், மூலரோகம், வாதமும் உண்டாம்.

பள்ளையாட்டிறைச்சி-தீபனம் போம். அரோசகம், கபம், தொந்தநோய், கந்தம், வாயுவும் உண்டாம்.

பள்ளையாட்டுத்தயிர்-பித்தம், உண்டாம்.

பள்ளையாட்டுப்பால் - பித்தம் உண்டாம்.

பள்ளையாட்டின் நெய்-பலம், பித்தமும்போம். மந்தம் உண்டாம்.

பள்ளையாட்டின் வெண்ணெய் - புத்தியீனம் உண்டாம்.

பறங்கிக்காய் - அனலழற்சி பித்தமும்போம். ஐயம், பசியும் உண்டாம்.

பறங்கியிலை-தாகம், புழு, பித்தம், பேதி, வாதமுமுண்டாம்.

பறங்கிப்பட்டை-கடி, கிரந்தி, குஷ்டம், பகந்தரம், பலவாதம், பிளவை, புண், முடம், மூலம், மேகம், வாந்தியும் போம்.

பறங்கிப்பட்டைக்குப் பத்தியம் - இஞ்சி, உப்பு, எண்ணெய், கடுகு கார்ப்பு, வைத்தல், தோலாசன்னை, பாக்கு, புளி, மஞ்சள், மடவை, மாம்சங்கள், வாளை, வெளவால், இவைகளாகாது. சுத்தியான கல்லுப்பு, வெள்ளாட்டிறைச்சியும் ஆகும்.

பற்பாடகம் - உன்மத்தம், சீதவாதசுரம், தாகம், பித்தமும்போம். கண்குளிர்ச்சி உண்டாம்.

பனங்கற்கண்டு - தாக வெப்பம், நீர்ச்சுருக்கும், மேகவனல், வைசூரி கையால் விசுக்கனலும் போம்.

பனங்கிழங்கு - அஸ்தியனல், பலமேகமும்போம். அழகு, குளிர்ச்சியும் உண்டாம்.

பனங்குருத்து-உதிரமூலம், பேதியும் உண்டாம்.

பனங்கோவை-கரப்பான், பீநசம், விடம், வீக்கம், வெந்துவிரிந்த புண்ணும்போம்.

பனம்பழம்-அழுகிரந்தி, கரப்பான், மலச்சிக்கு மற்றும் பல நோய்களும் உண்டாம்.

பனம்பூ-குன்மம், நீர்க்கட்டு, பல்லுநோய், பழஞ்சுரமும்போம்.

பனிகால மண்பூச்சு - அதில் கச்சோலம், கஸ்தூரி, குங்குமம், சவ்வாது, சாந்து, இவைகளைப் பனிநீரிற் குழைத்துப் பூசிடில், கபம், தாகம், இளைவு, பித்தமும் போம். அழகுசெய்யும் பலம், பூமாது கடாட்சம், முகசந்தோஷம், வீரியமும் உண்டாம்.

பனிநீர் காலையில் சாப்பிட்டால் - அழல்,கிராணி, குஷ்டம்,சொறி, சிரங்கு, தாபம், நீரிழிவு, முத்தோஷம், வாய்வும்போம்.

பனைநுங்கு-எரிச்சல், தாகம், பித்தவெட்டை மேகமும்போம்.

அஸ்திகுளிர்ச்சி - அமுர்தம் உண்டாம், பனைமது தாக வெப்பம் போம். உதிரம், பித்தம், விந்து கட்டுண்டாண்டாம், பாஷாணங்கள் சுத்தியாகும்.

பனைவோலைவிசிறி - ஐயம், அருசி பித்தம் வாதமும்போம்.

பனைவெல்லம்-அருசி, கபம், குன்மம், ஜன்னி, வாதபித்தம்போம்.

பன்றிநெய் - ஆசன மூலரத்தம், நீர்க்கடுப்பு, வாதக் கடுப்பும் போம்.

பன்றிப்புடலங்காய் - இறங்கிய விஷம், எருதல், கரப்பான், காணாக்கடி, சயித்தியம், சிலந்தி, சொறி, சிரங்கும் உண்டாம்.

பன்னீர்-சயம், இளைப்பு, ஜன்னிகள் சுகசன்னி வாதபித்தம், வியாதிகளும்போம். குளிர்ச்சி உண்டாம்.

பந்நீர் - செம்பிற்காய்ந்த வெந்நீர், கண்ணோய், சிலேட்டும பித்தம், சுவாசம், பிரமை, வாய்வு, விக்கலும் போம்.

பந்நீர்ப்பூ - அரோசகம், அழல், சர்த்தி, தாதுநஷ்டம், வறட்சியும்போம்.

### பா

பாகல்-பாகல், பலா அவை, காட்டுப் பாகல், கொம்புப் பாகல், கொல்லம் பாகல், நரிப் பாகல், நாய்ப்பாகல், நலப்பாகல், பழுப்பாகல், நிலப்பாகல், பழுப்பாகல், மிதிப்பாகல்.

பாக்குமரம்-கமுகு

பாங்குமரம்-கருஞ்சீரகம்

பாடகம்-வெற்றிலை

பாசம்-சீரகம்

பாசருகம்-அகில்

பாசானபேதி-செப்பு, நெருஞ்சில்

பாசி - கடைச்சி, நீர்பாசி, நெட்டி, அவை, ஆற்றுப்பாசி, இலைப்பாசி, கடற்பாசி, கற்பாசி, கூந்தற்பாசி, கொடிப்பாசி, நீர் பழம்பாசி, முட்டைப்பாசி, வழுக்குபாசி, வேப்பம்பாசி, வேலம்பாசி.

பாசு-மூங்கில்
பாசுவசுரேணி-காட்டாமணக்கு
பாஷாணம் - பாஷாணம், அவை, 1-பிறவிப்பாஷாணம், 2-வைப்புப் பாஷாணம், இவ்விரண்டு வகைப் பாஷாணங்களில் ஒவ்வொன்றில் முப்பத்திரண்டு வகையாம், பிறவிப்பாஷாணம்.

1 - அஞ்சன பாஷாணம், 2 - அப்பிரகபாஷாணம், 3-அவுபல பாஷாணம், 4-இலிங்கபாஷாணம், 5-கந்தப்பாஷாணம், 6-காகட்டுத்தாளகம், 7-கற்கடக பாஷாணம், 8 - கற்பறி பாஷாணம், 9-சற்பாஷாணம், 10-காய்ச்சற்பாஷாணம், 11 - காந்த பாஷாணம், 12-கார்முகில், 13-குதிரைப்பல், அசுவம் அல்லது கத்துருபம், 14-கந்தகம், 15-கவுரிபாஷாணம், அல்லது அங்காமாதி, 16 - கோளக பாஷாணம் அல்லது அங்கம், 17-சங்கபாஷாணம், 18 - சவ்வீரம், அல்லது பர்க்கிபாஷாணம், அல்லது அங்குசன், 19-சாலங்க பாஷாணம், அல்லது கும்பகம், 20-சிலாமதம், 21-சிதங்கபாஷாணம், அல்லது அகளங்கம், 22-சிர்பந்தம், அல்லது கபாலன், 23-சூதகபாஷாணம், 24-தகட்டுத்தாளகம், அரிதாரம், 25 - தாளம்பம், 26-துத்தபாஷாணம், 27-தொட்டி அல்லது கும்பம், 28-லெண்டுருகபாஷாணம், 29-மனோசிலை, 30-மிருகம் அல்லது அங்கணன், 31-வெள்ளைப் பாஷாணம்.

வெள்ளைப் பாஷாணமானது மிகவும் பிரயோசனமுஞ் சத்துமுள்ள மருந்தாயிருக்கின்றது. ஆதலால் இதை உள்ளுக்குக் கொடுக்கும்போது அதிக பத்திரமும் சாக்கிரதையும் வேண்டியிருக்கின்றது. இந்த ஔஷதம் முக்கியமாய்க் குளிர் சுரத்துக்கும் முறைக் காய்ச்சலுக்கும் நன்றாய்ப் பிரயோசனப்படும். ஒரு கிரெயின் வெள்ளைப் பாஷாணத்தை 10-சரிபங்கு செய்து அதில் ஒரு பங்கை 3-கிரெயின் நல்ல மிளகுத்தூளுடன் கூட்டிப் போதுமான தேன்விட்டு அரைத்து ஒரு மாத்திரையாய் உருட்டிப் பிராயமானவர்களுக்கு உண்டு ஒரு மணி நேரஞ் சென்றபின் கொடுக்கவேண்டும். இந்த மாத்திரையைக் கொடுக்குமுன் ஒரு பேதிக்குக் கொடுப்பது உத்தமம். இந்தப்படி சிலநாள் கொடுத்தபின் கண்ணிற் சிவப்பும் தினவும் இமைகள் பருத்து முறுக்கமாய்க் கண்டால் உடனே நிறுத்தி வியாதி நன்றாய்ச் சுகப்படாமற் போனால் வேறே ஔஷதங் கொடுக்க வேண்டும். இந்தப் பிரயோகம், வைத்தியருடைய நிதானிப்பின்றி சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. பெருங்கால் வியாதியைச் சார்ந்து வருகிற சுரத்தை நிறுத்தும் பொருட்டாய் இந்த மாத்திரைகளைக் கொடுக்கலாம். இது குஷ்ட ரோகத்தையுங் கேட்கும். ஆனால் இந்த வியாதிக்குக் கொஞ்சநாள் தொடர்ந்து கொடுக்க அவசியம் மருந்து தின்னும்போது கண் சொறிவும் இமைகள் முறுக்கமும் உண்டானால் ஔஷதத்தை ஏழு நாளைக்கு நிறுத்தி ஒரு பேதிக்குக் கொடுத்தும் பின்பு மாத்திரைகளைக் கொடுக்கவேண்டும். ஒருசமயம்வாய்வுஉபத்திரவமும் வயிற்றுப் போக்கும், வாந்தியும் உண்டாகில் மருந்தை நிறுத்தவேண்டும். பாஷாணப் பிரயோகத்தைப்போல் மற்றொரு மருந்துக்கு இவ்வளவு மிகுந்த பத்திரமும் எச்சரிக்கையும் வேண்டியதில்லை.

### வைப்புப்பாஷாணம்

1-அமரசிலைக்கந்தகம், 2-அயத்தொட்டி, 3-இந்திரபாஷாணம், 4-இரசிதம், 5-இரத்தபாஷாணம், 6-இலவணபாஷாணம், 7-எருமை நாத்தொட்டி, 8-கருமுகில், 9-காகம், 10 - குங்குமம், அஞ்சற்குளச்சு, அல்லது சமலி, 11-கோடாசொரி, 12 - கோழித்தலைக்கெந்தகம், 13 - சவ்வீரம், 14-சாதிலிங்கம், 15-சுதம், 16-செப்புத்தொட்டி, 17 - சோரம், 18-திமுறுகல், 19-துத்தம், 20-துரிசு, 21-தொட்டி, 22-நாகபாஷாணம், 23-நீலம் அல்லது ஈயக்குழலி, ஈயத்தின் பித்தளை, 24-பஞ்சபட்சி, 25 - பவழப்புற்று, 26-பூரம், 27-பொற்றொட்டி, 28-மிருதார்சிங்கி அல்லது சிங்கி, 29-வாணகந்தகம், 30-வெள்ளை, 31-வைப்பரிதாரம்.

பாடலம் } பாதிரி
பாடலி
பாடா-பங்கம்பாளை
பாடகம்-சந்தனம்
பாடை-பருத்தி
பாடைகுலைத்தான்-பாகல்

பாணம்-மழவண்ணக்குறிஞ்சி
பாணன்-காட்டாமணக்கு
பாணி-கள்
பாணியம்-வலம்புரிக்கொடி
பாண்டில்-வாகை, மூங்கில்
பாண்டு-சிறுபூளை, பாண்டுரோகம்
பாண்டுலா-கறிப்புடோல்
பாதசத்துவா } அரசு
பாதரோகணம்
பாதாளமூலி - ஆடுதின்னாப்பாளை, கோரைக்கிழங்கு, சிறு நெருஞ்சி, சீந்தில்.

பாதிரம்-மலையாத்தி
பாதிரி-பாதிரி, மூங்கில்
பாதோசம்-தாமரை
பாத்தம்-மருது
பாத்திம்-புறமுட்டி
பாத்தியல்-தண்ணீர்விட்டான்
பார்ப்பான்பூண்டு-ஓர்பூண்டு
பாமதம்-வாலுளுவை
பாம்புகொல்லி
பாம்புமொச்சை } ஓர்பூண்டு
பாயசம்பாற்சோற்றி
பாய்விரி-பசளை
பாரங்கு - சிறுதேக்கு, பாரத்துவரசி, காட்டுப்பருத்தி.

பாராவதம்-கருங்காலி
பாரிகோட்டம்
பாரிசம் } ஓர்நோய்
பாரிசவாயு
பாரிசாதம் - பவளமல்லிகை, முருக்கு.

பாரிபத்திரம்-வேம்பு
பாரியம்-கடுக்காய், முருக்கு
பாருழியம்-அகில்
பார்க்கவி-சிறுதேக்கு, வெள்ளறுகு
பார்வதி-பெருநெருஞ்சில்
பார்வதம்-வாலுளுவை, வேம்பு

பாலகம்-கோட்டம்
பாலடை - சித்திரப்பாலடை, பாலடைச்செடி
பாலதனயம்-கருங்காலி
பாலி-ஆல், செம்பருத்தில், கள்
பாலிகை-அடம்பு
பாலிறுவி-முருக்கு
பாலுகம்-கருப்பூரம்
பாலை - ஓர்கொடி, அவை, கொடிப்பாலை, உசிப்பாலை ஓர்வகைச்செடி, ஏழிலைப்பாலை, அல்லது ஏழிலைப்பாலை, கறிப்பாலை, குடசப்பாலை, காக்காய்ப்பாலை, ஓர்மரம், குடசப்பாலை, கொடிப்பாலை, திருநாமப்பாலை, இலைப்பாலை, பூம்பாலை, விழுப்பாலை, வெட்பாலை.

பாலைநலமரம்-குரா, மரா
பாலொடுவை-கொடிப்பாலை
பாவட்டை-ஆடாதோடை
பாவட்டைவேர் - ஓர் மருந்துவேர், இது கசப்பாகவிருக்கும். பேதியுண்டாக்குகிற குணமுடையது. மேகத்தினாலுண்டாகும் நரம்புகல்லடைப்பு இவைகளுக்கு உபயோகப்படுத்துகின்றது. வீக்கம் அதப்பு பாண்டு நீரேற்றம் இவைகளுக்கு சலபேதி மருந்தாயிருக்கின்றது.

பாற்சோற்றி-பொற்றிக்கீரை
பாற்பீர்க்கு-வெள்ளைப்பீர்க்கு
பானிதம்-கற்பூரம், பாற்சோறு
பானல்-கருங்குவளை
பானியவல்லி-வலம்புரிக்கொடி
பானைவெடிச்சான் - பிளவை கொல்லி
பாகலிலை - கிருமிதோஷம், பாஷாணதோஷமும்போம். இரசமுறிவு, பேதியும் உண்டாகும்.
பாகல்காய்-வட்டப்புழுவாம்
பாகல்பழம் - காசம், கிருமி, குஷ்டம், சுவாசம், திரிதோஷம், மூலம், மேகமும்போம்.
பாசிநீர்-பல்நோய்கள் உண்டாம்
பாடலை-கரப்பான், சொறி, புண், மூலம், மேகத்தால்வந்த பிளவையும்போம்.
பாதரசம்-நன்னோய், கிரந்தி, குஷ்டம், குன்மம், சூலை, புண், வாதவியாதிகள் மற்றுந் தேகத்திலுள்ள வியாதிகளும்போம்.
பாதரசதோஷம்-ஓயாத வியர்வை, தேகவனல், பித்தம், வாய்பிதற்றலும் உண்டாம்.
பாதரசபத்தியம்-உட்டினம், உப்பு, கைப்பு, சீதம் நல்லெண்ணெய், படுக்கை, புளிப்பு, மதுபானம், மச்சமும் ஆகாது.
பாதரட்சை - இரவிலும் பகலிலும் பயமில்லை.

## பி

பிகபெந்து
பிகராகம் } மாமரம்
பிகவல்லபம்
பிசவ்வியம்-பருத்தி
பிசனம்-செஞ்சந்தனம்
பிசாவப்பிரியம்-வேம்பு
பிசாசம்-பேக்கரும்பு
பிசாசி-சடாமாஞ்சில்
பிசிதம்-வேம்பு, நீர்
பிசு-பருத்தி
பிசுதூலம்-பருத்தி
பிசுமந்தம்-வேம்பு
பிசுகம்-வேலிப்பருத்தி
பிச்சம்-இருவேலி, காஞ்சிரை
பிச்சி-சிறுசண்பகம்
பிச்சை-வாழை
பிச்சைக்காய்-ஓர்பழம்
பிஞ்சம்-சத்திக்கொடி
பிடி-ஏலம்

பிட்டர்-ஆடுதின்னாப்பாளை
பிட்டிலம்-ஏலம்
பிணர்-கோங்கு
பிண்டபுட்பம் - அசோகு, செவ்வந்தி.
பிண்டி-அசோகு
பிண்டிதம்-மருக்காரை
பிண்டிவாளகம்-குந்துருக்கம்
பிண்ணாக்குக்கீரை-ஓர்பூண்டு
பிண்ணாக்குப்பூண்டு-ஓர்பூண்டு
பிதிகம்-பெருங்குரும்பை
பித்தசாந்தி-பொன்னாங்காணி

பித்தம்-ஓர்நோய், அருசிபித்தம், அரோசிகம், இரத்த பித்தம், கரும்பித்தம், சயபித்தம், வறட்சிபித்தம், பித்தகாங்கை, பித்தகாசம், பித்தகாமாலை, பித்தகாரகம், பித்த காரகத்தினாலே முகங் குளுகுளுத் திருக்கின்றது, பித்தகிராணி, பித்தகுன்மம்.
பித்தச்சூடு - பித்தகாரகம், பித்தசூலை, பித்தசோவை, பித்தசோவையினாலே முகம் குளுகுளுத்திருக்கிறது, பித்தத்தின் வீடு, பித்தநாடி, பித்தப்பிளப்பு, பித்த மிஞ்சுகிறது, பித்தம் பிடித்தவன், பித்தரோகம்.

பித்திகை-சிறுசண்பகம்
பிப்பலம்-அரசு
பிப்பிலி-திப்பிலி
பிப்பிலிசத்தி-பெருநெருஞ்சில்.
பிரகதி-கத்திரி, கண்டங்கத்திரி
பிரகம்-கள், தேன்
பிரசாரம்-வேங்கைமரம்
பிரசோகினி-கண்டங்கத்திரி
பிரண்டை-ஓர்செடி, பிரண்டையை உலர்த்தி சூரணஞ்செய்து அநேகத் தமிழ் வைத்தியர் அசீரணத்தினால் உண்டாகும் சில வயிற்று நோய்களுக்கு நோய் சோதிக்கும் மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள்.
பிரமதண்டு-குருக்கு
பிரமபத்திரம்-புகையிலை
பிரமபத்திரி-புகையிலை
பிரமமூலி-பிரமி
பிரமியம்-ஓர்நோய்
பிரமியப்பூண்டு-ஓர்பூண்டு
பிரகீளம்-பங்கம்பாளை
பிராய்-ஓர்மரம்
பிராயம்பட்டை-அதன்பட்டை
பிரி-வெருகு
பிரியகம்-கடம்பு
பிரு-கத்திரி
பிருகதி-கத்திரி
பிருதாவிகை-ஏலம்
பிருந்தகம்-துளசி
பிரேயம்-கள்
பிலகம்-கருஞ்சீரகம்
பில்வம்-வாகை
பில்லியக்குரான்-இலாமிச்சை
பில்லியத்தி-பெருநெருஞ்சில்
பிளவை - ஓர் இரணம், அவை, இறைப் பிளவை, உச்சிப்பிளவை, கன்னப்பிளவை, பனிச்சைப்பிளவை, ராசப்பிளவை, பெரும்பிளவை.
பிளாஸ்திரி - சேர்வை, மெழுகு 2-அவுன்ஸ், எண்ணெய் 5-அவுன்ஸ் இவ்விரண்டையும் ஒரு பரந்த சட்டியிலிட்டு சிறு நெருப்பின்மேல் வைத்து நன்றாய்க் கரையுமட்டும் அடிக்கடி விடாமல் கலக்கி பின்பு சட்டியுடனே இறக்கி வைத்துக் கொள்ளவாவது அதைச் சூட்டுடனே வேறொரு பாத்திரத்தில் விட்டு வைத்துக் கொள்ளவாவது செய்யலாம். இந்த

புண்கள் தோலுரிவு தீப்பட்ட புண் முதலியவைகளுக் கெல்லாம் அவைகள் சௌக்கியப்பட ஆரம்பிக்கிற சமயம் சீலையில் தடவி இட்டுக்கொள்ள வேண்டும்.
பிறரீகம்-அகில்
பிறசாதனம்-தேக்கு
பிறசாரிணி-கொடியார்கூந்தல்
பிறத்தியகபன்னி-நாயுருவி
பிறப்பார்-நாய்வேளை
பிறரோகி-வறட்சுண்டி
பிருமுட்டி-பிருமுட்டி, சாயவேர்

பிறியகம் - கடம்பு, ஞாழில், வெங்கை.
பிசின்பட்டை - இரத்தத்தினும், சதையினும் குத்திக் குடைகிறவாய்வும், தேகக் கொதிப்பும்போம்.
பிடங்குநாறி-இரணசன்னி, காயம், சலவீக்கமும், சோணிதக்கட்டும் போம்.
பிடாலவணம்-நீரிழிவும், மந்தமும் போம். பசியுண்டாம்.
பிடிசிறங்கு - கரப்பான், தினவு, பலம், புண்களும் உண்டாம்.
பிட்டு-உதிரக்கட்டும் போம். உதிரத்தெளிவு, பலம், வாய்வும் உண்டாம்.
பிண்ணாக்குக்கீரை - அனல், நீரடைப்பும் போம். கரப்பான் வாதமும் உண்டாம்.
பித்தளை-இருமல், இரைப்பு, உஷ்ணம், தாபசுரம், பக்கவாய்வு, பித்தகுன்மம், பாண்டு, வாதமும் போம். சீதளம், தாதுவிர்த்தியும் உண்டாம்.
பிரண்டை - அதிசாரம், இரத்தப்போக்கு, கபம், மாந்தம், மூளைமூலம், மூலத்தினவு, மூலாத்தம், வயிற்றுவலி, வாய்வும் போம். அதிக பசியுண்டாம்.
பிரதமைக்கடுக்காய் - பலம்போம். சுக்கிலம் உண்டாம். மேல்தோல் சுருங்கி உள்சதை பற்றியிருக்கும்.
பிரப்பங்கிழங்கு - சூலைப் பிடிப்பு, தந்தவியாதி, வாய்வும்போம்.
பிரமதண்டுப்பால்-கண்கூசல், கண்சிவத்தல், கண்ணருகல், கண்ணெழுகல், கண் நோகுதலும் போம்.
பிரமிகட்டி-சூலை, பாண்டு, மேகம், வாயு, விரணம், வீக்கமும் போம். பசி, பேதி, மலடிக்கு கெர்ப்பமும் போம்.
பிருதிவி - இரணம், பொருமலும் போம். பாண்டு, பொன், மற்றப் பண்டங்களும் உண்டாம்.
பிருதிவிகடுக்காய் - பயித்தியம் போம். வயது தளர்ச்சியுண்டாம். மெல்லிய தோலுள்ளதாகவிருக்கும்.
பிளப்புச்சிரகம் - பித்த வாதமும் போம். அழகுண்டாம்.
பிளவைக் கொல்லிப்பூண்டு - இரணம், உள்மாந்தை, பிளவைக் கட்டி, புண், மேகமும்போம்.

## பீ

பீக்கருவேல்-ஓர்மரம்
பீக்கிலாத்தி-சங்கங்குப்பி
பீஞ்சல்-பீச்சுவிளா, பீஞ்சல்
பீதகதலி-செவ்வாழை
பீதகம்-இருவேலி
பீதகாரகம்-வேங்கைமரம்
பீதகவேரம்-மஞ்சள்
பீதசாரம் - சந்தனம், வேங்கைமரம்.
பீதசாரகம்-வேங்கை

பீததாரு-செம்புளிச்சை, புன்னை
பீதபூதம்-கொம்மட்டிமாதுளை
பீதம்-மஞ்சள்
பீதபூதி-செம்மல்லிகை
பீதம்-மஞ்சள், பொன்னிறப்பூவுள்ள மருதோன்றி
பீநாறிமரம்-பெருமரம்
பீநாற்றமரம்-ஓர்மரம்
பீரம்-பீர்க்கு பூவரசு வாகை
பீருகா-பீதரோகிணி
பீர்-பீர்க்கு
பீர்க்கு-ஓர்கொடி, அவை, நுரைப்பீர்க்கு, பேய்ப்பீர்க்கு.
பீனம்-பாசி

## பு

புகள்-அகத்தி
புக்கி-பிராய்
புடம்-பொன், முதலான சரக்குகளை நெருப்பு வெய்யல் தானம் முதலானவைகளாற் சுத்தம்பண்ணல், அவை.
காடைப்புடம்-ஓரெருவிற் போடும் புடம்.
கவுதாரிப்புடம்-மூன்றெருவிற்போடும் புடம்.
குக்குடப்புடம்-பத்தெருவிற் போடும் புடம்.
வராகப்புடம்-இருபதெருவிற் போடும் புடம். அல்லது ஐம்பதெருவிற் போடும் புடம்.
கசப்புடம் - நூறெருவிற் போடும் புடம்.
புடல்-புடோல்
புடவிமூலம்-சிறுகுரட்டை
புடாரமுனை-செந்நாயுருவி
புடோல்-புடல், அவை, கொத்துப்புடல், காய்ப்புடல், வன்றியபுடல், பேய்ப்புடல்.
புட்கரம்-தாமரைப்பூ
புட்குத்திருப்பி-வட்டத்திருப்பி
புட்கம்-மூக்கிரட்டை
புட்பாதகம்-மூங்கில்
புட்பம்-வாழை
புனை-மூங்கில்
புனைமரம்-வெண்கரும்பு
புண்டரீகம் - தாமரை, வெண்டாமரை.
புண்ணியத் திருமணம்-வென்றருப்பை.
புண்ணியாக்கம்-குந்துருக்கம்
புந்தாத்திரி-அறநெல்லி
புந்திகம்-காஞ்சிரை
புத்திரசென்னி-தாளி
புத்திரிகறி - முள்ளி, கீழ்காய் நெல்லி.
புத்தின்சாரி-காஞ்சிரை
புத்துவணி-காஞ்சிரை
புத்தேன்-காஞ்சிரை
புரசு
அல்லது } பலாசு.
புனாசு.

புரிமோகம்-சம்புநாவல், விளாத்தி.
புருடம்-புன்னை
புருண்டி-மல்லிகை
புல்லா-பூலா
புலிதடக்கி
புலிதொடக்கி } கற்றாழை சிங்கிலிதொடரி
புலித்தடக்கி
புலித்தொடக்கி
புலிபம்-பொன்னுவிரை
புலியுகிலி-புலிதொடக்கி

புல்பனைமரம்-ஓர்புல், அவை, அளத்துப்புல், அறுகம்புல், இரத்தகோமாரிப்புல், இலைப்புல், உப்புறுசம்புல், உப்பறுகு, அறுகு, ஊர்ப்புல், ஓட்டுப்புல், கச்சற்புல், கடுக்கன்புல், கணைப்புல், ஓட்டுப்புல், கதிர்ப்புல், கமரிப்புல்,

கம்பம்புல், கர்ப்பூரப்புல், கழிப்புல், கழிமுட்டான்புல், காவட்டம்புல், மாந்தப்புல், குசைப்புல், தருப்பை, பவித்திரி, குசப்புல், குஞ்சப்புல், குடைப்புல், கோரைப்புல், கோரை கோழிக்காற்புல், சடைப்புல், சிலைப்புல், சுக்குநாறிப் புல், மாந்தப் புல், செம்புல், நாணற்புல், சோனைப்புல், தண்டையம்புல், நாணற்புல், விசுவாமித்திரப்புல், பிரப்பங்காய்க்கோரை, பீசைப் புல், மற்பங்காய்க் கோரை, பீசைப்புல், மத்தங்காய்ப்புல், மருக்குருப்புல், மாந்தப்புல், முசுறுப்புல், முயற்புல், மூங்கிற்புல்.

புல்லாக்கி-பூலா
புல்லியம்-புளிநறளை
புல்லூறியம்-பனை
புவிதவிருக்கம்-பெருவாகை
புவிபீரு-தண்ணீர்விட்டான்
புழுக்கொல்லி-ஆடுதின்னாப்பாளை
புளகப்பால்-சிறுவாலுளுவை

புளி-புளியமரம், புளிப்பு, அவை புளிநறளை - புளிமா, புளிமாங்காய், புளிமாங்கனி,
புளிச்சங்காய்மரம்-ஓர்மரம்
புளிச்சக்கீரை-ஓர்பூண்டு
புளிநடலை-புளிநறலை
புளிமதுரை-புளிநறலை
புளியம்பாசி-ஓர் நீர்ப்பூண்டு
புளியறணை-ஓர்பூண்டு
புள்ளியம்-சிறுகுறிஞ்சா
புறம்பணை-முல்லை
புறவு-முல்லை
புற்கொடி-சுரை
புற்பதி-பனை
புற்போதி-பூவரசு
புற்றுளி-பனை
புனகாலி-காசா அல்லது காயாபாதிரி.
புன்கு-புனகு, புன்முருங்கை
புன்னுறவம்-சாறணை
புன்னாகம்-கோழிக்கீரை, புன்னை
புன்னிடா-தகரை

## பூ

பூகம்-கமுகு, கூந்தற்பனை
பூகதம்பம்-நிலக்கடம்பு
பூகரபம்-கையாந்தகரை
பூக்கம்-கமுகு
பூங்கரும்பு-செங்கரும்பு
பூசணி-பறங்கிக்காய்
பூடு-பூண்டு
பூட்கரம்-கோட்டம்
பூட்பராசன்-கருஞ்சீரகம்
பூதகாப்பான்-பீநாறி
பூதகேசனி-சடாமாஞ்சில்
பூதகேசரி-வெட்பாலை
பூதகேசி-காஞ்சுரை
பூதத்துணர்-புன்முருக்கு
பூதாசனம்-செங்கொட்டை
பூதம்-ஆல்
பூதவச்சம்-பீநாறி
பூதவம்-ஆல்மருந்து
பூதவாசம்-தான்றி
பூதவிருக்கம்-பெருவாகை
பூதவிருட்சம்-ஆல்
பூதகேசி-வெண்ணொச்சி
பூதன்-கடுக்காய்
பூதாங்குசம்-பேய்மருட்டி
பூதாத்திரி-கீழ்க்காய்நெல்லி
பூதிகாய்-வேளை
பூதிகம்-அகில் சாதிக்காய்
பூதிகாஷ்டம்-செம்புளிச்சை
பூதிலாகம்-வில்வம்
பூநிம்பம்-நிலவேம்பு
பூந்தாது-கோங்கு
பூந்தி-புன்கு

பூந்துணர்-புன்முருங்கை
பூபதி-மல்லிகை
பூப்பருத்தி-பூவரசு
பூமலேக்கிணம் - சங்கங்குப்பி, ஞாழல்.
பூமிநாயகன்-நிலவேம்பு
பூயாரி-வேம்பு
பூரகம்-மந்தங்காய்ப்புல்
பூரணி-இலவு
பூரம்-இரசகற்பூரம்
பூரிகா-அகில்
பூருண்டி-வேலிப்பருத்தி
பூலத்தி-மருதமரம்
பூல்-பூலா
பூவந்தம்-நிலாவிரை
பூவந்தி - புன்கு பொன்னாங்காய்மரம்

பூலாமரம்-கோளி.
பூவிந்து-நாதம், அப்பிரகம்
பூவை-சாகா, காயா
பூழியபலம்-பூசுணி
பூழில்-அகில்
பூழ்ந்தாம்-கோட்டம்
பூநாம்-பூவரசு
பூனார்-ஓர்மிருகம்
பூனைக்காஞ்சொறி - சிறுகாஞ்சொறி
பூனைக்காய்வேளை-ஓர் பூண்டு
பூனைக்காலி } ஓர்பூண்டு
பூனைக்கீரை } ஓர்பூண்டு
பூனைமடி-ஓர்பூண்டு
பூனைவணங்கி-குப்பைமேனி

## பே

பெக்கு-கள்ளிலோர்பேதம்
பெண்டுகம்-களற்சி
பெண்மரம்-புறவயிரமுள்ளமரம்
பெண்ணை-பனை, நீர்முள்ளி, பெண்மரம்.
பெத்திகாளம்-காஞ்சிரை
பெத்தல்-பெருங்குரும்பை
பெத்தி-கரிமுள்ளி
பெயர்தனம்-வேங்கை
பெரியாநங்கை-ஓர்பூண்டு
பெரியாநங்கை-ஓர்பூண்டு
பெருக்கு-பப்பறப்புளி
பெருங்காயம் - ஓர்மருந்து, கழிப்பெருங்காயம், யானைப் பெருங்காயம், இதன் பிரயோகம், காயத்தின் கீழ்ப்பார்க்கவும்.
பெருங்காயஞ் சொறி - காய்ஞ்சொரி.
பெருங்காரை-ஓர்செடி
பெருங்கிழங்கு - ஈசுரவேர், சீனப்பா, பெருங்குறட்டை, காக்கணக் கொவ்வை ஒருவகை பூண்டு.
பெருங்குறிஞ்சா-ஓர்பூண்டு
பெருங்கொன்றை-ஓர்மரம்
பெருஞ்சீரகம்-ஒருவகைபூண்டு
பெருஞ்செருப்படி-ஓர்பூண்டு
பெருநறுவிலி-ஓர்பூண்டு
பெருந்துத்தி-ஓர்பூண்டு
பெருந்துளசி-ஒருவகைப்பூண்டு
பெருந்தாமரை-ஓர்மரம்
பெருமகம்-பீநாறி, பெருங்கள்ளி
பெருமரத்துப்பட்டை - ஓர் மரப்பட்டை. இதன் கஷாயம் அசீரண வியாதிக்குக் கொடுக்கப்படுகின்றது.
பெருமருந்து-ஈசுரமூலி
பெருமவுலரி-பெருங்களி
பெருமல்லிகை-பேராமல்லி
பெருமுட்டை-பீநாறி
பெருமுசட்டை-ஓர்பூண்டு
பெரும்பசிறி-ஓர்வகைபூண்டு
பெரும்பயறு-ஓர்பயறு
பெரும்பாடு-ஓர்வியாதி
பெரும்பிளவை-இராசரணம்
பெரும்புளி-ஓர்பூண்டு
பெருவயிறு-ஓர்நோய்

பெருவலி-பெருநோய்
பெருவள்ளிக்கிழங்கு-ஓர்பூண்டு
பெருவாகை-பெருவாகை, வேலிப்பருத்தி.
பெருவாரிக்காய்ச்சல்-ஓர் கொள்ளை நோய்.
பெருவியாதி-குஷ்டம்
பெருவிரியன்-ஓர்பாம்பு

### பே

பேதி-கழிச்சல்
பேதிகாரி-ஆற்றுத்தும்மட்டி பேய்க்கொம்மட்டி, பேதியுண்டாகிற மருந்து.
பேதி - இரத்தம், நேர்வாளம், அவை, அன்னபேதி, மாம்சபேதி, சொர்னபேதி, அஸ்திபேதி, அதிசாரபேதி, சகஸ்திரபேதி.
பேதை-கள்
பேயாவிரை-ஆவிரை
பேயுமத்தை-மருளுமத்தை
பேய்க்கரும்பு-ஒருவகை கரும்பு
பேய்க்கொம்மட்டி - ஒருவகைக்கொம்மட்டி.
பேய்க்கொம்மட்டிக்காய் - ஓர்காய், இது ஒரு கிரந்தத்தில் மூடுசன்னிக்கு முக்கியமான மருந்தாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் வைத்தியர் பலமான பேதி மருந்தாய் யோசிக்கிறார்கள்.
பேய்த்தும்மட்டி - பேய்க்கொம்மட்டி, பேய்த்தும்பை, ஒருவகைத்தும்பை.
பேய்த்தும்மட்டி - பேய்க் கொம்மட்டி.
பேய்ப்பசலை-ஒருவகைப்பசலை
பேய்ப்பலவன்-படுவன்கீரை
பேய்ப்பால்-ஒருவகைப்பால்
பேய்ப்பீர்க்கு-ஒருவகைப்பீர்க்கு
பேய்ப்புடல்-புடோல்
பேய்ப்புடல் - கணைப்புல், ஒட்டுப்புல்.
பேய்மருட்டி-ஓர்வகைபூண்டு
பேய்மாட்டி-புளிநறளை
பேய்முகட்டை-ஒருவகைபூண்டு
பேய்முன்னை-ஒருவகைமரம்
பேரத்தி-கறிமுள்ளி
பேராமணக்கு-ஓர் ஆமணக்கு
பேராமல்லி-ஓர்மல்லி

பேராமுட்டிவேர்-ஓர்வேர், இதன் கஷாயம் சுரங்களில் லகுவாய் வியர்வை பெருக்கம் உண்டாக்குதற்கு கொடுக்கப்படும், மருந்தாயிருக்கின்றது.
பேரீகம்-வட்டத்திருப்பி
பேரீந்து-ஒருவகைமரம்

### பை

பைந்திணை-கருந்திணை

### போ

பொக்கணப் பிச்சி - முடக்கொத்தான்
பொக்கணம்-பெருமருந்து
பொங்கர்- இலவு
பொரிப்பூண்டு - கப்பான் பூண்டு, வயற்சுள்ளி.
பொரிமலர்-புன்கு
பொருணி-கள்
பொருகள்- தும்பை
பொரும்பி-சுழலாவாரை
பொற்காசு-கொள்ளு
பொற்றுது-பொற்றலைக் கையாந்தகரை, அதிரும்பை.
பொன்முகட்டை-பங்கம்பாழை

பொன்னங்காணி - ஒருவகை மருந்துப்பூண்டு, பொன்னங்காணிக்குப் புளியிட்டுக் கடைந்தால் அன்னைக்கெல்லாம் தித்திக்கும்.

பொன்னங்கொட்டை-பூவந்தி
பொன்னம்பவளம் - செய்க்கொட்டான்.
பொன்னவிரை-ஒருவகைபூண்டு

### போ

போசிவல்லம்-சந்தனம்
போசம்-அகத்தி
போஸ்தக்காய் - உலர்ந்தக்சகசாய் நெற்று
போதகம்-காஞ்சிரை, பசளை
போதி-அரசு
போந்து }
போந்தை } பனை
போம்பல்-நீர்க்கடம்பு
போல்-மூங்கில்
போனம்-நிலக்கடம்பு

### ம

மகதி }
மகதை } திப்பிலி
மகரகந்தகம்-தேமா
மகரம்பூ-வெந்தயம்
மகதவாழை-காட்டுமல்லிகை
மகருதம்-கொடிவேலி
மகாசகா - வாடப்பூவுள்ள மருதோன்றி
மகாசுவேதம்-சிறுவாலுளுவை
மகாநிம்பம்-பெருமரம்
மகாதுருமம்-அரசு
மாநீலம்-கையாந்தகரை
மனபலம்-கொளிஞ்சி
மகாபூ-பெருஞ்சீரகம்
மகாபெலா-பேராமுட்டி
மகாமேதை-மருளுமத்தை
மகாவல்லி-வில்வம்
மகாவிருக்கம்-சதுரக்கள்ளி
மகாவிருத்தி-சேம்பு
மகிழ்-ஓர்மரம்
மகோதரம்-நீர்நோய்
மகோற்பலம்-தாமரை
மக்கம்-எருக்கு
மங்கல்லியம்-சந்தனம்
மசக்காரம்-மூங்கில்
மச்சி-பூனைக்காலி
மச்சியம்-கடுகுரோகணி
மச்சியாச்சி-பொன்னங்காணி
மஞ்சலிக்காரன்-உருத்திரசடை
மஞ்சள்-ஓர்வகைபூண்டு
கஸ்தூரிமஞ்சள்-ஓர்பூண்டு, இதன் கஷாயம் நீர்க்கட்டு பிள்ளைப்பேறு மணிக்குடல் கட்டுமுதலாகிய வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது.
மஞ்சட்காமாலை-ஓர்கண்ணோய்
மஞ்சணத்தி-நுணவு நுணா
மஞ்சரி-நாயுருவி
மஞ்சனி-வேலிப்பருத்தி
மஞ்சா-இலைக்கள்ளி
மஞ்சாடி-ஓர்வகைமரம்
மஞ்சாரி-கஞ்சாங்கோரை
மஞ்சிகம்-தாளிக்கொடி
மஞ்சிகை-கையாந்தகரை, தாளி
மஞ்சிட்டம்-மஞ்சாடி
மஞ்சிட்டி-ஓர்செடி
மஞ்சிபலை-வாழை
மஞ்சிலிக்காரன்-உருத்திரசடை
மஞ்சிறு-கையாந்தகரை
மஞ்சூரம்-கடலை
மடல்-ஈந்து, கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழை அலகு.
மடவை-தணக்கு
மடிதாழை-நோய்வயிறு
மட்டு-கள்
மணக்கு-இருவாட்சி
மணலி-மருக்கொழுந்து
மணி-அரதனம், நவரத்தினங்கள், அவை, 1 - கோமேதகம், 2 - நீலம், 3-பவளம், 4-புட்பராகம், 5 - மரகதம், 6 - முத்து, 7-

செம்பு, 8-வைடூரியம், 9-வயிரம்.
மணிப்புங்கு }
மணிப்புளகு } நெய்க்கொட்டான்
மணியாமணக்கு - பறங்கி யாமணக்கு
மணிவீசம்-மாதளை
மண்டபம்-ஆமணக்கு
மண்டலமட்டி-சிற்றிலுப்பை
மண்டலி - ஓர்வகைபாம்பு, அவை, இரத்தமண்டலி, சிதமண்டலி.
மண்டிதம்-சிறுகீரை
மண்ணிலவேந்தன் - அரசு, வெற்றிலை.
மண்ணை-வாலுளுவை
மண்தைலம் - ஓர்தைலம், இது பசோராகாட்டிலிருந்தும், ருஷிதீபங்களிலிருந்தும், ஆவாராச்சியத்திலிருந்தும் கொண்டுவரப்படுகின்றது.
மண்மலி-மருக்கொழுந்து
மதமடு-வெள்வெண்காயம்
மதமத்தம்பூ-ஊமத்தை
மாதலிங்கம்-அமுக்கிரு
மதலை-கொன்றைமரம்
மதாபன்னி-வட்டத்திருப்பி
மதனம்-மருக்காரை
மதனாலயம்-தாமரை
மதாலம்-கொன்றை
மதிபதிச்சம்-வாலுளுவை
மதிவாம்பல்-சீந்தில்
மது-அசோகு, அதிமதுரம்
மதுகம்-காஞ்சிரை
மதுதிருணம்-கருப்பு
மதுதூதம்-மாமரம்
மதுபருணிகை-அவுரி
மதுபன்னி-சீந்தில்
மதுமல்லிகை-அடுக்குமல்லிகை
மதுரசம்-கொடிமுந்திரிகை
மதுரசம் - கொடிமுந்திரிகை செஞ்சந்தனம்
மதுரவல்லி-சர்க்கரைவல்லி
மதுவீசம்-மாதளை
மதுகம்-இலுப்பை
மதூலி-அசகமதுரம், மாமரம்
மத்தம்-ஊமத்தை
மத்தனலிங்கம்-மருக்காரை
மத்தாடி-கருஊமத்தை
மத்தியந்தகம்-மாமரம்
மத்தை-ஊமத்தை
மந்தாரசு-வெள்ளெருக்கு
மந்தாரசம் - வெம்பரம், முணமுருக்கு
மந்தாரகாசம்-ஓர்வகைநோய்
மந்தாரை - ஓர்வகைமரம், அவை, அத்தி மந்தாரை, காட்டுமந்தாரை, கொக்குமந்தாரை, செவப்பு மந்தாரை, வெள்ளை மந்தாரை.
மந்திரி-திராய்
மம்மஉடி-சிற்றுமுட்டி
மம்மாயி-மாங்கிஷபேதி
மயிலம்-குப்பைமேனி
மயிலம்-செம்பருத்தி
மயிலெண்ணெய் - ஓரெண்ணெய், இது கீல்பிடிப்பு, ஓர்வித பாரிசவாயு இவைகளுக்கு மேல்பூச மருந்தாக வழங்கப்படுகின்றது.
மயிலை-இருவாட்சி
மயிலைக்கந்தி-மருதோன்றி
மயில்-செங்கத்தாரி
மயில்துத்தம்-அருகி
மயில்முனிவன்-அகத்தி
மயூரகம்-காயுருவி
மயூரம்-மயிற்கொன்றை
மரமஞ்சள் - ஓர்மஞ்சள், இது சிரசுக்கு குளிர்ச்சிக்குச் செய்யப்படும் தயிலத்தில் சேர்க்கப்படுகின்றது.
மால்மருள்-அரலை
மரவம்-குங்குமம்

மரவுப்பு-ஓர்உப்பு. இது சில மூலிகைகளின் சாம்பலிலிருந்து செய்யப்படுகிறது. இதனோடு கூடுள்ள விதைகளைச் சேர்த்துத் திராவகமிறக்கி ஜலபேதி மருந்தாக வழங்குகிறது.
மரா - வெண்கடம்பு, ஆச்சாமரம், அரசமரம்.
மராங்கு-மருக்கரை
மராட்டிமொக்கு - ஓர் மொக்கு, இது கொதியைத் தணிக்கிற சாந்தமாக்குகிற மருந்தாகவும், கொஞ்சம் லாகிரி யுள்ளதாகவுமிருக்கின்றது. பேதியைக்கட்டலேகியத்தில் சேர்க்கப்படுகின்றது. பாலிலும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. ஒருவேளைக்கு ஒரேமொக்கு போதுமானதாயிருக்கின்றது.
மராமரம் - அரசு, ஆச்சா, வெண்கடம்பு.
மராளம்-மாதளை
மரிசம் }
மரீசம் } மிளகு
மரீசி }
மகராம்பூ - உஷ்ணம், தாகமும் போம்.
மகாமேதை-விஷசுரம்போம்
மகிழம்பூ - அரோசிபோம், அனல் விரகமும் உண்டாம்.
மகிழ்வித்து - மலம், விஷம், விழிதோஷம் வெப்பும்போம், சீதளம், தாது, தேகவழகு, பலமும் உண்டாம். கலிக்கத்திற்காகும்.
மகிழம்பட்டை - பல்நோய் போம்.
மஞ்சட்கிழங்கு, ஐயம், கடிவிஷம், தலைவலி, நீரேற்றம், பித்தோஷம், பீனிசம், புலால்நாற்றம், மந்தம், மேகம், வலிவாதம், வாந்தி, விரணம், வீக்கம்போம். தீபனம், புருஷவசியம், பொன்னிறமும் உண்டாம்.
மஞ்சட்குளியல் - ஐயம், தூர்க்கந்தம், முகவருத்தம், வியர்வும் போம்.
மஞ்சள் கச்சியிளநீர்-கபம் கோபம், பழஞ்சுரம், பித்தமும் போம்.
மஞ்சள்சோளம் - பலகரப்பான் உண்டாம்.
மஞ்சள்வஸ்திரம் - காசம், நமைச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு, விஷசுரம், வெப்பும்போம்.
மடலரிதாரக்கட்டு-காய்ச்சல், குஷ்டம், நடுக்கலும்போம்.
மடலரிதாரம் - ஆராதபுண், இருமல், ஈளை, சயம், காமகரப்பான், கோழை மலமும்போம்.
மடவைமீன் கறி - ஊரல், கரப்பான், குடல்வாதம், சூலை, மந்தம், முளைமூலம், வாதமும் உண்டாம்.
மடுமீன்-வாதபித்தம்போம்
மடையான்கறி - ஐயம், கரப்பான், சொறிசிரங்கு, வாகனமும் உண்டாம்.
மட்டுப்பால் - அரோசி, தலைவலி, நீரேற்றம், வாதம், வாந்தியும் போம்.
மட்டைநீர் - கிரிச்சிரம், நீரிழிவு, பவுத்திரம், புண், வயிற்றுக் கடுப்பும்போம்.

மணக்குழம்பு பூசுதல் - அணுக்கிருமிபோம். இன்பம், உதராக்கினி, நாதவிந்து, பலமும் உண்டாம்.

மணத்தக்காளிக்காய்-கபம், தணல், வாதமும்போம். மல மிளகல் உண்டாம்.

மணத்தக்காளியிலை - வாய்க்கிரந்தி வேக்காடும்போம்.

மணத்தக்காளிவற்றல் - இளைப்பும், வாந்தியும் போம். நீர்பேதியுண்டாம். பிணியாளர்க்காகும்.

மணப்பாகு-அருசி, பித்தம், வாதமும்போம்: அனல் உண்டாம்.

மணலிக்கீரை - கபம், கிருமி, சீதநோய், பயித்தியம், வாதமும் போம்.

மணல்-அதிசாரதாகம், சகலதாகம், சீதளதாகம், கிலையாத் தாபம், மகாசுரம், மந்ததாகம், மந்தபிரதாபமும்போம்.

மணிச்சம்யாவரிசி - நீரிழிவுபோம். சுகம், தேகவளர்ச்சி, பசியும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

மணிப்புறுக்கறி-ஐயம், சயம், குன்மரோகம், வாதக்கட்டும் போம். பத்தியத்திற்காகும்.

மண்டூரம் - அஸ்திசுரம், ஐயம், சுவாசம், சோபை, விஷபாகம், வீக்கமும்போம். இரத்தம், தாதும் உண்டாம்.

மந்தாரைப்பூ - தேகக் கொதிப்பு போம். இராசவசியம், கண்ணுக்குக் குளிர்ச்சி, தேகக் குளிர்ச்சியும் உண்டாம்.

மந்திஷ்கு-இரத்தபித்தம் போம்

மரியன்மீன்கறி-ஐயம், கரப்பான், சோபம், வயிற்றுள்வாதம் வாதபித்தமும்போம்.

மயிர்மாணிக்கம்-சயரோகம், மேகம், மேகவெட்டை, விரணமும் போம்.

மயிலிறகுச் சாம்பல்-வாந்தி, விக்கலும்போம்.

மயில்கறி-இரத்தவாயு, சிலேற்றுமம், சூலைப்பிடிப்பு, பித்தமும் போம். அனல், பசியும் உண்டாம்.

மயில்நெய் - நரம்பு முடக்குபோம். செக்மகஞ் சிவக்கும்.

மயில்விசிறி-குன்மம், சன்னி, தலைசுழலல், பித்தம், வாததோஷம், விக்கல், விஷம், வியர்வையும் போம். அனல் புத்தியும் உண்டாம்.

மரகதம் - சகலதோஷ சக்தி, புண் பூதபசாசு, மதுமேகம், விஷமும்போம். தாதுதீபனம், பலமும் உண்டாம்.

மரக்காரைப்பழம் - உதிர ஊதல், சுரம், பொருமல், மயக்கம், வயிறூதலும்போம். அறிவு உண்டாம். கலிக்கத்திற்கும், நசியத்திற்குமாகும்.

மரைக்காரைவேர்-இரத்த பித்தம், கரப்பான், சிலேட்டுமம், சீதக்கடுப்பு, திரிதோஷம், மாந்தகணம், வாதமும்போம். வாந்தியுண்டாம்.

மரநாயிறைச்சி-கிரந்தி, சுரம், சூலைவாதம், மேகம், விரைவாதமும் போம்.

மரமஞ்சட்கிழங்கு-அருசி, கணச்சுரம், கண்மூலம், சுரம், சுவாசமும்போம்.

மரவள்ளிக்கிழங்கு-அனல், பித்தவாயு, மந்தமும் உண்டாம்.

மரியங்காய் - அரோசகம், சுரம், வாய்க்கசப்பும்போம்.

மருக்கொழுந்து-அனல், கபம், காரம், கண்தோஷம், கைப்பு, சூடும் போம். பசியுண்டாம்.

மருள்கிழங்கு-ஐயம், காதுவிரணம், தொண்டைக்கட்டு, மகோதரம், மூலங்கள், பலவீக்கமும்போம். பசியுண்டாம்.

மருதநிலம் - வாதமுதலாகிய முப்பிணிகளும்போம்.

மருதமரம்-கிருமி, குஷ்டம், சுரத்தயக்கம், தாகம், நீரிழிவு, பிரமேகம், மயக்கம், வயிற்றுவலி, வறட்சூலையும்போம்.

மருதோன்றி - பருவு, பீலிகமும் போம்.

மருதோன்றிப்பூ-உஷ்ணம், ஏவல், கபாலபீநசம், குஷ்டம், சிரங்கு, சூனியம், தேமல், பெருஞ்சொறி, மேகவைப்பும்போம். கல்விக்கு வேண்டிய பலமும், தீபனமும் உண்டாம்.

மருதோன்றிவித்து - சூனியம், பில்லிப்பேய் பூதமும் உண்டாம்.

மருதோன்றிவேர் - இரத்த பித்தம், சோணித தோஷமும் போம்.

மருவு - உஷ்ணம், சுரம், தாகமும் போம். பலம் புஷ்டியும் உண்டாம்.

மருளூமத்தை-சில விஷங்கள், சீதசுரம், நீரேற்றம், மந்தம், வாயுவும்போம்.

மலர்க்கொன்றை-புழுபோம்

மலர்க்காய் கெந்தம் - அபானவாயு, எரிவு, கபம், கபாலத்தின் சூடு, காந்தல், நாற்றம், பலம், பித்தம், பிரமை மேகமும்போம்.

மலாக்காய் - சாம்பிராணி, அஸ்திமேகம், இரத்தமேகம், சுக்கிலமேகம்போம். தசைமேகம் தாபம் மேகவாய்வும்போம்.

மலைத்தாங்கிப் பூண்டு - காதுவலி, சிரசு முதலிய விடங்களில் கனத்தல், சுரம், வாதம் 18-ம்போம். வாதசயித்தியமும்போம்.

மலைத்தேன் - ஐயம், அக்கிப்புண், இருமல், ஈளை, உடல்நோய், விக்கல், வெப்பும்போம். சங்கீதம் பாட சாரீரமும், பசியும், உண்டாம். மருந்தனுபானத்திற்காகும்.

மலைப்பாலைமரம்-கருங் கரப்பான், குன்மம், பக்கசூலை, மந்தம், வலி, வாந்தி, விக்கலும்போம்.

மலையாத்தி-பேதிக்கட்டுண்டாம்

மலையிலுப்பை-வாதம்போம்

மலைவேலம்-அரோசகம், உட்டினம், தாகசுரம், திரிதோஷம், நாவறட்சி, நீர்க்கடுப்பு, பித்த வறட்சியும்போம்.

மலைவாழைக்காய் - வாதம் உண்டாம்.

மலைவேப்பமரம்-மலட்டுப்புழு, வயிற்றுவலி, வாய்வும்போம்.

மலைவேப்பம்பிசின்-சலபேதி, வாதகரப்பான், மேகக் கட்டியும்போம். தாது உண்டாம்.

மல்புத்தஞ்செய்தல்-கபவாதம், சூலை, மலம், வலியும்போம். பசி பலம், மெய்யிறுகலும், உண்டாம்.

மல்லிகைஇலை - சவுக்கார எண்ணை போம்.

மல்லிகைச்சம்பாவரிசி- கண்ணழல், கரப்பான், மேகமும்போம். தேகபலம் உண்டாம்.

மல்லிகைநாவின் குணம் - குன்ம அரோசகம், உஷ்ணம், பில்லி, சூனியம், மேகம், வெடிகிரந்தியும் போம்.

மல்லிகைப்பூ-அனல், கபம், கண், பிரமை, சூனியமும்போம். இலட்சுமி வசியம், சூடு, போகமும் உண்டாம்.

மழைநீர்-அறிவு, எவ்வுயிர்க்கும்விந்துகுளிர்ச்சி, சீதம், தெளிவு உண்டாம்.

மலைத்தேன்-இருமல், கபம், கண்ணிலுள்ள பூச்சி, கரப்பான், புண், புரை புழுவெட்டுப்போம். தீபனம் உண்டாம்.

மனைப்புருக்கறி - கரப்பான், சுக்கிலம், சொறியும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

மனோசிலை - அஜகல்லி, இரைப்பு, காய்ச்சல், சிலந்தி, நடுக்கலும் போம்.

மரு-மருக்கொழுந்து

மருகு-மகாவாளை

மருச்சகம்-கொம்மட்டிமாதளை

மருதம்-மருது

மருதாணி-ஓர்செடி, இதன் பூ, இலை, கொழுந்து, இவைகளிலிருந்து சாரமெடுத்து குஷ்டரோகம், சரீரம் இளைத்துப்போகல், இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கிறார்கள். மகமதுசாதி பெண்மக்கள் கைநகங்களுக்கு வருணமிட்டுக்கொள்ளுகிறார்கள்.

மருத்திப்போதி-நாயுருவி

மருந்து-அமுதம், ஔஷதம்

மருபுகா-வாழை

மருப்பு-இஞ்சி

மருவகம்-மருக்காரை

மருவாரி-பாலை

மருளங்கிழங்கு - ஓர்கிழங்கு, இது நாட்பட்ட இருமல் காசவியாதிக்கு லேகியமாகச் செய்துக் கொடுக்கப் படுகிறது. இந்தப் பூண்டின் கொழுந்தின் சாறு குழந்தைகளுடைய தொண்டையிலிருக்கிற சளியைக் கழிக்க குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

மருள்-மறளக்கிழங்கு, உன்மத்தம் ஓர்வகைப்பூண்டு.

மருளூமத்தை-ஓர்ஊமத்தை

மரை-தாமரை

மரக்கடி-பூனைக்காலி

மலயம் ⎫
மலயசம் ⎭ சந்தனம்.

மலாசு-சிறுபூளை

மலைகலக்கி-ஓர்வகைப்பூண்டு

மலைக்கடுகு-ஓர்வகைக்கடுகு

மலைச்சர்க்கரை:- வள்ளி, ஓர்வகைப் பூண்டு

மலைதாங்கி-பங்கம்பாழை

மலைத்தும்பை-ஓர்வகைப்பூண்டு

மலைத்துவரை-ஓர்வகைதானியம்

மலைப்பச்சை-ஓர்வகைமரம்

மலைப்பருத்தி-ஓர்வகைசெடி

மலைமல்லிகை-ஓர்வகைமரம்

மலைமுள்ளங்கி-ஓர்வகைபூண்டு

மலையத்தி-அசமந்தம்

மலையாமணக்கு-ஓர்வகைசெடி

மலையாரம் ⎫
மலையிசம் ⎭ சந்தனம்

மலையிருவேலி - ஓர் புல், சைலகம், இருவேலி

மலையினுச்சி-மாங்கிஷபேதி

மலையின்முனிவன்-மிளகு, அகத்தி

மலையீந்து-ஓர்மரம்

மலைவீரியம்-அன்னபேதி

மலைவேம்பு-ஓர்மரம்

மல்புறு-கர்போகரிசி

மல்லகம்-சிறுவாலுளுவை

மல்லிகம்-மல்லிகை

மல்லிகை-ஓர்செடி, அவை, அந்தி மல்லிகை, ஆற்று மல்லிகை, ஈர்க்கு மல்லிகை, ஊசிமல்லிகை, காட்டுமல்லிகை, குடமல்லிகை, கொடிமல்லிகை, சிறுமல்லிகை, நாக மல்லிகை, பவழ மல்லிகை, போரமல்லிகை, மலை மல்லிகை, வாடாமல்லிகை.

மறுக்காரக்காய் - ஓர்வகைக் காய், இதை வைத்தியர் இடித்து ஒரு வராகனெடை வாந்திமருந்தாகக் கொடுக்கிறார்கள். இதன்வேர்ப்பட்டை குடிநீர் வயிற்று நோய்களுக்குக் கொடுக்கப் படுகிறது.

## மா

மா-ஓர்மரம்
அவை,
காட்டுமா, புளிமா, தேமா

மாகசம்-கையாந்தகரை

மாகதி - திப்பிலி, முல்லைக்கொடி, மிளகுக்கொடி.

மாகந்தம்-மாமரம்

மாகுத்தம்-பூனைக்காலி

மாகாளிக்கிழங்கு-மயக்கம்

மாங்காய் - அறிவு, பசியும்போம். ஆருப்புண், கிரந்தி, தாதுநஷ்டம், பல்கூசல், சொல்குளறுதல், வாதமுண்டாம்.

மாங்கிஷங்கலந்து சமைத்த அன்னம்-அதிகபலம், தாதுமந்தமும் உண்டாம். கபம் பித்தஞ்சமன் விரணநோய்க்காகாது.

மாங்கிஷபேதி-அழுகு, கபம், சூலை, சோபை, பிலிகைக் கட்டியும் போம். துன்மாங்கிஷம், கரைதலுண்டாகும்.

மாங்கொட்டை - இரத்தக் கடுப்பு, சீதம், மூலக்கொதிப்பும்போம்.

மாசிக்காய் - அச்சரம், கண்ணோய், பல்மேகம், வெப்பும்போம். தேகபலும் உண்டாம்.

மாசிப்பத்திரி - கனல், தேகநோய், வாய்வும்போம். துவர்ப்பு, புளிப்பும் உண்டாம்.

மாஞ்சிரோகணி-கண்புகைபோம்.

மாடப்புறாக்கறி - வர்தம் போம். தாது பசியும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

மாட்டிறைச்சி - பித்தம், பித்தசுரமும்போம். வாதசீதளம், உண்டாம்.

மாணிக்கம் - சகலசந்தி, சந்நிதோஷம், சுரம், தாகம், நேத்திரநோய், மேகமும்போம். பசியும் உண்டாம்.

மாதுளைச் சமூலம்-அதிசாரம், இரத்தமேகம், கிராணிகள், சீதம், ஜலமேகம், தாகம், வாந்தியும் போம். தாது உண்டாம்.

மாதுளம்பழம்-கசப்பு, காதடைப்பு, கோழை, சர்த்தி, சந்நியாசம், தாகம், நெஞ்செரிவு, பித்தம், மந்தம், மயக்கம், மலட்டுநோய், வாந்தி, வாய்நீருறல், விக்கல், வெப்பும்போம். அழகுண்டாம்.

மாதுளம்பிஞ்சு- இரத்தக் கழிச்சல், சலக் கழிச்சல், சீதக் கழிச்சல், மலக்கழிச்சலும்போம்.

மாதுளம்பூ-அனல், இரத்தமூலம், கடுப்பு, பித்ததோஷம், வாந்தியும்போம். இரத்தபுஷ்டி, பலமும் உண்டாம்.

மாதுளம்வித்து - சுக்கில தோஷம், மேகக்கடுப்புபோம். சுக்கிலக்கட்டுண்டாம்.

மாந்தப்புல்-அசீரணம், சுரம், மந்தமும்போம். பேதிக்கட்டு உண்டாம்.

மாமரவேர் - சீதரத்தம், வயிற்றுக் கடுப்பு, வாந்தியும்போம்.

மாமலை-சோபை, துயிர்பிராம்பல், நீர்க்கட்டு, பாண்டுபோம்.

மாம்பலம்-தீபனம்போம். கிரந்தி, தம்பனம், தாதுவிர்த்தி, தினவு, நெஞ்செரிவு, வாதகரப்பன், விழிநோயும் உண்டாம்.

மாம்பிஞ்சு-அரோசி, கபம், பித்தம், மந்ததோஷம், வாதம், வாந்தியும்போம்.

மாலை-இளநீர் கொள்ளல் புழுசாகும்.

மாலைக்குளியல் - பசிபோம். நோய் உண்டாம்.

மாலை - வெய்யல்காயல், அநேக வியாதிகள் போம்.

மாவல்லிக்கிழங்கு - அனல், கபம், பித்தமும் போம். தீபாக்கினி வாய்வு உண்டாம்.

மாவுலிங்கப்பட்டை - கல்லடைப்பு, ஜந்நி வாதமும்போம்.

மாவுலிங்கமரம் - சுரம், தோஷம், வாதம், விஷங்களும்போம்.

மானிறைச்சி - தினவு, வாதமும் போம். கண்புகை, கபநோய், கழல், வாதம், தொந்தநோய், பித்தமும் உண்டாம்.

மான்செவிக்கள்ளிப்பால்- இரணம், கிரந்தி, சொறி, பொரிகிரந்தி, மலக்கட்டு, வறட்சியும் போம். பேதி உண்டாம்.

மானிறப் பசும்பால் - முப்பிணி போம்.

மாங்கொட்டை-மாம்பழத்தின்கொட்டை, மாங்கொட்டையின் பருப்பை யுலர்த்தித் தூள்செய்து 20-முதல் 30-கிறெயின் வரைக்கும் தேனில் அல்லது வெல்லத்தில் சேர்த்துக் கொடுத்தால் நாகப்பூச்சிகளை வெளியிலாக்க உபயோகப்படும். மூலத்தில் நின்று இரத்தம் போகிறதற்கும் மாதவிடை அதிகமாய்ப் போகிறதற்கும் கொடுக்க நிற்கும்.

மாசிக்காய் - ஓர் காய், மருந்துக்கு உபயோகமாய் எடுக்கிற மாசிக்காய் உருட்சியும் ஒரு பெரிய ஜாதிக்காயின் பருப்பும், வெளியின மஞ்சள்நிறமும் அதின் பக்கத்தில் துவாரமும் உடையதாய் இருக்கவேண்டும்.

சுரமில்லாமலாவது நெடுநாளாவது இருக்கப்பட்ட வயிற்றுப்போக்குக்கு ஒரு தரத்துக்கு 15-கிறெயின் மாசக்காயின் பொடியும் அரைகிறெயின் அபினும் தேனில் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

இப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கலாம். நெடுநாள் சென்ற வயிற்றுக் கடுப்புக்கு 4-திராம் மாசக்காயை அவுன்சு கொதிக்கிற தண்ணீரிலிட்டு ஆறினபின் வடிகட்டி 1-அல்லது ஒன்றை அவுன்சுவீதம் அறை கிறெயின் அபினுஞ் சேர்த்துத் தினந்தோறும் இவ்விதம் மூன்றுதரங் கொடுக்கவேண்டும். அந்த அளவுகள் பிராயமானவர்களுக்கே தகுந்தது.

நெடுநாளாய் இருக்கப்பட்ட மேகவெள்ளைக்கும் ஸ்திரீகளின் மேகவெள்ளைக்கும் சரசக்காவன்பொடியை தினம் 22-தரம் வேளைக்கு 20-கிறெயின் வீதம் கொடுத்தால் நிறுத்தும் மேற்படி மாசக்காயை நேர்மையாய் நுணுக்கி மூக்கினுள் ஏற்றினால் அதினுள்ளிருந்து இரத்தம் போகிறதைப் பிடிக்கும்.

நோவுள்ள பருத்த மூலமுளைகளில் அதிகசூடும் சிவப்பும் இல்லாதிருந்தால் 1-அவுன்சு மாசக்காயை நேர்மையாய் நுணுக்கி 3-அவுன்சு நெய்யில் நன்றாய்க்கலக்கி தினம் இரண்டுநேர மிடவேண்டும். நோவு மிகுதியாய் இருக்கில் மேற்சொன்ன சேர்வையில் அரைதிராம் அபினைக் கூட்டவேண்டும். மலம் போகும்பொழுது மலக்குடல் தள்ளுகிறதற்கும் மேற்படி சேர்வையை தள்ளின குடலை உள்ளாக்கினபின் அதன்மேல் அபின் அன்றி இடவேண்டும். குழந்தைகளுக்கானால் முன்சொன்ன மாசக்காய்ச் சேவையில் பாதிபோதும்.

குளிர்சுரம் முறைக் காய்ச்சல் இவைகளுக்கு கீழ்சொல்வது போல் செய்துகொள்ள வேண்டும். முதலாவது ஆமணக்கெண்ணையாவது வியாதிக்காரன் பலவானா யிருக்கில் நேர்வாளமாத்திரையாவது கொடுத்து வயிறு சுத்தியானபின் 12-கிறெயின் மாசக்காயின்தூளை சிரியாத்து குடிநீர் ஒன்றை அவுன்சில் சேர்த்து ஒருமணி நேரத்துக்கொருதரம் முறைக்காய்ச்சல் வருகிற சமயத்துக்கு முன் நாலைந்துதரம் கொடுக்கவேண்டும். 5-முதல் 12-வயசுவரையுமுள்ள குழந்தைகளுக்கு மேற்சொல்லிய அளவிற் பாதி கொடுக்கலாம். இந்த சுரங்களும் மற்ற குளிர் சுரங்களும் ஔஷதத்தினாற் சவுக்கியப்படாதிருந்து வியாதிக்காரன் முக்கியமாய் ஈரம் கசியப்பட்ட தாழ்ந்த இடங்களினால் அவன் சவுக்கியமுள்ள ஈரமற்ற காற்றிருக்கும் உயர்ந்த பூமியிலாவது கடற்கரையிலாவது மாறியிருந்தால் மிகுந்தன்மையாம். இப்படிப்பட்ட வியாதிகளில் ஸ்தலமாறியிருக்கிறது அதிக உத்தமம்.

எட்டிக்கொட்டை காக்காய்க்கொல்விரை அபின் இவைகளை நஞ்சாகத் தின்றிடுகில் உடனே வாந்திக்குக் கொடுத்து ஒரு அவுன்சு மாசக்காய்த்தூளை 12-அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரிலிட்டு ஆறினபின் வடிகட்டி அதில் 4-அவுன்சுவீதம் 10 - அல்லது 15 - மினிட்டு நேரத்துக்கொருதரம் கொடுக்கவேண்டும். வியாதிக்காரன் அபினையாவது ஊமத்தையாவது தின்றபின் தலைமயக்கம் அதிகமாயிருக்கில் அவனை இருக்கச் சம்மதியாமல் அங்குமிங்கும் நடத்திக் கொஞ்சம் காரமான காப்பித்தண்ணீரைக் கொடுக்க வேண்டும். காப்பித்தண்ணீர் செய்யும் விபரம் காப்பிக் கொட்டையை வறுத்துப் பொடித்தூளை ஒரு புட்டி தண்ணீரிலிட்டு 10-மினிட்டு நேரம் அடுப்பில் வைத்துக் காய்ச்சி ஆறினவுடன் வடிகட்டிக்கொள்ளவேண்டும்.

மாசிப்பத்திரி-ஓர்பூண்டு

மாசகம்-பீர்க்கு

மாச்சி-பாம்புகொல்லி

மாஞ்சில்-சடாமாஞ்சில்

மாடப்புறாக்கண்ணிறம் - ஓர்பூண்டு அமுக்கிரா

மாட்டம்-உழுந்து

மாதம்-காம்பு

மாதளை-ஓர்செடி, கொடிமாதளை, சிதளங்காய், சிதளக்கொடி, எலுமிச்சை, கொம்மட்டிமாதளை, தாறுமாதளை, கொடிமா

தளை, பூமாதளை, வயல்மாதளை, ஓர்பூண்டு, வெள்ளைமாதளை.

மாதளைமரத்தில் இரண்டு பக்கங்கள் ஔஷதத்துக்கு உபயோகப்படும். அவை எவையெனில் வேரின் தொலியும்பழத்தின்மேல் தொலியுமாம். வயிற்றுக் கழிச்சலுக்கும், பழகின வயிற்றுக் கடுப்புக்கும், மேற்படி பழத்தின்தொலி 2-அவுன்சு முக்கால்புட்டித் தண்ணீரில் வேகவைத்து அரைபுட்டியாக்கிமனம் 3-4-தரம் அரை அவுன்சு வீதம் கொடுக்கவேண்டும். கொஞ்சம் சதைத்த கிரும்பாவது கறுவாப்பட்டையாவது மேற்படி கஷாயத்திற் சேர்த்துக்கொண்டால் உத்தமம். இந்தக்கஷாயம் முக்கியமாய் இத்தேசத்தாருக் குண்டாகும் வயிற்றெரிச்சலுக்கு உபயோகமாயிருக்கும்.

தொண்டை நோய்க்கு முன்சொன்ன தனிக்கஷாயம் அரைப்புட்டியில் 1-இரும் படிக்காரமும் சேர்த்து வாயிலிட்டு அலம்பவும் இது உபஸ்தத்திலுண்டாகும் வடியல்களுக்கு வெளியிலிடும் கல்ல ஔஷதமாயிருக்கின்றது.

வயிற்றில் உண்டாகும் கடாபோலிருக்கும் நாகப்பூச்சிக்கு 2-அவுன்சு மாதளைவேரின் தொலியை 4-புட்டித் தண்ணீரில் வேகவைத்து அரை புட்டியாக்கி இதில் 2-அவுன்சு எடுத்து காலையில் உபவாசமாயிருக்கும் பொழுது கொடுத்து மறுபடி அரைமணி நேரத்துக்கு ஒரு தரம் கொடுக்கவேண்டும். இப்படி நாலுதரம் கொடுத்தபின் பேதிக்கு 1-அவுன்சு ஆமணக்கெண்ணை கொடுக்க வேண்டும். சாதாரணமாய் 12-மணி நேரத்துக்குள் நாகப்பூச்சிகளை வெளியே போக்கும். இந்த வகைக்கு இந்த ஔஷதத்தைப் பார்க்கிலும் மிகுந்த பலனுடையதாய் வேறே ஔஷதங்கள் அரிதாய்க் காணும்

மாதவி-குருக்கத்தி
மாதி-மா
மாதிபோதி-நெருஞ்சில்
மாதிரி-அதிவிடையம்
மாதுங்கம்-கொம்மட்டிமாதளை
மாதுலம்-ஊமத்தை
மாதுலுங்கம் }
மாதுடங்கம் } மாதளை
மாதேவி-சீதேவியார்
மாந்தப்புல்-காவட்டம்புல்
மாந்தி-மாமரம்
மாமாத்திரம்-வைத்தியர்
மாமுடி-நெட்டி
மாமுரி-காயுருவி
மாய்-ஆச்சா
மாரடைப்பு-ஒருவகைநோய்
மாரகம்-கோடகசாலை
மாரி-கள்
மார்க்கா-கையாந்தகரை
மாலதி-சண்பகம், மல்லிகை, முல்லை.

மாலம்-குங்குமமரம்
மாலயம்-சந்தனம்
மாலி-கள்
மாலுகம்-வேம்பு
மாலுதானம்-கண்குத்திப்பாம்பு
மாலூரகம்-வில்வம்

மால்தொடை }
மால்முருகு } துளசி
மாவகம்-இலுப்பை, காஞ்சிரை
மாவிருக்கம்-சதுரக்கள்ளி
மாவிலந்தம்-விடத்தேர்

மாவிலிங்குபட்டை - ஓர் பட்டை, இதன் ரசம் முறைக்காய்ச்சலுக்கும், எலும்புருக்கிக் காய்ச்சலுக்கும், சிரண மருந்தாகவும் கொடுக்கப்படுகிறது. கஷாயமாகவும் கொடுக்கப்படுகிறது.
மாவிளம்-வில்வம்
மாளுழ-புளிமா, மா
மான்குளம்பு-அடம்பு
மான்செவி-இலைக்கள்ளி
மானமதம்-கத்தூரி

## மி

மிகுண்டம்-சாறணை
மிகுதியல்-வில்வம்
மிகுத்தவனம்-தண்ணீர்விட்டான்
மிகுப்பலத்தம்-காத்தொட்டி
மிசிரிப்பருப்பு-நீர்க்கடுப்பு, நீர்ச்சீதமும்போம். விந்துகட்டு உண்டாம். இரதங்கெந்தி, சாப்பிட்டவர்களுக்காகும்.
மிதிபாகல்காய்-கரப்பான், பித்தம், வாதம், பெருக்கும் உண்டாம். இரச பாஷாணங்களை முறிக்கும்.
மிதுக்காய்-அதிக தாகமும், பித்தமும்போம். அழகு, உதிரம், விந்தும் உண்டாகும்.
மிருதாரசிங்கி-கரப்பான், சிரங்கு, புண், புடையும் போம்.
மிளகரணை - அசிரணவாதம், இருமல், இரைப்பு, ஈளை, உப்பிசம், ஐயம், பித்தகுலை, கணமும் போம்.
மிளகு-அரோசி, அபஸ்காரம், கழுத்தின்நோய், காசம், காதுநோய், காமாலை, கிராணி, குய்யரோகம், குன்மம், கோனுகிறவலி, சந்நியாசம், சிலேட்டுமம், சீதசுரம், பாண்டுபித்தம், மந்தம், மூர்தர்குன்மம், மூலம், மேகம், வாதம், மற்றெல்லா நோயும் போம்.
மிளகாய் - சீழ்மூலம், வாதங்களும் போம். அதிககாரம் உண்டாம்.
மிளகுசம்பாவரிசி-பலவித நோயும், வாய்வும் போம். சுகம், தீபனமும் உண்டாம்.
மிளகுதக்காளியிலை-அனல், கழல், வாய்வு, சோபை, சோபநோய், பாண்டு, மந்தாக்கினி, முத்தோஷம், மேகச்சொரி, வாந்தி, விக்கல், வெட்டை, வெப்பும்போம். கைப்பு உண்டாம்.
மிளகோதனம் - கபம், குடலிரைச்சல், பித்தம், வாதமும்போம். பசியுண்டாம்.
மிசை-சோறு
மிதுக்காய்-ஓர்வெள்ளரிக்காய்.
மிரிசபத்திரி-வறட்சுண்டி
மிரியல்-மிளகு
மிருஞ்சி-செம்முருங்கை
மிருகம்-நீர்வள்ளி

மிருகார்சிங்கு - ஓர்வகை மருந்து, இது ஓர் கூட்டுவர்க்கமாயிருக்கிறது. சிலகளிம்பு அல்லது பிளாஸ்திரியில் சேர்க்கப் படுகிறது. காடியில் சேர்த்து முகப்பருவுக்குத் தேய்க்கப்படுகின்றது.
மிருதாற்பலம்-நீலோற்பலம்
மிருத்தியுபுட்பம்-கரும்பு
மிருத்துவீசம்-மூங்கில்
மிருகாற்றம்-தாமரை
மிலாங்கலி-செங்காந்தள்

மிலேச்சகந்தம்-வெண்காயம்

மிலேச்சாகம்-கோதும்பை

மிளகாய்ச்சக்களத்தி-ஓர்பூண்டு

மிளகு - ஓர்மருந்து, நல்லமிளகின் கீழ்ப்பார்க்க.

மிளகுகாணை - காண்டை, இதன் பட்டை சிரணிக்கிற மருந்தாகவும், பலன்கொடுக்கிற மருந்தாகவும் யோசிக்கப் படுகிறது. இதன் லேசான குடிநீர் நாளொன்றுக்கு அரைத் தேத்தண்ணீர் கிண்ணமளவு கொடுக்கப்படுகிறது.

மிளகுதக்காளி-ஓர் தக்காளி

மிறுக்கம்-கையாந்தகரை

மிறுசிரம்-இலாமிச்சை

மிறுதி-சமுத்திராப்பச்சை

மிறுதுபலா-நெல்லி

மிறுதுபுட்பம்-வாகை

மிறுத்தாலகம்-துவரை

மிறுத்திகம்-கொடிமுந்திரிகை

மின்னி-கறுத்தக் காக்கணம், சீரப்பயறு.

*

## மீ

மீசை-புலிதொடக்கி

மீக்குவம்-மருது

மீதி-கருஞ்சூரை

மீதுந்து-நெல்லி

மீனஞ்சு-மீனெரிஞ்சான்பூண்டு

மீன்கொல்லி - மீனெரிஞ்சான் பூண்டு

## மு

முகரி-தாழை

முகினி-புளி

முக்காவேளை - முட்காய்வேளை, இதன்வேர் ஆசிரணமான அல்லது குன்மமுள்ள நோய்களுக்குக் கொடுக்கப்படுகிறது. வைத்தியர் இதை இஞ்சியுடன் சேர்த்து கஷாயம்போட்டு கொடுக்கிறார்கள்.

முக்குளி-கோழிமுழையான்

முல்லிதாழை-நிலப்பனை

முசல் - முயல், இதன் இரத்தத்தால் பலமுபற்பம் செய்யப்படுகின்றது.

முசல்கொம்மட்டி-ஓர்பூண்டு

முசல்வலிப்பு-ஓர்நோய்

முசுக்கட்டை - கம்பளிக் கொண்டான்.

முசுட்டை - ஓர் மருந்து பூண்டு, அவை, பேய்முசுட்டை-பொன்முசுட்டை.

முசுமுசுக்கை - ஓர்பூண்டு, இதன் கொழுந்து சுகபேதிக்கு கொடுக்கப் படுகிறது. பித்தத்தினால் அதிகமா யுண்டாயிருக்கிற உமிநீர் வடிகைக்கும் பித்தமயக்கத்திற்கும் குடிநீராகச் செய்துக் கொடுக்கப்படுகிறது.

முசுவல்-முசுட்டை

முசுறுப்புல்-அளத்துப்புல்

முஷ்டி-முட்டி

முஞ்சி-நாணற்புல்

முடக்கற்றான்-ஓர் மருந்து பூண்டு, இதன்வேர் சுதேச வைத்தியர் பேதி மருந்தாக வழங்குகிறார்கள். இதன் கஷாயத்தில் குடல் சுத்தியாய்ப் பித்தம் போகின்றது. மலையாள தேசத்தில் சயரோகம் சுவாசகாசம் இவைகளுக்கு இதனிலைகள் கொடுக்கப்படுகிறது.

முடங்கல்-தாழை, முள்ளி

முடக்கு-ஓர்நோய்

முடிமேல்-முடிசெருந்தி

முடிமேலழகி-கோடகசாலை

முட்டி - காஞ்சிரை, எட்டிமரம், அவை, பேருமுட்டி, சிற்றுமுட்டி, தும்முட்டி, பேய்த்தும்முட்டி.

முட்டை-அண்டம்

முண்டகம்-கருக்குவாளி, கள், தாமரை, தாழை, முட்செடி, முள்ளிச்செடி, நீர்முள்ளி.

முதியம்-நாய்வேளை

முதிரை-முதிரை, அவரை, காராமணி, கொள், துவரை இவை முதலியன.

முத்தகம்-கருக்குவாளி

முத்தக்காசு-கோரைக்கிழங்கு

முத்தம்-முத்து, இசங்கஞ்செடி

முத்தாபறம்-இசங்கு

முத்திருக்கஞ்செடி-ஓர்பூண்டு

முத்திருக்கஞ்செவி-ஓர்செடி, இது பித்தப் போக்குக்காகக் கொடுக்கப்படுகிற மருந்தாகவிருக்கிறது. கண்ணோய் வியாதிகளில் இதன் இலையையிடித்துக் கண்ணைச்சுற்றிலும் பற்றுப் போடப்படுகின்றது.

முத்து - நவரத்தினத்தி னொன்று, இதனால் செய்யப்படுகிற பற்பம் செறியாக்கிராணி, நெஞ்செரிவு, கிருஷ்ணதோஷம் இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

முத்துக்கொட்டை - ஆமணக்கு முத்து

முத்துச்சோளம்-ஓர்சோளம்

முந்திரிகை-முந்திரி

முந்தூல்-மூங்கில்

முப்பூ - அகஸ்தியர் தமிழ்வாகடம் இதில் பதினெட்டுக் குட்டரோகங்களையும் அவைகளின் பரிகாரங்களையும் சொல்லியிருக்கின்றது.

முயற்செவிக்கள்ளி - ஓர்கள்ளி, இதன் கஷாயம் மலையாள தேசத்தில் சுரத்திற்குக் கொடுக்கப்படுகிறது. இதன் சாற்றில் சருக்கரைசேர்த்து வயற்றுநோவுக்குக்கொடுக்கப்படுகிறது. தேள் கொட்டினால் கொட்டினவாயில் இதன் இலையை தேய்க்கப்படுகின்றது.

முயற்புல்-ஓர்புல்

முருகு-அகில், தேன்

முருக்கு - முருக்கு, எலுமிச்சை, அவை, கலியாணமுருக்கு, ஓர் மரம்.

முள்முருக்கு-ஓர்மரம்

காட்டுமுருக்கு-ஓர்மரம்

முருங்கை-ஓர்மரம், அவை, காட்டு முருங்கை, கொடி முருங்கை, தவசு முருங்கை

முருவிலி-வவ்வாலொட்டி

முல்லை-முல்லை, வனமல்லிகை

முழல்-கழற்சிக்கொடி

முளரி-தாமரை;

முளா-முள்ளங்கி

முளை-மூங்கில்

முள்ளங்கி-ஓர்கிழங்கு

முள்ளாங்கத்தரி-காறற்கத்திரி

முள்ளி-கண்டல், அவை, கழிமுள்ளி, அடுக்குமுள்ளி, ஆற்றுமுள்ளி, கழுதைமுள்ளி, செம்முள்ளி, நீர்முள்ளி, வறமுள்ளி.

முள்ளிலவு-ஓர்மரம்

முள்ளிவேர்-ஓர்மருந்துவேர், இது நீர்கட்டு வியாதிக்குக் கஷாயமாகச் செய்து கொடுக்கப்படுகின்றது.

முள்ளுப்பலா-ஓர்பலா

முடைமுள்-ஓர்மரம்

முறைக்காய்ச்சல்-ஓர்நோய்

முறமாக்கி-குப்பைமேனி

முற்கம்-பயறு

முனி-அகத்தி

முன்னம்-உகில்

முன்னை-ஓர்மரம், அவை, எருமைமுன்னை, காட்டுமுன்னை, பசுமுன்னை, பேய்முன்னை.

இதன் வேர் சுரத்திலும் இவ்விதமான மற்ற சமயங்களிலும் ஜீரணமருந்தாகவும், பெலன் கொடுக்கிற மருந்தாகவும் கஷாயஞ் செய்துக் கொடுக்கப்படுகிறது.

முகிழ்விரியாக் கத்தரிப்பிஞ்சி அனல், ஐயம், பித்தம், மலமும் போம். குரலினோசையுண்டாம்.

முக்காற்கூறுகாய்ந்தவெந்நீர்-அனல் ஐயம், குளிர், நடுக்கல், பலவித நோய், பித்தம், பித்தசுரம், வாதமும்போம்.

முக்கிளிப்பான்பட்சி - பல வியாதிகள் உண்டாம்.

முக்குளிக்கீரை-அனல்போம். ஐயம், சீதம், பேதி, போகமும் உண்டாம்.

முக்கூட்டுநெய்-எள்ளுநெய், சிற்றாமணக்கு நெய், பசு நெய், இவைகளால் வாதம், பித்தம், ஐயம் என்கிற நோய்களும் போம்.

முக்கூட்டுநெய்சேர்க்கும் விதி-வாததேகிகளுக்குக் கூட்டவேண்டிய முறை பசுநெய் ஒருபங்கு, எண்ணெய் இரண்டுபங்கு, ஆமணக்குநெய் மூன்றுபங்கு, பித்ததேகிகளுக்கு எண்ணெய் ஒருபங்கு, ஆமணக்குநெய் இரண்டுபங்கு, பசுநெய் மூன்றுபங்கு, சிலேட்டுமதேகிகளுக்கு ஆமணக்குநெய் ஒருபங்கு, பசுநெய் இரண்டுபங்கு எண்ணெய் மூன்றுபங்குமாம்.

முசலிறைச்சி - ஈளை, காசம், சுவாசம், பித்தம், மலக்கட்டு, வாதமும்போம்.

முசல்காதிலை - கைகாலிலுண்டான வீக்கம், பீசத்திலெழுந்த வீக்கம், விஷங்களும்போம்.

முசுட்டை-ஐயம், கெட்டநீர், சொறி சிரங்கு, மலக்கட்டு, வறட்சி, வாதமும்போம்.

முசுமுசுக்கையிலை-இருமல், இளைப்பு, ஈளை, நீர்த்தோஷம், புகைச்சலும்போம்.

முசுமுசுக்கைவேர் - சளி, பித்தம், புண்விஷம், பெருவிஷம், மந்தம், வயிற்றுநோய், வாந்தியும் போம்.

முசுறுமுட்டை - சர்வசுர வேகம், தாகம், பித்தமும்போம்.

முடக்கற்றான்-அண்டவாதம், கரப்பான், குருக்குவாயு, சூலைப்பிடிப்பு, சொறி, சிரங்கு, மலச்சிக்கல், வாய்வுபோம்.

முட்காவேளை - அதிசாரம், சுரம், தாபம், மந்தம், வறட்சிபோம்.

முட்பலா-ஆண்மையுண்டாம்

முண்டாசுகவசம் - நடுக்கட்டு முண்டாசுக்கு பித்த வாதம்போம். மெய்க்கவசத்திற்கு காந்தி, புஷ்டியும் உண்டாம். நடுக்கட்டிற்குப் பித்தம்போம். உதராக்கினி வீரியம் உண்டாம்.

முதிர்பாகு-பழைய வெல்லப்பாகு முதிர்பாகுக்கு மூத்திரக்கட்டும் வாத முதலாகிய நோயும் உண்டாம். பழைய வெல்லப்பாகுக்கு அருசி பித்தம் பேதி வாய்வும்போம்.

முதலையிறைச்சி-நக்குவான், சீதம், வாய்வும்போம். ஆண்மையுண்டாம்.

முதற்கண்ணீன்ற பசும்பால்-புஷ்டியுண்டாம்.

முத்து - அஸ்திசுரம், அருசி, கண்ணோய், கபம், சீதளம், சோபை, தைரியநஷ்டம், தாது நஷ்டம், துர்ப்பலம், பித்தம், விஷமும் போம். அழகு வீரியமும் உண்டாம்.

முத்துச்சிப்பி - ஐயம், இருமல், ஈளை, க்ஷயம், மேகக்கட்டிபோம்.

முத்துச்சுண்ணம் - அதிசாரம், அரோசிகம், ஐயம், கிருமி, குன்மநோய், நேத்திரநோய், வாதமும்போம்.

முந்திரிகைத்தேன் - குன்மம், மகோதரம், வயிற்று வலியும் போம்.

முந்திரிகை மது - திரிதோஷம், வெப்பும்போம். இரத்தம், காமம், விந்தும் உண்டாம்.

முந்திரிப்பருப்பு - இந்திரிய புஷ்டி, இனிப்பு, பித்தவாயு, மந்தமும் உண்டாம்.

முப்பத்திரி - சுரம், தாகம், மலக்கட்டு, வாந்தி, விக்கல்போம்.

முருக்கன்வித்து - கிரந்தி, சீதம், மேகமும்போம்.

முருங்கைக்காய் - ஐயம், வாத முதலிய பல நோயும்போம். தாது உண்டாம். பத்தியத்திற்காகும்.

முருங்கைப்பட்டை - கபம், சந்நி, சுரம், பேதி, வாயு, வாதகோபம், விஷமும்போம்.

முருங்கைப்பிசின் - நீரிழிவு, வாய்வும்போம். மேனி விந்துதடிப்புமுண்டாம்.

முருங்கைப்பிஞ்சு - அஸ்தி சுரம், அரோசிகம், எலும்புருக்கி, வெப்பம், விந்துநஷ்டமும் போம். பத்தியத்திற்காகும்.

முருங்கைப்பூ-அருசி, பித்தம், வெப்பும்போம். விந்துபுஷ்டி, விழி குளிர்ச்சியும் உண்டாம்.

முருங்கையிலை - கண்ணோய், தலைநோய், மந்தமும், மூர்ச்சை வெப்பும்போம்.

முருங்கை யிலைச்சாறு - உட்ணம் போம்.

முருங்கையிலை யீர்க்கு - நீர்க்கட்டு போம்.

முருங்கைவித்து - மேனியழகு, விந்து தடிப்பு மிகவுண்டாம்.

முருங்கைவேர்-கபம், சந்நி, சுரம், வாத சோபமும்போம்.

முலைப்பால்-கபச்சுரம், கிரிச்சுரம், சந்நி, வாதசுரம், கபதோஷம், பித்தசுரம், வறட்சியும் போம். கண்ணிற்கும், மருந்தனுபானத்திற்குமாகும்.

முலைப்பால் வெண்ணெய்-கண்ணெரிவு, காலெரிவு, கையெரிவு, நாசிகளுள்ளெரிவும்போம்.

முல்லை-சோபம்போம்.

முல்லைநிலம் - பித்தம்போம். வாத முதலாகிய வியாதிகளுண்டாம்.

முல்லைப்பூ - அரோசகம், அழல், மனநோவும்போம்.

முல்லைபேதம்-முத்தோஷமும் போம்.

முழுத்துவரை-தாது மூலக்கடுப்பு, மூலரத்தம், மூலமுளையும் போம்.

முளகாய்ப்பழம் - அரோசி, குன்மம், பொருமல், மந்தம், வாய்வும் போம்.

முளைக்கீரை - அரோசி, சுரகாசம், மேகம், வெட்டையும் போம். பொருமல், மந்தம், வாயுவும் உண்டாம்.

முளைக்கீரைத்தண்டு - தேக மெல்லாம் வாய்வு உண்டாம்.

முள்துளசி - எலிவிஷம், விஷவெட்டுப்புண்ணும்போம்.

முள்முருக்கம்பூ - ஸ்திரீகள் உதிரக்கட்டுப்போம்.

முள்முருக்கமரம் - அச்சம், குன்மம், சர்த்தி, சுரம், வாய்வேக்காடும் போம். பலமுண்டாம்.

முள்ளங்கிக்கிழங்கு - இரைப்பு, ஐயம், கடுப்பு, கரப்பான், காசம், குடல்வாதம், குன்மம், சூலை, தலைநோய், பலஸிந்தி, வயிற்றெரிவு, வாதமும்போம்.

முள்ளங்கியிலை - குன்மவலிபோம். கிருமி, நெஞ்செரிவு, பித்தம், வாய்வும் உண்டாம்.

முள்ளம்பன்றியிரைச்சி-தேக யிருமல் உண்டாகும்.

முள்ளிக்கத்தரிக்காய்-அனல், ஐயம், சுவாசபித்தம், வாதமும் போம்.

முள்ளுக்கீரை - அனல், நீர்பெருக்கமும் உண்டாம். தங்கம் பஸ்பமாம்.

முள்ளெலி-மூலக்கடுப்பும் போம்.

முறுக்கு - வாய்வுபோம். ஐயம், பித்தமும் உண்டாம்.

முறுக்கெண்ணெய் - சகல சந்நிவாதக் குஷ்டமும் போம்.

## மூ

மூக்கிரட்டை - ஓர் வகைப் பூண்டு. இதன்வேரில் செய்த சூரணம் மலத்தை இளக்குகிற மருந்தாயிருக்கின்றது.

மூங்கிலழகி-குமிழ்

மூக்கிலீ-ஓர்பூண்டு, சொக்கலி

மூக்கில்-வசம்பு

மூங்கி-சிறுபயறு

மூங்கிலரிசி-ஓர்வகை அரிசி

மூங்கிலுப்பு-ஓர் உப்பு

மூங்கில்-ஓர்செடி

விஷமூங்கில்-ஓர்பூண்டு

வேலிமூங்கில்-ஓர்பூண்டு

மூசார்தம்-வெண்டாமரை

மூடனம்-மிளகு

மூடி-கொத்தமல்லி

மூண்டன்-மிளகு

மூதிசகம்-சிவனார்வேம்பு

மூத்திரக்கிருச்சி-ஓர் நீர்வியாதி

மூதை-இசங்கு

மூலகந்தம் - இருவேலி, வெட்டிவேர்.

மூலகம்-முள்ளங்கி

மூலம்-கிழங்குவேர்

### தசமூலம்.

அவை, 1-வாகை, 2-முல்லை, 3-பாதிரி, 4-நெருஞ்சி, 5-பேராமுட்டி, 6-கூவிளை, 7-சிற்றாமுட்டி, 8-சிறுவழுதுணை, 9-கண்டங்கத்திரி, 10-குமிழ்மூலம், ஓர்நோய்.

அவை, மூலவாயு, மூலாக்கினி, மூலநோய், மூலக்கிராணி, இரத்தமூலம், உள்மூலம், சீழ்மூலம், புறமூலம், தெளிமூலம், வறள்மூலம்.

மூலவள்ளி-வெற்றிலை

மூவிலை-நரிப்பயறு

மூறுவர்-பெருங்குறும்பை

மூக்கால் நீருண்ணுதல் — கண்ணோய்கள் போம். ஆணுவம், மயக்கம், மயிர்கறுப்பும் உண்டாம்.

மூக்கிரட்டை-கோழை, சீதம், திணவு, பீசம், வாதமும்போம். காந்தி, பித்தம், பேதியு முண்டாம்.

மூக்கொத்திக்காய்-சீதளம், பித்தம், வாயுவும் உண்டாம்.

மூங்கிற்குருத்து - அடிபட்ட இரத்த வீக்கங்கள்போம்.

மூங்கிலரிசி - இரத்தபித்தம், கண்ணோய், சுரமும்போம்.

மூங்கிலிலை - உதிரம், குடல்கட்டு, குன்மம், சூலை, சூதக்கட்டும் போம்.

மூங்கில்மரம்-சுரம், சுவாசம், சூதகவாய்வு, வாதமும்போம்.

மூங்கிற்பாய் - அனல், நீர்க்கடுப்பு, பித்தமும்போம்.

மூசுமல்லிகை - காமாலை, சோபை, மேகம், விஷம், வீக்கமும் போம். வீரிய விர்த்தியுண்டாம்.

மூலிகைப்பிடுங்குமிடம் - கடலோசைக் கேளாத யிடத்திலும் சித்தர்கள் தேவர்கள் முனீஸ்வரர்க ளுறைகிற காடுகளிலும் மூலிகைப்பிடுங்குதல் நன்று.

## மெ

மெருகன்கிழங்கு - அஸ்திசுரம், ஐயம், ஈளை, குன்மமும்போம். தேகக்குளிர்ச்சியுண்டாம்.

மெத்தை-ஓர்பூண்டு

மெல்லிலை-வெற்றிலை

மெருகன்கிழங்கு - அஸ்திசுரம், ஐயம், ஈளை, குன்மம், மூலம், மேகமும்போம். தேகக் குளிர்ச்சி உண்டாம்.

மெழுகு-அரைப்பு, ஐயம், உதடுவெடிப்பு, தாதுநஷ்டம், தீப்புண், தேள்விஷம், பக்கவாதம், புண், வாயு, இரணமும்போம்.

மெழுகு பீர்க்கங்காய் - திரிதோஷ பித்தமும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

## மே

மே-நாதம், சிறுகீரை

மேசம் - கடுக்காய் நோய், அவை, மேககாங்கை, மேககாரகம், மேகக்கிராணி, மேகச்சூலை, மேகப்படலம், மேகரணம், மேகவாயு, மேகவெட்டை.

மேககாரகக்குறிஞ்சி-ஓர்நோய்

மேகநாடி-மயில்குக்குருந்து

மேகவண்ணக்குறிஞ்சி-ஓர்மரம்

மேகசிங்கி-புழுக்கொல்லி

மேதை - பொற்றலைக் கையாந்தகரை.

மேனி-குப்பைமேனி

மேதை-தோஷம்போம்

மேல்வீடு-பலவித வெப்பும்போம். அழகு உண்டாம்.

## மை

மையல்-ஊமத்தை

மைக்கொன்றைப்பூ - சலமேகம், மேகமும்போம்.

மைக்கொன்றைமரம்-குடல்வாதம், சூலை, மேகமும்போம்.

மைச்சம்பாவரிசி - அருசி, சர்த்தி, வாதபித்தமும் போம். வாய்வு உண்டாம்.

## மொ

மொச்சைக்காய் - பித்த சிலேட்டுமம், தசவாய்வும் உண்டாம்.

மொச்சைக்கொட்டை-ஐயம், பித்த வாய்வு உண்டாம்.

மொந்தன் வாழைக்கச்சல்-கிராணி போம்.

மொந்தன்வாழைக்கனி - உள் வறட்சி, பித்தம், காமாலைபோம். சீதம், தாகம், பலயீனம், மந்தம், தாது வலியுமுண்டாம்.

மொந்தன் வாழைக்காய் - வாய்வு போம்.

மொந்தன் வாழைக்கிழங்கு - மேகவெட்டைபோம். ஆளை வளர்க்கும்.

மொந்தன்வாழைப்பூ - கபம், கால்

கையெரிவு, நீர்க்கடுப்பு, பித்தம், பிரமியம், மூலம், வயிற்றுக் கடுப்பும் போம். கெம்பீரம் தாதுவும் உண்டாம்.

மோ

மோகம்-பாதிரி, முருங்கை, வாழை
மோசாடம்-சந்தனம்
மோதம்-அசமதாகம்
மோதை-வசம்பு
மோரடம்-பெருங்குரும்பை
மோதகம் - சீதமந்தம், வாதம், வெப்பும் உண்டாம்.
மோருமன்னமும் - கிராணி, குதாரங்கநோய், சலமேறும் வீக்கம், தாகம், பாண்டு, மேகநீர், வீக்கமும்போம். பசியுண்டாம். இரணக்காரருக் காகாது.
மோரும் பழையதும் - எல்லா விதயெரிச்சல்; பித்தப்பிணி, பிரமைநோயும்போம். க்ஷயம் தூக்கமும் உண்டாம்.

மௌ

மௌவல்-வனமல்லிகை

ய

யங்கூரா-அதிவிடையம்
யவாசம்-சிறுகாஞ்சொறி
யமுனைநதிநீர்-இரைப்பு, இளைப்பு, காசம், சுரம், தாகம், தாதுநஷ்டம், பாண்டு, பித்தவாந்தி, வெட்டை, வெண்குஷ்டம், வெள்ளையும்போம்.

யவாக்ஷாரம்-அஷ்டகுன்மம், ஆசனப்புண், இருமல், இரைப்பு, உட்டின வாதம், உதரநோய், ஐயம், கபம், கிராணி, குன்மம், சூலை, சோபை, நீரடைப்பு, பருத்ததேகம், பீலிகம், புழுவிஷம், மந்தம், களம், குய்யம், நா, வாய் இவ்விடத்தின்நோய்களும்போம்.

யாது-கள். (யா)
யாமஸ்கிழங்கு-ஓர்வகைகிழங்கு
யார்-நத்தைச்சூரி
யார்பதம்-வாலுளுவை
யாலம்-ஆச்சா
யானைச்சிரகம்-கத்தரிநாயகம்
யானைத்தடிச்சல் }
யானைத்தடிப்பு } புளிநரளை.
யானைத்திப்பிலி-ஓர்வகைப்பூண்டு
யானைநெருஞ்சி-பெருநெருஞ்சி, யானைநெருஞ்சியின்-கீழ்பார்க்க
யானைப்பிச்சான்-புளிநரளை
யானைமஞ்சள்-பெருமஞ்சள்
யானைவணங்கி-தேள்கொடுக்கு
யானைத்திப்பிலி-ஓயாநாசிநீர், ஓயாசுவாசம், கபம், காய்வான், குரல்கம்மல், சந்நி, வாதமும்போம். தீபனம் உண்டாம்.
யானைநெருஞ்சில் - உழலை, உள்ளெரிச்சல், எலும்புருக்கி, கல்லடைப்பு, தாகம், பித்தம், மேகம், வெண்குஷ்டமும் போம். சீதளம் உண்டாம்.
யானைப்பால்-வாதம்போம். அழகு, தாதுபுஷ்டி, பலம், பித்தமும் உண்டாம்.
யானைமூத்திரம் - கருங்கரப்பான், கிருமி, சோபை, பருத்ததேகம், வாயு, விஷமும் போம். அங்கபுஷ்டி, அதிகபலமுண்டாம்.
யானையேற்றம் - ஐயம், வாதமும் போம். தாதுவிர்த்தி, பசி பலம் பித்தமும் உண்டாம்.

யு

யுகவத்திரகம்-காட்டாத்தி

யூ

யூதிரம்-முல்லை

யே

யேவானி-அசமதாகம்

யோ

யோசனவல்லி-வல்லாரை

ர

ரசகர்ப்பூரம் - எரிசூலை, குன்மம், திடைவாழை, வாதசூலை, வாதம், சோணிதமும்போம்.
ரசங்கொளுக்கி-கோபம், தாபசுரம் போம்.
ரசச்செந்தூரம்-ஐயம், குன்மம், சந்துவலி, ஜந்நி, சுரதோஷமும் போம்.
ரசதாளிக்கரும்பு-தாபம், வேகமும் போம்.
ரசதாளிவாழை - வியாதிகுண மறிந்து கூட்டிக்கொள்ளலாம்.
ரசாஞ்சனம் - ஆண்குறி விரணம், விழிநோய், புண்ணும்போம்.
ரத்தினம்-சகலஜந்நி, சுரதோஷம், தாபசோபம், நேத்திரரோகம், மேகரோகமும் போம். பலம் உண்டாம்.

ரு

ருத்திரசடை - அருசி, இரத்தவாந்தி, சுரமும்போம்.

ரோ

ரோமவிருக்ஷம்-சகலசித்துண்டு

ல

லவங்கப்பட்டை-ஆசியநோய், இருமல்நோய், இரைப்பு, சர்ப்பவிஷம், சர்வவிஷம், சிலந்திப்பூச்சிவிஷம், தாதுநஷ்டம், பேதியும் போம்.
லவங்கப்பத்திரி - அருசி, கைப்பு, சருவாசியநோய், சீதசுரம், சுவாசகாசம், தாகம், தாதுநஷ்டம், பித்தம், மேகசுரம், மேககட்டி, வாந்தியும்போம்.
லவங்கப்பூ - அதிசாரம், இரத்தக்கடுப்பு கண்ணுக்குள் படர்கின்றபூ, கோழை, சந்நி, சுரம், சுக்கிலநஷ்டம், தாள்பிடிப்பு, பித்தம், பேதி, மயக்கம், வாந்தியும்போம். சுகமுண்டாம்.

வ

வக்கணுக்கி - சூலை, சேட்டுமம், பித்தம், வாதமும்போம்.
வங்கசிந்தூரம்-உதிர விரணநோய், தாகம், நீரிழிவு, மதுமேகமும் போம்.
வசந்தகுசுபாகரம் - க்ஷயம், கல்லடைப்பு, காசம், குன்மம், தாகம், நீர்க்கட்டு, புளியேப்பம், விஷப்பாண்டும்போம்.
வசம்பு-அக்கினிமந்தம், இசிவு, மாந்தம், சூலை, சந்நி, சீதம், புறவீச்சு, புண், பேதி, வாயு, வாதமும் போம்.
வச்சிரக்கல் - எல்லாப் பிணிகளும் போம். அழகுண்டாம்.
வஞ்சி-இடுப்புக்குறுதி உண்டாம்
வடிகஞ்சி - பித்தவெட்டை போம். கண்குளிர்ச்சி, மாந்தமு முண்டாம்.
வட்டகிலுகிலுப்பை-இரணம், கண்டமாலை, கிரந்தி, சீதாத்தம், சுரம், சொறி, தாகம், பலசோபைபோம்.
வகத்திறம்-வாகை
வகுண்டம்-கவிழ்தும்பை
வகுண்டிகம்-கஞ்சாங்கோரை
வதுண்டிமடம்-வாலுளுவை
வகுளம்-மகிழ்
வகுள்-சமுத்திராபச்சை
வங்கம்-கக்கிரி, ஈயம்
வங்கனம்-செம்பு
வங்காரவச்சி-வாங்குறுவாளை
வங்காளபச்சை-ஓர்மருந்து

செம்பிலுண்டாகும் வெளிறின நீலநிறமான இந்தச் சாக்கு கடைகளில் கல்லதாய்க் காணப்படும். அதை யொருபோது உள்ளுக்குக் கொடுக்கக் கூடாது. ஆனால், அதைக் கீழ்ச்சொல்லிய படி பூசுமருந்தாய்ப்பலனுடனே

உபயோகிக்கலாம். ஒருபங்கு நேர்மையாய்த் தூள்செய்த வங்காளப் பச்சையை 15-பங்கு நெய் அல்லது வெண்ணெயினால் நன்றாயரைத்து நெடுநாளாய் ஆறாமல் இருக்கும் புண்களுக்குப் பலனுடனே யிடுகிறதுமன்றி மேகத்தைச் சார்ந்த கெட்ட தொண்டைப் புண்களுக்கு ஒரு இறகின் நுனியால் தொட்டு இடவேண்டும். மேற்படி புண்களுக்கு நெய் அல்லது வெண்ணெயைப் பார்க்கிலும் தேன் நன்று. ஒன்றினுந் தீராத படர்தாமரைக்கு நாலொன்றுக்கு இரண்டுதரம் மேற்படி குழம்பை நன்றாய்த் தேய்க்கில் வாசியாகும். இமைகள் மிகுந்த சிவப்பாயும் அவைகளில் சிவப்பு நிறமான புள்ளிகளுள்ளதாயும் இருக்கிற கண்ணோய்களுக்கு இந்தபிளாஸ்திரியை இமைகளில் தினம் இராத்திரி பூசினால் பலனைக்கொடுக்கும்.

வங்காளப் பச்சையை நஞ்சாய் தின்றிடுஞ் சமயத்தில் முட்டையின் வெள்ளைக்கருவை மிகுதியாய்க் கொடுக்கவேண்டும். இது அஃதில்லாவிட்டால் பாலில் அரிசிமாவைக் கலக்கி அதிகமாய்க் கொடுக்கவேண்டும்.

வங்கியம்-மூங்கில்
வசகம்-கொடிவேலி
வசத்திற்சோதினி-எலுமிச்சை
வசந்திரு-மாமரம்
வசம்புவாசா-மிளகு

வசம்பானது அசீரணத்திற்கும் வயிற்று வலிக்கும் குழந்தைகளின் சில வயிற்றுநோய்களுக்கும் மெத்தவும் உபயோகமுள்ள மருந்தாக எண்ணப்படுகிறது.

வசிகம்-மிளகு
வசிகரம்-சீந்தில்
வசியம்-காரம்
வசிரம்-ஆனைத்திப்பிலி
வசு-வெள்வெண்காயம்
வச்சகம்-மலைமல்லிகை
வச்சநி-மஞ்சள்
வச்சாதநி-சீந்தில்
வச்சி-காயா
வச்சிரகம்-தாமரைக்காய்
வச்சிரசெலதம்-கோரைக்கிழங்கு
வச்சிரநிம்பம்-கருவேம்பு
வச்சிரம்-சதுரக்கள்ளி, ஓர்பிசின்
வச்சிரவல்லி-பிரண்டை
வச்சிராங்கம்—சதுரக்கள்ளி
வஞ்சகாரம்-கொடிவேலி
வஞ்சி-சீந்தில்
வஞ்சனம்-அசோகு, வேங்கை
வடபத்தி
வடமரம்
வடம் } ஆல்
வடவிருக்கம்
வடு-இளங்காய்
வட்டத்திருப்பி-பங்கம்பாழை, பொன்முசட்டை.
வட்டத்துத்தி-ஓர்வகைசெடி
வட்டு-கழிமுள்ளி
வண்டுகொல்லி - வண்டுகொல்லி, தேவதாரம்
வண்டுணுமலர்மரம் - சண்பகமரம் வேங்கைமரம்.
வதரி-இலந்தை
வதுவடி-பாலை
வத்தகம்-வெட்பாலை
வத்தங்கிக்கட்டை - ஒருவகைக் கட்டை; இதன் கஷாயம் ஸ்திரீகளுடைய மாதவிடாயை யுண்டாக்கி வைக்கிற மருந்தாயிருக்கிறது.

வத்தகம்-ஆமணக்கு
வத்தாக்கு-கொம்மட்டி
வத்திறதாரு-செம்புளிச்சை
வத்திரோணம்-பெருமரம்
வத்தேக்கு-வத்தாக்கு
வந்தித்தல்-பங்கம்பாழை
வயகுண்டம்-கவிழ்தும்பை
வயதாழ்-கடுக்காய்
வயதெற்றி-திப்பிலி
வயல்-மருதநிலம்
வயல்ச்சுள்ளி - ஓர்பூண்டு, பொரிப்பூண்டு

வயல்தாத்தி-ஓர்வகைசெடி
வயல்நெட்டி-ஓர்வகைநெட்டி
வயல்மாதளை-ஓர்வகைமாதளை
வயல்மெருகு-ஓர்வகைமெருகு
வயற்கொடுக்கி-ஓர்வகைக்கொடுக்கி
வயாமது-சீந்தில்
வயிரகாணி-பெருநெருஞ்சில்
வயிரவல்லி-பிரண்டை
வயிரவளை-கரிப்பயறு
வயிரவன்-சிறுகீரை
வயிரவேர்-சாயவேர்
வயேகடம்-மாமஞ்சள்
வரகு - ஓர்வகைதானியம், அவை கேழ்வரகு, புல்வரகு, பொடிவரகு.
வரண்டியம்-பேராமுட்டி
வரம்-மஞ்சள்
வராகன்பூடு-கூந்தன்குதம்பை
வராகி சிற்றரத்தை - பன்றிமொத்தை
வராணி-பாலை
வராலி-பிரமி
வரிப்பிரோர்த்தம்-சதகுப்பை
வரியாசி-சீரகம்
வரிவரி-தண்ணீர்விட்டான்
வரிவரிமணலி-கற்றாழை
வரிவனம்-தில்லை
வருக்கை-பலா
வருடகம்-முடக்கொற்றான்
வருட்டம்-வேம்பு
வருந்தாரு-கோங்கு
வரை-மூங்கில்
வலம்புரி-நந்தியாவட்டம்
வலம்புரிக்காய் - ஓர்வகைக்காய், இதன்பொடி சேர்த்துச் செய்த எண்ணெய் காதினுட் புண்களுக்கு மிகுந்த உபயோக முள்ளதாக உபயோகிக்கப் படுகிறது.

வலம்புரிப்புல்-ஓர்வகைப்புல்
வலி-கருவிலி
வல்லம்-வாழை
வல்லரி-ஓர்வகைகொடி

வல்லாரை - ஓர்வகை நீர்ப்பூண்டு, இது இங்கிலீஷ் வைத்தியரால் குட்ட வியாதிக்குக் கொடுக்கப்பட்டு நற்கீர்த்தி பெற்றிருக்கிறது. அதை பக்குவம் பண்ணும் விதம் எப்படியெனில் வல்லாரைச் செடியைச் சேகரஞ் செய்தவுடன் வள்ளியை வேறாக்கி இலையையரிந்து ஒருபாயிற் பரப்பி நிழலில் உலரவைத்து முற்றும் உலர்ந்தபின் நேர்மையாய்ச் சூரணஞ்செய்து குப்பியிலிட்டு நன்றாய் மூடிவைத்துக் கொள்ளவேண்டும். இதில் ஒரு நேரத்திற்கு 5-முதல் 8-கிறேயின்வரை தினம் 3-நேரங் கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்து வரும்பொழுது மேற்படி பொடியைப் புண்களில் தூவினாலும் அல்லது உடனே பறித்த இலையைச் சதைத்து வைத்துக் கட்டினாலும் நன்று இப்படிப்

பிரயோகித்துச் சில வாரங்கள் கழிந்தபின் வியாதிக்காரன் பலவிதத்திலும் சவுக்கிய மடைவான். உள்ளுக்குக் கொடுத்துச் சில நாளாகிறபொழுது தேக முழுதும் சொறிகண்டால் உடனே மருந்தை நிறுத்தி ஒரு பேதிக்குக் கொடுத்து ஒருவாரஞ் சென்றபின் மறுபடியும் கொடுக்கலாம். வியாதி தீர வாசியாக்காமற் போனாலும் சற்று குணத்தைக் கொடுக்கும். கண்டமாலைக்கும் மேக வியாதிக்கும் கூட இதைக் கொடுக்கலாம்.

கண்டமாலை அல்லது மேக வியாதியைச் சேர்ந்தாவது சேராமலாவது உண்டாகி நெடுநாள் நிலைத்திருக்கிற புண்களுக்கெல்லாம் விடாமல் தொடர்ந்து கொடுக்கில் குறிப்பான சுகத்தைக் காண்பிக்கும். மேற்படி மூலிகையைச் சூடுகாட்டிச் சூரணஞ்செய்கில் அதன் சத்து போய்விடுமாதலால் அப்படி செய்யக்கூடாது.

வல்லி - புன்முருக்கு, முருக்கு ஓர் கொடி.
வல்லிக்கொடி-பெருமருந்து
வல்லீகம்
வல்லிகம் } மிளகு

வல்லியம்-செவ்வள்ளி, மஞ்சள்
வல்லை-புன்முருக்கை, முருக்கு
வழுக்குப்பாசி - ஓர்வகை நீர்ப்பூண்டு
வழுக்கெண்ணெய் - ஓர்வகையெண்ணெய்
வழுக்கைப்பலா-ஓர்வகை பலா
வழுதலை-கத்தரி
சிறுவழுதலை-ஓர்வகைபூண்டு
வழுதுணை-கத்தரி
வழை-சுரபுன்னை
வளையம்-தாமரையுட்சுருள்
வள்ளல்-வள்ளிக்கீரை
வள்ளி-ஓர்வகைபூண்டு, அவை, கற்பூரவள்ளி, காட்டுக்காய் வள்ளி, காட்டுவள்ளி, சர்க்கரைவள்ளி, சிறுவள்ளி, செவ்வள்ளி, பெருவள்ளி, மலைச்சர்க்கரை வள்ளி, ஆள்வள்ளி.

வள்ளிக்கண்டம்-சீந்தில்
வள்ளியம்-மிளகு
வறட்சுண்டி-ஆடுதின்னாப்பாளை
வறட்பூல்-பூல்
வறதாரு-கறிமுள்ளி
வறப்பூலாவேர்-ஓர்வகைவேர், இது இறுகல் செய்கிற மருந்தாயிருக்கின்றது. ஆகையால் குழந்தைகளுக்கு உண்டாயிருக்கிற கழிச்சலுக்கு இதன் சூரணம் கொடுக்கப்படுகிறது.

வறமுள்ளி-ஓர்வகைபூண்டு
வறவொட்டி-ஓர்வகைபூண்டு
வற்கமார்க்கம்-நாயுருவி
வற்குசா-கார்போகரிசி
வற்சமம்-குடசப்பாலை
வனசம்
வனசோபனம் } தாமரை
வனதித்தம்-குடசப்பாலை
வனமல்லி-காட்டுமல்லிகை
வனமா-கொடிவேலி, முதிரை
வனமாலி-பிரமி
வனமுதிரை-முதிரை
வனம்-துளசி
வனவசம்-சந்தனம்
வன்னி - வன்னி, கொடிவேலி தணக்கு.

வன்னிகருப்பம்-மூங்கில்
வன்னிகா-பொடுதலை
வன்னிபரியம்-கொடிவேலி
வன்னிவண்ணம்-செந்தாமரை
வன்னெத்து-நத்தைச்சூரி
வல்லாரை - வச்சரம், இரத்தக்கடுப்பு, உடம்பெரிப்பு, உள்மூலம், நீரெரிச்சல், பிரமேகம், பைத்தியம், வயிறுகழிச்சலும்போம். குளிர்ச்சி யுண்டாம். சடலந்தேறும்.
வளுவாங்கி-பல வியாதிகள் உண்டாம்.
வளைதடிசம்பாவரிசி - காப்பான், பொருமல், மந்தம், வயிற்றுளைவு, வயிறுப்பல், வாதபித்தம், உண்டாம்.
வளையலுப்பு-குடல்வாதம், குன்மவலி, சுவாசம், சூலை, தொந்தவாதம், பிலீகம், வெப்பும் போம்.
வள்ளிக்கிழங்கு - உள்வெட்கை, நீர்க்கடுப்பு, பித்தம், மேகமும் போம். சலக்கழிச்சல், மாந்தம், மூலரோகம், வயிற்றிரைச்சல், வாய்வும் உண்டாம்.
வள்ளைக்கீரை-வாயு போம். பாலுண்டாம்.
வரட்சுண்டி-நீரைக்கட்டும்
வன்னப்புரு-அருசி, இரத்த பித்தம், இரைப்பு, ஈளை, மலக்கட்டும்போம். பசியுண்டாம்.
வன்னித்தும்பை - தவனம் போம். புத்தித் தெளிவுண்டாம்.
வன்னிமரம் - கபம், காட்டுவிஷம், சந்நி தோஷம், சொறிவாதமும் போம். அனல் உண்டாம்.

## வா

வாகம்-செங்கீரை
வாகினி-பாதிரி
வாகுசு-கார்போகரிசி
வாகுவம்-வஞ்சி
வாகுனி-கீழ்க்காய்நெல்லி
வாசந்தி-குருக்கத்தி
வாசம்-இலாமிச்சை

### ஓர் திரவியம்
### வாசனை திரவியம்
### ஐந்து.

அவை, 1-இலவங்கம், 2-ஏலம், 3-கற்பூரம், 4-சாதிக்காய், 5-தக்கோலம்.

வாசாதி
வாசை } ஆடாதோடை.
வாட்டாழை-கடற்றாழை
வாட்டியபுட்பம் - சந்தனம், மஞ்சள்.
வாணகந்தி-அரசமரம்
வாணி-அசமதாகம்
வாணிதம்-கள்
வாண்டியம்-போரமுட்டி
வாதகரப்பான்பட்டை - ஓர் வகை மரப்பட்டை.
வாதீபதம்-பலாசு

வாதம் - வில்வம், ஓர்வகைநோய், அவை, இளம்பிள்ளை வாதம், காட்டுவாதம், காஸ்தம்பவாதம், குதிவாதம், திமிர்வாதம், வாதகாசம், வாதகுன்மம், வாதக்கிராணி, வாதசூலை, வாதநாடி.
வாதமடக்கி-நந்தக்காரி, தழுதாழை
வாதாங்கம்-அரசு
வாதலம்-அதிமதுரம்
வாதவைரி
வாதாயு } ஆமணக்கு.
வாதிகம்
வாதிங்கணம் } சோம்பு.

வாதிவம்-வஞ்சி

வாதுமைக்கொட்டை-ஓர்விதை

வாகைப்பிசின் - கட்டி, இரத்தமேகமும்போம். பலம், மேனியும் உண்டாம்.

வாகைப்பூ - சிலேட்டுமம், விஷமும் போம். கைப்பு, வாதசமன் உண்டாம்.

வாகைமரம்-அச்சரம், அனல், சிறுவிஷம், தாகசுரம், பெருவிஷம், வாதவரட்சி, விஷம், விரணமும் போம். கசப்பு, காரம், பசி, மகிட்சியும் உண்டாம்.

வாசனைப்புல் - அரோசகம், ஐயம், சுரம், வாதபித்தமும்போம். பசி உண்டாம்.

வாணகெந்தகம் - கிருமி, குட்டம், சொறி, பெரும் வியாதியும் போம்.

வாதஸ்திரீயின்பால் - பித்தம், போம், வாதபித்த ஸ்திரீயின்பால், நயன நோய்கள்போம். வாய்வு உண்டாம்.

வாதுமைநெய்-எல்லாவித வழலும் கபமும்போம். அனலோடு விந்தும் ஐம்பொறி யொளியும் உண்டாம்.

வாதுமைபருப்பு-புண்மே லிருக்கிற கொழுப்பு, பெரியகண் படலமும்போம். போகமுண்டாம்.

வாத்துக்கறி - அரோசகம், கபம், சிரங்கு, போகம், வற்றியுலர்ந்த புண்ணும் உண்டாம்.

வாயு - அனல், இளைப்பு, தாகமும் போம். மேகக்கடுப்பு உண்டாம். கண்ணோய்க்கும் சுரத்திற்கும் புண்ணோய்க்குமாகாது.

வாய்விளங்கம் - ஆசனப் புண், குஷ்டம், குன்மம், தேள்விஷம், பருத்ததேகநோய், நாவி விஷம், பாண்டு, பாம்புவிஷம், புழுக்கள் வாதமும்போம்.

வாலனரிசி - கரப்பான், குஷ்டம், சில்விஷமும்போம்.

வாலுழுவையரிசி-காசம், கிராணி, குஷ்டம், சூசிகாவாதம், பயித்தியம், மலபந்தம், மேகம், வயிற்றுக் கடுப்பும்போம். கசப்பாகவிருக்கும்.

வாலேந்திரபோளம் - சயரோகம், கரப்பான், குன்மம், சூலை, சொறியும்போம்.

வால்மிளகு-ஐயம், சீதம், தாகம், பல்நோய், வயிற்றுவலி, வாதபித்தமும்போம். தீபனம் உண்டாம்.

வாழைக்கனி - சோபநோய், பித்தநோய், மதமூர்ச்சைபோம்.

வாழைக்காய் - அனல், கடுப்பு, காசம், பித்தம், பேதி, வயிறுளைதல், வாந்தி, வாய்நீருறலும் போம். அதிகபோசனங்கொள்ளல் உதிரப்பெருக்கு சந்தோஷமும் உண்டாம்.

வாழைக்கிழங்கு - அனலுண்டாம்.

வாழைத்தண்டு-குடலில் மயிர்ச்சிக்கலும் நஞ்சும்போம்.

வாழைநீர் - இரணம், இரத்தக்கழிச்சல், இளைப்பு, உழலை, எலும்புருக்கி, கிரிச்சுரம், சோபரோகம், நீரெறிவு, பாண்டும்போம். குளிர்ச்சி பலமும் உண்டாம்.

வாழைப்பிஞ்சி - இரத்த மூலம், உதிரக்கடுப்பு, நீரழிவு, மேகம், வயிற்றுப்புண்ணும்போம்.

வாழைப்பூ-அனல், காசம், கிருமி, கைகால் எரிவு, கோழை, பித்தம், பிரமி, மூலரத்தம், மேகம், வயிற்றுக்கடுப்பு, வெட்டையும் போம். தாது உண்டாம்.

வாழையிலை - அக்கினிமந்தம், அபலம், இளைப்பு, வாய்வும்போம். தேகமின்னல், போகமும் உண்டாம்.

வாழைவற்றல்-இருமல், கரப்பான், மயல், மேகவாய்வு, வாதரோகமும்போம்.

வாளவரைக்காய்-அரோசகம், குதிவாதம், பித்தம், வாந்தி, வாய்ச்சுரப்பும் உண்டாம்.

வாளைமீன்கறி - ஆண்மை, வாய்வும் உண்டாம்.

வானம்பாடிக்கறி - அனல், பல்நோய், வெட்டையும்போம். காமம் உண்டாம்.

வான்கோழிக்கறி - ஐயம், கரப்பான், தேகப்புளகிதம், போகமுமுண்டாம்.

வான்கோழிமுட்டை - விந்து உண்டாம்.

வாதுமைக்கொட்டை பிசின் - ஒருவகைப் பிசின், இந்தப் பிசின் செங்கடல் வழியாய் அலக்ஜாண்டிரியாதேசத்திலிருந்து கொண்டுவரப்படுகிறது. இது முக்கியமாய் காண்டியாதீபத்தில் உண்டாகிறது. இது இளைத்த சரீரமுடையவனுக்கு இரத்தம் ஊறுகிறதற்காகக் கொடுக்கப்படுகிறது.

வாதூகம்-சோம்பு

வாதைவரி-ஆமணக்கு

வாந்தியம்-தான்றி, வாலுளுவை

வாமசுக்கிலம்-பொன்னுவிரை

வாமலோகிகம் } கற்றாழை
வாமல்

வாம்பல்-மூங்கில்

வாயு - காற்று, அவை, அசீரணவாயு, தமரகவாயு, பாரிசவாயு, மேகவாயு.

வாரத்தளகு-கறிமுல்லை

வாரிசம் } தாமரை
வாரிசாதம்

வாரிப்பிரசாதன்-தேற்று

வாரீசம்-தாமரை

வாருகம்-வெள்ளரி

வாருணம்-மாவிலங்கு

வார்த்தசாகி-கற்றாழை

வார்த்தாகம்-கத்தரி

வார்த்தாகி-ஓர்பூண்டு, சிறுவழுதலை

வாலபத்திரம்-கருங்காலி

வாலபுட்டி-முல்லை

வாலுங்கி-கச்சரி

வாலுளுவை-வாலுளுவைக்கரி

வால்மிளகு-அரேணுகம், இதுமேகவெள்ளைக்கு மிகுந்த நன்மையானதா யிருக்கிறது. கொடுக்கும் விபரம் யெப்படியெனில் வால்மிளகுத்தூள் 2 - அவுன்ஸ் படிகாரத்தூள் ½-அவுன்ஸ் இவை யிரண்டுங்கலந்து 9-பங்குபடுத்தி தினம் மூன்றுதரம் நேரத்துக்கு ஒருபங்கு வீதம் கொடுக்கவேண்டும். ரோகம் ஆரம்பத்தில் கொடுக்கில் பலனில்லை. முதலாவது ஒருபேதிக்கு ஆமணக்கெண்ணெயைக் கொடுத்து அப்புறம் சிலநாள் வெடியுப்பைக் கஞ்சித்தண்ணீரிற் கலக்கிக்கொடுத்து அதின்பின் மூத்திரம் போகும்பொழுது சூடும் வலியும் கொஞ்சந்தணிந்த சமயம் பார்த்து மேற்படி பொடியைக் கொடுக்கத் துவக்கலாம். அன்றியும் நெடுநாள்பட்ட மேகவெள்ளைக்கும் ஸ்திரீகளின் மேகவெள்ளைக்கும் கொடுக்கில் பலனுண்டாகும்.

விருதாப்பிய மனிதர்களுக்குக் கபம் மிகுதியாய்ப்போய்

இருமல் கடினமாயிருக்கில் வால்மிளகின் தூளை ஒருவேளைக்கு 8-கிறெயின் வீதம் தினம் மூன்றுதரம் கொடுக்கவேண்டும்.

வாழகம்-குந்துருக்கம்

வாழபிளப்பி-முல்லை

வாழை - ஓர்மரம், அவை, இரஸ்தாளிவாழை, கருவாழை காட்டுக்காணுவாழை அல்லது காணுவாழை ஓர்பூண்டு, கொட்டைவாழை, செவ்வாழை, பூவாழை, பேயன்வாழை, பொந்தன்வாழை.

வானகம்-மஞ்சாடி

வானபத்தியம்-பலாசு

வானப்பிரத்தம்-இலுப்பை

வானரகேயம்-பழமுண்ணிப்பாலை

வாகுசி-கார்போகரிசி

வானபத்தி-பூவாது காய்க்குமரம்

## வி

விசயன்கடுக்காய்-வாதம்போம்

விச்சுளிக் குருவிக்கறி-அரோசகம், ஐயம், பித்தமும்போம். போகம் உண்டாம். பத்தியத்திற்காகும்.

விடத்தேரின் குணம்-உதிரமூலம், முளைமூலம், தாகம், வேகமும் போம்.

விடத்தேரின் பிசின் - பிரமேகம், மேகக்காப்பான், வெண் மேகமும்போம்.

விராலி-ஐந்தி, தாடைவாழை, பிளவை, பிரசங்கள், மேகம், விப்புருதி, விரணம், வெடித்தப்புண்களும்போம்.

விராலிவித்து - கெர்ப்பம், ஸ்திரீவசியம், வித்துகட்டுமுண்டாம்.

விருள்-விஷம்போம்

விருளங்கிழங்கு-ஈளைபோம்

விலாங்குமீன்-அருசி, ஐயம், காப்பான், சொரிப்புண் போகமும் உண்டாம்.

விலாமிச்சுவேர்-இரத்தபித்தம், எரிசுரம், சிரநோய், சோபம், தள்ளுகிறமயக்கம், தாகம், பித்தம், மதமூர்ச்சை, மேகம், விழியெரிச்சலும்போம்.

விலாமிச்சுவேர்விசரி - தாகம், கிரிச்சுரம், மூர்ச்சை, மேகங்கள், வியர்வையும்போம்.

வில்வப்பிஞ்சு-சுரம், பித்தம், வாதசந்நியும்போம்.

வில்வவேர் - அக்கினிமந்தம், அதிசாரம், அரோசி, கபம், குன்மவாயு, சன்னி, சுட்கநோய், சோபை, தாகசுரம், நீரேற்றம், பித்தம், பித்தசுரம், வலி, வாந்தி, விக்கலும்போம். அழகு, புஷ்டியும் உண்டாம்.

விழலரிசி - குடல்வாதம், திரிதோஷம், மிகுந்தபித்தம், மேகமும் போம்.

விழித்தவுடன் கண்ணாடி பார்க்குதல்-அறிவு, சகலவசீகரம், களிப்பு, தாதுவும் உண்டாம்.

விழித்தவுடன் சலமருந்தல் - பித்தம், மலம், மூத்திரமுந் தங்காமல்போம்.

விழுதியிலை-காப்பன், கிருமி, சூலை, தன்மலம், படுவன், மாந்தம், வெண்மேகமும் போம். பேதி உண்டாம்.

விழுதிவேர் - மேகம்போம். கெர்ப்பம் உண்டாம்.

விளக்கெண்ணெய்-காப்பான், கிருமி, குடல்வாதம் பலநோயும் போம். உதிரபலம் உண்டாம்.

விளாவரிசி - அக்கினிமந்தம், ஈளை, அரோசி, கபம், பித்தமும் போம்.

விளாமரம் - அருசி, காசசுவாசம், தாகம், பித்தமும்போம்.

விளாம்பழம்-இருமல், ஈளை, கபம், தாகம், வெப்பும்போம். பசி உண்டாம்.

விளாம்பிசின்-அதிசாரம், நீரிழிவு, மாதர் பெரும்பாடு, வெள்ளையொழுகலும்போம்.

விஷமூங்கிலிலை-உகிர் சுற்று, காதெழுச்சி, படுவன், பிளவை, வீக்கமும் போம்.

விஷ்ணுகிரந்தி-அனல், ஐயம், இருமல், கபம், காசம், தீராத சுரம், வாதவியாதிகள் போம்.

விகசதா-மூக்கிரட்டை

விகசம்-மஞ்சாடி

விகசிதம்-புநமுருக்கு

விகாய்-ஓர்மரம்

விகுரம்-வெள்ளெருக்கு

விஷமுட்டி-காஞ்சிரை, எட்டிமரம்

விஷமூங்கில்-ஓர்பூண்டு

விஷ்ணுகாந்தை-ஓர்பூண்டு

விஷ்ணுகாந்தி-ஓர் மருந்து பூண்டு. இதன் இலை, தண்டு, வேர் சில வயிற்று நோய்களுக்கு தமிழரால் குடிநீர் செய்துக் கொடுக்கப்படுகிறது.

விஷ்ணுகிராந்தி-மூங்கில்

விசத்துரு-அடம்பு

விசபுட்பம் }
விசப்பிரசூனம் } தாமரை.

விசவல்லி-கீழ்க்காய்நெல்லி

விசலி-சீந்தில்

விசாலம்-கடம்பு, பேய்த்துமிட்டி

விசித்தி-கடுகு

விசிமந்தம் }
விசுமிகினி } வேம்பு.

விசுதம்-நரிப்புடோல்

விசுவபேடகம்-வேர்க்கொம்பு

விசுவம்-அதிவிடயம்

விசுவாசி-வேங்கை

விசுவாமித்திரப்பிரியம்-தென்னை

விச்சதையன்-புல்லூரி

விச்சநந்தா-வெள்ளெருக்கு

விச்சம்-தாமரை

விச்சல்லி-பேய்த்தும்மட்டி

விச்சிறல்-கோரை

விச்சை-வெள்ளெருக்கு

விடத்தாலம் - ஓர்மருந்து, இது சீரண மருந்தாகவும், வாயுவைத் தணிக்கு மருந்தாகவும் யோசிக்கப்படுகிறது.

விடத்தேர்-ஓர்பூண்டு, இதன் கொழுந்து இடித்துக் கண்ணோய்க்குக் கட்டப்படுகிறது. இதன் சாறு பாலில் சேர்த்து மேகவெள்ளைக்குக் கொடுக்கப் படுகிறது.

விடபி-ஓர்மரம்

விடம் }
விடரு } அதிவிடையம்.

அட்டரி-அகத்தி

விட்டில்-பிராய்

விண்டபூரகம்-மாதளை

விண்டல்-மூங்கில்

விண்டு மூங்கில் - விஷ்ணுகாந்தை, தகரை.

விண்டுகம்-தகரை

விண்ணல்-காவட்டம்புல்

விண்ணு-கடுரோகணி

விண்ணுகம்-கழிமுள்ளி

விதாரி-புன்முருக்கு

வித்தியம்-தான்றி

வித்திரகம்-வெள்ளெருக்கு

விந்துசம்-தாளி

விந்தியம்-வாசினிகோட்டம்

விந்தயம்-செங்கத்தாரி

## வீ

வீரனென்னும் பச்சைக் கற்பூரம்-தாகம்போம். குளிர்ச்சி, பேதியும் உண்டாம்.

## வெ

வெங்கம்பூர்-சுரம், சோகம், மேகமும் போம். புளகம், போகமும் உண்டாம்.

வெங்காயக்கிழங்கு - இரத்த பித்தம், கடுப்பு, கிரந்தி, தாகம், நாக்கச்சரம், காசம், சந்நி, மந்தம், வயிற்றுப்பசுமுண்டாம்.

வெங்காயப்பூ-வயிற்றுநோய், வாதவலியும்போம்.

வெங்காரம் - அஷ்டகுன்மம், ஐயம், இரத்தமூலம், கல்லடைப்பு, கிராணி, குய்யக் கிரிச்சுரம், கிருமி, சந்நி, சர்ப்பவிஷம், சலப்பிணி, நீரடைப்பு, வாய்வும் போம்.

வெடியுப்பு - அஷ்டகுன்மம், அதைப்பு, அருகல், கல்போன்ற அதைப்பு, சூதகவாய்வு, நீர்க்கட்டு, மலக்கட்டு, மாதர் உதிரக்கட்டி வாதவலியும்போம்.

வெட்சிப்பூ-இளைப்பு, சுரம், தாகம், மேக வழலும்போம். வாசமாகவிருக்கும்.

வெட்டிவேர் - அனல், இரத்த பித்தம், உன்மத்தம், கழுத்துநோய், காமாலை, குஷ்டம், சுக்கிலநஷ்டம், சுரம், சோபசுரம், தலைநோய், தாபம், தீயால் வெந்தபுண், நரம்பி லெழுங்கட்டி, நேத்திரரோகம், பித்தத்தா லுண்டான தாகம், மூலைச்சிலந்தி, மூர்ச்சை, மேகக்கட்டியும் போகும். சுகமுண்டாம்.

வெட்டிவேர்விசிறி - தாகம், பித்த எரிச்சல், பித்தசோபமும்போம். மனோக்கியமுண்டாம்.

வெட்பாலைமரம் - அக்கினி வாதம், அதிசாரம், கடுப்பு, கிரந்தி, கிராணி, சிலவிஷம், சூலை, திரிதோஷம், புண்கள், மூலமும் போம்.

வெட்பாலையரிசி - உப்பிசம், கரப்பான், குடல்வாதம், பித்தம், பித்தவாதமும்போம்.

வெண்கடுகு-குஷ்டம், பக்ஷநோய், பாலர்கிரகம், பூதம், பைசாசவிஷக்கடிகளும்போம்.

வெண்கரும்பு - க்ஷயங்கள் போம். மேகத்திற்காகாது.

வெண்கலக்கம் - இரத்த பித்தம், கோபமும்போம்.

வெண்கலம்-இரத்தபித்தம், கபம், சுவாசம், சூலை, சோபநோய், நீர்ப்பெருக்கு, நேத்திரநோய், மந்தம், மகோதரம், மேகவாயு, வாதவலியும்போம். தாது பலமும் உண்டாம்.

வெண்கழற்சியிலை - இரங்கண்டவாயு, ஏறண்டவாயு யென்கிற வியாதிகள்போம்.

வெண்காக்கட்டான் வேர் - சீதக்கட்டு, சுரம், சன்னிவலி, மேகம், விழிநோய், வெட்டையும் போம். பேதியுண்டாம்.

வெண்காலிமாவேர் - நாக்கைக்கறுக்கச்செய்யுந் தோஷம், பித்தம், மகோதரம், மதுமேகமும் போம். கைப்பு உண்டாம்.

வெண்கோரைத்தண்டு - எரிவு, காந்தல்கள், மூலமும்போம்.

வெண்குன்றி - மேகவாதம்போம். ஸ்திரீ வசியமுண்டாம்.

வெண்கொக்குக்கறி - கிருமிபோம். அரோசகம், கரப்பான், புண், மேகமும் உண்டாம்.

வெண்சாமரை-ஆயாசம், சோபை, தாபம், தோஷம், மூர்ச்சை, வியர்வை, வெப்பம்போம். அழகு, போகமும் உண்டாம்.

வெண்சிவதைவேர் - உதரக்கிருமி, கைப்புந் துவர்ப்புங்கலந்த பித்தமும்போம். மிகு பேதியுண்டாம்.

வெண்டைக்காய் - அதிசாரம், கிராணி, கபவாதம், வெண்சீதரக்தமும் உண்டாம்.

வெண்ணாவல்பழம் - அனல்போம். உதிரம் விந்தும் உண்டாம்.

வெண்ணாவி - உதிரசந்நி, சுகசந்நி, சுரதோஷம், விஷசந்நியும்போம்.

வெண்ணொச்சியிலை-அழற்சி, காசம், சிரசிலடைந்த சிலேட்டுமநோய், சுவாசம், தோஷம், நாசிப்பிணி, பல்வேதனை, வாதமும்போம்.

வெண்பசும்பால்-பித்தம்போம்

வெண்பட்டு - சீதம், சுரம், வாதமும்போம். அழகு, காந்தியும் உண்டாம்.

வெண்புறுக்கறி - கபம், கரப்பான், மெய்வறட்சி, வாதபித்தம் வெண்குஷ்டமும் போம். பத்தியத்திற்காகும்.

வெதுப்படக்கி-அள்ளெடுக்கு, மாந்தம், இரத்தம், உட்காய்ச்சல், சீதம், சுரம், வாதம், வெதும்பல், வெளுத்தபேதியும்போம்.

வெந்தியம் - அஸ்திசுரம், இருமல், எரிவு, கணம், கபம், சீதக்கழிச்சல், தாகம், தொளைசெய்கிற மேகம், பித்தபவுத்திரம், பிள்ளைகணைக்காய்ச்சல், பேதியும்போம். தேகக்குளிர்ச்சி, போகமும் உண்டாம்.

வெந்தியக்கீரை - அருசி, கபம், பொருமல், மந்தம், வாய்வும் போம்.

வெந்நீர்-இருமல், சீதக்கட்டு, நெஞ்செரிப்பு, நெற்றிவலி, புளியேப்பம், வயிற்றுநோய்போம்.:

வெம்பாடல்-கடி, கண் விரணம், கயம், கரப்பான், கிரந்தி, சூலை, புண், புரை, வாதம், வீக்கமும் போம்.

வெயில் - காந்தி, வாதமும் போம். துயரம், பசி, பலம், பித்தம், வியர்வையும் உண்டாம்.

வெயில்படாந்தநீர்-குஷ்டம், சுக்கிலரோகம், பித்தம், வறட்சியும் போம். அக்கினிமந்தம், கலவிசுத்தம், தாதுபுஷ்டியும் உண்டாம்.

வெயில்படாநீர்-அநேக வியாதிகள் உண்டாம்.

வெயில்மணலிற்காய்ந்தநீர் - பித்தகபம்போம். அநேகசுகம் உண்டாம்.

வெல்லம் - மிதமாய் சாப்பிட்டால் பிரமேகம் போம். மெத்த சாப்பிட்டால் நாகப்பூச்சி, மதுமேகம், மேகமும் உண்டாம்.

வெளிச்சபிசின்-கண்ணில் முட்டும் நீர், முகசந்நி, வாதசந்நியும் போம்.

வெள்வெளவால்மீன்கறி-கரப்பான் பித்தமும் போம். பத்தியத்திற்காகும.

வெள்வேலமரம்- சந்துக்குடைச்சல் சருவாங்கவாதமதால்சுரம், பித்தமயக்கம், வாய்விரணம், வாதமும் போம்.

வெள்ளரிக்காய் - உள்ளரிப்பு, கரப்பான், நீர்க்கடுப்பும் போம்.

பசி, வாதமும் உண்டாம். தின் மருந்துக்காகும்.
வெள்ளரிப்பிஞ்சு-திரிதோஷம் போம்.
வெள்ளரிப்பழம்-சயித்தியம் உண்டாம்.
வெள்ளரிவித்து-கல்லடைப்பு, கிரிச்சரம், நீர்க்கடுப்பு, சதையடைப்பு, நீர்க்கட்டு, நீர்த்தாரை, வெடிப்பு, மேகமும்போம்,
வெள்ளறுகு-கிரந்தி, குடல்வாதம், குன்மம், சிரங்கு, சூலை, சொரி, மேகம், வாய்வும்போம்.
வெள்ளாட்டிறைச்சி - கயரோகம், தேகத்திலுள்ள வியாதிகள், வாதபித்தமும்போம். உடல்பருத்தல் தேகபலமும் உண்டாம்,
வெள்ளாட்டுத் தயிர்-தேகசவுக்கியமுண்டாம்.
வெள்ளாட்டு நெய் - தேகவளர்ச்சி, விழித்துலக்கமும் உண்டாம். பத்தியத்திற்காகும்.
வெள்ளாட்டுப் பால் - அதிசாரம், இரைப்பு, சிலேட்டுமம், சீதம், புண், வாதகிலேசம், வாதபித்தமும்போம். தீபனமுண்டாம்.
வெள்ளாட்டுப் பாலாடை - மந்தம் உண்டாம்.
வெள்ளாட்டுப் புழுக்கை-உதிரநோய், வாதமும்போம். எருதண்ணீராகும்.
வெள்ளாட்டுமூத்திரம்-உதிரநோய், சோபை, துன்மாங்கிஷம், பலவீக்கம், பாண்டும்போம்.
வெள்ளாட்டுமோர்-மேகம்போம்.
வெள்ளாட்டு வெண்ணெய் - கரப்பான், சுரம், பித்தமும்போம். பசியுண்டாம்.
வெள்ளாமணக்கிலை - மந்தம், மலப்பந்தம், மார்புநோய், வாதமும் போம்.
வெள்ளி - அஷ்டகுன்மம், இரத்தமேகம், ஈளை, ஊதை, ஊரல், எலும்புருக்கி, ஐயம், கண்ணோய், காசம், சிலேட்டுமம், தாபரவிஷம், பழையசுரம், பித்தம், புண், வாதம், விரணமும்போம். தாதுவிர்த்தியுண்டாம்.
வெள்ளிக்கலம் - கபம், பித்தமும் போம். களிப்பு, காந்தி, வாதமும் உண்டாம்.
வெள்ளிண்டு-சயம், சுவாசகாசம், மேகமும்போம்.
வெள்ளீயம்-ஒளிமங்கல், கபம், கரப்பான், கிரந்தி, சலமேகம், தாகம், பித்தம், மந்தாக்கினி, மந்தாரசுவாசம், மேகம், வெப்பும்போம்.

வெள்ளுள்ளி-வாதம்போம்
வெள்ளெருக்கம்பால் - எலிவிஷம், சுரம், வாதஜந்தி, வலி, வலிசுருக்கும்போம்.
வெள்வெலியிறைச்சி - ஐயம், குன்மம், சீதம், நரம்பிலுண்டாகுங் கட்டி, தொந்தரோகம், பிலீகம், பேதி, மார்புநோய், மூலமும் போம். உதிரம், தாதும் உண்டாம்.
வெள்ளைகிலுப்பை - சந்நி, விஷங்களும்போம்.
வெள்ளைக்குங்கிலியம் - நாபி, கமலவிரணம், புண்மேகம், விரணமும் போம்.
வெள்ளைச்சாரணை-கபாலசூலை, கரப்பான், கிரந்தி, சுவாசகாசம், தழுதலை, பீநசமும்போம்.
வெள்ளைச்சோளம் - பலகரப்பான் உண்டாம்.
வெள்ளைத்தாமரைப்பூ-சுரல், வெப்பம், காந்தல், மருந்தின்கொடுமையும்போம்.
வெள்ளைத்துத்தி-பித்தமேகம், பித்தவாய்வு, முடக்கு மூலம், மேகம்,விழிநோயும்போம். கெர்ப்பம் உண்டாம்.
வெள்ளைநர்கணத்தி - பேதியுண்டாம்.
வெள்ளைநாவி - கடிசூலை, கிருமி, குஷ்டம், சுரம், வாதகுன்மமும் போம்.
வெள்ளைப்பசலை-கல்லடைப்பு, நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு, மேகமும் போம்.
வெள்ளைப்பாஷாணம்-கிரந்தி, சந்நி, சுரதோஷம், நாசிப்புண், வாய்ப்புண், விஷக்கடியும்போம்.
வெள்ளைப்பூண்டு - சந்நி, சீதம், தலைநோய், மூலரோகம், பல்கிட்டல், வாதமும்போம்.
வெள்ளைமிளகு-கபவாதம், கிராணி, சுரம், மேகமும்போம். தீபனம் உண்டாம்.
வெள்ளாமணக்கு-வாதம் போம்
வெள்ளைவஸ்திரம் - திரிதோஷம், வியர்வும்போம். அழகு, ஆயுள் களிப்பு, பூரிப்பு, போகம், வெற்றியும் உண்டாம்.
வெற்றிலை - ஐயம், கடியின்குணம், சயித்தியம், முத் தோஷமும், போம்.
வெருண்டம்-கரும்பு
வெருபத்திரி-அரிநெல்லி, கறிமுள்ளி, வட்டு.
வெருரசம்-கரும்பு
வெருளாங்கம்-ஆடுதின்னாப்பாளை
வெருலாதி-சிற்றேலம்
வெங்காயம் - ஓர்கிழங்கு, அவை, ஈரவெங்காயம், வெள்வெங்காயம், கரிவெங்காயம்.

இது அநேக கடைகளில் நற்சரக்காய்க் கிடைக்கும். சிறு குழந்தைகளுடைய வாயில்வரும் வெள்ளை நிறமான புண்கள் முதலியவைகளுக்கு 60-கிறெயின் வெங்காரத்தூளை 1-அவுன்ஸ் தேனில் சேர்த்து தினம் இரண்டு மூன்று நேரம் ஒரு விரல் நுனியால் எடுத்து வாயினுள் தடவவேண்டும். இரசத்தில் ஔஷதம் சாப்பிட்ட பின் வாயில் நின்று அதிகமாய் உமிழ்நீர் உண்டாகிறதற்கும் 1-பங்கு வெங்காரத்தை 16-பங்கு ஜலத்தில் கலக்கி வாயில் விட்டுக் கொப்பளிக்கவுஞ் செய்யலாம்.

மூலக்காம்பில் உண்டாகும் விரணங்களுக்கு 60-கிறெயின் வெங்காரத்தை 1-அவுன்ஸ் சலத்திலாவது 1-அவுன்ஸ் நெய்யிலாவது கலந்து குழந்தை பால் குடிக்கு முன்னும் பின்னுமாக மூலக்காம்பில் தடவவேண்டும். இந்த நெய் அதிக விதனமும் எரிவுமுள்ள மூல முளைக்குந் தடவ நன்று.

ஆண் குறியிலும் முக்கியமாய் பெண் குறியிலும் உண்டாகும் வேதனைகளுக்கு அரை அவுன்ஸ் வெங்காரத்தை 8-அவுன்ஸ் சலத்தில் கலக்கி தினத்தில் அநேகந்தரங் கழுவினால் குணமுண்டாகும்.

ஸ்திரீகளுக்கு அதை பெண் குறியினுள் செலுத்த வேண்டும். நீடித்த தாமதமுள்ள பிரசவ வேதனைகளுக்கும் அதைத் துடருஞ் சன்னியிழுப்புக்கும் வெங்காரம் 20-கிறெயின், 10-கிறெயின் கருவாப்

பட்டைத் தூளுடன் சேர்த்துக் கொஞ்சம் சுடுகஞ்சித் தண்ணீரில் ஒன்று இரண்டு மணி நேரத்துக் கொருதரம் கொடுக்கவேண்டும். இப்படி மூன்று நான்குதரங் கொடுக்கலாம். சூதக முறை தப்பாய் வருகிறதற்கும் 8-கிறெயின் வெங்காரம், 5-கிறெயின் கருவாப்பட்டைத் தூளுடன் கொடுக்கவேண்டும்.

அரையாப்புப் புண்களுக்கு 50-அல்லது 120-கிறெயின் வெங்காரம் அரைப்புட்டி தண்ணீரில் கலக்கி வைத்துக்கொண்டு இரவும் பகலுமாக அடிக்கடி புண்முழுதிலும் விட்டால் புண்ணைத் துப்புரவாக்கி ஆற்றும். இது செய்யும்பொழுது மாவு போல்டீசாவது கட்டல் வேண்டும். மேற்படி வெங்காரத்தண்ணீர் அசடுள்ள புண்களுக்கும் நல்லதாயிருக்கிறது.

படர்தாமரைக்கு வெங்காரம் 30-கிறெயின், நவாச்சாரம் 30-கிறெயின், கெந்தகம் அரை, 4-அவுன்ஸ் நெய் அல்லது வெண்ணெயில் கூட்டி நன்றாயரைத்து காலையிலும் மாலையிலும் படர்தாமரையில் அழுத்தி தேய்க்கவேண்டும்.

### வெடி-சிற்றேலம்
### வெடியுப்பு-ஓர்வகையுப்பு

இந்த ஔஷதத்துக்கு கடைகளில் வாங்கும்பொழுது புதிதாயும், நல்ல சரக்காயும் தெரிந்தெடுப்பதில் சாக்கிரதையாயிருக்கவேண்டும். காற்றும் பட்டு கசிந்திருக்கப்பட்டது நல்லதல்ல.

சுரங்கள் எல்லாவற்றிலும் தொலிசூடாய் வரண்டு நாக்கு உலர்ந்து தாகம் அதிகரித்து மூத்திரம் குறைந்து சிவப்புநிறமாயிருக்கிற பொழுது அரை அவுன்ஸ் வெடியுப்பை 2-புட்டி தெளிவான கஞ்சித் தண்ணீரிற் கலக்கி இனிப்பிக்கத் தக்க கற்கண்டாவது தேனாவது கூட்டி போதுமானமட்டும் குடித்தால் சுரத்தைக்குறைத்து வேர்வையுண்டாக்கி மூத்திரத்தை அதிகமாய்ப் போகப்பண்ணும். இந்த மருந்தை ஒன்றிரண்டுதரம் கொடுத்தபின் மருந்து வாந்தியாய்விடும் என்றாலும் தொடர்ந்து குடிக்கவேண்டும். வியாதிக்காரனுக்கு மனம் உண்டாயிருக்கில் நற்சுவை கொடுக்கக் கொஞ்சம் புளியாவது எலுமிச்சம் பழச்சாறாவது சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்கு மேற் சொல்லிய அளவுகளில் பாதியாவது அதற்கு குறைந்தாவது செய்து கொடுக்கவேண்டும்.

சுரங்களுண்டாயிருக்கிற பொழுது பயித்தியப் புவப்பமாவது தலைநோயாவது அதிகமாய் உண்டாயிருக்கில் வெடியுப்பும் நவாசாரமும் வகைக்கு 1-அவுன்ஸ் எடுத்து ஒரு புட்டித் தண்ணீரிற் கலக்கி துணியை அதில் நனைத்து தலையின் மேலிட்டு இந்தப் பிரகாரம் அடிக்கடி துணியை நனைத்து மாறிமாறி இடவேண்டும்.

நுரையீரல் இரைக்குடல் மற்றெந்த உள்ளுறுப்புகளிலாவது நின்று சுரமுங்கூடியிருந்து இரத்தம் போனால் ஒருவேளைக்கு 8-அல்லது 10-கிறேயின் வெடியுப்பை 3-அவுன்சு தண்ணீரிற் கலக்கி இந்தவீதம் தினம் நாலைந்துதரம் கொடுத்து வியாதிக்காரனை முற்றும் அமைதலாயும் குளிர்ச்சியாயும் வைத்திருக்கவேண்டும். வலி மிகுதியாயும் உறக்கமில்லாமலுமிருந்தால் மேற்படி வெடியுப்புத் தண்ணீரில் ஒருவேளைக்கு அரைகிறேயின் அபினைச்சேர்த்து தினம் 3-தரத்துக்கு அதிகம் கொடுக்கக்கூடாது.

மேகவெள்ளைக்கு 1-திரும் வெடியுப்பை அரிசிக்கஷாயம் 1-புட்டியிற்கலக்கி அடிக்கடி செழிப்பாய்க் குடித்தால் மூத்திரம் விடும்பொழுது இருக்கிற வலியையும் கட்டையும் நிறுத்தும். மேற்சொன்ன பிரகாரம் நீர்க்கோவைக்கு கொடுக்கில் மூத்திரத்தை அதிகமாய்ப் போக்கி சிலசமயம் சௌக்கியப்படுத்தும். மேற்குடிருக்கிறபொழுது கொடுத்தால் மிகுந்த குணமாயிருக்கும்.

ஒருவிதச் சொறி காப்பானுக்கு வெடியுப்பை 1-திரும் வீதம் அதிக தண்ணீரிற் கலக்கி காலையிலும் சாயந்திரமும் கொடுத்துக் காடியைக் கனமாகக் குடித்தால்சிலசமயத்தில்மிகுந்த குணங்கொடுக்கிறதாயிருக்கும்.

சுவாசகாசத்துக்கு கீழ்ச் சொல்லிய பிரயோகம் பலனுடையதா யிருக்கிறது. கொஞ்சந் தண்ணீரில் மிகுதியாய் வெடியுப்பைக் கரைத்து அதில் தடித்த கடுதாசியைத் தோய்த்து சில மினிட்டுநேரம் ஆறினபின் காற்றில் உலர்த்திவைத்துக் கொள்ளவேண்டும். சுவாசகாசம் தொடங்குகிற பொழுது வியாதிக்காரன் இருக்கும் அறையில் இந்த காகிதத்தைக் கொளுத்திவிட்டு அந்தப்புகை உள்ளுக்கு சுவாசம் வாங்கவாவது மேற்படி கடுதாசியை புகையிலைச் சுங்கானில் வைத்துப் புகை குடிக்கவாவது செய்யவேண்டும். இதின் புகையை நன்றாய்ச் சுவாசம் வாங்கினால் வியாதியைத்தீர வாசியாக்காமற் போனாலும் தற்சமயம் மிகுந்த குணத்தைக்கொடுக்கும். தொண்டைப் புண்களுக்கு ஒரு சிறு துண்டு வெடியுப்பை வாயிலிட்டு மெல்ல மெல்லக் கரையும்படி ஒதுக்கிக் கொண்டிருந்தால் பலனுண்டாகும்.

வாதம் மேகவியாதியைச் சார்ந்திராமலும் இரசத்தில் ஔஷதம் தின்றதினால் உண்டானதாயுமிருந்தால் ஒருவேளைக்கு 30-கிறேயின் வெடியுப்பை 8-அவுன்சு சுடுகஞ்சித் தண்ணீரிற் கலக்கி இந்தவீதம் தினம் 3-தரம் கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுக்க ஆரம்பித்துச் சில நாளான பின் வெடியுப்பை 40-முதல் 60-கிறேயின் வரை கூட்டி அதுபோலவே தண்ணீரை அதிகரித்துக் கொள்ளலாம். இதற்குப்பின் எந்த ஔஷதங் கொடுத்த போதிலும் வலியும்

விக்கமுமுள்ளமுட்டுகளின்மேல் சத்துள்ள வெடியுப்புத் தண்ணீரைப் போட்டால் மிகுதியாய் சாந்தப்படுத்தும்.

வெட்சி-ஓர்செடி
வெட்டு-இருவேலி
வெட்டிவேர்-ஓர்வேர்

இது வெயர்வை யுண்டாக்குகிற மருந்தாய் வைத்தியர்யோசிக்கிறார்கள். சில சுரத்திற்கு இது கஷாயம் போட்டுக் கொடுக்கப்படுகிறது.

வெண்கடம்பு-ஓர்செடி
வெண்கடுகு-ஓர்கடுகு
வெண்குமுதம்-வெள்ளாம்பல், கயிரவம்.
வெண்குன்றி-அதிமதுரம்
வெண்கூதாளம் - ஓர்பூண்டு, நீர்த்தாளி.
வெண்கோஷ்டம் } ஓர்கோஷ்டம்
வெண்கோஷ்டம் } அக்கரு
வெதிர்-மூங்கில்
வெந்தல்-வெந்தயம்
வெருணை-பாவட்டை
வெலிகம்-கற்றாழை
வெலிகாரம்-வெண்காரம்

வெல்லம்-ஓர்சரக்கு, இது கரும்பிலிருந்தும் தென்னங்கள் பனங்கள் இவைகளிலிருந்தும் செய்யப்படுகிறது. இதை தமிழ் வைத்தியர் உபயோகப் படுத்துகிறார்கள்.

வெல்லி-சிற்றேலம்
வெலிறு-நறுவிலி
வெள்ளிற்றுமரம்-முருக்கு
வெள்வெட்சி-ஓர்செடி

வெள்ளரி-ஓர்பூண்டு
வெள்ளவரை-ஓர்அவரை
வெள்ளருக்கு-ஓர்பூண்டு
வெள்ளாம்பல்-வெள்ளல்லி
வெள்ளில்-விளா

வெள்ளீயம் - ஓர் லோகம், இது சாதிலிங்கஞ் செய்வதில் வைத்தியர் உபயோகப் படுத்துகிறார்கள்.

வெள்ளுள்ளி - உள்ளி, இது புதிதாய் இருக்கவேண்டும். கடைகளிற் சாதாரணமாய்க் கிடைக்கும். உடைந்திருக்கப்பட்ட பழய உள்ளிகள் பிரயோசனப் படாது.

குழந்தைகளுக்கு இருமலுடன் சுரமில்லா திருந்தாலும், சுரமிருந்தாலும், மற்ற ஔஷதங்களினால் நீக்கப்பட்டிருந்தாலும், கீழ்ச்சொல்லுகிற பாகை பக்குவமாய்ச் செய்து அதிக பலனுடனே கொடுக்கலாம். 8-அவுன்ஸ் நல்ல வெள்ளுள்ளியைக் கொஞ்சம் தண்ணீர்விட்டு நன்றாய்ச் சதைத்து சாற்றைப் பிழிந்தெடுத்து சமனெடை துப்பரவான பஞ்சதாரையோடு சேர்க்கில் ஒருவிதப் பாகாகும். இந்தப்பாகில் கதிரால் அல்லது ஒரு தேக்கரண்டி வீதம் குழந்தைகளுக்கு தினம் 1 - க்கு 4-அல்லது 5-தரம் கொடுக்கவேண்டும். பிராயமானவர்களுக்கு மேற்சொன்ன அளவில்தானே 3-4-தரம் கொடுக்க வேண்டும். இதை சுவாச காசத்துக்குங் கொடுக்கலாம்.

கடினமான காது வலிக்கு 5-6-துளி வெள்ளுள்ளிச் சாற்றைக் காதினுள்விட்டால் உடனே தீரும்.

சிறுநீர்போகாமல் சேமித்திருக்கில் புதிதான கொஞ்சம் வெள்ளுள்ளியையாவது ஈரவுள்ளியையாவது சதைத்து போல்டீசு செய்து அடிவயிற்றின்மேற் கட்டினால் மூத்திரம் இறங்கும்.

சுரம் வைசூரி இவற்றைச் சார்ந்துவரும் பைத்தியப் புலம்பலுக்கு வெள்ளுள்ளியையாவது ஈரவுள்ளியையாவது சதைத்து போல்டீசு செய்து உள்ளங் கால்களிற் கட்டினால் வியாதிக்காரனை சாந்தப்படுத்தி தூக்கத்தை யுண்டாக்கும்.

வெள்ளுள்ளியையாவது ஈரவுள்ளியையாவது பாலில் அவித்து பருக்கள் கட்டிகள் விப்புருதி முதலியவைகளுக்குக் கட்டலாம்.

வெள்ளெருக்கு - ஓர்வகை யெருக்கு.
வெள்ளை-வேங்கை
வெள்ளைக்காக்கணம் - நீர் காக்கணம்.
வெள்ளைக்கீரை-ஓர்வகைக்கீரை
வெள்ளைச்சாமந்தி - ஓர்வகைச்சாமந்தி.
வெள்ளைச்சாரணை - ஓர்வகைச் சாரணை.
வெள்ளைப்பசளை-ஓர்வகைப்பசளை
வெள்ளைப்பாஷாணம்-ஓர் பாஷாணம். இதை பாஷாணம் வகையின் கீழ் பார்க்க.

வெள்ளைப்பூண்டு- ஓர்வகைப்பூண்டு

வெள்ளைப்போளம்-ஓர்வகைப் போளம்.
வெள்ளைமந்தாரை - ஓர்வகை மந்தாரை.
வெற்றிலை - ஓரிலை. இது சுரமருந்தாக வைத்தியர் யோசிக்கிறார்கள். குழந்தைகளுடைய அஜீரணத்திற்குக் கொடுக்கப்படுகிறது. இதனோடு கஸ்தூரி சேர்த்து கருப்பவலி, கருப்பசூலை, கருப்பவாயு இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

வெளப்பிலி-இருவேலி

## வே

வேகம்-அடம்பு
வேணு-மூங்கில்
வேதம்-லாலுளுவை
வேதன்-கடுக்காய்
வேத்திரம்-இலந்தை, பிரம்பு

வேப்பம்பட்டை - ஓர்வகைப் பட்டை. இது கடைகளில் எப்பொழுதும் நற்சரக்காய் கிடைக்கும். சில நாளாக இங்கிலீஷ் வைத்தியர்களால் குளிர்சுரம் முறைக்காய்ச்சலுக்கு மிகுதியாய் வழங்கப்பட்டிருக்கின்றன. சுரம் விட்டிருக்கும் சமயத்தில் பட்டையின் தூளில் ஒருவேளைக்கு 1-கிராம் வீதமாவது 2-அவுன்ஸ் பட்டையை ஒரு புட்டித் தண்ணீரில் இட்டு அரைபுட்டியாகக் குறுக்கி அதில் ஒரு நேரத்துக்கு 2-அவுன்ஸ் வீதமாவது தினம் ஒன்றில் மூன்றுதரம் கொடுக்க வேண்டும்.

சுரங்கள் வாசியான பின்னிருக்கும் பெலவீனத் துக்கும் அக்கினி மந்தத்துக்குங் கூட இந்தக் கஷாயப்பொடியைப் பார்க்கிலும் நன்று அல்லாமலுங் கொஞ்சங் கிரும்பாவது கருவாப்பட்டையாவது கஷாயத்தில் சேர்த்துக்கொண்டால் சாரம் அதிகமாயிருக்கும்.

வேம்பு-வேப்பமரம்

வேப்பிலை - ஓர்வகையிலை, வேப்பிலையிற் போல்ட்டீசு செய்கிறது. ஊமத்திலை போல்ட்டீசு எப்படிச் செய்கிறதோ அப்படிச் செய்துக்கொள்ளவேண்டும். இது மற்றொரு மருந்தினாலும் ஆறாத புண்களுக்கு நல்லதாயிருக்கிறது. கருவேம்பு, கறிவேம்பு, சிவனார்வேம்பு, நிலவேம்பு, மலைவேம்பு, தித்திப்பு கருவேம்பு.

வேயல்-மூங்கில்
வேயாம்-இலந்தை
வேய் }
வேரல் } மூங்கில்.
வேரம்-மஞ்சள்
வேரி - இருவேலி, வெட்டிவேர்கள்.
வேரிச்சுமம்-வெள்ளெருக்கு
வேர்-மாவேர்
வேர்க்கடலை-ஓர்கடலை
வேர்க்கொம்பு-இஞ்சி, சுக்கு
வேல் - வேல், மூங்கில், கருவேல், வெள்வேல், வேலமரம்.
வேலை-கரும்பு
வேழம் - கரும்பு, நாணல், பீர்க்கு மூங்கில், கொருக்கை.
வேளுங்கு-வெம்பாடல்
வேளை - ஓர்பூண்டு, அவை, காய்வேளை, காவேளை, முட்காவேளை, தைவேளை, நாய்வேளை.
வேகாதசாதம் - அசிரணம், சீதம், தாகம், மந்தம், வயறுநோய், வாதவுஷ்ணமும் உண்டாம்.
வேங்கைமரம் - இருமல், உளமாந்தை, கடிகள், குத்திருமல், சீழொழுக்கல், புண், மலக்கட்டு மாந்தை, வெட்டையும் போம். கண்ணொளிவு உண்டாம்.
வேப்பநெய்-இசிவு, கரப்பான், கிரந்தி, ஜந்தி, சிரங்கு, சுரம், வாதமும்போம். பித்தம் உண்டாம்.
வேப்பம்வித்து - விஷம், சந்நிபாதமும்போம்.
வேப்பிலைச் சுண்டாங்கி - அந்தரவாய்வு, உப்புகிறகுடல்வாதமும், கரப்பான், கிருமி, சூலை, சேட்டுமம், தாபம், தினவு, மலம், வாய்வு, விப்புருதியும் போம்.
வேர்ப்பூலா-உஷ்ணமும் போம்
வேலிப்பருத்தி-இசிவு வலி, இரைப்பு, குளிர், குன்மவலி, சந்திதோஷம், பலவிதத் தடிப்பு, மாந்தம், வாதம் மற்றும் அனேகவித வியாதிகளும்போம்.

வேளைப்பூ - கணமாந்தம், கபக்கோழை, மாந்தசுரம், வாதம், வெப்பும்போம். பசியுண்டாம்.

வேள்விப்புகை - தீர்க்காயுசு உண்டாம்.

### வை

வைகுண்டம்-தும்பை
வைசயந்தி-வாதமடக்கி
வைச்சிரவணாலயம்-ஆல்
வைதகி-திப்பிலி

வாததேகிகளுக்கு ரசவகை - இளந்தண்டு, தூதுளை, பாகல், பொன்னாங்காணி, முருங்கை, வெள்ளைக்காட்டாமணை இவைகளின் தளிர்களாகும்.

வாததேகிகளுக்கு வற்றல் வகை - அவரைக்காய், ஆதொண்டைக்காய், சுண்டைக்காய், துவரங்காய், நெல்லிக்காய், தூதுளங்காய், பிரண்டை, பேய்ப்புடலங்காய், மணத்தக்காளிக்காய், முள்ளிக்காய்.

வாததேகிகட்கு ஊறுகாய் வகை - இஞ்சி, கடுக்காய், சிறுகளா, தான்றி, தேற்றான், நாரத்தை, பெருங்களா இவ்வகள் உப்பி ஊரியிருக்கவேண்டும்.

வாத முதலிய மூன்று தேகிகட்கும் உப்பு - சமுத்திர உப்பைச் சுத்திசெய்துக் கூட்டிக் கொள்ளவும்.

பித்ததேகிகட்குக் கறிவகை - அவரைப்பிஞ்சு, ஈருள்ளி, கத்திரிபிஞ்சு, களாக்காய், கொடிபாசல், பீர்க்கு, புடலம்பிஞ்சு, பூசணி, மாங்காய், முருங்கைப் பிஞ்சு, முள்ளிக்காய்ப்பிஞ்சு, மெரிபாகல்பிஞ்சு, வள்ளி, வாழைக்காய் வாழைத் தண்டு, வாழைப்பூ, வெள்ளரிக்காய்.

பித்ததேகிகட்குக் கீரைவகை-ஆப்பை, ஒரிதழ்த்தாமரை, கோவை, சிறுகீரை, சுரை, தூதுளை, பாலை, புளியாரை, பொன்முசுட்டை, மணத்தக்காளி, மிளகு, முருங்கை, முசுமுசுக்கை, வசளை, வல்லாரை.

பித்ததேகிகட்கு ரசவகை-அகத்தி, கொடி வசலை, கொத்து வசலை, தைவேளை இவைகளின் தளிர்களாகும்.

பித்ததேகிகட்கு வற்றல் வகை - கண்டங்கத்திரி, சுண்டைக்காய், தூதுளங்காய், பேய்ப்புடல், மணித்தக்காளி, முள்ளிக்காய், வல்லாரைக்காய்.

பித்ததேகிகட்கு ஊறுகாய் வகை - இஞ்சி, எலுமிச்சங்காய், கொளுஞ்சிக்காய், தமர்த்தங்காய், தூதுளங்காய், பச்சை மிளகாய், புன்னைக்காய், மாவலிக்கிழங்கு.

### சி

சிலேட்டுமதேகிகட்குக் கறிவகை - அத்திக்காய், அவரைப்பிஞ்சு, ஆலம்பிஞ்சு, இருபாகல்காய், ஈருள்ளி, கண்டங் கத்திரிப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, சுரை, சூரணத்தண்டு, பயற்றங்காய், பலாக்காய், பீர்க்கம்பிஞ்சு, பூசிணிக்காய், பெரியகளா, பேய்ப்புடலங்காய், மாங்காய்ப்பிஞ்சு, முருக்கு, அரும்பு, முள்ளங்கி, வாழைத்தண்டு.

சிலேட்டுமதேகிகட்கு கீரைவகை - ஆரை, இருகோவை இருபுண்ணாக்குக்கீரை, கடலை, கண்பீளை, களா, கற்றாழை, காராமணி, காரை, சக்கரவர்த்தி, சுக்கு, செம்பை, துயிலி, நல்வேளை, நாய்வேளை, நெருஞ்சி, நெய்தல், பண்ணை, புளியாரை, பேய்ப்புடல், பொன்னாங்காணி, பொன்னாவாரை, மணலி, மணத்தக்காளி, மருதம், முசுமுசுக்கை, முசுட்டை, முருங்கை, முல்லை, முளைக்கீரை, முன்னை, மேனி, வசலை, வல்லாரை, வழுக்கை.

சிலேட்டும தேகிகட்கு ரசவகை - அகத்தி, ஓமம், குறிஞ்சா, கொத்தமல்லி, சதகுப்பை, சுக்கு, செங்கடுகு, தரா, தும்பை, பாகல், வெந்தியம், வேளை.

சிலேட்டும தேகிகட்கு வற்றல் வகை - அவரை, ஆதொண்டை, கண்டங்கத்திரி, சுண்டை, தூதுளம், நாரத்தைப்பிஞ்சு, ஆலம்பிஞ்சு, பிரண்டை, பேய்ப்புடல், மணத்தக்காளி, முள்ளி.

சிலேட்டும தேகிகட்கு ஊறுகாய் வகை - அத்திப்பிஞ்சு, ஆலம்பிஞ்சு, சுண்டைக்காய், தூதுளங்காய், பாகல்பிஞ்சு, மஞ்சள், மிளகு, மாம்பிஞ்சு, வாழைத்தண்டு மேற்படி தேகிகட்கும் பத்தியத்திற்காகும் பதார்த்தங்கள்.—அத்திப்பிஞ்சு, அப்பை, அவரைப்பிஞ்சு, அறுகீரை, ஆரைக்கீரை, கத்திரிப்பிஞ்சு, கருவாழைப்பிஞ்சும் பூவும், காட்டுவழுதலை, கோதுமை, கோவைக்காய், சிறுகீரை, தாளி, துவரை, தூதுளை, நெருஞ்சில், பீர்க்கம்பிஞ்சு, புடலம்பிஞ்சு, புதியநெய், பொன்னாங்காணி, மாங்காய்ப்பருப்பு, மாங்காய்ப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வெண்பசளை, வெள்ளவரைப்பிஞ்சு, வெள்ளுள்ளி, வேளை.

ப

பத்தியத்திற்காகு மிறைச்சிகள் - உடும்பு, உள்ளான், ஊர்க்குருவி, ஊடன், கவுதாரி, காடை, மான், முயல், வரையாடு, வெள்ளாடு, வெள்ளெலி.

பத்தியத்திற்காகுமீன்கள் - அயிரை, ஆமை, கிழங்கான், குறவை, கெளிர், சன்னை, சுறு, திருக்கை, நெய்மீன், நெய்த்தோலி, விரால் இவைகள் உலர்ந்ததாகும்.

பத்தியத்திற் பலவகை ஊறுகாய் - எலுமிச்சங்காய், களாக்காய், சுண்டைக்காய், தூதுளங்காய், நாறுக்காய், நெல்லிக்காய், பாவட்டங்காய்.

பத்தியத்திற்கு பலவகை வற்றல் - ஆதளை, களா, கோவை, சுண்டை, தூதுளை, மாவலிங்கு, வாழை, வெள்ளவரை.

### பத்தியத்திற்காகாத பதார்த்தங்கள்

இளநீர், ஈச்சங்கள்ளு, கடுகு, காடி, கிழங்குகள், குமட்டிக்காய், கொக்கு, கொள்ளு, சாராயம், சேப்பங்கிழங்கு, தென்னங்கள்ளு, தேங்காய்நெய், தேங்காய்ப்பால், பயிற்றங்காய், பழங்கள், பனங்கள், பன்றிக்கறி, பாகல், புகையிலை, புளி, பெருங்காயம், மாங்காய், மாதுளங்காய், மாவின்பண்டம், முத்தின அவரை, வள்ளிக்கிழங்கு, வெங்காயம் இதுகள் ஆகாவாம்.

முற்றிற்று.

---

உ

# அரும்பெயர் அநுபந்த அகராதி

அ

அக்காரப்பட்டை-மாமரப்பட்டை
அஞ்சனக்கல்-கருமாக்கல்
அடவிநீர்-காட்டிலிருக்கும்நீர்
அந்தர்த்தாமரை - ஆகாயத் தாமரை

அமுதவல்லிக்காய்-சீந்திற்காய்
அரக்காம்பல்-செவ்வல்லி
அருள்மரம் - முதிர்ந்த மாதுளை மரம்

அரோணுகம்-கடுக்காய்வேர்
அருக்கு-எருக்கு
அரைக்கீரை-சிறுகீரை

ஆ

ஆகாயக்கரி - ஆகாயமுள்ளுவெள்ளரி
ஆதளைவித்து - காட்டாமணக்கு வித்து
ஆலாங்கட்டிநீர்-கல்மழைக்கட்டி

இ

இசங்கு-கற்சங்கு
இண்டு-ஈயத்தண்டு
இரத்தபோளம் - சிவப்புக் குங்கிலியம்.
இராப்பகம்பால் - இரவிற் சுரந்து காலையிற்கறக்கும் பால்.
இன்புறுவேர்-சாயவேர்

ஈ

ஈச்சுரமூலி-பெருமருந்து
ஈழத்தலரி-பொன்னலரி

உ

உகாவித்து-உவாவித்து
உழுந்தோதனம்-உழுந்திட்டசாதம்

ஊ

ஊமலத்தி-ஓரத்தி

எ

எக்கு-உருக்கு
எலாவாலுகை-பேயேலம்
எள்ளோதனம்-எள்ளிட்டசாதம்

ஐ

ஐ-சேஷ்மம்

ஒ

ஒலிகாரம்-படிகாரம்
ஒருமாதகருப்பு-வெடியுப்பு
ஒடுக்கியோடு-ஆமையோடு
ஒளிபுடம்-குழிபுடம்
ஒடுக்கான்-ஆமை

ஓ

ஓங்காரஉப்பு-கல்லுப்பு
ஓமம்-சத்திசாரம்
ஓரிதழ்வசனம்-ஓரிதழ்த்தாமரை

ஓர்வாசல்-யோனி
ஓணம்-திருவோணம்

### க

கக்கரிக்காய்முள்ளி-வெள்ளரிக்காய்
கடுகோதனம்-கடுகிட்டசாதம்
கண்டுபாங்கி-சிறுதேக்கு
கந்திக்காய்-கமுகக்காய்
கந்தியுப்பு-கெந்தகவுப்பு
கரியபோளம்-கருங்குங்கிலியம்
கருங்குருவி-வலியான்
கருடன்கிழங்கு-பேய்ச்சீந்தில்
கர்க்கடகசிங்கி-கடுக்காய்ப்பிஞ்சு
கழுநீர்ப்பூ-செங்குவளை

### கா

காய்வள்ளிக்கிழங்கு-வெற்றிலைவள்ளிக்கிழங்கு

### கி

கிருமிசத்துரு-ஆடுதின்னாப்பாளை
கிராம்புபத்ரி-இலவங்கப்பத்ரி
கிராம்பு-ஏலம்
கிட்டம்-கிட்டம்
கிரணியம்-பொன்
கிழங்குத்தண்ணீர்-கிழங்குச்சார்
கிழித்து-சத்திரபிட்டு
கிழக்கை-பரித்தியம்
கிரந்திப்பூண்டு-கிரந்திநாயகம்

### கு

குக்கில்-குங்கிலியம்
குடியோட்டிப்பூண்டு-பேய்ப்பூண்டு
குருவிச்சிப்பூண்டு-முள்ளி
குழிபாக்கிக்காய்-கோடைப்பூசினி

### கூ

கூகைக்கிழங்கு-காட்டெருமைக்கிழங்கு
கூகைநீறு-காட்டெருமைப்பால்

### கெ

கெந்தகதாளி-வாசனையுள்ளதாளி
கெந்தகந்தாளு-கெந்தகதாளி
கெந்தி-நெல்லிக்காய்கெந்தகம்
கெவுதவாரணி-கௌரிபாஷாணம்
கெடம்-கெந்தியுரிபாஷாணம்
கெந்தகம்-பச்சைக்கற்பூரம்
கெளித்திபச்சை-பச்சைக்கற்பூரம்
கெந்தி-கெந்தகம்

### கே

கேதகிப்பூ-தாழம்பூ
கேழ்-ஒளி
கேசரிகாதம்-சிங்கம்

### கை

கைலைவெளி-மூளை
கையான்-கரிசலாங்கண்ணி

### கொ

கொடிமணி-மணிக்குடல்
கொப்பூழ்-தொப்புள்
கொல்லன்கோவைமூலம்-ஆகாசகெருடன்கிழங்கு
கொழிஞ்சி-கொட்காய்வேளை,
கொட்டையிலை-கொட்டைக்கரந்தை
கொனு-சித்திரமூலம்
கொடுக்காய்-கொடுக்காய்ப்புளி
கொடிஎலுமிச்சங்காய்-காட்டெலுமிச்சங்காய்

கொடிவேலி-சித்திரமூலம்
கொல்லன்கோவை-ஆகாசகெருடன்கிழங்கு

கொளுஞ்சிநாரத்தை-கொடிநாரத்தை
கொளுஞ்சி-கொள்ளுக்காய்
கொக்கரை-பாம்பு, வலம்புரிச்சங்கு
கொக்கு-ஓர்புள்
கொக்கறை-பனை, தெங்கு முதலியவற்றின் பிள்ளைமடல்.

கொக்கறையுடும்பு-ஓருடும்பு
கொக்காம்பாளை-ஓர்மரம்
கொக்கான்-ஓர்மரம்
கொக்கிறகுமந்தாரை-ஓர்பூமரம்
கொங்கணியான்-ஓர்மீன்
கொச்சித்தமரத்தை-ஓர் தமரத்தை
கொச்சிலேயம்-ஓரேலம்
கொச்சிலித்தி-ஓர்புல்
கொச்சை-வெள்ளாடு
கொடிக்கையான்-ஓர் கையாந்தகரை

கொடிக்கொற்றான்-ஓர்கொற்றான்
கொடித்தக்காளி-ஓர்தக்காளி
கொடித்தட்கி-ஓர்மரம்
கொடித்துத்தி-ஓர்துத்தி
கொடிப்பாலை-ஓர்செடி
கொடுக்கி-ஓர்பூடு
கொடும்மை-ஓர்பச்சிலை, ஓர்பூடு
கொட்டங்காய்-ஓர்மரக்காய், தேங்காய்.

கொட்டாவி விட்டிருக்கி-நாயுருவி
கொண்டகுளம்-எட்டிமரம்
கொந்தாழம்-ஓர்மரம்.
கொந்தாழை-ஓர்கடல்மரம்
கொல்லைப்பல்லி-ஓர்பூடு
கொளவில்-ஓர்மரம்
கொஞ்சி-குளஞ்சிமரம்
கொள்ளட்டு-ஓர்பூண்டு

கொள்ளியம்-உமரி, புன்கமரம்
கொற்றித்தலை-நிலவேம்பு

### கோ

கோலம்-தக்கோலம்
கோழி-கோழியவரை
கோடகசாலை-சதைகரண்டி
கோடு-கொம்பு
கோசம்-கோமயம்
கோழிச்சாறு-கோழியவரைச்சாறு
கோதண்டம்-நாதம்
கோழியண்டம்-கோழிமுட்டை
கோக்கிலாநந்தம்-மாமரம்
கோரோசனம்-கோரோசனை
கோசகாரம்-கரும்பு, தென்னமரம்.

கோபத்திரம்-தாமரைநூல்
கோமுத்திரிகை-ஓர்புல்
கோலகம்-திப்பிலி
கோலவணம்-துருசு
கோமம்-சங்கபாஷாணம்
கோழிச்சூடன்-ஓர்புல்
கோழித்தலைக்கெந்தகம்-சிவந்தகெந்தகம்
கோற்றேன்-கொப்பாந்தேன்

### கௌ

கௌவியம்-கோரோசனை
கௌவை-எள்ளிளங்காய்

### ச

சகேமாஞ்சி-பருவங்கரை
சடைச்சி-நெட்டி
சமுத்திரசேடி-சமுத்திரசாலை
சச்சிதாநந்தம்வளி-கல்லுப்பு
சமம்—அங்கப்பிச்சு
சமாதிக்கல்-மணிக்குடல்

சல்லிக்கொடி-வையகமூலி
சரீரக்கொழுப்பு-நரதாலி
சத்திசாரம்-அதிசாரம்
சதாசிவத்தி-சீனக்காரம்
சயிந்தலவண்-இந்துப்பு
சந்திலகம்-இந்துப்பு
சயீலுப்பு-வளையலுப்பு
சத்துப்பு-கரியுப்பு
சல்லாபவுப்பு-பூரணாதியுப்பு
சத்திரியுப்பு-பூரவுப்பு
சயிலந்தம்-சாதிலிங்கம்
சந்து-சந்தனம்
சனகிபூண்டு-இராட்சசன்சிறையில் வைத்த இலை
சத்திமூலம்-சத்திச்சாரணைவேர்
சதம்-இலை
சத்தி-உவாந்தி
சமானன்-கந்தரக்குழியிற்சந்திடை நிற்கும் வாயு
சனகி-சனகிப்பூண்டு
சந்தம்-வழு
சமுத்திரா-முடக்கற்றான்
சர்ப்பம்-பாம்பு
சசவாதம்-முயல்வாதம்
சர்த்தி-வாந்தி
சரக்கொன்றைத்தார் - சரக்கொன்றைவேர்
சத்தம்-இரசம்
சதாபரி-தங்கம்
சரவுலை-சர்னைவத்தூதல்
சறடு-அழுக்கு
சமுத்திராப்பழம்-சவுரிப்பழம்
சல்லிவேர்-தண்ணீர்விட்டான்
சக்கிரி-எண்ணெய்வாணியன்
சமிதை-கள்ளிவிறகு.
சகு-சவ்வரிசி
சக்கிராதம்-பன்றி
சக்கிரவர்த்தினி-சடாமாஞ்சி, செம்பஞ்சு.
சங்கராவாசம்-ஓர்வகைக்கற்பூரம்
சங்குக்கீரை-ஓர்கீரை
சங்குபுட்பம்-ஞாழல்
சங்குமதம்-சவ்வாது
சங்கமரு-வேம்பு
சங்கோசபிசுநம்-குங்குமம்
சங்கோசம்-மஞ்சள்
சசப்பிரியம்-முத்து, வெள்ளாம்பல்
சசமதம்-கஸ்தூரி
சஞ்சரி-தேனீ
சஞ்சரிகம்-வண்டு
சஞ்சிரிகை-இலந்தக்கனி
சடாபலம்-பனை
சட்பதாதி-சண்பகம், மாமரம்
சண்டகன்-இலிங்கபாஷாணம்
சண்டிக்கீரை-ஓர்கீரை
சதாபுட்பம் - முல்லை, வெள்ளெருக்கு

சதாபுட்பி-செவ்வெருக்கு
சதேசரு-இலவங்கப்பட்டை
சதுனி-வௌவால்
சதை-பாலைமரம், முன்னைமரம்
சத்து-அவுபலபாஷாணம்
சத்துருநாமத்தி-ஏகமப்பாஷாணம்
சந்திரகம்-பொன்வண்டு, மயிற்றோகைக்கண், மிளகு.

சந்திரகாந்தம்-வெள்ளாம்பல்
சந்திரநாகம்-ஓர்சரக்கு
சந்திரன்சிப்பி-முத்துச்சிப்பி
சந்திரகாம்புயம்-வெண்டாமரை
சமர்-முட்பன்றி
சமரி-பாம்பு
சமுத்திரகபம்-கடல்நுரை
சமுத்திரச்சோகி-ஓர்பூடு
சமுத்திராப்பச்சை-ஓர்செடி
சம்பங்கி-சாலங்கபாஷாணம்
சரகண்டபாஷாணம் - பாஷாணம் முப்பத்திரண்டினொன்று.
சரசிஜம் }
சரசிருகம் } தாமரை

சரசுவதி-மனோசிலை
சரணம்-பெருங்காயம்
சரணாயுதம்-கோழி
சருகட்டை-ஓரட்டை
சருவசாதகம்-வேங்கைமரம்
சருவரசம்-கறியுப்பு
சருவரி-மஞ்சள்
சலகுந்தலம்-ஓர்நீர்ப்பூண்டு
சலசர்ப்பிணி-அட்டை
சலசண்பகம்-தாமரை
சலபத்திரம்-அரசமரம்
சலமார்ஜ்ஜாரம்-நீர்பூனை
சலரசம்-உப்பு
சலவியாழம்-நீர்பாம்பு
சலாசம்-நீரட்டை
சலிலம்-நீர்
சழுதாகம்-வேங்கைமரம்
சனகம்-புயானை
சனார்த்தனம்-சுக்கு
சன்னராட்டகம்-சிற்றரத்தை
சன்னியனாயன்-ஓர்பூடு
சன்னிநாயகம்-ஓர்தும்பை

### சா

சாதிப்பூ-பிச்சிப்பூ
சாரசிங்கி-கல்லுப்பு
சாதிகாரம்-பொரிகாரம்
சாரகம்-இந்துப்பு
சாதிலிங்கம்-இருலிங்கவட்டி
சாணம்-சாதிலிங்கம்
சாலை-கோடகசாலை
சாணாக்கி-சனகிப்பூண்டு
சாதிபழம்-சாதிக்காய்
சாம்பாங்கி-பாஷாணம்
சாந்துப்பட்டை - வாசனைப்பட்டை.
சாரம்-நவாச்சாரம்
சாகவில்வம்-சேம்பு
சாக்குலம்-நஞ்சு
சாதிபம்-தவளை
சாதக்கட்சி-காந்தம்
சாதகநீர்ச்சிலை-கண்டகிச்சிலை
சாதகாரத்தி-கோழித்தலைக்கம்.
சாதிரேகம்-குங்குமப்பூ
சாதுகம்-பெருங்காயம்
சாத்திரகம்-இஞ்சி
சாரம்-இலுப்பை
சாரலம் }
சாராலம் } எள்.
சூரிசாதன்-கத்தூரிமிருகம்

### சி

சிகைக்காய்-சீயக்காய்
சிற்றாமரைப்பூ-பன்னீர்ப்பூ
சிகாரவுப்பு-கல்லுப்பு
சிவசாரம்-மனோசாரம்
சிவமூலகாரம்-சீனக்காரம்
சிரோசக்காரம்-வெடிகாரம்
சிலைகாரம்-வெடிகாரம்
சிவனாதியுப்பு-பூரணாதியுப்பு
சிரீ-பெண்
சிருவழுதனை-கண்டங்கத்திரி
சிங்கி-கடுக்காய்ப்பிஞ்சு
சிட்டி-சிற்றிலைச்செடி
சிவயோகி-வசம்பு
சித்திரபாலை - சிறு அம்மான் பச்சரிசி.
சிற்றரும்பீர்க்கு-பேய்ப்பீர்க்கு
சிங்கி-கலைமான்கொம்பு
சிற்றண்டம்-கோழிமுட்டை
சிறுநீர்-மூத்திரம்
சிவந்தபத்திரி-சாதிபத்திரி
சிகரம்-தலை
சிகாரம்-விந்து
சிவன்மூலி-சிவனார்வேம்பு
சிறு லவங்கம் - சன்ன லவங்கப்பட்டை.
சிறுதேக்கு-கண்டுபாரங்கி
சில்லு-புதியவேடு

சின்னபலா-குட்டிப்பலா
சிங்கி-கடுக்காய்ப்பூ
சிகண்டிகை-கருங்குன்றிச்செடி
சிகாவரம்-பலாமரம்
சிகிகண்டம்
சிக்கிரீவம் } மயில்துத்தம்.
சிஞ்சை-புளியமரம்
சிணுக்கு-உழலைமரம்
சிதர்-பூந்தாது
சித்தாமோகம்-கோரோசனை
சித்திரகம்-ஆமணக்கு
சித்திரமூலம்-கொடிவேலி
சிந்துபுட்பம்-சங்கு
சிந்தூரதம்-இந்துப்பு
சிபாருகம்-ஆலமரம்
சிபிவல்லபம்-மாமரம்
சிருங்கபேரம்-இஞ்சி
சிருங்கமோஹீ-சண்பகம்
சிலாசாரம்
சிலாத்துமசம் } இரும்பு.
சிவத்துருமம்-வில்வமரம்
சிற்சோமம்-சிர்ப்பந்தபாஷாணம்

### சீ

சீனிக்கிழங்கு - வத்தளைக் கிழங்கு.
சீலை-வெங்காரம்
சீரகம்-ஏரகம், சீரகம்
சீனப்பட்டை-பரங்கிப்பட்டை
சீதேவிப்பூண்டு-சாணுக்கிப் பூண்டு
சீனம்-படிகாரம்
சீலை-மனோசிலை
சீனி-சருக்கரை
சீதபீரு-மல்லிகைக்கொடி
சீதபுஷ்பம்-எருக்கு
சீதப்பிரயம்
சீதபூகம் } கருப்பூரம்.
சீதவற்கம்-அத்திமரம்
சீதளகம்-வெள்ளாம்பல்.
சீதுகந்தம்-மகிழமரம்

சீதேவியார் செங்கழுநீர் - ஓர் பூண்டு.
சீரவட்டம்-ஈயம்
சீரிணபன்னம்-வேம்பு
சீவப்பிரியை-கடுக்காய்மரம்
சீனவங்கம்-ஈயம்
சீனை-வன்னிமரம்

### சு

சுடுதாரத்தம்-சித்திரம்புலாவி
சுத்தாதி-மூளைஜலம்
சுருவணுதியுப்பு-சத்தியுப்பு
சுரபி-கள்
சுள்ளி-பாந்துளிர்
சுணங்கன்-நாய்
சுவை- கறிபதார்த்தம்
சுறவை-வீக்கம்
சுத்தி-மாங்கிஷப்பொறியல்
சுடுதாரத்தம்-சித்திரப்பாலை
சுகபலம்-எருக்கஞ்செடி
சுகுடம்-சேம்பு
சுகோதரம்-காளிசப்பத்திரி
சுக்கிகை-புளியாரை
சுசித்துருமம்
சுபதம் } அரசமரம்.
சுவை-மூங்கில்
சுரிப்புறம்-சங்கு, நத்தை
சுல்-வெள்ளி
சுல்லம்-தாமிரம்
சுவர்ணகதலி-ஓர்வாழை

### சூ

சூதபிலை-மா இலை
சூரியன்விந்து-வாலைரசம்
சூதசிந்தூரம்-ரசசிந்தூரம்
சூகரம்-பன்றி, மான்
சூபதூபனம்
சூரபங்கம் } பெருங்காயம்.
[illegible]

சூர்ணபாரதம்-இங்குலியம்
சூலசத்துரு-ஆமணக்கு

### செ

செந்தார்-செந்தூரா
செந்தாழம்பழம்-அன்னாசிப்பழம்
செந்தொட்டி-செம்பிஞ்சி
செங்கழுநீர்-மூளைஜலம்
செங்கடிவாயுப்பு-வெடியுப்பு
செந்நெருஞ்சல் - செப்பு நெருஞ்சில்.

செங்கரிப்பான்-கையாந்தகரை
செவ்வாலம்பருப்பு-வாளம்
செம்மறி-செம்மறியாடு
சென்னி உள்ளி-ஒருதலைவெள்ளைப் பூண்டு

சென்னை-பிறசென்னைமீன்
செடம்-செந்தியுரிபாஷாணம்
செந்தொட்டி-செங்காஞ்சொறி
செங்கத்தாரி-சுருள்பட்டை
செங்கையான்-ஓர்பூடு
செச்சை-வெட்சிமரம்
செடிக்குடிபுக்கி-நாகரவண்டு
செம்போத்து-சண்பகம்
செலக்குரு
செலக்கூர்மை } நவர்சாரம்
செலப்பிரீதி-கருப்பூரச்சிலை

### சே

சேங்கொட்டை-சேராங்கொட்டை
சேவகனார்கிழங்கு - கொங்கிலவன் வேர்
சேரை-சேரப்பகை
சேணுமரப்பட்டை - அருசிப் பட்டை
சேயாலிகை-கருநொச்சிமரம்
சேவியம்-வெள்ளைவெட்டிவேர்

### சை

சைஸ்வர்-பர்லியர்
சைதன்னியம்-வாலைரசம்
சைந்தவம்-இந்துப்பு

### சொ

சொகுசா-உயர்ந்தசெம்பு
சொக்காளி-ஓர்பூடு
சொறியன்-தவளை

### சோ

சோகி-பல்கறை
சோபாலிகை-அடுப்பு
சோமான்-சந்திரன், செம்பு
சோரி-இரத்தம்
சோம்பறை-சோம்பு
சோரக்கதண்டு-கருவண்டு

### சௌ

சௌகந்திகை - ஓர்வகைத் தாமரை
சௌபன்னம்
சௌவர்னம் } சுக்கு, மரகதம்
சௌமேருகம்-பொன்
சௌவீரம்-இலந்தைக்கனி, ஓர்மருந்து.
சௌவீரகம்-இலந்தைமரம்

### ஞ

ஞமலி-கல், நாய், மயில்
ஞலவம்-மின்மினிப்பூச்சி

### ஞா

ஞானவழி-மூளை
ஞாலம்-பூலோகம்

ஞாழல்பூ-குங்குமப்பூ
ஞானள்-நாதம்
ஞாளி-கோழி

## த

ததியோதனம்-தயிரிட்டசாதம்
தந்தம்-நகம், பல்
தனுராகம்-படிகாரம்
தனஞ்செயகாரம்-படிகாரம்
தசநாள்-பத்துநாள்
தள்ளடா-ஆதண்டை
தவசிவேர்-தவசிமுருங்கைவேர்
தண்டு-பொலிமதம்
தங்கம்-பரி
தளம்-அடியில்
தவளம்-வெண்மை
தகட்டரிதாரம்-தாளகம்
தகழிச்சி-கருப்பூரம்
தக்காளிப்பிள்ளை-பிள்ளைப்பூச்சி
தக்கிஷாரயன்-பொன்னம்பர்
தடம்-ஓர்மரம்
தண்டசாகம்-செம்போத்து
தண்டுல்பலை-திப்பிலிச்செடி
தண்டுலீகம்-ஓர்செடி, நெல் முதலியன வாயுவிளங்கம்

ததச்சதை-வாழைமரம்
ததிபலம் }
தந்தபலம் } விளாமரம்.
தத்துவண்டியன்-ஓர்பூச்சி
தநம்-சந்தனம்
தறுத்துவசம் }
தநுத்துவசை } சிறுநெல்லிச்செடி
தந்தபீஜகம்-மாதுளை
தபசியம்-முல்லைப்பூ
தப்பளை }
தரந்தம் } தவளை
தமயந்தி-மல்லிகையிலோர்பேதம்
தரகண்டிமை-யானைநெருஞ்சில்
தருசாரம்-கர்ப்பூரம்

தலபுஷ்பம்-தாழை
தவபோடகம்-ஆவிரை
தலாகிநி-நிலநெல்லிச்செடி
தவராஜம்-வெள்ளைச்சர்க்கரை
தனியுப்பு-அமுரியுப்பு

## தா

தாளி-தாழி, மிடா
தாள்-தாளகம்
தாமரை-ஓரிதழ்த்தாமரை
தாலு-நாவு
தாரை-சின்னி, கெவுரிபாஷாணம்
தார்வாசற்பீடம்-யோனி
தாரம்-அரிதாரம்
தாங்கி-மலைதாங்கி
தாதுமாதளை-ஓர்மாதளை
தாத்திரிபலம்-நெல்லிக்கனி
தாநகம் }
தாநாகம் } கொத்துமல்லி
தாநி }
தாபசப்பரியை-கொடிமுந்திரி
தாபல்கிதளம்-தாளிசபத்திரி
தாமிரபல்லவம்-அசோகமரம்
தாமிரிகை-குன்றிக்கொடி
தாமோதரன்-ஆமை
தார்மபந்த-மிளகு

## தி

திரிகடுகு-சுக்கு, திப்பிலி, மிளகு
திரிபலம் - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
தியக்கி-சல்லிக்கொடி
திரிகடல்வாழ்காரம்-வெடிகாரம்
திரிகோணவுப்பு-சத்தியுப்பு
திருமேனி-குப்பைமேனி
திருகியகள்ளி-திருகுகள்ளி
திரி-மூன்று
திருப்பி-வட்டத்திருப்பி
திருசம்-சுத்தரசம்

திரோதாயி - பஞ்சசத்தியானென்று.
திந்திடிசம்-புளியமரம்
திமிர்-சோம்பு
திரடம்-வெண்ணொச்சிமரம்
திரிசம்-வில்வமரம்
திரிபலம்-முருங்கை
திரிபலாசம்-முருக்கமரம்
திரிபுரமல்லிகை-ஓர்மல்லிகை
திரிமஞ்சள் - கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், மரமஞ்சள்.
திருகுதாழை-ஓர்தாழை
திருக்கொன்றை-ஓர்மரம்

## தீ

தீம்பாலை-தழுதிவாதிரம்
தீரவுப்பு-சத்தியுப்பு
தீநீர்-திராவகம்
தீச்சலம்-கடனுரை
தீச்சிடர்-வெடியுப்பு
தீட்சணகந்தகம்-ஈரவெங்காயம்
தீத்தோபலம்-சூரியகாந்தக்கல்
தீநிறம்-மாந்தளிர்க்கல்
தீப்புட்பம்-சண்பகப்பூ
தீபாந்தம்-பெருச்சாளி
தீர்க்ககணம்-வெண்சீரகம்
தீர்க்ககாண்டம்-கோரைப்புல்
தீர்க்கசாலம்-சாலமரம்
தீர்க்காஸனம்-பாம்பு
தீர்க்கரதம்-பன்றி

## து

துங்கநதி-மூளைஜலம்
துடங்கணம்-வெண்காரம்
துரிகாரம்-பொரிகாரம்
துழாய்-துளசி
துளி-ஆமை
துத்தம்-பாற்றுத்தம்
துரோணிதலம்-தாழை
துவிதாகதி-நண்டு
துறட்டிச்செடி-ஓர்முட்செடி

## தூ

தூது-தூதுவேளை
தூமம்-புகை
தூம்பிரகருப்பம் - துத்த பாஷாணம்.
தூலசர்க்கரை-பருத்திவிரை
தூலபிசம்-பஞ்சு
தூலவிருக்கம்-இலவமரம்
தூலிபலம்-இலவங்காய்
தூளிகுச்சம்-கதம்பப்பொடி
தூள்-பூந்தாது
தூற்குகலையன்-பிராய்மரம்
தூற்றுமையக்கொற்றன்-ஓர்கொடி
தூற்றுவாய்க்கொற்றன்-ஓர்கொடி

## தெ

தெரிகாரம்-பொரிகாரம்
தெகில்-ஓர்கொடி
தெல்லுப்பு-வளையலுப்பு
தெளிவெண்ணெய் - நறுவேப்பெண்ணெய்.

## தே

தேன்குழல்-பண்ணிகாரம்
தேவதாமணி-மணிக்குடல்
தேசம்-தேசாபுரம்
தேகவச்சிரகம்-சுத்தரசம்
தேசி-நாதம், குதிரை
தேவர்கோன்-தேவேந்திரன்
தேசநம்-மூங்கில்
தேசோமந்தம்-நெல்லி
தேசோவதி-யானைத்திப்பிலி
தேர்க்கூம்பு-கொடிஞ்சிமரம்
தேவகாஷ்டம்-தேவதாரி
தேவதூபம்-சாம்பிராணி

தேவலதை-அடுக்குமல்லிகை
தேவல்லபம்-சுரபுன்னை
தேவவிருட்சம்-ஓர்மரம்
தேவிகை-ஊமத்தை
தேன்கதலி-ஓர்வாழை
தேன்தோடை-ஓர்தோடை

தை

தைலம்-ஆமணக்குநெய்
தைலசௌரிகை-வௌவால்
தைலபர்ணிகம்-வெண்சந்தனம்
தைலபிபீலிகை-செவ்வெறும்பு

தொ

தொய்யாக்கீரை-துயிலிக்கீரை
தொய்யல்-துன்பம்
தொய்யில்-ஓர்கீரை

தோ

தோடா-ஆடாதோடை
தோகைகுழல் - முடிப்பிலே, முதியார் கூந்தல்.
தோகசம் } பால்.
தோகபாநயம்
தோதிப்பிரியம்-இலவங்கம்

தௌ

தௌதம்-வெள்ளி
தௌதிகம்-முத்து
தௌலேயம்-ஆமை

ந

நடுவுப்பு-கல்லுப்பு
நவநீதாதி-மூளைஜலம்
நஞ்சுமுறி-மணிக்குடல்
நகம்-கந்தரசம்
நருளிகை-சத்திசாரம்
நரிகாரம்-பெரியகாரம்
நரியுப்பு-கரியுப்பு
நறுத்தை-நறுந்தாளி
நடக்கிதம்-கெளரிபாஷாணம்
நன்றுக்கி-கெவுரிபாஷாணம்
நதி-கெந்தியுரிபாஷாணம்
நககாணம்-விந்து
நஞ்சுண்டபட்டை - நச்சுப்பாலைப்பட்டை.
நல்நாரி-சிவகரந்தை
நகரிபகம்-காகம்
நகையால்-பகன்றைச்செடி
நடநாயகன்-கெருட பச்சைக்கல்
நட்சத்திர கண்டகி - அநாசிச்செடி
நட்சத்திர சீரகம் - ஓர் சீரகம்

நட்சத்திரா கிருதி - வெண்சோளம்.
நடுவாய்க்காலி - ஓர் விஷசெந்து, கொடுக்கன்.

நண்டுக்காய்க்கீரை-ஓர்கீரை
நதீவடம்-காராலமரம்
நதீவரம்-தகரம்
நத்து-ஓர்பரவை, சங்கு
நம்பகம்-சீர்பந்த பாஷாணம்
நல்லம்மான் பச்சரிசி-ஓர்பூண்டு
நவலோகாங்கம்-காந்தம்
நவிரெழுசங்கு-முட்சங்கு
நளுங்கு-ஓர் கிளிஞ்சில்
நறுக்குமூலம்-வெட்டிவேர்
நறுந்தாளி-ஓர்கொடி
நற்சாங்கம்-சாலம்பபாஷாணம்
நற்சாரி-நவாசாரம்
நற்பர்குன்றி-சிந்துலவணம்

நா

நாகணம்-நகம்
நாரத்தங்கச்சல்-போசனகஸ்தூரி
நாதவச்சிரவாணி-முடிமாமிசம்
நாற்றம்-அங்கப்பிச்சு
நாதாவி-சரீரக்கொழுப்பு
நாதசாரம்-சிவசாரம்
நாகதெய்வம்-இந்துப்பு
நாடியுப்பு-வளையலுப்பு
நாதவடியுப்பு-கரியுப்பு
நாலைங்கள்ளி-இலைக்கள்ளி
நாழி-படி
நாகம்-நாகேசரம்

நாயகம்-கிரந்திநாயகம்
நாளிகேரம்-தேங்காய்
நாறி-நன்னாரி
நாகேசரம்-சிறுநாகப்பூ
நாராயணிதம்-கௌரி பாஷாணம்
நாபிரசம்-விந்து
நாதம்-மகாரசிங்கி, இரசம்

நாகரீகசெம்பு-தண்டு
நாககாணம்-செவ்வாமணக்கு
நாககற்பம் } செவ்வியம்
நாகசம்பவம்
நாகக்குவடு-செம்புமலை
நாகசம்-சிந்தூரம், வங்கம்
நாகதந்தி-ஓர்மரம்
நாகதமனி-ஓர்மரம்

நாடன்பருத்தி-ஓர்செடி
நாந்தெரனி-ஓர்பூடு
நாமவெகுண்டம்-தும்பை
நாய்க்குட்டிச்செடி-ஓர்செடி
நாலிகம்-எருமை, காகம், தாமரை
நாவிச்சட்டம்-கஸ்தூரி
நாறுகட்டி-பெருங்காயம்
நான்முகப்புல்-ஓர்புல்

நி

நிம்பவித்து-வேப்பங்கொட்டை
நிராடபதி-சரீரக்கொழுப்பு
நிம்பம்விரை-வேப்பம்விரை
நிலவேரு-நாகப்பூச்சி
நிம்பம்-எலுமிச்சம்பழம்
நிலக்கிழங்கு-நிலப்பனைக்கிழங்கு
நிசித்தண்ணீர்-நீராகாரம்
நிம்பத்தால்-வேப்பம்பட்டை
நிரத்துழாய்-நிலத்துளசி
நிலஞ்சனம்-இரசகற்பூரம்
நிம்பெண்ணை-வேப்பெண்ணை
நிசாபதி-கற்பூரம்
நிஷக்கல்லு-சீதாங்கபாஷாணம்

நீ

நீரொட்டிவிரை-நீராரைவிரை
நீரோம்-பாஷாணம்
நீச்சத்தாளி-இரசம்
நீர்ப்பூண்டு-நீர்முள்ளி
நீர்நெருப்பு-கல்லுருவி
நீர்மிட்டான்-தண்ணீர்மிட்டான்
நீகம்-தவளை
நீம்பல்-வெடியுப்பு
நீரசம்-தாமரை, மாதுளை
நீரக்குன்று-நத்தை
நீர்ப்பகன்றை-ஓர்பூடு
நீர்ப்பரிசை-ஆமை
நீலகண்டன்-ஓர்புரம், துருசி, முருங்கை
நீலக்காரம்-துருசு
நீலதரு-தெங்கு
நீலபதுமம்-நீலோற்பலம்
நீலாங்கம்-மலைத்தேன்
நீலாங்கு-புழு
நீலாம்புசம்-கருங்குவளை

நு

நுணல்-தவளை

நெ

தாளப்பிரமாணம்-10—காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, இலயை, யதி, பிரதாரம் இவையே தாள தசப்பிரமாணமென்ப. இவற்றுட் காலப்பிரமாணம்-10, அவை யாவன கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றுட் கணம் தாமரையிதழ் நூறடுக்கு யதிலோரிதழி லூசி செலுத்துங் காலம். கணமெட்டுக் கொண்டதிலவம் இலவ மெட்டுக்கொண்டது காட்டை. காட்டை யெட்டுக்கொண்டது நிமிடம். நிமிடமெட்டுக்கொண்டது துடி. துடியிரண்டு கொண்டது துரிதம். துரிதமிரண்டு கொண்டது இலகு. இலகிரண்டு கொண்டது குரு. இல்குமூன்று கொண்டது புதலும் குருவிரண்டு கொண்டது காகபுலம். மார்க்கம்-5, தக்கணம், வார்த்திகம், சித்திரதரம், அர்த்த சித்திரம், அதிசித்திரம், இவற்றுள் எட்டு மாத்திரை யோர் கலையாகக் கொண்டது தக்கணம் நான்கு மாத்திரை யோர் கலையாகக்கொண்டது வர்த்திகம் இரண்டு மாத்திரை யோர் கலையாகக் கொண்டது சித்திரம் ஒரு மாத்திரை யோர் கலையாகக் கொண்டது சித்திரதரம் அரை மாத்திரை யோர் கலையாகக் கொண்டத்தி சித்திரம். கொடியளவு மாத்திரை கிரியை-2, மார்க்கம் தேசிகம், இவற்றுண் மார்க்கம்-8, இவற்றுனி சத்தம்-4, சசத்தம்-4, நிசத்தமாவது ஆலாபம், நிட்கிராமம் விட்சேபம் பிரவேசம். சசத்தமாவது துருவம் சம்மியம் தாளம் சன்னிபாதம். தேசிகம்-8, துருவகம் சாப்பிணி கிருடினை பதுமினி விசர்ச்சிதை விச்சிபதம் பதாகை பதிதம் இவற்றின் இலக்கியங்களை நூலா லுணர்க. அங்கம்-6, அவையாவன o s ஜி இவை முறையே பிறை, மதி, கணை வில் பாம்பு புள்ளடி முறையே யிவற்றின்பெயர் அநு துரிதம் துரிதம் இலகு குரு புலுதம் காகபதம் இவற்றி லும்பத்திகளும் பரியாயநாமங்களும் வண்ணங்களும் காதைப் பிரமாணங்களும் நூலா லுணர்க. கிரகம்-4 அதீதம் அநாகதம் சமம் விடமம் இவற்றுட் குரான்முன்னுந் தாளம் பின்னும் வருவததீதம்,—தாள்முன்னுங் குரல் பின்னும் வருவ தநாகதம்,—குரலுந் தாளமு மொத்துவரிற்சமம்,—குரலுந்தாளமு முன்னும் பின்னுங் கழந்துவருவது விடமம். சாதி-5, சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீரணம், இவை முறையே பிரமவரச வைசிய சூத்திர சங்கிரமம், இவற்றை முற்கூறிய விலகு, அக்கரகாலங்களா லறிவது. கலை-3—ஏககலை, துவிகலை சதுர்க்கலை இவற்று ளக்கரகாலமாயுங் கிரியையோடும் வருவது ஏககலை. இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது விகலை. இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது சதுர்க்கலை. இலயம்-3—விளம்பம், மத்திமம், துரிதம் இவற்று ளக்கரகாலமாய்க் கிரியையோடு வருவது விளம்பம், இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது மத்திமம், இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது துரிதம், யதி-6—சமம் விடமம், மிருதங்கம், வேதமத்தியம், கோபுச்சம், சுரோதோவகம், இவற்றுள் நெட்டங்கமாயினுங் குற்றங்கமாயினு மொரேவிதமாய் வருவது சமயதி, ‿ ‿, —, எல்லாவங்கமுங் கிரமமின்றிக் கலந்து வருவது விடயமதி s‿o, முதலிய னுங் கடையிலும் குற்றங்குமிடையி னெட்டங்கமும் வருவது மிருதங்கயதி ‿oso‿ முதலினுங் கடையிலும் நெட்டங்கமும் இடையிற் குற்றங்கமும் வருவது வேதமத்தியதி, -‿-, முதலிலே நெட்டங்கமு மீற்றிலே குற்றங்கமுமாய் நேர்ந்துவருவது கோபுச்சயதி s-o ‿, முதலிலே குற்றங்கமு மீற்றிலே நெட்டங்கமுமாய்வருவது சுரோதோவகம், ‿o-ss,-மற்றைய வில் விலக்கணத்தாற் கண்டுணர்க.

தானம்-3—தலைப்படு தானம், இடைப்படு தானம், கடைப்படு தானம். அவையாவன அறத்தானீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத் தோரைக் கொள்கெனப் பணிந்து குறையிரந்து தம்முள்ள முவந்தீதல் தலைப்படு தானம். ஆதுலர் குருடர் மாதா முதற்பிறர் சிறுமையைப்பற்றி மனமிரங்கியீவது இடைப்படுதானம். புகழார் வங்கையாறச் சங்கனோட்டல் கடைப்பாடிவற்றைப்பற்றி யீவது கடைப்படு தானம்.

தானை-6—தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

## தி

திக்கு-8—கிழக்கு-தென் கிழக்கு, தெற்கு-தென் மேற்கு, மேற்கு-வடமேற்கு, வடக்கு-வடகிழக்கு, இவையே அட்டதிக்கு.

திக்கு-10—மேற் சொன்னவையன்றி மேலுங் கீழுங் கூட்டித் தசதிசையென்ப: கிழக்குக் கருடதிசை, தென்கிழக்குப்-பூனைத்திசை, தெற்கு - சிங்கத்திசை, தென்மேற்கு - சுனகதிசை, மேற்கு நாகத்திசை, வடமேற் கெலித்திசை, வடக்கு - யானைத்

திசை, வடகிழக்கு-முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ்ப்பாதாளதிசை.

திக்குப் பாலகர்-8—கிழக்காதி முறையே இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இதற்கு முறையே குறிகளாவன. கொடி, புகை, சீயம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்கு யானைகள்-8—கிழக்காதி முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம், இவையே யட்டதிக்கயம். இவற்றிற்குமுறையே பிடியானைகளாவன அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

திணை-2—உயர்திணை, அஃறிணை இவற்றுள் உயர்திணை மக்களுந் தேவரும் நரகருமாம், அஃறிணை மற்ற உயிருள்ளனவு மில்லனவு மாகிய யாவுமாம்.

திணை-5—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், இவற்றுள் மலைச்சார்பு குறிஞ்சி, நீரில்லாக் கடு நிலம்பாலை, காட்டுச்சார்பு முல்லை, வயற்சார்பு மருதம், கடற்சார்பு நெய்தல்.

திதி-15—பிரதமை-1, துவிதையை-2, திரிதியை-3, சதுர்த்தி-4, பஞ்சமி-5, சஷ்டி-6, சத்தமி-7, அட்டமி-8, நவமி-9, தசமி-10, ஏகாதசி-11, துவாதசி-12, திரியோதசி-13, சதுர்தசி-14, இவற்றிற் சுக்கிலபக்கத்திற் சுத்தமென்றுங் கிருட்டின பக்கத்திற் பகுளவமென்றுங் கூட்டுக. பதினைந்தாந் திதியாவது சுக்கில பக்கத்திற்குப் பௌர்ணமி கிருட்டின பக்கத்திற்கு அமாவாசியை.

திரவிடம்-5—திரவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம் - 5—மலைபடு திரவியம், காடுபடுதிரவியம், நாடுபடு திரவியம், நகர்படு திரவியம், கடல்படு திரவியம். இவற்றுண் மலைபடுதிரவியம் மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம். காடுபடுதிரவியம், இருல், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி. நாடுபடுதிரவியம் செந்நல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். நகர்படுதிரவியம் அரசன், பித்தன், மந்தி, யானை, கண்ணாடி. கடல்படுதிரவியம். உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திருமாலவதாரம்-10—மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி இவற்றிற்குக் காரணம் (வேதத்தைத் திருடிக் கடலிலொளித்த சோமுகாசூரனென்னு மிராக்கதனைக் கொல்ல மச்சாவதாரம்) (கடலைக் கடையும்போது மந்தரமலையைத் தாங்கக் கூர்மாவதாரம்) (பூமியைப்பாயாக விரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவு மவனைக்கொல்லவும் வராகவதாரம்) (இப்பழிவாங்கச் சருவதேவ வணக்கம் விலக்கின வன்றம்பி இரணிய கசிபனைக் கொல்ல நரசிங்காவதாரம்) இந்நான்கவ தாரத்துக்குந் தந்தை தாயரில்லை. (மாவலியை யடக்கக் காசிபனுந் திதியுந் தந்தை தாயாக வாமனுவதாரம்) (அரசராற் றுழ்க்கப்பட்ட பார்ப்பார் நிமித்த மவ்வரசரைக் கொல்ல சமதக்கினியு மிரேணுகையுந் தந்தைதாயாகப் பரசுராமாவதாரம்) (இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக விராமாவதாரம்) பிரலம்பன் முதற்பல இராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தையாகப் பலபத்திர ராமாவதாரம். (பாரதுடைக்க வசுதேவனுந் தேவகியுந் தந்தை தாயாக கண்ணனவதாரம்.) அறத்தை நிலைபெறச் செய்யக் கற்கியவதாரம்.

திருமாலவதாரம்-15—சனகன், சனந்தனன், சனாதன், சனற்குமாரன், நர நாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாயுதம் - சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

### தீ

தீ-3—உயிரிலுள்ள தீ, உதரத்துள்ளதீ, சினத்திலெழுந்தீ, அன்றியும் வேதாக்கினி-3-காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம்.

தீக்குணம்-10—பொய் சொல்லல், கோட் சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனிலை சொல்லல் இந்நான்கும் வாக்கின்றீக்குணம் களவாடப் போதல், வழிதே

தொழில் செயல், கொலைசெயல் இம்மூன்றுங் காயத் தீக்குணம். கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை இம்மூன்று மனத்தீக்குணம்.

தீவு-7—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு இவ்வெழுவகைப் பொருளு மவ்வத்தீவின் மிக்கனவாகையாலிவற்றால் பெயர்பெற்றன.

### து

துரககதி-5—மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர்-10—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

### தே

தேயம்-56—அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னுடம், காசம், காஸ்மீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குருகுலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கோளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம்,

மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர்-5—பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன் இவர் பஞ்சதேவதையும் பஞ்சகருதாக்களுமென்ப.

தேவர்கள்-33, ஆதித்தர்-12, அச்சுவினிகள்-2, உருத்திரர் - 11, வசுக்கள்-8.

### தொ

தொழில்-3—ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில்-6—உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில்-6--அந்தணரறுதொழில்-ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். அரசராறுதொழில்-ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல். வைசியராறுதொழில்-ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல். சூத்திரராறுதொழில் - முதன் மூவர்க்கேவல்செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழில் செயல், காருகவினைகளாக்கல், இவற்றிற் குயிலுவத் தொழில்களாவன. தோற்கருவிகளைக் கொட்டலுந் துளைக்கருவிகளை யூதலுமாம். காருகவினைகளாவன-பட்டுநூலையும் பருத்தி நூலையுங்கொண் டாடையாக்கலுஞ் சுமத்தலு முழத்தலுமாம்.

### தோ

தோற்றம்-2, சரம், அசரம். இவற்றுட் சரம் நடையுள்ளன. அசரம் நடையில்லன.

தோற்றம்-4—பை, முட்டை, நிலம், வியர்வை.

### ந

நட்சத்திரம்-27—அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவற்றுள் ஒவ்வொன்றுமுறையே மேடமுதற் பன்னிரண்டு ராசிகளிற் பதின்மூன்று பாகமு மிருபது கலையுங் கொண்டவிடம்.

நதி-7—கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி இவையே சத்ததீர்த்தமெனப்படும்.

நதி-11—மேற்சொல்லிய வேழின்மேல் சிந்து, தாமிரபாணி, துங்கபத்திரி, கிட்டிணி யென்றுங் கூட்டுக.

நரகம்-7—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவட்டம்-7—தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, அழற்பிரபை, அவையாவன இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு-7—இசைகாண்க.

நற்குணம்-10—மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல் இந்நான்கும் வாக்கினற்குணம். கோயில் வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல் இம்மூன்றுங் காயநற்குணம், அருளினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று இம்மூன்றும் மனநற்குணம்.

### நா

நாகம்-8—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் இவற்றைக் கடவுட் பாம்பென்ப. இவை முறையே கிழக்குமுத லெண்டிக்கிற் பூமியைத் தாங்குவதன்றியே நடுவே சேடனென்னு நாகம் பூமியைத் தாங்காநிற்கும். இந்நவ நாகமும் காசிபப் பிரமாவுக்கு மவன் மனைவிகள் பதின்மூவருட் கத்துருவைக்கும் பிறந்தன.

நாடி-10—சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி. அவையாவன சுழிமுனை யாதாரமாறினு மூடுருவி நிற்பது. இடை பிங்கலை யிரண்டுங் கத்திரிக்கோல்போற் பின்னிற்பன. காந்தாரி நாபியிற் றோன்றிச் சத்த மேழுக்குமேழு நாடியாய்க்கண்டத்துறுவது. அத்தி, சிகுவை யிரண்டும் பத்துநாடியுற்றுக் கண்ணினிற்பன. அலம்புடை, புருடனிரண்டுஞ் செவியினூற்றிருபது நாம்புற்றிருப்பன. குகு நாடியுறைந்து குய்யம் பற்றி நிற்பது. சங்கினி உபத்தத்தைப்பற்றி யிருப்பது.

நாட்டமைதி-6-செல்வம், விளை, நிலம், செங்கோல், நோயின்மை வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம்-7--தொட்டியார், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டுக்குற்றம்-8—விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிருமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

### நி

நிலம்-4—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலை-4—பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் இவை நான்கும் விற்றொடுத் தம்பினையெய்வார்க்குரிய நிலை. இவற்றுளொருகாலின் முருகான் முடக்கல் பைசாசநிலை. இருகாலும் பக்கல்வளைவு மண்டலித்தலே மண்டலநிலை. வலக்கான் மண்டலித் திடக்கான் முந்துதலே யாலீடநிலை. வலக்கான் முந்துற் றிடக்கான் மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

### நூ

நூல்-3—முதனூல், வழிநூல், சார்புநூல். இவற்றுளொருவன் முன்கண்டுரைத்ததே முதநூல். முதனூல்வழியே விகற்பித் துரைத்த நூலே வழிநூல். அவ்விருநூற் பொருட் கூட்டித் திரிபுவேறுடைய நூலே சார்புநூல்.

நூற்பயன்-4—அறம், பொருள், இன்பம், வீடு.

### ப

பக்குவர்-3—கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம்-5—செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேராத்தை, சுக்கு.

படைவகுப்பு-4—அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி-5—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் இவற்றிற்கு முறையே யெழுத்து அ-இ-உ-எ-ஒ உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு. பிற்பக்கமாகில் உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை, சாவு. தூக்கமில்லாத பொழுதறிந்து செய்யுண் முதலிய செய்தனன்மை.

பண்-4—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி-4—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் இவற்றுள் கடவுளுலகத்தில் வாழ்தலே சாலோகம். கடவுள் சமீபத்தில் வாழ்தலே சாமீபம். கடவுளுருப் போன்று வாழ்தலே சாரூபம். கடவுளோடொன்றி வாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம்-3—கால பரிச்சேதம், தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம் அவையாவன ஒருகாலத்துண் டொருகாலத் தின்றென்பது காலபரிச்சேதம். ஒருதேயத்துண் டொருதேயத் தின்றென்பது தேயபரிச்சேதம். ஒருபொருளிதுவாகு மொருபொருளிஃதன்றென்பது வத்துபரிச்சேதம்.

பருவகாலம்-6—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் இவையே யாவணி முதலாக இரண்டிரண்டு மாதமொவ்வொன்றும்.

பருவம்-4—வாலை, தருணி, பிரவிடை, விருத்தை இவை பெண்கட்குரிய பருவமாம்.

பருவம்-7—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் இவர்க்கு முறையே வயதெல்லை ஐந்து முதலேழளவும் பேதை. எட்டு முதற் பதினொன்றளவும் பெதும்பை. பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவு மங்கை. பதினான்குமுதற் பத்தொன்பதளவு மடந்தை. இருபதுமுத லிருபத்தைந்தளவு மரிவை. இருபத்தாறுமுதற் முப்பத்தொன்றளவுந் தெரிவை. முப்பத்திரண்டுமுதற் நாற்பத்தளவும் பேரிளம்பெண். ஆகையா லொவ்வொரு பருவங்கொண்ட வருடம் 3-4-2-6-6-9 இவைபெண்கட்குரியபருவமாம்.

பலை-3—கடுக்காய், நெல்லிக்காய், தானறிக்காய் இவையே திரிபலையென்ப.

### பா

பா-4—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, வொன்றுகூட்டி யைந்தென்பாருமுளர்.

பாடை-18—அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பாதம்-5—கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமாபாதகம்.

பாதகம்-7—சித்தசமுன்னதி, அருத்தலோபம், காமம், வைடமமியம், அசனப்பிரியம், கோபம், அநுட்டனம், இவையே சத்தவிசனம். இவை முறையே அகங்காரம், உலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல், சோம்பல், இவையேழுந் தலைமையான பாதக மெனப்படும்.

பாலை-7—இசையைக்காண்க.

பால்-5—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பால்-5—முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை இவற்றுண் மயிரை யுச்சியின் முடித்தலே முடி. பக்கன் முடித்தலே கொண்டை. பின்னே சொருகல் சுருள். சுருட்டி முடித்தலே குழல். பின்னிமுடித்தலே பனிச்சை.

பாவபுண்ணியவழக்கம் - 3—செய்தல், செய்வித்தல், உடன்படல்.

பாவினம் - 3—தாழிசை, துறை, விருத்தம்.

### பி

பிணி-3—வாதம், பித்தம், சிலேட்டுமம்.

பிரபந்தம் - 96—அவையாவன:—சாதகம், திதிநிலை, வாரநிலை, நாண்மீநிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை, இவ்வேழ்வகை யுறுப்புக்கள் நிலையையுஞ் சோதிட நூலானன்குணர்ந்தவற்றை யமைத்தவற்றுற் றலைவற்குறுவன கூறுவது. மற்றும் யுகாதியாண்டு முதலியவுங்கொள்க.

பிள்ளைக்கவி:—காப்பு, செங்கீரை தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல் விருத்தத்தாற் பப்பத்தாகக் கூறுவ தாண்பாற் பிள்ளைக்கவி. இவ்வுறுப்பினுட் கடை மூன்றொழித்துக் கழங்கு, அம்மானை, ஊசல், என்பவற்றை கூட்டி மேற்சொல்லியவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக் கவியாம்.

பரணி—போர்முகத் தாயிரங் களிற்றி யானையைக் கொன்ற வீரனைத் தலைமகனாகக் கொண்டு கடவுள் வாழ்த்துங் கடை திறப்பும் பாலைநிலமுங் காளி கோயிலும் பேய்களோடு காளியுங் காளியோடு பேய்களுஞ் சொல்லத் தான் சொல்லக் கருதிய தலைவன்கீர்த்தி விளங்கலு மவன் வழியாகப் புறப்பொருடோன்ற வெம்போர் வழங்க விரும்பதுமென் றிவையெல்லா மிருசீரடி, மூச்சீரடி யொழித்தொழிந்த மற்றைய வடிவாக வீரடிப் பஃறாழிசையாற் பாடுவது.

கலம்பகம்—ஒருபோதும் வெண்பாவும் கலித்துறையு முதற் கலியுறுப்பாக முற்கூறிப் புய வகுப்பு மதங்கம் அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாணம் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னுமுப் பதினெட்டுருப்புகளு மியைய மடக்கு மருட்பா ஆசிரியப்பா வஞ்சிப்பா ஆசிரிய விருத்தம் கலி விருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை வெண்டுறை என்னு மிவற்றுவிடையே வெண்பா கலித்துறை விரவியந்தாதித் தொடையான்

முற்றுங் கூறுங்காற் றேவர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற் றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும் வைசியர்க் கைம்பதும் சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

அகப்பொருட்கோவை—இருவகைப்பட்ட முதற்பொருளும் பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும் பத்து வகைப்பட்ட வுரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்றவன் புடைக்காமப் பகுதியவாங்கள் வொழுக்கத்திணையுங் கற்பொழுக்கத் திணையுங் கூறுதலே யெல்லையாகக் கட்டளை கலித்துறை நானூற்றாற் றிணை முதலாகத் துறையீறாகக் கூறப்பட்ட பன்னிரண்டகப் பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப்படுவது. இது வெண்பா அகவல் கலி வஞ்சி வண்ணம் இவற்றானும் வழங்கப்படும்.

ஐந்திணைச் செய்யுள்—புணர்தன் முதலிய வைந்துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையுங் கூறுவது.

வருக்கக்கோவை—அகர முதலாகிய வெழுத்து வருக்க மொழிக்கு முதலாயெழுத்து முறையே காரிகைத் துறைப் பாட்டாகப் பாடுவது.

மும்மணிக்கோவை—ஆசிரியப்பாவும் வெண்பாவும் நேரசையு நிறையசையுங் கொண்டெழுத்தெண்ணிப் பாடுங் கலித்துறையு முறையே தொகை முப்பதுபெற வடுக்கி யந்தாதித் தொடையாற் பாடுவது.

அங்கமாலை — ஆண்மகனுக்கும் பெண்மகனுக்கும் மிக்கனவெடுத்துக்கூறு மவயவங்களை வெண்பாவா லாயினும் வெளிவிருத்தத்தாலாயினும் பாதாதிகேசங் கேசாதிபாதமுறை பிறழாது தொடர்வுறப் பாடுவது.

அட்டமங்களம்— கடவுளைப் பாடி யக்கடவுள் காக்க வென வாசிரிய விருத்த மெட்டி லந்தாதித்துக் கூறுவது.

அநுராகமாலை—தலைவன் கனவின்ணொருத்தியைக் கண்டு கேட்டுண்டுயிர்த் தினிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கற் குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

இரட்டைமணிமாலை—முறையானே வெண்பாவுங் கலித்துறையு மிருபஃதந்தாதித் தொடையான் வருவது நேரிசை வெண்பாப் பத்தும் ஆசிரிய விருத்தம் பத்து மந்தாதித் தொடையாற் பாடுவது.

இணைமணிமாலை — வெண்பாவுமகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக விரண்டிரண்டாக விணைத்து வெண்பாவகவலிணைமணிமாலை வெண்பா கலித்துறை யிணைமணிமாலை என நூறு நூறு அந்தாதித் தொடை நான்காலும் பாடுவது.

நவமணிமாலை—வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதிப் பாடுவதும்.

நான்மணிமாலை — வெண்பாவுங் கலித்துறையும் விருத்தமு மகவலு மந்தாதித் தொடையாக நாற்பது பாடுவது.

நாமமாலை—அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவா லாண்மகனைப் புகழ்ந்துப் பாடுவது.

பலசந்தமாலை—பப்பத்துச்செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுட் கூறுவது.

பன்மணிமாலை—மேற்சொல்லிய கலம்பகத்துள் வருமொருபோகுமம்மானையு மூசலுமின்றி யேனையுறுப்புகளெல்லாமமைய வவ்வாறு கூறுவது இதையே யகலம்.

மணிமாலை—எப்பொருண்மேலும் வெண்பா விருபதுங் கலித்துறை நாற்பதும் விரவி வருவது.

புகழ்ச்சிமாலை—அகலவடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக்கூறுவது.

பெருமகிழ்ச்சி மாலை—தலைவியினழகு குணமார்க்கஞ் சிறப்பினைக் கூறுவது.

வருக்கமாலை--மொழிக்குமுதலாம் வருக்க வெழுத்தினுக்கு ஒவ்வோர் செய்யுட் கூறுவது.

மெய்க்கீர்த்தி மாலை—சொற்சீரடி யென்னுங் கட்டுரைச்செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது.

காப்புமாலை—தெய்வங்காத்தலாக மூன்று செய்யுளானும் ஐந்து செய்யுள்ளானும் ஏழு செய்யுள்ளானும் பாடுவது.

வேனின் மாலை—வேனிலையு முதிர்வேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுவது.

வசந்தமாலை—தென்றலை வருணித்துப் பாடுவது.

தாரகை மாலை—அருந்ததிக் கற்பின்மகளிர்க் குள்ள வியற்கைக் குணங்களை வகுப்பாற் கூறுவது தூசிப்படையி னணியைப் புகழ்ந்த வகுப்பென்பாருமுளர்.

உற்பவமாலை—திருமால் பிறப்பு பத்தனையு மாசிரியவிருத்தத்தாற் கூறுவது.

தானை மாலை—அகவலோசையிற் பிறழா தாசியப்பாவான் முன்ன மெடுத்துச் சொல்லுங் கொடிப்படையைக் கூறுவது.

மும்மணிமாலை - வெண்பாவுங் கலித்துறையு மகவலு மந்தாதித் தொடையான் முப்பது பாடுவது.

தண்டக மாலை—வெண்பாவான் முந்நூறுசெய்யுட் கூறுவது. இது வெண்புணர்ச்சி மாலையெனவும்படும்.

வீரவெட்சிமாலை-சுத்தவீரன் மாற்றானூரிற் சென்று பசுநிரை கோடற்கு வெட்சி பூமாலைசூடி யவ்வண்ணம் போய் நிரை கவர்ந்துவரி னவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப்போய் வந்தவெற்றி பாடுவது.

வெற்றிக்கரந்தை மஞ்சரி—பகைவர் கொண்ட தந்நிரை மீட்போர் கரந்தைப்பூ மாலைசூடிப் போய் மீட்பதைக் கூறுவது.

போர்க்கெழுவஞ்சி—மாற்றார் மேற் போர்குறித்துப்போகின்ற வயவேந்தர்வஞ்சிப்பூமாலைசூடிப் புறப்படும் படை யெழுச்சிச்சிறப்பை யாசிரியப்பாவாற் கூறுவது.

வரலாற்றுவஞ்சி—குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது.

செருக்களவஞ்சி—போர்க்களத்திலே யட்ட மனிதருடலையும் யானை குதிரை யுடலையு நாயும்பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந்தின்று களித் தாரவாரமாயிருக்கப் பூதமும்பேயும் பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப்பாடுவது. இதையே பறந்தலைச் சிறப்புப் பாட்டுமென்ப.

காஞ்சிமாலை—மாற்றா ரூர்ப்புறத்துக் காஞ்சிப் பூமாலைசூடி யூன்றலைக் கூறுவது.

நொச்சி மாலை—புறத்தூன்றிய மாற்றார்க் கோடலன்றி நொச்சிப் பூமாலைசூடித் தன்மனை இல் காக்குந் திறங்கூறுவது.

உழிஞை மாலை—மாற்றா ரூர்ப்புறஞ்சூழ வுழிஞைப் பூமாலை சூட்டிபகை வளைப்பதைக் கூறுவது.

தும்பை மாலை—மாற்றாரோடு தும்பைப் பூமாலை சூடிப்பொருதுவதைக் கூறுவது.

வாகைமாலை—மாற்றாரை வென்று புகழ்படைத்து வாகை மாலைசூடுவதையாசிரியப்பாவாற் கூறுவது.

வாதோரணமஞ்சரி—கொலைபுரி மதயானையை வயப்படுத்தி யடக்கினவர்கட்கு மெதிர்பொரு களிற்றை வெட்டி யடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவாற் றொகுத்துப் பாடுவது.

எண்செய்யுள்—பாட்டுடைத்தலைவன் றாரினையும் பெயரினையும் பத்து முதலாயிரமளவும் பாடியெண்ணுமற் பெயர் பெறுவது.

தொகைநிலைச் செய்யுள்—நெடிலடிச் செய்யுளாற் றொகுத்தது நெடுந் தொகையும், குறளடிச் செய்யுளாற் றொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவாற் றொகுத்தது கலித்தொகையும் போல்வன.

ஒலியலந்தாதி-பதினாறு கலையோரடியாகவைத் திங்ஙன நாலடிக் கறுபத்து நாலுகலை வகுத்துப் பலசந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறாம லந்தாதித்து முப்பதுசெய்யுள் பாடுவது. சிறுபான்மை யெட்டுக் கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா வகவல் கலித்துறையாகிய விம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதிப் பாடுவதுமாம்.

பதிற்றந்தாதி-பத்துவெண்பா பத்துக் கலித்துறைப் பொருட்டன்மைதோன்ற வந்தாதித்துப் பாடுவது.

நூற்றந்தாதி—நூறுவெண்பாவினாலேனு நூறு கலித்துறையினாலேனு மந்தாதித் தொடையாற் கூறுவது.

உலா—இளமைப் பருவமுற்ற தலைமகனைக் குலங்குடி பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றானின்றனென்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்தவன் பவனிவரப் பேதை முதலிய வேழுபருவப் பெண்களுங் கண்டு தொழுவ

தாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

உலாமடல் கனவிலொரு பெண்ணைக்கண்டு கலவியின்பறுகர்ந்தோன் விழித்தபின் னவள் பொருட்டு மடலூர்வேனென்பதைக் கலிவெண்பாவான் முற்றுவிப்பது.

வளமடல் அறம்பொருளின்பமாகிய வம்முக்கூறு பாட்டின் பயனையெள்ளி மங்கையர் திறத்துறுங் காமவின்பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைமகனியற் பெயர்க்குத் தக்கதை யெதுகையாக காட்டியுரைத்தவ் வெதுகைபடத் தனிச்சொலின்றி யின்னிசைக் கலிவெண்பா வாற்றலைமகனிறந்துகுறை பெறாது மடலேறுவதாயீரடி யெதுகைவரப் பாடுவது.

ஒருபா வொருபஃது அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாய விவற்றி லொன்றனாலந்தாதித் தொடையாற் பத்துப் பாடுவது.

இருபா விருபஃது பத்து வெண்பாவும் பத்தகவலு மந்தாதித் தொடையா னிருபதிணைந்து வருவது.

ஆற்றுப்படை அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருநரில் நால்வரு ளொருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசுபெற்றுவருவாராற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமுஞ் சொல்வது.

கண்டபடைநிலை அரசருமரசரைப் போல்வாரு மவைக்கணெடிது வைகியவழி மருத்துவரு மமைச்சரு முதலியோ ரவர்க்குக் கண்டுயில்கோடலைக் கருதிக்கூறுவது.

துயிலெடைநிலை தன்வலியால் பாசறைக்கண்ணொரு கனகவற்சியின்றித் துயின்ற வரசர்க்கு நல்லபுகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெழுப்புதலாகப் பாடுவது.

பெயரின்னிசை பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார இன்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

ஊரின்னிசை பாட்டுடைத் தலைவனூரினைச்சார வின்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

பெயர் நேரிசை பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார நேரிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்நேரிசை பாட்டுடைத் தலைவனூரினைச்சார நேரிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர் வெண்பா வெண்பாவானூரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுள் கூறுவது.

விளக்குநிலை வேலும் வேற்றலையும் விளங்கா தோங்கியவாறு போலக் கோலொடு விளக்கு மொன்றுபட் டோங்குமாறோங்குவதாகக் கூறுவது.

புறநிலை நீவணங்குந் தெய்வ நின்னைப் பாதுகாப்ப நின்வழி வழி மிகுவதாகவெனக் கூறுவது.

கடைநிலை சான்றோர் சேணிடை வருதலார்பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கென்வரவினைத் தலைவற்கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

கையறுநிலை கணவனொடு மனைவிகழிந்துழி யவர்க்கப்பட்டவழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித் தாமிறந்துபடாதொழிந்த வாயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலையைக் கூறுவது.

தசாங்கப் பத்து நேரிசை வெண்பாவா லரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

தசாங்கத்தயல் அரசன் இராசாங்கத்தினை யாசிரிய விருத்தம் பத்தினாற்பாடுவது.

அரசன் விருத்தம் பத்துக் கலித்துறையு முப்பது விருத்தமும் கலித்தாழிசையுமாகிய விவற்றால் மலை, கடல், நாட்டு வருணனையும் நில வருணனையும் வாண்மங்கலமுந் தோண் மங்கலமும் பாடி முடிப்பது இது முடிபுனைந்த வேந்தற்காம்.

நயனப்பத்து கண்ணினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

பயோதரப் பத்து, முலையினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

பாதாதிகேசம், கலிவெண்பாவா லடிமுதன் முடியளவுங் கூறுவது.

கேசாதிபாதம், கலிவெண்பாவான் முடிமுத லடியளவுங் கூறுவது.

அலங்காரபஞ்சகம், வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்த மிவற்றையே மாறிமாறி நூறு செய்யுளாக வந்தாதிபாடுவது.

கைக்கிளை, ஒருதலைக் காமத்தினை யைந்து விருத்தத்தாற் கூறுவது. அன்றி வெண்பா முப்பத்திரண்டு செய்யுளாற் கூறுவதுமாம்.

மங்களவள்ளை உயர் குலத்துதித்த மடவாலை வெண்பா ஒன்பதாலும் வருப் பொன்பதாலும் பாடுவது.

தூது ஆண்பாலும் பெண்பாலுமவரவர் காதல் பாணன் முதலிய வுயர்திணையோடுங் கிள்ளை முதலிய வஃறிணையோடுஞ்சொல்லித் தூது போய்வாவெனக் கலி வெண்பாவாற் கூறுவது.

நாற்பது காலமு மிடமும் பொருளுமாகிய விவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது.

குழமகன் கலி வெண்பாவான் மாதர்க டங்கையிற்கண்ட விளமைத் தன்மையுடைய குழமகனைப்புகழ்ந்து கூறுவது.

தாண்டகம் இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்த வெழுத்தடியின் வரயெழுத்துங் குருவு மிலகுவு மெண்ணிவந்தன அளவியற்றாண்டகமெனவும் எழுத்தொவ்வாது மெழுத்தல் கொவ்வாதும் வந்தன அளவழித்தாண்டகமெனவும் படும்.

பதிகம் ஒருபொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

சதகம் அகப்பொருளொன்றன் மேலாதல் புறப்பொருளொன்றன் மேலாதல் கற்பித்து நூறு செய்யுட் கூறுவது.

செவியறிவுறூஉ, பொங்குதலின்றிப் புரையோர் நாப்பணவிதல் கடனெனச் செவியுறை யடக்கிய பொருண்மை வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

வாயுறை வாழ்த்து, வேம்புங் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன்றருமென மெய்ப் பொருண்மை வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

புறநிலை வாழ்த்து வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வமொ டொருகாலைக் கொருகாற் சிறந்து பொலிவாயென வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் பாடுவது.

பவனிக்காதல் உலாக்காட்சியா லெய்திய காமமிகுதியா லவை பிறரொடுமாதர் வருந்துவது.

குறத்திப்பாட்டு தலைவன் பவனிவரவு மகளிர் களிமமுறவர் மோகினி வரவு உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல் திங்கள் தென்றல் முதலிய வுபாலம்பனம், பாங்கியுற்ற தென்னென வினவல் தலைவி பாங்கி யொடுற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறல். தலைவி தலைவனைப் புகழ்ந்துக்கூறல். தலைவி பாங்கியைத் தூது வேண்டல், தலைவி பாங்கியோடு தலைவ னடையாளங் கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவளமுதலிய வினவல் குறத்தி மலைவளநாட்டு வளமுதலிய கூறல். தலைவன் றலவளங் கிளைவன் முதலிய கூறல், தலைவி குறிசொல்லி வந்தமை கூறல், தலைவி குறிவினவல், குறத்தி தெய்வம் பரவல் குறிதேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசி லுதவிவிடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனொடு குறத்தி யடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன்னி முதலிய கண்டையுற்று வினவலு மாண்டாண்டு குறத்தி விடைகூறலு மாகக்கூறல், பெரும்பான்மையு மிவ்வகை யுறுப்புகளால் அகவல், வெண்பா, தரவு, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம், இச்செய்யு ளிடைக்கிடைக் கூறிச் சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது.

உழத்திப்பாட்டு, கடவுள் வணக்க முறையே முத்தபள்ளி யிளைய பள்ளி குடும்பன்வரவோடவன் பெருமை கூறல், முறையே யவர் வரலாறு, நாட்டுவளம், குயிற்கூவல், கேட்டல், மழைவேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன் சிறப்புக்காண்ட லிவற்றிற் கிடையிடையாகப் பொருட்டுரையுங் கூறிப் பண்ணைத்தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளை யவானுப்பல், பள்

ளன் வெளிப்படல் பண்ணைச் செயல், வினவல், அவனதுகூறல், ஆவினை வருவித்தல், அவர்வரல், அவர் பெருமைகூறல், மூத்தபள்ளி, முறையீடு, குடும்பன் இடையிலிருந்தான் போல்வரல் அவனைத் தொழுவின் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளியடிசில் கொடுவரல், அவளவனோடு கூறல், அவனவளை மன்னித்தல், கேட்கவேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவளவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளங்கூறல், உழவருழல் காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவனெழுந்திருத்தல், அதைப் பண்ணைத்தலைவர் கறிவுறுத்தல், நாறுநடல், விளைந்தபிற் செப்பஞ்செய்தல், நெல்லளத்தல், மூத்த பள்ளிமுறையீடு, பள்ளிகளிளொருவர்க்கொருவ ரேசலென விவ்வருப்புக்களுறப் பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர விவற்றாற் பாடுவது.

ஊசல் ஆசிரிய விருத்தத்தானாதல், கலித்தாழிசையானாதல், சுற்றத்தோடும் பொலிவதாக ஆடிரூசல் ஆடாமோ ரூசலென்றிறக் கூறுவது.

எழுகூற்றிருக்கை — ஏழறை யாக்கிக் குழமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையாலொன்று முதலாக வேழிறுதியா முறையானே பாடுவது.

கடிகை வெண்பா தேவரிடத்து மாசரிடத்து நிகழுங் காரியங்கடிகை யளவிற்றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது.

சின்னப்பூ, நேரிசை வெண்பாவா லாசனது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து விரித்து நூறு தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது என்னுமெண்படக் கூறுவது.

விருத்த விலக்கணம், வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை, இவ்வொன்பதினையும் பப்பத்து விருத்தத்தா லொன்பது வகையாற் பாடுவது.

முதுகாஞ்சி, இளமை, கழிக்கோழிளமை, கழியாத வறியின் மாக்கட்குக் கூறுவதாம்.

இயன்மொழி வாழ்த்து இக்குடிப் பிறந்தோர்க்கெல்லா மிக்குண மியல்பென்று மவற்றை நீயுமியல்பாகவுடைய யென்று மின்னோர்போல நீயுமியல்பாக வீயென்று முயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

பெருமங்கலம், நாடோறுந் தான் பேற்கொள்கின்ற சிறை செய்தன் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதன் முதலிய சிறந்த தொழில்கள் பிறந்ததற்கு காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

பெருங்காப்பியம் தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளுமிவற்றிற் கிரியை வாழ்த்து முன்னுளதாய் அறம் பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் பயக்குநெறியுடைத்

தாய் நிகரில்லாத் தலைவனையுடைத்தாய் மலையுங் கடலு நாடு நகரும் பருவமு மிருசுடர்த் தோற்றமு மென்றிவற்றின் வளங்கூறுதலும் மணமும் முடிகவித்தலும் பொழில் விளையாட்டும் நீர்விளையாட்டும் உண்டாட்டும் மகப்பேறும் புலவியுங் கலவியுமென்றிவற்றைப் புகழ்தலும் மந்திரமுந் தூதுஞ் செலவும், போரும் வென்றியுமென்றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய விவை முறையேதொடர்வுறச் சருக்க மிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய் வீரமுதலிய சுவையு மச்சுற்றை விளக்குங் கருத்து விளங்க வேறோரா வியற்றப்படுவதாம்.

சிறுகாப்பியம், அறம் பொருளின்பம் வீடென்னு நான்கனுளொன்றும் பலவுங் குறைந்தேனைய வுறுப்புக்கண்டு மேற்கூறியவா றியல்வது.

பிறப்பு-7—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் இவற்றின்யோனிபேத மெண்பத்துநான்கு நூறாயிரம். அவையாவன தேவர் பதினான்கு நூறாயிரம். மக்களொன்பது நூறாயிரம். விலங்கு பத்து நூறாயிரம். புள் பத்து நூறாயிரம். ஊர்வன பதினொரு நூறாயிரம். நீர்வாழ்வன பத்து நூறாயிரம். தாவரமிருபது நூறாயிரம். அன்றி தேவர் பதினாறு நூறாயிரமெனவுந் தாவரம் பதினெட்டு நூறாயிரமெனவுங் கூறுப.

## பு

புண்ணியத் தோற்றம்-4—தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம்-7—நகங்கிருதி, தானம், விரதம், சினேகம், நயபோசனம், கமை, உற்சாகம்.

புண்ணியம்-9—எதிர்கொளல், பணிதல், ஆசனத் திருத்துதல், தாள் கழுவல், அருச்சித்தல், தூபங் கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல், இவை துறந்தோர்க்குச் செய்வனவாம்.

புரம்-3—இருப்பு மதிள், வெள்ளி மதிள், பொன்மதிள், இவையே முப்புரம்.

புராணம்-18—மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரம கைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம். இவற்றுள் சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம் பிரமாண்டம், இவை பத்துஞ் சிவ புராணம். நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம் இவைநான்கும் விட்டுணு புராணம். பிரமம், பதுமம், இவை யிரண்டும் பிரம புராணம். பிரமகைவர்த்தம் சூரிய புராணம். எனவும் காந்தம், ஆக்கினேயம், சைவம், கூர்மம், மச்சியம், இலிங்கம், இவை தாமதபுராணம். பிரமாண்டம், பிரம கைவர்த்தகம், மார்க்கண்டேயம், வாமனம்,

பிரமம், பௌடிகம், இராசத புராணம். பாகவதம், பதுமம், வாரகம், வைணவம், காருடம், நாரதீயம், சாத்துவிக புராணம் எனவுங் கூறுவர். அன்றியும் உப புராணம்-18, ஆதித்தியம், காந்தம், சோமம், சிகயிலம், கௌசிகம், சாம்பம், சிவதன்மம், தௌர்வாசம், நாரசிங்கம், நாரதீயம், பாராசரீயம், பார்க்கவம், பிரமாண்டம், மாரீசம், மானவம், வாசிட்டம், வாயவியம், வருணம், இவை யவ்வவர் பெயரால் விளங்கும்.

புரி-7—அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புலமையோர்-4—கவி, கமகன், வாதி, வாக்கி இவருள் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னு நாற்கவிகளைப் பாடுவோன்கவி. அரும்பொருளைச் செம்பொருணடையாகக் காட்டி விவகரிப்போன் கமகன். காரணமுமேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறன்கோண் மறுத்து தன்மத நிறுத்துபவன் வாதி, அறம், பொருள், இன்பம், வீடென்னு நாற்றிறங்களைச் சேட்க கேட்க விரித்துக் கூறுவான் வாக்கி.

புலன்-5—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

## பூ

பூ-4—கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புகற்பூ, நிலப்பூ, என ஒன்றுகூட்டி ஐந்தென்பாருமுளர்.

பூதம்-5—நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

## பெ

பெண்வகை-4—பதுமினி, சித்தினி சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு-7—அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொருமை.

## பே

பேதம்-3—சுகத பேதம், சுசாதி பேதம், விசாதிபேதம். அவை யாவன மாத்துக்கு மறுமரஞ் சுசாதிபேதம். மாத்துக்குக்கல் விசாதிபேதம்.

பேறு-16—புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

## போ

பொருள்-2--கல்விப்பொருள், செல்வப்பொருள்.

பொருள்-4—அறம், பொருள், இன்பம், வீடு.

பொழுது-6—மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு. இவையே யத்தமன காலமுதலொவ்வொன்று பப்பத்துநாழிகையாக முறையே கொள்க. இவற்றைச் சிறுபொழுதென்பர்.

பொறி-3—மனம், வாக்கு, காயம்.

பொறி-5—மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொன்வகை-4—ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

## போ

போகபூமி-6—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம்-8—பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம்-3—உத்தேசம், இலக்கணம் பரீட்சை அவை யாவன தான்விவகரிக்கும் பொருளைப் பெயர் மாத்திரங்கூறலுத்தேசம். அப் பொருளின் சிறப்புத் தன்மைகூற லிலக்கணம் அப்பொருளி லிவ்விலக்கண முண்டோ வின்றோவெனப் பார்த்தால் பரீட்சை.

## ம

மகளிரான்மலர் மரம்-10—மகிழ மரஞ்சுவைக்க, எழிலம்பாலை மரம், நட்புற பாதிரியும், சிரிக்க, முல்லைக்கொடி நகைக்க, புன்னையாட, குராவணைக்க, அசோகு தைக்க, குருக்கத்திப் பாட, மாமரம்பார்க்க, சண்பக நிழல் படத்தளிர்த்துப் பூப்பனவாம்.

மங்கலச்சொல்-22—திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் இவற்றின் பரியாயப் பெயரும் பிறவுமாம்.

மங்கலம்-8—சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் இவையே யட்டசுப மெனவும் படும்.

மங்களாசாசனை-3—வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணம்-8—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் இவற்றுட் பிரமசாரிக்குக் கன்னியைத் தீ முன்னர் கொடுப்பது பிரமமணம். தலைமகனினத்தர் வேண்டத் தலைமகளுடனவளைத் தீ முன்னர்க் கொடுப்பது பிரசாபத்திமணம். ஒன்றிரண்டு பசுவு மெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பதாரிடமணம். வேள்வியால் வந்த கன்னியைத் தீ முன்னர்க் கொடுப்பது தெய்வமணம். கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவமணம். பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வ தசுரமணம். பெண்ணும் பெண்ணினத்தாரு முடன்படாமல் வலிந்திற் கொள்வ திராக்கமணம். துயினருளைச் சென்று கூடுவது பைசாசமணம்.

மணி-9—கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம்-3—அக்கினி மண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம்-7—வாயு மண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திரமண்டலம், அக்கினிமண்டலம், திரிசங்குமண்டலம்.

மரபு-2—தந்தைவழி, தாய்வழி.

மருத்துக்கள்-7—கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மலம்-3—ஆணவம், மாயை, காமியம்.

மலை-7—கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி அன்றிக் கந்தமாதனங் கூட்டியெட்டெனவும்படும்.

மன்மதன்கணை-5—வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவற்றின் பெயர் முறையே உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாகம், வசிகரணம் இவை செய்யுமவத்தை-சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம், அவையாவன,—சுப்பிரயோகம், சொல்லு நினைவும், விப்பிரயோகம், வெய்துயிர்த்திரங்கல், சோகம் வெதுப்புத் துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலு மொழிபல பிதற்றலும், மரணம் அயர்ப்பி மயக்கமும்.

### மா

மாதம்-12—சைத்திரம், வைசாகம், சேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குணம் இவை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இவற்றிற்கு முறையே புரிய நட்சத்திரம், சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள்-6—அபிராமி, மயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, காளி இவர்க்கு முறையே வாகனம், அன்னம், இடபம், மயில், கருடன், சீயம், யானை, பேய் முறையே யாயுதம், மறை, பினாகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை-5—தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம். அவையாவன சிவசைதன்னியத்தை மறைக்க யாற்றமம், சகத்துருபமான வன்னிதாத் தோற்றத்துக்குக் காரண மாகையான் மாயை. விபரீதஞான முண்டாக்குகையான் மோகம். உணர்வழிக்கையா லவித்தை. சத்துருபற்றுக் கன்னியாகையா லநிர்தம்.

### மு

முகம்-14—அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், துவிதம், பராவிருத்தம், பரிவாகிதம், நிரச்சினம். இவற்றுள் வருத்தமாசருதிருதோண்மேற் றலைசாய்த்த வஞ்சிதமுகம், சம்மதித்தற்கு மேல்கீழ்த்தலை யாட்டலாகம்பித முகம் அதிசயத்தாற் சிறிது தலையாட்டல் பிரகம்பித முகம், அதிசயத்தாற் சிறிது தலையாட்டல் பிரகம்பிதமுகம், ஆசையான் மலர்ந்த முகமா யொருவனையழைத்தலாலோலிதமுகம், சிந்தையா லொருதோண்மேற் றலைசாய்த்தனுலோலிதமுகம், தலையண்ணூர்ந்து பார்த்தலுத்துவாகிதமுகம், தியானிப்பது போலத் தலையசையாதிருத்தலே சமமுகம், பூரித்த மகிழ்ச்சியான் மலர்ந்த முகங்காட்டல் சௌந்தரமுகம், வேண்டாததற்கிடம் வலந்தலையாட்டலே துதமுகம், உணவன்றி முதலிய வேண்டாமைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம், வேண்டாதற்கு முகந்திருப்பலே பராவிருத்தமுகம், மதத்தாலொருபுறஞ் சாய்ந்த தலையைச் சிறிதாகச் சுற்றியாட்டல் பரிவாகிதமுகம், நாணத்தாற் றலையாட்டலே நிரச்சினமுகம்.

முத்திவிக்கினம்-3—அறியாமை, ஐயம், திரிபு.

முத்துச் சனிக்குமிடம்-20—மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக்கொம்பு, பன்றிக் கொம்பு, பசுவின் பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து.

மும்மை-3—உம்மை, இம்மை, மறுமை.

முனிவர்-7—அத்திரி, ஆங்கிரசம், கௌதமன், சமதக்கினி, பாத்வாசன், வசிட்டன், விசுவாமித்திரன் அன்றியும் அகத்தியன், அங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பர்.

முனிவர்-31—அகத்தியன், அத்திரி, ஆங்கீரசன், இரணியவன், மாமுனி, உரோமமாமுனி, ஏரண்ட மாமுனி, கலைக்கோட்டு முனி, காசிபன், கௌதமன், சத்தகூன்முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுதன், ததிசிமகாமுனி, துருவாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பிறைசிமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மிகன், விஸ்வாமித்திரன், வியாக்கிரபாதன், வியாசன்.

மூர்த்தம்-8—பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மூலம்-10—கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் இவ்வைந்தும் சிறுபஞ்சமூலமென்ப. வில்வவேர், பெருங்குமிழம்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர் இவ்வைந்தும் பெரும் பஞ்சமூலமென்ப.

### மெ

மெய்ப்பாரிசம்-8—உவன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், திண்டல், பற்றல், வெட்டல் இவை மெய்ப்பொரியாற் செய்யப்படுந் தொழில்.

### மே

மேகம்-7—சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்கா

நித்தம், அகோரணம், காளமுகி, நீலவருணம் இவை மொழிவன முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

### மோ

மொழி-3--மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

### யா

யாகம்-5—பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மாநுடம். இவற்றுள் வேதமோதல் பிரமயாகம், ஓமம் வளர்த்தலே தெய்வயாகம், பலியிடல் பூதயாகம், தர்ப்பணமுடித்தல் பிதிர்யாகம், இரப்போர்க்குணவு முதலிய ஈதலே மாநுடயாகம்.

யாகம்-21—அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடஷி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணீ, ஆக்கிரகாயணீ, சைத்திரீ, ஆசுவயுசி.

யாக்கைக்குறு குற்றம்-18—பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

யாழ்வகை-4—பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

### யு

யுகம்-4—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

### யோ

யோகம்-27—விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி இவை முறையே கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டகம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரம்மா, இந்திரன், பேய் இவற்றுள் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரீகம், வைதிருதியென ஒன்பதன்றி மற்றவை நல்லன. இவற்றுள்ளுங் கம்பத்தின் மூன்றும் சூலத்திலைந்தும் கண்டத்தினு மதிகண்டத்தினு மாறும் வியாகாதத்தி லொன்பதுங் கழித்து நின்ற நாழிகையுமாம்.

### வ

வசுக்கள்-8—அனலன், அனிலன், ஆபச்சைவலன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன்.

வணிகர்குலம்-8--தனிமையாற்றல், முனிவிலனாதல், இடனறிந்தொழுதல், பொழுதொடு புணர்தல், உறுவது தெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

ண்ணம்-5—வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

ருடம்-60—பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கிரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய (இந்த இருபதும் உத்தம வருடம்) சருவசித்து, சர்வதாரி, விரோதி, விகுர்தி, கர, நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, (இவ்விருவதும் மத்திம வருடம்) பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, இரௌத்திரி, துன்மதி, துந்துபி, உருத்திரோத்காரி, இரத்தாட்சி, குரோதன, அட்சய, இவ்விருபதும் அதம வருடம்.

வருணம்-4—பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர். இவற்றைச் சாதியென்றுங் கூறுப.

ள்ளல்-21—வரையாது கொடுப்போன் வள்ளலென்ப, இவர் முத லிடைகடையென மூவகைப்படுவர். அவருள் முதலேழு வள்ளல் - குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துவாரி, நளன், நிருதி. இடையெழு வள்ளல் - அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன். கடையெழுவள்ளல்-எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

### வா

வாசம்-5—இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாயில் - 9—கண், காது, மூக்கு, குதம், குய்யம்.

வாயு-10—பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன். இவை யுடலினிற்பன. அவை யாவன: இதயத் தியங்குவது பிராணன். உர்ச்சர்க்கத் தலத்திடை நிற்பதபானன். கந்தரக்குழியிற் சந்திடை நிற்பது சமானன். நாபியினிற்பது அதானன். சரீரமுழுதும் வியாபித்திருப்பது வியானன். நீட்டு முடக்கலுநாகன். உரோமம் புளகித் திமைப்பது கூர்மன், முகத்திடைநின்று தும்பலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது கிருகரன். ஓட்டமுமிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன். உயிர் போகினும் போகா துடலினை

i தலைகிழித் தகல்வது
சயன்.

7—ஞாயிறு, திங்கள், செவ்
, புதன், வியாழம், வெள்
சனி.

ஞானிகணம்-9—அக்கணத் தோரவர், பத்திச்சுவாலகர், ஞானிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவத்தர், பிராதமிகர், அதிநாதர், நாதர். இவையே நவவிலாச சபையாம். அவையாவன:—பத்திச்சுவாலகர் கடவுளைக்குறித்த பத்தியினாலே சுவாலிக்கிறவர். ஞானிக்கர் கடவுளைக்குறித்த ஞானத்தி லாதிக்கம் பெற்றவர். பத்திராசனர் கடவுளெழுந்தருளியிருக்கும் தேவ சிம்மாசனத்தை. புகழ்ந்திருப்பவர் இவர் முதலாம் அர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம். நாதகிருத்தியர் நாதனுடைய கிருத்தியத்தை யவனருளாற் புரிபவர். சத்துவகர் கடவுளருளாற் பற்பல அற்புதங்களைச் செய்யுஞ் சத்துவம் பெற்றவர் சத்திகளென்னுமாம். பலவத்தர் கடவுட் டிருவுளப்படி மெய்ஞ்ஞான சருமங்கட்கு வருமிடையூற்றை யவனருளாற் றடுக்கும் பலாத்காரம் பெற்றவர் இவரிரண்டாமர்ச்சியப் பிரபுத்துவமுடையோராம். பிராதமிகர் கடவுட் டிருவுளப்படியே பிராச்சிய சம்பந்தமான சாதாரண நன்மைகளை நடத்துந் தலைமை பெற்றவர். அதிநாத அதிகப் பிரதான விசேடங்களை யுலகத்தி லறிவிக்கத் தானுபதியாக வருபவர். நாதர் மனிதர் பிறந்த கணமுதலாகத் தனித்தனியே யவரவரைப் பாதுகாத்து நன்னெறியி னடத்தி மற்றும் பிரதான விசேடங்கட் கனுப்பப்படுவர். இவர் மூன்றும் அர்ச்சியப்பிரபுத்துவ முடையோர் அர்ச்சியப் பிரபுத்துவத்திற்கு அதீச்சரபதவி யென்பாருமுளர். இவை போப்புமார்க்க கிறிஸ்தவர்களாற் கூறப்படுவன.

வானோர்வரம்-4—இலகு, சூக்குமம், அட்சயன், பிரகாசம், இவை கனமின்மை, கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கம்.

## வி

விகாரம்-6—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். அன்றி இடும்பை அசூயை யொடெட்டெனவுமாம்.

வித்தியா தத்துவம்-7—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

வித்தைகள்-14—வேதம்-4, வேதாங்கம்-6, மீமாஞ்சை, தருக்கம், புராணம், தருமநூலாகிய வுபாங்கம்-4.

விரை-5—கோட்டம், துருக்க காரம், அகில், சந்தனம்.

வினா-5—அறியான் வினவல் வொப்புக் காண்டல், ஐய[illegible]தல், அவனறிவுதான் [illegible] மெய்யவர்க்குக் காட்டல்.

வினை-2—நல்வினை, தீவினை.

## வீ

வீடுபேறு-1—முத்திப்பேறு

## வெ

வெற்றி-8—பகைநிரை கவர்தல், பகைவர் கவர்ந்த தன்னிரை மீட்டல், பகைமேற் செல்லல், வம்பகை முன்னெதி ரூன்றல், தன்னரண் காத்தல், பகையரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல், இவற்றிற்கு முறையே வெற்றிமாலையாவன, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

## வே

வேதம்-4—இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம். அன்றியுமுபவேதம்-4, ஆயுள் வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருலவேதம்.

வேதாங்கம்-6, மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

வேளாண்மை மாந்தரியல்பு-10—ஆணைவழிநிற்றல், அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனாற்றல், கசிவகத்துண்மை, ஒக்கல் போற்றல், ஓவா முயற்சி, மன்னிறை தருதல், ஒற்றுமைகோடல், விருந்து புறந்தருதல், திருந்தியவொழுக்கம்.

## வை

வைசியர்-3—தனவைசியர், பூவைசியர், கோவைசியர். இவர்க்கு முறையே தொழில் பொருளீட்டல் பயிர்செய்தல் ஆன்காத்தல் இவர் வருணத்தா லொன்றாயினுந் தொழிலான் மூவராயினர்.

வைணவாகமம்-2—பாஞ்சராத்திரம், வைகாநசம்.

வைதிகமதம்-3—மிசிர வைதிகமதம், வைதிகமதம், பரமவைதிகமதம்.

## இலங்கத் தொகைமுறை

1-ஒருமை-வீடுபேறு.
2-அச்சுவினிதேவர்-அறம், ஆயுதவகை, ஆன்மா, இதிகாசம், இருமை, எச்சம், கந்தம், கூத்துவகை, சுடர், திணை, தோற்றம், பொருள், மரபு, வினை தவணைவாகமம்.

3-ஆசார், இவை இடம், ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்திய குணம், உலகம், கடுகப், காதலர், காலம், குணம், குற்றம், சத்தி, சாத்திரம், சிவபேதகம், சிவாவத்தை, சுடர், சூரிய சந்திரர் முதலிய வீதி, தமிழ், தானம், தீ, தொழில், நூல், பகை, பக்குவர், பரிச்சேதம், பலை, பாவ புண்ணிய வழக்கம், பாவினம், பிணிபுரம், பேதம், பொறி, போதப்பிரகாரம், மங்களாசாரணை, மண்டலம், மலம், முத்திவிக்கினம், மும்மைமொழி, வைசியர், வைதிகமதம்.

4 - அங்கம், அரண், அளவு-அனுபந்தம், ஆச்சிரமம் - இராகத்தகுதி - இழிச்சொல் - உண்டி-உபாயம், உரை, ஊறுபாடு - கணக்கு வகை, கதி, காணகவி, குணம், கேள்வி, சதுரங்கம், சாதி, சாந்துவகை, சிவபூசை, இயல்பு, சொல், தானை தோற்றம், நிலம், நிலை, நாற்பயன், படைவகுப்பு, பண், பதவி, பருவம், பா, புண்ணியத் தோற்றம், புலமையோர், பூ, பெண்வகை, பொருள், பொன்வகை, யாழ்வகை, யுகம், வருணம், வானோர்வரம், வேதம்.

5 - அசிற்கூட்டு, அக்கினி, அங்கம், அரசர்க்குக் குழு, அரசர்க்குறுதிச் சுற்றம், அவத்தை, அந்வய. விலக்கணம், இலக்கணம், இலிங்கம், ஈச்சுரன் முகம், உரையிலக்கணம், உலோகம், எழுத்துத்தானம், ஐம்புல நுகர்ச்சியினிறப்பன், கருமேந்திரியம், கன்னிகை, குரவர், குற்றம், கேள்வி கைத்தொழில், கோசம், கௌடம், கௌவியம், சத்தம், சத்தி, சயனம், சிவதத்துவம், சூதகம், தந்தையர், தரு, தாயார், தாளம், திணை, திராவிடம், திரவியம், திருமாலாயுதம், துரகதி, தேவர், பஞ்சமூலம், பட்சி, பாதகம், பால், பால்புலன், பூதம், பொறி, மன்மதன்கணை, மாயை, யாகம், வண்ணம், வாசம், விரை, வினை.

6-அரசியல் - அரசியல், ஆதாரம், ஈச்சுரன் முக்கியகுணம், உட்பகை, உவர்ப்பு, கரும பூமிக்குரிமை, கருவுளமைப்பு, காலம், சக்கரவர்த்திகள், சமயம், சாத்திரம், சுப்பிரமணியர், பிரதானதலம், சுவை, தானை, தொழில், காட்டமைதி, பருவகாலம், பொழுது, போகபூமி, விகாரம், வேதாங்கம்.

7 - இசை, உலோகம், கடல், கடைப்படு தானம், சிரஞ்சீவியார், சுரம், தாது, தாளம், தீவு, நதி, நரகம், நாகவட்டம், நரம்பு, நாட்டுக்குற்றம், பருவம், பாதகம், பாலை, பிறப்பு, புண்ணியம், புரி, பெரியோரியல்பு; மண்டலம், மருந்துக்கள், மலை மாதர்கள், முனிவர், மேகம், வாரம், வித்தியாதத்துவம்.

7—அங்கயோகம், அரசர்க்குத் துணைவர், அளவை, அறத்துறுப்பு, ஈச்சுரன்குணம், ஊறு, எச்சமம், ஐச்சுவரியம், கணம், கணிதம், குற்றம், சித்தி, சுபம், தயாவிருத்தி, திக்கு, திக்குப்பாலகர், திக்கு யானைகள், நாகம், நாட்டுக்குற்றம், போகம், மங்கலம், மணம், மூர்த்தம், மெய்ப்பரிசம் வசக்கள், வணிகர், குணம், தெவற்றி.

8—இரதம், கண்டம், கிரகம், சித்தர், தாரணை, தாளம், புண்ணியம், மணி, வாயில், வானோர்கணம்.

10—அங்கம், சிற்பத்தொழிற்குறும்பு, சேனைத்தொகை, தசாங்கம், தாளப்பிரமாணம், திக்கு திருமாலவதாரம், தீக்குணம், துவர், நற்குணம், நாடி, மகளிரான்

மலர்மரம், மூலம், வாயு, வேளாண்மை மாந்தரியல்பு.

11-உருத்திரர், காணம், கதி.
12-இராசி, உயிர்வேதனை, சூரியர் மாதம்.
42-தமிழ்நாடு
15-உலகம், தயாவிருத்தி, முகம், வித்தைகள்.
15-திதி, திருமாலவதாரம்
16-உபசாரம், சைவம், பேறு.
18-கணம், தருமநூல், பாடை, புராணம், யாக்கைக்குறு குற்றம்.
20-முத்துச்சனிக்குமிடம்
21-அரசசின்னம், யாக்கம், வள்ளல்.
22-மங்களச்சொல்
27-நட்சத்திரம், யோகம்
28-சிவாகமம்
31-முனிவர்
32-அறம், இராகம், உபநிடதம், சிற்பநூல்.
33-தேவர்வகை
35-அலங்காரம்
56-தேயம்
60-வருடம்
64-கலைஞானம்
96-தத்துவம், பிரபந்தம்
100-அலங்காரம்

## மூன்றாவது தொகையகராதி

முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1934.

36-3-34/.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்ட

# பாக்கெட்
# ஹிந்து பால வைத்திய போதினி

1634

இதன் விலை ரூபா 1

அளவிடுதற்கரிய சிறப்புவாய்ந்த இவ்வுலகத்தின்கண் சர்வ களும் சரண்புகத்தக்க முத்தராகிய சித்தர்கள் பதினெண்பெய திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் ஏராளமாயிருப்பி தற்கால நிலைமைக் கியன்றவாறு ஷெடி சாஸ்திரங்களை அநுசரி நிகண்டுகள் முதலான அகராதிகளைக் கண்ணுற்று கையாடும்பேர்க்கு பயன்படாதென்பது திண்ணமாகக் காட்டுகிறதுபற்றி இந்நூல் இ த்தலாயினேம். ஆயினும் முதனூல் வழிநூலென்னும் சித்தர்களூ மற்றவர் நூலுங் கொண்டே ஆராய்ச்சி செய்து அநுபவ திருஷ்டா தங்களைக் கொண்டு குழந்தைகளுக்கு இசைந்த சிகிச்சா பக்குவங்க மாத்திரம் ஒருங்கே திரட்டி செய்யுட்களாய் உள்ளனவற்றை அக கள் வேண்டாது யாவரும் எளிதில் அறியத்தக்க வசனரூப ஆ.சி. பாலஞானபரதேசி அவர்களாலும், செழுமணவை. நல்லன் பரதேசி அவர்களாலும் கையாண்டுவந்த அநுபவமுறைகள் யா ஷியார்களின் சிஷ்யர் ஞானசுந்தர சுவாமிகளின் உத்திரவின் மொழிபெயர்த்து அவ்வசனங்களோடும் வினாவிடைகளாக வகு வனைய புல்லறிவினருக்கும் எளிதில் விளங்கும்படி வெள்ளிய பா யாக வரையப்பட்டு சுத்தமாய் அச்சிட்டுத் தயாராயிருக்கின்றது.

எமது விலாசம்:—

[illegible] இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

[illegible], ஆண்டவராயப்பிள்ளைவீதி, சென்

11324